28) உத்துங்கசோழன் இவரும் சிவபக்தியில் ஈடுபட்டு வந்த சோழமன்னர்களில் ஒருவராவார். இவருக்கு அஹிவர சோழன் என்ற பராக்கிரமசாலியான குமாரன் தோன்றினான் என்றும், இவரது பட்டத்து யானை பாகனுக்கு அடங்காது அட்டகாசம் செய்ததாகவும், அப்போது இவரே அதை அடக்கி கட்டுப்படுத்தினர் என்றும், அதனால் இவருக்கு கவுர பட்டம் பெற்று ராஜ்ய பரிபாலனம் செய்ததாகவும் நவசோழ சரித்திரம் கூறுகின்றது. ஆயினும் இவரைக் குறித்து சாசனாதிகள் கிடைக்கவில்லையென்று சரித்திரக்காரர் கூறுகின்றார்.

29) அஹிவர சோழன். இவர் தன் தாய்தந்தையர்களைப்போலவே சிவபக்தியில் ஈடுபட்டு கோடிலிங்க அர்ச்சனை செய்துவந்ததாகவும். மகாவிரபுருஷன் என்று ஜனங்களால் புகழ்பெற்று வாழ்ந்ததாகவும், நவசோழ சரித்திரம் கூறுகின்றது. அரசாண்டதாக காணப்படவில்லை.

30) வரதர்ம சோழன், இவர் காலத்தில் நீதிமுறைப்படி மிக்க வன்மையுடன் ராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். இவர் குமாரன் அஹிவர சோழனென்று சொல்லப்படுகின்றன. ஒரு சமயத்தில் இவர் இரதத்தில் வரும்பொழுது பசுவின் கன்று குறுக்கிட்டு இரத சக்கரத்தில் அகப்பட்டு இறந்துவிட்டதாகவும், உடனே அதன் தாய்ப்பசு அரண்மனை வாயிலுக்குச் சென்று அங்கு கட்டப்பட்டிருந்த மணியை தன் கொம்புகளினால் அடிக்க, அது சமயம் சக்கரவர்த்தி கொலுகூடத்தில் பிரதானிகளுடன் வீற்றிருந்ததாகவும், மணி சப்தம் கேட்டவுடனே சேவகரை அனுப்பி விஷயம் அறிந்து வருமாறு உத்திரவு செய்யச் சேவகர் சென்று அங்கு

நடந்த விஷயங்களை புற ஜனங்கள் மூலமாகத் தெரிந்து வந்து இராஜாவிடத்தில் நடந்தவற்றைத் தெரிவிக்க. சக்கரவர்த்தியார் அதை உன்னித்து உணர்ந்து, தன்னுடைய குமாரன் நடந்துகொண்டது நீதி விரோதமென்றும், அதற்குத்தகுந்த சிக்ஷை செய்யவேண்டியதென்று தீர்மானித்து, தன்னுடைய குமாரன் என்று எண்ணாது அவனுக்கு அதே தண்டனை செய்யும்படி உத்திரவிடவே, ஏவலர், கொலையாளர் கூடி சக்கரவர்த்தியினுடைய குமரனைத் தேர்காலுக்குப் பலியிட்டு இராஜாவினுடைய கட்டளையை நிறைவேற்றினர். அப்பொழுது அவருடைய நீதி தர்மம், தேவ பக்தி இவைகளைக் கண்டு சிவபிரான் பிரத்யக்ஷமாகி, பசுமாட்டின் கன்றையும், ராஜகுமாரனையும் உயிர்பெறச் செய்து பக்த கோடிகளுக்கு சேவை தந்ததாக நவசோழ சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளன. இவருக்கு மனுதர்ம சோழன் என்ற பட்டமும் பெற்றுள்ளனர் என்று சரித்திரக்காரர் கூறுகின்றனர்.

31) சத்யஇந்த்ரசோழன், வரதர்ம சோழனை விட மிக்க மேன்மையுடையவனென்று கூறப்படுகின்றது. இவருக்கு லக்ஷ்மணன் என்ற மந்திரியுமிருந்தார். ஒருசமயம் இந்த ராஜகுமாரனும், மந்திரிகுமாரனும் கூடிக் குதிரை சவாரி செய்து கொண்டிருந்த சமயம், ஒரு ஏழையாகிய விருத்தாப்பிய மாது ஒரு குழந்தையுடன் எதிரே வருகையில் குதிரையைக் கண்டு பயந்து தடுமாறி, அந்தக்குழந்தை மந்திரிகுமாரனுடைய குதிரைக்காலில் சிக்கி மரணமடைந்து விடவே மந்திரிகுமாரனாகிய லக்ஷ்மணன் குதிரையை விட்டு இறங்கி இறந்த குழந்தையினிடம் மிக்க அன்புகொண்டு மிகவும் பரிதாபப்பட்டும், இது விஷயமாக இராஜாவினால் என்ன தண்டனை ஏற்படுமோ என்று நினைத்து, இதற்குப் பரிகாரமாகத் தன்னுயிரையே தியாகஞ் செய்துவிடுவதாகத் தீர்மானித்து, பரிதாபமடைந்த மந்திரிகுமாரனைக் கண்டு ராஜகுமாரன் அநேக தேறுதல்களைச்சொல்லி, அக்குற்றத்தைத் தானே ஏற்றுக்கொள்வதாக முடிவு செய்து தன் குதிரையை மறுபடியும் இறந்து கிடந்த குழந்தையின் மேல் விட்டு மிதிக்கச்செய்து, அப்பழியைத் தானே ஏற்றுக்

கொண்டு நண்பனுக்கு சமாதானஞ் சொல்லி அழைத்துச் சென்று அரண்மனை அடைந்தனர். குழந்தையை இழந்த வயோதிகி தன் புதல்வன் மீதிருந்த பற்றுக்குத் தாங்காது புலம்பிக்கொண்டு ராஜாவிடம் சென்று நடந்தவற்றை எல்லாம் சொல்ல, அதைக்கேட்ட அரசன் உண்மையை ஒற்றர்களால் அறிந்து அதற்குத் தகுந்த சிக்ஷை செய்வதாக அவ்வயோதிக மாதுக்கு தக்க சமாதானம் சொல்லி அவளுக்கு வேண்டிய பொருளுதவி செய்து அனுப்பிவிட்டு, தன் மகனுக்கு மரண தண்டனை விதித்து ஏவலரிடம் கட்டளை இடவே, மந்திரியானவர் எவ்வளவோ சமாதானம் சொல்லி யும் ஏற்றுக்கொள்ளாமலிருக்க, இதை அறிந்த இராஜ குமாரன் தன்னைத்தானே அஸ்தரசஸ்தரத்தினல் வதைத்துக் கொள்ளவே, இவ்விஷயத்தைத் தெரிந்த உடனே மந்திரி குமாரனும், இராஜாவும், மந்திரியும், மற்றுமுள்ள இராஜ தம்பதிகள் மகாராணியார், மந்திரியினுடைய பார்யை முதலானவர் எல்லோரும் உயிர்த் தியாகம் செய்துகொண்ட தாகவும் சரித்திரம் கூறப்படுகின்றது! இது உண்மையா, கற்பனையா என்று சொல்வது ஆராய்ச்சியாளர்களுடைய கடமையே ஆகும்.

32) மனுநேந்தர சோழன். இவர் மிக்க சிவபக்தி உடையவராம். இவர் காலத்தில் எள்ளை அதிகமாகப் பயிர் செய்து, அதில் விளைந்த எள்ளையெல்லாம் ஒரு பெரிய கொட்டகையிற் சேர்த்து, சிவபிரானுடைய பூஜைக்காக எள்ளுரண்டை நிவேதனஞ் செய்துவந்தாராம். சிவபிரானுக்கு மிக்கப்பிரியமுள்ள பலகாரங்கள், எள்ளுமாவு, எள்ளுரண்டையென்று நவசோழ சரித்திரங் கூறுகின்றது.

33) உத்தமசோழ மஹாராஜாவாகிய இவருக்கு முதல் மதுராந்தக சோழன் என்ற பட்டமுமிருந்ததாம். வீரகேசரி என்ற பிருதும் இருந்தது. சுந்தரசோழன் இறந்த பின்னர் 2-வது ஆதித்ய மகாராஜனுடைய காலத்திலேயே அநேக பிராந்தியங்களை ஆண்டு வந்துள்ள காலம் கிறிஸ்து சகம் 969-985-வரை மத்தியில் ஆண்டதாக நவசோழ சரித்தி ரம் கூறுகின்றது. மகாசிவபக்தனென்றும், தன் ஆட்சி

காலத்தில் தன்னுடைய பிரஜைகளுக்கு அகாலமரணங்களோ கொடிய பீடிதங்களோ ஏற்படாதிருக்கவேண்டி, கண்ட பெண்டேரம் என்று பிருது பெற்று, அதைச் செலுத்தி வந்தனர், இவர் காலத்தில் ஜைன மதத்தினருக்கும், சிவ மதத்தினருக்கும், மதத்துவேஷம் இருந்ததாகவும் சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இவர் காலத்தில் கணபாலன் என்ற இராஜாவும் இருந்ததாகவும், இவரும் சிவபக்தி உடையவரென்றும் சரித்திரம் கூறுகின்றன.

34) கிழக்கு சாளுக்கிய சக்கரவர்த்திகள், சந்தர வம்சத்தினர் மானவ்ய சகோதரர்களென்றும், ஹாரீத புத்திரரென்றும், கௌகிகவரப்ரசாதலப்தராஜ சம்பன்னரென்றும், தங்கள் சாசனங்களில் குறிப்பிட்டுள்ளனர். இவர்களில் மேற்கு சாளுக்கியரென்றும், பாதாமி சாளுக்கியரென்றும், கிழக்கு சாளுக்கியரென்றும் மூன்று பிரிவுகள் உண்டு. மேற்கு சாளுக்கியர் கல்யாணபுரியை ராஜதானியாக வைத்துக்கொண்டு ஆண்டுவருங்காலம். சூரிய குலத்தவராகிய சோழ ராஜாக்களுக்கு விரோதிகளாக இருந்தனர். கிழக்கு சாளுக்கியர் வேங்கி நாட்டை ராஜதானியாக (ஏலூருக்குச் சேர்ந்த சிநவேகி, பெதவேகி) வைத்து ஆண்டு வந்தனர். சூரியகுல வம்சத்தினருடன் பாந்தவ்யங்கொண்டு மிக்க ஒற்றுமையுடன் கலந்துகொண்டனர். இவர்கள் ஆந்தர அரசர்களென்று சாசனங்களை எழுதிக்கொண்டனர். இவர்களுக்கு காகதீயவரசர்களுக்குள்ள வராஹ முத்திரையுமுண்டு. 7-வது சகாப்த ஆரம்பத்தில் 2-வது புலகேசியென்ற வீரன் வேங்கி தேசத்திற்கு வந்து விஷ்ணுகுண்டி ராஜாக்களை ஜெயித்து வேங்கிராஷ்டரத்தை தன் தம்பியாகிய விஷ்ணுகுப்தருக்குக் கொடுத்து அந்நாட்டை ஆளும்படி செய்த காலம் கிறிஸ்து சகம் 624-ஃ முதல் சுயராஜாவாக ஆண்டு வந்தனர். இவர் யுவராஜாவாக இருந்த காலம். ஸதாரா பண்டரிபுர மண்டலத்தில் ஒருகிராமத்தை தானஞ்செய்ததாகவும், அஸ்வமேத யாகஞ் செய்ததாகவும் ஹோஸூர் சாசனம் கூறுகின்றது.

35) புலகேசியினுடைய தந்தை ரணரங்கவீரன் என்ற பட்டம் பெற்றுள்ளனர் என்றும், 2-வது விஜயாதித்ய னென்றும், இவர் ஜயஸிம்மர் என்ற முதல் விஷ்ணுவர்த்தன ருடைய குமாரன் விஷ்ணுவர்த்தனர், முதல் விஜயாதித்ய னின் குமாரனென்றும், இந்த விஜயாதித்யன், திரிலோசன பல்லவருடன் நடந்த யுத்தத்தில் மரணமடைந்து விட்ட சமயம், இவர் குமாரராகியவர் ஒரு பிராம்மணருடைய ஆதரவில் வளர்ந்து வந்ததால் இவருக்கு விஷ்ணுவர்த்தனர் என்ற நாமம் ஏற்பட்டதாகவும், இவர் வம்சாவழியினருக்கும் விஷ்ணுவர்த்தனர் என்ற பட்டப்பெயர் ஏற்பட்டனவென்று சரித்திரக்காரர் கூறுகின்றனர். ஆன்ட்ரேரின் அபிப்பிராய மும் அஃதே.

36) வெங்கி தேசத்தை விஷ்ணுவர்த்தனர், பிஸ்டட புரம் (பீடாபுரம்) என்ற பட்டணத்தை ராஜதானியாக வைத்துக்கொண்டு 18 வருஷ காலம் பரிபாலனம் செய்தார். இவருடைய தான சாஸனங்கள் திம்மாபுரம், செஜ்ஜூரால, சிபுறுபல்லி கிராமங்களிலிருந்து கிடைத்தனவென்றும், இவர் விஷமே உருவாகிய துஷ்டர்களை வென்று, விஷமஸித்தி யென்ற பிருதுநாமம் பெற்றவர். இவர் எலமஞ்சலிப் பிரதேசத்திலிலுள்ள கலவமலை கிராமத்தை விஷ்ணுசர்ம, மாதவசர்ம என்ற பிராம்மணர்களுக்குத் தானஞ் செய்துள்ளார். ஜைன மதத்தினர்களையும் இவர் ஆதரித்து வந்தார். இவருடைய மூத்த குமாரன் ஜயஸிம்மன் பட்டத்திற்கு வந்து 33 வருடங்கள்வரை கிறிஸ்து சகம் 673 வரை அரசாண்டு வந்துள்ளனர். அக்காலத்திற்கு ஏற்றபடி முதலில் பிஷ்டபுரத்திலும், பின்னர் வேங்கி நாட்டிலும், அதன் பின்னர் ஸித்தியிலும் இராஜதானிகளை மாற்றி ஆண்டுவந்தார். அக்காலம் இவருக்கு ஸர்வஸித்தியென்ற பட்டமும் கிடைத்தது. இவருடைய பட்டப் பெயரால், ஸர்வஸித்திபுரம் என்ற பட்டணத்தை நிர்மாணித்தார். (இந்நகரம் விசாகப்பட்டணம் ஜில்லாவில் உள்ளது) இவர் எழுதி வைத்ததான சாசனங்கள், புலம்பூறு, பெதவேகி கிராமங்களிலிருந்து கிடைத்துள்ளன. பெணுகவர்ர என்ற கிராமத்தை பிராம்மணர்களுக்கு தானங்கொடுத்துள்ளார்.

37) இவருக்குப் பின்னர் இவருடைய தம்பி இந்த்ர பட்டாரகன் என்றவர் ஆட்சிக்குவந்து கொஞ்சநாள் மட்டும் இராஜ்யத்தைப் பரிபாலனம் செய்தார். இவருடைய குமாரன் 2-வது விஷ்ணுவர்த்தனர், பட்டம் சூட்டிக் கொண்டு 9 வருஷ காலம் வேங்கிநாட்டை ஆண்டுவந்தான். இவராட்சி காலம் ரேயூர் என்ற கிராமத்தை பிராம்மண அக்ரஹாரமாக்கிக் கொடுத்தார். மட்டிவாடாவில் ஒரு கிராமத்தை தானஞ் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். தவிர பமுடிமுக்கல கிராமத்தில் 12 கண்டி பூமியையும் தானம் செய்து சாசனம் செய்து வைத்துள்ளார். இவர் காலத்திய நாணயங்கள் எலமஞ்சியில் கிடைத்துள்ளன. இவர் குமாரராகிய மங்கியுவராஜு விஜயஸித்தி என்ற பிருதுடன் பட்டத்திற்கு வந்து எலமஞ்ஜலியை ராஜதானியாக வைத்துக்கொண்டு 25 வருடங்கள் வேங்கி நாட்டை ஆண்டுவந்தார். இவர் நூதுலபர்ரு, செந்தலூறு என்ற கிராமத்தில் ஒரு தான சாசனம் எழுதிவைத்துள்ளார். இவருக்குப் பின்னர் இவருடைய குமாரன் இரண்டாவது ஜயஸிம்ஹன் ராஜாவாக வந்து 13 வருஷங்கள் இராஜ்ய பரிபாலனம் செய்தனர். அக்காலத்தில் எழுதிவைத்த தான சாசனம், பெனுகபர்ரு என்ற கிராமத்தில் கிடைத்தது. இவருக்குப்பின்னுல் இவருடைய தம்பியாகிய கோகிலிராஜா 6 மாதம் காலம் இராஜ்யத்தைப் பரிபாலனம் செய்தார். இந்தச் சொற்ப காலத்திலேயே இவர் கோடுங்கவிளகவாட என்ற கிராமத்தை 103 பிராம்மணர்களுக்கு தானம் கொடுத்துள்ளார். முஞ்சேரு என்ற மற்றொரு கிராமத்தையும் பிராம்மணருக்குக் கொடுத்து தானசாசனம் எழுதி வைத்துள்ளார். கம்ம, வெலமவாரில் கோகிவார் என்ற கம்மவார் ஏராளமாக இருக்கின்றனர்.

38) இவருக்குப் பின்னர் இவருடைய தம்பியாகிய 3-வது விஷ்ணுவர்த்தனர் பட்டத்திற்குவந்து 37 வருஷங்கள் இராஜ்யத்தை ஆண்டுவந்தனர். அக்காலத்தில் இவருடைய பெரிய தாயார், இவருடைய நன்மைக்காக வேண்டியும் தேக ஆரோக்கியத்திற்கும், ஆயுள் விருத்திக்கும் வேண்டியும் சாலிவாஹன சகம் 644-ஞ கிறிஸ்து சகம் 722-ஞல் ஜைன

தேவாலயத்திற்கு ஒரு கிராமத்தை தானஞ் செய்துள்ளார். (மூலினிகொண்ட என்பது அக்கிராமத்தின் பெயர்) இதனால் ஜைனர்களுக்கு ஒருபக்ஷம் நாட்டின் ஆத்தாசையுள்ளதென்பது கண்கூடு. இவருக்குப் பின்னை இவருடைய குமாரர் (முதல் விஜயாதித்யன்) பட்டத்திற்கு வந்து 19 வருஷ காலம் ராஜ்யபரிபாலனம் செய்து வந்த காலம், இவருக்கு விஜயஸித்தி விக்ரம ராமன் என்ற பிருது பெற்று மிக்க பிரசித்தியுடன் அரசாண்டுவந்தார்.

39) இவருக்குப் பின்னர் இவர் குமாரராகிய 4-வது விஷ்ணுவர்த்தனர் பட்டத்திற்கு வந்து 35 வருஷ காலம் இராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தார். வெங்கி தேசத்தை சுமார் கிறிஸ்து சகம் 799-வரை வரையில் இராஜ்யம் ஆண்டதாக பாதலூரு, பாமுலபாடி, குண்டூர், உப்புடூர் முதலான கிராம சாசனங்களில் காணப்படுகின்றது. இவர் காலசூர்ய ராஜகுமார்த்தியாகிய பெண்மணியை விவாஹம் செய்துகொண்டனர். முதல் விஜயாதித்யன், நிம்மலூரு தினகாடு முதலிய கிராமங்களில் சில பூமிகளை மாதவசர்ம என்ற பிராம்மணருக்குக் கொடுத்து தானசாசனம் எழுதி வைத்துள்ளார். இவருக்கு, இரண்டாவது விஜயாதித்யன் ந்ருபருத்ரன் என்ற குமாரர்கள் பிறந்தனர். 4-வது விஷ்ணுவர்த்தனருக்குப் பின்னர், இவர் குமாரராகிய இரண்டாவது விஜயாதித்யன் சக்கரவர்த்தியாயினர். இவர் பெஜவாடா ராஜதானியாக வைத்துக்கொண்டு ஆண்டதாகவும், 108 யுத்தங்கள் நடத்தி ஜெயம் பெற்றதாகவும், இவருக்கு வீர மாஹேஸ்வரர் என்ற பட்டமும், விரபராக்கிரமசாலியென்ற பிருதும், 108 சிவாலயங்கள் கட்டியதாகவும் அநேக சாசனங்களில் குறித்துள்ளார். தவிர சாளுக்கியார்ஜுன, த்ரிபுவனாங்குச, ராஜபரமேஸ்வர, நரேந்த்ர மிருகராஜாதி பிருதுகளும் உண்டு. இவர் ராஷ்டிரகூட ராஜாவாகிய 3-வது கோவிந்தராஜனுடனும், மைசூர் காங்கராஜாக்களுடனும் 12 வருஷ காலம் விடாப்போராடியும், கிறிஸ்து சகம் 799 முதல் 843-வரை நாற்பது (40) வருஷத்திற்கு மேலாக அரசாண்டார். இவர் (கொர்ரவர்) என்ற கிராமத்தை 24 பிராமணர்களுக்கும், காமருபிகேயென்ற

கிராமத்தையும் அக்ரஹாரமாக தானசாசனம் செய்துள்ளார்.

40) நரேந்தர ம்ருகராஜுவுக்குப் பின்னர் இவர் குமாரர் 5-வது காளீவிஷ்ணுவர்த்தனர் என்றவர் இராஜாவாகி 1½-வருஷ காலம் ஆண்டுவந்த சமயம் ராஷ்டரகூட ராஜாக்களுடன் யுத்தம் செய்து மாண்டுபோனதாகவும், இவருக்கு கலவித்தரராஜன் என்ற பெயரும் உண்டு. இவருக்குப் பின்னர் இவரது குமாரன் 3-வது குணகாங்க விஜயாதித்யன் ராஜாவாகி ராஜ்யத்தை ஆண்டுவந்தார். கிறிஸ்து சகம் 849-ஆு வரை இவருக்கு ரணரங்கசூத்ரக, விக்ரமதவள, பரசக்ரராம, ந்ருபதிமார்த்தாண்ட என்ற பட்டநாமங்கள் உண்டு. இவருக்கு யுத்தமல்லன் என்ற சோதரனும், யுவராஜ விக்ரமாதித்யன் என்ற இருவர் உண்டு. விஜயாதித்யன் பாதலூரில் 100 பிராம்மணர்களுக்கு அநேக பூமிகளைத் தானங்கொடுத்து சாசனம் செய்துள்ளார். இவர் ராஷ்ட்ரகூட இரண்டாவது க்ருஷ்ணராஜுடன் யுத்தஞ்செய்து அவரை சம்மாரஞ் செய்ததாகவும் ஒலம்பாதியென்ற அரசனைச் சம்மாரஞ் செய்து ஜெயம் பெற்றும், மற்ற பல ராஜ்யங்களை ஜயித்தும், வைதும்ப ராஜனாகிய கந்லஸங்கிலனை வசப்படுத்திகொண்டும், கோடமுப்பர்லு போணங்கி கிராமங்களையும் 105 பிராம்மணர்களுக்கும், தாண்டபர்ரு என்ற கிராமத்தை விநயாதித்யர் என்ற பிராம்மணருக்குக் கொடுத்து தானசாசனம் எழுதி வைத்துள்ளார். இவர் வேங்கிதேசத்தை ராஜதானியாக வைத்துகொண்டு 44 வருஷ காலம் அரசாண்டுவந்தார். தாஹிலீபுர அரசருடன் யுத்தஞ் செய்து ஜெயம் பெற்று பல்லவராஜனாகிய இரண்டாவது கிருஷ்ணராஜனை வசப்படுத்திக்கொண்டு ஜெயித்த ராஜ்யத்தை அவருக்குக் கொடுத்துள்ளார். இவர் ஸிம்மாசனம் ஏறுங்காலம் தங்கத்தை துலாபாரமாக வைத்து பட்டாபிஷேகம் செய்து கொண்டதாகவும், இவரிடம் பாண்டுரங்கள் என்ற மந்திரி இருந்தாராம், (பட்வம்சத்தவராம்) இவர் மகாபிரஸித்தியுடையவர் என்றும் கூறப்பட்டுள்ளன.

41) இந்த விஜயாதித்யனுக்குப் பின்னர், இவர் தம்பியாகிய யுவராஜா விக்ரமாதித்யன். இவருக்குப் பின்னர் இவர் குமாரன் முதல் சாளுக்கிய பீமன் பட்டத்திற்கு வந்து ராஜ்யபரிபாலனம் செய்தனர். இவருக்கு த்ரோஹார்ஜுன பட்டமும் உண்டு. சாலிவாகன சகம் 814 கிறிஸ்து சகம் 892-ஹில் பட்டாபிஷேகம் செய்து கொண்டு 30 வருஷங்கள் ஆண்டார். இவருக்கு இரமர்திகண்ட என்ற பிருதும் பெற்ற ஒரு குமாரன் இருந்தான். இவன் அபிமன்யு போல மகாபராக்ரமசாலியாகவும் (நிடதவோலு) பெருவங்கூறு என்ற கிராமத்தில் பல்லவ அரசர்களுடன் நடந்த யுத்தத்தில் யானைகளின் சைன்யத்தில் அம்பாரியிட்ட மதயானையின் மீது இருந்து யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்தில் அவருக்கு மரணம் ஏற்பட்டதாக சாசனங்களில் காணப்படுகின்றது. இந்த ஸஹோதரக்ரேச புண்யகுமாரன் புண்ணியத்திற்காக இரண்டு அக்ரஹாரங்களை பிராம்மணர்களுக்குத் தானஞ் செய்து சாசனம் எழுதிவைத்தனர். இந்த சாளுக்கிய பீமன் என்ற மஹாராஜா, இவரிடத்தில் பிராம்மண மந்திரிகளும் இருந்தனர். இவர் உத்தாகண்டோர் ஜில்லாவிலுள்ள கூபிபர்ரு என்ற கிராமத்தை போதமய்ய என்ற பிராம்மணருக்கும், பண்டுபள்ள கிராமத்தை இரங்காதிகக்கர என்ற பிராம்மணபண்டிதருக்கும் தானசாசனம் செய்து கொடுத்தார். இவருடைய ஆட்சியில் சாளுக்கிய பீமவரம் என்ற நகரத்திற்கு மாற்றியதாகவும், இந்நகர் சாமர்லகோட்டை ரயில்வே ஸ்டேஷன் பக்கம் உள்ளது.

42) இந்த சாளுக்கிய பீமனுக்குப் பின்னல் கொல்லபிகண்ட 4-வது விஜயாதித்ய சக்ரவர்த்தி ராஜ்யத்திற்கு வந்து 6 மாத காலம் அரசாண்டார். இவர் ராஷ்டரகூட ராஜாவாகிய 3-வது இந்த்ரவர்ம 111-ல் நடந்த யுத்தத்தில் மரணமடைந்ததாக சக்திவர்ம சாசனத்தில் காணப்படுகின்றது. யுத்தம் நடந்த இடம் விரஜாபுரப்ராந்தியத்தில். இதற்கு வேலூர் என்றும் சொல்லலாமென்று சரித்திரக்காரர் தெரிவித்துள்ளார். பின்னர் நான்காவது விஜயாதித்யனுடைய குமாரன் முதல் அம்மராஜா என்பவர் பட்டத்தற்கு வந்து கிறிஸ்து சகம் 918, 925-ஹு வரையில் சுமார் 7 வருஷ

3) பூசவாடிவார், முதலிய வம்சத்தவர், விஜய நகர ராஜாக்களுடைய வம்சத்தைக்கொண்டு.

4) மல்யால, மல்லெலவார் தெலிங்காணு சாசனம் பார்க்கவும். (S. I I Vol. IV 568) விளக்கப் பட்டுள்ளன.

5) விப்பர்ல கோத்திர வாசிகள் எல்லோருடைய விஷயம் கோத்திர பட்டிகைகளில் கண்டு கொள்ளலாம். (E. P. 283 of 24)

6) வலபுட்ல or வல்லுட்ல, கோத்ரவாசிகள், (E. P. Rept, 1916 P. 135)

7) சாகிவரர், வத்ஸவாயவார், (ராமவிலாசம் என்ற கிரந்தம் மூலமாகவும். S. I I Vol. IV பக்கம் 245)-ல் பார்க்க

8) காகதிய குலத்தவரென்று சொல்லப்பட்ட உப்பலபாடி சய்யபராஜு, நம்பூறு குண்ட்ராஜு, பாதபாடி ஈதரபல்லி, கட்டாரி, பெல்லம் கொண்ட, கனுமூரி, லகம் ராஜு இவர்கள் எல்லோரும் மந்தபாடி (மந்தபட்டி) வாருக்கு பந்துக்கள்.

9) சுத்த பல்லிவார், வெலநாட்டு ராஜாக்கள், சித்திபுரவராதீஸ்பர என்ற பட்டம் பெற்றவர்கள்

10) பண்டாவார்—துர்ஜய குலத்தவரே ஆவார்.

11) மண்டாவார் ,,

12) ஆலூரிவார். S. I I Vol. IV பக்கம் 317.

13) விப்பர்லவார். ஷை 243

14) ராவிள்ளவார். (சௌகந்திகப்ரசவாபஹரணம், பிருது)

15) நாதெண்ட்லவார். தூர்ஜ்யவம்ச பாலக ப்ரதேசப்பாடி.

16) வேஜெண்டலவார். மந்தபாட்டியாருக்கு பந்துக்கள்.

4-வது விஜயாதித்தனுடைய இரண்டாவது குமாரர். இவர் எழுதி வைத்த சாசனங்கள் பாதகவரம், கோலவெண்ணு வென்ற கிராமங்களிலிருந்து கிடைத்துள்ளன. இவர் கோதவல்லி என்ற கிராமத்தை அக்ரஹாரமாக்கித்தந்ததாக சாசனமிருக்கின்றது, இவர் லோகவிக்கய்ய என்ற சோழ ராஜனை ஜெயித்தும், லோகமஹாதேவி என்ற பாரியை வயிற்றில் 2-வது அம்பராஜா என்றவரும், அங்கி தேவியினிடம் தாளார்ணவன் என்ற புதல்வனும் ஜனித்தனர். இவருக்குப் பின்னர் இவர் தனயர்கள் பட்டத்திற்கு வந்தனர்.

45) இரண்டாவது அம்பராஜா ஆறாவது விஜயாதித்ய சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்று இராஜ்யத்தை சாலிவாகன சகம் 867-லிரு கிறிஸ்து சகம் 945-லிரு வரை 25 வருஷகாலம் இராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். அக்காலத்தில் இவருக்கும் தம்பியாகிய தாளார்ணவனுக்கும் சச்சரவு ஏற்பட்டு முற்றி ஒருவர் புத்திரர்களை மற்றவர் கொல்லுவதும் ஆகிய காரியங்களில் இவருடைய மைத்துனராகிய பாஸ்கரகண்ட நாராயணன் என்றவரும், இக்கொலைகளுக்கு உடந்தையாகிவந்தானும். இவர் ராஷ்டிரகூட யுத்தத்தில், ராஜாவினுடைய யானைகள் 8 திக்கஜங்களுக் கொப்பான யானைகளைக்கொன்றுவிட்டானும். இவருடைய பட்டமஹிஷியல்லாத போகமாதாகிய மனைவி சாமேகாம்ப இவள் ஜைன மதவிஸ்வாசி, (பட்டவர்தன குலம்) இவளுடைய குருவாகிய அரவந்தியாருக்கு கலுசம்பர் என்ற கிராமத்தை, இவ்வம்மையாரின் வேண்டுகோளால், தான-சாசனம் செய்துவைத்துள்ளார். கிறிஸ்து சகம் 970 வரை அரசாண்டதாக சாசனங்களில் எழுதப்பட்டுள்ளது. தவிர சாம்பர்ரு என்ற கிராமத்தை ஒரு சேனதிபனுக்குக்கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். கவிவாணர், வித்துவான்கள் முதலியவரிடத்து மிக்க பரிவு கொண்டு அநேக சன்மானங்கள் முதலியவற்றைச் செய்துவந்துள்ளார். கவி-நாயகரால் கற்பதருவு என்ற பட்டமும் பெற்றுள்ளார். எலவர்ரு என்ற கிராமத்தைபிராம்மணர்களுக்கும், மல்லியூடி என்ற கிராமத்தை ஜைன மடாலயத்திற்கும் கொடுத்து

தானசாசனம் செய்துவைத்துள்ளார். தவிர நூதனமாக சில ஜைன மடங்கள், கோவில்கள், சத்திரங்களைக்கட்டியும் பெஜவாடா, அத்திலி முதலான கிராமங்களில் நிலைநாட்டி உள்ளார். இவருக்கு திரிபுவனங்குச என்ற பட்டமும் பெற்றனர். இவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர் தானார்ணவர் என்ற தமையன். (தம்பி)

46) கிறிஸ்து சகம் 970-ல் தானார்ணவர் பட்டத்திற்கு வந்து வேங்கி தேச ராஜ்யத்தை ஆண்ட காலம். அங்கு அநேக கலகங்கள் கோலாகலமாக நடந்து வந்துள்ளன. ராஜகுடும்பங்களிலேயே நடந்துள்ளது. பாதவன் என்ற ராஜா தானே சக்கராதிபனாக வேண்டுமென்று கலகங்களை உண்டாக்கியவன். இவன் தானார்ணவனுடைய தாயாதியும் 2-வது யுத்தமல்லனுடைய குமாரன் ஆவான். அதுசமயம் தானார்ணவருக்கு உதவியாக முதிகொண்ட சாளுக்கிய மல்லவருண்டு என்ற சேனாதிபதிகள் முக்கியமாக உழைத்து வந்தனர். ஜெயமும் பெற்றதன் காரணமாக, பொத்தபி நாட்டில் 300 கிராமங்களை அவர்களுக்கு இனமாகக் கொடுத்துள்ளார். கண்டய்த்தில் கிடைத்த தாம்பர சாசனத்தில் காணலாம். இதற்குள் 7-வது விஜயாதித்யன் ஆகிய பாதவனுக்கு ஒத்தாசையாக மஹாசூரராகிய தெலுங்கு சோழ ராஜாவாகிய ஜடசோழ பீமன் தன் படையுடன் வந்து, தானார்ணவனுடன் யுத்தம் செய்து அவனைக் கொன்று. ராஜ்யத்தை பாதவனுக்குக் கொடுத்தும், பாத-வனுக்காகத் தானே ராஜாங்கத்தை ஆண்டுவந்தனன். இப்பீமராஜன் பாதவன் பட்டமஹிஷியின் உடன்பிறந்த சகோதரன். இவர் காலத்தில் அநேக யுத்தங்கள் நடந்து உள்ளன. கிறிஸ்து சகம் 999-வரை பாதவனே ராஜ்யத்தை ஆண்டு வந்தனன்.

47) தானார்வணனுடைய குமாரன் சக்திவர்ம என்றவர் தன்னுடைய தந்தையைக் கொன்ற பழிக்குப்பழியை நிறைவேற்றுவதற்கு வேண்டியவற்றை சேகரித்துக்கொண்டு தன்னுடைய சக்தியினால் ஜடசோழ பீமராஜனைக் கொன்று, சாளுக்கிய சந்த்ரன் என்ற பிருதும் பெற்று, சிம்மாசனாதிபாய் வேங்கி தேசத்தை 12 வருஷ காலம் ஆண்டு வந்த காலத்தில் உண்டான தங்க நாணயங்கள், சயாம் முதலான நாடுகளிலிருந்து கிடைத்துள்ளன. அக்காலத்தில் அந்நாட்டவருடன் வியாபாரம் நடந்து வந்ததனால் அந்-நாணயங்கள் கிடைத்துள்ளன. சக்திவர்மனுக்குப் பின்னால்

அவர் தம்பியாகிய விமலாதித்யன் சாலிவாகன சகம் 933. கிறிஸ்து சகம் 1011-ல் இராஜாதிபதியாகி 7 வருஷ காலம் இராஜ்யம் ஆண்டதாக சாசனங்களில் காணலாம். நாறைணவை சக்ரவர்த்தியின் பாரியையின் பெயர் ஆர்ய மஹா தேவியார். இவருக்கும் பூர்விக ராஜாக்கள் ஆகிய சோழர்களுக்கும், காஞ்சிபுர சோழர்களுக்கும் முதல்வர் என்றே காண்கின்றன. காஞ்சிபுர சோழ ராஜகுமாரத்தியாகிய குந்தவியென்ற பெண்மணியை முதலில் பாணிக்ரஹணஞ் செய்துள்ளார். கிறிஸ்து சகம் 1011-18 வருஷ மத்தியில் இருந்தனர் என்பது நிச்சயம். இவருக்கு மந்திரியாகவிருந்தவர் காரஞ்சேடு வாஸியாக வஜ்ஜயப்ரகட என்ற மஹா சாதுர்ய புத்தி உடையவரென்றும், ந்ருபகாமன் என்ற சேனாதிபதியும் இருந்தனர். இந்த ராஜவம்சத்தினர் ஆந்தர சோழருடன் சம்பந்தா சம்பந்தம் உண்டென்பதையும் தெரிந்துகொண்டோம். கிழக்கு சாளுக்கிய வம்ச பரம்பரையை 10-வது சகாப்தம் வரைக்குமுப்தமாகக் கண்டுகொண்டோம். இந்த வம்சத்திலேயே சில வர்க்கத்தினரைக் குறித்து வீட்டுப் பெயர், குலகோத்ரங்களைப்பெற்ற அடபா, விஷ்ணுவர்த்தன, ப்ரம்ஹாதிராயர், நிடுதப்ரோலி மஹா தேவ சக்ரவர்த்தி, வீரபத்ர ராஜா, எலமஞ்சி விஸ்வேஸ்வர ராஜா, யலமஞ்சியுபேந்த்ர சக்ரவர்த்தி, அம்பிகாதேவி மகாராஜா முதலானோர் தோன்றினர். இந்த அடபாவாரும், நிடதபோலுவாரும், யலமஞ்சிவாரும் இன்றைக்கும் கம்மவாரில் உள்ளனர். இவர்கள் எல்லோரும் முன் சொல்லப்பட்ட சாளுக்கிய வம்சத்தினரே ஆவார். இன்னும் 10-வது சகாப்தம் முதல் பின்னர் ஆண்டு வந்த அரசர் பரம்பரையை 2-வது பாகத்தில் கண்டு கொள்ளலாம். சாளுக்கிய வம்சாவழியினர் ஆதியிலிருந்தே அநேக தானதர்ம காரியங்களில் ஈடுபட்டும், கோவில், குளங்கள், மடங்கள், சத்திரங்கள் முதலியவற்றை நிர்மாணித்து க்யாதி பெற்றுள்ளனர். நம் ஆந்தரப்ரதேசத்திலிருந்து வரிசையாக இவ்வளவு சகாப்தம் வரை வேற்றரசர்களுக்குப் பணியாமல் அரசாண்டு வந்தவர்களில், இவர்களைத்தவிர வேறு யாருமில்லையென்று நிச்சயமாக உறுதியுடன் கூறுகின்றனர் சரித்திரக்காரர்கள். இந்த வம்சாவழியினரே கம்மவார் என்பது நிச்சயம். இதனை

கம்மவாருக்குத்தக்க கௌரவம் ஏற்பட்டுள்ளன என்பது பிரஸித்தம்.

48) கோட்டைவார் தரணிகோட்டையை ராஜதானியாக வைத்துக்கொண்டு ப்ரக்யாதியுடன் அரசாண்டவர்கள் சிலர். இவர்களில் 11, 12 சகாப்தம் வரை பரிபாலித்து வந்தவர்களின் சரித்திரமே ஆதாரமாக உள்ளன. ஆயினும் பூர்விக சரித்திரம் கிடைக்கவில்லை. ஆனால் இத்தரணிக் கோட்டையை 12-வதுசகாப்த ஆரம்பத்தில் ஆண்டுவந்தவர் ப்ரோலநாய குண்டு என்றும் இவர் சந்தவோலு ராஜதானியாக வைத்துக்கொண்டு அரசு புரிந்து வந்த வெலநாட்டு கொங்க நரபாலனுடைய மந்திரியென்றும், இவருக்குப் பின்னர் வந்த கோட்டை ராஜாக்களுக்குமிருந்த சம்மந்தம் தெரியவில்லையென்று சரித்திராசிரியர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் கோட்டாவார் என்ற கம்மவார் பிரக்யாதியுடனிருப்பதால் தரணிகோட்டையை ஆண்டவர் ஆந்தர சோழர் என்பதற்கு சந்தேகமே இல்லையென்று சரித்திரக்காரரர் கூறுகின்றார்.

49) கம்மவாரில் கோட்டவார் என்ற வம்சத்தினர் 17-வது சகாப்தத்திலிருந்து அநேக விஷ்ணு ஆலயங்கள் சட்டியும், ஜீரணயுத்தாரணஞ் செய்துள்ளதாக லோக்கல் ரிக்கார்டு, பெதகாலவர்ரு என்ற ரிக்கார்டுகளிலுங்காணலாம். ஆந்தர க்ஷத்திரியர்களில் தநஞ்செயன் என்றவர் தனஞ்ஜய கோத்ரவாசிகள் என்றும், பெனுமச்சுவார் என்றவர் சிலர் இந்த கோத்ரர் என்றும், சூரியகுலத்தவரென்றும், பரதத்வ ப்ரகாசிகையென்ற கிரந்தத்தில் குறித்துள்ளனர். தாண்லவார், ஜம்பனிவார் இக்குலத்தைச் சேர்ந்தவரென்றே கூறுகின்றனர், இன்றைய ஆந்தர க்ஷத்திரியர்களிற் சிலர் இன்றைக்கும் கோட்டவார் என்றே கூறுகின்ற கம்மவார் குடும்பங்கள் நம் நாட்டில் உள்ளனர். கோட்டவார் என்ற கம்மவார் சோழ வம்ச ஆந்த்ரர் என்றவர்களும் ஒரே வம்சத்தவரென்றே சொல்லப்படுகின்றன. இதற்கு ஆதாரமாகச் சில பிருதுகளும் உண்டு. ஆதலால் கம்மவாரின் மூலபுருஷர் என்பதற்கு யாதொருவிதமான சந்தேகமும் இல்லை. இதன் முக்கிய விஷயம் 2-ம் பாகத்தில் கண்டுகொள்ளலாம்.

50) கரிகாலனைக்குறித்த பல விசேஷங்கள், இம்மகாராஜா தொண்டமண்டலத்தில் திரிலோசன பல்லவனை ஜெயித்து உறையூரை ராஜதானியாக வைத்துக்கொண்டு ஆந்தர தேசத்தையும் தன் ஆட்சியில் சேர்த்துக்கொண்டு காளஹஸ்தியில் கொஞ்ச காலமும், தரணிக் கோட்டையில் கொஞ்ச காலமும் பரிபாலித்து வந்தும் கடைசியில் கங்காவல சக்கரவர்த்திக்கு விசேஷ நண்பராக இருந்ததாகவும், இவர் பொத்தபி முதல் நெல்லூர் வரையிலுள்ள அநேக தமிழ் நாட்டிற்குச் சேர்ந்த சித்தூர், கடப்பை முதலான நெல்லூர் ஜில்லாக்களில் அநேக கிராமங்களை நிர்மாணித்து, பொத்தபி நாடு, புலுகுலநாடு என்ற இரண்டு பிரதேசங்களில் விவசாயம் செய்வதற்கு வேண்டிய ஏரி, குளங்கள், கால்வாய் களைக்கட்டி ஸ்தாபிதம் செய்தார். 101 சிவாலயங்களைக் கட்டியும், புஷ்பகிரி, கமலாபுரம், கொண்டூறு, கடப்பை ஜில்லாவில் எர்ரகுடி, சடிபிரேல, பட்டவிராலி, நல்லமல்லி, வேமல்லி, குண்டூர் ஜில்லா முதலான இடங்களில் அநேக தேவாலயங்களைக் கட்டினார் என்றும். கடப்பை ஜில்லாவில் பிராம்ஹணபல்லிக்குப் பக்கத்திலுள்ள குஸுமாசல க்ஷேத்திரத்திற்கு மேற்கில் ஒரு பெரிய தடாகத்தை உண்டாக்கியும், அந்த க்ஷேத்திரத்திற்கு அநேக பிராம்மணர்களை நியமித்தும் அந்த ஸ்தாபனத்தை நிர்மாணித்ததாக பிராம்ஹணபல்லி சாசனத்தில் காணப்படுகின்றன.

51) கரிகாலனின் பிரதிநிதியாகவிருந்த முக்கண்டி வல்லபபல்லவனும் மகாராஜா பட்டம் பெற்று 700 அக்ர-ஹாரங்களை பிராம்மணர்களுக்குக் கொடுத்ததாகவும், ஜைன, புத்தமதங்களைத் துவம்சம் செய்ததாகவும், ஸ்தானீக சரித்திரங்களால் தெரியவருகின்றன. இவர் சகுடும்பமாக காசி யாத்திரை செய்து, கங்கா ஸ்நானம் செய்துவந்ததாகவும், அவரிடத்தில் ஸ்ரீபாதபீடங்கள் இருந்ததாகவும், இவர் சிவாலயங்களிலுள்ள ஜங்கமர்களுக்கும் அநுசரணையாக இருந்தும் ஆலயங்களில் அவர்களுக்கு அர்ச்சக ஸ்தானங்கள் வழங்கியதாகவும், வேதோக்தப்படி தேவாலயங்களில் காரியங்களை நடத்திவந்ததாகவும், இதனால் திரிலோசன பல்லவன் இதை அறிந்து தேவாலயங்களிலிருந்த ஜங்கமர்

களை பூஜையினின்று விலக்கி பிராம்ஹணர்களையே வேத விதிப்படி பூஜா காரியாதிகளை நடத்த ஏற்பாடு செய்து வைத்து ஜங்கமர்களுக்கு புஷ்பகைங்கர்ய காரியாதிகள் செய்துவர நியமனம் செய்துவைத்ததாகவும், பத்தரு ஸ்தானீக சரித்திரங்களில் கூறப்படுகின்றன.

52) ஜைன மதம் முதலில் திராவிடர்களில் தோன்றிய நயனார் கூட்டத்தினரால் அநுஷ்டிக்கப்பட்டனவையென்றும் திரிலோசன பல்லவனுக்கும், கரிகாலனுக்கும் இராஜ விரோதமிருந்ததென்றும், ஆனால் சிவாலயங்களுக்கு எந்த விதமான குந்தகங்களும் நேராமல் காத்துவந்ததாகவும் தெரியவருகின்றன. ஆயினும் இவ்விருவர் காலங்களில் அநேக வனங்களைத் திருத்தி விவசாயம் செவ்வனே செய்ய அநேக சவுகரியங்கள் செய்து குடிமக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்ததாகவும், நெல்லூர் ஜில்லாவில் கோட்டை சரித்திரத்தைப்பற்றி திரிலோசன பல்லவருடைய தந்தை தொண்டமான் சக்கரவர்த்தியென்றும், தல்பகிரி சரித்திரத்தைப் பற்றி இவருடைய தாயார் ஒரு பிராம்ஹண கன்னியென்றும் தெரியவருகின்றது. இப்பல்லவர்கள் அனைவரும் ஆந்தரர் என்பதே ஆன்றோர்களின் சரித்திரக் கூற்று.

53) கரிகாலன் காசியாத்திரை செய்த காலம், ஜுர பாதை ஏற்பட்டதாகவும், இந்த பாதை நிவர்த்திக்காக வேண்டி தோஷபரிகார்த்தமாக, கடப்பை ஜில்லாவில் புஷ்பகிரி அக்ரஹாரத்தை பிராம்ஹணர்களுக்குத் தானஞ் செய்ததாகவும், அத்துடன் ந்யாயபல்லி அக்ரகாரத்தையும் தானஞ்செய்து கொடுத்ததாக ஸ்தானீக ஸாஸ்திரிகள் கூறுகின்றனர். கரிகாலனின் தந்தையாகிய ஜடசோழ மகாராஜா, த்ராவிட பஞ்ஜகமென்ற நாட்டை ஜெயித்து, உறையூரை இராஜதானியாக வைத்துக்கொண்டு ஆண்டதாக ஒரு சாசனத்தில் காணப்படுகின்றது.

54) துர்ஜ்ஜய வம்சாவழியினர் 5-வது சகாப்தம், முக்கண்டி பல்லவன் என்ற திரிலோசன பல்லவன் ஆந்தர தேசத்தின் மீது படையெடுத்து வந்து தேசத்தை ஸ்வாதீனம் செய்து கொண்ட மூவரையும் சிறைப்படுத்தி, விடுதலை செய்தும், அவர்களுடைய ராஜ்ஜியத்தையுங் கொடுத்ததாக மெகன்ஸி லோகல் ரிக்கார்டில் ஞ 11, பக்கம் 770ல் முது நூறு சாசனம். கொண்டபடமட்டி சீமை இராஜாக்களும் வெலநாட்டரசர்களும், தரணிக்கோட்டை அரசர்களும் 11, 12-வது சகாப்தம் சாசனங்களில் காணலாம், வெலநாட்டு மன்னர்களுக்கு மூலபுருஷராகிய மல்லவர்மாவும், கொண்டபடமட்டி ராஜாக்களுக்கு மூலபுருஷறைிய புத்தவர்மாவும், தரணிக்கோட்டை அரசர்களுக்கு மூலபுருஷராக தநஞ்ஜயன் என்றவரும் திரிலோசன பல்லவருக்கு இஷ்டமித்திரரென்றும், சமகாலத்தவரென்றும் காணப்படுகின்றது அக்காலத்தில் வர்ம பட்டம் க்ஷத்திரிய குலத்தவருக்கே ஏற்பட்டதென்றும், இவர்கள் வர்ம பட்டதாரிகளானதால் இவர்கள் க்ஷத்திரியர் என்பதற்கு யாதொருவிதமான ஆக்ஷேபணையும் கிடையாது. ஆனால் இவர்கள் சதுர்த்தர் என்று சொல்லுவதின் காரணத்தைக் கண்டுகொள்ள வேண்டியது கடமையும் முக்கியமான விஷயமும் ஆகின்றன.

55) லோகல் ரிக்கார்டுகளை பரிசீலித்ததில், அக்காலத்தில் ஆந்தரப்பிரதேசத்தில் ஜைன, புத்த, சார்வாக மதங்கள் பிரபலமாகி எல்லாவிடங்களிலும் பிரகாசித்ததாகக் காணப்படுகின்றன. பல்லவ ராஜாக்கள் தென்னாட்டிலிருந்தவர்கள் சைவமதாபிமானிகளாக இருந்தனர். அதைப்போல முக்கண்டிபல்லவன் சைவ மதத்தினராயிருந்து, அதை பிராம்ஹண மதத்தில் ஐக்கியம் செய்ய வெகு பிரயத்தனம் செய்து வசப்படாத கரரணத்தால் அதை விட்டுவிட்டதாகக் காண்கிறது. இவர் ஆந்தரப்பிரதேசத்தை ஜெயித்து, துர்ஜ்ஜயப் பிரபுக்களை வசப்படுத்திக்கொண்டு பின்னர், சிவாலயங்களில் அர்ச்சகர்களாயிருந்த ஜங்கமர்களை நீக்கிவிட்டு, உத்தம வைதிக பிராம்ஹணர்களை அர்ச்சக ஸதானத்திற்கு நியமனஞ் செய்து வேதோக்தமாக பூஜா காரியங்கள் நடந்து வர ஏற்பாடு செய்ததாக பந்தர்சாசனம் கூறுகின்றது பின்னர், ஜைன, புத்த, சார்வாக மதங்களைத் துவம்சம் செய்து சுயமதத்தைப் பிரபலம் செய்ததாக சந்தராலூர் முதலான சரித்திரங்கள் கூறுகின்றன. மோட்டுபல்லி, நாகராஜபாடு முதலான கிராமங்களில் கட்டியிருந்த ஜைன, புத்த மடாலயங்களைத் தரை மட்டஞ் செய்துவைத்தார். அக்காலத்தில் அந்த மதங்களில் சேர்ந்துள்ள ஆந்தர வம்சாவழியினர் எல்லோரும், சுயமதங்களில் சேர ஆரம்பித்தனர்

இராஜாவினுடையவனு மதியினுல் குலகுருக்களாகிய பிராம் ஹணர்களால் அவர்களை அங்கீகரித்தும் சதுர்ந்தர் என்ற பட்டமுங் கொடுத்துள்ளதாகப் பல சாசனங்களால் தெரிய வருகின்றது. பின்னர் சிலர் சைவ மதத்தையும், சிலர் வைஷ்ண மதத்தையும் கடைப்பிடித்து வந்ததாகவும், கொள்வினை, கொடுப்பினைகள் அவர்களிலேயே நடத்தி வந்ததாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன.

---

1) ஆலூரிபோதி நாயுடுகார் எழுதிவைத்த ஸ்ரீகாருள சாசனம் (S. II. IV வால்யூம் 317)

2) எருவதொண்டய ராஜா பார்யா மைலம்ம எழுதி வைத்த ஸ்ரீபீமேஸ்வராலய சாசனம் (S. II. IV வால்யூம் 420)

3) எருவ அனதேவ மகாராஜா எழுதி வைத்த ஸ்ரீபீமேஸ்வராலய சாசனம் (S. II. IV வால்யூம் 474)

4) ராஜாதிராஜஜயேஸ்வர சோழவம்ச பக்திராஜ குமாரஸ்ரீ அனதேவ மகாராஜா பீமேஸ்வர ஆலயத்தில் ஸ்வர்ண கலசம் வைத்து ப்ரதிஷ்டை செய்த சாசனம் (S. 1326 No. 1347)

5) சூர்யகுல திலகராகிய ப்ரஸந்நதேவ நரபதி மகா ராஜா சாசனம் (No. 1348)

6) ஸ்ரீமஹாமண்டலேஸ்வர விப்பர்ல அமரிநாயகுனி பெஜவாட சாசனம், மல்லீஸ்வர தேவாலயத்திற்கு அகண்ட தீபம சமர்ப்பித்து எழுதிவைத்த தானசாசனம் (S. II. வாய் யூம் IV 243)

7) ஸ்ரீசாகிமநுமசாகி கணபயராஜு அனுமஞ்சிபல்லெ சாசன பாகம் (I. N. S. No. 283, 1921)

8) ஸ்ரீசாகிபோதராஜா பெஜவாட சாசனம (S. II. vol. IV No. 224) ஒரு பாகம்)

9) ஸ்ரீமல்யாலகாட்ட சமூபதி கொண்டபர்த்தி சாசன பாகம் தெலிங்காஞ சாசனம் 42.

10) ஸ்ரீகோட்டூரி எரியமநாயாக ஸ்ரீபீமேஸ்வராலய சாசன பாகம் (S. II. V. IV 374)

11) ஸ்ரீஅடபவவிஷ்ணுவர்யதன ப்ரம்ஹாதிராயர் எழுதிவைத்த சாசனம் (S. II V. IV 465)

12) நிடுபப்ரோலி மகாராஜகுமாரத்தியான உதயமகா தேவியார் (ராமநாதபுரம்) ராமேஸ்வர தேவாலயத்தில் எழுதிவைத்த சாசனம் நெ. 124-ல் காணலாம்.

(முதல் பாகம் சம்பூர்ணம்)

இரண்டாம் பாகம்

ஸ்ரீ கம்மவார் சரித்திரம் இரண்டாம் பாகம் சரித்திர விஷய சூசிகைச் சுருக்கம்.

1) ஆந்தர தேசத்தைப் பரிபாலனம் செய்துவந்த மகாராஜாக்களின் வம்சத்தில் தோன்றிய ஆர்ஜய, சோழ, சாளுக்ய, ஹைஹய வம்சாவழியினர்களிலிருந்து கம்மவார் என்ற பட்டம் பெற்றனர் என்று அவரவர் சரித்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்த ராஜ வம்சாவழியினர் சாசனங்களில் கூறப்பட்டுள்ள பெயர்கள், வீட்டுப்பெயர்கள் ஆதியில் ஏற்பட்டவை அல்ல. கம்மவார் 15-வது சகாப்தத்திற்கு முந்தியிருந்த திருஷ்டாந்தங்கள் இல்லையென்று (ஆந்திர பத்திரிகை 29—9—40, டா, ராமாராவு) இது கேவலம் புறப்பாடு, கம்மவார் 12-வது சகாப்தத்திலிருந்தேயுள்ளதாக பத்மநாயக சரித்திர சாரம். அவர்களுக்கு அக்காலத்திலிருந்தே குல-கோத்ரங்கள் இருந்ததாக அநேக திருஷ்டாந்தங்களும், பல ஆதாரங்கள் உள்ளன. அவைகளைக் கவனிக்க வேண்டும். உதாரணமாக வெலுகோட்டிவார் வம்சாவழியில் 14-வது சகாப்தங்களில் கம்மவாரின் விஷயங்கள் அங்கங்கே காணலாம். அக்காலத்திய கம்ம வீரர்களின் சரித்திரத்தை இதில் எழுதப்பட்டுள்ளன.

2) அநேகமாக பல சமயங்களில் ஒரே குலகோத்ரத்தை அநுசரித்து வந்ததாக சாசனங்களை எழுதிவைத்த மகான்களும் இருக்கின்றனர். அவரவர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் ராஜாக்களாக இருந்திருக்கின்றனர். அவர்களுடைய பூர்விக குலஸ்தானங்களைக்கொண்டு, அந்தந்த வீட்டுப் பெயர்களைக் கண்டுகொள்ளலாம். இம்மாதிரியாகக் கண்டறிந்தவர்களுடைய விஷயத்தை இச்சரித்திரத்தில் ஏருறுவார், ஆலூறிவார், விப்பர்லவார், ராபர்த்திவார், எலமஞ்சிவார், கோநவார், சாகிவார்

முதலானவர்களின் சரித்திரங்களினுல் நிரூபணமாகின்றன. இராஜ வம்சத்தைச் சேர்ந்த கம்மவார் எல்லோரும் 14-வது சகாப்தம் வரை மாறிப்போய் விட்டதாகவும், 15-வது சகாப்த காலம் கம்மமாரின் குலப்பிரிவுகள் பிரத்யேகமாகி விட்டதாகத் தெரியவருகின்றது. சாளுக்ய ராஜாக்களில் சம்மெட்ட, மச்சா, கொண்ட, எலமஞ்சி என்றவர்கள் இவ்விதமாக மாறிவிட்டனர் என்றும் தெரியவருகின்றன.

3) ஆந்த்ர தேச சமவர்க்க சரித்திரம் பிரபலமாகப் பிரசித்திபெற்ற அரசர்களுடைய சரித்திரங்கள் வெளிவராத தற்கு முந்தியே, இந்த சரித்திரத்தை நூதனமாக எழுத ஆரம்பித்த காரணத்தால் அநேக சிரமம் ஏற்பட்டதென்று சரித்திரக்காரரர் கூறுகின்ருர். எப்பெடியெனில் சில இடங்களில் உள்ள சாசனங்களைப்பற்றியும், நடைமுறைகளைப் பற்றியும், பழக்க வழக்கங்களில் உள்ள விஷயங்களைப் பற்றியும், சரித்திரத்தைக் கோர்வை செய்யவேண்டியது ஆயினும் பூர்வ சரித்திரங்களில் உள்ள விஷயங்கள் எல்லா வற்றையும் கோர்த்தெழுதுவதற்குச் சாதகமாகச் சில சாசனங்கள் கிடைத்துள்ளன. அவைகள் பிரத்தியேகமாக உள்ளனவென்று கிரந்தகர்த்தா கூறுகின்ருர்.

4) இந்த சரித்திரத்திஞல் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது சரித்திர காலத்தில் இராஜாக்கள், குடிமக்கள் (காபுலு), ரெட்டியார், பிள்ள கூட்டத்தினர், கம்மவார் முதலானவர்கள் எல்லோரும் ஒரே வம்சாவழியினர், ஒரே ஜாதியினராக இருந்து சம்மந்தா சம்மந்தம், பாந்தவ்யம் முதலியவற்றையெல்லாம் விட்டு காலபேதத்தால் நாளா வட்டத்தில் மாறிப்போய்விட்டதாகப் பழைய சாசன விருத்தாந்தம். அவரவர்கள் நடத்திவருகின்ற சுப, அசுப காரியாதிகளிஞல் நன்ருகக் கண்டுகொள்ளலாம் என்பது பிரசித்தம். கம்மவாரில் இன்றைக்கும் நிலைமை மாருதிருக் கின்றவர்கள்

5) 11-வது சகாப்த முன, ஆலூரி, சிலுகூரி, முசுனூரி வம்சத்தவர்களும் ஆவார்கள்.

6) 12-வது சகாப்த முன, ஆலூரி, கோட்ட, கோன, ஸாகி, மல்யால, ஏருவ, ராபர்த்தி, செஜ்ஜா, எலமஞ்சி, தூமாட்டி, விப்பர்ல, மோரம்பூடி, நல்லூரி, பாமுலபாட்டி, கொல்லூரி, த்ரோணுதி, குருகன்டி முதலான வம்சாவழியினரும் ஆவார்கள்.

7) 13-வது சகாப்த முன, எலமஞ்சி, கோன, நிடதவோலு, நாதென்டல, கோட்ட, ஸாகி, மல்யால, கொல்லபூடி, ராபர்த்தி, விப்பர்ல, ராவெள்ள, கங்க்கனுல, கொட்டிபர்த்தி முதலான வம்சாவழியினரும்,

8) 14-வது சகாப்த முன, எலமஞ்சி, கோன, ஏருவ, குரிஜால, கொண்டா, மச்ச, ஸம்மெட்ட, நிடதவோலு, ஸாயபநேனி முதலான வம்சாவழியினரும்,

9) 15-வது சகாப்த முன, எலமஞ்சி, ஆலமந்தல, மஞ்செள்ள, வாசிரெட்டி, ராவெள்ள, பெம்மசானி, சிட்டி, கும்முடூரி, பொச்சுல, சஞ்செர்ல, சூர்யதேவர முதலான வம்சத்தினரும்,

10) 16-வது சகாப்த முன, ராவெள்ள, பெம்மஸானி, யேர்லகட்ட, நல்லா, ஜாபல்லி, சூர்யதேவர, மேதரமெட்ல, கூரபாட்டி, தாசரி, அடபா, கோனேரு, சிறுமாமிண்ல, வாசிரெட்டி, கூரபாட்டி, அப்பிநேனி, வெலம்பாட்டி முதலான வம்சாவழியினரும், மேலே கூறப்பட்டுள்ள இராஜகுடும்பத்தினருடன் கூடி பிரசித்தி பெற்றுள்ளனர். இவர்களிற் சிலர் இராஜாங்க காரியங்களிற் கலந்துகொண்டு வந்தனரென்று சரித்திரங் கூறுகின்றது. இதிலும் சில சாமான்ய குடும்பத்தினரும் கம்மவாரில் இருந்தவர்களுடைய விஷயங்கள் அங்கங்கே காணலாம். இந்த சரித்திரம் தயார் செய்வதற்கு வேண்டிய கிரந்தங்கள் 18 கியாதி பொருந்திய சோழர் என்றவர்களின் விஷயங்களை ஸ்ரீஸ்ரீ ஜாகர்லமூடி குப்புசாமி சௌதரிகாரும், தாடிபத்திரி ரிக்கார்டுகளை ஸ்ரீகோடே வெங்கடாத்ரி சௌதரி அவர்களும் (B. A., முனிசிபல் கவுன்சிலர்) பல ரிக்கார்டுகளை அனுப்பினர். நெல்லூர் ஜில்லா ரிக்கார்டுகள் 3 கவிராஜ ஸ்ரீ திரிபுரநேனு

ராமஸ்வாமி சௌதரி அவர்களும், ஸ்ரீகொத்த தக்ஷிணா-மூர்த்தி சௌதரி, B. A. அவர்களும் அநேக நகல்களை எழுதி அனுப்பினர். இதனால் இம்மஹா சரித்திரம் பிரசுரிக்கச் சவுகரியமாய் இருந்ததென்று சரித்திர ஆசிரியர், அவர்களுக்கு வாழ்த்துக்களும், ஆசியும், நன்றியும் தெரிவித்துள்ளார்.

இந்த சரித்திரத்தை நன்றாகப் பரந்த மனப்பான்மையுடன் உற்றுநோக்கி, ஆதிகாலத்திலிருந்து ஆந்தர க்ஷத்திரியராகிய கம்மவாரின் பாரம்பரிய விஷயங்களைக் கற்றுணர்ந்து பிச்சகுண்டிவார், பயினவார் என்ற (பயிறெண்ட்லு) குடாரபார் சொல்லுகின்ற கற்பனைக் கதைகளுக்கும், சரித்திரத்திற்கும் இருக்கின்ற வேறுபாடுகளை நன்கு அறிந்துகொள்ள வேண்டியது கம்மவாரின் முதல் கடமையாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

ஸ்ரீ கம்மவாரிற் ச்ரேஷ்டிய வரிபின்னவார் என்ற சரிபின்னார் குப்பநாயுடு கொள் பேரரும், இரங்கசாமி நாயுடு குமாரனும், கோட்டிகன்னிகாதான திருமலதாதாச்சார் ஸ்வாமிகள் அவர்களின் வம்சாவழியினரும், கம்மவார் குல குருவுமாகிய ஸ்ரீ வெங்கடாச்சாரியார் ஸ்வாமிகளின் திருக்குமாரரும், ஸ்ரீ கன்னடி தாதாச்சாரியார் என்ற ஸ்ரீ ஸ்ரீ திவால தாதாச்சாரியார் ஸ்வாமிகள் அவர்கள் சிஷ்யனுமாகிய அடியார்க்கு அடியானாகிய

R. இரங்கேச நாயுடு.
கிருஷ்ணராயபுரம்.
1—6—1966] கோவை-6.

1) 11-வது சகாப்தம் துர்ஜய குலத்தினரின் விஷயத்தை 2-வது பாகத்தில், முதலில் குறிக்கவேண்டியது அவசியம் என்றும் குறித்துள்ளதை அனுசரித்து இதை முதலில் எழுதப்பட்டது. இந்த சகாப்தத்திலேயே கிறிஸ்து சகம் 1098-வரை சாலிவாஹன சகம் 1020-வரை துர்ஜய குலத்தவர் எல்லோரும் சைவ மதத்தில் சேர்ந்து விட்டனர். வைஷ்ணவ மதம் ஆந்தரப் பிரதேசத்தில் நன்றாகப் பிரகாசிக்கவில்லை. ஜைன மதத்திலிருந்து சைவ மதத்திற்கு நூதனமாகப் பிரவேசித்த துர்ஜய குலத்தவர் எல்லோருக்கும் கோத்தரங்கள் ஏற்படுத்தவேண்டி, படபானலபட்டு என்ற பண்டிதரை நியமித்து, அவரால் சாலிவாஹன சகம் 1020-ல் கம்மவாரின் கோத்தர பட்டியலைத் தயார் செய்ததாக, பத்மநாயக சரித்திரம் கூறுகின்றன. அவர்கள் எந்த ஊரில் இருந்தனரோ, அந்தப் பெயரையே கோத்தரமாக நிர்ணயம் செய்யப்பட்டதென்று மேற்படி சரித்திரங் கூறுகின்றது. அதற்குப் பின்னுலிருந்தே கிராமப்பெயர் கோத்தரங்களிற் சேர்ந்த கம்மவார் ஸ்ரீ வைஷ்ணவ மத ஆசாரியனை அணுகி அவரிடம் உபதேசம் பெற்று பஞ்சசமஸ்காரம் செய்துகொண்டு வைஷ்ணவத்தில் ஈடுபட்டு வந்தனர். அக்காலத்தில் வீர வைஷ்ணவ மதம் ஒன்றை ஏற்படுத்தி அதில் பல ஜாதியினரும் சேர்ந்து வைஷ்ணவராயினர். கிறிஸ்து சகம் 1150-ல் என்பது சரித்திரக்கூறு. 11-வது சகாப்தத்தில் துர்ஜய குலத்தில் ஆந்தர க்ஷத்திரியர்களுக்கும், கம்ம, வெலமவார்களுக்குப் பூர்வீகராகியவர்கள் எல்லோரும் இதற்குமுன் சைவ மதத்திலிருந்து துர்ஜய குலத்தவருடன் கலந்து தாங்களும் சதுர்த்தர் என்றே பெயரை நிலைநாட்டிக்கொண்டனர். இதுவும் நாளடைவில் மாறியது. சைவ மதத்திற்குப் போட்டியாக, ஸ்ரீ வைஷ்ணவ மதத்தினர் கிறிஸ்து சகம் 1100-ல் பிரபலமாகிய காலத்தில் துர்ஜய குலத்தவர் சிலர் சூரிய குலத்தவரென்று தங்கள் குலத்தை நிலைநாட்டினர். இவர்களே இன்றைய ஆந்தர க்ஷத்திரியர், கம்மநாட்டுவார் என்ற துர்ஜய குலத்தவரும் பந்துக்கள் ஆதலால் அவர்களையும் கம்மவார் என்றே சொல்லிவந்தனர் என்று சரித்திரக்காரர் கூறுகின்றனர்.

2) சாளுக்ய ராஜ நரேந்தரன், துர்ஜய குலத்தவராகிய காகதீய ராஜாக்கள் பிரஸித்தியாக வருவதற்கு முன்னுடியே 7-வது சகாப்தம் முதல் வேங்கி தேசம் என்ற ஆந்தர நாட்டை சாளுக்கியர் ஆண்டுவந்தனர். இவர்களுடைய விஷயம் 10-வது சகாப்தம் வரை முதல்பாகத்தில் கூறப்பட்டுள்ளன. இப்பொழுது விமலாதித்யனுக்குப் பின்னுல் கிறிஸ்து சகம் 1022 இவர் பார்யை குந்தாம்பாவின் கர்ப்பத்தில் பிறந்த ராஜராஜநரேந்தரன் பட்டத்திற்கு வந்து இராஜமகேந்தரவரத்தை ராஜதானியாக வைத்துக் கொண்டு வேங்கி நாட்டை 40 வருஷகாலம் ஆண்டுவந்தார். அப்பொழுது வித்வான்களாகிய மகாபண்டிதர்களை ஆதரித்து வந்தனர். அக்காலத்தில் நன்னயபட்டு என்ற கவிநாயகரால் தெலுங்கு மஹாபாரதம் எழுதப்பட்டது. இவர் போஜராஜனுக்கு சமமானவர். போஜமஹாராஜா சமஸ்கிருத பாஷையில் மிக்கபற்றுடையவர். அதை ஆதரித்து வருகையில், ஆந்தர பாஷையில் பற்றுள்ளவராகிய இவர், போஜராஜனுக்குப் பிற்பட்டவரென்றே கூறுகின்றனர், மஹாகவி காளிதாஸர் போஜமஹாராஜனுக்கு ஆஸ்தான பண்டிதர் ஆவார் என்பது பிரசித்தம். இந்த ராஜராஜநரேந்தரன் ஸீடமார்யுடு என்ற பிராம்ஹணருக்கு கோருமில்லி கிராமத்தை அக்ரஹாரமாகத் தானஞ் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். இவர் கணித சாஸ்திர நிபுணருமாவார். பாவுலூர் மல்லவநாமத்யன் என்ற பிராம்ஹணருக்கு நந்தம்பூடி கிராமத்தை அக்ரஹாரமாகத் தானஞ் செய்து சாசனம் எழுதிவைத்து, ராஜமார்த்தாண்ட, பரகண்டபைரவ, ராஜபரமேஸ்வர, குஸராஜகன்டீரவ என்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். இவருக்குப் பின்னர் இவர் தம்பி, 2-வது பாரியையின் புதல்வன் விஜயாதித்யன் பட்டத்திற்குவரவேண்டியிருக்க இவருடைய மூத்த மனைவியாகிய சோழராஜ குமாரத்தியானவள் அதை மறுத்து விஜயாதித்யனுக்கு சமவயதுள்ள தன் குமாரனுகிய சக்த்திவர்மனை ஸிம்மாசனபதியாக நிறுத்தினுள். குலமுறைப்படி இதைப் பிரஜைகள் ஆமோதித்தனர். இராஜராஜநரேந்தரனுக்கு அம்மங்கிதேவி, ரேவல் தேவி என்ற இருவர் பாரியைகளிருந்தனர். இவர் அம்மங்கிதேவியின்

கர்ப்பத்திற் றோன்றிய ராஜேந்தர சோழன் என்ற குமாரனை யும், ரேவல் தேவியின் கர்ப்பத்தில் சோமல் தேவி என்ற பெண் குமாரியையும் மக்களாகப் பெற்றனர். இந்தச் சோமல் தேவியார் சாலிவாகன சகம் 987-ல் த்ராக்ஷாராம பிமேஸ்வராலயத்தில் நின்றுள்ள ஸ்வாமிக்கு தங்கத்திலும் ரத்தினங்களாலும் கன்டாபரண மாலையைச் சமர்ப்பித்து, தூண்டா விளக்கு என்ற தீபஸ்தம்பத்தையும் வைத்தும், மைசூர் ராஜ்யத்திலுள்ள யெல்லூரில் பிள்ளையார் அம்மங்கி தேவியார் என்ற பெயர் குறித்துள்ள சாசனம் ஒன்று இருக்கின்றது என்று சரித்திரக்காரர்கள் நரேந்த்ர ராஜ பத்தினியிடம் தெரிவித்தனர். இதனால் இந்த வமசத்தினர் பிள்ளையார், ஆழ்வார் என்றும் பெயர்கள் வைத்துக் கொண்டனர் என்றும் கூறுகின்றனர். ஆயினும் இந்த ராஜராஜநரேந்தரன் ஆந்தரனென்றே சரித்திர ஆசிரியர்கள் நிர்ணயம் செய்துள்ளனர்.

3) 7-வது சப்தம விஜயாதித்யன் ராஜராஜனுக்குப் பின்னர் சக்திவர்மா ஒரு வருஷ காலம் ராஜ்யபரிபாலனஞ் செய்து, இறந்துபோகவே, இந்த விஜயாதித்யன் பட்டத் திற்கு வந்ததாக ர்யாலி சாசனங்களில் காணப்படுகின்றது. இந்த சாசனம் கோதாவரி மண்டலத்திலிருக்கின்றன. இவர் கிறிஸ்து சகம் 1062-ஷுக்கிற்குள் பட்டத்திற்கு வந்து, இவர் காலத்தில் திரிகர்ணபாலகன் என்ற யசகர்ணதேவுண்டு என்ற ஹைஹய வம்சத்து ராஜா படையெடுத்து வந்த சமயம், ராஜராஜநரேந்தர குமாரராகிய ராஜேந்தரசோழன் எதிர்த்து, தன்னுடைய சிறிய தகப்பனாராகியவருக்கே ராஜாங்கத்தை நிலை நாட்டி ராஜ்யத்தைப் பரிபாலிக்கச் செய்தார். மேற்கு சாளுக்ய சக்கரவர்த்தியாகிய 6-வது விக்ரமாதித்யன் வந்து மறுபடியும் வேங்கி நாட்டின் மீது படையெடுத்து வந்து தாக்க, அப்பொழுது குலோத்துங்க ராஜேந்தர சோழன், சோழ ராஜாவாகிய வீர ராஜேந்தர சோழன், விக்கிரமாதித்யனுடைய சகோதரன் சோமேஸ் வரன் முதலானோருடன் வந்து போராடி விக்கிரமாதித்யனைத் தோற்கடித்து வேங்கி நாட்டை நிலைநாட்டினார்கள். இந்த ராஜேந்தர சோழனுடைய சகாயத்தால் 15 வருஷ காலம் விஜயாதித்யன் வேங்கி தேசத்தை ஆண்டுவந்தனர்.

4) குலோத்துங்க சோழனாகிய இவருக்கு ராஜேந்தர சோழன், ராஜநாராயண சோழன் என்ற பெயர்கள் உண்டு. இவர் கிறிஸ்து சகம் 1070-ஆு வரை ராஜ்யத்தை ஆண்டதாகவும், இவர் யுவராஜாவாக இருந்த காலம் சக்கரகோட்ய மண்டலம் (பஸ்தர்) மீது படையெடுத்துச்சென்று அந்நாட்டு அரசனை ஜெயித்து தாராவர்ணர் என்ற ராஜனிடம் கப்பம் பெற்றுவந்தார். இவருடைய ஜென்ம நக்ஷத்ரம் புஷ்யம் என்ற பூச நக்ஷத்ரம். இவர் தன் மாமனாகிய ராஜேந்தர தேவ சோழனுடைய சோழ நாட்டை வசப்படுத்திக்கொள்ள வேண்டி, மாமா இறந்தவுடனே படை திரட்டிக்கொண்டு போக, அவருடைய தம்பியாகிய வீரராஜேந்தர சோழன் முறைப்படி ஸிம்மாசனபதியாகிப் பிரஜைகளால் அங்கீகாரம் பெற்றதினால் அவர் மரணகாலம் வரை அந்த ராஜ்யத்தை அவரே ஆண்டுவந்தமையால் இவருக்கு வீர சோழ ராஜ்யம் கிடைக்கவில்லை. இந்த மஹான் சோழதேச பரிபாலனம் செய்துகொண்டு, வேங்கி தேசத்திற்குத் தன் குமாரர்களை அனுப்பி ராஜப்பிரதிநிதிகளாக நியமித்தார். இவர் வேங்கி தேசத்திற்கு, இவர் சிறிய தகப்பனார் ஆண்டு வந்த காலம் நடந்துவந்த யுத்தங்களுக்கு வேண்டி உதவியாக வந்த காலம். தென்னாட்டில் பாண்டிய, கேரள, சிலோன் முதலிய ராஜாங்க அரசர்கள் தனி ராஜ்யம் ஏற்படுத்திக் கொள்ளப் பிரயத்தனஞ் செய்துவந்த விஷயங்களை ஒற்றர் மூலமாகத் தெரிந்து, உடனே படை திரட்டிக்கொண்டு சென்று அவர்களை அடக்கியும், அந்த இடங்களில் ஜெயக் கொடியையும் நட்டனர். இவர் 28 வருஷ காலம் ஏகசக்ராதிபதியாக ஆண்டுவந்தனர். பாண்டியர், கேரளர், சிலோன்காரர்கள் கப்பம் கட்டிவந்தனர். மற்றொரு சமயம் பாண்டிய நாட்டரசனாகிய நரலோக வீரன் என்ற மன்னன், கட்டுக்கடங்காமல் கலகம் செய்ய, அவனையும் அடக்கி தன்னாட்சியை நிலைநாட்டினார் என்பது பிரசித்தம், அதற்குப் பின்னர் இவருக்கு நண்பராக இருந்து சிலோனை ஆண்டுவந்த விஜயபாகு என்ற மன்னவனுடன் கூடி விசுவாசத்துடன் தன் மகளாகிய சூரியவல்லி என்ற பெண்மணியை, விஜயபாகு வின் குமாரனாகிய வீரபெருமாள் என்ற யுவராஜனுக்கு விவாஹம் செய்து வைத்தார். மற்றொரு குமாரியாகிய

ராஜசுந்தரியை கலிங்க தேசத்து ராஜகுமாரனாகிய ராஜ-ராஜனுக்குப் பரிணயம் செய்துகொடுத்தனர். இந்த சம்மந்தங்களின் காரணமாக நல்ல பட்டப்பெயர் உலகத்தில் பிரகாசித்தன. இவருக்கு மதுராந்தகதேவி, தீனசந்தாமணி, ஏழிசைவல்லி, த்யாகவல்லி, த்ரைலோக்யமஹாதேவி. காடவமஹாதேவி (பல்லவராஜ கன்யை) என்ற மனைவியர் இருந்தனர். சோழகுலவல்லி, திரிபுவனமஹாதேவி, வரவுகம்பமாதேவி என்ற மனைவியரும் இருந்ததாகச் சாசனங்களில் காணப்படுகின்றன மதுராந்தக தேவியின் கர்ப்பத்தில் பிறந்த ஏழு பேர் புத்திரர் இருந்தனர். வேங்கி தேசத்தில் இவருக்குப் பிரதிநிதியாக இருந்தவர்களில் இவருடைய சிறிய தகப்பனாராகிய விஜயாதித்யன் கிறிஸ்து சகம் 1070-76 மத்தியில் குமாரராகிய ராஜராஜ கிறிஸ்து சகம் 1076-78 மத்தியில், பின்னர் வீரசோழன் 1079-84 மத்தியில், பின்னர் ராஜராஜசோழ கங்கு 1084-89 மத்தியிலும், வீரசோழன் மறுபடியும் 1089-90 மத்தியிலும் பின்னர் விக்ரம சோழன் 1093-1118 வரையிலும் ராஜப்பிரதிநிதிகளாக இருந்தனர். ஆயினும் வேங்கி தேச பரிபாலனம் எல்லாம் இவருடைய விஸ்வாசிகளாகிய வெலநாட்டுக் கொங்க ராஜு நரேந்தர சோழர் வசமே இருந்தன. ராஜராஜு ராஜப் பிரதிநிதியாக 1 வருஷமிருந்து ராஜாங்கத்தில் பற்றில்லாது தன் தாய்தந்தையரிடமே போய்ச் சேர்ந்து கொண்டனர். அப்பதவிக்கு வீரசோழனை நியமித்தனர். இது சாலிவாகன சகம் 1001-வது வருஷம். வீரசோழனிடம் வெல நாட்டு விதுர ராஜு மந்திரியாக இருந்தனர். இந்த விதுர ராஜன் மிக்க பராக்கிரமசாலியானவன். பாண்டிய ராஜா, மேற்கு சாளுக்ய அரவவிக்ரமாதித்யனுடன் சேர்ந்துகொண்டு வேங்கி நாட்டைக் கைப்பற்றுவதற்காகப் பிரயத்தனஞ் செய்து படையுடன் சென்று போர் புரியக்கண்ட மன்னவர் சமாதானஞ் செய்துகொண்டு வேங்கி தேசத்தில் பாதிபாகம் (கோதாவரி ஜில்லா மத்தியபாகம்) இவருக்குக் கொடுத்ததாகச் சாசனங்கள் இருக்கின்றன. இவரிடத்தில் மேடமார்யன் என்ற பிராம்ஹண சேனாதிபதி இருந்தான். இவருடைய காலத்தில் வெல்லூரில் ஒரு விஷ்ணு ஆலயங் கட்டி, அதற்கு மானியமாக காலேறு என்ற கிராமத்தை

அக்ரஹாரமாகத் தானசாசனம் செய்துகொடுத்தார். இந்த சேனுதிபதி ஒருசமயம் பிரதாபருத்ரனிடம் தோல்வியடைந்து உள்ளதாகவும் காண்கிறது. வீரசோழனுக்குப் பின்னர் ராஜராஜு சோழகங்கு பிரதிநிதியாக இருந்தான். அக்காலத்தில் ஆந்தரப்ரதேசத்திலிருந்த தெலுங்கர்களுக்கு சில உரிமைகள் வழங்கியிருக்கின்றுர். தெலுங்கர் விவாஹ காலத்தில் குதிரை மீது பவனி வர உத்திரவு செய்துள்ளார். கலியாணமான புதுத் தம்பதிகள் ஒரு ஜதை வேஷ்டியைக் காணிக்கையாக வைத்து. ராஜதரிசனம் செய்து ஆசிபெற்று வரவும் ஏற்பாடு செய்து நடத்திவந்துள்ளார் என்பது சாசனக்கூற்று. ராஜராஜு சோழகங்குக்குப் பின்னர் வீர சோழன் மறுபடியும் ராஜப்பிரதிநிதியாகி பீடாபுர சமீபத்தில் 536 திராவிட பிராம்ஹணர்களுக்கு ஒரு அக்ரஹாரம் கொடுத்தும், தஞ்சாவூரில் பிரஹதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டியும், ஏகசிலா நந்தியையும் ஸ்தாபிதம் செய்துவைத்தார். வீரசோழனுக்குப் பின்னர், விக்ரம சோழனுடைய தம்பி வேங்கி தேசத்திற்கு ராஜப்பிரதிநிதி யாக வந்து, குலோத்துங்க சக்கரவர்த்தி காலம் வரையிலும் இவரே ராஜப்பிரதிநிதியாக இருந்து அவருக்குப் பின்னர் சக்கரவர்த்தி ஆயினுர். விக்ரம சோழனுடைய காலத்தில் கோதாவரிக்கு வடக்கேயுள்ள பிரதேசத்தைக் கலிங்க ராஜா வாகிய அனந்தவர்ம சோழகங்கு கைப்பற்றிக்கொண்டதாக ஸ்ரீ கூர்மசாசனம் மல்லதேவரின் பீடாபுர சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ளன. ஆயினும் கலிங்க நாட்டுப்பிரதேசத் தில் சில பாகங்களை இவர் தன் வசம் செய்து கொண்டதாக வும் சாசனங்களில் காணப்படுகின்றன. இந்த விக்ரம சோழன் தன் தந்தையைப்போலவே சைவ மத அபிமானி யாயிருந்தும், ஸ்ரீ வைஷ்ணவ மதம் தன்னுட்டில் பிரபலம் ஆக்குவதற்காக ஸ்ரீ ராமாநுஜரை வரவழைத்து அங்கு நியமனம் செய்தனர், வேங்கி தேசத்திற்குத் தக்க பிரதிநிதி களை அனுப்பி நல்ல முறையில் அரசாட்சி செய்துவந்தனர். இதேபோல குலோத்துங்க சோழன் கங்கைகொண்டசோழ புரியை ராஜதானியாக வைத்துக்கொண்டு தென்னுட்டைப் பரிபாலித்து வந்தான். ஆயினும் இவர் வேங்கி தேசம் தன் வசத்திலேயே இருந்ததாக ஒரு சாசனம் எழுதிவைத்து

உள்ளார். இவர் வடநாட்டுக் கலிங்க ராஜ்யத்தைக் கருணாகர பல்லவர் காலம் முதல் 26-வது வருஷ காலத்தில் ஜெயித்து அந்நாட்டிலுள்ள அநேக தன, நாணயாதிகளைக் கைப்பற்றியும், சேரநாட்டின் மீது இரண்டு தரம் படை எடுத்துக் கப்பல் துறைமுகங்களைத் தன் வசப்படுத்தியும், இவருடைய ராஜ்யம் தலைமன்னார் ஜலசந்தி, பொதியைமலை, கன்யாகுமரி முதல் கொட்டூர் முதலான பிரதேசங்களில் இவருடைய ஆட்சியை விஸ்தாரப் படுத்திக் கொண்டனர். இம்மஹாராஜனுக்கு ராஜநாராயண, ராஜேந்தர, திரிபுவன சக்கரவர்த்தி, விக்ரம சோழகுல சேகரபாண்டிய குலாந்தக, விருதராஜ பயங்கர, அகலங்க, அபய, ஜயதர, பராந்தக, பெர்மாநடிகலு, பரகேசரி முதலான பட்டப் பெயர்களும் பெற்றுள்ளார். இவர் நெல்லூர் கிராமத்தில் ஓர் பாகத்தை காட்டம நாயகர் என்றவருக்கும், காவேரி அக்ரஹாரம், பீடாபுரத்தில் அன்னசத்திரம் முதலான காரியங்களுக்காகத் தான சாசனம் செய்துள்ளார். இவருக்கு குந்தவி, மதுராந்தகி என்ற சகோதரிகளிருந்தனர். கருணாகர பல்லவனும், நரலோக விரனும் சோழநாட்டில் இவருக்குப் பிரதான சேனாதிபதிகளாக இருந்தனர். இவர் காலத்தில் தேசங்களில் எல்லாம் சர்வே அதிகாரிகளை வைத்துக்கொண்டு எல்லை நிர்ணயம் செய்துவைத்தார். கலிங்க நாட்டின் மீது இரண்டு தடவைகளில் படையெடுத்து ஜெயம் பெற்று, ஜெயங்கொண்டான் என்ற ஜைன கவீஸ்வரனால் தமிழ் பாஷையில் கலிங்கத்துப்பரணியென்ற கிரந்தம் கலிங்கத்துப் பாரணியில் பிரமாதமாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவருடைய காலத்தில் பாஷையும், மதமும் விருத்தி அடைந்துவந்தன. இவர் வீரமகேஸ்வரன் என்றமையால் சைவ மதம் விஸ்தாரமாக விளங்கியது. ஹோயிஸல பல்லால ராஜாக்களுடைய ஆஸ்ரமங்களில் இராமாநுஜர் தங்கியிருந்து வைஷ்ணவத்தை விளக்கி, வைஷ்ணவ மதத்தை விஸ்தாரஞ் செய்துவைத்தார். விக்ரம சோழனாகிய இவர் சென்னை ராஜதானி முதலானவற்றையும் பரிபாலித்து வந்தார். இவ்விஷயங்கள் வீரசோழ மஹாராஜனுடைய சாசனங்களில் கிறிஸ்து சகம் 1127-ஷ சேர்போலு என்ற சாசனம் கிறிஸ்து சகம் 1135-ஷ விக்ரம சோழனும், வீர

சோழனும் கலந்தே நாட்டை ஆண்டுவந்ததாகவும், குலோத்துங்க சக்கரவர்த்தி வேங்கி, சோழ நாடுகளைப் பிரபலமாக (525) ஆண்டு வந்ததாகவும் சரித்திரம் கூறுகின்றன. இவர் விருத்தாப்யம் அடைந்தது முதல் விக்ரம சோழனே ஆண்டுவந்தான். இவர் ஆட்சிகாலத்தில் எழுதி வைத்த சாசனங்கள் தெலுங்கிலும், தமிழிலும் பிரபலமாக விளங்குகின்றன. அவைகளெல்லாம் ராஜதர்ம, ராஜநீதி, பிரஜைகளை ரட்சிப்பது, தானதர்மாதிகளின் விஷயங்களும் நன்ருக விளக்கப்பட்டுள்ளன. இவருடைய காலத்தில் சிலோன் என்ற இலங்கை இவர் ஆட்சியில் சுதந்திரமாக இருந்தது. ஆயினும் இலங்கை ராஜாவாகிய விஜயபாகுகனை வசப்படுத்தி தன்னுடைய குமார்த்தியை அவர் குமாரருக்கு விவாகம் செய்து கொடுத்துள்ளார். இவருடைய காலத்தில் கங்கவாடி ராஜ்யம் மைசூரைச் சேர்ந்தது. அதுவும் இவர் வசம் ஆயின.

5) இக்காலத்தில் காம்ப்பு என்ற வாக்கியம் க்ஷத்திரியர்களில் வழங்கி வந்தன. சாலிவாகன சகம் 1037-ஞ பல்லவ நாட்டு சாசனத்தில் திரிபுவன சக்கரவர்த்தியாகிய பராந்தக தேவராஜாவும், பல்லவ ராஜாக்களும் ஒரே காம்ப்பு வம்சத்தினரென்று வர்ணிக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் (காம்ப்பு என்றவர்) சூத்ரர் என்று நிகண்டுகளில் எழுதியிருக்கின்றனர். இது விசாரகரமாகின்றன. பெஜவாடாவில் மல்லேஸ்வர ஆலயத்தில் இந்த சாசன பாகம் கூறுகின்ற விபரம்: க்ஷத்திரிய குலத்தவர் கம்மவார், காம்ப்புலு, கம்மநாட்டி காம்ப்புலு, தெலங்காணு காம்ப்புலு முதலான பேர்கள் பெற்று அழைக்கப்பட்டனர். நாளடைவில் மறுபடியும் கொஞ்சம் மாறுதலேற்பட்டு கம்மகாம்ப்புலு, தெலகாலு என்று சில இடங்களில் விவகாரம் ஏற்பட்டது. இதனுல் க்ஷத்திரிய குலத்தவர் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த சிலர் மதபேதங்கொண்டு மாறிவிட்டனர். இவர்களை விஷ்ணுமூர்த்தியின் பாதங்களிலிருந்து கங்கையுடன் பிறந்தவர்களென்று, கவிநாயகர்கள் சரித்திரங்களில் எழுத ஆரம்பித்தனர். ஸ்ரீநாதமஹாகவி தான் எழுதிய பீமகண்டமென்ற சரித்திரத்தில் கம்ம, வெலம, ரெட்டி, பத்மநாயக

வம்சங்களெல்லாம் அப்படி ஏற்பட்டதென்று எழுதியுள்ளார். அவர் காலம் 15-வது சகாப்தம், அக்காலத்தில் குலாசாரங்களெல்லாம் அநேக மாறுதலடைந்துவிட்டன. மதங்கள் மாறின. அப்பொழுது பன்டரெட்டி பிரபுக்களும், பத்ம நாயகர்களும், கம்மவாரும் சதுர்த்த வம்சத்தினரென்று சொல்லிக்கொண்டனர். ஆயினும் ஸ்த்திரமாக நிற்கவில்லை. தாதாபாஸ்ரீநாத கவிக்கு சமகால வாசியான வல்லபமாத்யுடு என்றவர் எழுதிய "க்ராடபிராம்" என்ற கிரந்தத்தில் ஹைஹய வம்சத்தினர் ஆகிய பல நாட்டு ராஜாக்கள் கொல்ல ஜாதிப் பெண் வயிற்றில் பிறந்தவர்கள் என்ற பொருள் தோன்றும்படி வர்ணித்துள்ளார். இதைக் கோல் கொண்ட பத்திரிகை, சம்வாதத்தில் அதை மாற்றி (அல்ல சவதி தல்லுலு பிட்டலு, பதுலு) என்று சொல்லலாமென ஸ்ரீ வெல்லால சதாசிவ சாஸ்திரியார் எழுதியிருக்கின்றார். இவ்விஷயம் கொல்லர் யதுவம்சப் பிரிவினராதலால் யாதவரும் அவர்களும் ஒரே குலத்தினரென்று எழுதி விட்டனர். யாதவரும், கொல்லரும் தோன்றிய வரலாற்றைக் கவனிக்க வேண்டும். அதாவது, சந்திரகுல திலகராகிய யயாதி மஹாராஜனுக்கு இரண்டுபேர் மனைவியர் தெய்வயானை என்ற பெண்மணி அசுரகுருவாகிய சுக்ராச்சாரியாரின் மகள். இவள் வயிற்றில் பிறந்தவர்கள் துருவசு, பூரு என்ற இருவர் புத்திரர்கள். சர்மிஷ்டை அசுர குல ராஜகுமார்த்தி. இவள் வயிற்றில் பிறந்தவர்கள் (3) மூவர். அவர்கள் யது. துரு, வசு என்றவர்கள். பூருவென்ற குமாரன் தன் தந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி, தன் இளமைப் பருவத்தை தந்தைக்குக் கொடுத்து தந்தையின் மூப்பைப் பெற்றதினால் அவர் அவன் மீது கருணை கொண்டு தன் பட்டத்தைக் கொடுத்துப் பூருவை இராஜாவாக நியமித்து மகுடம் சூட்டினார். மற்ற மக்கள் தந்தையின் கோரிக்கையை நிறைவேற்ற மறுத்தமையால், அவர்களுக்கு ராஜாங்கமும், பட்டமும் இழந்து போக நேரிட்டதும் தவிர, தந்தையாகிய யயாதி மஹாராஜா கொடுத்த சாபத்தால் ஜாதிப்பிரஷ்டமும் அடைந்தனர். இந்த யெதுவுக்குப் பிறந்தவர்கள் யாதவர், துருவசு புத்திரர் துருக்கர். துருவின் குலத்தோர் போஜர். வசுவின் குலத்தோர் மிலேச்சர் ஆக

(4) நான்கு பிரிவினராயினர். பின்னர் பூரு பட்டத்திற்கு வந்து, அஜன் என்ற புத்திரனைப் பெற்றான். இவரை சந்திர குல அஜமகாராஜன் என்று பாரதம் கூறுவது. இதனால் சந்திர குல மாறுதலை நன்கு கண்டு கொள்ளலாம். தவிரவும் முற்காலத்தில் ராஜகுடும்பத்தினர் மற்ற ஜாதியில் மணந்து கொள்வது வழக்கம் என்பது புராணப் பிரசித்தம். புரூரவன் தேவதாசியை மணந்து கொண்டனன், என்பதும், இதற்கு உதாரணமென்று அறியவும். (அநுபவத்திலேற் பட்ட க்ஷத்திரியருக்கு காம்ப்புலு என்ற பெயர்)

6) விக்ரம சோழ மகாராஜன், குலோத்துங்க சக்கரவர்த்திக்குப் பின்னர் 29—6—1118-ல் ராஜ்யாதிபதி யாகி வேங்கி தேசத்தைப் பரிபாலித்து, சோழ நாட்டையும் நீதியுடன் 17 வருஷ காலம் ஆண்டு வந்தார். இவர் தந்தை யின் காலத்தில் எதிரிகள் கைப்பற்றிய கங்காவாடி ராஜ்ய மும் இவர் வசமாயிற்று. அது மைசூர் ராஜ்யத்தில் ஓர் பாகம் தான் வசமானதாக மற்றைய சாசனங்களால் காண்கின்றன. கிறிஸ்து சகம் 1128-வருஷத்தில் சிதம்பரம் நடராஜர் கோவிலில் அநேக கட்டடங்கள் கட்டியுள்ளார். இந்தக் கோவிலைச் சுற்றியுள்ள வீதிக்கு இவர் பெயரிட்டுள்ள னர். விக்கிரம சோழ வீதியென்றும், ஸ்ரீரங்கத்தில் (5) ஐந்தாவது பிரகார வீதிக்கும் இவருடைய பெயரிட்டுள்ளன. கிறிஸ்து சகம் 1125-வருஷத்தில் ஆற்காடு ஜில்லாவில் கொடூரமான வறட்சி ஏற்பட்ட காரணத்தால் சிலர் பூமிகளை விற்று கிஸ்தி துகைகளைச் செலுத்தி வந்தனராம். கஜானா வில் தனம் குறையாதிருக்க வேண்டி அது நடந்ததென்று கூறுகின்றனர். இம்மஹாராஜாவுக்கு த்யாஹசமுத்ர, அகலங்க, ராஜகேசரி, பரகேசரி என்று பல பிருதுகளும் பெற்றுள்ளார். இவருக்கு முக்கோகில, தியாகபதாக, நம்பிரத்தியார், நேரியன் மாதேவி என்ற மனைவியர் 5 பேர் இருந்தனரென்று காணப்படுகின்றன. இவரிடத்தில் தக்ஷிண தேசத்தில், ஊரிநாயகுடு, சாம்புவராயர், ராஜ-நாராயண, மண்டன்கங்கை, கொண்டன்பண்டி, கொல்ட என்றவர்கள் தொண்டமண்டலத்தில் மிக்க நண்பர்களாக இருந்தனர். ஆந்தர தேசத்தில் பொத்தபிபேத ராஜ

விமலாதித்ய தேவன், சுந்நரதேவன், வெலநாட்டு கொங்க ராஜா மாரயபண்டயன், கொல்லிபாக நம்பிராஜு, கட்டி தேவுண்டு முதலானவர்கள் சிநேகிதராகவும், சேனதிபதிகளாகவும் இருந்தனர் என்று காணப்படுகின்றது. சோழ தேசத்திலிருந்தராஜனிடம் அநேகசேனதிபதிகள்இருந்தனர் தவிர நரலோக வீரன் என்ற செஞ்சிய பாலகன், ஓலம்ப பல்லவன் என்ற வானகோவரராயன், அனந்த பாலன் திரிகர்த்த கருணகர தொண்டமான், முனயார், சோழகான், கன்னன் முதலானவர் இவருக்கு உட்பட்டவராவார். இவருக்குப் பின்னர், இவருடைய குமாரன் ராஜாவாக வந்தான்.

7) இரண்டாவது குலோத்துங்க ராஜு கிறிஸ்துசகம் 1133-வருஷத்தில் யுவராஜாவாக இருந்தும் இவருடைய தந்தையாகிய விக்ரம சோழனுடைய ஆட்சி மறுபடியும் இரண்டு வருஷம் இருந்தன. இவர் ஆட்சியில் பிரஜைகளுக்கு முக்கியமான உதவிகளுமிருந்துவந்தன. சிதம்பர தேவாலயத்தில் 7 மாடி கோபுரத்தைக் கட்டினர். கோபுரத்திற்கு தங்க முலாம் பூசப்பட்டன. இவர் தன்னுடைய ராஜதானியை கங்கை கொண்ட சோழபுரத்தில் நிறுவியதாகவும், இவருக்கு அநபாய, பெருமாள்ளு, திருநிருசோழ, எதிரிலிசோழ, கலிக திண்டசோழ என்ற பிருதுகளும் உண்டு. இவருக்கு தியாகவல்லி, முக்கோகில என்ற மனைவியர் இருந்தனர். முக்கோகில மலையாள ராஜகுமாரியாவாள். இவர் காலத்தில் தெலுங்கு தேசத்தில் அநேக தான சாசனங்களை இவருடைய சிநேகிதர்கள் எழுதி வைத்தனர். வெலநாட்டு இரண்டாவது கொங்க ராஜா என்ற பிரதிநிதி அங்கு அரசாட்சி செய்துவந்தனர். இவர் காலத்தில் பிரஜைகளுக்கு யாதொரு விதமான தொல்லைகளில்லாமல் சுகமாக வாழ்ந்து வந்தனர். தமிழ் பாஷையில் அநேக சரித்திரங்கள் உண்டாயின.

காடவராயர் என்ற பல்லவ நாயகன் அதிகாரத்தில் திருநாமநல்லூறு, திருவடி, புரதாசலம் கோவில்களுக்கு அநேக ரத்னபரணங்கள், பூமிகள், தங்கம் முதலானவற்றை

கொடுத்து தானசாசனம் எழுதிவைத்தனர். கட்டிதேவர் என்ற இவருடைய நண்பர், பிராம்மணர்களுக்கும், தவசிகளுக்கும் ஒரு அக்ரஹாரத்தைக் கொடுத்து சாசனம் செய்து வைத்தார். இன்னும் இவர் காலத்தில் புதுக்கோட்டை ராஜ்யத்தில் திருகோகர்ணத்தில் ஒரு பிராம்மண வர்க்கத்தார் ராஜபாலகராயிருந்து, சோழர், அதிபதியாக இருந்தவர்கள் சிலர், பாண்டிய நாட்டிலிருந்த லம்பகர்ணர் என்றவர்கள், மஹாராஜா பட்டாபிஷேக காலத்தில் பிரத்யேகமான காரிய அதிகாரிகளாக இருந்தனர், இந்த அரசர் 16-17 சோழநாட்டையும், வேங்கிநாட்டையும் பரிபாலித்து வந்தார். கிறிஸ்து சகம் 1550-ஆ காலம் மறைந்து விட்டதாகவும் கூறப்படுகின்றன.

8) மூன்றுவது ராஜ ராஜு. 2-வது குலோத்துங்கர் காலகதி அடைவதற்கு முன்னர் 4 வருஷத்திலிருந்து யுவ ராஜாவாக பரிபாலனம் செய்து வந்தார். இவருக்கு சோழ நாடு, வேங்கி நாடு, கங்கவாடியில் கீழ் பாகத்தையும், கொங்கு நாட்டையும் இவர் ஆட்சியில் அடங்கியிருந்தன. இவருடைய மந்திரி பிரதானிகள் எல்லோரும் சுய அதிகாரிகளாகவே ராஜ்ய காரியங்களை நடத்திவந்தனர். இவருக்கு சோழேந்த்ர சிம்மன், கண்டன், ராஜகம்பீரன், எதிரிலி சோழ, வீரதர, வீராதயாதி பிருதுகளிருந்தன. இவருக்கு அவனிமுழுதுதயாள், புவனமுழுதுதயாள், தரணிமுழுது தயாள். உலகுடை முக்கோகில என்ற ராணியர் நால்வர் இருந்தனர். இவர்கள் பட்டமஹிஷிகள் என்பர். இவரிடத்தில் மலாடு பாலகன் என்ற நரஸிங்க வர்மனுடைய பௌத்ரன், திருக்கோவலூரில் ஒரு விஷ்ணு ஆலயத்தைக் கட்டி, அதற்கு வேண்டிய சாசனங்களைச் செய்துவைத்து உள்ளான். தெலுங்கு நாட்டில் இவருக்குப் பிரதிநிதியாக இருந்த திரிபுவனமல்ல சோழ மஹாராஜு, ஜக்கிசோட மஹாராஜு, கோனராஜேந்த்ர லோக ராஜு, கொண்டமட மட்டி புத்தராஜு, வெலநாட்டி குலோத்துங்க ராஜேந்த்ர சோழ ராஜு, ஜிய்யர் ஸ்வாமிகள் முதலானோர்களுக்கும் மேலான பதவியில் வெல நாட்டு ராஜேந்தர சோழ ராஜனே ராஜப்பிரதிநிதியாக இருந்தனர், தென்னாட்டில் ராஜகம்பீர

சேதியரராயர், ராஜராஜகாடவராயர், குலத்தூறு பல்லப ராயர், நித்ய விநோத சாம்புவராயர், ராஜநாராயண சாம்புவராயர், காதம்பராயன், வங்கார முத்தராயர் முதலானோர் பிரதிநிதிகளாக இருந்தனர். மலயகுலராஜன் என்றவர் ஒரு பிரதிநிதி. இம்மஹாராஜன் கிறிஸ்து சகம் 1173-ஆ வரையிலும் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார்.

9) இராதிராஜு, இரண்டாவது ராஜராஜுக்குப் பின்னர் சோழ நாட்டைப் பரிபாலிக்க ஆரம்பிப்பதற்கு முன் 8 வருஷ காலமாக ஆண்டு வந்தவர் யுவராஜா. இவர் மகாவீர பிரதாபசாலியானதால் இவருக்கு அப்பட்டம் கிடைத்தது. இவர் விக்ரம சோழனுடைய தௌத்ரன் ஆவார். கிறிஸ்து சகம் 1169-வருஷத்திற்குப் பின்னர் பாண்டிய தேசத்தில் ராஜகுடும்பங்களில், அநேக கலவரங்களில் பங்கு கொண்ட சிலோன் வாசிகளை அடக்குவதற்காக வேண்டி சோழ நாட்டவரும் கலந்து கொண்டு வந்தனர். மதுரையில் பராக்ரம பாண்டியனுக்கும், குலசேகர பாண்டியனுக்கும் தகாதா ஏற்பட்டு, குலசேகர பாண்டியன் மதுரையை ஆக்ரமிக்க ஏற்பாடு செய்துள்ள சமயம், மதுரை பாண்டியனுக்குச் சிலோன்காரர் சகாயமாக வந்து கொண்டு இருக்கையில், அதற்குள்ளாகவே குலசேகரன் மதுரையை ஆக்கிரமித்துக்கொண்டனன். பராக்ரமபாண்டியன் மனைவி மக்கள் எல்லோரையும் கொன்றுவிட்டனர் சிலோன் ராஜராகிய பராக்ரமபாஹுவானவர் பழிக்குப்பழி வாங்க ஏற்பாடு செய்து குலசேகரனை ஜெயிக்க முடியாமற் போகவே மறுபடியும் இலங்கையிலிருந்து சைனியத்தை வரவழைத்துக் கொடூரமாக யுத்தம் நடத்த, ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களில் உள்ளவர்களும் கலந்துகொண்டு யுத்தம் கொடூரமாக நடந்தன. இந்த யுத்தத்தில் பராக்கிரமபாகுவே ஜெயம் பெற்று, இறந்து போன பாண்டிய ராஜனுடைய குமாரனுக்கே ராஜ்யாபிஷேகம் நடத்தி பாண்டிய நாடு, சோழ நாட்டையும் வசப்படுத்திக்கொண்டமையால், இராஜாதிராஜன் சிலோன் முதலானவர்களுடன் போராடி சிலோன் முதலானவற்றை தன் வசமாக்கிக் கொண்டனர். ஆயினும் அவர்கள் கூடி சமாதான உடன்படிக்கை செய்து

கொண்டு அவரவர்களுடைய ஆட்சியை அடைந்துவந்தனர். இவர் தெலுங்கு நாட்டில் நெல்லூரை ராஜதானியாக வைத்துக்கொண்டு ஆண்டுவந்த சித்தரச சோழனை மிக்க அன்புடன் வசம் செய்து கொண்டு பிரியா நண்பர்களாக வாழ்ந்துவந்தனர். தமிழ் நாட்டின் பொத்தபி சோழ வெள்ளின்றார்ரமனு என்றவரும் நாயகராகவிருந்தார். இவர் ஆட்சியில் 7-8 வருஷ காலம் பாண்டிய நாட்டு யுத்தத்திலேயே கழிந்து போயிற்று. இந்த யுத்தம் 1169-77௵ மத்தியில் நடந்தன. வீரபாண்டியனை வென்று வசம் செய்து கொண்டு, அன்னபல்லவராயர் என்ற சேனாதிபனை மதுரை ராஜாவாக நியமித்ததாக சில திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. இந்த ராஜாதி ராஜா காலத்தில் கங்கவாடிப் பிரதேசத்தில் யாதொரு விதமான தொல்லைகளுமில்லாது க்ஷேமமாக இருந்தனவென்றும் காணப்படுகின்றன. இவரிடத்தில் பெருமாள் நம்பி என்ற மற்றொரு சேனாதிபதியுமிருந்தார். இவர் கிறிஸ்து சகம் 1179-௵ வரை 16-௵ காலம் சோழ நாட்டை ஆண்டுவந்ததற்குப்பின்னர் 3-வது குலோத்துங்கன் ராஜாவாக வந்ததாக சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர்.

(10) இந்த குலோத்துங்கன் 3-வது லக்கமுள்ளவன். இவர் காலத்தில் பாண்டிய நாட்டில் மூன்று தரம் யுத்தங்கள் நடந்ததாகவும், முதலில் பாண்டியனை ஜெயிக்க ஏற்பட்டது கிறிஸ்து சகம் 1182-ல் ஜெயம் பெற்றார். பின்னர் இரண்டாவது யுத்தத்தில் வீரபாண்டியன் கேரள ராஜனைச் சகாயமாகச் சேர்த்துக்கொண்டு கிறிஸ்து சகம் 1189-௵ காலம் பாண்டிய நாட்டில் நடந்த யுத்தத்தில், பாண்டியனும் கேரள ராஜனும் தோல்வி அடைந்து போயினர். குலோத்துங்க மஹாராஜனுடைய சகாயத்திலே வெற்றியடைந்தும், கேரள ராஜா சரணடைந்து விட்டமையால், குலோத்துங்கன் தன்னாட்சியை மதுரையிலும், கருவூரிலும் தனது 34-வருஷ ஆட்சியில் மதுரைமாநகரில் விஜயாபிஷேகம் நடத்தினார். கிறிஸ்து சகம் 1215-௵ல் 3-வது மற்றொரு யுத்தம் நடந்ததிலும் குலோத்துங்க ராஜனே ஜெயம் பெற்றார். ஆயினும் பாண்டிய அரசர்களால் அநேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டன.

கிறிஸ்து சகம் 1216ஸு மாரவர்ம, சுந்தரபாண்டியன் இருவரும் கூடி பாண்டிய நாட்டை வசப்படுத்த ஏற்பாடு செய்து சோழ நாட்டில் பிரவேசித்து, அநேக இடங்களில் தீ வைத்து அல்லோலகல்லோலம் செய்து வர, அக்காலத்தில் அவர் விருத்தாப்பிய தசையடைந்துவிட்டபடியால் எதிர்த்து ஒன்றும் செய்யமுடியாதுவிட்டனர். அதுசமயம், குலோத்துங்கன் 2-வது பல்லவ ராஜகுமாரனுகிய வீரநரஸிம்மனை சைனியத்துடன் அழைத்து வந்து, சுந்தர பாண்டியனுடன் சமாதானம் செய்துகொண்டு, சோழ நாட்டை நிலைநாட்டச் செய்தனர். அது முதல்கொண்டு பாண்டிய ராஜர்களுக்கு உட்பட்டுவிட்டனர். இம்மஹா ராஜனுடைய அரசாட்சி 22-23 வருஷம் வரை ராஜ்யத்தில் பிரபலமாக பிரகாசித்து வந்தது. அக்காலத்தில் வடாற்காட்டில் (திருவண்ணாமலை) உள்ள ஏழை எளியவர்க்கு தன தான்யாதிகளைக் கொடுத்தும், அநேக குளம், குட்டைகளை ஏற்படுத்தியும், ஆறுகளுக்கு அணைகளைக் கட்டியும், கூலிகளுக்கு நிறைய சகாயம் செய்தும், அக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தை சமாளிக்க வேண்டியே கஜானாக்களில் உள்ள தனத்தை ஏராளமாக விநியோகம் செய்தனராம். அப்பொழுது தஞ்சாவூரிலிருந்த ஒரு வெள்ளாள குடும்பத்தார் 2 கன்னிப்பெண்களை 110 காசுக்கு விற்று விட்டுபோயினராம். இம்மாதிரியான கடும் பஞ்சகாலத்தில் இவர் செய்தது பிரஜைகளுக்கு தக்க உதவியென்று கொண்டாடினர். இம்மஹாராஜா தஞ்சாவூர் ஜில்லாவில் திரிபுவனேஸ்வராலயம், சிதம்பரத்தில் தேவாலயத்திற்கு முக்த மண்டபம், சிவகாமி ஆலயத்திற்கு கோபுரம், மஹா மண்டபம், திருவாங்கூரில் வால்மீகர் கோவிலுக்கு கோபுரம், சிவாலயத்திற்கு சபா மண்டபம், கோபுரங் கட்டியும், மதுரையில் ஹாலஹலேஸ்வராலயத்திற்கும், காஞ்சீபுரம் ஏகாம்பரேஸ்வர ஆலயம், த்வாரசமுத்ர ராஜராஜேஸ்வர ஆலயம், திருவடிதுருதூரில் சிவாலயம் புதுப்பித்தும், சிதம்பர தேவாலய கோபுரத்திற்குத் தங்க முலாம் பூசியும், இவ்விதமாக அநேக தேவாலய கைங்கரியங்களைச் செய்து வந்துள்ளார். இவருக்கு திரிபுவன சக்ரவர்த்தி, சோழ, கேரள, தேவ பிருதுகளும், வீரராஜேந்தரன் என்ற பட்டமும்

வழங்கப்பட்டன. இவருக்கு ஈஸ்வர சிவன் என்ற சைவ மத குருவும் இருந்தார்.

1) கடப்பை ஜில்லா நல்லூரில் முதலிலும், 2-வது நெல்லூரில் ராஜதானியை நியமித்துக்கொண்டு பரிபாலனம் செய்த நல்ல சித்தி சோழ ராஜா இவருக்குப் பிரதிநிதியாக இருந்தார். இவர் சுதந்திரம் பெறப் பிரயத்தனம் செய்த சமயம், காஞ்சீபுரப் பிரதேசப் பிரதிநிதிகளும், சுதந்திரம் பெற ஏற்பாடு செய்து வந்ததைக் கண்டு, அவர்கள் மீது படையெடுத்து அவர்களை வசப்படுத்தினர். இந்த மாதிரியான சுகதுக்கங்களைச் சமமாகப் பாவித்துக்கொண்டு 40 வருஷ காலம் இராஜ்ய பரிபாலனம் நீதி முறைப்படி நடத்திவந்தார். இவர் கிறிஸ்து சகாப்தம் 1217-18ஷ் காலகதி அடைந்து விட்டதாகக் காணப்படுகின்றது. இவர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவரல்லரென்றும், சோழ வம்ச சங்கம ராஜனுடைய குமாரன் என்றும், இவர் ஆட்சியில் கம்ம நாடு, வெல நாடு முதலான ராஜ்யங்களை ஆண்டுவந்த சோழ ராஜாக்களும், அவர் பிரதிநிதிகளாகிய கோட்டவார் என்றவர்களும், சாகிவார், கோந ராஜாக்கள், காகதீய ராஜாக்களுக்குப் பிரதிநிதிகளாகப் போனதாகவும் காணப்படுகின்றன.

ராஜராஜ (3) மூன்றாவது குலோத்துங்கனுக்குப் பின்னர் இந்த 3-வது ராஜராஜ ராஜாதிபதி ஆயினர். இவருடைய ஆட்சி கிறிஸ்து சகம் 1216 வருஷத்திலிருந்து பின்னர் 1-2 வருஷங்கள் வரை குலோத்துங்கன் ஜீவித்து இருந்தான். அப்பொழுது இவர் யுவராஜாவாக இருந்தார். அக்காலத்தில் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்து துன்புறுத்த, அதனல் அநேக கஷ்டங்கள் ஏற்பட்டனவென்றும், இவருடைய பட்டாபி-ஷேகத்திற்கும், ராஜ்யத்திற்கும் மத்தியில் அதைச்சமாளிக்க வேண்டிய தொல்லைகளும் ஏற்பட்டனவென்று கூறுகின்றனர் இவர் ஆட்சியில் செய்யவேண்டிய காரியங்களை நடத்திவர முடியாதிருந்தமையால், சோழ ராஜ்யத்தின் பிரகாசம் மங்கவும், ஹோயிசல ராஜாக்கள் பலவந்தர்களாயிருந்த

படியால் இது பிரகாசிக்கவும், இந்த ராஜாங்கத்தை கபளீகரம் செய்யச்சீணதசையடைய நேரிட்டபடியால், அக்காலத்தில் ஆந்தரதேசத்தில் கம்மநாடு, வெலநாடு முதலிய பிராந்தியங்கள் காகதிய கணபதிதேவ சக்கரவர்த்தியின் வசம் சேர்ந்தன. அங்குள்ள தெலுங்கு சோழராகிய சக்கரவர்த்திகள் எல்லோரும் கணபதி தேவனிடத்தில் பிரதிநிதிகளாக அமைய நேர்ந்தது என்றும் கூறப்படுகின்றன. இவர் முதலில் மாரவர்ம, சுந்தரவர்ம என்ற பாண்டியர்களுக்கு அடங்கியிருந்து, பின்னர் அவர்களுடன் யுத்தஞ் செய்தும் தோல்வியடைய, இவருடைய பட்டமஹிஷியாகிய பரிவார ஸ்திரீகளை எல்லாம் காவலில் வைத்து, அங்கு வேண்டிய காரியங்களுக்குத் தண்ணீர் ஊழியம் செய்யும்படி செய்தனன் பாண்டியன். சோழமன்னர் தோற்றுப்போகவே அப்போது ஒரு கொப்பெறஜிங்க என்ற மிருகத்தைக் காட்டமராஜா என்றவர் பிடித்து அதைக் கொண்டுவந்து அதன் உதவியால் சோழ நாட்டிலுள்ள விஷ்ணு ஆலயங்களை நாசம் செய்தனன். இந்த சமாச்சாரம் தெரிந்த ஹோயிசல நரஸிம்ஹராஜு உடனே தன் படைகளைத் திரட்டிக்கொண்டு பாண்டிய நாட்டு அரசருடன் யுத்தம் செய்வதற்கு வேண்டிய தளவாடங்களைத் தயார் செய்து கொண்டும், ஸ்ரீரங்கம் முதலான பிராந்தியங்களிலுள்ள தன்னுடைய சேனாதிபதிகளாகிய அப்பன, சமுத்ரகோப அய்ய என்றவர்களைப் படையுடன் அனுப்பி, சோழ மன்னவனைக் காத்துவர ஏற்பாடு செய்தனன். வந்த வழியிலுள்ள நகர ராஜ்யத்தை வசப்படுத்தியும், செண்டமங்களம், கிழக்கில் தென்றற் காட்டில் வாரணசி நதிக்குத் தெற்கில் உள்ள அநேக ஊர்களில் பயிர்களை எல்லாம் அழித்தும், அங்குள்ள ஸ்திரீகளை அநேகமாக இம்சிக்க, அப்பொழுது கொப்பரிஜிங்கு சந்தித்து உடன்பட, ஹோயிஸல ராஜா பாண்டியனை ஜெயித்து கப்பம் பெற்றுக்கொண்டு கொப்பறஜிங்கையும் சோழராஜன் வசம் இருக்கும்படி செய்தும் ராஜ்யத்தை நிலைநிறுத்தினர்.

இம்மஹாராஜா 30 வருஷ காலம் சோழ நாட்டை நல்ல முறையில் ஆண்டு வந்தான். இவர் கிறிஸ்து சகம்

1246-ஸ் மூன்றுவது சோழ ராஜா யுவராஜாவாக இருந்து வந்தார். இவருடைய காலத்தில் கடப்பை, நெல்லூர் பிராந்தியங்களில் இவருடைய ஆட்சி நடந்து வந்ததென்று காணப்படுகின்றன. தஞ்சாவூர் பிரதேசங்களில் ராஜத் துரோகிகள் அநேக சூழ்ச்சிகளில் பிரவேசித்ததை உணர்ந்து, அவர்களைப் பிடித்து அவர்களிடமிருந்த ஆஸ்த்திகளை எல்லாம் கைப்பற்றியும், சில பொருள்களை ஏலத்தில் விட்டு அந்த ஆஸ்த்திகளை கஜாஞுவில் சேர்த்தனர். மற்றோர் இடத்தில் இரண்டு சிவன் கோவில் பூஜாரிகள் கோவிலில் இருந்த உண்டியல் பணம், நகைகள் முதலானவற்றை அபகரித்துப் போனவரில் ஒருவன் தான் வைத்திருந்த விடப் பெண்ணுக்குக் கொடுத்தனன். இதை விசாரித்துக் கண்டறிந்த அதிகாரிகள் எல்லோரையும், அந்தக் கள்ள அர்ச்சகர்கட்குக் கட்டுக்கடங்காது கண்டபடி பகிஷ்காரம் செய்தனர். இதை சமஸ்தானத்தில் தெரிவிக்க அவர்களுக்கு தக்க தண்டனை விதித்துச் சிறைப்படுத்தினர்.

சோழ ராஜ்யத்திலுங்கூட ஹோயிசலராஜர்களுடைய சாசனங்கள் இருந்தன. இதனுல் இந்தப் பிரதேசத்திலும் அவர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்ததாகக் காணலாம். தெலுங்கு சோழ ராஜாக்களில் மன்மசித்தி, யர்ரசித்தி, திருகால தேவராஜு முதலானோர் இவர் பிரதிநிதிகள் ஆவார்.

11) மூன்றுவது ராஜேந்தரன், இவர் மூன்றுவது ராஜராஜு இருக்கையில் யுவராஜாவாக இருந்து, பின்னர் பட்டத்திற்கு வந்து மிக்க பிரபல கீர்த்திமானுக விளங்கினுன். இவர் யுவராஜாவாக இருந்த காலம். பாண்டிய ராஜன் சோழ நாட்டின் மீது படையெடுத்து அநேக இடங்களில் தீ மூட்டி அநேக சேதங்களை உண்டாக்கி வந்தனர். இதை அறிந்த ராஜேந்தரன் சோழ நாட்டைக் காப்பதற்காக வேண்டிய முயற்சிகள் செய்தும், வசப்படாததால் பாண்டிய னுக்கி பிரதிநிதியாகி தன் நாட்டை ஆண்டு வந்தான். பின்னர் தன்னுடைய சேனுசைன்யங்களை திடப்படுத்திக் கொண்டு பழிக்குப்பழி வாங்கப் பாண்டிய நாட்டின் மீது பிரவேசித்த சமயம், ஹோயிசல சோமேஸ்வரன் பாண்டிய

னுக்கு உதவியாகப்பாண்டியன் ராஜ்யத்தை நிலைநாட்டினன். கிறிஸ்து சகம் 1258-ஆ ஜடவர்ம சுந்தர பாண்டியன் இந்நாட்டின் மீது படையெடுத்துப் பாண்டியனை ஜெயித்து கப்பமும் பெற்றுக்கொண்டதாகவும் காணப்படுகின்றன. இவரிடத்தில் சோழ ராஜர்களைச் சேர்ந்த திக்கராஜு, நெல்லூரு, செங்கல்பட்டு, கடப்பை ஜில்லாக்களில் ராஜப் பிரதிநிதிகளாகியிருந்து, காஞ்சிபுரப் பிராந்தியங்களை வசப் படுத்திக்கொண்டு, கிறிஸ்து சகம் 1249-ஆல் காஞ்சிபுரப் பிராந்தியங்களில் கணபதி தேவ சக்கரவர்த்தி யுத்த சன்னத்தனாகி ஜெயித்து தன் வசப்படுத்திக்கொண்டதாகவும் ஜடவர்ம பாண்டியன் அதுசமயம் தானும் படையெடுத்து காஞ்சிபுர திக்கராஜனை சம்ஹாரம் செய்தும், கணபதி தேவனையும் துரத்தி விட்டு, அந்த ராஜ்யத்தை வசப்படுத்திக் கொண்டு பரிபாலித்து வந்தார். பின்னர் சில காலம் வரை காஞ்சிபுரப் பிரதேசம் பாண்டியன் வசத்திலேயே இருந்து வந்தன. ராஜேந்தரன் இந்தப் பிராந்தியங்களை ஜெயித்து வசப்படுத்த முடியாமல் போயிற்று.

இவரிடத்தில் சோழ கங்கு, கலப்பாலன் என்ற பிரதிநிதிகள் சோழ நாட்டிலிருந்தனர். இவருக்கு சிதம்பரத்தி லுள்ள நடராஜர் இஷ்ட தெய்வமாக இருந்தார். இவருக்கு சோழமா தேவி என்ற பாரியை இருந்தாள். இவர் 33 வருஷங்கள் சோழ நாட்டை ஆண்டு வந்தார். இவர் ஆட்சி கிறிஸ்து சகம் 1279-ஆ வரை இருந்ததாக சாசனம். இவர் 34-வது வருஷம் பாலனத்திலிருந்து நெல்லூர், வடாற்காடு முதலான இடங்களிலுள்ள சாசனங்கள் மற்றும் பல இடங் களிலுள்ள சாசனங்களும் கிடைத்துள்ளன. இவருக்குப் பின்னர் சோழநாட்டை சோழ வம்சாவழியினர் ஆண்டதாக ஒன்றுங் கிடைக்கவில்லை. இது பாண்டியர் வசமாகி விட்டதாகவே காணப்படுகின்றது. உறையூர், தஞ்சாவூர் பிரதேசங்கள் சுந்தர பாண்டியன் வசமாகி விட்டதாக சில ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவருடைய ஆட்சி ஆரம்பத்தில் நடந்ததாக உள்ளது. 9-வது சகாப்தம் முதல் வரிசையாக கரிகால வம்சாவழியினரே ஆண்டு வந்த சோழ ராஜ்யம், இவ்விதமாக 13-வது சகாப்தம் வரையிலும்

பேரிலில்லாமற் போய்விட்டது. சாளுக்கிய ராஜ்யமும் மத்தியில் இத்துடன் கலந்தும், கடைசிவரை காகதீய ராஜாக்களின் கைவசம் ஆகிவிட்டன. சாளுக்கிய, சோழ ராஜாக்களுடைய சரித்திரம் இவ்விதமாக முடிவடைந்த போதிலும், இவர்களால் கட்டப்பட்ட தேவாலயங்கள், கட்டிடங்கள் இன்றைக்கும் பிரபலமாகப் பிரகாசித்துக் கொண்டுள்ளன. சோழ நாட்டில் அவர்களுடைய கீர்த்தியை விளக்கிக்கொண்டுள்ளனவென்பது பிரசித்தம்.

சோழ நாட்டை அக்காலத்தில் (6) ஆறு மண்டலங்களாகப் பிரித்து வைத்திருந்தனர். சில கிராமங்களை ஒன்று சேர்த்து குர்ரம் என்றும், சில குர்ரங்களைச் சேர்த்து நாடு அல்லது கொட்டமென்றும், சில நாடுகளை ஒன்று சேர்த்து மண்டலம் என்றும் பெயரிட்டு விளக்கி வந்தனர். பிரதி கிராமத்திற்கு ஒரு மஹாசபையை ஏற்படுத்தி, கிராம விவகாரங்களை எல்லாம் சபையினரே பரிசீலித்து வந்தனர். இந்த சபையினருக்கு 40 வயது என்பதே பிரமாணம். சபைக்கு இந்த வயதுள்ளவரைத்தான் தேர்ந்தெடுப்பது வழக்கம். கிழக்கு சாளுக்கிய ராஜ வம்சத்திலிருந்து சோழ வம்சத்திற்கு வந்து கலந்து கொண்டவர்களில் முதல் குலோத்துங்க வம்சாவழியினர் தென்னாட்டிலேயே பிரபலமாக இருந்து பிள்ளையார், ஆழ்வார், உடையார் முதலானவர்களுக்கு மூல புருஷர் என்பது பிரசித்தம். திருஷ்டாந்தங்களும் உண்டு. இவ்விஷயத்தை இனி விவரிக்கப்படும்.

சாளுக்கியர் வீட்டுப் பெயர்கள்.

12) ஆந்தர நாட்டில் ஸ்த்திரவாசிகளாகிய சாளுக்கிய ராஜாக்களில் இருந்து வீட்டுப் பெயர்கள் ஏற்பட்டிருப்பதை குறிக்கின்றன.

1) தோலேட்டிவார்
2) நிடதவோலுவார்

இதன் விஷயத்தை சிவயோக சாரம் என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றன.

3) ஆரவீட்டிவார்

4) கோநேட்டிவார், நந்தேலவார்

இதன் விஷயம் ஆரவீட்டி வம்ச சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

5) அடபாவார்

6) எலமஞ்சிவார்

7) கொல்லவாடவார்

8) வெல்மபாட்டிவார்

9) சித்திராஜுவார்

10) மங்கலம்பாட்டிவார்

11) முதிகொண்டவார்

12) பீமராஜுவார்

13) கோகாவார்

5 முதல் 13 வரை உள்ளவற்றிற்குச் சாசனங்கள்: (SII IV No. 1325. VI No. 612, 665, 916, 919, 921, N. I. N. 112 C. P. 6-7)

14) சம்மெட்டவார்

15) மச்சவார்

16) கொண்டவார்

17) சோழவார்

18) நந்திவாடவார்

19) திருமலராஜுவார்

20) உத்தகிரிவார்

21) ஜூட்டுரிவார்

22) ஸாழுவவார்

23) மாதிராஜுவார்

24) பாசமுவார்

25) பாணெம்வார்

26) கோவர்தனவார்

27) அப்பசிவார்

28) செண்டுவவார்

29) போலேபல்லிவார்

30) கொம்மலதேவுவார்

14 முதல் 30 வரையிலுள்ள பெயர்கள் வெலுகோட்டிவார் வம்சாவழியில் எழுதப்பட்டுள்ளது.

கிறிஸ்து சகம் 1361-லுத்தில் வெலம வீரர்களாகிய அநபோதா நாயுடு, மாத நாயுடு, சம்பின சாளுக்கிய ராஜாக்களில் சிலர், மச்சயெளபள ராஜு, கொண்டமராஜு கொம்மலதேவு பிந்ந ராஜு, சோழ பர்வத ராஜு, நந்தி-வாட நரச ராஜு, திருமல ராஜு, கொண்ட்ராஜு, கட்ட வெங்கராஜு, ஜூட்டூரி சூர்யுண்டு அப்பசி சென்ராஜு, சாள்வ, ராகவராஜு, சம்பெட்டகொண்ட ராஜு, மாதி ராஜு, ஹரி ராஜு, பாசமு, சென்ருஜு முதலானவர்கள். தவிர இன்னும் சில மாறுதல்களுடன் முன்பின் ஏற்பட்டவைகள். கால வித்தியாசத்தால் அவைகளைக் கண்டுகொள்ள முடியவில்லை. இவைகளில் கம்மவாரிலும், க்ஷத்திரியர் என்றும் சிலர் குறித்துள்ளனர். காம்ப்பு இல்லையேல் பலிஜவாரில் காணலாம் என்பது சரித்திரக் கூற்று.

(13) சாளுக்கியர்களிலிருந்து ஏற்பட்ட கம்மவார் வம்சாவழி

1) கம்மவாரில் 1, அடபாவார் 2, நிடதவோலுவார் 3, யலமஞ்சிவார் 4, முரகொண்டவார் 5, கோகாவார் 6, சம்மெட்வார் 7, மச்சவார் 8, கொண்டவார் 9, கோனேருவார் 10, எலம்பாட்டிவார் 11. இவர்களிற் சிலர் க்ஷத்திரிய வம்சாவழியினர். ஆதியில் அவர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டதாக பத்மநாயக சரித்திரத்தில் காணப்படுவதாக கிறிஸ்து சகம் 1098 வருஷத்திற்குப் பின்னர், இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களின் பழக்க வழக்கங்களின்படி குலப்பெயர்களை மாற்றிக்கொண்டதாகவும், கம்ம நாட்டில் உள்ளவர்களில் இந்த வம்சாவழியினரும் கம்மவார் ஆயினர் என்றும் காணப்படுகின்றன. இன்னும் வெல மாட்டிவார், மங்க பாட்டிவார், மங்கல பாட்டிவார் ஆகியவர்களும் இந்த வம்சத்தினரும் வீட்டுப்பெயர்களை மாற்றிக்கொண்டதாகவும் காணப்படுகின்றன. இம்மாதிரியாக எத்தனை சாளுக்கிய வம்சாவழியினர் கம்மவாராக மாறிவிட்டனரோ காண முடியவில்லையென்று சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இதிலும் எலமஞ்சி, மச்ச, கொண்ட, அடபா. சம்மெட்டவார்களுடைய சரித்திர வரலாறுகள் முதல் பாகத்தில் எழுதப்பட்டுள்ளன. அங்கு அதைக் கண்டுகொள்ளவும்.

கம்மவார் பிரத்யேகமான வகையினரென்றும், கம்ம நாட்டுவார், கம்மவார் ஆயினரென்றும், இவர்களுக்கும், ராஜகுடும்பத்தினருக்கும் சம்மந்தம் மாத்திரம் உள்ளது என்றும், ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லவென்றும், இந்த சரித்திர முதல் பாகத்தில் முகவுரையில் வெளியிடப் பட்டுள்ளனவாயினும், பிரத்யக்ஷமாக கம்மவார் ராஜவம்ச பரம்பரையினர் என்று பல ஆதாரங்கள் இந்த சரித்திரத்தில் காட்டி இருப்பதால் கம்மவார் ராஜவம்சத்தினர் என்பது பிரசித்தம், இன்னும் கம்ம நாட்டுப் பிரஜைகள் எல்லோரும் கம்மவார் என்பதற்கு ஆதாரம் காணப்படவில்லை. அதனுல் இந்த அபிப்பிராயம் ஏற்பட்டதென்று தோன்றுகிறது. சாளுக்கிய வம்சாவழியில் இம்மாதிரி அநேக பிரிவுகள் உண்டாயின. தெலுங்கு சோழ ராஜாக்களிலிருந்து ஏற்பட்டதும் இதே மாதிரி அபிப்பிராயம் ஏற்படுகின்றன. காலகற்பத்தால் இதைக்காண முடியவில்லை.

ஆரவீட்டி வம்சாவழியினருடன் (சாளுக்கிய ராஜாக்கள்) சம்மந்தம் செய்துகொண்ட விஜயநகர சாம்ராஜாதிபதியாகிய கிருஷ்ணதேவராயர் அவர்களும், தஞ்சாவூர் நாயக ராஜாக்களும், (பலிஜவார், செங்வப்பளிபுடு முதலானவர்கள்) பந்துக்கள் ஆனதாகவும், ஆரவீட்டி புக்கராயர் வம்சத்தினர் சாளுக்கிய வம்சத்தினரானதைப்போல, ஆரவீட்டி வம்ச சரித்திரத்தாலும், நெல்லூர் ஜில்லா சாசனத்தில் மங்கலம்பாட்டி வெங்கட்ட ராஜு, சாலிவாகன சகம் 1524 வருஷத்தில் எழுதிவைத்த சாசனம் (N. I. C. P. No. 6-ல்) காணப்படுகின்றன. சாளுக்கிய வம்சத்தினர் சிலர் அந்த வம்சத்தில் கலந்தனரென்று காணப்படுகின்றன. தஞ்சாவூர் ராஜாக்கள் சதுர்த்த வம்சத்தினரென்று ரகுநாதாப்யுதம் என்ற கிரந்தத்தில் உள்ள விஷயத்தை முதல் பாகத்தில் தெரிவித்துள்ளன. சாளுக்கிய அரசர்கள் இம்மாதிரியாக அநேக பிரிவுகளாக மாறியதனுல் இவர்கள் அதிகமாக கம்மவாரில் இருப்பதாகக் காணப்படவில்லை. கம்மவாருக்குள் சிலருக்கு மூல புருஷராகிய தெலுங்கு சோழ ராஜாக்களுடன் பாந்தவ்யம் ஏற்பட்டிருப்பதால் அதில் சிலர் ஐக்கியமாகி விட்டனர். தவிர கிழக்கு சாளுக்கிய

சக்கரவர்த்திகளுக்கு லபித்த சோழ ராஜ்ய சரித்திரத்தையும் நன்கு ஆராய்ந்து விஷயத்தை அறிந்துகொள்வோம் என்று கூறுகின்றனர் சரித்திர ஆசிரியர்கள்.

காஞ்சீபுர சோழ ராஜாக்கள்

14) கரிகால சோழ ராஜாக்களில் ராஜராஜ தேவர் சரித்திரம் வரை முதல் பாகத்தில் சொல்லியிருக்கின்றன. அவருக்கு ராஜேந்தர தேவுண்டு என்ற குமாரன் பிறந்து அவருக்குப் பின்னர் சோழ ராஜ்ய பாலகராக விளங்கினர் என்று கூறப்பட்டுள்ளன.

ராஜேந்தர சோழ தேவுண்டு

15) இந்த மகாராஜனுக்கு கங்கைகொண்ட சோழன் என்றும், விக்ரம சோழன் என்றும், அநபாய என்றும் பெயர்கள் உண்டு. இவர் கிறிஸ்து சகம் 1012 வருஷத்திலிருந்து யுவராஜாவாக ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். இவருடைய ராஜ்யம் சென்னை ராஜதானி முதல் மைசூர் ராஜ்யத்தில் கொஞ்ச பாகம் வரை விஸ்தாரமாயிருந்தன. கிழக்கு சாளுக்கிய சக்கரவர்த்தியாகிய ஜயஸிம்மனுக்கு *(1012-1042)* இவருக்கு கொல்லி பாக, மான்ய கேத என்ற பிரதேசங்களில் யுத்தம் நடந்ததில் இவரே ஜெயம் பெற்றார். இவர் ரட்டபாடு, ராயசூர், பவுஞசி முதலான பிராந்தியங்களையும் ஜெயித்தும் மற்றும் சிலோன் முதலான இடங்களுக்கும் தண்டயாத்திரை செய்து, சிலோன், கேரளம், பாண்டிய நாடுகள் முதலானவற்றையும் தன் வசப்படுத்திக் கொண்டும், மாளவபஸ்தர் என்ற சக்கரகோட்ட மண்டலம், டூஸினி, வங்கம் முதலான தேசங்களையும் ஜெயித்தும், பீஹார், கலிங்கம் முதலிய பிராந்தியங்கள் எல்லாம் தன் ஆட்சியின் கீழ்படுத்திக்கொண்டும், பின்னர் ஸுமித்ரா என்ற ஸுவர்ணத்வீபம் என்ற நாட்டையும் படகுகள் மூலமாகச் சென்று, அந்நாட்டு அரசராகிய ஸங்க்ராம

விஜயோத்துங்கனையும் ஜெயித்து, அநேக தனதான்ய முதலானவற்றைக் கப்பமாகப் பெற்று வந்தனர். இவரிடத்தில் வீராக்ரேசர் என்ற பட்டம் பெற்ற சேனாதிபதிகள் இருந்தனர். வட இந்தியாவிலும், சீனாவிலும் வியாபாரம் நடத்திவந்தார். மிக்க பலமுள்ள சேனாதிபர்கள் பாதுகாவல் விசேஷமாக இருந்தது. இவருடைய ராஜதானி முதிகொண்ட சோழபுரமென்ற கங்கைகொண்ட சோழபுரம். இது இன்றைய உதயார்பாளெம் தாலூக்காவில் உள்ளது. கோட்டைகள் எல்லாம் பாழடைந்து கிடக்கின்றன, இந்த கங்கைகொண்ட சோழமஹாராஜனுக்கு வாசவ or திரிபுவன வாசவன் மஹாதேவி, முக்கோகில பாஞ்சவன் மஹாதேவி, வீர மஹாதேவி என்ற மனைவியர் இருந்தனர். இவருக்கு ராஜாதிராஜு ராஜேந்த்ரன், வீர ராஜேந்த்ரன் என்ற 3 குமாரர்களும், அம்மங்கிதேவி என்ற குமாரியும் இருந்தனர். இந்தப் பெண்மணியை வேங்கி தேச சக்கரவர்த்தியாகிய ராஜராஜு நரேந்த்ரனுக்கு விவாகம் செய்து கொடுக்கப் பட்டன. இவர் தன் சோழ ராஜ்யத்தை 33 வருஷ காலம் ஆண்டு வந்தார். இவர் தன் குமாரனை மதுரையில் பிரதிநிதியாகநிறுத்தினார். அங்கொரு ராஜபவனத்தை நிர்மாணித்தும் ராஜமன்னார் கோவிலுக்கு 34 ஹூல அநேக பூமிகளை தான சாசனம் செய்து கொடுத்தார். சேர தேசத்திற்குப் பிரதிநிதியாக ஜடவர்ம சுந்தரசோழ பாண்டியனை நிறுவினார். கிறிஸ்து சகம் 1021-22 ஹூல் மறுபடியும் ஜெயஸிம்மனுடன் யுத்தம் நடத்தப்பட்டன. அதிலும் ஜெயம் பெற்றார். இம்மஹாராஜா மிக்க கீர்த்தி ப்ரதாபனாக கிறிஸ்து சகம் 1044 வருஷம் வரை ஆண்டான். இவர் குமாரராகிய ராஜாதிராஜு யுவராஜாவாக கிறிஸ்து சகம் 1018 வருஷத்திலிருந்து ராஜ்ய பரிபானலம் நடத்திவந்து பின்னர் ஸிம்மாசனாதிபதி யாயினார். இவருடைய தந்தையாகிய ராஜராஜு தேவுண்டு காலத்தில் சிலோன் நாட்டில் பொலன்னுருவ என்ற பட்டணத்தில் கட்டிய சிவாலயம் இன்றைக்கும் இவர் ராஜ பிரபலத்தை விளம்பரப்படுத்துகின்றன. இவர் காலத்தில் மஹாதீர்த்தம் என்ற பிரதேசத்தில் ராஜராஜேஸ்வர ஆலயத்தை இவரிடத்தில் உத்தியோகத்திலிருந்த மஹான் ஒருவர் கட்டி வைத்தார். கிறிஸ்து சகம் 1029 வருஷ

காலத்தில் கிழக்கு சாளுக்கிய வம்ச விஜயாதித்ய விக்கியன்ன என்றவர், கோட்டூறு, திருவாங்கூரைச் சேர்ந்தது. அங்கு ராஜப்பிரதிநிதியில்லாமல் சேனுதிபதியே பரிபாலித்து வந்தார்.

16) ராஜாதிராஜ தேவுண்டு, இவர் பட்டத்திற்கு வருவதற்கு முன்பே இவர் தந்தை காலத்தில் நடந்த யுத்தத்தில் பிரவேசித்து வீராக்ரஹேஸன் என்று பட்டம் பெற்றும், மேற்கு சாளுக்கிய சக்கரவர்த்தியாகிய 2-வது ஆஹவமல்லவனுடன் கிறிஸ்து சகம் 964-990-ல் இவர் யுத்தம் நடத்தி வந்து, கொல்லிபாக யுத்தத்தில் தன்னுடைய பராக்கிரமத்தால் ஆஹவமல்லவனைக் கொன்று, பாண்டிய நாடு சிலோன் மீது படையெடுத்து ஜெயம் பெற்று, ஈழ-மண்டலம் என்ற சிலோன் பாலகனுகிய விக்ரமபாஹு என்ற மன்னனை வசப்படுத்திக்கொண்டு ஜெயம் பெற்ருர். அப்போது இவருடைய சேனையின் தொகை 95 ஆயிரம் என்பன. இவருக்கு ராஜகேசரி, பரகேசரி என்ற பிருதுகள் பெற்றுள்ளார். கிறிஸ்து சகம் 1044-46 வருஷ மத்தியில் மேற்கு சாளுக்கிய சோமேஸ்வரனுடன் கோரமான யுத்தம் நடத்தியும், கம்பிலியிலிருந்த சாளுக்கிய ராஜபவனத்தை நாசஞ்செய்தும், பூண்டூர் பக்கம் நடந்த யுத்தத்தில் சோமேஸ்வரனுடைய பிரதிநிதிகளாகிய தெலுங்கு நாயகர் களைச் சிறைப்பிடித்துக்கொண்டு பூண்டூர் நகரத்தை தரை மட்டம் செய்து அவ்விடத்தில் குசும்பிச் செடிகளைப் பயிர் செய்து வைத்தார். இவர் தன் தந்தையின் காலத்திலேயே ஒரு அஸ்வமேத யாகஞ்செய்து க்யாதி பெற்றுள்ளார். காஞ்சீபுரச் சோழர்களில் மிக்க கீர்த்தி பெற்றவர் இவரே ஆவார். சாளுக்கிய சோமேஸ்வரனுடைய கிறிஸ்து சகம் 1047 வருஷ சாசனம் பல்லாரி ஜில்லா, ஹடகள்ளி தாலூக்காவில் உள்ளன. இவர் தன்னுடைய சிறிய தகப்பனுரையும், தன்னுடைய சகோதரர்களையும் ராஜாங்கத்தில் முக்கியமான அதிகாரிகளாக நியமித்து ராஜ்யத்தை ஆண்டுவந்தார். இவருடைய ஜன்ம நக்ஷத்ரம் பூர்வபல்குனி என்ற பூரம் நக்ஷத்ரம். இந்த மஹாராஜருக்கு ஆஹவமல்ல குலாந்தக. கல்யாணபுரங் கொண்ட சோழ,

உலகளந்த சோழ, ஜெயங்கொண்ட சோழ, ராஜேந்தர தேவ, விஜயராஜேந்தர என்ற பிருதுகள் உண்டு. இவரிடத்தில் தண்டநாயக சோழ, குமார பராந்தகன்மா ராயன்வரவு, ராஜாதிராஜ, நலகங்கரய்யா, சோழவல்லப தேவபிள்ளை, தண்டநாயக, அப்பிமைய்யா, (மஹாராஜபதி பாலகன்) விஷ்ணுவர்த்தன தேவபிள்ளை, ராஜேந்தர சோழ மாவலிவானராயர் முதலானோர் ராஜப்பிரதிநிதியாக இருந்தனர். சாசனம் இம்மஹாராஜா கிறிஸ்து சகம் 1054 வருஷம் வரை 36 வருஷ காலம் சோழ ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். இவர் காலத்திய நாணயங்கள் சிலோன் முதலான இடங்களில் கிடைத்துள்ளன. இவருக்குப் பின்னர் இவருடைய சகோதரராகிய 2-வது ராஜேந்தர சோழன் பட்டத்திற்கு வந்து பரிபாலனம் செய்து வந்தான்.

17) இரண்டாவது ராஜேந்தர சோழன், இவர் தனது சகோதரன் இறந்து போனதால், இவரே பட்டாபிஷிக்த ராஜர். கிறிஸ்து சகம் 1052 வருஷத்திலிருந்து இராஜ்ய பரிபாலனஞ் செய்ததாக சாசனம் காண்கின்றன. இவருக்கு பரமகேஸரி என்ற பிருதும் உண்டு. இவர் சிலோன் ராஜா மீது படையெடுத்து ஜெயித்து, மானுபரணர் என்ற ராஜனுடைய குமாரர் இருவரைக் கைது செய்து கொண்டு வந்தும், அந்நாட்டை தன் ஆட்சியில் வைத்துக்கொண்டு, கொப்பத்தில் நடந்த யுத்தத்தில் இவர், புலகேசி, பயஸிம்ஹ, தசவர்மா, நன்னிலோலம்ப முதலான மேற்கு சாளுக்கிய சேனாதிபதிகளைச் சம்ஹாரஞ் செய்தும், ஆஹவமல்லராஜனை நாடு கடத்தியதாகவும், இவருக்கு கிலாநதிகல், லோகமஹா தேவி என்ற பட்டபு ராணியர் இருந்தனர். இவருக்கு ராஜமகேந்தர ராஜகேசரி என்ற குமாரன் இருந்து மநுதர்மத்தை நிலைநாட்டிய தர்மாத்மாவென்று பிரசித்தி பெற்று, ஆஹவமல்லனுடன் முதக்காறில் நடந்த யுத்தத்தில் தன்னுடைய வீரபராக்கிரமத்தைக் காட்டி யுத்த களத்தில் அகாலமிருத்யுவடைந்தனர் இவருடைய சரித்திரம் கலிங்கத்து (பரணி) பரானி விக்ரமசோழனுலாயனு கிரந்தத்தில் பிரமாதமாக வர்ணித்துள்ளார். இந்த ராஜேந்தர சோழனுக்கு 4 பேர் தம்பிமார், ஒரு சிறிய

தகபபனுர். 6 பேர் புத்திரர்கள். இரண்டு பேரன்மார்கள் இருந்ததாக மணிமங்களம் சாசனத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இவருக்கு மதுராந்தகி என்ற பெண் குமார்த்தியும் உண்டு. அப்பெண்மணியை சாளுக்கிய குலோத்துங்க மஹாராஜனுக்குப் பாணிக்ரஹணம் செய்து கொடுத்தனர். இவரிடத்தில் மிலாட என்ற 2 ஆயிரம் கிராமங்களுக்கு அதிபதியாக நரஸிம்ஹவர்மனேயும், அரியகட்க கொண்ட சோழனேயும், ஜயமூர் நாடாழ்வான் என்ற சேனுதிபதிகளாக வைத்து இருந்தனர். கிறிஸ்து சகம் 1064 வருஷம் வரை சோழ நாட்டையும் கங்காபுரி ராஜதானியாக வைத்துக் கொண்டு ஆண்டதாகவும், பின்னர் இவர் தம்பி வீரராஜேந்தரன் சக்கரவர்த்தியாக வந்தனர்.

வீர ராஜேந்திரன் அல்லது வீர சோழன்

18) இவருக்கு கரிகாலன் என்ற பட்டப்பெயரும் உண்டு. இவருடைய அரசாட்சி கிறிஸ்து சகம் 1062லிருந்து காணப்படுகின்றன, தன்னுடைய சகோதரனுக்குப் பின்னர் இவர் கிறிஸ்து சகம் 1064-வருஷத்திலேயே ராஜாவாயினர். இவர் கிறிஸ்து சகம் 1070-வருஷம் வரை ராஜ்ய பரிபாலனஞ் செய்ததாகவும், இவர் தன் யுவராஜா காலத்தில் நடந்த யுத்தத்தில் மறைந்து விட்டதாகவும் காணப்படுகின்றது. மேற்கு சாளுக்கிய ராஜாக்களாகிய சோழ ராஜாக்களுக்கும் ஏற்பட்டிருந்த விரோதங்கள் எல்லாம் இவருடைய காலத்திலேயே சமாதானமாகிவிட்டது. ஆஹவமல்லனுக்கு பின்னர், இவர் குமாரர்களாகிய 2-வது சோமேஸ்வரனுக்கும் விக்ரமாதித்யனுக்கும் ராஜாங்க விஷயத்தில் தகாதா ஏற்பட்ட சமயம் விக்ரமாதித்யனுடைய தம்பி ஜெயஸிம்ஹனேயும், காதம்ப ராஜனுகிய ஜெயகேசியையும் சகாயமாகச் சேர்த்துக்கொண்டு, இவ்வீர ராஜேந்தரனிடம் தூதனுப்பி, இவருடைய குமாரத்தியை விவாஹம் செய்து கொண்டும் நண்பர்களாயினர். இதனுல் 2-வது சோமேஸ்வரனிடமிருந்து கொஞ்சம் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டனர் என்று வில்ஹண கவி ரசித விக்ரமாங்க தேவ சரித்திரத்தில்

காணப்படுகின்றன. இவர் யுவராஜாவாக இருந்த சமயம் கிறிஸ்து சகம் 1058 வருஷம் முதல் சிலோனில் ராஜப் பிரதிநிதியாக இருந்து வந்ததாகவும் காணப்படுகின்றன.

19) அதிராஜேந்தரன், இவர் வீரராஜேந்தரனுடைய குமாரன். வீரராஜேந்தரன் கிறிஸ்து சகம் 1070-வருஷத்தில் இறந்து போனதற்குப் பின்னர், இவர் சோழ ராஜ்யாதிபதியாக ஸ்வீகாரம் பெற்றும், விசேஷமாக சுவல்ப நாட்களிலேயே இவருடைய ஆட்சி ஸ்தம்பித்து விட்டன இதன் காரணமாக மேற்கு சோழ விக்ரமாதித்யன், தன் மாமனுர் இறந்துவிட்ட சமாசாரம் தெரிந்தவுடனே வந்து இவரை ஸிம்மாசனுதியாக நியமித்தார். ஆயினும் இவர் திடீரென்று மரணமடைந்து விடவே, ராஜேந்தர சோழனுடைய மருமகன், வேங்கி தேச சக்கரவர்த்தியுமான குலோத்துங்க மகாராஜா வந்து, இச்சோழ தேச ராஜ்யத்தை வாரிசாக ஏற்றுக்கொண்டார் கிறிஸ்து சகம் 1070-ஹில் ஜூன் மீ 9ந்தேதியில் பட்டாபிஷேகம் நடத்தப்பட்டன இவருடைய சரித்திரத்தையும், தத்வம்ச சரித்திரத்தையும் தெரிவித்து இருக்கின்றன. சோழ ராஜாக்களுடைய சரித்திரமும், சாளுக்கிய சரித்திரமும் ஒன்றுகக் கலந்துவிட்டன என்று கண்டுகொள்ளவும். சோழ ராஜாக்கள் எல்லோரும் சைவ மதத்தினராகவே இருந்தார்கள். இவர்களுடைய சைனியத்தில் 60 ஆயிரம் யானைகள் இருந்ததாக சைனு சரித்திரக்காரரர் எழுதிய சரித்திரம் கூறுகின்றன.

20) சோழராஜ வம்சாவழியினர் வரலாறு: காஞ்சிபுர சோழ வம்சத்திலிருந்து பந்துக்களாகிய சாளுக்கிய ராஜாக்களிலிருந்தும், தாக்ஷிண்ய வைபவமுடைய வெள்ளாளர், ஆழ்வார்கள், பிள்ளையார்கள்,உடையார் முதலான பிரிவினர் ஏற்பட்டதாக திருஷ்டாந்தங்கள் கிடைத்துள்ளன. இந்த சோழ ராஜாக்களில் பராந்தகனுடைய குமாரன் ஆகிய ஹரிகுலகேசரி பிள்ளையார்கள் அல்லது ஆழ்வார் கூட்டத்தினருடன் பாந்தவ்யம் கலந்ததாக ராஜகேசரியினுடைய 9-வது ராஜபாலன காலத்தில் காணப்படுகின்றன. ஆழ்வார்கள், பிள்ளையார்கள் என்ற பெயர்களை ராஜவம்ச குமாரர்கள்

வைத்துக் கொண்டதாக காணப்படுகின்றன. காஞ்சீபுர சாசனம் (No. 1 of 1906) கரிகால பிள்ளையார் என்றும், திருமலவாடி சாசனத்தில் சோழ வல்லப தேவ வரபு பிள்ளையார் என்று கரிகால பிள்ளையார் மனைவி பாஞ்சவன்மா தேவியார் எழுதியதாக (85 of 1920-ல்) காணப்படுகின்றன. ஆகையால் கரிகால வம்சத்தினராகிய சோழரே பிள்ளையார் என்ற பட்டத்தை த்ராவிட பாஷையில் எழுதிவைத்துக் கொண்டதாக திருஷ்டாந்தம். ராஜராஜநரேந்தரனுடைய பார்யை அம்மங்கி தேவியார் பேருக்கும் கூட பிள்ளையார், ஆழ்வார் பட்டமிருந்ததாகவும் காணப்படுகின்றன. இதல்லாமல் தெலுங்கு சோழர் ராஜாக்களில் மன்மஸித்தி, திருக்காலதி தேவராஜாக்களைக் குறித்து ஒரு உடையாரால் எழுதி வைக்கப்பட்ட சாசனங்களிலும்கூட (N. I. R/8.) இவர்களுக்குப் பட்டமாக பிள்ளையார் என்ற பதத்தை உபயோகப்படுத்தியுள்ளன. இதனுல் தென்னுட்டில் உள்ள சோழ வம்சாவழியினர் எல்லோரும் பிள்ளையார், உடையார், ஆழ்வார், வெள்ளாளர் முதலாயினேர் பிரிவுகள் ஏற்பட்டன என்பது சித்தாந்தம். கால மாறுதலால் பல பிரிவுகள் ஏற்பட்டனவென்பதற்கு உதாரணமாக தமிழ் சங்க வாங்மயம் என்ற சரித்திரத்தில், சோழ சப்தத்திற்கு பதில் கில்லி, வளவன், செம்பியன், சென்னி முதலிய பதங்கள் காணப்படுகின்றன. சப்தங்கள் மாறின போதிலும், வம்சங்கள் மாறவில்லை. மாவல்லப என்றதற்கு, வல்லவ, பல்லவ, வல்லப இம்மாதிரியான பதங்களில் (ப, வ, ப, ஸ) பேதங்களினுல் தேச பாஷைகளின் மாறுதல் ஏற்பட்டன வென்பது தெளிவு. வல்லப ராஜாக்களும், பல்லவ ராஜாக்களும், வினவலவன் என்ற பட்டம் பெற்றவர்கள், வல்லப, பல்லவ, வல்லவன் என்ற பெயர்கள் சப்தங்களின் மாறுதலே காரணமென்று சரித்திரக்காரர்கள் அபிப்பிராயம். கில்லியென்ற பதத்திற்கு பூமியைத் தோண்டுவதற்கும் இப்பெயர் இத்தொழிலாளர்களுக்கும் இப்பெயர்கள் பரம்பரையாக வழக்கத்தில் உள்ளனவென்பது பிரசித்தம். இதைப் போலவே சூரிய குலத்தவராகிய தெலுங்கு சோழ வம்சாவழியினர் கம்மவார் என்றும், க்ஷத்திரியர் என்றும் மாறியதாக தெலுங்கு சோழ ராஜாக்களுடைய சரித்திரங்களிற்

கூறியிருந்ததை நீங்கள் கற்றுணர்ந்துகொள்வது விசேஷம். தென்னாட்டில் பிரபலமாகவுள்ள தமிழ் கிரந்தங்களில் (சங்கம்வாங்மயம) சூர்ய குலத்தவரைப்பற்றி புராண காவியங்களில் குறித்துள்ள சிபிச்சக்கரவர்த்தி, முசிகுந்தன், மனுவு முதலாயினோர் கரிகாலனுக்குப் பூர்வீகர் என்று எழுதப்பட்டுள்ளன. சூரிய குலத்தில் தோன்றிய மனுவும், முசிகுந்தனும் திராவிடநாட்டுச் சக்கரவர்த்திகளென்று சொல்லப்பட்டிருப்பது புராண, காவிய, சரித்திர வரலாறு. கிறிஸ்துவுக்கு முன்னர் சுமார் 6 ஆயிரம் வருஷங்களிலிருந்து வந்த சூரிய குலத்தவர் (இக்ஷ்வாகு குலத்தவர்) பல பிரிவுகளுடன் பல தேசங்களிலிருந்து கொண்டு ராஜ்யபரிபாலனம் செய்து வந்தனர். இக்ஷ்வாகு வம்ச, கல்மாஷபாதன் என்ற அரசனுடைய வரலாறுகளைப் புராணங்களில் வர்ணித்துள்ளன. அதே போல பிற்காலத்தில் கரிகாலன் என்ற பெயரும் அந்த வம்சாவழியினருக்கு நடைமுறையில் ஏற்பட்டனவென்பது கண்கூடு. இந்த இக்ஷ்வாகு வம்சத்தினர் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு பரத கண்டத்தை ஆண்டனர். அதே போல மற்ற கண்டங்களையும் இதைப்போலவே ஆண்டு வந்ததாகப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இக்ஷ்வாகு வம்சாவழி விபரம்

21) மெஸபொடேமியாவில் செய்யப்பட்ட பூகர்ப்ப சோதனைகளில் நன்கு திடம்பெற்ற விஞ்ஞான பண்டிதர், ஒரு பிரளய காலத்தில் இப்பூமிக்கடியில் கண்டெடுக்கப்பட்ட வஸ்த்துக்களின் மூலமாக அத்தேசத்தில் ஸுமேரு ராஜ வம்சாவழியைப் பற்றியும், நம் நாட்டில் ஸிந்து ப்ரதேசத்தில் நடந்த பூகர்ப்ப பரிசோதனையில் கிடைத்த பொருள்களின் மூலமாக இக்ஷ்வாகு வம்சாவழியினர் நம் நாட்டிலிருந்து புறப்பட்டு அந்நாட்டையும் ஆண்டனர் என்றும், ஸுமேரு ராஜவம்சாவழியின் பெயர்கள் எல்லாம் நம் புராணங்களில் சூரியகுல இக்ஷ்வாகு வம்ச ராஜாக்களுடைய பேர்களைப் போலவே உள்ளனவென்றும், அதனால் ஸுமேரு ராஜ வம்ச

சரித்திரமும், இக்ஷ்வாகு வம்ச சரித்திரமும் ஒன்றேயென்றும் அந்நாட்டில் சூரியகுலாதிபனாகிய நிமிச்சக்கரவர்த்தியின் பேரால் நிமிபாகு முதலான பேர்களால் கட்டப்பட்ட பட்டணங்கள் முதலானவை இன்றைக்கும் அங்கு இருக்கின்றனவென்றும், அதனால் நிமிச்சக்கரவர்த்தி அங்கிருந்து அரசாண்டதாக திருஷ்டாந்தம் காணப்படுகின்றன. நிமிச்சக்கரவர்த்தியார் அந்த நாட்டில் இறந்துவிட்டதனால், அந்நாட்டு முறைப்படி பூபதனம் செய்யப்பட்டது. நம் நாட்டில் சவதஹநமே முக்கியமாக ஆதியில் இருந்து நடத்தி வந்துள்ளார்கள். இது வேத முறையென்பது சான்று.

இக்ஷ்வாகு வம்சத்தினர் தமிழ் நாட்டையும் ஆண்டு வந்ததாக தமிழ் சரித்திரங்களில் விசதமாகச் காணலாம். காஞ்சீபுர சோழர்களுக்கும் மூல புருஷன் கரிகாலன். கிழக்கு சாளுக்கியர்களும் இக்ஷ்வாகு வம்சாவழியினரென்றே ஆந்தர கிரந்தங்களிலும் காணலாம். பின்னால் தோன்றிய பிள்ளையர்கள் முதல் மற்றும் பல ஜாதியினர் தோன்றியுள்ளனர். இதற்கு உதாரணம், தொழில், பாஷை, நடைமுறை, தேச பழக்க வழக்கங்கள் முதலானவற்றால் ஏற்பட்டவையே. இக்ஷ்வாகு வம்சத்தினர் வைசியர்களிலும் இருக்கின்றனர். சூரிய குலத்தவர் வேத காலத்திய ஆசாரவநுஷ்டான முறையினரே ஆயினும், பல தேச வாசிகளாக மாறியதனால் ஆதி பாஷையாகிய ஆந்தர பாஷைய விட்டு தென்னாட்டில் உள்ள பாஷையையே பழக்க வழக்கத்தில் வைத்துக் கொண்டனர். பஞ்சத்ராவிடம் என்ற பாஷையும் ஆந்தர பாஷை மூலமாகவே ஏற்பட்டன. இதே போல தமிழுக்கும் ஆந்தரமே மூலமாகும். இதற்கு ஆதாரமாக மஹேம்ஜோ-தாரோ (ஸிந்து) தேசத்தில் கிடைத்த லிபிகள் இதற்கு மூல ஆதாரம். தவிர கேரளம், நேபாளம் முதலான பிரதேசங்களிலும் சூரிய குலத்தவர் இருந்துவருகின்றனர் என்று அந்தந்த நாட்டிலுள்ள சாசன கிரந்தங்களால் காணலாம். விஸ்தரபயத்தாலதை இங்கு குறிக்கவில்லை.

22) முதிகொண்ட சாளுக்கிய ராஜாக்கள். இந்த கோகிராஜனுக்கு குசுமாயுதன் என்ற குமாரன் இவருக்கு

விஜயாதித்யன், இவருக்கு 2-வது குசுமாயுதன், இவருக்கு 2-வது விஜயாதித்யன், இவருக்கு 3-வது குசுமாயுதன், இவருக்கு நிஜ்ஜராஜு, மல்படுராஜு, லோபசரகயென்ற 3 தனயர்கள் தோன்றியதாகவும், அதில் நிச்சராஜுவுக்கு அச்சிதேவி யென்ற பெண் மணிக்கு 4-வது குசுமாயுதன் தோன்றி அவரால் எழுதப்பட்ட தாம்பர சாசனத்தில் தெரியவருகின்றது. (I A. 1903) இந்த குசுமாயுதனுக்கு ப்பரேகாம்ம என்ற மனையாள் வயிற்றில் கொண்டிய, மல்லன யென்ற இருவர் பிறந்தனர். இவர் நக்க பருவம் அடைந்த காலத்தில் மஹாவீர பராக்ரமத்துடன் வேங்கி நாட்டு அரசராகிய தானார்ணவனுக்கு யுத்த காலத்தில் ஒத்தாசையாக உழைத்தமையால் அவர் 300 கிராமங்களுக்கு பிரதிநிதியாக நியமித்தார். தவிர இவர்களுக்கு பஞ்சமஹா சாமந்தாதி ராஜசின்னங்களையும் பெற்றுக்கொண்டுள்ளதாக தாம்பர சாசனத்தில் காணப்படுகின்றன. முதிகொண்ட ப்ரதேசத்தில் ஓர் பாகத்தை மட்டுமே பாலித்து வந்ததாகவும், பொத்தபி நாட்டுப் பிரதேசத்தைப் பரிபாலனம் செய்தது கிறிஸ்து சகம் 970-ல் தானார்ணவனுடைய பட்டாபிஷேகம் நடந்தது. வேங்கி தேசத்தை சுமார் கிறிஸ்து சகம் 1160ல் காகதீய ராஜாக்கள் கைப்பற்றிக்கொள்ள, இந்த சாளுக்கிய ராஜ குடும்பத்தினர் சிலர் வடநாட்டிற்குச் சென்று பிடாபுறத்திலும், எலமஞ்சியிலும், சிறு சிறு ராஜ்ஜியங்களை ஏற்படுத்தியவரில் பேட்டை விஜயாதித்யன் வம்சத்தினர் பிடாபுறத்திலும், குலோத்துங்க ராஜனுடைய குமாரன் வம்சாவழியில் வந்தவர்கள் விசாகப்பட்டணம் ஜில்லாவில் எலமஞ்சி நகரத்தை ஸ்தாபனஞ் செய்து அங்கு ஆட்சி செய்து வந்தனர்.

23) பிடாபுற சாளுக்கிய ராஜாக்கள், பேட்ட விஜயாதித்யன் வேங்கி நாட்டை கிறிஸ்து சகம் 918—25 வருஷங்கள் வரை ஆண்டு வந்தும், அம்மராஜுவின் ஜேஷ்ட குமாரன் என்னும் தந்தைக்குப் பின்னர் ராஜாவாகி 15 தினங்களே பரிபாலனம் செய்ததாகவும், யுத்த மல்லனுடைய குமாரன் தாடபராஜா, இவரைப்பதப்ரஷ்டஞ் செய்ததாக முதல் பாகத்தில் குறித்துள்ளோம். இந்த பேட்ட விஜயாதித்யன்

குமாரனாகிய சத்யாஸ்ரயன் காங்க வம்சத்தில் தோன்றிய கௌரீ தேவியை விவாஹம் செய்து கொண்டனர். இவர் குமாரராகிய விஜயாதித்யன் சூரிய குலத்துப் பெண்மணியாகிய விஜயதேவியைப் பரிணயம் செய்து கொண்டு இவர் 2-வது குமாரனாகிய மல்லப தேவுண்டு ஸாகர விஷயாதிபதியென்ற ஹைஹய வம்சத்திய பிராம்ஹண குமார்த்தியாகிய சந்தல தேவியைப் பாணிக்ரஹணம் செய்து கொண்டுள்ள காலத்தில் இவ்வம்மையார் கர்ப்பத்தில் விஜயாதித்யன் ஜனனமானான். பின்னர் 2-வது குலோத்துங்க சோழன் காலத்தில் கிறிஸ்து சகம் 1079-ஷ வேங்கி நாட்டின் மீது படையெடுத்து சில பாகத்தை வசப்படுத்திக்கொண்டு பிடாபுறத்திலேயே பட்டாபிஷிக்தனாகியதாக இந்த வம்ச மல்லப தேவர் பிடாபுற சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவர் அரதவாட ராஜகுமார்த்தியாகிய லக்ஷ்மிதேவியென்ற பெண்மணியையும் விவாஹம் செய்துகொண்டார் என்றும் காணப்படுகிறது. இந்த விஜயாதித்யனுக்குப் பின்னால் இவர் குமாரராகிய மல்லவிஷ்ணுவர்த்தனனுக்கு சாலிவாகன சகம் 1124-ஷத்தில் பிடாபுறத்திலேயே குந்திமாதவாலயத்தில் பட்டாபிஷேகம் நடத்தப்பட்டதாகவும், இவர் குடவாட கிராமத்திற்காக வேண்டிய சவுகரியங்களைச் செய்து, ஷை தேவாலயத்திற்குத் தான சாசனஞ் செய்துவைத்தார். லக்ஷிமீ தேவியென்றவர் கர்ப்பத்திற் பிறந்த தம்பியும் உண்டு இத்தம்பி சாலிவாகன சகம் 1098-வருஷத்தில் சாளுக்கிய பீமவரம் ராஜராஜ நாராயண தேவாலயத்திற்கு ஒரு தான சாசனம் செய்துள்ளார். இந்த மகானுபாவர் பிடாரபுரத்திலிருந்து கொண்டு 10 வருஷ காலம் ராஜ்யப் பரிபாலனம் செய்துள்ளார். இதற்குள் சாலிவாகன சகம் 1150-வது வருஷம் கிறிஸ்து சகம் 1228-ல் இந்தப் பிராந்தியங்களெல்லாம் காகதீய சக்கரவர்த்தியாகிய கணபதி தேவரால் வசம் செய்யப்பட்டன.

24) எலமஞ்ச்சிலி சாளுக்ய ராஜாக்கள், (எலமஞ்ச்சிவார், கொல்லவாடவார்) எலமஞ்ச்சிலி திமில பிராந்தியங்களில் சாளுக்கிய குப்த விஷ்ணுவர்த்தனர் காலத்திலிருந்து சாளுக்கியர் ஆட்சியிலேயே இருந்ததாக முதல் பாகத்தில்

குறித்துள்ளன என்பதை வாசகர்கள் கவனிக்கவும். எலமஞ்சி விஸ்வேஸ்பர தேவ சக்கரவர்த்தி சர்வஸித்தி தாலூக்காவில் பாஞ்சதார்ல என்ற கிராமத்தில் எழுதிவைத்த சாசனத்திலும், கொல்லவாட நரஸிம்ஹ பூபதியார் எழுதிவைத்த சாசனத்திலும், எலமஞ்சிலி சாளுக்கிய ராஜவம்ச சரித்திரத்திலும், இவ்விஷயம் பிரசித்தம். வேங்கி நாட்டைப் பரிபாலித்து வந்த குலோத்துங்க சோழ சக்கரவர்த்தியினுடைய குமாரர்களில் விஜயாதித்யன் என்றவர்க்குச் சண்டாம்பிகை தேவியிடத்தில் பிறந்த மல்லப தேவுண்டு இவருக்கு லக்ஷாம்ப என்ற தேவியிடம் பிறந்த உபேந்தர தேவுண்டு என்ற இவருக்கு கரவால பைரவ, தரணீவ-ராஹாதி பிருதுகள் உண்டு. இவர் கங்காம்ப என்ற நாரீமணியை விவாஹம் செய்து, இவருடைய கர்ப்பத்தில் பிறந்தவர் 2-வது மல்லப தேவரென்பவர். இவருக்குச் சோடாம்ப என்ற பாரியின் புத்திரனாக 2-வது உபேந்தரர் பிறந்தார்.

25) எலமஞ்சி உபேந்தரன் 2-வது. இவரும் இவருடைய தாயாரும் சாலிவாஹன சகம் 1205-வருஷத்தில் கூடி ஸிம்ஹாஸலத்தில் நரஸிம்ஹஸ்வாமி தேவாலயத்தில் அகண்ட தீபதானம் செய்தும், இவருடைய தாய்தந்தையர் பேரால் சோழ மல்ல அக்ரஹாரத்தைக் கட்டி பிரசித்தி பெற்றார். இவருக்கு மல்லாம்ப யென்ற தேவியின் கர்ப்பத்தில் கொப்பக்ஷிதீசன் என்ற குமாரன் தோன்றினார். இவருக்கு பரகண்ட பைரவ என்ற பிருதும் உண்டு.

26) எலமஞ்சி கொப்ப ராஜு தேவேந்தரன் 3. இவர் கங்கமாம்ப என்ற மாதை மணஞ்செய்து 3-வது உபேந்தரன் என்ற குமாரனைப் பெற்றார். இவருக்கு பிம்பாம்ப என்ற மனைவியிடம் செந்நோசேதேவன். இவருக்கு எலமஞ்சமன்ம உபேந்தரனும் பிறந்து, வரிசையாக எலமஞ்சிலி ராஜ்யத்தை பரிபாலனஞ் செய்துவந்தனர். இங்குள்ள சாசனங்களில் பரஸ்பர பேதங்கள் காணப்படுகின்றன. பிம்பாம்பாவுக்கே உபேந்தரன் ஜெனித்ததாக விஸ்வேரனுடைய சாசனம். பிம்பாம்பாவுக்கே சென்னேசேவேந்தரன் பிறந்ததாகவும், கொல்லவாட நரஸிம்ஹ பூபதி சாசனத்தில் உள்ளன. இந்த

இரண்டாவது சாசனமே சரியானதென்று காணப்படுகின்றது சென்னோசேவேந்தர்ன (இல்லையேல்) செந்நோசேதேவன். இவனுடைய பார்யையாகிய மஹாதேவி சாசனம் சாலிவாகன சகம் 1294-ஆம் காலம் ஸிம்ஹாஸலத்திலுள்ளது. அதில் தனது குமாரனாகிய உபேந்தர தேவ சக்கரவர்த்தியின் இஷ்டார்த்தஸித்திக்காக அகண்ட தீபதானம் செய்து வைத்தும் எலமஞ்சியில் ஒரு ஜலக்ஷேத்ரம் உண்டாகும்படியான பூமியை தேவஸ்தானத்திற்குக் கொடுத்ததாகக் காணப்படுவதால் இதே சரியான உதாரணமாகின்றன.

27) எலமஞ்சி விஸ்வேஸ்வ ராஜு, மன்ம உபேந்தரர் ஆகிய இவர் அநேக பெரிய யாக யக்ஞங்களைச் செய்து பிரஸித்தி பெற்றவராவார். இவருக்கு லக்காம்ப என்ற இல்லாளினுடைய கர்ப்பத்தில் விஸ்வேஸ்வரன் ஜனனமாயினர். இவர் ‘எலமஞ்சி’ என்ற வீட்டுப் பெயரையே தரித்துக்கொண்டதாக சாலிவாகன சகம் 1323-வருஷத்திய ஸிம்மாஹாஸல சாசனத்தில் காணப்படுகின்றன. இவருங்கூட தரணீவராஹாதி பிருதுகளைத் தரித்துக்கொண்டதாகவும், இவர் ஸிம்ஹாஸலத்தில் ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமிக்கு கருடகம்பம் செய்து வைத்ததாகவும் அந்த சாசனத்தில் உள்ளன. தவிர பாஞ்சதார்ல கிராமத்தில் தர்மலிங்கேஸ்வர ஸ்வாமிக்கு ஒரு கோபுரம் கட்டியதாகவும், அந்த கிராமத்திலேயே ராயகண்ட கோபாலஸ்வாமிக்கு கோயில் கட்டியதாகவும், இவர் கலிங்க ராஜாவுக்குப் பிரதிநிதியாக இருந்து கொண்டு, அந்நாட்டையும் ஆண்டு வந்தும், பூர்வ வம்சத்தை அனுசரித்து சக்கரவர்த்தி பிருதை தரித்துக் கொண்டுள்ளதாக காணப்படுகின்றன. இவர் கவி நாயகர்களை நன்கு ஆதரித்துப் போஷித்தும், தேவ காரியங்களை நன்கு நடத்தியும், பிராம்மணர்களையும் ஆதரித்து, அநேக பூமிகளைக் கொடுத்து சாசனம் செய்துவைத்துள்ளார். இவருடைய ஆஸ்தானத்தில் விந்நகோட்ட பெத்தன என்ற பண்டிதர் காவ்யாலங்கார சூடாமணி என்ற சரித்திரத்தையும் எழுதி விஸ்வேஸ்வர பூபதியாகிய இவருக்கு சன்மானமாக வழங்கியுள்ளார். இந்த விஸ்வேஸ்வரருடைய பார்யையாகிய மன்மருத்ரய்யங்காரு அம்மனுக்காக ஸிம்ஹாஸலம்

நரஸிம்ஹஸ்வாமி தேவாலயத்திற்கு சாலிவாகன சகம் 1299-ஸூத்தில் ஒரு தானசாசனம் செய்துள்ளார். இவர் காலம் சித்ரபானு-ஸூ ஸர்வஸித்தியில் கோரமான யுத்தம் நடந்ததில் ஆந்தர வீரரே ஜெயம் பெற்றனர் என்பது பிரசித்தி.

எலமஞ்சி நாகேந்த்ர உபேந்த்ர பூபதிகள்

28) சென்னேஸ்வரருடைய குமாரர் உபேந்தரனுக்குப் பிறந்த நாகேந்த்ர, உபேந்த்ர, நரஸிம்ஹ பூபதிகளைக் குறித்துச்சொல்லப்படும் விஷய வரலாறுகள். நாகேந்த்ரனும் பேருக்கு சக்கரவர்த்தி பட்டம் தரித்துக்கொண்டு இவருடைய சதிமணியாகிய பவானி தேவம்மாள் திரு-வயிற்றில் குமார எர்ரமய்யங்கார் என்ற புத்திரனிருந்தாக சாலிவாகன சகம் 1354-ஸூ பாஞ்சதார்ல சாசனத்தில் காணப்படுகின்றன. நாகேந்த்ர தேவருக்கு அன்யம தேவி என்ற மற்றொரு தேவி இருந்தாள். இவர் சாசனம் சாலிவாகன சகம் 1339-ஸூ பாஞ்சதார்ல தர்மேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார்.

கொல்லவாட நரஸிம்ஹ பூபதி

29) எலமஞ்சிலி உபேந்த்ரனுடைய குமாரர் ஒருவர் இந்தநரஸிம்ஹ பூபதி கொல்லவாட வீட்டுப்பெயர் வைத்துக் கொண்டனர். இவருக்கு வீராம்பிகை என்ற மனையாள் உண்டு. இவ்வம்மையார் பாஞ்சதார்ல தர்மேஸ்வரஸ்வாமிக்கு திருமாளிகை ஒன்று கட்டி வைத்து சாசனம் எழுதி வைத்தனர். சாலிவாகன சகம் 1350-ஸூத்தில், இதற்கு முன்னதாகவே சாலிவாகன சகம் 1344-ஸூத்தில் அங்குள்ள தேவாலயத்திற்கு அகண்ட தீப தானஞ் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார் அந்த அம்மையார். நரஸிம்ஹ பூபதி சாலிவாகன சகம் 1359-ஸூத்தில் மறுபடியும் அந்த

தேவஸ்தானத்திற்கு தன் தந்தையாகிய உபேந்த்ர சக்கரவர்த்திக்கும், தன் தாயார் அத்யமாம்பாளுக்கும் தர்மர்த்தமாக அநேக பூமிகளைத் தானஞ் செய்து கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். அக்காலம் அப்பிராந்தியம் தன் ஆட்சியிலேயே இருந்தது.

30) எலமஞ்சி குமார யெர்ரபூபதியாகிய இவர் தம்முடைய பாரம்பர்ய வம்சாவழிப் பட்டத்தை ஸர்வலோகாஸ்ரய விஷ்ணுவர்தன என்ற பிருதுகளைத் தரித்துக் கொண்டுள்ளனர். இவருடைய மனைவியார் ஸிங்கமாம்ப, இவர் புதல்வர்கள், ஸிம்ஹராஜா மஹாபாத்ரர், உமா மஹேஸ்வர பாத்ரர் என்றவர்கள் சாலிவாகன சகம் 1416ல் தர்மலிங்கேஸ்வர ஸ்வாமிக்கு அநேக பூமிகளை தான சாசனம் செய்து கொடுத்தும், இவருக்கேற்பட்ட மஹாபாத்ர, பாத்ர என்ற பிருதுகளைக் கொண்டு இவர்கள் காங்க ராஜாக்களிடம் மந்திரி பிரதானிகளாக இருந்ததாகக் காணப்படுகின்றன. பின்னர் இந்த வம்சத்திலேயே பெஹராமஹாபாத்ர ஸ்ரீசர்வ ராஜமஹாபாத்ரன் என்றவர் இருந்ததாகவும், சாலிவாகன சகம் 1447-ஞு ஸிம்ஹாஸல ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமிக்கு உத்தராபல்லி என்ற கிராமத்தை தத்தம் செய்து சாசனம் எழுதிவைத்து கீர்த்தி பெற்றுள்ளார். இவருக்குப் பின்னர் இவருடைய குமாரர் ஸ்ரீ ஹரிநரேந்த்ர மஹாபாத்ருலு அவர்கள், தன் தாய் தந்தையர்களுக்கு புண்யார்த்தமாக பாஞ்சதார்ல தர்மலிங்கேஸ்வர ஸ்வாமிக்கு ஒரு மண்டபத்தைக் கட்டி சாலிவாகன சகம் 1460 வருஷத்தில் ஒரு சாசனம் எழுதி வைத்துள்ளார். இக்காலத்தில் சாளுக்கிய ஸ்ரீதர ராஜநரேந்தர மஹாபாத்ரர் ஒருவர் சாலிவாகன சகம் 1452 வருஷத்தில் பாஞ்சதார்ல தேவாலயத்தில் தெற்கு கோபுர வாசலை நிர்மாணித்துப் பிரதிஷ்டை செய்தும் சாசனம் எழுதி வைத்துள்ளார். யாருடைய குமாரர் என்று தெரியவில்லை.

31) எலமஞ்சி சோழகங்க தேவராஜு சாலிவாகன சகம் 1313 வருஷ காலம் ஸ்ரீ பஹிடிராஜுவுக்கு மல்லாம்ப என்ற பார்யையினிடம் ஜெனித்த சர்வலோகாஸ்ரய

ஸ்ரீ விஷ்ணுவர்த்தன பிருதாங்கித, எலமஞ்சி சோமகங்க தேவர என்றவர் சாலிவாகன சகம் 1313-ஸு ஸிம்மாசலத்தில் ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமிக்கு சில அலங்கார ஆபரணுதிகள் செய்வித்து சாசனம் எழுதியுள்ளார். இதல்லாமல் சாலிவாகன சகம் 1310-வருஷத்தில் எலமஞ்சி மஹாராஜருக்கு லக்கம தேவியின் கர்ப்பத்தில் ஜெனித்த அம்பிகாதேவி ஸிம்ஹாசலஸ்வாமிக்கு சில பூமிகளைத் தானசாசனஞ் செய்து உள்ளனள். இப்பிராந்தியத்தில் ஸர்வலோகாஸ்ரய, விஷ்ணுவர்தன, கலிங்க மஜ்லிநல்லுராஜு, ராபுத்துராயன் என்றவர் சாலிவாகன சகம் 1307-ஸு பொட்னூரி சென்ன ராஜு இவருக்காக ஸிம்ஹாஸலஸ்ரீ நரசிம்ஹஸ்வாமி சந்நிதிக்கு அகண்ட தீபதானம் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். சாலிவாகன சகம் 1460-ஸு கிறிஸ்து சகம் 1538 வருஷத்தில் இந்த வம்சத்தினர் எலமஞ்சலியில் ராஜப் பிரதிநிதிகளாக ஆட்சி நடத்தி வந்தனர் என்று காணப்படுகின்றது. இதன் விபரம் சரியாகக் கிடைக்கவில்லையென்று சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இதன் விஷயம் முதல் பாகத்தில் குறித்துள்ளபடி கிறிஸ்து சகம் 1599-ஸு பைராமன் அமீன்முல்க்கே என்ற சேனுதிபதிகளாகிய மகமதியர்களால் சிந்தபல்லிகண்டி பக்கம் நடந்த யுத்தத்தில் மரணமடைந்துவிட்ட மன்னர்களிற்சேர்ந்த சர்வராஜு இந்த வம்சாவழியினரே ஆயின் தவிருமல் அவருடனேயே எலமஞ்சியருடைய ராஜ்யம் மஹமதியர் வசமாயினதாக நினைக்கவேண்டும். கிறிஸ்து சகம் 1599-ஸு காலத்திய சர்வராஜாக்களில் தோன்றிய சர்வராஜாவுக்குப் பௌத்திரராக நினைக்கவேண்டும் இந்த சர்வராஜு முகுந்த பாஹுபலேந்த்ரனுடைய வனைச்சேர்ந்தவரென்றும், மஹமதியர் எழுதிய வைத்த ஸ்ரீகூர்மம் சாசனத்தில் ஸ்பஷ்டமாகக் காணலாம். அச்சமயம் களிங்க நாட்டில் ராஜாவாக இந்த சாளுக்ய சர்வ ராஜேந்த்ணிருந்திருக்கலாம் என்பது பரிசோதகரபிப்ராயம் இந்த எலமஞ்சிலிராஜ்யத்தை பூசபாட்டிககபதி ராஜாக்களே த்வம்சம் செய்துவிட்டதாககவும், ராஜ்யத்தை வசப்படுத்திக் கொண்டதாகவும், அவர்கள் பெற்றிருந்த பிருதுகள் மூலமாகவும் ஸ்பஷ்டமாகக் காணலாம். இவர்களிடமிருந்து மஹமதியர் வசமானதாகவும் நினைக்கலாம். எலமஞ்சிவார் என்ற வீட்டுப் பெயருள்ளவர்கள் கம்மவாரில் இருப்பதாலும், இக்கூட்டத்தினர்

சுவல்ப்பமாக சாணப்படுகின்றனர். தவிர ஆந்த்ர க்ஷத்திரியர் களிலும் கூட இருப்பதாகக் கேள்விப்பட்டுள்ளதனுலும் தெரியவருகின்றது. இவர்கள் ஆந்த்ர க்ஷத்திரியர்களுக்கும், கம்மவாருக்கும் பூர்வீகராகி இருக்கவேண்டுமென்று காணப் படுகின்றன. எலமஞ்சிலியில் பரிபாலனஞ் செய்துவந்த இந்த ராஜவம்சத்தினர் ஆதியிலிருந்து தேவதா பக்தியில் ஈடுபட்டு அநேக தானதர்ம காரியங்களைப் பிரபலமாக நடத்தி வந்ததாகவும் சரித்திரங்களில் விசதமாகக்காணலாம். சாளுக்ய வம்சம் க்ஷீணதசை அடைந்து வந்த காலத்தில் சில மஹான்கள், கலிங்க, காங்க ராஜாக்களுக்குப் பிரதிநிதி களாகப் போய்விட்டனர் என்றே இதுவரையிலும் நாம் தெரிந்துகொண்டோம். அவர்களில் சாலிவாகன சகம் 1301 ஸ்ரீ கால அதிபதியும், ஸர்வலோகாஸ்ரய சக்கரவர்த்தி, மாநவ்யஸ கோத்ர ஸ்ரீ விஷ்ணுவர்தன, பிருதுகளைத்தரித்துக் கொண்ட ஜலேஸ்வர மஹாபாத்ரனுகியவர் ஸிம்ஹாசலத் தில் ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமிக்குப் பூஜார்த்தமாக அநேக பூமி களை நேரேடுபல்லி கிராமத்தில் கொடுத்துள்ளார். இப்பூமி குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்தது. சாலிவாகன சகம் 1304 வருஷத்தில் இவருடைய பார்யை யுபயதூபாலயத்திலுள்ள சாமெரகொல்புலு என்ற கிராமத்தை தானஞ்செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார். அதாவது உத்தம வைதீக பிராம்ஹணர்களுக்கு.

சாளுக்யர் விபரங்கள்

32) சாளுக்ய இராஜாக்கள் கிறிஸ்து சகம் 1360-ஸ்ரீ காலத்தில் சிலர் ஜல்லிபல்லி கோட்டையிலிருந்து ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தனர். கிறிஸ்து சகம் 1150-ஸ்ரீ கால முதல் துர்ஜய குலத்தவரிலிருந்தும், இவர் பந்துக்களிட மிருந்தும், சோட சாளுக்ய வம்சங்களிலிருந்தும் பிரிந்து போன எலமவார் நடைமுறைகளை விட்டு மாறிய கூட்டத் தினருடன் கலந்துகொண்டனர். ஆயினும் வெலமவார் தம் தாயாதிகளை வெல்லக்கூடிய சக்தியையும் இழந்துவிட்டனர். இவர்கள் காகதீய ராஜாக்களிடம் போய்ச் சேர்ந்துகொண்டு அவரிடத்தில் நல்ல மரியாதை பெற்று ராஜாங்கத்தில்

சேனுதிபதிகளாகவும் அமர்ந்து ராஜாங்க ரக்ஷகர்களாகி கிறிஸ்து சகம் 1323 வருஷத்தில் வீரப்ரதாபருத்ர சக்கரவர்த்தியினுடைய கொலுவு கூட்டத்திலும் பதவிகள் பெற்றனர், அவருடைய ராஜ்யம் அன்னியர் வசம் மாறிய பின்னர், இவர்கள் வசமிருந்த பதவிகளால் மேன்மேலாக விருத்தி அடைந்து வந்தனர். கிறிஸ்து சகம் 1360ஞுத்தில் ரேசெர்ல வம்சாதிபராகிய சிங்கம நாயுடு ராஜ்யாதிகாரத்தை, சாளுக்கிய ராஜாங்கத்தார் வசமிருந்த ஜல்லபல்லி கோட்டையின் மீது பிரயோகித்து முற்றுகையிட அந்த யுத்த களத்தில் எதிரிகளால் கொலையுண்டனர். அதனுல் மற்ற எலமவார் எல்லோருங்கூடி யுத்த சன்னத்தராகி கிறிஸ்து சகம் 1361-ஞுத்தில் சார்வரி வருஷம் கார்த்திகை மாதத்தில் சிங்கமநாயடு குமாரர் அனபோதா நாயடு, மாதா நாயடு, வுங்கலத்து தங்கள் சேனைகளைத் திரட்டிக் கொண்டு ஜல்லபல்லிகோட்டையை பறிந்துக்கொள்ள 6000 ஆறுயிரம் குதிரைப்படை, (700) எழுநூறு ஆனைப்படை, (20000) இருபதாயிரம் காலாட்படைகளுடன் சென்று இனகுர்த்தியின் பக்கம் முகாமிட்டு யுத்த பேரிகையுடன் யுத்தம் ஆரம்பித்தனர். தெலுங்கு சிப்பாய்களும் இப்படையிலிருந்தனர். இந்தக் கோர யுத்தத்தில் சாளுக்ய ராஜர்களுடைய கோட்டையில் சில பாகம் அழிந்தும், அநேக வீரர்கள் மடிந்தும் போயினர். இந்த யுத்தத்தில் கம்மவாரும் சகாயமாக சாளுக்யருக்கு வேண்டிய தளவாடங்களை உதவினர். கடைசியில் ஜலபல்லிக்கோட்டை அனபோதா நாயடு வசமாயின. யுத்த களத்தில் இவர் மஹாவீரர் (101 நூற்றுஒன்று)களை வாளாயுதத்தால் குத்தி, இரத்தத்தை எடுத்து தன் தந்தைக்கு உத்தரகிரிகைகளை நடத்தி, "ஸோமகுலபரசுராம" என்ற பட்டம் பெற்றனராம். என்ன சாதுர்யம்! அக்காலத்திலிருந்து ஆந்தர தேசத்தில் சாளுக்கியர் என்ற குலத்தினர் காணப்படவில்லையாம். சில பேர் அந்நிய நாட்டிற்குப் போய் விட்டனர். ராசவாரில் சேர்ந்த சாளுக்யர்கள் அநேகர் அதமாய்ப் போனதால், வெல நாடு, கம்மநாடுகளிலிருந்த சிலர் கம்மவாரில் சேர்ந்து கம்மவாரென்றே சொல்லிக் கொள்கின்றனர் என்று காணப்படுகின்றன. சிலர் அனபோத நாயுடு ஆட்சியிலிருந்து

வெளி நாடுகளில் அதாவது களிங்க, கங்க நாட்டினருடன் கலந்து அந்நாட்டு மன்னர்களுடன் உறவாடி, உத்யோகங்களில் சேர்ந்து அந்நாட்டுப் பிரதிநிதிகளாகவும் அமர்ந்தனர் என்று காணப்படுகின்றன. இந்த கிழக்கு சாளுக்ய ராஜாக்களுடன் கூடியவர்களில் ஒரு பிரிவினர் ஆரவீட்டி வம்சத்தவரென்று பிரபலமாக வந்தனர். இவர்கள் விஜயநகர சாம்ராஜ்யத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்தனர். ஆரவீட்டி வம்ச சரித்திரத்தில், இவர்களுடைய வம்சம் சாளுக்கியர்களிலிருந்தே உண்டானதாக எழுதப்பட்டுள்ளன. கிறிஸ்து சகம் 1524 வருஷத்தில் இந்த வம்சத்திலிருந்தே மங்கலம்-பாட்டி வெங்கட்டராஜு எழுதிவைத்த தாம்பர சாசனம் (C. P. No. 6 in N. 1) இம்மாதிரியாக இருக்கின்றன. ராஜ ராஜநரேந்த்ரனுக்கு 10-வது விஜ்ஜலேந்த்ரன். இவருக்கு 3-வது ஹேமலிராயர் (மாயபுரி ராஜா) இவருக்குப் பின்னர் 4-வது தாதபின்னமராயர் என்று எழுதப்பட்டுள்ளன. இவருக்குப் பின்னிருந்து வந்த வம்சக்ரமம் ஆரவீட்டி வம்ச சரித்திரத்தில் உள்ளன. மங்கலம்பாட்டி வெங்கட்டராஜும், ஆரவீட்டி ராஜாக்களும் சாளுக்ய வம்சத்தவரென்றே முன் சொன்ன பிரகாரம் ஒப்புக்கொண்டால், கோத்ரங்கள், ஹாரீத கோத்ரங்களுக்குப் பதிலாக நாத்ரேய கோத்ரவாசிகளென்று எழுதிக்கொண்டு வந்தனர். இதற்கு (S. I I IV P. 281)ல் ஏற்பட்ட சாசனம் பிரமாணமாகின்றன. பெதசெரகூர் சாசனம் எழுதியவர் சாளுக்ய வம்ச குமுதவர்தனர், தான் மாண்டவ்ய கோத்ரவாசியென்று குறித்துள்ளார். இதே மாதிரி சாளுக்யர் கோத்ரங்களை மாற்றிவந்தனர் என்பது பிரசித்தம். சாளுக்ய வம்சத்தினர் என்று சொல்லி வந்த மங்கலம்பாட்டி வெங்கட்ராஜுவைப் போலவே இன்றைக்கும் கம்மவாரில் உள்ள மங்கலம்பூட்டிவார் என்றவர்கள் இந்த வம்சத்தைச் சேர்ந்தவரென்றே தோன்றுகின்றன. இந்த கிழக்கு சாளுக்ய ராஜாக்களுக்கு முக்கிய பந்துக்களும், விசேஷமாக இந்த எலமஞ்சி ராஜாக்களுக்கும், முக்யமாகிய கோனசீம ராஜாக்களுக்கும், ஹைஹய வம்சத்தினருக்கும், ஹைஹய வம்சமே பிரதானம்.

33) கோனசீம ராஜாக்கள், கோனராஜேந்த்ர சோழன் இவர்கள் ஹைஹய வம்சத்தினருக்கும் மூலபுருஷன் ராஜபரேண்டு என்றவர். இவர் ஆத்ரேய கோத்ரீகன் இவர் குலோத்துங்க சோழ ராஜனுக்குப் பிரதிநிதியாக இருந்து மிக்க பராக்ரமசாலியென்று பெயர் பெற்று கோநசீம ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தனர் என்று முதல் பாகத்தில் எழுதப்பட்டுள்ளன. இவருடைய குமாரர்களில் சோழ ராஜு அல்லது ராஜேந்த்ர சோழன் என்றவர் ஒருவர். ராஜபநேனி என்றவருக்குப்பின்னர் இவரே கோநசீமையைப் பரிபாலித்து வந்தார். இவருக்கு மைலார தேவியென்ற மனைவியின் கர்ப்பத்தில் பேதராஜு, தேவதேவுண்டு, புராந்தகன், வென்னமஹிபதி, மல்லிதேவுண்டு என்ற குமாரர்கள் தோன்றினர். ராஜபநேனி என்றவருக்கு தொண்டிதேவியென்ற மற்றொரு மனைவியும், இவள் வயிற்றிற் றோன்றிய சத்திராஜு என்கிற சந்யாஸ்ராயன் புத்திரனைத் தோன்றினன் என்றும் காணப்படுகின்றன. இந்த தொண்டி தேவியார் சூரிய குலத்தில் பிறந்தவளென்று கூறுகின்றனர்.

34) கோன சத்தி ராஜு, பீமராஜுலு, சத்திராஜு தன்னுடைய தமையனுக்குப் பின்னர், அதாவது ராஜேந்த்ர சோழனுக்குப் பின்றைல் கோன சீமையில் சில பாகத்தைப் பரிபாலித்து வந்ததாக காணப்படுகின்றன. இவரைக் குறித்து ஒரு சாசனம் சாலிவாகன சகம் 1057 வருஷம் திராக்ஷாராம பீமேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீப தானம் செய்தும் சாலிவாகன சகம் 1072 வருஷம் சந்நியாசிகளுக்காக வேண்டி அன்னசத்திரம் கட்டியும், அதற்கு அநேக பூமிகளையும் கொடுத்து தானசாசனம் எழுதிவைத்துள்ளார். ராஜபநேனி குமாரர்களில் மும்மடி பீமராஜு என்றவர் சத்திராஜனுடன் கூடி கோன சீமையை ஆண்டுவந்ததாகவும் இவர் சாளுக்ய ராஜாவாகிய ராயபூபாலனுக்கு மனைவியாகிய சந்திரகாம்ப வயிற்றில் பிறந்த ராஜா தேவியை விவாகம் செய்துகொண்டுள்ளனர். இந்த ராஜா தேவியார் சாலிவாகன சகம் 1057 வருஷத்தில் ஸ்ரீ பீமேஸ்பர ஆலயத்திற்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்து கீர்த்தியும் பெற்றுள்ளார் என்று காணப்படுகின்றன.

35) கோன பேத ராஜு, கோன ராஜேந்த்ர சோழனுக்குப் பின்னர் கோன சீமையில் சில பாகங்களை ஆண்டு வந்ததாகவும், இவருடைய பார்யை கங்கா தேவியினிடம் பிறந்த மன்மசோடராஜன் என்றவர் பட்டத்திற்கு வந்ததாகக் காணப்படுகின்றன. கோன பேதராஜு வம்சம், பேதராஜனுக்குப் பின்னர் இவர் குமாரன் மன்மசோடராஜு பட்டத்திற்கு வந்துள்ளார். இவருக்கு சோடமகாதேவி யென்றவளும், கங்காம்ப என்றவளும் ஆகிய இருவர் மனைவியர்கள். இவர்களில் சோடமகாதேவிக்கு பேதராஜு என்ற குமாரனும், மல்தேவுண்டு என்ற 2-வது குமாரனும் பிறந்தனர். இவருக்கு மன்மமல்லி தேவுண்டென மறு பெயருமுண்டு. கங்கமாம்ப தேவிக்கு 2-வது சோடராஜனும் பிறந்ததாக கந்திருப்ப சாசனத்தில் காணலாம்.

37) கோன சத்தி ராஜு வம்சம், ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வர என்ற பிருது பெற்ற கோன பீம ராஜு சாசனம், பீமேஸ்வராலயத்தில் சாலிவாகன சகம் 1075 வருஷத்தில் ஏற்பட்டது. அதில் இந்த பீமராஜு, சத்திராஜு இவர்கள் இருவரும் புத்திரர் என்றே எழுதப்பட்டுள்ளன. இவர் தன் தந்தை கொடுத்த பூமி தவிர குத்தவாதி நாட்டைச் சேர்ந்த குந்தூட்டி பாலத்தில் 30 கண்டம் பூமியை ஸ்ரீ பீமேஸ்வரஸ்வாமி திருவீதி மடத்திற்கு, கல்யாண மகோத்சவ காலத்தில் வரக்கூடிய சந்நியாசிகளின் போஷணார்த்தமாக தானசாசனம் செய்து கீர்த்தி பெற்றுள்ளார். இவர் பித்ராஜிதமாகிய கோனசீமை பூமியைப் பரிபாலனம் செய்துவந்தார். இவருடைய பார்யையாகிய பத்மாவதி தேவியார் சாசனம் சாலிவாகன சகம் 1053 ஷுத்தில் ஸ்ரீ பீமேஸ்வரஸ்வாமிக்கு ஹவிர்பால்யார்ச்சனைக்காக குண்டினபல்லி யென்ற கிராமத்தை தானசாசனம் செய்து வைத்துள்ளார். இவரும் மும்மடி பீமனுடைய குமாரர் லோஹமஹீபாலனும் கூடியே கோன சீமையைப் பரிபாலித்து வந்ததாகக் காண்கின்றன. இந்த பீமராஜனிடம் காமநாயகர் குமாரர் கொசனைய்ய என்றவர் சர்வாதிகாரமாக இருந்துவந்ததாக சாலிவாகன சகம் 1090 வருஷத்தில் ஏற்பட்ட சாசனத்தில் காணப்படுகின்றன.

38) கோனபன்ம சத்யராஜு, மல்லிதேவராஜுலு. சாலிவாகன சகம் 1117-ஷு காலம் பிடாபுரத்தில் கோன சத்திராஜு பேன்மார்கள் பரிபாலனத்திலிருந்ததாகக் காண்கின்றன. மன்மசத்யராஜுவின் தந்தையாகிய வல்லப ராஜுவும் மல்லிதேவனுடன் கூடியே ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தனர். அவர் இறந்த பின்னர் இவ்விருவருங்கூடி ராஜ்யத்தை ஆண்டுவந்த காலம் ஒட்டியூர் என்ற கிராமத்தை தானஞ் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளனர். கோன மன்மசோட ராஜு கோனசீமையிலிருந்து ஆண்டதற்குப் பின்னர் இவர் குமாரன் மன்பபேதராஜு பட்டத்திற்கு வந்ததாகவும் சொல்லக் கேள்வியே தவிர சாசனங்கள் காணப்படவில்லை. பின்னர் கோன சீமையைப் பரிபாலித்து வந்தவர் கோனமன்மமல்லி தேவராஜு என்று காண்கின்றன.

39) கோனமன்மமல்லி தேவராஜு, இவர் சாலிவாகன 1140-ஷு காலம் ராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்த மஹா மண்டலேஸ்வரன். கந்திருப்பம் தாலூக்காவில் சாசனம் ஒன்று கிடைத்துள்ளன. பல்லதுர்த்தி கிராமத்திலிருந்து கொஞ்ச ப்ரதேசத்தைப் பெற்று, கந்திருப்பம் என்று பெயரிட்டு அதை ஸ்ரீ சோமேஸ்வர தேவனுக்கு இவர் சர்வ கிரகதோச பரிகாரமாகக் கொடுத்தனர். தவிர பைரவஸ்வாமிக்கு 5 புட்லுனு ஸ்தானுதிபதிகளுக்கு 30 புட்ல பூமியை இனுமாகக் கொடுத்தார். இப்பூமிகளெல்லாம் தம் பிதுரார்ஜிதமானவையே. இவர் காலத்தில் ஸ்ரீ சோமேஸ்பராலயம், வித்யாலயம், பெரிய தேவாலயங்களிலும் வித்யாலயங்களும் பிரபலமாக விளங்கிவந்தன. இவருடைய மனைவியார் ஆகாதேவி சாலிவாகன சகம் 1153 வருஷத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். கோன ராஜேந்த்ர சோழமல்லனுடைய குமாரன் மல்லராஜு சாலிவாகன சகம் 1057 வருஷத்தில் காண்கின்றன இவருடைய பார்யை கங்கா தேவியார் சாலிவாகன சகம் 1057 வருஷத்தில் ஸ்ரீ பீமேஸ்வராலயத்திற்கு அகண்ட தீபதானம் செய்துள்ளார். கோனஅன்னமல்லயதேவராஜு பார்யை சாலிவாகன சகம் 1176 வருஷத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்

திற்கு ஒரு தானசாசனம் செய்துள்ளார். இந்த சாசன பாகம் சிதலமடைந்துவிட்டதாகக் காணப்படுகிறது. ஆதலால் சில விபரங்கள் நன்ருகக் கண்டுகொள்ளமுடிய வில்லை. இந்த கோன வம்சத்தில் பின்னர் சகவர்ஷம் 1183 வருஷ காலத்தில் கோனபீம ராஜுவினுடைய பெயர் காணப்படுகின்றன. இவர் ராஜபநேனி குமாரன் என்று சொல்லப்படுகின்றது. ஆயினும் ராஜபநேனி காலத்திற்கும், இவருடைய காலத்திற்கும் வித்தியாசம் காணப்படுகின்றன. இவர் சாளுக்ய ராஜனுகிய இந்துசேகரனுக்கு அவர் மனைவி யார் உதயமாம்ப வயிற்றிற் பிறந்த அன்யமாம்பையை விவாகம் செய்து கொடுத்ததாக அம்மையார் எழுதி வைத்த சாசனத்தில் காணப்படுகின்றன. இந்த பீமராஜனுக்கு ராமநாத தேவுண்டென்ற குமாரனிருந்தான். இவர் சாலி வாகன சகம் 1240 வருஷத்தியது பாலகொல்லு கிராமத்தில் காணப்படுகிறது. ஸ்ரீ ராமேஸ்வரஸ்வாமிக்கு அநேக பூமி களைக்கொடுத்து தானசாசனம் எழுதிவைத்துள்ளார். சக வர்ஷம் 1099–1218-க்கு மத்தியில் கோன கணபதி தேவுண் டென்ற ராஜா காணப்படுகிருன். இவர் சாளுக்ய ராஜா, நிடதப்போலி மஹாசக்கரவர்த்தியினுடைய குமாரி உதய மஹாதேவியை விவாகம் செய்து கொண்டு சாலிவாகன சகம் 1218-ஷு சாசனமொன்றை க்ஷீரராமேஸ்வராலய (பால கொல்லு) த்தில் காணப்படுகின்றன. இந்த அம்மையார் 10 புட்ல பூமியைக் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றன. இவரால் சாலிவாகன சகம் 1228 வருஷத்தில் தன் தாய் தந்தையர் புண்ணியத்திற்காக 3 புட்ல பூமியை அதே தேவஸ்தானத்திற்கு கொடுத்திருக்கின்ருர். பின்னர் இந்த வம்சத்தில் கோனபூம வல்லபராஜு சாலிவாகன சகம் 1240 வருஷத்திய சாசனம் அந்த ஆலயத்திலிருக்கின்றன. இவர் குமாரர் ராமநாத தேவன் பூதான சாசனம் ஒன்று சக ஷு 1240-ல் தண்ணீர் பந்தல் கைங்கரியத்திற்காக 2 புட்ல பூமியைக் கொடுத்துள்ளதாகவும் காணப்படுகின்றன.

சிங்கராஜு நாகபோயன் என்றவன் சாலிவாகன சகம் 1286-வருஷத்தில் கோனபீம வல்லப ராஜு தர்மார்த்தமாக தானங்கொடுத்து ஒரு சாசனம் எழுதி வைத்துள்ளார்.

நாகபோயபீம வல்லப ராஜனுடைய அநுமதியினல் 2 புட்ல பூமிக்காக வேண்டி 12 கத்யாணமுலு தானம் கொடுத்தனன். கோனபீம வல்லப ராஜனுக்கு கோன கணபதிராஜன் என்ற குமாரன் உண்டு. இவர் பார்யையினுடைய பெயர் இலகுமாம்ப. இவர் தாலூர் சாசனம் 1197-ல் எழுதப் பட்ட சாசனம் ஸ்ரீ ராமேஸ்பர தேவாலயத்தில் உள்ளன.

பாஞ்ச்சதார்ல கோனராஜுலு

40) கோன வம்சத்தாரில் சாலிவாகன சகம் 1200ஆம் காலத்தில் ஒரு கோனே ராஜு சோடராஜன் என்றவர் வட நாட்டிற்குப் போய் பாஞ்ச்சதார்ல பிராந்தியத்தில் காங்க ராஜாக்களிடத்தில் பிரதிநிதியாக இருந்து வேலை பார்த்து வந்ததாக திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. பாஞ்ச தார்ல ஸ்தலத்தில் இந்த வம்சத்தில் மூன்றுவது சோட ராஜன் சாலிவாகன சகம் 1325 வருஷத்தில் எழுதிய தான சாசனப்படி முதல் கோன சோட ராஜனுக்கு மாஹிஸ்பதி த்விபபிருதாங்கருத்ர கண்டவெண்ட, மன்மயகூபாலி, ம்ருகவெண்டகாராதி முதலான பிருதுகளிருந்ததாக தெரிகின்றன. அதனல் அவர் மிக்க பிரஸித்தி பெற்றுள்ளார் என்பது தெளிவு. இவருடைய மனைவியின் பெயர் மல்லாம்ப என்று இந்த சாசனத்தில் எழுதி இருக்கின்றன.

41) கோன உபேந்த்ருடு, இவருடைய குமாரன் முதல் உபேந்த்ரன் காங்க ராஜாவுக்குப் பிரதிநிதியாக இருந்தார். இவருடைய மனைவி பிம்பாம்பிகாவுக்கு 2-வது சோடராஜன் புத்திரனகப் பிறந்தனன்.

42) கோனரெண்டவ சோடராஜு, இவருடைய பார்யை அத்யமாம்ப, மகாவீரராகிய இவர் காலத்தில் டில்லி துருஷ்கப்ரபு களிங்க நாட்டின் மீது படையெடுத்து நடத்திய யுத்தத்தில் இவர் தன்னுடைய பராக்ரமத்தைக் காட்டி துருஷ்கர்களை விரட்டியோடச் செய்து, 22 யானை களையும் கைப்பற்றினர். அந்த யானைகளுடன் வெற்றிமுரசு முழங்க தன் ராஜாவாகிய நுத்கள மன்னரிடம் சேர்ப்பித்து

கவுரவம் பெற்ருர். இந்த டில்லி ப்ரபுவாகிய மஹமத் பின் துக்ல சேனதிபதி இந்த மகாவீரப்ரதாபராகிய பிரதிநிதிக்கு பீமராஜன் என்ற குமாரன் ஜெனித்தான். இவர் லக்காம்பையை விவாகஞ்செய்து இவள் திருவயிற்றில் 3-வது சோட ராஜா பிறந்தார்.

43) கோன 3-வது சோடராஜாவின் ஆட்சி காலத்தில் மத தர்மங்களையும், நீதியையும், சாஸ்தர அபிவிருத்தியையும் செய்து வந்தனர். சத்துரு ஜெயம் பெற்றும், சாலிவாகன சகம் 1325-ஷு பாஞ்சதார்ல தர்மலிங்கேஸ்வராலய கோபுரத்தை நிர்மாணித்தும், தென்னந் தோப்பு வைத்து சாசனம் செய்துள்ளனர். இந்த வம்சத்தினர் எல்லோரும் சாளுக்கிய சம்மந்தம் பெற்றவரேயாவார். இவர்கள் எலமஞ்சிலி ராஜாக்களைப் போல, காங்க ராஜாக்களுக்கும், கஜபதிகளுக்கும் பிரதிநிதிகளாயிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வந்து 16-வது சகாப்தம் அந்த ராஜ்யம் துருஷ்கர் வசமாயின. பின்னர் ஆந்தர தேசத்திற்கு வந்து வாசம் செய்து கொண்டதாகவும், இந்த கோன குலத்தவர் இன்றைக்கும் கம்மவாரில், எலமவாரில், குடியானவர்களிலும் காணப்படுகின்றனர். துர்ஜய குலத்தவரும் ஆகிய கம்மவாரும் இவர்களும் ஹைஹய வம்சத்திலிருந்து தோன்றியவரென்று சரித்திரச் சான்று.

44) சாளுக்கியர்களில் மற்றும் சிலருடைய வரலாறு சாலிவாகன சகம் 1098-1099-ஷு சில பாகங்களை ஆண்டு வந்த மல்லபதேவ சக்கரவரத்தி ராஜநாராயண தேவாலயத்திற்கு சில பூமிகளைக் கொடுத்துள்ளார். சாலிவாகன சகம் 1098-ஷு சாசனத்தில் இவருடைய 3-வது ஆட்சி காலம் என்று எழுதப்பட்டுள்ளன. பின்னர் சக வருஷம் 1145 காலம் உதய சந்தர தேவ சக்கரவர்த்தியார் பட்டத்திற்கு வந்து ஆண்டதாகவும், ராஜநாராயண தேவாலயத்திற்கு இவர் பேரால் தேவஸ்த்தானீகர் எழுதி வைத்த சாசனம் இருக்கின்றன. நிடதபோலு, கொல்லிபாக புர அதிபதிகளாகிய மஹாதேவ ராஜாவினுடைய பார்யை லக்காம்பிகையின் கர்ப்பத்திற் பிறந்த இந்து சேகரன் என்றவர் பட்டத்திற்கு வந்து, இவருடைய பார்யை உதயமஹாதேவி,

இவருடைய ஜேஷ்ட குமாரன், காகமருத்ரம தேவியென்ற சக்கரவர்த்தினிக்கு பர்த்தாவானார். துர்ஜய, சாளுக்கிய வம்சங்களுக்கு மூலாதாரம் இந்த வம்சமே. இந்து சேகர னுடைய சாசனம் சாலிவாகன சகம் 1222 வருஷத்தில் பாலகொல்லு க்ஷீரா ராமேஸ்வராலயத்தில் உள்ளன. இவருடைய ஆட்சியில் ஷி தேவாலயத்திற்கு 3 புட்ல 960 வள்ளம் பூமியை தானம் செய்துள்ளார். இவருடைய குமாரன் வீரபத்தர ராஜு கொல்லிபாக ப்ரதேசத்திற்கு அதிபதியாக இருந்தார். இந்துசேகரனுடைய குமாரி அன்னெமாம்ப என்ற பெண்மணியை கோன ராஜபநேணி குமாரனாகிய பீமராஜு விவாகம் செய்துகொண்டார் என்பது சாசனக் குறிப்பு.

45) நிடதபோலு மஹாதேவசக்கரவர்த்தி நிரவர்த் தியபுறத்திற்கு அதிபதியாகவிருந்து, இவரே ருத்ரம்ம தேவி யார் வளர்ப்புப் புத்திரியாகிய மும்முடாம்பயென்ற பெண் மணியை விவாகஞ் செய்துகொண்டனர். இவர் நிடத போலி கிரஹ நாமத்தவரென்றும், இவர் குமாரத்தி பிநயு நய மாதேவியார் எழுதி வைத்த சாசனம் கூறுகின்றன பின உதய மாதேவியாரின் குமாரன் 2-வது பிரதாப ருத்ரன். இவர் மகாதேவ சக்ரவர்த்தியாவார் இவருடைய குமாரத்தி யாகிய பின உதயமாதேவியைக் கோன கணபதி தேவர் விவாகம் செய்துகொண்டதாக முன்னமே கூறியுள்ளோம். சாலிவாகன சகம் 1238-ஷு கம்ம நாட்டில் ஒரு சாளுக்கிய பாலனம் காணப்படுகின்றன. மாண்டவ்ய கோத்ரவாசியும், சாளுக்கிய குலத்தவருமாகிய குமுதவர்தனர் என்ற ராஜா சாசனம் பெத்தசெருகூர் கிராமத்தில் காணப்படுகின்றன. அதனுல் அவர் கநுகுர்தி, யிநுகுர்தி, கொண்டபாட்டூறு, உண்ட்ராலபாலெம் கிராமங்களை தானங்கொடுத்துள்ளனர் என்பதும், ஸ்ரீ கூர்ம பிராந்தம் முதலான இடங்களில் ஒரு சாளுக்கிய வம்சாவழியினர் பரிபாலனஞ் செய்ததாகக் காணப்படுகின்றன. சாலிவாகன சகம் 1231 வருஷம் ஸ்ரீ கூர்மநாதனுக்கு விஸ்வநாத தேவ ஜிய்யன என்ற சாளுக்கிய ராஜா, நிவேதன காரியங்களுக்காக வேண்டி அநேக பூமிகளைத் தானம் செய்துள்ளார். இவருடைய தந்தையாகிய புருஷோத்தம தேவ ஜீயன என்பவர் ஆவார். இந்த வம்சாவழியின் விபரம் இதற்குமேல் காணப்படவில்லை

யென்று சரித்திரக்காரர் கூறுகின்றூர். கொப்பேஸ்வர பிராந்தியத்தில் சாளுக்கிய சக்கரவர்த்தி அரசாண்டதாக சாலிவாகன சகம் 1239-ஞ ராஜநாராயண சக்கரவர்த்தியார் கொப்பேஸ்வரஸ்வாமிக்கு சனி வார மண்டபம், பூஜாதி காரியங்களுக்காக வேண்டி சில பூமிகளைத் தானசாசனம் செய்து வைத்துள்ளார். இவருடைய தந்தையார் உபேந்திர சக்கரவர்த்தி யென்பவராவார். இவருடைய சாசனம் சாலிவாகன சகம் 1181-ஞ க்ஷீரா ராமேஸ்வராலயத்தி யிலுள்ளன. சாலிவாகன 1518-ஞ ஸ்ரீ சாதோடாபெஹாராமஹாபாத்ரனுடைய குமாரர் ஸ்ரீ சங்கர அரிச்சந்திர மஹாராஜா என்றவருடையவும், இவர் தந்தையின் பிருதுகளைப்பற்றியும், இவர்கள் கலிங்க தேசத்து ராஜப்பிரதிநிதிகளென்றும், இம்மஹாராஜா பெருமாள் நகரத்தில் சாலிவாகன சகம் 1518–வருஷம் சந்நதி பிரதிஷ்டை செய்ததாக சாசனங் காணப்படுகின்றன. இவர்கள் சக்கரவர்த்தி, பிரதானி முதலான பட்டங்களையெல்லாம் துறந்து கடைசியில் இவர்களுடைய ராஜ்யம் காகதீயர் வசமாகிவிட்டன. இவர்களும் சாமான்ய குடும்பத்தினராயினர்.

46) காகதீய போல ராஜுலு, சாளுக்கிய ராஜ்யம் சீணதிசை யடைய, துர்ஜயகுலத்தோர் ஏகசிலா நகரத்தில் விருத்தி யடையவும், இக்குலத்தோர் இன்றைக்கும் கம்ம, வெலம, க்ஷத்ரிய என்ற பிரிவுகளாக உள்ளவர்களுக்கு மூல புருஷராயிருந்து 14-வது சகாப்த மத்யம் வரை இவர்கள் கலந்து வந்தமையால் இந்த வம்சத்தினர் எல்லோரையும் பற்றிச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அநுமகொண்ட ராஜதானியாகிய கொரவி தேசத்தில் சுமார் 11-வது சகாப்த ஆரம்பத்திலிருந்து பரிபாலனம் செய்தவர் முதல் பேதராஜு. இந்த ப்ரதேசம் ஆந்தர நாட்டில் உள்ளது.

47) பேத ராஜு, விரியால சிகப்பு நரபாலனுடைய காமமசாணியின் கர்ப்பத்திற் றேன்றி, காகதீய சக்கரவர்த்திக்கு தத்துபுத்ரனுக ஏற்பட்ட விஷயம் கூடூர் சாசனத்தில் காணப்படுகின்றன. தெலிங்கானு சாசனம் 97-ல் பத்தியம் கூறுகின்றன. இந்த வம்சத்தினர் வெலமவாரில் சேர்ந்திருப்பதால், கம்ம, வெலமவார் ஒரே ஜாதியென்றே ஏற்படு

கின்றன. ஆதலால் துர்ஜய குலத்தவராகிய இந்த பேத ராஜே மூலபுருஷன் என்பது காரணம். இதன் விஷயம் வேறு கிடைக்கவில்லையென்று கதாநாயகர் சொல்லுகின்றார்.

48) ப்ரோலராஜு, இவர் பேதராஜனுடைய குமாரன் கிறிஸ்து சகம் 1050-80 வருஷ மத்தியில் அநுமகொண்ட ராஜதானியைப் பரிபாலித்து வந்தார். இவர் கேசரி தடாகம் ஒன்றை ஏற்படுத்தியதாக, கிறிஸ்து சகம் 1244-வருஷம் மோட்டுபல்லி சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் ஜைன மதத்தினர் என்று சரித்திரக்காரர்கள் அபிப்ராயப் படுகின்றனர். இவருடைய சேனாதிபதியாகிய ரேசெர்ல பம்மி ரெட்டியார், காஞ்சீபுர சோழ ராஜா மீது படை திரட்டிச் சென்று யுத்தம் செய்து நகர்கவாடத்தை நாசம் செய்து ஜெயம் பெற்றதாக பில்லலமர்ரி பாலம்பேட்டை சாசனம் கூறுகின்றன. சாளுக்கிய ராஜனுக்கு இவர் சகாய மாக இருக்கலாம் என்று சரித்திரக்காரர் அபிப்ராயப்படு கின்றனர். இவருக்கு 2-வது பேத ராஜா என்ற புத்திரன் பிறந்தான்.

49) திரிபுவனமல்லபேதராஜு, (2) போலராஜனுக்குப் பின்னர் இவர் கிறிஸ்து சகம் 1080-வருஷத்தில் ராஜ்யாதி காரியமாக வந்து கிறிஸ்து சகம் 1115-வருஷம் வரை ராஜ்ய பரிபாலனம் செய்து, மேற்கு சாளுக்கிய சக்ரவர்த்தியும், த்ரிபுவன மல்ல பிருதாங்கித 6-வது விக்கிரமாதித்யனுக்குப் பிரதிநிதியாகி, அவருடைய பிருதையும் பெற்றுள்ளார். இவர் காலத்தில் ஜைன மதம் சீணிக்க, சைவ மதம் விருத்தி யாகி வர, இவருக்கு விக்ரமசக்ரீ, சலமார்த்திகண்ட என்ற பிருதுகளும் பெற்றனர். சோழ, மாளவ ராஜாக்களுக்கு இவர் சிம்மம் என்று பட்டம் பெற்றனர். இவர் அநும கொண்ட பிரதேசத்தில் ஒரு பூந்தோட்டம் நிர்மாணித்தும், சிவபுறம் என்ற தீர்த்த தடாகம் ஒன்றையும் ஏற்படுத்தி தன் பேரால் பேதேஸ்வராலயம் ஒன்றும், சிவாலயம் ஒன்று கட்டி பிரதிஷ்டை செய்து தன் தந்தையின் பெயரால் வருணப் பிரதிஷ்டை செய்தும் பிரசித்தி பெற்றனர். இவரிடம் வைஜனதண்டநாதன் என்ற பிரசித்தி பெற்ற மந்திரி சிகாமணி இருந்தார். அக்காலத்தில் அநுமகொண்ட ராஜ்யம்

சப்பிசாயிர மண்டலம் என்ற பெயர் பெற்றன. இவருக்கு 2-வது போல ராஜன் என்ற குமாரன் உண்டு.

50) இரண்டாவது போல ராஜா, 2-வது பேத ராஜனுக்குப் பின்னல் கிறிஸ்து சகம் 1115-வருஷம் இராஜ்யத்திற்கு வந்து 1158 வருஷம் வரை ஆண்டதாகவும், இவரும் தன் தந்தையைப் போலவே 6-வது விக்கிரமாதித்ய சாளுக்ய சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாகவே இருந்துள்ளார். இவரிடம் பேத நப்ரகட மந்திரியுமிருந்தார். இந்த மந்திரி ஒரு பெரிய குளத்தை நிர்மாணித்து கிறிஸ்து சகம் 1117-ல் அநேக பூமிகளையும் ஒதுக்கியுள்ளார். மேற்கு சாளுக்கிய சக்கரவர்த்தியாகிய நைலப தேவனை ஒரு சமயம் பந்தீகானு விலடைத்தும், மறுபடியும் விடுதலை செய்துள்ளதாக அநும கொண்ட சாசனத்தில் காணப்படுகின்றன. அது முதல் இவர் சுதந்திர ராஜாவாக விளங்கினர். கோவிந்தராஜு என்றவர் இவருக்குப் பிரதிநிதியாக இருந்து கொண்டபல்லி சிமையைப் பரிபாலித்துவந்த அரசனை ஜெயித்து அந்நாட்டை உதயன் என்ற சோழ ராஜனுக்குக் கொடுத்தனன். தவிர மந்தரகூட ராஜாவுடன் போராடி அந்த ராஜனைப் பிடித்து சிகாபந்தனம் செய்து, மார்பில் வராஹ முத்திரையை வைத்துக்கொன்றனர் என்று ஆயிரங்கால் மண்டபக்கோயில் சாசனத்தில் காணப்படுகின்றன. பட்டிபொம்புச்சபுராதீசனாகிய ஜெகதேவர் ஒரு சமயம் யுத்தத்திற்கு வரவும், அவரையும் ஜெயித்து வந்தார். இவருக்கு ராமேஸ்வர தீக்ஷிதர் குருவாக இருந்தார். இவருடைய பார்யை முப்பம்ம தேவியும், ஐந்து புத்திரர்களும் உண்டு. ஜேஷ்ட குமாரன் ருத்ர தேவன், 2-வது குமாரன் மஹாதேவன். இவரிடத்தில் மல்லெ நாயகன் என்ற பிரதிநிதியும், ரேசெர்ல வம்சாதிபனாகிய காமசமூபதியும், கங்காதரன் என்றவர்கள் மந்திரிகளாகவும் இருந்தனர். இவர் காலத்தில் அநேக சிவாலயங்கள் கட்டப்பட்டன. மிக்க சிவ பக்தி உடையவர். பின்னர் இவர் வெலநாட்டு இரண்டாவது சோழ ராஜனுல் ஒரு யுத்தம் நடந்த சமயம் அதில் இறந்துவிட்டதாகக் காணப்படுகின்றன.

51) ருத்ரதேவுண்டு. இவர் இரண்டாவது போல ராஜனுடைய ஜேஷ்ட குமாரன். இவர் கிறிஸ்து சகம் 1158 வருஷம் முதல் 1196 வருஷம் வரை ராஜ்யாதிபதியாயிருந்து ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தியும், நல்ல பட்டம் பெற்றும், தொம்ம ராஜனை ஜெயித்து அநேக கிராமங்களை வசப்படுத்திக்கொண்டும், சோழ ராஜனுக்கு விரோதியாயிருந்து, வர்த்தமானபுராதிபனாகிற பீமசோழனுடன் போராடி அந்த அரசனை வனாந்திரத்திற்கு ஓடச்செய்து ஜெயம் பெற்று அந்நகரத்தை அக்கினிக்கு இரையாக்கியும் (ஆஞ்சநேயர் இலங்கையைத் தகித்த மாதிரி) அந்நகர மத்தியில் ஒரு தடாகத்தை நிர்மாணித்து கியாதி பெற்றனர். இவர் வித்யாபிமானிகளை நன்கு ஆதரித்து, நீதிசாரம் என்ற கிரந்தத்தை எழுதுவித்து பண்டிதசிரோன்மணி யென்று பிருதும் பெற்றனர். அநேக சிவாலயங்கள் கட்டியும், பிரதிஷ்டை செய்து மானியங்கள் கொடுத்துள்ளார். தவிர அநுமார் மலையில் பிரம்மதேவருக்கு ஒரு ஆலயங் கட்டி பிரதிஷ்டை செய்துள்ளார். தவிர ஆயிரக்கால் மண்டபமும் கட்டியுள்ளார். இக்கோவிலுக்கு அநேக பூமிகளையும், கிராமங்களையும் கொடுத்து சாசனம் செய்துவைத்துள்ளார். வாரங்கல் கோட்டை மதில் இக்காலத்தில் கட்டியதாகவும், இவர் ஆட்சியிலிருந்த ராஜ்யங்கள் கிழக்கே சமுத்ரம், தெற்கில் ஸ்ரீசைலம் வரையிலும், மேற்கில் கல்யாணபுரம் வரையிலும், வடக்கில் மால்யவந்த பருவதம் வரையிலும் பரந்திருந்தன. ஏகாதிபத்யவாதியுமான இந்துலூர் பெதமல்லன மந்திரியும், அதிகார மந்திரியாக இந்துலூர் சின்னமல்லன மந்திரியுமிருந்தனர்கள். இந்த மஹாராஜா சாலிவாஹன சகம் 1108-ஆம் ஸ்ரீ த்ராக்ஷாராம பீமேஸ்வரரை தரிசித்து அகண்ட தீபதானம் செய்துவைத்தனர். இவருடைய பார்யை அன்னம தேவியார். இவ்வம்மையாரும் டை கோவிலுக்கு அகண்ட தீபதானஞ் செய்துள்ளார். இவர் தேவகிரி யாதவ ராஜாக்களுடன் யுத்தஞ் செய்து மரணம் அடைந்திருக்கலாமென்று சரித்திரக்காரர்கள் அபிப்பிராயம். இவருக்குப் பின்னர் இவர் தம்பியாகிய மஹாதேவராஜா பட்டத்திற்கு வந்தார்.

52) மஹாதேவராஜு, கிறிஸ்து சகம் 1196 வருஷத்தில் பட்டம் ஏற்றுக்கொண்டதாகக் காணப்படுகின்றன. இவர் 1198-வ்ருஷம் வரை ராஜ்யத்தை ஆண்டார். இவருடைய பார்யை பய்யமாம்ப. இவருக்கு கணபதி தேவுண்டு என்ற குமாரனும், குந்தமாம்ப யென்ற குமார்த்தியும் இருந்தனர். இந்தப் பெண்மணியை நதவாடு சீமை ராஜாருத்ரனுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டன. சீதனமாகக் கொடுக்கப்பட்ட வேமுலதொண்ட கிராமத்தை பிராம்மணர்களுக்கு அக்ரஹாரமாக தானசாசனம் செய்து வைத்தனர் கிறிஸ்து சகம் 1220 வருஷத்தில்.

53) கணபதி தேவ சக்கரவர்த்தி, கிறிஸ்து சகம் 1198 வருஷத்தில் ராஜாவாக வந்து, வாரங்கல் பிரதேசத்தை நாலாபக்கத்திலும் விஸ்தாரப் படுத்தி, கம்ம நாடு, எலம நாடு, கொலனுபுரம் கலிங்கநாட்டு ராஜாக்களையெல்லாம் ஜெயித்து அவர்களை ராஜப் பிரதிநிதிகளாக நியமித்து ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்து கஞ்சம் ஜில்லா பொக்கரை வரை விஸ்தாரப்படுத்தியும் தென்பாகத்தில் கந்து கூடர் சீமை முலிகிநாடு, பொத்தபிநாடு, ரேநாடு, கண்டிகோட்டை காஞ்சிபுரம் வரையில் உள்ள பிரதேசங்களையும் சேர்த்துக் கொண்டு அங்குள்ள தெலுங்கு சோழர் முதலான அரசர்களை பிரதிநிதிகளாக நியமித்து வந்தார். இவருடைய பட்டபு ராணி சோமி தேவியார். இவர் வெல நாட்டில் நய்யவம்ச பின்ன சோழ ராஜகுமார்த்திகள். நாராம்பா, பேராம்ப என்ற பெண்மணிகளை விவாஹம் செய்துகொண்டு, அவர்களுடைய சகோதரனுகிய ஜாயபநாகனை கஜபதியாக நியமித்தார். இவர் மகாவீரப்ரதாபன் என்ற பட்டமும் பெற்ருர். இவரிடத்தில் இந்துலூர் சோமயாமாத்யன் என்றவரும் பெதகன்னண ராஜு என்றவர்கள் மந்திரிகளாகவும், சேனுதிபதிகளாகவும் இருந்தனர். ரேசெர்ல லருத்ர ரெட்டி, பேதி ரெட்டி, மல்லல ஹேமாத்ரி ரெட்டி, காடச மூபதி, சௌண்ட சேனுதிபதியென்றவரும் இருந்தனர். விஸ்வேஸ்வர சிவ தேசிகர் என்றவர் இவருக்கு குருவாகவும், பிரதான மந்திரியுமாக இருந்தார். இவர்களுடைய சகாயத்தின் பேரிலேயே கணபதி தேவுண்டு அநேக தேசங்களை

ஜெயிக்க சவுகரியமாகியிருந்தன. இவர்களிற் சிலர் சக்கரவர்த்தியினுடைய உத்திரவின்பேரில் அநேக தேவாலயங்கள், தடாகங்கள் முதலான காரியங்களை நிறைவேற்றி வந்தனர். காடசமூபதி சாலிவாகன சகம் 1162-வருஷத்தில் கொண்டபர்த்தி கிராமத்தில் திரிமூர்த்திகளுக்கு தேவாலயங்களைக் கட்டியும் அவற்றிற்கு வேண்டியவைகளுக்கு பெல்லம்செருவு என்ற கிராமத்தை தானசாசனம் செய்தும், சௌண்டசேனுதிபதி அங்கொரு தடாகத்தை நிர்மாணித்தும், சௌண்டேஸ்வராலயம் ஒன்று கட்டியும், அதற்கு அனதூர்தியென்ற கிராமத்தை தானமாகக் கொடுத்தும், காயஸ்தவம்சத்தவராகிய கங்கையசாகிணி யென்றவருக்கு மஹாராஜா 72 விதமான அதிகாரத்தைக் கொடுத்தும், இவர் சக்கரவர்த்திற்குப் பிரதிநிதியாக இருந்து, ஹனுகல்லு, பிராந்தியத்தை ஆண்டு வரும்படி நியமித்தார். கடப்பை, கந்தனூலு, அநந்தபுரம், பல்லாரி, நெல்லூரு, குண்டூரு முதலான பிரதேசங்களுக்கும் சர்வாதிகாரியாக இருந்தார். சாமந்தபோஜன் என்ற சேனுதிபதியும், கங்கய சாஹிணி என்றவர் கூடி அநேக தேவாலயங்களுக்கும், பிராம்மணர்களுக்கும் அக்ரஹாரங்களும், கிராமங்களும் தானசாசனமாக கொடுத்தும், காஞ்சீபுரத்தில் ஏகாம்பரஸ்வாமிக்கு காலத்தூர் கிராமத்தையும் சாமந்தபோஜன் என்றவர் கொடுத்தார் இவர் அங்கு ராஜப்பிரதிநிதியாக இருந்தார். இம்மறை ராஜனுடைய காலத்தில் ஜைன, புத்த மதத்தினரை இம்சித்து வந்ததாகவும், ஜைனர்களாயிருந்தவர்கள் தட்டார் முதல் கொண்டு கிராம கர்ணங்களையும் விலக்கிவிட்டு வைதீக பிராம்ஹணர்களுக்கே வேண்டிய சாதனங்களைக் கொடுத்ததாக வாதப்பிரதிவாதங்கள் உண்டு. ஆயினும் இவ்விஷயங்கள் தமிழர்களால் நடத்தப்பட்டதாக கொண்ட வீடு கவிகளில் எழுதப்பட்டுள்ளன. பிராம்மணர்களுக்காக ஜைனர்கள் வசமிருந்த 36 கிராமங்களை அபகரித்துக் கொடுத்ததாகவும், யாகசிலா நகரத்திற்கு துர்ஜயகுல மேசயநாயகன் என்ற பிரசித்தி பெற்ற புருஷன் நகரபாலகனுகவும், தலைவனுகவும் நியமிக்கப்பட்டனன்.

இம்மகாராஜனுடைய காலத்தில் ஆந்தர தேசத்தில் எல்லா பாகங்களும் ஏகசக்ராதிபத்யம் பெற்றன. இதற்காக வேண்டி அநேக திக்விஜய யாத்திரைகள் செய்து கடைசியில் ஜெயம் பெற்றனர். இவர் காலத்தில் மோடுபல்லிரேவு பட்டணமாக இருந்து வெளிநாட்டு வியாபாரங்கள் விசேஷமாக நடந்துவந்தன. அநேக வரி வட்டங்களையும் குறைத்து வியாபாரிகளுக்கு வேண்டிய சவுகரியங்களையும் செய்து வைத்துள்ளார். சக்கரவர்த்தியார் ராஜமகேந்தரவரத்தில் தன் தந்தையின் பெயரால் மஹாதேவேஸ்வராலயம் ஒன்றை நிர்மாணித்து அதற்கு வேண்டிய சகல காரியங்களுக்கு அநேக கிராம பூமிகளையும் கொடுத்து தான சாசனம் செய்து வைத்துள்ளார்.

கம்ம நாட்டில் தேமட்த கிராமத்தில் கணபாபுரம் என்று பேர் வைத்து அதை ராத்ரேய கோத்ரவாசியாகிய புலகன்டி குப்புசாமியின் பௌத்திரனாகிய குமாரஸ்வாமி பட்டர் என்ற நாராயணபட்டவாஜி பேயியாஜுலர்களுக்கு அக்ரஹாரமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இவர் தன் குருவாகிய விஸ்வேஸ்வரருக்கு மந்தரமென்ற கிராமத்தைத் தானமாகக் கொடுக்க, அவர் அங்கொரு மடத்தைக் கட்டியும், விஸ்வேஸ்வராலயம் என்ற சத்திரம் ஒன்று கட்டி அங்கு வித்யாத்ரிகளுக்கு வேண்டிய சவுகரியங்களும், யோகிகளுக்கு வேண்டிய சவுகரியங்களும், போஜனுதிகளுக்கு வேண்டிய சாதனங்களையும் ஏற்படுத்தியுள்ளார்.

இம்மகாராஜனிடத்தில் வல்லுட்ள கோத்ரவாசியாகிய போலராஜு தந்தர பாலகனயிருந்தார். ஒபிலிசித்தி யென்ற பொத்தபி சோழராஜனையும், கன்னர தேவசோழனையும் பிரதிநிதிகளாக வைத்துக்கொண்டும், இன்னும் சிலர் இவரிடத்தில் பாஸ்கர மந்திரி, சிவிரி அன்னய கோவிந்த நாயகுண்டு, தாமநாமாத்யுண்டு, பய்யனநாயகுண்டு, ஜகதாலமும்மடி, மல்லிதேவுண்டு, சித்ததேவுண்டு, மாவுல மஞ்சிராஜு, தேவராஜு முதலானவர்கள் சேனுதிபதிகளாகவும், மந்திரிகளாகவும் இருந்தனர். இவருக்கு ருத்ரமாதவி, கணபாம்ப என்ற பெண் புத்திரிகள் தோன்றினர். இவருக்கு

ஆண் சந்ததியில்லாததால் ஜேஷ்ட குமார்த்தியை தனக்குப் பின்னர் ராஜ்யாதிபதியாக நியமனம் செய்துவைத்தும், இரண்டாவது பெண் புத்திரியை தரணிகோட்டை ராஜா வாகிய பேதராஜாவுக்கு விவாஹம் செய்து கொடுத்தனர். கிறிஸ்து சகம் 1261-வருஷம் வரை இராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார்.

54) ருத்ரம்மதேவி சக்கரவர்த்தினி, வாரங்கல்ராஜ்யத்தை கிறிஸ்து சகம் 1261–1295 வருஷம் வரை ஆண்டு வந்தனள். இவருடைய பர்த்தா சாளுக்யராஜா நிடதவோலு பாலகனாகிய வீரபத்தரனவார். இவ்வம்மையார் ருத்ரமாதேவன் என்ற பெயர் வைத்துக்கொண்டு ஆண்டு வந்ததாகவும், எதிரி ராஜாக்கள் படையெடுத்து வராமல் காப்பதற்காக வேண்டி ஆண்வேடத்துடன் அரசாண்டு வந்ததாகவும், ஒரு பெண்ணை யும் விவாகம் செய்து கொண்டதாக விளம்பரப்படுத்தியும், ராஜ தந்திரத்துடன் நாட்டைக்காத்து வந்தனள் என்றும், ராஜ்யம் ஸ்த்திரம் ஆன பின்னர், அந்தப் பெண்ணை தன் கொழுந்தனுருக்கு பாணிக்ரஹணம் செய்து வைத்துவிட்டதாகக் காணப்படுகின்றன. இவருடைய ஆட்சியிலிருந்த ராஜப்பிரதிநிதிகள் சிலர் சுதந்திரம் பெறவேண்டி அநேக தந்திரங்கள் செய்தும், ஒன்றும் பலிக்காமல் போகவே, தன்னுடைய சேனதிபதிகளாகிய அந்நயதேவர், ருத்ரதேவர், குண்டதண்டாதிநாதன், பிரசாதாதித்ய நாயுடு, நாமா நாயுடு முதலானோர். இவர்களுடைய பராக்ரமத்தினுல் ராஜாங்கத்திற்கு நல்ல கியாதியும் கிடைத்தன. தன்னுடைய ராஜ்யத்தை ஸிம்மாசலம் வரை விஸ்தாரப் படுத்தினள். தேவகிரி பாலகனுகிய யாதவராஜா மஹாதேவன் 3 லக்ஷம் சைனியத்துடன் யுத்த சன்னத்தனுக வந்து போர் புரிய, அவனை இம்மஹாராணியார் மடக்கி, ஒரு கோடி தனம் அபராதமாகப் பெற்றுக்கொண்டு, அவனை மன்னித்துவிட்டனள். இவ்வம்மையார் தன் கோட்டையை மிக்க பாதுகாப்புடன் காத்தும், ராஜாங்கத்தை யுக்தமாக நடத்தி வந்தனள். தவிர மண் கோட்டை, கல் கோட்டை, செங்கல் கோட்டை பிரகாரங்களாக நிர்மாணித்து எதிரிகள் சாமான்யமாக உள்ளே பிரவேசிக்க முடியாதபடி பந்தோ-

பஸ்துடன் காத்து வந்தனள். கிறிஸ்து சகம் 1291-வருஷம் வெனீஸ் தேசவாசியாகிய மார்கோபோலோ என்ற மகான் நம் நாட்டிற்கு வந்து இந்த மஹாராணியார் ஆட்சி விஷயங்களை அறிந்து பிரமாதமாகக் கொண்டாடினர். இவ்வம்மையார் பானுகல்லு பிராந்தியங்களுக்கு ஜன்னிகதேவ சாஹிணி என்றவரை கம்ம நாடு, முலிகி நாடு, பொத்தபி நாடு, கண்டி கோட்டை முதலிய பிராந்தியங்களுக்கு திரிபுராந்த தேவன் என்றவரையும், அம்பைய தேவனை வர்த்தமானபுற பிராந்தியங்களுக்கு, கோன கன்னு ரெட்டி சாஹிணியை தன் பிரதிநிதி பாலகராக நியமித்தார். இந்த சேனைத் தலைவர்கள் சக்கரவர்த்தியின் உத்திரவுப்படி அநேக தர்ம காரியங்களைச் செய்து எஜமானிக்கு அநேக கீர்த்திகளைச் சம்பாரித்துக் கொடுத்தனர். ஊட்டுகூர் கிராமத்தில் ஒரு பிரமாதமான தடாகத்தையும், அத்திரேல கிராமத்தில் ஒரு சத்திரமும், தேவாலயங்களுக்கு மான்யங்களும், காரெம்பூடி தேவாலயத்திற்கு கோபுரமும், பிரகாரமும், புரந்தலூர் கிராமத்தில் பிராம்ஹண அக்ரஹாரமும் நிர்மாணித்தும், வர்த்தமானபுற கிராமத்தில் சிவாலயம், தடாகம் முதலானவற்றை நிர்மாணித்து சிறப்பாக நடத்தி வந்தனர். தவிர வெலம வீரர் 74 பேர்களுக்கு அதிகாரம் கொடுத்து அவர்களின் மூலமாக எல்லா காரியங்களும் யுக்தமாய் நடத்தி வர ஏற்பாடு செய்து வைத்துள்ளனர். இந்த அம்மையாருக்கு ருய்யாம்ப என்ற ஒரே புத்திரி இருந்தாள். இப்பெண் மணியை இந்துலூர் ஆன்னய தேவுண்டு என்ற பிராம்ஹண சேனுதிபனுக்கு விவாகம் செய்து கொடுத்துள்ளனர். மல்யாலகுண்டய என்றவர் சங்கிதபுராதிபதியாகப் பெயர் பெற்றனர். இவர் அநேக குளங்கள், தடாகங்கள் முதலானவற்றை உண்டாக்கி விவசாயத்திற்கு வேண்டிய வசதிகளையும் செய்து வைத்தனர். பிராம்ஹண சமூகத்தாருக்கு அநேக பூமிகளையுங் கொடுத்து தான சாசனம் செய்துள்ளார். இவ்வம்மையார் ஆட்சியிலிருந்த வங்க நாட்டுப்பிரதிநிதிகள் துர்ஜய குலத்து வலபுல கோத்ர எக்கி நாயுடு. ருத்ர நாயுடு, பினருத்ர நாயுடு, போதி நாயுடு, வல்லய நாயுடு என்றவர்கள் பிரக்யாதி பெற்றவர்கள் இருந்தார்கள்.

இம்மஹாராணியார் 35 வருஷ காலம் ராஜ்ய பரிபாலனம் செய்து கடைசியில் தத்தபுத்திரனாகிய சாளுக்ய மகாதேவ சக்கரவர்த்தி குமாரர் வீரப்ரதாப ஸ்ரீ ருத்ரதேவனுக்கு இராஜ்யாபிஷேகம் செய்துவிட்டு பரலோக பதவியடைந்தனள். இம்மஹாராணியாருடைய வம்சாவளியினரே மந்த பட்டியார். இவ்வம்மையார் விஸ்வேஸ்வர சிவகுருவாகியவருக்கு வெலகபூடி கிராமத்தை தானமாகக் கொடுக்க அவர் அங்கே அநேக சத்திரங்கள், அன்னசாலை, தண்ணீர்பந்தல், பிரஸவசாலை, வைத்தியசாலை முதலானவற்றை யுக்தமாக நடந்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தும், அன்னசத்திரத்தில் ஜாதிபேதமில்லாது எல்லோருக்கும் சாப்பாடு கொடுத்து வருவதற்கும் ஏற்பாடு செய்துள்ளனர். இந்த கிராமம் ஆதியில் கணபதிதேவ சக்கரவர்த்தியார் தந்த கிராமத்தைச் சேர்ந்தாற்போல் 270 புட்ல 86400 வள்ள பூமியை இந்த தர்ம ஸ்தாபனத்திற்காக சாசனம் செய்யப்பட்டுள்ளன.

55) வீரப்ரதாபருத்ர தேவசக்கரவர்த்தி, இவரே 2-வது ப்ரதாபருத்ர சக்கரவர்த்தி என்பவர். வாரங்கல் ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்த காகதீய ராஜாக்களுக்கு இவர் வாரிசு. இவர் சாளுக்கிய வம்ச நிடதபோலி ராஜாவுக்கு புத்திரரானதால் சாளுக்கிய வம்சாதிபன் என்றே ஏற்படுகின்றன. காகதீய ராஜாங்கம் கலந்துவிட்டபடியால் சேர்த்துச் சொல்லவேண்டி ஏற்பட்டது, இந்த வம்சாவழியினர் நிடதபோலுக்குஹநாமஸ்தர் கம்மவாரில் அநேக குடும்பங்களும், ஆந்தர க்ஷத்திரியர்களிலும் இருக்கின்றனர். மஹமதியர்கள் பல தடவைகளில் படையெடுத்து வந்தும் தோல்வியே அடைந்தனர். இவரிடத்தில் 9 இலக்ஷம் சைனியங்களும், அநேக சேனாதிபதிகளும் இருந்தனர். வெலமவார் 77 குலகோத்ரங்களைச் சேர்ந்தவர்கள் குலத்திற்கு ஒருவராக ராஜாங்கத்தில் பணி புரிய வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டதில் இதே பிரகாரமாக கோட்டைக்கு காவலராக பணியாற்றி வந்தனர்கள்.

இம்மகாராஜாவிடம் வாரங்கல் நகர் மந்திரியாக சாகி கன்னம நாயுடு, கஜ சைன்யாதிபதியாக பெண்டபூடி அன்ன மாத்யுண்டு என்றவரும், குதிரைப் படைத் தலைவனாக சாஹிணி மாருண்டு என்றவரும், தவிர பல்நாட்டுப் பிரதேசத்தில் தேவர நாயுடு, வெலநாட்டில் சோமய, வெங்கய்ய சாஹிணி என்றவர்களும் கம்ம நாட்டில் காமய பொப்பனிங்காரும், பாகநாட்டில் போதயசாஹிணிங்காரும் முதலான பிரசித்தி பெற்ற பிரதிநிதிகளுமிருந்து நல்ல முறையில் ராஜ்யபரிபாலனம் செய்து வந்தனர். வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முதலியன ஒழுங்காக நடந்து வந்தன. இவர் ஆட்சியில் நைஜாம் ராஜ்யத்தில் 10-ல் 9 பங்கும், உத்தரப்பிரதேசத்தில் ஸிம்மாசலம் வரையிலும், கிழக்கில் கந்தவோலு, பல்லாரி ஜில்லா மேற்குப் பாகம் வரையிலும் வியாபித்திருந்தது.

இவர் வித்யார்த்திகளை நன்கு ஆதரித்து வந்தமையால் இவருக்கு வித்வத்கோஷ்டி விஹாரன் என்ற பிருதும் கிடைத்தன. இவருடைய ஆஸ்தான பண்டிதர்களில் வித்யாநாத கவி என்றவரும் இருந்தார். இந்த மஹாராஜனுக்கு சமான கவித்வம் பெற்றவர். ருத்ரபட்ட திரிபுராந்த கவி, நரசிம்ஹ கவி, விஸ்வநாதன், அகஸ்தியன், கங்காதர கவி என்ற மகாபண்டிதர்களிருந்தனர். இவர்கள் ஆந்தர கிரந்தங்களையே முக்கியமாக எழுதி வந்தனர். சமஸ்கிருத கிரந்தங்களையும் எழுதி வந்துள்ளனர்.

இவருடைய ஆட்சி காலத்தில் அநேக தேவாலயங்களைக் கட்டியதாகவும் காணப்படுகின்றன. இவர் ராஜ்யாதிபதியாக வந்தது முதல் அநேக யுத்தங்கள் நடந்துவந்துள்ளதால் அடிக்கடி சில சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. முலிகி நாடு, கண்டிகோட்டையைப் பரிபாலித்து வந்த திரிபுராந்த காம்ப இவரை திரஸ்கரித்து சுயராஜ்யம் பெற ஏற்பாடு செய்து வந்ததை அறிந்து, சில படை வீரர்களை அனுப்பி அவர்களை அடக்கி தன்னுடைய ஆட்சியை நிலைநாட்டினர். கிறிஸ்து சகம் 1303-வருஷம் மஹமதியர்கள் படையெடுத்து வந்தும், டில்லி சாம்ராஜ்யாதிபதியாகிய அல்லாவுத்தீன் என்றவர் இந்நாட்டின் மீது கண் வைத்துக்கொண்டிருந்தமையாலும்,

மாலிக்காபர் என்ற சேனாதிபதியை 10 ஆயிரம் குதிரைப் படை, 40 ஆயிரம் காலாட்படையுடன் வந்து வாரங்கல் கோட்டையை முற்றுகையிட்டும் கொடூரமான யுத்தம் நடத்தினர். அப்பொழுது சேனாதிபதிகளாகிய கம்ம, வெலம வீரர்கள் மகாவீரபராக்ரமத்துடன் போராடி மகமதியர்களை ஓடச்செய்து வெற்றி பெற்றனர். வென்னம நாயுடு என்ற வெலம சேனாதிபதி இருந்தார். கிறிஸ்து சகம் 1307 வருஷத்தில் மாலிக்காபர் மறுபடியும் யுத்த சந்நத்தனாக வந்து 30 ஆயிரம் குதிரைப் படையும், ஒரு லக்ஷம் கால் பலத்துடனும் வந்து முற்றுகையிட்டு போராடினர். கடைசியில் மகமதியர் தோற்று ஓடிப்போயினர். இதே சமயத்தில் பாண்டியர் படையெடுத்து வந்து காஞ்சிபுரத்திலிருந்த மன்மகண்டகோபால சேனாதிபதியைத் தோற்கடித்து ராஜ்-யத்தைக் கைப்பற்றினர். அப்பொழுது இவர் தன்னுடைய சேனாதிபதி முப்பிடி நாயுடு, சேனாதிபதியாகிய ரேசெர்ல நல்ல தாசா நாயுடு, யெர்ரதேசா நாயுடு இவர் சென்று எதிர்த்து ஜெயம் பெற்று, மறுபடியும் மன்மகண்ட கோபாலனை அங்கு ராஜப்பிரதிநிதியாக நிறுத்தினர். பொத்தபி நாடு கண்டி கோட்டைகளைப் பாலித்து வந்த பிரதிநிதிகள் எல்லோரும் கூடி சுதந்திரம் பெற ஏற்பாடு செய்து கொண்டிருந்ததை அறிந்து, இம்மஹாராஜா தன் குமாரன் ஜுட்டயலங்க கொங்கா ரெட்டியை அனுப்பி அவர்களை அடக்கி தன் குமாரனையே பிரதிநிதியாக நிறுத்தினார். கிறிஸ்து சகம் 1300 வருஷ காலம் மறுபடியும் மகமதியர் படையெடுத்து வந்து வாரங்கல் கோட்டையை 40 ஆயிரம் குதிரைப் படையும், லக்ஷம் கால்கள் பலமுங் கொண்டு தாக்க, ஜெயிக்க முடியாத நிலையில் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு, கப்பங் கட்டுவதற்கும் ஒத்துக்கொண்டனர். கிறிஸ்து சகம் 1322 வருஷம் டில்லியில் குஸ்ரூகான் துக்ளக் என்றவர் ராஜாவாக வந்தார். இவர் எப்படியாவது வாரங்கல் ராஜ்யத்தை தன் வசம் செய்யவேண்டுமென்று பிரயத்தனஞ் செய்து வந்தார். கிறிஸ்து சகம் 1323 வருஷம் தன் குமாரனாகிய அலூப்கான் வசம் அநேக சேனையை அனுப்பி ஆந்தர நாட்டை சுவாதீனம் செய்துவர உத்திரவிட அப்பொழுது வாரங்கல் கோட்டையின் பக்கம் பிரமாதமாக

யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் கம்ம, எலம வீரர்கள் மிக்க துணிவுடன் போராடினார்கள். அப்பொழுது ரெட்டியார் கூட்டத்தினர் லஞ்சம் பெற்றுக்கொண்டு மகமதியர்களுக்கு உடந்தையாகிவிட்டனர். மும்முரமாக நடந்த யுத்தத்தில் பிளவேற்பட்டு சமாளிக்க முடியாமற் போகவே, கோட்டை மகம்மதியர் வசமாயின. விசாலமான அந்தக் கோட்டை இன்றைக்கும் சிதிலமாகக் காண்கின்றன. அந்த யுத்தத்தில் பிரதாபருத்ரனை சிறை பிடித்துக்கொண்டு டில்லிக்குப் போகின்ற மார்க்கத்திலேயே அவர் காலகதி அடைந்துவிட்டார் என்று கூறப்படுகின்றன. இந்தப்பிரதாபருத்ரதேவர் மௌத்கல்ய க்ஷேத்திரத்தில் 11 தங்க கோபுரங்களைத் தானஞ் செய்துள்ளார். அநேக துலாபார தானஞ்களையும் செய்துள்ளார். இவருடைய மந்திரிகளில் ஒருவராகிய சாகி கன்னம நாயுடு மாரன கவியினிடம் மார்கண்டேய புராணம் எழுதும்படி சகல சவுகரியமும் செய்துள்ளார் இதன் விபரம் வாரங்கல் கோட்டையில் காணப்படுகின்றன. இவர் காலத்தில் பைரவார்சனம், ஏகவீரமஹாதேவி, மைலார தேவர் என்ற தெய்வங்களுக்கு பூஜை செய்து வந்ததாகவும். மணியடிக்கும் எந்திரமும் வாரங்கல் நகரத்திலிருந்தனவென்றும் சாசனங்களால் காணப்படுகின்றன.

இந்த மகாராஜனுக்கு ஸ்ரீலக்ஷிமிதேவி என்ற போகமாது இருந்தாள். இப்பெண்மணி செய்த தான சாசனங்கள் பெஜவாடா முதலான இடத்திலுள்ள தேவாலயங்களில் காணப்படுகின்றன, இவர் கம்ம நாட்டிலுள்ள பாவநாராயணஸ்வாமி தேவாலயத்திற்கு சாலிவாகன சகம் 1220-ல் தானசாசனம் எழுதிவைத்துள்ளார். இவரிடத்தில் குதிரைப் படைத் தலைவனாயிருந்த சாஹிணிமாருண்டு என்றவர், பாஸ்கர ராமாயணத்திற்கு தலைமை பெற்று அதை வெளியிட்டு கீர்த்தி பெற்றார். இவரிடத்தில் இந்துலூர் ருத்ரன், அம்னவெங்க்க, பேபேட்டி கொம்மைய, குண்டய்ய நாயகுண்டு, மும்மடி முட்டய்ய முதலானோர்கள் ராஜப் பிரதிநிதிகளாயிருந்து சிம்மாசலம் முதல் மெதக் சீமை, கம்ம நாடு, முலிகி நாடு, பெதகட்ல சீமை முதலான பிரதேசங்களைப் பரிபாலித்து வந்தனர். தவிர தூபாடி சீமை, இவர்

காலத்தில் ஸ்ரீநாதராஜுவும், நந்திகோட்டுகூர் சீமையை சிரிசிங்கள மகாதேவுண்டு என்றவரும் ராஜப்பிரதிநிதிகளாய் இருந்து ஆண்டு வந்தனர். இவர் காலத்தில் வீரபட்ல தேசிகர், அப்பயார்யர், ஏகாம்ரநாதன் முதலாயினோர் கவிஸ்வரராக சமஸ்த்தானத்தில் கீர்த்தி பெற்றிருந்தனர். இவர் சரித்திரம் 'பிரதாபருத்ரீயம்' என்ற சமஸ்கிருத நாடகத்திலிருக்கின்றன. இதை எழுதியவர் வித்யாநாத கவீஸ்வரர் ஆவார்.

இவர் சந்திரகுல வம்சத்தில் ஜெனித்ததாக 'தௌர்-வாச தேவி' புராணத்தில் காணப்படுகின்றன. (இந்த விஷயம்) கற்பனை என்று சரித்திராசிரியர்கள் கருதுகின்றனர். கம்மவாருக்கு இவர் பூர்வீகர் என்று அதில் எழுதப்பட்டு உள்ளன. கம்மவாரும், ராசவாரும் தனித்தனியாக மாறி விட்டதாக திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. இவருக்கு அன்னமதேவராஜு என்ற தம்பி இருந்தார் என்றும், இந்த வம்சத்தினரே வாரங்கல், ஜகதளபுரம் முதலான இடங்களில் பூபாலகராக இருந்துவந்ததாகவும் காணப்படுகின்றன. இவர் குமாரர் அய்ய தேவர் எழுதிவைத்த சாசனம் சாலிவாகன சகம் 1307-வருஷம் ஸிம்மாசல நரஸிம்ஹஸ்வாமி தேவாலயத்திலிருக்கின்றன. அந்த தேவாலயத்திற்கு பால் பாயச நிவேதன காரியார்த்தமாக 50 பசு மாடுகளை தானம் செய்துள்ளார். கிறிஸ்து சகம் 1703-வருஷம் திக்பால தேவன் என்றவருடைய வம்சாவழியினர் ஜகதளபுர சமஸ்தானதிபதிகளென்று காணப்படுகின்றன.

56) சாமந்த நரபாலன், இதுவரை துர்ஜய, சாளுக்ய வம்ச ராஜாக்களுடைய விஷயத்தைப்பற்றி கூறியிருந்தோம். இனி இவர்களிடத்தில் பிரதிநிதிகளாயிருந்து பட்டம் பெற்றவர்களுடைய வரலாறுகளைத் தெரிந்துகொள்வோம்.

57) வெல நாட்டு ராஜாக்கள், சாளுக்ய சக்கரவர்த்தி களிடம் ராஜப்பிரதிநிதிகளாயிருந்தும், 2-வது சாளுக்கிய பீமராஜனிடம் பிரதிநிதிகளாக இருந்த 2-வது பல்லவர்ம முதலானவர்களுடைய சரித்திரங்களை இதிலும் முதல் பாகத் திலும் விவரித்துள்ளோம். அவர் குமாராகிய குட்ய வர்ம,

விமலாதித்ய சக்ரவர்த்திக்கு கிறிஸ்து சகம் 1011–22க்கும் மத்தியில் ராஜப்பிரதிநிதியாகி வெல நாட்டுச் சீமையைப் பரிபாலித்து வந்தனர்.

58) குட்யவர்ம 2-வது விமலாதித்ய சக்கரவர்த்தி இவருடைய சகாயத்தால் குத்ரவாரத்வயமென்ற பிரதேசத்தையும் இவருடைய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டதாக பீடாபுற சாசனத்தில் காணப்படுகின்றன.

59) எரியராஜு, நன்னிராஜு இவர்கள் இருவரும் குட்ய வர்ம 2-வது குமாரர்கள் என்று காணப்படுகின்றன. இவர்கள் தாலராஜனுக்கும், ராஜராஜ நரேந்தரனுக்கும் பிரதிநிதிகளாக இருந்து பரிபாலித்தனர் என்றும் கூறுகின்றனர். பின்னர் எரிய ராஜனுக்கு குண்டாம்ப என்றவள் வயிற்றில் பிறந்து ஐந்து புத்திரர்கள் (கொங்க, பசவ, மல்ல, கண்ட, பண்ட ராஜாக்கள்) கொங்கராஜா வெலநாட்டிற்கு அதிபதியாயினர்.

60) வெலநாட்டு கொங்கராஜு, இவர் சாளுக்ய சக்கரவர்த்தியாகிய குலோத்துங்க சோழராஜனுக்கு பிரதிநிதியாக இருந்தமையால் இவரை வெலநாட்டு குலோத்துங்க கொங்கராஜாவென்று சொல்வர். இவர் வெல நாட்டையும் வேங்கி நாட்டையும் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வந்ததாக கிறிஸ்து சகம் 1076, 1177-ஸு சாசனங்களில் காணலாம். இவருக்கு வித்வத் பங்கஜாளியென்ற பிருது சாசனம் உண்டு. இவருடைய பார்யை சப்பாம்பிகை. இவர் தம்பி பண்டயராஜா இறந்து போக அவர் பேரால் சந்தவோலு பண்டேஸ்வர ஆலயத்தைக் கட்டியுள்ளார். மஞ்சனகவிரசிதமென்ற கேயூரபாகு சரித்திரத்தில் இவரைப் பிரபலமாக வர்ணித்துள்ளார். இவரிடத்தில் நண்டூர் கோவிந்த மாத்யுண்டென்ற சந்திவிக்ரஹி மந்திரியும், போலநாயுண்டு என்ற மந்திரியுமிருந்தனர். கோவிந்தா மாத்யுனி சாசனம் சாலிவாகன சகம் 1030-வருஷம் தரணி கோட்டை பீமேஸ்வராலயத்திலிருக்கின்றது. இவர் வெல நாட்டு ராஜ்யத்தையும், வேங்கி நாட்டையும் ஒன்று சேர்த்து 41-வருஷ காலம் அரசாண்ட பின்னர் இவர் குமாரன்

ராஜேந்தர சோழ ராஜா சிம்மாசனதிபதியாக வந்து சாலி வாகன சகம் 998-வருஷம் சேப்ரோலு குமாரஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்தும், கவசம் மாலைக்காக வேண்டி ரூ. 5000/- கொடுத்துள்ளார்.

61) வெலநாட்டு குலோத்துங்க சோழ ராஜா 1-வது சாளுக்ய சக்ரவர்த்தியாகிய குலோத்துங்க சோழ ராஜா வாகிய இவரை அபிமான புத்திரனாக பாவித்து தன்னுடைய ராஜ்யத்தை இவர் வசமே ஒப்படைத்துவிட்டார். இவருக்கு சமதிகத பஞ்சமஹாசப்த, மஹாமண்டலேஸ்வர, பிரதாப லங்கேஸ்வர, சாளுக்ய ராஜபவன மூலஸ்தம்ப, சிம்பஜ்நம்பித ரிபுமதஸ்தம்ப, சதுர்த்த குலவனஜ்வச மார்த்தாண்ட, சல-மர்த்திகண்ட, சதுஸ்ஸதாபிதிக்ராம, அவனிவல்லப, சஹகார வல்லப, ஆஹவரக்கஸ, விக்ரமகர்க்க, பண்டன பீம, புவநாபிராம, தாயகஜஸிம்ஹா, சாஹசோத்துங்க என்ற பிருதுகளைப் பெற்றுள்ளார். இவருடைய கஜானவில் 9 லக்ஷம் நாணயங்களும், 90 யானைகளும், 40 ஆயிரம் குதிரைப் படையும் உண்டு. நித்யம் 75 புட்ல 24000 வள்ளம் விநியோகமும் செய்யவும் ஏற்பாடாகியிருந்தன வென்று 'கேயூரபாகு' சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ளன. இவருக்கு குண்டாம்பிகை, சாம்புதேவி என்ற பார்யைகள் உண்டு. சப்பமதேஷ என்ற குமார்த்தியும், 2-வது கொங்கராஜன் என்ற குமாரனும் ஜெனித்தனர். இவருடைய குமார்த்தியை கோட்டை பீமராஜனுக்கு விவாகம் செய்து கொடுத்தனர். இந்த பீமராஜா தரணிகோட்டைக்கு அதிபதியாவார். இவர் மனைவியரில் ஒருவராகிய குண்டாம்ப சாலிவாகன சகம் 1058-வருஷம் த்ராக்ஷாராம பீமேஸ்வரரை தரிசித்து அகண்ட தீபதானம் செய்தனர் சாம்புதேவி கொண்டபடபடி காபூரிதிரிகோடீஸ்வராலயத்தில் ஒரு அகண்ட தீபம் சமர்ப் பித்து சாசனம் செய்துள்ளனர். இவர் தன் தந்தையிட மிருந்த கோவிந்தமாத்யுண்டு, முதுசெலி நாராயணப்ரகட என்றவர் மந்திரியாக இருந்தார். இவருடைய சாசனம் ஒன்று சாலிவாகன சகம் 1042-வருடம் பீமேஸ்வராலயத் தினுள்ளன. இவர் கிறிஸ்து சகம் 1115 முதல் 1130 வரை வேங்கி நாட்டையும், வெலநாட்டையும் பரிபாலித்து

வந்தனர். குலோத்துங்க சக்கரவர்த்தி 1120-வருஷத்தில் காலகதியடைந்தனர். அவ்வமயம் மேற்கு சாளுக்ய சக்கர வர்த்தியாகிய ஆறுவது விக்ரமாதித்யன் படையுடன் வந்து வேங்கி நாட்டை ஜெயித்து 4 வருஷ காலம் ஆண்டு வந்து, சடைசியில் குலோத்துங்க சக்கரவர்த்தி குமாரனுகிய விக்ரம சோழன் படையெடுத்து, அந்நாட்டை தன் வசப்படுத்திக் கொண்டு, ராஜேந்தர சோழனுக்கே ராஜ்யம் கொடுத்து பதவியை நிலைநாட்டினுர். பின்னர் இவர் குமாரன் 2-வது கொங்கராஜா வெலநாட்டிற்கு ராஜாவாயினுர். இவர் குமாரர்களில் ஒருவராகிய பண்டராஜுவின் பார்யை நாகல தேவியார் சாலிவாகன சகம் 1069-வருஷம் பாபட்ல தேவாலயத்திற்கு அகண்ட தீபம் தானம் செய்து வைத்து உள்ளார்.

62) வெல நாட்டு 2-வது கொங்கராஜா வேங்கி தேசத்தையும், வெல நாட்டையும் கிழக்கு சாளுக்ய ராஜாக் களுக்கு வேண்டி கிறிஸ்து சகம் 1130–637-வருஷம் வரை ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். இவரும் தந்தை. பாட்டன் முதலானவர்களைப் போல, சந்தவோலு ராஜதானி, இவருக்கு குண்டாம்ப, சுப்பாம்பிகா, ப்ரோல மாம்ப, சோமாண்டியம்ம, பண்டமாம்ப என்ற மனைவியர் களிருந்தனர். பிரசித்தி பெற்ற தண்டநாயக, பண்டிநாயக என்றவர்கள் இவருடைய மாமனுர்கள் ஆவர். இவர் சாளுக்ய சக்கரவர்த்திக்கு அநுசரணையாக, மராட்டியர்களுட னும், குந்தல தேசாதிபனுடனும் போராடி ஜெயம் பெற்ற தாக இவர் பார்யையாகிய பண்டமாம்ப சாலிவாகன சகம் 1066-ஞு ஸ்ரீத்ராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபதானம் செய்து, அங்குளீபஞ்சகம் என்ற ஆபரணங்களைச் சமர்ப்பித்து தான சாசனம் எழுதிவைத்துள்ளார், தவிர இவர் கோதாவரி ப்ரதேசத்தில் கோவிந்த தண்டாபதியை ஜெயித்து வந்ததாக ஒரு சாசனம் காணப்படுகின்றன, இவரு டைய மைத்துனர் சோடபநாயகன் இவரிடம் சேனுதிபதியாக யிருந்தார். வாசனப்ரகடயென்ற வீரன் பிரதானியாக யிருந் தான், ப்ரோலி செட்டியென்ற வைஸ்யன் ஒருவனும் சேனுதி பதியாக இருந்தான். இன்னும் கொல்லவாரில் சிலரும்

இருந்ததாக சாசனங்களில் காணப்படுகின்றன. இவர் தன்தந்தையார் வகித்திருந்த பிருதுகளேயும் பெற்றனர், கோதாவரி சங்கமத்தில் நடந்த யுத்தத்தில் காட்டிய பராக்ரமத்தைக் கண்டு மெச்சிய சாளுக்ய விக்ரமசோட குமாரன் 2-வது குலோத்துங்கன், இவருக்கு ஸ்ரீசைலம் முதலான பிராந்தியங்களுக்கும் அதிபதியாயிருக்கும்படி நியமித்தனர். அதனுல் இவர் பிருதுக்களில் 'த்ரிசதோத்ரசட்சஹஸ்ராவனீ நாதசம்பாதித' என்ற பிருதும் காணப்படுகின்றன. இவரும். இவருடைய மந்திரி வாசனப்ரகடாவும் காளஹஸ்தி பிராந்தியங்களுக்குச் சென்று, விக்ரமசோழன் 12-வது பாலன காலம் அந்த க்ஷேத்ர தேவாலயத்தில் அகண்ட தீபதானம் செய்தும், விக்ரம சோழனுக்காக வேண்டி அந்நாட்டை ஸ்வாதீனம் செய்யும் பொருட்டு அங்கு சென்றிருந்தனர். அதுசமயம் தண்டநாயக நந்திமராஜனுக்கு கொங்கன நாயகன் என்றவரும் அங்கு சென்றிருந்தார். இவரும் அந்த தேவாலயத்திற்கு தீபதானம் செய்துள்ளார். இந்த காளஹஸ்தி சாசனம் முதலானவற்றில் இவர்களுடைய ராஜ்யத்திற்கு வெலநாடென்று பெயர் எழுதப்பட்டுள்ளன. இவருக்கும் கொலனு ராஜனுக்கும் யுத்தங்கள் நடந்து கொண்டே வந்தன. கொலனு ராஜா இவருக்குப் பரமவிரோதி. இந்த பீமராஜனை சம்ஹாரஞ் செய்து கொலனு ராஜ்யத்தையும் ஸ்வாதீனம் செய்துகொண்டார்.

இந்த மகாராஜா தனது பார்யை குண்டாம்ப, தனயன், மாமனுர் பண்டிநாயகனுடன், மைத்துனன் சோடப நாயகனுடனும், ஸ்ரீத்ராக்ஷாராம பீமேஸ்வரஸ்வாமியை தரிசனம் செய்து சாலிவாகன சகம் 1064-வருஷம் க்ஷீராபிஷேக அகண்ட தீபதானங்களேயும், கனகாம்பரம் முதலானவற்றைச் சமர்ப்பித்தும், இரண்டு தங்கத்தட்டுகளேயும், அந்த சந்நிதியில் ஒரு கல் மண்டபமும் கட்டிப் பிரதிஷ்டை செய்தும், புஷ்ப நந்தவனம் ஒன்றை நிர்மாணித்தும் பெயர் பெற்றனர். இவர் பார்யை சப்பமாம்ப, சாலிவாகன சகம் 1055-வருஷம் நாதெண்டல பட்டண கோவர்த்தன ஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து, சாலிவாகன சகம் 1043-வருஷம் ஸ்ரீபீமேஸ்வரஸ்

வாமிக்கு அநேக பொன்னுபரணங்களையும் சமர்ப்பித்து உள்ளார். இவர் தாயார் குண்டாம்பிகா தேவியார் சாலிவாகன சகம் 1054-ஷூ ஸ்ரீகாகுளம் ஸ்ரீவல்லபஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து வைத்துள்ளார். பென்முதி கிராம (ப்ரெனுமூடி) வாசாதியதிபாகிய பீமப்ரகட குமாரர் அப்பனப்ரகடயு, மாதவராஜுவும், கண்டப கிராமவாசியுமான அனந்தாமாத்யன் குமாரனுமாகிய சூர்யாமாத்யன் முதலானோர் இவரிடம் மந்திரிகளாக இருந்தனர். இவருடைய பார்யை ப்லோலமாம்ப, திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில், நெரியபூபாலன் சதியாகிய நெரியாசாணியுடன் கூடி இருவருமாகக் கூடி கோபுரத்தில் தங்கக் கலசங்கள் வைத்து ஸ்தாபனம் செய்து வைத்தனர். சோமாண்டியம்மாள் சாலிவாகன சகம் 1066-வருஷம் கம்ம நாட்டில் ப்ரேபல்லி ஸ்ரீ பாவநாராயணஸ்வாமி தேவஸ்தானத்திற்கு ஒரு தான சாசனம் செய்துவைத்துள்ளனர். இவர் தந்தையிடமிருந்த நண்டூரி கொம்மன என்றவரே இவருக்குப் பிரதான மந்திரியாக இருந்தார். இவர் வெல நாட்டு ராஜாக்களில் பிரசித்தி பெற்றவர். இவர் காலத்திலேயே கொண்டபடமட்டி சீமை ராஜாக்கள் எல்லோரும் இவருக்குப் பிரதிநிதிகளாக இருந்தனர். இவருடைய சேனாதிபர்களில் கொம்மி செட்டி என்றவர் பாபட்ல தேவாலயத்திற்கு அநேக தர்ம காரியங்களைச் செய்துள்ளார். இவருடைய மந்திரிகளில் ஒருவராகிய ஈசானப்ரகட என்றவர் காரெம்பூடியில் சூரேஸ்வர ஆலயம் கட்டி வைத்துள்ளார். இவருடைய ஆட்சியில் வித்வான்களுக்கு அநேக சலுகைகளைக்கொடுத்தும் சந்நியாசிகளுக்கு மடங்கள் கட்டி வைத்து, போஜனாதி காரியங்களுக்கு வேண்டிய வருவாய் தரக்கூடிய கிராமங்களை தான சாசனம் செய்து வைத்துள்ளார். இவர் 6000 கிராமங்கள் கூடிய பிரதேசத்திற்கு அதிபதியாயிருந்தார் என்றும் சிலர் 480 கிராமங்கள் என்றும் சொல்வர். சாசன லிகிதங்களிலும் காணப்படுகின்றன. (655 and 945 of 1921) இது வெல நாட்டு ராஜ்ய பாகம் மாத்திரம். இவர் லாட, மராட, குந்தல ராஜாக்களை வென்று ஆட்சி புரிந்து வந்தனர். இவர் ஆட்சியின் கீழ் காளஹஸ்தி பிராந்தியம் வரையிலுமிருந்தன. திரிபுராந்தகஸ்தலத்தில் இவர் சாசனம் ஒன்று இருக்கின்றன.

இவர் 2-வது குலோத்துங்க சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாக இருந்துவந்தார். இவர் காளஹஸ்திஸ்வாமிதேவாலயத்தில் பத்து அகண்ட தீபங்களுக்காக 320 கோக்களை தானஞ் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளனர்.

63) வெல நாட்டு 2-வது ராஜேந்தர சோழராஜா, சப்பாம்பிகை புத்திரராகிய இவர் 2-வது கொங்க நரபாலனுக்குப் பின்னர், வெல நாடு, வேங்கி நாடுகளை சாளுக்கிய ராஜாக்களிடம் கிறிஸ்து சகம் 1163–1181 வருஷம் வரை இராஜ்ய பரிபாலனம் செய்து வந்து, இவர் பார்யைகள் குப்பாம்ப, அக்கம்ம, கொங்கமாம்ப, பண்டமாம்ப என்ற 4 பேர் இருந்தனர். இந்த அக்கம்மாள் கொண்படமடி புத்தராஜனுடைய சகோதரி. பண்டமாம்ப கோனகன்றுடி பசுபதி ராஜகுமாரி. கொங்கமாம்ப அம்மாண்டி பெர்மாள் சுக்கலாம்பையின் புத்திரி. இவர் அமரேஸ்வரஸ்வாமி பக்தராவார். தன் தந்தையார் தரித்திருந்த பிருதுகளைத் தவிர மேலும் அநேக பிருதுகளைப் பெற்றுள்ளார். இவருக்கும் 2-வது போல ராஜனுக்கும் யுத்தம் நடந்த காலம், அவரை சம்ஹாரம் செய்துவிட்டதாகவும், இவர் தந்தை காலத்திலேயே சோழ பட்டணத்தைக் கட்டியும், கொலனி ராஜாவாகிய பீமனையும் கொன்று, அந்த ராஜ்யத்தையும் சேர்த்து தன் நாட்டை விஸ்தாரப்படுத்தியதாகவும், இவர் காலத்திலும் கோன ராஜ்யம் வெல நாட்டு ராஜாக்கள் வசம் இருந்ததாகவும், கோன ராஜேந்தர சோழனும், மண்டாதி பிரபுக்களும் இவருக்குப் பிரதிநிதிகளாக இருந்தனர். ஆந்தர சோழர்களில் கன்னர தேவ சோழன் இவர் மீது படையெடுத்து வந்த காலம். இவர் ஜெல்லய்ய, நாரய்ய, சூரய்ய என்ற சேனாதிபதிகளை படையுடன் அனுப்பி அவரை அடக்கினர். இவர் மந்தபர் கிராமத்தை அக்ரஹாரமாக்கி தானம் செய்தார். இவரிடத்தில் அமுர்தலூர் மஞ்சிராஜு குமாரன் தேவளப்ரகட, நாசனப்ரகட, சோமநப்ரகட, எர்ரப்பநாயகுண்டென்ற சேனாதிபதிகளிருந்தனர். கோன சீமையை வசப்படுத்தியவர்களில் தேவப்ரகட முதல்வராவார் காகதீய ராஜாவானவர் ஒரு சமயம் இவர் மீது யுத்தம் செய்து திரிபுராந்தக ப்ரதேசத்தை நாசப்படுத்தியதாகவும்

காணப்படுகின்றன. இவர் பார்யை பட்டமாம்ப சாலிவாகன சகம் 1085-வருஷம். கொங்கமாம்ப் சாலிவாகன சகம் 1102-வருஷம் த்ராக்ஷாராம பீமேஸ்வரருக்கு அகண்ட தீப தானங்களைச் செய்துள்ளனர். குப்பாம்ப என்ற சதி வெள்ளைக் கிராமத்தைத் தானம் செய்தும், இவர் குமாரத்தி யாகிய மைலம்ம தேவியைப் பலநாட்டு சிமை ப்ரபுவாகிய ஹைஹய வம்ச சாகி அனுகுராஜு விவாஹம் செய்து கொண்டார். இவர் எழுதிவைத்த தாம்பர சாசனம் ஒன்று சாலிவாகன சகம் 1091-வருஷம் பாபட்ல தாலுக்காவில் கிடைத்துள்ளன. (C. P. 23 of 1916-17)

64) வெலநாட்டு 3-வது கொங்க நரபாலன். இவர் அரக்காம்ப வயிற்றில் 2-வது சோழராஜனுக்குப் புத்திரனகப் பிறந்தனர். கிறிஸ்து சகம் 1681—1686-வருஷம் வரை சாளுக்ய சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாயிருந்து ராஜ்யத்தை பரிபாலித்து வந்தனர். இவர் தந்தையாகிய ராஜேந்தர சோழன். காசதி 2-வது போலராஜனைக் கொன்றமையால், இவர் குமாரனாகிய காகதி ருத்ர தேவன் இவர் மீது படை எடுத்துவந்து, கிறிஸ்து சகம் 1186 வருஷ மத்தியில் சில தேசங்களை வசப்படுத்தியுள்ளதாகக் காணப்படுகின்றன. இவருக்கு ஜயாம்பிகை கொண்டபடமடி ராஜு குமார்த்தி இவர் பீடாபுற குந்தீமாதவாலயத்தைக் கட்டி வைத்தும், ஸிம்ஹாஸலத்தில் ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமிக்கு சுவர்ணத்தால் தோடுகள் சமர்ப்பித்தும், குந்தீமாதவலாயத்திற்கு நவகண்டவாட என்ற கிராமத்தை தானசாசனம் செய்து கொடுத்துள்ளார்.

65) வெலநாட்டு ப்ருதுவீஸ்பரராஜு, இவர் 3-வது கொங்க நரபாலனுடைய குமாரர். இவர் காலத்தில் வெல நாட்டு ராஜ்யத்தை காகதிய கணபதி சக்கரவர்த்தி ஆக்ர-மித்துக்கொள்ளவே, இவர் நாட்டை விட்டுப் பீடாபுறத்திற்குப் போய், அங்கு தன் ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்து கொண்டதாகக் காணப்படுகின்றன. இவர் அங்கு ராஜ்யப் பரிபாலனம் செய்து வந்த காலம். தெலுங்கு சோழ மநும சித்தி குமாரர் திக்கபூபதி இவர் மீது படையெடுத்து வந்து,

இவர் தலையை வெட்டியதாக நிர்வசன உத்தர ராமாயணத் திக்கன சோமயாஜி பண்டிதர் குறித்துள்ளார். இம்மஹா ராஜா சாசனங்களில் கிறிஸ்து சகம் 1163 to 80 வரு காணப் படுகின்றன. இவர் குமாரராகிய அய்யபதேவராஜனுடைய சாலிவாகன சகம் 1159-வரு, கிறிஸ்து சகம் 1237-வரு சாசனம் பெஜவாடா மல்லேஸ்வராலயத்தில் இருக்கின்றன. ப்ருதுவீஸ்பர ராஜா காலத்திற்கு 2-வதுகுலோத்துங்கனு டைய குமாரன் ராஜேந்தர சோழ நாமகா சாளுக்ய சக்கரவர் த்தி யாயிருந்தார். ஆயினும் இவர் ஆட்சியானது க்ஷீணித்து வர தெலுங்கு சோழ ராஜாக்களும், காகதீய ராஜாக்களும் கலந்து வெலநாட்டு ராஜ்யத்தையும் வேங்கி ராஜ்யத்துடன் சேர்த்துவிட்டதாகவும் தெரியவருகின்றன. இவருடைய சாசனம் பிடாபுறத்திலுள்ளன.

66) வெல நாட்டு விநுர 2-வது ராஜா. இவர் வெல நாட்டு முதல் கொங்க ராஜனுடைய சகோதரராகிய கண்ட நரபாலனுடைய புத்திரன். இவர் சாளுக்ய ராஜாக்களில் வீர சோழனுக்கு மந்திரியாயிருந்து, பாண்டிய ராஜனுடைய கோட்டையின் மேல் படையெடுத்து ஜயித்து வந்தமையால் இவருக்கு கிருஷ்ண, கோதாவரிக்கு, மத்யப் பிரதேசத்திற்கு ராஜாவாக நியமித்து வைத்ததாக ப்ருதுவீஸ்பரனுடைய பீடாபுற சாசனத்தில் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசத்திற்கு கிந்து யுக்மாந்தரம் என்று பெயர்.

67) தண்டநாயக பண்டிநாயகுண்டு, வெலநாட்டு கொங்க நரபாலனுக்கு மாமனுராகிய இந்த சேனாதிபதி மிக்க பிரசித்தி பெற்றிருந்தார். இவருக்கு சமதிகசமரசமோசார் ஜித, ஜயாங்கநாலிங்கித, தக்ஷண தோர்தண்ட, நிக்குன கண்டவைரி, பாங்கார, பாவநம்சகார, உபயபலசுபட, முன்னரிவ கலி, கரகவித சம்மெருவ என்ற பிருதுகள் உண்டு. இவருடைய தந்தை மாரிநாயகுண்டு கர்நாட யுத்தகளத்தில் மரணமடைந்தனர். இவருடைய தாயார் மல்லாசானி, இவர் குமாரன் சோடபநாயகுண்டு, இவரும் சேனாதிபதியே. பண்டிநாயகுண்டு சாலிவாகன சகம் 1061-வரு தன் தாய் தந்தையர், தம்பி முதலானோரின் புண்யார்த்த மாக த்ராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீப

தானம் செய்து வைத்தனர். சாலிவாகன சகம் 1067-ஹு சேப்ரோலு குமாரஸ்வாமிக்கும் அகண்ட தீபதானம் செய்து உள்ளார். பண்டி நாயகருடைய மனைவியார் கொம்மநிடு மணிகொம்ம என்ற மல்லாம்பை வயிற்றில் ஜெனித்தவர் இவ்வம்மையார் பரவலி கிராமத்தில் மாதவஸ்வாமி கோயில் கட்டினர், அதற்கு இவர் 3 புட்லபூமி 960 ஏக்கரா, தானம் செய்து சாசனம் எழுதியுள்ளார். இந்த பண்டிநாய்குண்டு செருபல்லி கொங்கேஸ்வராலயத்தைக்கட்டி 35 புட்ல பூமி 11200 வள்ளம் தானம் செய்துள்ளார். இது விக்ரமசோழ, சாளுக்ய சக்கரவர்த்தி விஜய ராஜ்ய 17-வது வருஷத்தில் செய்யப்பட்டதென்று நிடுப்ரோலு சோழேஸ்வராலய சாசனத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன. காளஹஸ்தி வரையிலும் இவர் ராஜ்யம் இருந்ததாகவும், இக்ஷுபல்லியில் ஒரு பெரிய சிவாலயம் கட்டி வைத்துள்ளார். இவருடைய வம்ச பரம்பரையை சேப்ரோலு சாசனத்தில் இவ்விதமாக காணப்படுகின்றன.

68) கொண்டபடமடி ஸீம ராஜாக்கள், துர் ஜய குலத்தவராகிய 2-வது புத்தராஜு சரித்திரம் முதல் பாகத்தில் சொல்லியிருக்கின்றன. இந்த 2-வது புத்தராஜு பின்னர் 10-வது சகாப்தம் வரை சரித்திர பூர்வமாக காணப்படவில்லை. ஆயினும் 10-வது சகாப்தம் வரை வேறொரு புத்தராஜு இந்த வம்சத்தில் ஜெனித்ததாகவும், அந்த 3-வது புத்தராஜனுக்கு மண்டவர்மன் என்ற புத்திரன் தோன்றியதாகவும் காணப்படுகின்றன.

69) மண்டவர்ம, இவருக்கு எர்ரமண்டலன் என்ற பெயரும் உண்டு. இவர் கொண்டபடமடி சீமையில் 210 கிராமங்களுக்கு அதிபதியாக இருந்து வந்த காலம், இவருக்கு எலதாயசிம்ஹா என்ற பட்டமும் உண்டு. இவருக்கு 4-வது புத்தராஜு, கண்டராஜு என்றவர்கள் ஜெனித்தனர். இவரிடம் சூரன் என்ற சேனதிபதி இருந்தார். இவர் மண்டவர்ம ராஜ்யத்தை விருத்தி செய்து வந்து, சாலிவாகன சகம் 1040-ஹு சேப்ரோலு தேவாலயத்திற்கு அகண்ட தீப தானம் செய்தனர். இவரைத் தவிர, வஜ்ரதண்டகந்நோ

ஜனு, விஸ்வகர்ம குலத்தவர் இவரிடத்தில் சேனாதிபதியாக இருந்தார்.

70) புத்தவர்ம (5) இவருக்கு பாதாம்பிக, கடியம தேவி என்ற மனைவியர் இருந்தனர், கடியமதேவியின் கர்ப்பத்தில் மன்மண்ட ராஜுவும், கடியமதேவியின் கர்ப்பத்தில் மஹாமண்டலேஸ்வர சோழ ராஜனும் பிறந்தனர். இவர் கொண்டபடமடி சீமையைப்பரிபாலித்துவந்தபின்னர், மிக்க வீரபராக்கிரமசாலியாகிய மன்மமண்டராஜு ராஜ்யாதிபதியாக வந்து பரிபாலனம் செய்துவந்தார்.

71) மன்மமண்டராஜு, மண்டராஜனுக்குப் பேரனாகிய இவர் ராஜேந்தர சோட சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாக இருந்தார். இவருடைய பிரதாபத்தை ஒரு சாசனத்தில் இவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளன. பரபல சாதக, எலதாய சிம்ஹ, சாஹஸோத்துங்க, ரணரங்கராம, அனியங்க பீம, சத்யராதேய, சௌசகாங்கேய, துர்ஜய குல குமுதக்ஷீசார்ணவ நிசாகர, சுருபிரருணாகர, விக்ரமக்ரீடாவினோத, காவ்யவினோத, காவ்யவினோத, சுகவிகிரஹகார, துரகரேவந்த, வைரிக்ருதாந்த, விவேக பத்மாசன, கிரிபச்சிமசானதி முதலான பிருதுகள் உண்டு. இவர் தாய்தந்தையர்களுக்கு புண்யார்த்தமாக நாதெண்டல தேவாலய மூலஸ்தானத்தில் அகண்ட தீபதானம் செய்து, நொஞ்சிட்லபாடு கிராமத்திய தேவாலயத்திற்கு 140 புட்ல பூமியை 44800 வள்ள பூமி தானம் செய்துள்ளார். இவருடைய அரசாட்சி காலம் சாலிவாகன சகம் 1061-வரை. இவருக்கு 5-வது புத்த வர்ம, மல்லவர்ம என்றவர்கள் ஜெனித்தனர்கள்.

72) மல்லபூபாலன், மன்மண்ட ராஜாபுத்ரனாகிய இவர் கொண்டபடமடி சீமையைப் பரிபாலித்து வந்ததாகவும் இவர் நாதெண்ட்ல தேவாலய மூலஸ்தானத்திலும், ஸ்ரீகேசவஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்தும், இவருடைய சாசனத்தில் வர்ணிக்கப்பட்ட ஸ்லோகம்: மேகாடாம்பரே ஜலமுசாம், த்ருக்ஜுஷாம் விபூத்யை, க்ஷீரோதததேரிவேந்துமௌலே: ஸ்வாமோவமல்

லபேரஹாஸ்திமல்ல: ப்ரக்யாதசௌர்யோஜனிதைர்ய துர்ய: பலேர்விகீர்த்திர்பலபித்விலாசம், சத்யம், ஹரிச்சந்த்ர விபோர்விபாதி, சௌர்யம் ரகோர்மல்லம் த்ருபாலகேனச ஹைவஜாதம், சஹவர்தமானம்.

73) புத்தராஜு, மன்மண்ட நரபால புத்திரரில் ஒருவராகிய இவர் சரித்திரம் விஷேசமாகக் காணப்படவில்லை இவருடைய பார்யை குண்டாம்பிகை. இவருடைய சாசனங்கள் நாதெண்ல, சேப்ரோலு கிராமங்களில் இருக்கின்றன. இவர் சகோதரியாகிய அக்கம்ம தேவியை, வெல நாட்டு ராஜாவாகிய 2-வது ராஜேந்தர சோழனுக்கு விவாகம் செய்து கொடுத்தும், சந்தவோலு பாண்டேஸ்வராலயத்திற்கு சில பூமிகளைத் தான சாசனம் செய்து கொடுத்தும், இவர் மன்மமண்ட ராஜா பெற்ற பிருதுகளையும் பெற்றுள்ளார். நாதெண்ல தேவாலய மூலஸ்தானத்திற்கு சாலி-வாகன சகம் 1070-வருஷம் இவர் பார்யை குண்டம தேவியார், குண்டம தேவியார் சாலிவாகன சகம் 1093-வருஷம் அகண்ட தீப தானம் செய்துவைத்துள்ளனர். வெல நாட்டு ப்ரதிவீஸ்வர சோழனுடைய பார்யை ஜயாம்பிகா தேவியார் இந்த வம்சத்தைச் சேர்ந்தவரேயாவார்.

74) மஹாமண்டலேஸ்வர சோழ ராஜு, இவருடைய சாசனம் சாலிவாகன சகம் 1054-வருஷம் இவர் தன்னுடைய பூர்வீகர்களுடைய பிருதுகளை எல்லாம் தரித்தவர் ஆவார். சமரமுக, சண்முக, ப்ரதிக்ஞ்ஜா, பரகராம, விஜயலக்ஷ்மீ களஸ்தர, பிருதராக்ஷஸ நரஸிம்ஹாதி பிருதுகளையும் தரித்துக்கொண்டு அநேக யுத்தங்களில் ஜெயம் பெற்றுள்ளார். இவர் சாளுக்கிய 2-வது குலோத்துங்க சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாக ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தனர். இவரும் நாதெண்ல மூலஸ்தான தேவாலயத்திற்கு, துபாடி பாலத்தில் 3 புட்ல பூமி 3840 ஏக்ரா தானஞ் செய்துள்ளனர். தவிர நொாஞ்செனபாடியில் 130 புட்ல பூமி 41600 வள்ள பூமியைத் தானஞ் செய்து, அர்ச்சகர், பரிசாரகர், புரோ-ஹிதர், சங்கீத பாடகர்கள் முதலானவர்களை நியமித்து தேவகாரியங்கள் யுக்தமாக நடத்திவந்தனர். தவிர

அங்குள்ள கேசவஸ்வாமி தேவாலயத்திற்கும் 33 புட்ல பூமியும் 10560 வள்ளம், இர்ரலூர் சோமேஸ்பர ஆலயத்திற்கு 60 புட்ல பூமியும் 19200 வள்ளம் கொடுத்துள்ளார்.

75) நாதெண்ல மன்ம சோழ ராஜு, முன் பாராவில் சொல்லப்பட்ட சோழ ராஜனுக்குப் பேரனும், இவர் நாதெண்லபுரியில் வாசம் செய்து வந்தும், அங்குள்ள தேவாலயத்திற்கு 3 புட்ல பூமியை தானம் செய்து, அகண்ட தீபத்தையும் வைத்து இந்த வம்சத்தினர் கிரமமாக நாதெண்ல க்ருஹநாமத்தையும், கோத்ரத்தையும் தரித்து வந்துள்ளனர். கம்மவாரில் நாதெண்ல கோத்ர, குலவாசிகளாகியவர்களிருக்கின்றனர். சாலிவாகன சகம் 1177-லு நாதெண்ல பீமசேனனுக்கும் மனைவியாகிய யரகாசானி தேவியாருக்கும் பிறந்த கேதி நாயுடு, பெஜவாடா மல்லேலஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீபம் சமர்ப்பித்தனர். இவரும் இந்த வம்சத்தைச் சேர்ந்தவரேயாவார்.

76) மண்டபூபதி 3, இவர் மன்மண்டராஜனுடைய கொள் பேரனுவார். இவர் தந்தை நல்லமல்லராஜகுமாரன். இவர் காலம் அநேக பிரதேசங்களை பரிபாலித்து வந்ததாககவும் காணப்படுகின்றன. இவரிடத்தில் எர்ரமப்ரகட என்ற பண்டாராதிபதி இருந்தார். இவர் சாசனம் சாலிவாகன சகம் 1095-வருஷம் நாதெண்ல பட்டணத்தில் உள்ள கேசவஸ்வாமி கோவிலுக்கு (ஒகமர்த்து பல்லபு) பூமியை தானமாகக் கொடுத்துள்ளார்.

77) பரிச்சேதர் என்ற வம்சாவழியினர், கொண்டபடமடி ஸீமை ராஜாக்களுக்கு மூல புருஷராகிய முதல் புத்த வர்ம என்றவர் வம்சத்தில் கண்டடு என்றவரும் இவருக்கு தேசடி பண்டுடனு, இவருக்கு வில்லம பீமனும், இவருக்கு கண்டடுனு, இவர் பார்யையின் மூலமாக பண்டடுனு, அவருக்கு பூரம என்ற பார்யையினிடம் பீமநயுவும், இவருக்கு எரியாம்ப என்ற மனைவியிடம் பிரசித்தி பெற்ற மஹாமண்டலேஸ்வர பண்டராஜு ஜெனித்ததாக சோப்ரோலு, சாலிவாகன சகம் 1067-வருஷத்தில் எழுதுவித்த சாசனத்தில் காணப்படுகின்றன. பில்லமபீமராஜா வளர்த்து வந்த

பஞ்சினி, குர்ருனு, விருத்தியாக ஆந்தர ராஜனிடம் ஒப்பு வித்ததாகவும் காணப்படுகின்றன. இந்த ஆந்தர ராஜா சாளுக்ய ராஜனே ஆவார். பண்டராஜனுக்கு இந்தப் பரிச்சேத வம்ச பிருதுகளும் உண்டு என்ற விஷயம் பீமேஸ்வ ராலயத்தில் காணலாம். இந்த வம்சத்தில் அமலராஜா பூச பாடியில் வாசம் செய்து வந்தமையால் தத் வம்சாவழியினர் பூசபாடிவார் ஆயினரென்றும் பூசபாட்டிவார் (விஜயநகர கஜபதிகள்) வம்சாவழியென்பது ஸ்பஷ்டம். அங்கு வசித்து வந்த துர்ஜய குலத்தவரும் பூசபாடிவார் என்ற வீட்டுப் பெயரே பிரதானமாகிவிட்டன. கம்மவாரில் இப்பொழுது பூசபாடிவார் என்றவர்களும் அவர்களும் ஒரே வம்சத்தினரே ஆவார்.

78) நதவாடி சீமை ராஜாக்கள். துர்ஜய வம்சத்தில் துர்க்கராஜா என்றவர் 12-வது சகாப்த ஆரம்பத்தில் நதவாடி சீமையைப் பரிபாலித்து வந்தனர். இப்போது இந்தப்பிரதேசம் நைஜாம் ராஷ்டரத்தில், மதிர ஜில்லா வென்று சொல்லுவர். மடபல்லி என்ற துர்க்கம், இந்த ராஜ்ஜியத்திற்கு ராஜதானி. இந்த வம்சாவழியினர் காகதீய ராஜாக்களுக்கு பந்துக்கள் ஆவார். துர்க்கராஜனுக்குப் பின்னர் இவர் குமாரன் ஆகிய புத்தராஜு 12-வது சகாப்த மத்தியில் ஆண்டதாகவும், இவருடைய 2-வது குமாரன் ருத்ர ராஜனுக்கு காகதீய சக்கரவர்த்தியினுடைய குமாரத்தி மைலம்ம தேவியை விவாகம் செய்து கொடுக்கப்பட்டன வென்றும் காணப்படுகின்றன.

79) ருத்ர ராஜு, இவர் அநேக மண்டலங்களுக்கு அதிபதியாகி, மஹாமண்டலேஸ்வரன் என்று பட்டமும் பெற்றனர். இவருக்கு நக்கடிமல்ல, தொட்டச்சாரிகண்ட பைரவ என்ற பிருதுகள் உண்டு. இவருக்கு எண்மர் குமாரர் கள். மய்யல தேவி யென்ற குமாரத்தியும் தோன்றினர். இப்பெண்மணியைக் கோட்டை கேதராஜு 3-வது வுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டன. இவருக்கு குந்தாம்ப என்ற மற்றொரு மனைவியும், மாதவராஜு என்ற குமாரனும் ஜெனித்ததாக முதுமாறு சாசனத்தில் காணப்படுகின்றன.

இந்த மாதவராஜனுக்கும் ஹாதேவி யென்ற சதிமணியும் இருந்தனள். முதுநூறு சாசனம் இவ்வம்மையார் எழுதி வைத்ததே. ருத்ர ராஜனுடைய மேளம்ம திருபுராந்தகத்தில் மேளாம்பிகேஸ்வர தேவருக்கு பிரதிஷ்டை நடத்தி சில பூமிகளைத் தான சாசனம் செய்து வைத்தனர். இவருடைய வம்சாவழி விபரம் பின்னர் தெரியவில்லை.

80) கோனகண்ட்ரவாடி ராஜாக்கள், (சூரபோத ராஜு, பீம ராஜு) 12, 13-வது சகாப்தத்தில் பெஜவாடா ராஜதானியாக 210 கிராமங்களைக் கோன, கண்ட்றவாடி என்ற பெயர் வழங்கி வந்ததாகவும், துர்ஜய வம்சாதிபராகிய போத பூபாலன் குலத்தினர் அரசாண்டு வந்தும், சாளுக்கிய ராஜாக்களுடன் சம்மந்தம் பெற்று பிரதிநிதிகளாகவும் இருந்தனர். போதபூபால வம்சத்தில் வீரசோழ ராஜனும், இவருக்கு பீமராஜனும், இவருக்குச் சோழராஜனும், இவருக்கு அயந்தமாம்ப வயிற்றில் சூரபோத ராஜனும் பிறந்து இந்த நாட்டிற்கு அதிபதிகளாய் இருந்ததாகவும் காணப்படுகின்றன. இவருக்கு சமதிகத பஞ்ச மஹாமண்டலேஸ்வர, பரம மஹேஸ்வர, விஜயவாடி காபுரேஸ்வர, த்ரிசப்திகிராமாதீஸ்வர, சாளுக்ய குல வல்லப, ப்ராசாதலப்தராஜ பதவிராஜம்சான, விக்ரபீப, அபிவனராம, சாளுக்ய கடக, வஜ்ரப்ராகார, பராங்கனுதார முதலான பிருதுகள் பெற்றுள்ளனர். இவர் சாலிவாகன சகம் 1157-வருஷம் பெஜவாடா மல்லேஸ்வரஸ்வாமிக்கு அநேக பூமிகளைத் தானம் செய்துள்ளார். இந்த வம்சத்தவராகிய பீமசேன மகாராஜனும் இம்மாதிரியான பிருதுகளைப் பெற்று உள்ளனர், சாலிவாகன சகம் 1135-ஷத்தில் ஸ்ரீ மல்லேஸ்வரஸ்வாமிக்கு 35 பசு மாடுகளைத் தானம் செய்துள்ளார். இவர்கள் இருவரும் பாட்டனும் பேரனுமாய் இருக்கவேண்டுமென்று தெரியவருகின்றன. இந்த பீமராஜனுடைய குமார்த்தியை ராஜராஜநரேந்தர சோழ ராஜனுடைய பிரதிநிதியாயிருந்த மகாமண்டலேஸ்வரராகிய ராசூரதாரப ராஜா விவாகம் செய்து கொண்டனர், சாலிவாகன சகம் 1088-வருஷம் ஸ்ரீ பீமேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீப தானம் செய்து வைத்துள்ளார்.

81) தரணிகோட்டை ராஜாக்கள், தான்யவதீபுரம், தான்யாங்கபுறம் என்ற பிரசித்தி பெற்ற தரணிக்கோட்டை ராஜாக்கள் சிலரைப் பற்றி முதல் பாகத்தில் கூறியுள்ளோம். அதில் கோட்டை 2-வது கண்டராஜனுக்கு பூரமதேவி என்ற சதீமணி இருந்ததாகச் சொல்லியுள்ளோம். அவருக்கு விரஜமதேவி என்ற மற்றொரு பார்யை இருந்ததாக கோடப்ப கொண்ட சாசனத்தில் காணப்படுகின்றன. கண்ட பூபதி குமாரனாகிய கோட்டமும்மடி தேவராஜு சாசனம் சாலிவாகன சகம் 1133-ஞ இப்படி கிராம ஸ்ரீ மல்லேஸ்வ ராலயத்தில் உள்ளன. அதில் அநேக பிராம்மணர்களுக்கு தானங்கள் கொடுத்ததாகவும் காணப்படுகின்றன. இந்த பீம ராஜனுடைய குமாரன் கோட்டபேத ராஜா 1, 12 சகாப்தம் தரணிக்கோட்டையைப் பரிபாலித்து வந்ததாகக் காணப்படுகின்றன. இதற்கு மேல் விபரங்கள் நமக்கு கிடைக்கவில்லை.

82) கோட்டை பீமராஜு 3, கோட்டகேதராஜ 1-வதுக்கு சுப்பம்ம தேவியிடம் இவர் பிறந்தார். சுப்பம்ம தேவியார் வெல நாட்டு ப்ரபுவாகிய 2-வது கொங்கராஜனுடன் பிறந்த சகோதரி. இவர் காலத்தில் புத்த தேவனைப் பூஜித்து வந்துள்ளனர். இவருக்கு 2-வது கேத ராஜா, சோழ ராஜா என்ற குமாரர் இருவர் பிறந்தனர். சோழ ராஜு விஞ்சமவேவி யென்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டனர். இவருக்கு மும்மடி போதராஜு, ராஜய்ய என்ற குமாரர் இருவர் தோன்றினர். பீமராஜுக்குப்பின்னர் 2-வது கேதராஜே கிறிஸ்து சகம் 1182-வருஷம் தரணிகோட்டை சிம்மாசனுதிபதியாக வந்து அரசாண்டதாகக் காணப்படுகின்றன.

83) கோட்டை கேத ராஜு 2 சாளுக்ய சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாகிய வெலநாட்டு கொங்க ராஜனுக்கு, சகோதரியின் குமாரன் ஆனதால் அவருடைய பிரதிநிதிகளில் பிரசித்தி பெற்ற உந்த கேத ராஜுவுக்கு, சதுஸ்ஸமுத்ரமுத்ரிதநிகிலவசுந்தராபரிபாலக, ஸ்ரீமத்ரிநயனபல்லவப்ராசாதாசாநிதக்ருஷ்ணவேணீ தக்ஷிண சஹர்பாபாவநீவல்தப, பய

லோபதுர்லப, சோழசாளுக்யசாமந்தமதாநேகபம்ருகேந்த்ர, விபவாமரேந்த்ர, ஸ்ரீமதமரேஸ்வரதேவதிவ்ய ஸ்ரீபதபத்மாராதக, பரபலசாதக, ஸ்ரீதான்ய கடகபுரவராதிஸ்வர, பிரதாபலங்க்கேஸ்வர, நன்னிமார்த்தாண்ட முதலான பிருதுகள் உண்டு. இவர் பிராம்மணர்களுக்கு தக்க போஷகராகவும், ●ாகொல்லு, ஜிஞ்ஜிபாடு, சல்லகர முதலான கிராமங்களை அக்ரஹாரமாகச் செய்து, தன் தாய் தந்தையரின் புண்யார்த்தமாக தானஞ்செய்தனர். இவர் புத்தமதத்தினருக்கு உபகாரியாகவுமிருந்து சாலிவாகன சகம் 1104-ஸு கந்தேறு, மேடிகொண்டூர் முதலான கிராமங்களை தானம் செய்து கொடுத்துள்ளார். அமரேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட திபதானம் செய்தும், தன்னுடைய சகோதரன் நிமித்தமாக பிராம்மணர்களுக்கு அநேக தான தர்மங்கள் செய்து கீர்த்தி பெற்றுள்ளார். இவரிடத்தில் ராயூர் பூர்வசாசனன் என்ற பரத்வாச கோத்ர அப்பனபெத்தி ஸ்தோத்ர பிராம்ஹணர் இருந்தார். இவருக்கு விஞ்ஜம, சப்பம, பார்வதி, நகம கொமரம என்ற பார்யைகள். கசவதேவி, சோடமதேவி, பண்டாரபு நாகமதேவி என்ற போக மாதர்களுமிருந்தனர். இவர்கள் எல்லோரும் சாலிவாகன சகம் 1119-வருஷம் ஸ்ரீ அமரேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட திப தானம் செய்தனர். இவர் பல் நாட்டு யுத்த காலத்தில் மேலதிகாரியாகப் போயிருந்ததாக சரித்திரங்கள் கூறுகின்றன. இவருக்கு ருத்ர ராஜு, பிம ராஜு என்ற 2 குமாரர்கள் இருந்தனர். இவர்கள் தந்தைக்குப் பின்னர் தரணிகோட்டைக்கு அதிபதிகளாகி அரசாண்டு வந்தனர் என்று காணப்படுகின்றன.

84) கோட்ட ருத்ர ராஜு, இவருடைய அரசாட்சி விஷயங்கள் காணப்படவில்லை. யினமதல சாசனப்படி இவர் பார்யை பண்டாம்ப, இவர் குமாரன் பேத ராஜு. இவருக்கு காகதீய கணபதி தேவ சக்கரவர்த்தியின் 2-வது குமார்த்தியான கணபாம்பா என்ற பெண்மணியை விவாகம் செய்து வைத்தனர். இந்த சம்மந்த வைபவத்தால் சாளுக்கியர்களும், வெல நாட்டு ராஜாக்கள் முதலாயினவர்களும், ராஜப்பிரதிநிதிகளாகவும், காகதீயர்களுக்கு சம்மந்திகளாகவும் ஏற்பட்டன.

85) கோட்ட பேத ராஜு, கணபாம்ப, கோட்டை ருத்ர ராஜு குமாரனுகிய பேத ராஜு காகதி கணபதி சக்கரவர்த்தியார் நடத்திய திக்விஜயத்தில் பங்கெடுத்துக்கொண்டு மும்முரமாக நடத்திய காலத்தில் இவர் மரணமடைந்து போனதால், இவருடைய பார்யையாகிய கணபாம்ப தரணி-கோட்டை ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்து பிரசித்தி பெற்றனள். இவர் சாசனம் கிறிஸ்து சகம் 1274-வருஷம் வரை காணப்படுகின்றன. காகதீய ருத்ரம தேவியும், இவரும் சமகாலத்தவர் ஆவார். இவ்வம்மையார் அநேக தர்ம தானங்களைச் செய்து வந்து, தம் நாயகன் பேரால் பேதேஸ்வராலயம் கட்டியும், அதற்கு மானியமாக செனதேவி என்ற கிராமத்தை தானமாகக் கொடுத்தும், தன் தந்தையின் பேரால் கணவேஸ்வர ஆலயம் கட்டியும், அதற்கு சிந்தபாடு கிராமத்தைக் கொடுத்தும், அமரேஸ்வர தேவாலயத்தில் அம்மன் சந்நிதி கோபுரத்திற்கு சுவர்ண கலசம் வைத்துப் பிரதிஷ்டை செய்தும், கிறிஸ்து சகம் 1241-வருஷத்தில் ரெட்டி நாயுடுவார் கட்டிய ருத்ரேஸ்வராலயத்திற்கு சில பூமிகளைக் கொடுத்தும், யநமதல கிராமத்தில் ஸ்ரீ கோபீநாதஸ்வாமி தேவாலயத்திற்கு ஒரு பூந்தோட்டம் தானஞ் செய்தும், கல்யாண மண்டபம் கட்டியும், சாலிவாகன சகம் 1183-வருஷத்தில் தான சாசனம் எழுதி வைத்துள்ளார். இவ்வம்மையார் ஆட்சி காலத்தில் வெநீஸ் தேசத்து மகான் ஒருவர் வந்து தேசயாத்திரை செய்த காலம் இவரிடஞ் சென்று சகல மரியாதைகள் பெற்றதிஞல் அவர் மிக்க சந்தோஷமடைந்து இவ்வம்மையாரின் குணுதிசயங்கள் ராஜ்ய பரிபாலன நீதிமுறைகள், பிரஜாரக்ஷணம், தான தர்மாதி காரியங்கள் முதலானவற்றைக்கண்டு எழுதி வைத்துக்கொடுத்த உபசாரப் பத்திரம் சுவர்ண அக்ஷரங்கள் இன்றைக்கும் பிரபலமாகக் காட்சி அளிக்கின்றன அவர் பெயர் மார்க்குபோலோ என்பர்.

86) கோட்டை கேத ராஜு 3 கணபதி தேவ ராஜாக்கள். கோட்டை பீம ராஜு 3-வது குமாரன் கேத ராஜு 13-வது சகாப்தம் முதல் தரணிகோட்டை ராஜ்யத்தில் சில பாகங்களில் இவர் அரசாட்சியை நடத்தி வந்தனர்.

இவருக்கு பய்யலதேவி என்ற பார்யை, நதவாடி ரிமை ராஜாவாகிய ருத்ர ராஜுவின் குமாரியாவார். இவ்வம்மை யாரின் தாயார் பய்யலதேவியார். காகதி கணபதி தேவ சக்கரவர்த்தியுடன் பிறந்த மைலம்ம, பய்யலதேவி கிறிஸ்து சகம் 1234-வருஷத்தில் புத்ததேவனுக்கு அகண்ட தீப தானம் செய்துள்ளார். அதுவரை புத்தமத ஆராதனை நடந்துவந்ததாக காணப்படுகின்றன. இந்த பய்யல தேவி யார் வயிற்றில் சேத ராஜனுக்கு கணபதி தேவ ராஜு, பிம ராஜு என்றவர் பிறந்தனர். கணபதி தேவ ராஜு கிறிஸ்து சகம் 1234-வருஷத்தில் ராஜாவாக வந்து இவர் சாலிவாகன சகம் 1180-வருஷம் நாதெண்ல தேவாலயத்திற்கு சில பூமி களைத் தானசாசனம் செய்து, சுங்கங்களையும் கொடுத்து சாசனம் எழுதி வைத்தார். கோட்டமன்ம கணபதி தேவ ராஜனுடைய பார்யை போசல தேவியார் ஸ்ரீகாகுளம் ஸ்ரீவல்லபஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்துள்ளார். கோட்டவாரில் பின்னர் அவர்களுடைய வரலாறு காணப் படவில்லை. ஸூர்த்திரயோபாக்யானமென்ற கிரந்தத்தில் கியாதி பெற்ற தந்துலூர் கன்னபூபாலன் இந்தக் கோட்ட வம்சாவழியினன் என்றும், இவர் கிறிஸ்து சகம் 1400-வருஷ காலம் தரணிக்கோட்டையைப் பரிபாலித்து வந்ததாகவும், இவருக்குப் பூர்வீகராகிய ஹரிக்ருஷ்ணன் என்ற ராஜா இருந்ததாகவும் அந்த கிரந்தத்தில் காணப்படுகின்றன. இந்த கன்னபூபாலனுடைய புத்திரியாகிய ஆராம்ப பெத கோமடி வேமா ரெட்டியை விவாகம் செய்துகொண்டு கிறிஸ்து சகம் 1410-வருஷம் சந்தான சாகரம் என்ற குளத்தை வெட்டிக் கரை கட்டியதாக பிரங்கிபுர சாசனத்தால் காணப்படுகின்றன. கோட்டவாரில் சிலர் தந்துலிவா ராக மாறி விட்டதாகவும் தெரியவருகின்றன. இந்த தந்துலூரிவார் ஆந்தர க்ஷத்ரியர்களிலிருக்கின்றனர். அவர் கள் கம்மவாரிலும் இருக்கின்றனர். ஆந்தர க்ஷத்ரியர்களி லும், கம்மவாரிலுமுள்ள ஜம்பனிவார் என்றவர்களும் இந்த வம்சத்தவரென்று முதல் பாகத்தில் சொல்லப்பட் டிருக்கின்றன. இந்தமாதிரி கோட்டவார் ஆந்தரக்ஷத்திரியர் களிலிலும், கம்மவாரிலும் இருந்து ரெட்டியாருடனும் சம்மந்தம் செய்துகொண்டது ஸ்பஷ்டமாக காணப்படுகின்றன.

87) சாகிப்ரபுக்கள் ஹைஹய வம்சாவழியினர். சாகி பேத ராஜு, ராஜ ராஜுலு, பல்நாட்டு சீமையைப் பரிபாலித்து வந்த ஹைஹய வம்சாவழியினர் சரித்திரம் கிறிஸ்து சகம் 1111-வருஷம் வரை முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ளன. பின்னர், பல்நாட்டு ராஜனுகிய வீர-காமனுக்கு 4 பேர் குமாரர்களிருந்தனர். முதல்வன் ராஜ ராஜு என்றும், இரண்டாமவன் சாகிபேத ராஜு என்று காண்கிறோம். மற்றவருடைய பெயர்கள் தெரியவில்லை. இந்த இருவரும் கலந்தே வலநாட்டு சீமையைப் பரிபாலித்து வந்தனர். இவர்கள் மேற்கு சாளுக்ய ராஜாவாகிய பூலோக மல்லு சக்சரவர்த்திக்குப் பிரதிநிதிகளாக இருந்தனர். பேத ராஜனுக்குப் பிருதாங்கருத்ர பட்டமும் உண்டு. இவர் இருவரின் பெயர்கள் ப்ருகுபண்ட சாலிவாகன சகம் 1040-வருஷ சாசனத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. பேத ராஜனுக்கு ராஜதானி மாசெர்ல. இதை குரிவிந்த ஸ்தலம், மாதவீ பட்டணம் என்று அக்காலத்தில் கூறி வந்தனர். சாலிவாகன சகம் 1051-வருஷ சாசனம் ஒன்று அங்குள்ள வீரபத்ரேஸ்வராலயத்திலுள்ளன. இதில் பேதராஜு பூலோக மல்லனுக்கு (3-வது சோமேஸ்வரன்) பிரதிநிதியென்றும் பெயர் பெற்றனன். இதனுல் கிழக்கு சாளுக்ய சக்கரவர்த்தி யாகிய குலோத்துங்கனுடைய பரிபாலனம் கொஞ்ச காலம் இருந்த பின்னர், சோமேஸ்வரன் சில தேசங்களை ஆக்ரமித்துக்கொண்டமையால், இந்தப் பேதராஜா பிரதிநிதியாயின தாகக் காணப்படுகின்றன. இவர் கிறிஸ்து சகம் 1130-ஞு வரை ஆண்டதாகவும், பின்னர் நடந்த யுத்தத்தில் மரணம் அடைந்து விட்டதாகவும் சரித்திரக்காரர் அபிப்பிராயம். இவர் காலத்தில் அங்குள்ள திரிமூர்த்தி தேவாலயத்திற்கு கொஞ்சம் பூமியும், ஆதித்தேஸ்வர ஆலயத்திற்கு கொஞ்சம் பூமியும் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இவருக்கு சுந்தர சக்கரவர்த்தி என்ற குமாரனும் இருந்தார். இவருக்குப் பின்னர் ராஜ்யாதிகாரமிருந்ததாகக் காணப்பட வில்லை. வெல நாட்டு ராஜாக்கள் ஏதாவது சூழ்ச்சி செய்து மாற்றிவிட்டதாக அபிப்பிராயப்படுகின்றனர்.

88) அநுகுராஜா. இவர் குரஜால ராஜதானியாக வைத்துக் கொண்டு வெல நாட்டை ஆண்டு வந்ததாகவும், இரண்டாவது பேதராஜனுக்கு ராஜப்பிரதிநிதிப் பட்டம் பெற்றதாகக் காணப்படுகின்றன. அநுகுராஜா, பாலமாசா புரியென்ற ஐம்பநாபுரத்திலிருந்து நூதனமாக வந்து வெல நாட்டு 12-வது கொங்க ராஜனுடைய மகளாகிய மைலம்ம தேவியை விவாகம் செய்துகொண்டுள்ள சமயம், மேற்கு சாளுக்ய ராஜா மறுபடியும் ஜெயம் பெற்று, பல்நாட்டு ராஜ்யம் கிழக்கு சாளுக்ய ராஜப் பிரதிநிதியாகிய இந்த கொங்க ராஜாவுக்கு அடங்கிப் போய்விட்டபடியால் அவர் இவருக்கும், ராஜாவுக்கும் அதைச் சன்மானமாகக்கொடுத்த தாக ஸ்ரீநாதகவி சரித்திரமாகிய பல் நாட்டு வீரகாவியத்தில் இந்த விஷயங்கள் காணப்படுகின்றன. அநுகுராஜனுக்கு மயிலம்மதேவியும், வீரவித்யாதேவி என்ற விஜ்ஜலதேவியும், பூரமாதேவி என்ற மூவர் பார்யைகளிருந்தனர். மைலம்ம தேவிக்கு நலகாமராஜனும், வீரவித்யாதேவிக்கு பெதமல்லி தேவுண்டு, பினமல்லி தேவுண்டு, பாலமல்லி தேவுண்டு என்றவர்களும், பூரமாதேவிக்கு மரகாமராஜா. ஜட்டி ராஜா, பெருமாள்ள ராஜா என்ற குமாரர்கள் தோன்றினர். இந்த சந்ததிகள் பிறப்பதற்கு முன்னர் அநுகுராஜா தனது மந்திரியாகிய ரேசெர்ல தொட்டநாயகன் குமார னாகிய பாதன்னன் என்றவரை எடுத்து வளர்த்துவந்தனராம் பெத்த நாயுடு ஈன வம்சத்தவர் என்று எண்ணிய ராஜ குடும்பத்தினர் யாரும் பெண் கொடுக்க மறுத்துவிட்டபடி யால், கடைசியில் ஒரு தந்திரத்தால் கஞ்செர்ல நகராதிபதி யாகிய கிருஷ்ண கந்தர்வனுடைய குமாரி முக்தலாம்பயை விவாகம் செய்துகொண்டார். இவருக்கு ஹயாரூடரே வந்தனன் என்ற பட்டமும் பெற்றனர்.

அநுகுராஜா காலத்தில் நர்லகொண்ட ப்ரபுவாகிய வருக்கும், இந்த அநுகுராஜனுக்கும் நடந்த யுத்தத்தில் இவருடைய மந்திரியாகிய தொட்ட நாயுடு, சேனாதிபதி யாகிய தெப்பிவி நாயுடு ஆகியவர்கள் சென்று நர்லகொண்ட பிரபுவை மடக்கி அவருடைய பட்டணத்தையும் வசப் படுத்திக்கொண்டு ஜயலக்ஷ்மி பிருது பெற்றுவந்தனர்.

அநுகு ராஜனுக்குப் புத்திரர்கள் பிறந்த பின்னர், தொட்ட நாயகனுக்கு தன் குமாரன் ராஜாவாக வரமாட்டான் என்று திகிலடைந்து மூலையில் அடங்கிவிட்டதாகவும், இதைக் கண்டுபிடித்து சௌதரி ராமிரெட்டி என்றவருடைய குமாரி நாகம்மாள் அநுகுராஜனிடம் சென்று தேறுதல் சொல்லி அந்த ரகசியங்களை எல்லாம் காண்பித்து அவருடைய மந்திரிக்கும் விஷயத்தை விளக்கி உற்சாகப்படுத்தினாள். தொட்ட நாயுடு மந்திரி பதவியை விட்டுவிட வேண்டி வந்தன. ஆயினும் இவருடைய 2-வது குமாரன் ப்ரம்ஹ நாயுடுவுக்குமந்திரி பதவியைவழங்கினர். இவரும் அந்தராஜாங்கத்தில் பற்றில்லாமல் இருந்து கடைசியில் நலுகுராஜனை சம்ஹாரம் செய்துவிட்டதாகக் காணப்படுகின்றன.

89) நலகாமராஜு. அநுகுராஜனுக்குப் பின்னர் இவர் ஜேஷ்ட்ட குமாரன் நலகாமன் ராஜாவாக வந்தான். ஆயினும் இவர் ப்ரம்ஹநாயகன் மந்திரி பதவியிலிருந்து தப்பமுடியாத நிலையிலிருந்தான். இந்த விஷயம் தேசமெங்கும் பரவியது. பின்னர் அவரை விடுவிக்க சந்தர்ப்பம் கிடைத்தன. நலகாமன் தனது சிற்றவ்வையின் குமாரர்களாகியவர்களுக்கு ராஜாங்கம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. ப்ரமஹ நாயுடு சொன்னபடி அவர்களுக்கு மாசெர்ல பட்டணத்தை (சந்தாநதி பக்கம் கரை வரைக்கும்) கொடுத்தனர். பிரம்ம நாயுடுவை அப்புறப்படுத்த இதே சமயமென்று யோசித்து எஜமானியார் இவரை பெதமல்லி தேவஸ்தான போஷகராக நியமித்து பிரம்ஹ நாயுடுவை அங்கு சேர்த்து விட்டனர். பெதமல்லி தேவர் கல்யாண புரத்தில் காலசூர்ய வம்சத்திய பிஜ்ஜலனுடைய குமாரனாகிய ராயமுராரி சோவிதேவனுடைய கிறிஸ்து சகம் 1167-77-வருஷத்தில் குமார்த்தியை விவாகம் செய்துகொண்டு அநேக திரவியங்களைச் சம்பாரித்துக் கொண்டனர். எஜமானியார் நலகாமராஜனுக்குப் பிரதானியைப் போல நடந்தும். பிரம்ஹநாயுடு மல்லிதேவர்களிடத்தில் மிக்க வைபவத்துடன் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரிடத்தில் துவேஷங் கொண்டு கடைசியில் கோழிப் பந்தயம் ஏற்பாடு செய்து நடத்தி, மல்லிதேவர்களுக்காகவேண்டி பிரம்ஹநாயுடுவை

வரவழைத்து, அந்தக் கோழிப்பந்தயத்தில் தோற்றவர்கள் ராஜ்யத்தை விட்டு 7-வருஷ காலம் க்ருஷ்ண நதியைக் கடந்து வாசம் செய்யவேண்டுமென்று தீர்மானஞ் செய்து, அக்காரியகர்த்தாவாக பிரம்ஹ நாயுடுவை நியமித்து அவர் மூலியமாக நடந்த பந்தயத்தில் மல்லிதேவர்கள் தோற்று பிரம்ஹ நாயுடுவுடன் மந்தாடி ஆரணியத்திற்குச் சென்று வாசம் செய்யலாயினர். இது கடந்த பின்னர், பிரம்ஹ நாயுடு அவர்களைக் கூட்டி வந்து வீரமேடபி என்ற பட்டணத்திய ராஜாவாகிய மூகராஜநிடம் 23 கிராமங்களை மானியமாகப் பெற்று அங்கு வாசம் செய்து வந்தார். பின்னர் நலகாமனுடைய மருமகனைத் தூதனுப்பி மாசெர்லபாகத்தைக் கொடுக்குமாறு கோரப்பட்டன. இதை எஜமானியார் சம்மதி தராது தூது வந்தவரை விஷங் கொடுத்துக் கொன்ற காரணத்தால், பிரமாதமான விரோதம் ஏற்பட்டு யுத்தம் உண்டாயிற்று. கிறிஸ்து சகம் 1184-ஹ இரு பக்ஷத்திலும் கோர யுத்தம் நடந்தன. இதற்குள்ளாகவே 2-வது கேதராஜு ஒரு கோட்டையை நிர்மாணித்து வைத்தார். அதுவும் பின்னர் பிரம்ஹ நாயுடு குமாரனாகிய பால நாயுடுவால் நாசமாக்கப்பட்டன. இந்த யுத்தத்தில் நதவாடி சீமைப்பாலகனாகிய நாகிபோதராஜுவும், ஹொயிசால ராஜாவாகிய 2-வது வீரபல்லாலனும் வெல நாட்டு ராஜேந்தர சோழனும், முதல் பிரதாபருத்ர சக்கரவர்த்தியும் கூடி அவரிஷ்டப்படி நடந்து கொண்டனர். இந்த யுத்தத்தில் 65 பேர் வீரநாயகர்கள் மடிந்தனர். மல்லிதேவனுடைய மைத்துனரும், காலசூர்ய வம்சாதிபனுமாகிய கொம்மராஜு, நரஸிங்கராஜு முதலானவர்களும், மல்லிதேவாதியர்களும் மடிந்து போயினர். கடைசியில் எஜமானி அந்த யுத்தத்தில் பிரம்ஹ நாயுடுவால் இறந்தனள். நலகாமராஜுவானவர் ஒன்றும் செய்யமுடியாமல் பிரம்ஹ நாயுடு வசம் ஆகிவிட்டனராம். பிரம்ஹ நாயுடும், மல்லிதேவாதியர் மடிந்த பின்னர், நலகாமராஜுனையே ராஜாவாக நியமித்து புனருத்தாரணம் செய்வித்து ராஜ்ய பரிபாலனம் நடத்திவர ஏற்பாடு செய்தனரென்று பல் நாட்டு வீர சரித்திரத்தில் விஸ்தாரமாக ஸ்ரீ நாதகவி வர்ணித்துள்ளார்

நலகாமராஜனுக்குப் பின்னர் இந்த ராஜ்யம் காகதீய கணபதி தேவ சக்கரவர்த்தியார் வசப்படுத்தி தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். அக்காலத்திலிருந்த வம்ச விவரம் தெரியவில்லையாயினும், கணபதி தேவருடைய குமாரத்தி ருத்ரம்ம தேவியார் காலத்திலிருந்த சாகி வம்சத்தில் நாகபூபாலன் என்றவர் பிரசித்தி பெற்று பாக நாட்டு சீமையைப் பரிபாலித்து வந்தனர் என்று முன்னம் கூறியுள்ளது. வெல நாட்டு ராஜ சம்மந்தம் பெற்ற பின்னர் இந்த வம்சாவழியினர் சதுர்த்தர் என்று பெயரிட்டுக் கொண்டு நதவாடி சீமையைப் பரிபாலித்து வந்தவர் மாத்திரம் துர்ஜய குலத்தவரென்றும், க்ஷத்ரியர் என்றும் சொல்லிக்கொண்டனர். இந்த வம்சாவழியினரே ஆந்தர க்ஷத்ரியர், சாகிவார், வர்ச்சவாயுவார் ஆனதாகவும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

ஹைஹயருடைய பூர்வ விருத்தாந்தம்.

90) இந்த வம்சத்தினர் வரலாற்றை முன் பாகத்தில் சிலவற்றைக் கூறியுள்ளோம். நூதனமாகக் கிடைத்த அவர்களுடைய சரித்ர விஷயத்தை இங்கு கொஞ்சம் விவரிக்கப் படுகின்றன. இந்த ஹைஹய வம்சத்தில் கிருஷ்ணராஜு குமாரன் சங்கர குணன் 6-வது சகாப்த காலம் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்ததின் பின்னர், அவர் குமாரராகிய புத்த வர்ம பட்டத்திற்கு வந்து ராஜ்யத்தை ஆண்டுவந்தார். இவரை பாதாமி சாளுக்ய மங்களேசன் ஜெயித்துவிட்டதாக பீஜப்பூர் சாசனத்தில் காணப்படுகின்றன. இந்த புத்த வர்மா விதிசாபுரி ராஜதானியை ஆண்டார். இதற்கு பீச நகர் என்பதும் உண்டு. புத்தவர்மனுடைய சந்ததியார் ஆந்தர நாட்டிற்கு வந்துள்ளனர் என்று தெரிய வருகின்றன. த்ரிபுரி ராஜதானியில் இந்த வம்சத்தினரில் கோகல்ல ராஜு கிறிஸ்து சகம் 875-வருஷ காலம் பரிபாலித்து வந்தனர். இவருக்கு 18 பேர் குமாரர்கள் பிறந்தனர். அதிலொருவன் ரத்னபுரி பாலகனுகிய தும்மன ராஜாவுக்கு தத்து குமாரனுகி இவருடைய வம்சம் அங்கு விஸ்தாரமானதாக காணப்படுகின்றன. மஹா கோசல தேசம் என்ற பாகத்தை ஆண்டவரில் கங்காய தேவன் வம்சத்தினர் சிலருடைய நாணயங்

களில் தங்கம், வெள்ளி, செம்பு இவற்றால் செய்யப்பட்டவை கள் கிறிஸ்து சகம் 1140–60-வருஷ மத்தியில் ப்ருதிவிதேவன் என்றவரும், பின்னர் 1160–75-வருஷ மத்தியில் ஜஜ்ஜல தேவன்என்றவரும் பின்னர் 1175–90-வருஷ மத்தியில் 3-வது ரத்னதேவன் என்றவரும், பின்னர் 1200-14-வருஷ பிரதாப மல்லி தேவன் என்றவரும் பரிபாலித்து வந்ததாகவும், இதில் ஜஜ்ஜல தேவன் ஜெஜெபுத்திகந்நாஜ சேதி ராஜாக்களை ஜெயித்ததாக ஒரு சாசனம் காணப்படுகின்றன. பிரதாப மல்லதேவ சாசனம் ராயபூர் ஜில்லா பெண்டரபந்து கிராமத் திலும், இவருடைய நாணயங்கள் விலாசப்பூர் ஜில்லா போல்லூரில் கிடைத்துள்ளன. முதல் பாகத்தில் கூறியுள்ள படி இந்த ஹைஹயர்கள் ஆந்தர நாட்டில் குடியேறினதாக வும், அப்பொழுது பல நாடு, கோநசீமை, குடிமெட்ட முதலான பிரதேசங்களில் ஸ்தாவரங்களை ஏற்படுத்திக் கொண்டதாகவும் திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. இந்த ஹைஹய வம்சத்தில் சாகிவாரில் சிலர், காகதி கணபதி தேவ சக்ரவர்த்தியினிடம் சேனாதிபதிகளாக நியமனம் பெற்றனர் என்று காணப்படுகின்றன.

91) சாகிநாகபூபாலன், விப்பர்ல கோத்ரவாசியும் நாகதேவுண்டு என்ற இவர் பாகநாட்டு சீமைக்கு அதிபதியாக கணபதி தேவ சக்கரவர்த்திக்குப் பின்னர் ருத்ரம தேவி காலத்திலிருந்தனர். இந்நாகதேவனுடைய தந்தை மல்ல சமூபதி என்றும், தாயார் போலம்ப என்றும், மாரன கவி ரசித மார்க்கண்டேய புராணத்தில் குறிப்பிட்டுள்ளன. இந்த சாகிவார் சைவமதாபிமானிகளாகியும், சதுர்த்தர் என்றும் சொல்லிக்கொண்டனர் என்று சரித்திரம் கூறுகின்றன. இவர் கணபதிதேவ சக்கரவர்த்தியினிடம் தலைமை உத்தியோகஸ்தனாகிய மேசய நாயகனுடைய குமார்த்தி மல்லமாம்பிகையை விவாகஞ் செய்துகொண்டு, கன்னம

நாயுடு, எல்லம நாயுடு, மேசய நாயுடு என்ற குமார்ரர்களைப் பெற்றனர் என்று காணப்படுகின்றன.

92) சாகிகன்ன மந்த்ரி, சாகபூபாலனுடைய புத்திரனுகிய இவர், காகதீய வீரப்ரதாபருத்ர சக்ரவர்த்தியினிடம் சேனாதிபதியாகவும், மந்திரியாகவும் இருந்தார். இவருக்கு நீதியுகந்தரன் என்ற பெயரும் பெற்றனர். இவர் மாரன கவி என்ற கவியின் மூலமாக மார்கண்டேய புராணத்தைப் பிரசாரம் செய்துவித்து கியாதி பெற்றமையால் இவரை அதில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இவர் கடக முதல் பரிபாலித்து வந்ததாகவும், மிக்க தர்மாத்மாவென்றும். பந்துமித்ராதிகளுக்கு கல்பதருவென்றும், பிரதாபருத்ரதேவ சாம்ராஜ்யவர்தன, ஸ்திரவி நீதி கர்த்தயென்றும், அந்த சரித்ரத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இக்கீர்த்தி வல்லபநாகியவருக்கு பைசராஜு, தேவர நாயனங்கார் என்ற குமாரர்களிருந்தனர். இவர் பிரதாபருத்ர சக்கரவர்த்தியினிடம் மிக்க பிரபல கீர்த்தி பெற்றிருந்தனர். வாரங்கல் மீது மகமதியர்கள் அநேக தண்ட யாத்திரைகளை நடத்திய காலத்தில், இவர் பிரதான மந்திரியாக இருந்தமையால் அந்த ராஜ்ய ஸ்திர நிலைமையிலேயே இருந்தன. ஆயினும் கடைசியாக நடந்த யுத்தத்தில் பிரதாபருத்ர சக்கரவர்த்தி தோல்வியுற்று சிறைபட்டனர் என்றும் இவரும் அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு தன்னுடைய இச்சா சக்தியினுல் அவரிடமிருந்து விடுபட்டுப் பின்னர் மல்லிகு மக்பூல் என்ற பெயர் பெற்று, உலூப்கான் சுல்தான் மஹமத் பேரால் டில்லி ப்ரபுவான பின்னர், அவரிடத்தில் முல்தான் பாலகனுக இருந்தான். பின்னர் கிறிஸ்து சகம் 1334-வருஷத்தில் மறுபடியும் தெலிங்கானு தேசத்திற்குப் பாலகநாக நியமிக்கப் பட்டார். அப்பொழுது அங்கிருந்த இந்துக்கள், மகமதியர் களுடன் சேர்ந்த இவருடைய ஆட்சியில் மனவேற்றுமை கொண்டு அங்கீகரிக்காமல் ரெட்டி வீரனுகிய காபய நாயகனுடன் யுத்தம் ஆரம்பிக்க இவர் மறுபடியும் டில்லிக்கே போய்விட்டார். காயபநாயகன் இந்து ராஜ்யாதிபதியாயினுன். பின்னர் கன்ன மந்திரி குஜராத் தேசத்திற்கு அதிபதியாயினுர். டில்லி சுல்தான் ராஜ்ய ரக்ஷணுர்த்தமாக

ஏற்படுத்திய மந்திரி சபையில் இவரும் ஒரு மெம்பராக இருந்தார். சுல்தான் மஹமது இறந்த பின்னர் இவர் பிரோஜிஷா சுல்தானிடம் சேவை செய்து வந்தார். அப்பொழுது இவருக்கு கானிஜஹான் என்ற பிருதும் கொடுத்து தனது பிரதான மந்திரியாக ஏற்றுக்கொண்டார். இந்த சுல்தான் தூர தேச யாத்திரை செய்யுங் காலத்தில் ராஜாங்கம் இவரிடத்திலேயே ஒப்படைத்து விடுவது வழக்கம். இவர் எந்த மதத்தில் சேர்ந்திருந்த போதிலும், இவருடைய பிரதாபத்தை விவரிக்கவேண்டியதேயாகும். இவர் கிறிஸ்து சகம் 1372-வருஷத்தில் காலகதியடைந்த தாக காணப்படுகின்றன.

93) சாகிபைசராஜு, மேலே சொல்லப்பட்ட மந்திரி குமாரர்களில் ஒருவராகிய இவருங்கூட பிரதாபருத்ர சக்ர-வர்த்தியினிடம் மிக்க பிரசித்திபெற்ற வீரசிகாமணியாவார். இவர் பேரால் ஏற்பட்ட விஷயங்களைக் குறித்து இவர் கந்துலூரில் நடந்த யுத்தத்தில் கோன மல்லர்களை ஜெயித்து, திருவத்தியிடத்தில் நடந்த யுத்தஸ்தலம் இவர் பேட்டை பாலம் என்றும், இவருக்கு மானகோவிந்தராய, ராய-ராஹுத்தமிண்ட, புலியமார்க்கோலுகண்ட, கண்டபேருண்ட, பல்லசுரத்ராண என்ற பிருதுகள் பெற்றனர் என்று காணப்படுகின்றன. இந்த சாகி வம்சத்தினர் விப்பர்ல கோத்ர வாசிகள் என்று இவர் பேரால் பாடிய பாடல்களால் தெரிய வருகின்றன.

இவருங்கூட தன் தந்தையைப் போலவே மஹமதீய மதத்தில் சேர்ந்து, அவருக்குப்பின்னர் சுல்தானிடத்திலேயே பிரதிநிதியாயிருந்ததாகவும், இவர் தம்பியாகிய தேவரி நாயங்காரும், பல நாட்டில் சக்ரவர்த்திக்குப் பிரதிநிதியாக இருந்ததாகவும் காணப்படுகின்றன.

94) சாகி எல்லயநாயகுண்டு, கந்த மந்திரி ஜேஷ்ட்ட சோதரனாகிய இவர் கூட வீரப்ரதாபருத்ர சக்கரவர்த்தியினிடம் சேனாதிபதியாயிருந்து பெயர் பெற்றனர். இவரை அக்காலத்திய கவீஸ்வரர்கள், உன்னத பரிவந்தி சிந்துர

சமாஜ விதாரண சிம்ஹ என்று கொண்டாடியதாகக் காணப்படுகின்றன.

95) சாகி மேசய நாயகுடு, சாகி கன்ன மந்திரிக்கு 2-வது தம்பியாகிய இவரும் பிரதாபருத்ர சக்ரவர்த்தியினிடம் சேனாதிபதியாக இருந்து மஹா அதிகார பட்டம் பெற்றுள்ளனர். இவருடைய வரலாற்றையும் மார்கண்டேய புராணத்தில் கூறப்பட்டுள்ளன.

96) மற்றொரு மேசய நாயகுடு, இவர்சாகி, நாகபூபாலனுக்கு மாமா, இவர்கணபதிதேவசக்ரவர்த்தியிடம், தலைமை உத்யோகஸ்ததராக யிருந்து, மிக்க தர்மிஷ்டன் என்ற பெயர் பெற்றுள்ளார், இவருடைய குமாரத்தி மல்லாம்பயை நாகபூபதி விவாகம் செய்து கொண்டதாக மார்கண்டேய புராணத்தில் கூறப்பட்டுள்ளன.

97) சாகி முப்ப ராஜு, தோரபராஜு, துர்ஜய வம்சத்தியரில் கலந்துகொண்ட சாகி வம்சத்தில் ஓர் பிரிவினர் குடிமெட்டு சீமையை ராஜதானியாக ஆண்டுவந்த இவர்கள் விப்பர்ல கோத்ரவாசிகளென்று அநுமஞ்சி பல்லெ சாசனத்தில் காணப்படுகின்றன. இந்த சாகிவாருக்கு மூல புருஷன் முப்பராஜனென்றும், இவர் குமாரன் தோர ராஜன் என்றும், இவர்கள் ராஜேந்தர சோழ சக்கரவர்த்தியினால், பாலே, பேரீ, சங்க, ஆநககாஹள என்ற சங்குகளைக் கொண்டு பஞ்சமஹா சப்த கௌரவங்களைப் பெற்றும், சுவர்ண பல்லக்கு, நக்ஷத்ரமாலை, ஸ்வேதச்சதரம், ஹேம தண்டம், சாமரம் முதலியவற்றையும் பெற்றதாகவும் சரித்ரங்களில் காணப்படுகின்றன. முக்த்யால பட்டண நாகுல கற்பாறையில் எழுதப்பட்டுள்ள சாசனத்தில் இந்த வம்ச விபரங்கள் விளக்கப்பட்டுள்ளன. இதில் தோரபுராஜுவின் பார்யையாகிய பிம்பாம்பிகையின் திருவயிற்றில் போதராஜன், பீமராஜன் என்ற இருவர் குமாரர்கள் பிறந்ததாக சாலிவாகன சகம் 1121-வருஷம் சாகி 2-வது போத ராஜா எழுதிவைத்த சாசனத்தில் ஸ்பஷ்ட்டமாகக் காணப்படுகின்றன.

98) சாகி போத ராஜு 1, சாகி தோரப ராஜனுக்கு பிம்பாம்பிகையினிடம் ஜெனித்த இவர் தந்தைக்குப் பின்னர் குடிமெட்டு பிரதேசத்தைப் பரிபாலிக்க ஆரம்பித்த காலம் முதல் கிறிஸ்து சகம் 1180-வருஷம் வரை ஆண்டதாகவும், பல் நாட்டுப் பிரபுவாகிய நலகாமராஜனுக்கு பல்நாட்டு யுத்த காலத்தில் இவர் மிக்க உதவியாக இருந்தும், இவரிடத்திலிருந்த கவலிய சிங்கன் என்ற மந்திரியுமிருந்தார். இவர் சத்யத்யாக சௌர்யாதி குணமணி விபூஷிதன் என்ற பெயர் பட்டம் பெற்றனர். இவர் குடிமெட்டு பட்டணத்தில் விஸ்வேஸ்வர ஆலயங்கட்டி பிரதிஷ்டை செய்து பூஜைகள் யுக்தமாக நடத்த ஏற்பாடுகள் சாஸ்வதமாக செய்து வைத்து உள்ளனர்.

90) சாகிதோரப ராஜு 2, இவர் கிறிஸ்து சகம் 1181-வருஷத்தில் ராஜ்பரிபாலகராக வந்து குடிமெட்டு ராஜதானி பட்டணத்தில் கிறிஸ்து சகம் 1196-வருஷம் வரை ஆண்டதாகவும், இவருடைய பார்யை முப்பாம்ப தேவியின் வயிற்றில் 2-வது போத ராஜு, கணபய ராஜு, பீம ராஜு என்ற மூவர் பிறந்தனர். இந்த தோரப ராஜா குடிமெட்டு சீமையை 15 வருஷ காலமே பரிபாலித்து வந்தார். விஸ்வேஸ்வர தேவாலயத்திற்கு அநேக பூமிகளைக் கொடுத்தும் பெயர் பெற்றனர். இவரிடத்தில் சாலிவாகன சகம் 1112-வருஷ மத்தியில் கொண்ஞதாடி கந்த சிரிசூரப ரெட்டி ஒரு உத்தியோகஸ்தனக இருந்தார்.

100) சாகி 2-வது போதராஜா, குடிமெட்டு சீமைக்கு அதிபதியாகி அரசாண்டு வந்தார். இவர் சாசனங்கள் கிறிஸ்து சகம் 1197 முதல் 1230-வருஷம் வரை காணப்படுகின்றன. இவருக்கும் இவர் தம்பியாகிய கணபயராஜனுக்கும். நரசிம்ஹவர்த்தக பிருதுகள் உண்டு. சாகி வம்ச பிரபுக்களில் இவருக்கு மிக்க கீர்த்தியும் உண்டு. இவர் திரிபுராந்தக, காஸ்மீர மல்லேஸ்வர, விஸ்வநாத. சோட நாராயண தேவஸ்தானங்களுக்கு கோபுரங்களில் கனக கலசங்கள் வைத்தும், ஸிம்ஹாசல நரசிம்ஹஸ்வாமிக்கு ஒரு தெப்பக்குளம் நிர்மாணித்தும், ஸ்ரீசைலத்தில் நந்திகேஸ்வரனை வைத்தும், தேவஸ்த்தான காரியங்களுக்காக வேண்டி

கம்பம்பாடு, முச்சிந்தல், பூதவாடா முதலான கிராமங்களைக் கொடுத்து சாசனம் செய்து வைத்தும், முக்தீஸ்வர தேவஸ்தானத்திற்கு 25 பசு மாடுகளையும், ரத்ன கிரீடமும் செய்து வைத்தும், பெஜவாடா மல்லேஸ்வரஸ்வாமிக்கு அர்ச்சனார்த்தமாக நொஞ்சிள்ளபூடி கிராமத்தையும், ஐக்கமபூடியில் இரண்டு பாகத்தையும் கொடுத்து கீர்த்தி பெற்றனர். மறுபடியும் இவர் சாலிவாகன சகம் 1121-வருஷத்தில் ஐக்கமபூடியில் மற்ற பாகத்தையும், கோராலங்க பூமியும், ராஜநாராயண தேவாலயத்திற்குக் கொடுத்தும், தன் தம்பி ஆகிய கணபய ராஜுவுடன் கூடி குருகூரில் உள்ள சோமநாதருக்கும், ஸ்வயம்பு தேவருக்கும் அநேக மானியங்கள் கொடுத்து க்யாதி பெற்றனர். இவர் பெஜவாடா ராஜதானியை ஆண்டு வந்தார். அநுமஞ்சிபல்லெ என்ற கிராமத்தில் ஒரு சிவாலயங் கட்டி, அநேக பூமிகளைக் கொடுத்தும், போதாபுறத்தில் ஒரு அக்ரஹாரத்தை நிர்மாணித்தும், தென்னந்தோப்பு, நந்தவனம் இவைகளை ஏற்படுத்தியும், பாலாற்றிலிருந்து ஒரு கால்வாயை ஏற்படுத்தி அநேக பூமிகளை நஞ்சை ஆக்கி விவசாயத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து வைத்துள்ளார். தன் ஆட்சியிலிருந்த குடிமக்கள் மிக்க குதூகலத்துடன் காரியாதிகளை நடத்திவந்து சுகம் பெற்றனர் என்பது கண்கூடு.

101) சாகி கணபயராஜு, இவர் தன் தமையனுககுப் பின்னர் பட்டத்திற்கு வந்து குடிமெட்டு சீமையைப் பரிபாலித்து வந்தார். இவர் சாசனங்கள் கிறிஸ்து சகம் 1250-ஞ காணப்படுகின்றன. இவர் அமரேஸ்வர ஆலயத்திற்கு, ராமலூர் கிராமத்தைத் தானங் கொடுத்தும், தன் தாயாருடன் திருபுராந்தகத்திற்குச் சென்று ஒரு கோதானம் செய்தும்வந்தனர். இவர் பார்யையின் பெயர் தின்னும்பிகை, குமாரன் பெயர் மனுமசாகியென்பர்.

102) சாகி மன்மசாகி, கணபய ராஜு, இவர் 2-வது சாகிராஜனுக்குப் பேரன் ஆனதால் இவருக்கு மன்மசாகி என்ற பெயர் வந்தன. இவர் அநுமஞ்சுபல்லெ சாசனம் எழுதி வைத்தனர். அதில் இவர் க்ஷத்திரிய வம்சாவழியினர்

என்றும் விப்பர்ல வம்சத்தவரென்றும் எழுதிவைத்துள்ளார் இதை முதல் பாகத்தில் எழுதியுள்ளன. இவர் வேதாத்ரியில் பிரதாப நரசிம்ஹஸ்வாமிக்கு வேமுலபல்லி கிராமத்தை தானசாசனம் செய்து கொடுத்து, சோமயாஜி பாஸ்கரன் என்ற பிராம்ஹணன் கட்டிய கணவேஸ்வராலயத்திற்கு பூமியும் கொடுத்து க்யாதி பெற்றுள்ளார். இவருக்கு 3-வது போதராஜன் என்ற குமாரன் ஜெனித்துப் பின்னர் ராஜாவாக வந்தார்.

103) சாகி 3-வது போத ராஜு, இவரும் குடிமெட்டு சீமை பாலகனாக இருந்து மஹாமண்டலேஸ்வர பிருதும் பெற்றனர். இவர் ஆட்சியில் கிறிஸ்து சகம் 1276-வருஷம், சாலிவாகன சகம் 1198-வருஷத்திலே அல்லுதேவராஜா எழுதி வைத்த சாசனத்தில் இவர் பெயர் காணப்படுகின்றன. இவர் சாசனம் ஒன்று பெஜவாடாவில் உள்ளன. அந்த சாசனத்தில் இவர் ஒரு தானசாசனம் செய்துள்ளதாகக் காணப்படுகின்றன.

104) சாகி மன்மபோதராஜு, 2-வது சாகி போத ராஜனுக்குப் பேரனாகிய இவர், நரஸிம்ஹ ராஜனுக்குப் புத்திரனும் ஆவார். இவருக்கு மாசராஜாவென்ற சகோதரனுமிருந்தார். மன்ம போத ராஜு கிறிஸ்து சகம் 1256-ஞ் முப்பால கிராமத்தில் ஒரு தர்மசத்திரம் ஏற்படுத்தி சாசனம் செய்துள்ளார். இவர் பெனுகஞ்சிப்ரோலு ராஜதானியில் ராஜபரிபாலனம் செய்துவந்ததாக சாசனத்தில் காணப்படுகின்றன, இதனுல் சாகிவார் இராஜ்யம் 2 பிரிவாகி, பெஜவாடாவில் ஒரு பிரிவினரும், பெனுகஞ்சிப்ரோலு பட்டணத்தில் ஒரு பிரிவினரும் ஆண்டதாக யூகிக்கலாம்.

105) மன்மசாகி தோர பூபதி, இவரை 3-வது தோர பூபாலன் என்றும், 2-வது தோரபூபதிக்குப் பேரன் என்றும், பீமராஜனுக்குப் புத்திரனும் ஆவார். இவருங்கூட நதவாடி சீமையில் கொஞ்ச பாகத்திற்கு அதிபதியாகி ஆண்டு வந்ததாகவும், நேலேஸ்வரதேவரை ப்ரதிஷ்டை செய்து முன்னேறு தாலூகாவில் சில பூமிகளைத் தானஞ் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளனர். இந்த சாகி வம்சத்தி

லிருந்தே வத்ஸவாயவார் க்ஷத்திரியர்களில் ஏற்பட்டதாக ராமவிலாசத்தில் யேநுக லக்ஷ்மண கவி எழுதி உள்ளார். சாகிவாரில் சிலர் இப்பொழுதும் கம்மவாரிலும், க்ஷத்திரியர் களிலும், காம்ப்புலு என்ற விவசாயிகள் ஆகிய இவர்கள் எல்லோரும் ஆதியில் ஒரே வம்சத்தினர் என்பது பிரசித்தம். கம்மவாரில் உள்ள விப்பர்ல கோத்ர வாசிகளும் சிலர் இந்த சாகையில் சேர்ந்தவரே ஆவார்.

106) கல்லயநாயகுடு, துர்ஜய வம்ச போதபூபாலன் பிள்ளையாகிய இவருடைய பார்யை சருவசானி யென்றும் அமரேஸ்வர ஆலய சாசனம் கூறுகின்றன. சருவசானி ஸ்ரீ அமரேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீப தானம் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார் கல்லயநாயகுடு கோன கண்ட்றவாடி சாகியராகக் காணப்படுகின்றன. இவருடைய அரசாட்சி விஷயங்கள் காணப்படவில்லை. இவருடைய பார்யையாகிய சருவசானி, துர்ஜய குலத்தில் பிறந்ததாக வும், இவர் தந்தை முச்ச நாய்க்குடு, இவர் தாயார் ஜக்காம்பிகை, இவர் ஹைஹய வம்ச ராஜவம்சத்தவரென்று டாகூறுதேசப்ரதிலப்த ராஜ்யோப பூவபௌம, ப்ரகடப்ர தாபன் என்று சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன. சருவசானிக்கு சருவம என்ற சகோதரியுமிருந்தனள்.

107) மல்யாலவார், மல்லாலவார், அந்நசேனுதிபதி, முதலில் இவர்களுடைய வாசஸ்தலம் நைஜாமில் நிர்மல என்ற பட்டணத்தில், இந்த வம்ச மூல புருஷர் மல்யால அன்ன சேனுதிபதி, இவரையே மல்லநாதன் என்று குறித்து வந்தனர். இவர் துர்ஜய வம்சத்தவரென்று கொண்டி பர்தி சாசனத்தால் தெரியவருகின்றன. இவ்விஷயத்தை முதல் பாகத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த அன்ன சேனுதிபதி காகதி 2-வது போல ராஜு சம காலத்தவரென்று காணப் படுகின்றன. இவருக்கு பெதமூட்டிகண்ட என்ற பிருதும் உண்டு. இந்தப் பிருதை தத் வம்சத்தினர் தரித்து வந்தனர். பெதமூட்டியென்ற வீரனைச் சம்ஹரித்து இந்தப் பிருதைப் பெற்றனர். இவருக்கு சஜ்ஜ சேனுபதி, ஜான சேனுபதி என்ற குமாரர்கள் இருந்தனர்.

108) மல்யால சஜ்ஜ சேனாபதி, இவர் அநேக யுத்தங்களில் தன்னுடைய பலபராக்ரமத்தைக் காண்பித்ததாக கொண்டிபர்தி சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர் சங்கிசபுராதிபதியாகப் பெயர் பெற்றனர். இவருக்கு அச்சம என்ற மனைவியின் வயிற்றில் காடசமூபதி யென்ற குமாரன் பிறந்தனன். இவர் காகதி 2-வது போலராஜா காலத்திலும் ருத்ரதேவருடைய காலத்திலும் சேனாதிபதியாக இருந்திருக்கலாம்.

109) மல்யால ஜாவ சேனாதிபதி, பாச சேனாபதி, அன்ன சேனாதிபதியின் புத்திரனாகிய ஜாவ சேனாதிபதியும் காகதீய ராஜாக்களிடம் பிரசித்தி பெற்ற சேனா நாயகர் ஆவார். இவருக்கு பாச சேனாதிபதி என்ற குமாரனும் இருந்தான். இந்த பாசசேனாபதி பிரதாபருத்ர சக்கரவர்த்தியிடம் கிறிஸ்து சகம் 1158-95 வருஷ மத்தியில் ஒரு பிரசித்தி பெற்றவராக இருந்தார். இந்த வம்சத்தைப்பற்றி பூதப்பூர் சாசனத்தில் ஒரு ஸ்லோகம் கூறுவது. தநியபாதாம்புருஹோபஜீவி, மல்யாலவம்சே காலேக்ஷுனை. நிகந்தலிஸ்ராந்த்யசோவிலாச: ஸ்ரீதந்நசேனாதிபதி: ப்ரமாத: தஸ்மாதபூத துலபாவித புண்யமூர்த்தி: ஸ்ரீஜாவசைநிகபதி: ப்ரதிதப்ரபாவ: உத்தாமராயகருட — லக்ஷக்ஷமாதலகரக்ஷணநித்யதக்ஷ:

110) மல்யாலகாடசமூபதி. மேலே சொல்லிய சேனாபதி புத்ரராகிய இவர் முதலில் பிரதாபருத்ரனிடத்திலும், பின்னர் கணபதி தேவ சக்கரவர்த்தியிடத்திலும் சேனாதிபதியாக இருந்து, நல்ல பட்டம் பெற்றுள்ளனர். இவர் மனைவி பொல்லமாம்ப என்ற சதீமணியிருந்தனள். சாலிவாகன சகம் 1162-வருஷம் சார்வரி வருஷத்தில் இவர் கொண்டி கிராமத்தில் திரிமூர்த்திகளை வைத்துப் பிரதிஷ்டை செய்து தேவ கைங்கர்யங்களுக்காக பெல்லம் செருவென்ற கிராமத்தை தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தும், வேறு ஒரு பாகத்தில் ருத்ரரேஸ்வர ப்ரோலேஸ்வர சந்நிதிகளுக்கு சில தானங்கள் செய்துப் பிரசித்தி பெற்றனர். இவருக்குப் போதசேனானி, சௌண்டசேனானி என்ற இரண்டு புத்திரர்களிருந்தனர்.

111) மல்யால சௌண்ட சேநாபதி, இவர் காடசமூபதி புத்ரன், காகதி கணபதி தேவ சக்கரவர்த்தியினிடம் சேனாதிபதிகளில் ஒருவர். கணபதி தேவ சக்கரவர்த்தியார் நடத்திய திக் விஜயத்தில் இவர் கூட இருந்து சத்துரு சேனைகளை ஜெயித்துப் பின்னர், கொண்டிபர்தியில் சௌண்ட சமுத்ரம் என்ற ஒரு பெரிய தடாகத்தை நிர்மாணித்து அங்குள்ள பிரதேசத்தில் சௌடேஸ்வர தேவாலயத்தைக் கட்டிப் பிரகாராதி கோபுரங்கள், சுவர்ண கலசங்கள் வைத்துப் பிரதிஷ்டைசெய்து அக்காரியங்களுக்காக அநகுர்தி கிராமத்தில் அநேக பாகங்களைத் தானமாகக் கொடுத்தும், பிராம்ஹணர்களுக்கு சௌண்டபுறம் என்ற அக்ரஹாரத்தை நிர்மாணித்துக் கொடுத்தனர். இவருக்கு மைலம்ம தேவி என்ற பார்யை இருந்தனள்.

112) மல்யால குண்ட தண்டாதிபன், இவர் பாசசேனாபதி புத்திரன் பாசாம்பிகாநந்தனன். இவர் கணபதி தேவ சக்கரவர்த்தியிடமும், ருத்ரம்ம தேவி சக்கரவர்த்தினி காலத்திலும் மிக்க பிரசித்தி பெற்று வந்ததினால் கிறிஸ்து சகம் 1260-ஷ ராஜாவாக அதாவது சங்கிசபுராதிபனாகயிருக்கையில் கோன புத்தா ரெட்டியார் குமார்த்தையாகிய குப்பாம்பாளை விவாகம் செய்து கொண்டனர். இவர் தேவகிரி சேவண ராஜாக்களுக்கும், கணபதி தேவ சக்கரவர்த்தி, ருத்ரம்மதேவி சக்கரவர்த்திகளுக்கும் நேர்ந்த யுத்தங்களில் கலந்து கொண்டு ஜெயம் பெற்றதினால் அவர்களிடத்தில் நன்மதிப்பும், உத்யோக மேன்மையும் பெற்று, அநேக தடாகங்களை நிர்மாணித்தும், கணபதி தேவ சக்கரவர்த்தியின் பேரால் கணபசமுத்ரம் என்ற பெரிய குளத்தை உண்டாக்கி, பூதபூரில் சாலிவாகன சகம் 1181-ஷ தன் தாயார் பேரால் ஒரு தடாகத்தை உண்டாக்கி, பிராம்ஹணர்களுக்கு அநேக தானதர்மங்களைச் செய்து, அநேக நஞ்சை பூமிகளையும் கொடுத்து சாசனம் எழுதி வைத்துஉள்ளார். சாலிவாகன சகம் 1198-வருஷத்தில் மகாகீர்த்தி பெற்று காலகதி அடைந்தனர். அப்பொழுது இவருடைய பார்யையாகிய குப்பம்பா, பூதபூரில் ஒரு தேவாலயங் கட்டி அதில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்வாமிக்கு குண்டேஸ்வரர்

என்ற திருநாமமிட்டு, அவ்வாலயத்திற்கு 21 மருதலபூமியை தானஞ் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இவருக்கு பாசய, பொப்படு, கணபதி தேவுடு, பர்வதம மல்லி என்ற குமாரர்களிருந்தனர். இவருக்குப் பெதமுத்து கண்ட சமரச மயூகண்டலன், சங்கரசமயாதி, நாதரிபு ப்ரபல மார்த் தாண்ட, துஷ்டதுரககரே, காரேவந்தடு, ஸ்ரீ விஸ்வநாத தேவ திவ்ய ஸ்ரீ பாதபத்மாராதகன் என்ற பிருதுகள் பெற்றுள்ளார். இந்த பிருதுகள் வம்ச பாரம்பரியத்தை அநுசரித்து வந்தவைகளாகும். இவருடைய குமாரர்களின் விஷயங்கள் காலவித்தியாசத்தால் அகப்படவில்லை.

113) மல்லலஹேமாத்ரி ரெட்டி, இவரும் துர்ஜய வம்சத்தவராயினும் மேலே சொல்லப்பட்டவருடைய சம்பந்தம் தெரியப்படவில்லை. இவரும் கணபதி தேவ சக்ர வர்த்தியின் சேனாதிபதிகளில் ஒருவர். இவருக்கு கணபதி தேவ திவ்ய ஸ்ரீ பாதசேகர, பரபலபீகர, துர்ஜய குலவார்தி லர்த்தன சம்பூர்ணசுதாகர, சத்யரத்னாகர, குலோத்துங்க ராய ராஜேந்தர சோட, கொங்கதிசாபட்ட, வைரிகோதூம, அம்புதிப்ரகோப என்ற பட்டங்கள் பெற்றுள்ளனர். இவர் சாலிவாகன சகம் 1559-ஹு கிறிஸ்துசகம் 1237-ஹு ஸ்ரீமத் ராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில், தாய் தந்தையரின் நிமித்தமாக அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்தனர். அக்காலத்தில் கணபதி தேவ சக்கரவர்த்தி யுடன் திக்விஜயம் செய்திருப்பர் என்று சரித்திரக்காரர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இவர் தந்தையின் பெயர் சௌடய்ய என்பர். கம்மவாரில் இந்த வம்சாவழியினர் மல்யாலவார், மல்லெலவார் என்பவர்கள் இருக்கின்றனர்.

114) துர்ஜய வம்சத்திலிருந்து ஏற்பட்ட குலத்தினர். இதுவரை முதல் பாகம், இரண்டாவது பாகங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் மூலமாக இனி கூறப்படும் கிருஹ நாமஸ்தர்கள் துர்ஜய குலத்தவரிலிருந்து தோன்றிய வர் என்பது நிச்சயம்.

1) விரியாலவார்—கூடூர் சாசனப்ரகாரம்.

2) மந்தபாடிவார்—சோமதேவராஜீயப்ரகாரம்.

3) பூசபாடினார், முதலிய வம்சத்தவர். விஜய நகர ராஜாக்களுடைய வம்சத்தைக்கொண்டு

4) மல்யால, மல்லெலவார் தெலிங்காரு சாசனம் பார்க்கவும். (S. I I Vol. IV 568) விளக்கப் படவில்லை.

5) விப்பர்ல கோத்திர வாசிகள் எல்லோருடைய விஷயம் கோத்திர பட்டிகைகளில் கண்டு கொள்ளலாம். (E. P. 283 of 24)

6) வலபுட்ல or லக்லுட்ல. கோத்ர வாசிகள், (E. P. Rept. 1916 P. 135)

7) சாகிவார். வத்லவாயவார், (ராமவிலாசம் என்று கிரந்தம் மூலமாகவும். S. I I Vol. IV பக்கம் 245)-ல் பார்க்க

8) காகதிய குலத்தவரென்று சொல்லப்பட்ட உப்பலபாடி சய்யபராஜு, நம்பூரு குண்டராஜு, பாதபாடி சுதாபல்லி, கட்டாரி, பெல்லம் கொண்ட, கனுமூரி, வகம் ராஜு இவர்கள் எல்லோரும் மந்தபாடி (மந்தபட்டி) வாருக்கு பந்துக்கள்.

9) சுத்த பல்லிவார், வெல நாட்டு ராஜாக்கள், சித்திபுரவராதீஸ்பர என்றபட்டம் பெற்றவர்கள்

10) பண்டாவார்—சூர்ஜய குலத்தவரே ஆவார்.

11) மண்டாவார் ,,

12) ஆலூரிவார். S. I I Vol. IV பக்கம் 317.

13) விப்பர்லவார். ஷை 243

14) ராலிள்ளவார். (சௌகந்திகப்ரசவாபஹரணம், பிருது)

15) நாதெண்ட்லவார். சூர்ஜ்யவம்ச பாலக ப்ரதேசப்படி.

16) வேஜெண்டலவார். மந்தபாட்டியாருக்கு பந்துக்கள்.

கம்மவாரில் துர்ஜய குலத்தவரின் விபரங்கள்.

115) மேலே கூறப்பட்ட வம்சத்தில் க்ஷத்திரியர்களும் இருக்கின்றனர். கம்மவாரில் இனி சொல்லப்படும் வம்சத்தினர் இருந்து, இவர்களும், இவர் பந்துக்களும் துர்ஜய குலத்தினர் என்பதற்கும் ஆந்த்ர க்ஷத்திரியர்களிலிருந்து பிரிந்து போயினர் என்பதற்கு ஆதாரமாக உள்ளனர்.

1) மந்தபாட்டிவார்
2) பூசபாட்டிவார்
3) மல்லெவார்
4) விப்பர்ல கோத்ர வாசிகள்
5) வல்லுட்ல, வலபுட்ல கோத்ரர்
6) சாகிவார்
7) கடாரிவார்
8) பெல்லம் கொண்டவார்
9) கநுமூரிவார்
10) உப்பலபாட்டிவார்
11) சுத்தபல்லிவார்
12) பண்டாவார்
13) மண்டாவார்
14) ஆலூரிவார்
15) ராவிள்ளவார்
16) நாதெள்ளவார்
17) யெஜெள்ள, வேஜெண்ட்ல

துர்ஜய குலத்தவர்களுக்கு பந்துக்களாகிய கோட்ட வாரும், இவர்களிலிருந்து ஏற்பட்ட தந்துலூரி, ஜம்பனி, தாண்ட்லவார், கோனவார், ஹைஹய வம்சத்தினர் என்ற வரும், கம்மவாரில் கோட்டவார் (1), ஜம்பனிவார் (2), கோனவார் (3), கம்மவாரில் உள்ள துர்ஜய குலத்தவர் முதல் பிரதாபருத்ரன் காலத்திலிருந்து சதுர்த்தர் என்று கணிக்கப்பட்டதாகவும், க்ஷத்ரியர் அல்லவென்று பத்மநாயக சரித்திரத்தால் தெரிந்துகொள்ளலாம்.

116) தெலுங்கு சோழ ராஜாக்கள், கம்மவாரில் சிலர் தெலுங்கு சோழ ராஜு வம்சத்தினர் என்று 10-வது சகாப்தம் வரையுள்ள இவர் சரித்திரத்தை முதல் பாகத்தில் விவரித்துள்ளோம். இன்னும் சில விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுவோம். நாம் தெரிந்துகொண்ட வரையில் இந்த தெலுங்கு சோழ ராஜாக்கள் பொத்தபி நாட்டை ராஜதானியாக வைத்துக்கொண்டு வந்தனர். இந்த நாடு இன்றைய கடப்பை ஜில்லாவில் பல்லம்பேட்டை தாலூக்காவில் கடப்பைக்கு 8 மைல் தூரத்தில் இருக்கின்றன. பொத்தபி நாட்டை ஆண்டு வந்ததால் பொத்தபி சோழர் என்றும், மதுரையை ஜெயித்ததால் மதுராந்தக பிருதை இந்த வம்சத்தினர் தரித்துவந்தனர். இவர்களிற் சிலர், உறையூர் புரவராதீஸ்வரர் என்ற பிருதும் தரித்தும் வந்தனர் இந்த தெலுங்கு சோழ ராஜாக்கள், சாசனங்களில், அவர்களின் பிரபாவத்தைச் சாதாரணமாகச் சொல்லி வந்தனர். சரணசரோருஹ, விஹிதவிலோசன, திரிலோசன, ப்ரமுகா கிலப்ருதுவீஸ்பர, காரீத, காவேறீதீரா கலிகால குலரத்ன, ப்ரதீஸாஹிதகுமாரங்குச, ஶ்ரீமன் மஹாமண்டலேஸ்வராதுல் என்ற பட்டங்கள் ஏற்பட்டன. இந்த சாகிவாரில் சிலர் கோடூறு பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தமையால், அவர்களுக்கு கோடூர் புரவரேஸ்வர என்ற பட்டமும் வகித்து வந்தனர். இவர்களுக்கு கல்கோடி, கல்பொன்னு என்ற சின்னங்களும் உண்டு.

சாலிவாகன சகம் 1010-ஞ் பொத்தபி ராஜதானியில் இக்குலத்தினரிருவர் ராஜ்யபரிபாலனம் செய்துவந்ததாகக் காணப்படுகின்றன. பொத்தபி சித்திபூபதி யென்றவரும், காமசோழன் என்றவர். இவர் ஆட்சி காலத்தில் கம்மநாடு வரையிலும் நாட்டை விஸ்தாரப்படுத்தி, இவருடைய குமாரன் கன்னர தேவனை அங்கு நிறுவி ஆட்சி புரிந்து வந்ததாகக் காணப்படுகின்றன. இந்த வம்சத்தினர் கொணிதென என்ற பிரதேசத்தில் இராஜாங்கத்தை நிர்மாணித்து அரசாண்டுவந்தனர் என்றும், இவ்விஷயத்தை பின்னர் விஸ்தரிக்கப்படும். இனி சித்த சோழனுடைய வம்சத்தைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

117) பொத்தபி சித்திமுமடி I, இவர் பொத்தபி ராஜதானியில் சில பாகம் பரிபாலித்து வந்து சாலிவாகன சகம் 1010-வருஷத்தில் காணப்படுகின்றனர். இவருடைய குமாரன் விமலாதித்யன் சாசனம் கிறிஸ்து சகம் 1047-1051 ௵ கடப்பை ஜில்லா நந்தலூரிலும், காளஹஸ்தியிலும் காணப்படுகின்றன. அதில் இவருடைய பெயர் குறிப்பிட்டுள்ளன. இந்த சாஸனங்களின் விஷயங்கள் முபிசித்தி சாசனத்தில் காணப்படவில்லை.

118) விமலாதித்யன், இவருடைய அரசாட்சி சாலிவாகன சகம் 1041-47-௵ மத்தியில் கடப்பை ஜில்லா நந்தலூர் பிராந்தியத்திலும், காளஹஸ்தியிலும் காணப்படுகின்றன. இவர் விக்ரமசோழ சக்ரவர்த்திக்கு பிரதிநிதியாக இருந்தனர். விக்ரம சோழ சக்ரவர்த்தி, 11-வது பாலன காலம், காளஹஸ்தியில் ஸ்வாமிக்கு தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். சாலிவாகன சகம் 1047-௵ கடப்பை ஜில்லா நந்தலூரில் 70 ஏக்ரா பூமியை அக்ரஹாரத்திற்காக வழங்கியுள்ளதாக சாசனத்தில் காணப்படுகின்றன. அதனால் அக்காலத்தில் இன்னொருவருடைய ஆட்சியிருந்ததாக யூகிக்கப்படுகின்றன. விக்ரம சோழ மகாராஜனுக்குப் பிரதிநிதியாக அக்காலத்தில் பேதராஜா என்றவரும் கூட பரிபாலனம் செய்துவந்ததாகவும், இவர் பொத்தபி சோழகுமாரன் என்று சாசனம் எழுதிவைத்துள்ளனர். ஆயினும் இவர் தந்தையின் பெயரைக் குறிப்பிடாததினால் இவருக்கும் விமலாதித்யனுக்கும் ஏற்பட்ட சம்மந்தம் நன்றாக அறியமுடியவில்லை. ஆயினும் இவர்கள் இருவரும் சகோதரர் அல்லது அண்ணன் தம்பிமார்களுடைய புத்திரர் என்று நினைக்கலாம்.

119) பேதராஜா. இவர் எழுதி வைத்த சாசனம் நந்தலூரில் இருக்கின்றன. அது சாலிவாகன சகம் 1044-வருஷம் எழுதப்பட்டது. இவரும் விக்ரம சோழனுடைய பிரதிநிதியாவார். இவருக்கு தயபீமராஜா, யர்ரசித்தி, நல்லசித்தி யென்ற மூவர் குமாரர்கள் உண்டு. இந்த பேதராஜனுக்குப் பின்னர், பாக நாட்டில் மல்லிதேவர், இவர் குமாரர்கள் ஆகிய சித்தி சோழர்களுடைய ஆட்சி காணப்

படுகின்றன. இவருடைய குமாரனாகிய நல்லசித்தி பாலன சாசனம் சாலிவாகன சகம் 1114-ஸ்ரீ காணப்படுகின்றன. இவர் சுமார் சாலிவாகன சகம் 1100-ஸ்ரீ வரை பொத்தபி ராஜதானியாக சில பாகத்தை மட்டும் பரிபாலித்து வந்ததாகவும், இவர் குமாரர் தயபீமராஜனுடைய விருத்தாந்தம் தெரியவில்லை. எர்ரசித்தி பொத்தபியை ஆண்டு வருகையில் நல்லசித்தி வல்லூரை ராஜதானியாக வைத்துக்கொண்டு இராஜ்யபரிபாலனம் செய்துவந்ததாகக் காணப்படுகின்றன.

120) எர்ரசித்திராஜு, இவர் சாலிவாகன சகம் 1100 ஸ்ரீ காலம் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். இவர் காலத்தில் ராஜதானியை நெல்லூருக்கு மாற்றியதாகவும், இவர் 2-வது ராஜாதிராஜனுக்குப் பிரதிநிதியாயிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து வந்ததாகவும், ராஜாதிராஜனுடைய பிரதிநிதிகளில், சித்தரச சோழன் என்றவர் நெல்லூர் பாலகனாயிருந்ததாகவும் காணப்படுகின்றன. ஆயினும் அவர் இவரென்றே நிர்ணயிக்கலாம். இவருக்கு ஸ்ரீதேவி என்ற பார்யை இருந்தார்.

இவரிடத்தில் அலதூரி புரவராதீஸ்வர பிருது பெற்ற நாரபசாஹிணி பீம நாயகன் ஒரு ராஜப் பிரதிநிதியாக இருந்தார். ராவூர் தாலூக்கா கோட்டூர் பல்லியில் ஒரு தானசாசனம் எழுதிவைத்துள்ளார். எர்ரசித்தியினிடத்தில் அவர் மைத்துனர் சித்தர சோழன் என்றவர் கூட ராஜ்ய பரிபாலனத்திலிருந்ததாகவும், இவர் கூடூர் தாலூக்காவில் ஒரு தேவஸ்தானத்திற்கு தீபதானம் செய்ததாக சாசனம் காணப்படுகின்றன. இந்த எர்ரசித்திக்கு, நல்லசித்தி 11 பேதராஜு, தம்முசித்தி என்ற குமாரர்களிருந்தனர். இவருக்குப் பின்னர் நல்லசித்தியும், தம்முசித்தியும் வரிசையாக நெல்லூர் ராஜதானியைப் பரிபாலித்து வந்தனர். பேதராஜா பரிபாலனம் செய்யவில்லை. இவருக்கு புஜபல வீரா, சாஹஸோத்துங்க, கீர்த்திநாராயண, அய்யனசிங்கு, உறையூர் புரவராதீஸ்வராதி பிருதுகள் இருந்தன.

121) நல்லசித்தி மஹாராஜு, எர்ரசித்தி சோதரராகிய இவர் நெல்லூரை ராஜதானியாக வைத்துக்கொண்டு

ஆண்டு வந்தார். இந்த நெல்லூர் கடப்பைக்கு 8 மைல் தூரத்திலுள்ளன. இவர் கூட பொத்தபி சோழருடைய பிருதுகளைத் தரித்துக்கொண்டே இருந்தனர். இவர் 3-வது குலோத்துங்க சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாக இருந்து மஹாராஜாதிபதியென்று ஏழாயிரம் கிராமங்களுக்கு அதிபதியாகி ஆண்டு வந்தார். இவர் மஹாராஜா பிருதும் பெற்றனர். இவர் பேரால் கன்னட பாஷையில் எழுதப் பட்ட சாசனம் சாலிவாகன சகம் 1114-வருஷத்தில். இவருக்கு புஜபல வீரர் என்ற பிருதும் உண்டு. இவர் காஞ்சீபுரத்தை ஜெயித்து கப்பமும் பெற்றனர். இவருக்கு பேடராஜு என்ற குமாரன் இருந்தான். இவர் பாலன விஷயம் ஒன்றும் காணப்படவில்லை.

122) சித்தன சோழன். சாலிவாகன சகம் 981-ஷு காலம் சிந்தவாடி ராஷ்டரத்தில் இவர் பரிபாலனம் நடத்திய தாகக் காணப்படுகின்றன. இவர் டேனேகல்லில் ஒரு சாசனம் எழுதி வைத்துள்ளார். இவர் மஹாமண்டலேஸ்வர என்ற பிருது பெற்றுள்ளார். மேற்கு சாளுக்ய சக்கரவர்த்தியாகிய த்ரைலோக்ய மல்லதேவனுக்குப் பிரதிநிதியாகயிருந்து நிஜாம் ராஷ்டரத்தில் அலம்புர பிரதேசத்தில் அரசாண்டு வந்ததாகவும் சாசனங்களில் காணப்படுகின்றன.

123) நல்லசித்தி ராஜு 2, வரபுமன்சித்தி 1, இவர் நெல்லூர் ராஜதானியைப் பரிபாலித்து வந்தார். இவரும் 3-வது குலோத்துங்க சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாகவே இருந்தார். இவர் தந்தையாகிய எர்ரசித்தி ராஜனுக்குப் பின்னர் சாலிவாகன சகம் 1109-ஷு ராஜ்யத்திற்கு வந்து சாலிவாகன சகம் 1135-வரை ஆண்டதாகவும், இவர் சாசனம் 1111-ஷு நெல்லூர் விஷ்ணு ஆலயத்திற்கு கோவூர் கிராமத்தைத் தான சாசனம் செய்து கொடுத்தும், நாகேஸ்வரஸ்வாமிக்கு பூங்கிநாடு எர்ரம்பல்லியில் சில பூமிகளைக் கொடுத்தும், நந்தலூர், அண்டபூர், மந்தரம் என்ற கிராமங்களில் விவசாயத்திற்கு வேண்டிய பூமிகளை மராமத்து செய்து கொடுத்து, விவசாயம் பிரபலமடையச் செய்து வைத்தனர். இது குலோத்துங்கனுடைய 26-வருஷ

பரிபாலன காலத்தில் நடத்தியதாகவும் நந்தலூர் சாசனத்தில் காணப்படுகின்றன. கூடூர் தாலுக்காவில் திருநல்லாறு தேவஸ்தானத்திற்கு வேலூர் கிராமத்தைத் தானம் கொடுத்துள்ளார் என்றும் காணப்படுகின்றன.

இவருக்கு நல்லம்ம என்ற பாரியை உண்டு. இவர் மஹாதேவ பக்தியுடைய மஹேச்வரன். செங்கல்பட்டு ஜில்லாவில் திருப்பாலிவனத்தையும், காளாஸ்திரியில் நந்தலூர் தேவஸ்தானத்திற்கு பூதானங்கள் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இவருடைய ஆட்சி கிறிஸ்து சகம் 1213-வது வரை காணப்படுகின்றன. இக்காலத்தில் இவர் தம்பியாகிய தம்முசித்தி யுவராஜனாவாக நியமிக்கப்பட்டனர். நல்லசித்திக்குச் சிறிய தந்தையாகியவரும் இப்பெயர் பெற்றதால் (இந்த இரண்டாவது தம்முசித்தியை) மனுமசித்தியென்று கூறி வந்ததாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தன. இவருக்கு மயிலம்ம தேவியென்ற மற்றொரு மனைவியுமிருந்ததாகக் காணப்படுகின்றன.

124) தம்முசித்தி. இவர் பாலனம் நெல்லூரில் சாலிவாகன சகம் 1127-வருஷத்திலிருந்து காணப்படுகின்றன. இவர் சாசனங்கள் தெலுங்கு தேசத்தில் அல்லாமல், செங்கல்பட்டு, வட ஆற்காடு ஜில்லாக்களிலுமிருக்கின்றன. அதனால் இவர் பரிபாலனம் அதுவரையிலும் வியாபித்துள்ளதாகவும், இவர் கூட 3-வது குலோத்துங்க சக்ரவர்த்திக்குப் பிரதிநிதியாகியிருக்கலாம். கிறிஸ்து சகம் 1207-வருஷம் இவர் தாயாராகிய ஸ்ரீ தேவியார் பேரால் ஸ்ரீபுரமென்ற அக்ரஹாரத்தை, பண்டாரு திருபுரார்யுலென்ற பிராம்ஹணர்களுக்குக் கொடுத்தும், பல்லிகொண்ட கிராமத்திலுள்ள தேவாலயத்திற்கும் மண்டநாட்டு தாமலைத்தடாகம் என்ற கிராமத்தைத் தானமாகக் கொடுத்தனர். இது குலோத்துங்கன் 26-வருஷ ஆட்சிகாலத்தில் நடத்தப்பட்டன. கைவத்தூர் கிராமத்தை திருப்பாசூர் தேவாலயத்திற்கு அநேக குடிகளும், வியாபாரிகளும் கூடி அந்த கிராமத்தை இறையாக்க வேண்டுமென்று பிரார்த்தித்த, அவர் கோரிக்கைப்படி கிஸ்தத்தை நீக்கி தேவஸ்தான இறையாக அந்த கிராமத்தை தேவாலயத்திற்கு ஒப்படைத்தனர்.

125) திருகாளத்தி தேவன் அல்லது திக்கராஜு 1, இவர் மேலே சொல்லப்பட்ட நல்லசித்தி ராஜுவின் 2-வது குமாரன் தம்முசித்தி ராஜுக்குப் பின்னர், இவர் விக்ரம சிம்ஹபுரம் என்ற நெல்லூர் ராஜதானியைப் பரிபாலித்து வந்தனர். திக்கன சோமயாஜியார் எழுதிவைத்த ராமாயணத்தில் இவர் 18 வயது காலத்தில் வெலநாட்டு ப்ருதிவீஸ்வர ராஜனுடன் கோரமான யுத்தம் செய்து அவர் தலையை வெட்டியதாக எழுதப்பட்டுள்ளன. இவர் நெல்லூரில் மல்லேஸ்வர தேவாலயத்திற்கு படப்பூர் கிராமத்தைத் தானமாகக் கொடுத்தும், ஊட்டுகூரில், ராவூர், கந்துகூர் தாலூகாக்களில் அநேக தானங்கள் கொடுத்து சாஸனம் எழுதிவைத்துள்ளார். இவர் காலத்தில் காஞ்சிபுரத்தில் நடந்த யுத்தாரம்பத்தில் கர்நாட சோமேஸ்வரனையும், பாண்டியனையும், காஞ்சீபுரத்தையும் ஜெயித்து 3-வது ராஜ ராஜனை சிம்மாசனபதியாக நியமித்தார். அதனால் இவருக்கு சோழஸ்தாபனாசாரியர் என்ற பட்டமும் பெற்றுள்ளனர். கிறிஸ்து சகம் 1233-வருஷத்தில் காஞ்சிபுரத்தில் அருளாளஸ்வாமிக்கு ஒரு தானம் செய்தனர்.

இவர் ஸ்ரீ வைஷ்ண பக்தசிகாமணி யென்றும், கவி நாயகன் என்றும் கீர்த்தி பெற்றனர். இவரிடத்தில் வெத்தயாமாத்யன் என்ற கவீஸ்வரனும் இருந்ததாக விக்ரமார்க்க சரித்திரம் கூறுகின்றன. சித்தநாமாத்யன் என்ற சேனாதிபதி இருந்ததாக நலகுமார சரித்திரத்தில் உள்ளன. இந்த சித்தநாமாத்யன் என்றவர், மந்திரி பாம்மனுக்கு 3-வது குமாரன். இந்த மஹாராஜனிடத்தில் கங்கய சாஹிணி என்ற சூராக்ரேசன் சேனாதிபதியாக இருந்தான். பின்னர், கணபதி தேவசக்ரவர்த்தியிடம் போய்ச்சேர்ந்து கொண்டார். இவர் கிறிஸ்து சகம் 1249-வருஷத்தில் நடந்த காஞ்சிபுர திக் விஜயத்தில் ஜடவர்ம பாண்டியனால் மரணமடைந்ததாகக் காணப்படுகின்றன. இவர் குலோத்துங்க ராஜா 31-வருஷ ஆட்சி காலம் கடப்பை ஜில்லா நந்தலூர் கிராம தேவாலயத்தில் தன் தந்தையின் புண்யத்திற்காக அகண்ட தீபதானம் செய்து வைத்துள்ளனர்.

இந்த திருகாள தேவ மஹாராஜனிடம் சேனுதிபதியாக இவருடைய மருமகன் திருகாளதேவனும் இருந்தான். இவர் தம் மாமனுரின் புண்யார்த்தமாக ஆத்மகூர் பெருமாண்டி தேவர் சாலிவாகன சகம் 1168-வருஷம் பிரதிஷ்டையை நடத்தி, அநேக மான்யங்கள் கொடுத்தும், 'கண்டகோபாலர' என்ற பிருதும் பெற்றுள்ளார். இவருக்கு விஜயாதித்யன் என்ற சகோதரன் சாலிவாகன சகம் 1169-வருஷம் ராவூர் தாலூக்காவில் ஒரு தர்மசாசனம் எழுதி வைத்தனர். இவரிடத்தில் போலி ரெட்டி என்றவர் பிரதிநிதியுமிருந்தார். இந்த திருகாளத்தி தேவனுக்கும், யாதவ ராஜாக்களுக்கும் சம்மந்தா சம்மந்தம் இருந்ததாகவும் காணப்படுகின்றன. திருகாளத்தி தேவ, சசிகுலசளுக்கி பிருதுகளைத் தரித்து வீரநரசிம்ஹ யாதவராஜனுடைய குமாரன் சிங்கப்பிள்ளையார், வீரராக்ஷசயாதவராயர், நரஸிம்ஹன் பார்யை புதோலிமா தேவி, சளுகிகுலமா தேவி ஆகிய இவர்களுடைய தானசாசனங்கள் காஞ்சீபுரம், காளாஸ்திரி, தக்கோலம், ராமகிரி, திருப்பாநூர், திருவோரியூர், செஞ்சி முதலான கிராமங்களில் காணப்படுகின்றன. சிங்கபிள்ளையார் கோதாவரி ப்ரதேச கனகாரி புரவராதீஸ்பர என்ற பிருதும், மற்றும் பல பிருதுகள் பெற்றுள்ளதாக காளாஸ்திரி சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர் வம்சத்தினர் பிள்ளையார் வம்சத்தினருடன் கலந்து போய்விட்டதாகத் தெரிகின்றன. இவர்களைத் தவிர சோழ ராஜ குலத்தவர் யாரும் யாதவ ராஜாக்கள் என்று சொல்லிக்கொண்டதாகக் காணப்படவில்லை. ஆதலால் தெலுங்கு சோழர்கள் எல்லோரும் யாதவர் என்று சொல்வதற்கு ஆதாரமில்லை. இந்த திருகாளத்தி தேவனுக்கு மனுமசித்தி ராஜு 2 என்ற குமாரன் தந்தைக்குப் பின் ராஜாவாகி அரசாண்டு வந்தனர் விக்ரமபுரி சிம்ஹாசனுதிபதியாக.

126) மனுமசித்தி ராஜு 2, இவர் அரசாட்சி காலம் கிறிஸ்து சகம் 1262-ஸூ இவர் தந்தையைப் போலவே மிக்க பராக்கிரமசாலியாக இல்லாவிட்டாலும், வாங்மய போஷகனுகவும் இருந்ததாக திக்கன சோமயாஜி பண்டிதர் நிர்வசன ராமாயணத்தில் விளக்கியுள்ளார். வித்வான்

களுக்கு ஆதார புருஷராகவுமிருந்து பாக நாட்டில் நெல்லூர் ராஜதானியைப் பரிபாலித்து வந்தனர். சாலிவாகன சகம் 1179-வருஷம் தன் தந்தையின் புண்யார்த்தமாக கோடூர் கிராமத்தைப் பிராம்ஹணர்களுக்கு அக்ரஹாரமாகக் கொடுத்தும் சாசனம் செய்து வைத்தனர். இதை வெலம வார் ஆக்ரமிக்க, பிராம்ஹணர்கள் மஹாராஜனிடம் பிரயாது செய்ய, அதன் மேல் அவர்களை விரட்டி அடக்கி பிராம்ஹணர்கள் வசம் செய்துவைத்தார். இவர் பார்யைப் பற்றிய விஷயம் திக்கன சோமயாஜி வர்ணித்துள்ள ஸ்லோ-கத்தில் காணப்படுகின்றன. இவர் தாயாதிகளாகிய அக்கன, பைய்யன என்றவர்கள் கூடி யுத்தம் ஆரம்பிக்க இவர் ஓடி கணபதி தேவ சக்கரவர்த்தியிடம் அடைக்கலம் அடைந்ததாக சித்தேஸ்வர சரித்ரத்தில் காணப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1250-ஹு இவர் தாயாதிகள் உற்சாகத்துடன் ஜடவர்ம சுந்தர பாண்டிய ராஜா நெல்லூர் பிராந்தியத்தில் திக்விஜயம் செய்த காலம், ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டதாக பல்லிகொண்ட கிராமத்தில் பாண்டிய ராஜா எழுதி வைத்த சாசனத்தில் காணப்படுகின்றன. அப்பொழுது இவர் கணபதி தேவனுடைய சகாயத்தால் பாண்டியராஜனை ஜெயித்து ராஜப்பிரதிநிதியாக இருந்தார். இவர் எழுதிவைத்த சாசனம் கந்துகூறு சீமையிலிருக்கின்றன. கநிகிரி சீமையில் ஆவலபாடி பட்டணத்திற்கு அதிபதியாக இருந்த யாதவ ராஜாவாகிய காடம ராஜாவுக்கும், இவருக்கும் பசுமாடுகள் மேய்கின்ற கொரை பூமிகள் விஷயமாக தகாதா ஏற்பட்டு பிரமாதமாக யுத்தமும் நடந்தன. அப்பொழுது இவரிடத்தில் திக்கன என்ற பிராம்ஹணன் சேனாதிபதியாக இருந்தார். இவர் ராஜாவினுடைய நிய-மனப்படி படையுடன் சென்று கட்கதிக்கன கோடமராஜனை வென்று வீரப்ரதாபத்துடன் வரவே வீரப்பெண்மணியாகிய இவர் பார்யை தண்ணீர் குடத்துடன், மஞ்சள், குங்குமம், சந்தனம் முதலான வஸ்த்துக்களுடன் எதிர் சென்று அவரைத் திருமஞ்சனம் செய்வித்துப் பாராட்டியதாகவும், இதே பிரகாரமாக திக்கன தாயாரும், தன் குமாரன் தோற்றதையெண்ணி பால் சோறு கொடுத்தபொழுது பரிகாசமாகப் பேசினளாம். அதனல் திக்கன மஹா உக்ரத்

துடன் பெருகிய சேனைகளைத் திரட்டி, உற்சாகத்துடன் மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்க, அந்த யுத்த களத்தில், திக்கன, காடமராஜு, சித்திராஜு ஆகியவர்கள் மடிந்துவிட்டதாகவும் சொல்லப்படுகின்றன.

இந்த மன்மசித்தி ராஜு 2, பின்னர் இவருடைய ஜேஷ்ட குமாரன் இம்மடி திக்க ராஜன் ராஜ்யாதிபதியாக வந்து மன்மசித்தியினிடம் சாலிவாகன சகம் 1180-வருஷம் கால மத்தியில் அல்லாடநாதன் என்ற முக்கண்டி காடுபல்லவன் என்றவர், ராஜப்பிரதிநிதியாக இருந்துப் பரிபாலனம் நடத்தியதாகக் காண்கின்றன. இவருக்கு இம்மடி திக்க ராஜனும், நல்லசித்தி ராஜன், கோபிநாதன் என்ற மூன்று பேர் புத்திரர் இருந்தனர்.

127) இம்மடி திக்க ராஜு, வாபு திருகாலதிதேவராஜு 2, இவரைத் திரிகால தேவன் என்றும், திக்கராஜன் என்றும் சொல்வர். இவர் இருமடி (இம்மடி) என்ற விட்டுப் பெயர் வைத்துக்கொண்டதாக, கிருஷ்ணா பட்டணத்தில் இவர் காலத்திய சாசனத்தால் தெரியவருகின்றன. இவருக்கு கண்டகோபாலன் என்ற பிருதும் உண்டு. இவருடைய விஜய அபிவிருத்திக்காக, இவரிடமிருந்த ராஜப்பிரதிநிதியாகிய முக்கண்டி பல்லத மதுசூதன தேவன் என்றவர் ஒரு அக்ரஹார சாசனம் 1181-வருஷம் செய்துள்ளார். சாலிவாகன சகம் 1201-வருஷம் கிருஷ்ணா பட்டணத்தில் வியாபாரிகள் சிலர் வியாபார வஸ்துக்களின் பேரில் சுங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு வந்த வருவாய்த் தொகையை அங்குள்ள சித்தேஸ்வர ஆலயத்திற்குக் கொடுத்து வந்ததாக காணப்படுகின்றன. பின்னர் இவர் ஸ்தானத்திற்கு கண்டகோபாலன் வந்ததாகவும் காணப்படுகின்றன.

128) ராஜு கண்டகோபால தேவுண்டு. இவருக்கு பொத்தபி சோட ஸ்ரீ ரங்கநாதுண்டனு பெயரும் உண்டு. திருபுவன சக்ரவர்த்தி என்ற பட்டமும் உண்டு. இவருடைய சாசனங்கள் நெல்லூர், குண்டூர் பிராந்தியங்களில் காணப்படுகின்றன. இவர் கிறிஸ்து சகம் 1279-ல் இம்மடி திக்க ராஜுக்குப் பின்னர், சிம்மாசனாதிபதியாயினார் என்றும்,

இவர் சிலகாலம் காகதிய ருத்ரம்ம தேவியினிடம் பிரதிநிதியாகயிருந்து கடைசியில் வீரப்ரதாபருத்ர சக்கரவர்த்தியால் ஜெயிக்கப் பெற்று சுமார் கிறிஸ்து சகம் 1314-ஹு வரையில் இவர் நெல்லூர் பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்ததாகவும், நெல்லூரிலுள்ள ஸ்ரீரங்கநாதஸ்வாமி தேவாலயத்திற்கு அநேக தானங்கள் செய்து சாசனம் எழுதி வைத்துப் பெயர் பெற்றனர். இவர் ஸ்ரீ வைஷ்ணவ பக்தியில் மிக்க ஈடுபாடு உடையவராகவும் விளங்கினர். இவர் ஆட்சியின் காலம் நெல்லூர் சோழருடைய ராஜ்யபரிபாலனம் மங்கிவிட்டதாகவும் சொல்லப்படுகின்றன. திரிபுவன சக்கரவர்த்தி விஜயகண்டகோபாலனுடைய சாசனங்கள் காஞ்சிபுரத்தில் காணப்படுகின்றன. அந்த சாசனங்களில் அவருடைய ஆட்சி 22 வருஷ காலம் வரை நடந்ததாகவும், இதனுல் சுமார் 1172-ஹு முதல் அங்கு பரிபாலனம் நடத்தி வந்ததாகத் தெரிகின்றன. இவரும் மன்மகண்டகோபாலனும் ஒருவராக இருக்கலாமென்றும், தவிர, கொணிதென, காஞ்சியிலும் பரிபாலனம் இருந்துவந்ததால் மன்மகண்டகோபாலனும், இருவரும் ஒருவராகவே இருக்கலாமென்று சரித்திரக்காரர் அபிப்பிராயம். இந்த மன்மகண்ட கோபால சரித்திரங்களிலும் காணப்படுகின்றன.

129) கொணிதென சோழராஜுலு, (காமசோழன்) நரசராவுபேட்டை தாலூகா கொணிதென கிராமத்தைக் கம்மநாட்டிற்கு ராஜதானியாக ஏற்படுத்திக்கொண்டு, ஒரு குலத்தவராகிய தெலுங்கு சோழராஜாக்கள் 11-வது சகாப்த முதல் ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தனர். இவர்கள் சாளுக்ய சக்கரவர்த்திகளுக்குப் பிரதிநிதிகளாக இருந்தனர். இந்த சாளுக்யர் கூட பொத்தபியிலிருந்து வந்தவரே. அதனுல் இவர்கள் பொத்தபி சோழ மதுராந்தக பிருதுக்களை பெற்றனர். இந்த சோழ வம்சாவழியினருக்கு மூலபுருஷன் தாசவர்ம. இவர் வம்சத்தில் பின்னர், காமசோழன் வந்து இராஜாவாகி முதலில் பொத்தபியிலிருந்து சாலிவாகன சகம் 1001-வருஷம் பொத்தபியில் ஒரு தானசாசனம் எழுதி வைத்தார். இதன் நகல் லோகல் ரிக்கார்டு வால்யம் 22-ல் எழுதப்பட்டுள்ளன. இவருக்கு மல்லபதேவி என்ற மனைவி

இருந்ததாக, இவர் குமாரர்களில் கன்னர தேவன் ஸ்ரீத்ராக்ஷா ராமபீமேஸ்வராலயத்தில் எழுதி வைத்த சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் முதலில் பொத்தபி யில் பரிபாலனம் நடத்திப் பின்னர் கம்ம நாட்டில் தன் ராஜதானியை நிர்மாணித்து, கொட்யதொன பட்டணத்தி லிருந்து சுமார் கிறிஸ்து சகம் 1115-வருஷத்தில் சாலிவாகன சகம் 1037-வருஷம் வரை பரிபாலித்து வந்ததாகக் காணப் படுகின்றன. இவரிடத்தில் பீமய்ய ப்ரகட யென்றவர் மந்திரியாக இருந்தார். சாலிவாகன சகம் 1033-வருஷம் சரியான கர வருஷத்தில் திரிபுராந்தக தேவாலயத்திற்கு 50 பசு மாடுகளையும். அகண்ட தீபதானத்தையும் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். (No. 262 of 1905, S I I Vol. VI No. 55)

130) கன்ன தேவுடு 1, காமதேவ சோழ குமாரனாகிய இவர், கம்ம நாட்டில் சில பாகங்களைத் தன் தந்தைக்குப் பின்னர் பரிபாலித்து வந்தனர். இவர் சாலிவாகன சகம் 1038-வருஷத்தில் மதுகம்பல்லி கிராமத்தை பாபட்ல பாவ நாராயணஸ்வாமிக்குத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். த்ராக்ஷாராமபீமேஸ்வராலயத்திற்கு சாளுக்ய விக்ரம வருஷம் 46-ல் தன் தாயார் பல்லமத தேவி யாருக்கும் தந்தையாகிய காமராஜனுக்கும் தர்மார்த்தமாக அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இவர் தம்பியாகிய சோடபல்லி ராஜனும் ஷ தேவாலயத் திற்கு 10 மாடலு (ரூ. 40) காணிக்கை சமர்ப்பித்தனர். இவர் கம்ம நாட்டை சுமார் சாலிவாகன சகம் 1056-ஸு வரை தம்பியுடன் ராஜ்யபரிபாலனம் நடத்தி வந்ததாகவும், இந்த கந்நர தேவருடைய குமார்த்தை காளாஸ்திரி தேவா லயத்திற்கு அகண்டதீபதானம் சமர்ப்பித்தனள் இது விக்ரம சோழனுடைய 12 வது ஸு ஆட்சிகாலத்தில் நடத் தப்பட்டன.

131) சோடபல்லி, இம்மஹாராஜனுக்கு பொன்னம தேவியென்றவளும், ஸ்ரீசதியென்ற பார்யைகளிருந்தனர். ஸ்ரீசதிக்கு நன்னெள சோழன் என்ற குமாரன் பிறந்தான்.

இவருக்கு காமசோழன் என்ற 2-வது குமாரன் இருந்தான். இந்த சோடபல்லிக்கு நன்னெ சோழன் என்ற குமாரனும், இவருக்கு சூரராஜனும், இவருக்கு ராஜராஜனும், இவருக்கு சோழமஹாதேவியினிடம் மல்லிதேவனும், இவருக்கு மஹா தேவியாரால் நன்னிசோழ, மல்லி தேவர்கள் பிறந்ததாகவும், இம்மல்லிதேவன் காகதி கணபதிதேவ சக்கரவர்த்தியினிடம் ராஜப்பிரதிநிதியாக குண்டூர் புரவராதீஸ்பரன் என்ற பிருது பெற்றுள்ளனர் என்றும் சாசனங்களில் தெரிய வருகின்றன. கந்துகூர் பிராந்தய கணபதி தேவ சக்கர-வர்த்திக்கு சாலிவாகன சகம் 1150-வருஷம் வரையிலும் இருந்ததாகவும், சோடபல்லிக்கும், மல்லிதேவனுக்கும் மத்தியில் 4-ம் பாகம், பாகத்திற்கு 25-வருஷங்கள் கூடின. சோடபல்லி சாசனம் சாலிவாகன சகம் 1050-ஷ் காலத்தவன் என்றும், இம்மஹாராஜனும், பொன்னமதேவியென்ற மனைவியும் சாலிவாகன சகம் 1057-வருஷம் பாபட்ல பாவ நாராயணஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்ததாகவும், இவருடைய குமாரன் காமசோழன் சாலிவாகன சகம் 1059-வருஷ கால முதல் யுவராஜாவாக இருந்ததாகக் காணப்படுகின்றன.

132) சோழபூபதி, இவர் காமசோழ புத்திரரில் ஒருவராகக் காணப்படுகின்றன. இவருடைய மனைவியார் சூராம்ப சாசனம் சாலிவாகன சகம் 1053-வருஷம் பாபட்ல பாவநாராயணஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் சமர்ப்பித்து உள்ளார்.

133) காமசோழன் 2, இவர் சோடபல்லி குமாரன் ஆவார். இவர் பாலனம் சாலிவாகன சகம் 1059-வருஷத்திலிருந்து காணப்படுகின்றன. இவருடைய பார்யை ஸ்ரீயாதேவி. இம்மஹாராஜா சாலிவாகன சகம் 1059-வருஷத்தில் கொட்யதொன பல்லேஸ்வரஸ்வாமிக்கு சில பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இந்த தேவாலயத்தை தன் தந்தையின் பேரால் கட்டியதாக சாசனங்களில் காணப்படுகின்றன. சாலிவாகன சகம் 1075-வருஷத்தில் ஸ்ரீயாதேவியும் ஒரு சாசனம் எழுதி

வைத்துள்ளார். அது சிதிலமாகிவிட்டபடியாலும், அது பூர்த்தி ஆனதாகவே காணப்படுகின்றன. அதன் மூலமாக ஸ்ரீயாதேவியினுடைய தாயார் ஜடசோழனுடைய பேத்தி யென்று தெரிகின்றன. சாலிவாகன சகம் 1085-வருஷத்தில் இந்த ஸ்ரீயாதேவியார் அநேக தானங்களைச் செய்ததாகக் காண்கின்றன. கொட்யதொன காமேஸ்வரஸ்வாமிக்கு 3 புட்ல 960 ஏக்ரா பூமியைத் தானம் கொடுத்தும், ராயூரில் 960 ஏக்ரா பூமியையும் இக்கோவிலுக்கு தானமாகக் கொடுத்து, இவர் சாலிவாகன சகம் 1075-வருஷத்தில் கேசவஸ்வாமிக்கு சோங்கரேவுல, உப்பலத்திலுள்ள பூமிகளை யுங்கொடுத்து, அகண்ட தீபமும் சமர்ப்பித்துள்ளனர். இம்மஹாராஜனுக்கு திரிபுவன மல்லதேவசோழன் என்ற குமாரன் பிறந்ததாக காணப்படுகின்றன.

134) திரிபுவன மல்லதேவசோழ மஹாராஜு, கொட்ய தொன ராஜதானியாக இவர் சாலிவாகன சகம் 1059–77-வருஷ மத்தியில் பரிபாலனம் செய்துவந்ததாக சாசனங் களால் தெரியவருகின்றன. இவருடைய தந்தையாகிய 2-வது காமசோழன் சாலிவாகன சகம் 1059-ஸு பின்னர் எவ்வளவு காலம் ராஜாவாக ஆண்டனர் என்று சொல்ல ஆதாரம் கிடைக்கவில்லையாயினும், யுவராஜாவாகயிருந்து பரிபாலித்து வந்தனர் என்று சொல்லலாம். இவருக்கு காமிதேவி, மாசலதேவியென்ற பட்ட மஹிஷிகள் இருந்தனர். இவருக்கு பிடுவராஜித்ய பிருதும் தெலுங்கு சோழராஜாக்களுடைய பிருதுகளும் உண்டு. சாலிவாகன சகம் 1064-வருஷம் கொட்யதொன சங்கராலயத்திற்கு கொட்யதொன கிராமத்தை தானமாகக் கொடுத்தும், பல்லேஸ்வராலயத்திற்கு குண்டியபூடி கிராமத்தைக் கொடுத்தும், இவர் பார்யையாகிய காமிதேவி சாலிவாகன சகம் 1070-வருஷம் அங்குள்ள கேசவஸ்வாமி தேவாலயத் திற்கு அகண்ட தீபதானம் சமர்ப்பித்தும், இவருடைய பார்யை மாசமாம்ப வயிற்றில் நன்னெ சோழன், கந்நர தேவசோழன், சோழதேவன் என்ற 3 பேர் குமாரர்கள் ஜெனித்தனர். இம்மஹாராஜா சாலிவாகன சகம் 1070-வருஷம் தன் தாயார் ஸ்ரீயாதேவிக்கும், தந்தை காமசோழ

ருக்காக வேண்டி கொட்யதொன பீமேஸ்வராலயத்திற்கு 6 புட்ல 1920 ஏக்ரா பூமியைக்கொடுத்தனர். இவரிடத்தில் காரியதரிசியாக விதனப்ரகட குமாரன் மல்லயப்ரகட இருந்தார். இவர் சாலிவாகன சகம் 1078-வருஷம் சுவர்க்க மடைய, இவர் பேரால் திரிபுவனேஸ்வராலயத்தைக் கட்டி, இவர் குமாரர்கள் மூவரும் மாதனிபாடியில் சில பூமிகளை அத்தேவாலயத்திற்குக் கொடுத்துள்ளனர். இந்தேவாலயம் பொப்புடியில் நிர்மாணிக்கப்பட்டன. இந்த வம்சத்தினர் ஷெயூரில் அதிகமாக வாசம் செய்து வருவதினால் அக்காரியம் நடைபெற்றன. கொட்யதொன கிராமம் தேவ அக்ரஹார மாகி விட்டது. இந்த பொப்பூடியில் வசிக்கின்றவர் சோழ வம்சத்தினரே. பொப்பூரிவார் என்று நாளடைவில் மாறி விட்டனர். கம்மவாரில் இன்றைக்கும் பொப்பூரிவார் என்ற குலத்தினர் இருக்கின்றனர். இதே போல கொட்யதொன வாசிகளும் மாறிவிட்டதாகக் காணப்படுகின்றன.

திரிபுவன மல்ல சோழனிடம் கவலிய அன்னயாமாத்யன் என்றவர் குண்டிமெட பாலகனுப் பிரசித்தி பெற்றனன். பாபட்ல பிரதேசத்தில் பாவநாராயணஸ்வாமி முதலான தேவாலயங்களுக்கு அகண்ட தீபதானங்கள் செய்து பக்தசிகாமணி யென்ற பட்டமும் பெற்றனர். இந்த திரிபுவன மல்ல சோழ மகாராஜனுடைய பட்டபு ராணிகளில் காமி தேவியார், அமராத்ரி நல்ல பூபதியின் பத்னி வென்னமாம்ப திருவயிற்றில் ஜெனித்தவள். இவர் மேலக்கு சாளுக்ய ராஜனாகிய 2-வது குலோத்துங்க சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாயிருந்து கம்ம நாட்டைப் பரிபாலித்து வந்தனர் என்பது பிரசித்தம்.

135) சோடபல்லி 2, இவர் 3-வது காமசோழனுடைய குமாரனாகக் காணப்படுகின்றான். இவருக்கு காமிதேவி என்ற பார்யையும் இருக்கின்றனள். இவர் பாக நாட்டில் சில பிரதேசங்களைப் பரிபாலித்து வந்த காலம், திரிபுவன மல்ல சோழனும் கம்ம நாட்டை ஆண்டுவந்ததாகக் காணப் படுகின்றன. இவர் சாலிவாகன சகம் 1067-வருஷத்தில் மன்னேபல்லியில் மல்லேஸ்வர தேவாலயத்திற்கு ஷெ கிரா-மத்தைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார்.

சாலிவாகன சகம் 1069-வருஷத்திலும், 1088-வருஷம் மற்றும் சில தானங்கள் செய்துள்ளார். இவருடைய பார்யை காமி தேவியார் சாலிவாகன சகம் 1076-வருஷத்தில் கள்ளேபல்லி ஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் வழங்கி உள்ளார். இவர் மன்னேபல்லி சாலிவாகன சகம் 1088-வருஷம் எழுதிவைத்த சாசனத்தில் தன்னுடைய வம்சத்தை பற்றி விளக்கியுள்ளார். அதன் விபரம், பொத்தபி நன்னெ சோழனுக்கு, வெங்க சோழன், இவருக்கு காமசோழன், இவர் குமாரனுகத்தான் பிறந்ததாகவும் எழுதியுள்ளார். திரிபுவனமல்லதேவனுடைய தந்தையாகிய காமசோழனும், இவர் தந்தையாகிய காமசோழனும் ஒருவர் என்பதற்கு ஆதாரம் சாணப்படவில்லே. எப்படியெனில் இவருடைய தந்தை வெங்க சோழன் குமாரன் என்றும், நன்னெ சோழனுடைய பேரனுமாயிருக்க, அவர் தந்தை சோடபல்லி குமாரன் ஆகவும், பாட்டன் பொத்தபி காமசோழனுடைய குமாரன் என்று காணப்படுகின்றன. கொணிதென ராஜதானியைப் பரிபாலித்த சோடபல்லியும், இவரும் ஒருவரே என்பதற்கு ஆதாரம் கிட்டவில்லே. அவருடைய பரிபாலனம் கொணிதென ப்ராந்தியத்தில் சாலிவாகன சகம் 1059-வருஷத்திற்குப் பின்னர் காணப்படவில்லே.

136) நன்னெ சோழன் 1, இவர் சோடபல்லி ராஜனுக்கு ஸ்ரீசதியினிடம் ஜெனித்தவர். இவர் எழுதி வைத்த குமாரசம்பவம் என்ற கிரந்தத்தில் தன்னேக் குறித்து எழுதி வைத்துள்ளார். இவருக்கு மல்லிகார்ஜுன யோகி குருவாக இருந்தார். இவர் குமாரசம்பவ காவியம் அவருக்கே கியாதியைக்கொடுத்துள்ளன. சாலிவாகன சகம் 1057-வருஷ முதல் 70-வருஷ காலத்தவரென்று காணப்படுகின்றன. நன்னெ சோழனுடைய பார்யை காமபராணியார் எழுதி வைத்த சாசனம் சாலிவாகன சகம் 1076-வருஷம். இவ்வம்மையார் இவருடைய மட்டமஹிஷியோ அல்லது 2-வது நன்னெ சோழனுடைய பட்டமஹிஷியோ என்று காணமுடியவில்லே.

137) நன்னெ சோழன் 2, இவர் திரிபுவன மல்லதேவ மகாராஜனுடைய ஜேஷ்ட குமாரன் ஆவார். இவர் சாலிவாகன சகம் 1078-வருஷம் பொப்பூரில் எழுதி வைத்த சாசனத்தைப் பற்றிக்கூறுவது, இவரிடத்தில் குண்ட மந்திரி குமாராகிய அன்னய்ய ஒரு மந்திரியாக இருந்தார். இந்த மஹாராஜா சிவபக்தராக இருந்தார். இவர் சாலிவாகன சகம் 1073-ஸு சாலிவாகன சகம் 1081-ஸு தன் தாய் தந்தையர் நிமித்தமாக கொட்யதொன கேசவ ஸ்வாமிக்கு சில பூமிகளைக் கொடுத்து சாசனங்களை எழுதி வைத்தனர். இவருடைய சகோதரனுகிய 2-வது கன்னர தேவன் கஞ்செர்ல பீமேஸ்வராலயத்திற்கு 12 பசு மாடுகளைக் கொடுத்தும், அகண்ட தீபதானமும் செய்துவைத்தனர். இவரிடத்தில் சாலிவாகன சகம் 1081-வருஷ காலத்தில் நல்லப்ரகட என்றவர் மந்திரியாக இருந்தார். இந்த கன்னர தேவனுடைய வம்சத்தினர் சிலர், கஞ்செர்ல பிராந்தியத்தில் வாசஞ் செய்து வந்தனர். கம்மவாரில் இப்பவும் கஞ்செர்லவார் என்ற வம்சத்தினர் இருக்கின்றனர்

நன்னெ சோழனும், கன்னர தேவனும் வெல நாட்டு 2-வது ராஜேந்தர சோழனுக்கு ராஜப்பிரதிநிதிகளாக கம்ம நாட்டைப் பரிபாலனம் செய்துவந்தனர். கன்னர தேவன் ஒரு சமயம் சுதந்தரம் பெற ஏற்பாடு செய்து வருகையில் இதை அறிந்து ராஜேந்தர சோழன் வேறு சேனுதிபதிகளை அனுப்பி அவரை அடக்கி வசப்படுத்தி வந்தனர்.

138) கீர்த்திராஜு, மல்லிதேவ சோழராஜு, இவர் சாலிவாகன சகம் 1117-ஸு காலத்தவர். இவர் தெலுங்கு சோழ ராஜாக்களுடைய பிருதுகளையெல்லாம் தரித்தனர், ஜலமூர் என்ற பெயருள்ள விப்பர்ல கிராமத்தில் தேவாலயத்திற்கு இவர் சாலிவாகன சகம் 1117-வருஷத்தில் ஒரு தானம் செய்து சாசனம் எழுதி வைத்தனர். இக்குலத்தவர் இருக்கின்றனரா, இல்லையா என்பது தெரியவில்லை. கம்ம வாரில் கொசராஜு, முப்பராஜு, கொம்மராஜு என்றவர் இருக்கின்றனர். ஆயினும் கீர்த்தி ராஜுவார் காணப்பட படவில்லை. இவர் யோபிலிசித்தி பூர்வீகரில் சேர்ந்தவர் என்று தோன்றுகிறது.

139) சாகி வெங்கன வம்சம், இவருடைய குமாரன் பல்லெராஜு, இவர் குமாரன் கட்ணருவங்க்கய்யராஜு, இவர் குமாரன் நன்னெசோழன், இவர் குமாரன் சூசுபராஜு, இவர் குமாரன் இராஜமஹேந்தர பொத்தபி சோழனென்றும், இவர் நன்னூர் ஓம்கார தேவிக்கு சாலிவாகன சகம் 1010-வருஷத்தில் அநேக பூமிகளைக் கொடுத்து சாசனம் செய்து வைத்துள்ளார். இவர் சூரிய குலத்தவனென்றே குறித்துள்ளார். இந்த வம்சத்திற்கும் கொணிதென சாக தெலுங்கு சோழருக்கு மூல புருஷனாகிய பல்லய்ய சோழனுக்கும் சம்மந்தமிருக்கலாம் என்றும், பரிதெபூடி சாசனத்தில் முதல் நன்னெ சோழனுடைய பெயரும், இவர் குமாரனாகிய சூரபராஜனுடைய பெயருமிங்கு சரியாக வரினும், இதற்கு மேலே வம்சாவழி சரியாக ஒத்துவரவில்லை. ஆயினும் இதை நன்றாகப் பரிசோதனை செய்யின் தெலுங்கு சோழ வம்சத்திற்கு ஒத்துவருமென்று சரித்திரக்காரர்கள் அபிப்பிராயம். இது மற்றொரு பிரிவு ஆயினும் ஆகலாம்.

140) தெலுங்கு பிஜ்ஜன பேரன் மல்லி தேவுடு, பொத்தபி ராஜதானியில் பாகநாட்டு 21 ஆயிரம் கிராமங்களைச் சேர்த்து இவர் ராஜாவாக இருந்து பல்லவ ராஜாக்களை ஜெயித்ததாக சாலிவாகன சகம் 1146-வருஷம் ஓபிலிசித்தி சாசனத்தில் காணப்படுகின்றன, ஓபிலிசித்திக்கும், இவருக்கும் மூன்று தரம் மாத்திரம், இருந்து வந்ததினால் இவர் சுமார் சகம் 1070—வருஷ காலத்தவராகக் காணப்படுவதால் இவர் தெலுங்கு பிஜ்ஜன குமாரனுடைய குமாரன் என்று சொல்வதற்கு ஆதாரமில்லையாயினும், ஷை சாசனப்படி இவர் பேரனென்றே ஏற்படுகின்றன. காகதி கணபதி தேவ சக்கரவர்த்தியின் பிரதிநிதிகளில் ஒருவராகிய மல்லி தேவுடு எழுதி வைத்த சாசனத்தில் தனது தந்தையார் கன்னெ சோழனென்றும், பாட்டனார் மல்லிதேவுடு என்றும் குறித்துள்ளன. ஆதலால் இவர் சாலிவாகன சகம் 1070-வருஷ காலத்தவர் என்பதற்கு யாதொருவிதமான சந்தேகமுமில்லை.

141) பொத்தபி சித்தி பூபதி, மல்லி தேவுடு, மல்லி தேவருடைய ஜேஷ்ட குமாரனுகிய சித்தி சோழ ராஜா, தன் தந்தையின் காலத்திற்குப் பின்னர், பொத்தபி ராஜதானி யாக பாகநாட்டை ஆண்டு வந்திருப்பார். இவரைக் குறித்தும், இவரது தம்பியைக் குறித்தும் ஒபிலிசித்தி சாசனம் வர்ணித்துள்ளன. இவர்களிருவரும் சாலிவாகன சகம் 1100-வருஷ காலத்தவரென்று கூறலாம்.

142) ஒபிலிசித்தி 1, மல்லிதேவுடு, இவர்களிருவரும் மேலே சொல்லப்பட்ட மல்லிதேவனுடைய குமாரர்கள். இவர்கள் சேனுதிபதிகளாகப் பிரசித்தி பெற்றவர்களாவார். இவர்களைக் குறித்தும் ஒபிலிசித்தி 2-வது சாசனத்தில் கூறப்பட்டுள்ளன. சாலிவாகன சகம் 1120-ஷு காலத்தவர் மல்லிதேவருக்கு கௌரிஸ்ரீ என்ற மனைவியும், இவர் கர்பபத்தில் 2-வது ஒபிலிதித்தி சோழன் ஜெனித்து காலாகாலத்தில் நல்ல பிரசித்தி பெற்றுன்.

143) ஒபிலிசித்தி தேவசோழ ராஜு 2, இவர் காகதி கணபதி தேவ சக்கரவர்த்தியின் ராஜப்பிரதிநிதிகளில் ஒருவராக இருந்து, அவர் நடத்திய யுத்தத்தில் சேனுதிபதி யாக இருந்து பிரபலமான பெயர் பெற்று, கம்ம நாட்டிற்கு அதிபதியாயினுர். இவருக்கு டெங்கணுதித்ய, ஜெகதொப்ப கண்ட, கீர்த்திநாராயண, உரையூர் புரவராதீஸ்பர என்ற பல பிருதுகள் தரித்தனர். இவர் சாலிவாகன சகம் 1146-வருஷத்தில் கொட்யதொன பட்டணத்தில் ஸ்ரீ சங்கரஸ்வாமிக்கு மொகடசெருவு என்ற பூமியை கணபதி தேவனுடைய புண்யார்த்தமாக தானம் கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர். அந்த சாசனத்தில் தன் வம்சாவழியின் பிரதாபத்தை விளக்கியுள்ளார். கவி வர்ணனைகளின் விபரம்: கரிகால ராஜனுக்கு மஹிமான் என்றவரும், இவருக்கு 2-வது கரிகாலன் வம்சத்தில் சோழ பிஜ்ஜன, இவருக்குப் பேரனுக மல்லிதேவனும், இவருக்கு பொத்தபி சோழ சித்திபூபதி, மல்லிதேவுலு, அதில் சித்திபூபதிக்கு சோமேஸ்வர மல்லிதேவுலு, சித்திபூபதி தம்பியாகிய மல்லி தேவினிகி, ஒபிலிசித்தி மல்லிதேவர் என்றவர்களும், இதில்

மல்லிதேவனுக்கு கௌரீஸ்ரீ மஹாதேவியின் கர்ப்பத்தில் தானும் பிறந்ததாகவும் எழுதப்பட்டுள்ளன.

144) சோழ மல்லிதேவடு, சாலிவாகன சகம் 1212-ல் இருந்து சகம் 1290-ல் காலத்தில் இவர் சாஸனம் தர்பி தாலுக்காவில் காணப்படுகின்றன. பிரதாபருத்ர தேவ சக்ரவர்த்தியின் புண்யார்த்தமாக இந்த வருஷம் ஷெ தாலுக்கா பீமவரம் கிராமத்தில் கோபாலநாதஸ்வாமி கோவில் பிரதிஷ்டை செய்து, சில பூமிகளை சாஸனம் செய்து கொடுத்து சாஸனம் எழுதி வைத்துள்ளார். அதனால் இவர் காகதிய 2-வது பிரதாபருத்ர சக்ரவர்த்திக்குப் பிரதிநிதி என்பது ஸ்பஷ்டமாகக் காணப்படுகின்றன.

145) மனுமகண்ட கோபால சோழராஜா. இவர் தக்கசித்தி சோழ குமாரன், காகதிய 2-வது பிரதாபருத்ர சக்ரவர்த்தியினிடம் ராஜப்பிரதிநிதியாகவிருந்து காஞ்சீபுர பாலகனாயிருந்தார். இவருக்கு மகாமண்டலேஸ்வர, புஜபல வீர, நித்யசத்யப்ரதாப, சேவளகடக, வேணுபள்ள என்ற அநேக பிருதுகள் உண்டு. பாண்டிய ராஜாக்கள் சிலர் ஒரு சமயம் படையெடுத்து வந்து கோட்டையை முற்றுகையிட்டு ஜெயிக்க, பிரதாபருத்ர சக்ரவர்த்தி முப்பிடிநாயகுடு ரேசெர்ல நாசநாயன என்ற சேனாதிபதிகளை வரவழைத்து தக்க சைனியங்களையும் கொடுத்து, பாண்டிய ராஜாவின் மீது சென்று அவர்களை விரட்டியடித்து ஜெயம் பெறவேண்டுமென்று கட்டளையிட, இவர்கள் சதுரங்க சைனியங்களுடன் சென்று போராடி அவர்களை அதம் செய்து, ஜெயம் பெற்று காஞ்சீபுர ராஜ்யத்தை நிலைநிறுத்தி, பழைய ராஜாவையே நியமித்தனர். இவர் சாலிவாகன சகம் 1219-வருஷம் கொட்டதொலு ஸ்ரீ சென்னகேசவஸ்வாமிக்கு திருவாராதன காரியங்களுக்காக பதுவுகண்ட சித்தாபுரத்தில் 20 புட்டி பூமி 6400 எக்ராவைக் கொடுத்து தானசாஸனம் எழுதி வைத்தும், இவர் தன் தந்தைக்கு 5 (ஐந்து) புத்திரர்களில் மத்தியில் ஜெனித்தவரென்று சாஸனத்தில் குறித்துள்ளார். இவரும் ராஜகண்டகோபாலனும் ஒருவராக இருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகின்றனர்.

146) மற்றும் சில தெலுங்கு சோழ ராஜாக்கள், சாலிவாகன சகம் 1058-௵ காலம் பொத்தன சோழராஜன் என்றவரும் பின்னர் சா-ச 1078-௵ காலம் அவர் குமாரனுகிய ருக்கி தேவ சோழன் கம்மநாட்டின் சில பிராந்தியங்களுக்கு அதிபதியாயிருந்தாக அவர்கள் சாசனங்களில் காணப்படுகின்றன. கொசெர்ல கோட்டை பிராந்தியங்களில் சாலிவாகன சகம் 1089-௵ பண்ட தேவ சோழராஜனுடைய சாலிவாகன சகம் 1150-௵ காலம் எனிகிரி தாலூக்கா குட்டூரில் சோழ தேவ, சோழ, சிக்கி சோழர்களுடைய சாலிவாகன சகம் 1176-௵த்தில் ஹரிதேவ சோழனுடைய பரிபாலனம் காணப்படுகின்றன. இவர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் சில கிராமங்களுக்கு அதிகாரிகளாக இருந்ததாகக் காணப்படுகின்றன. இதில் சோழதேவ, சோழ, சிக்கி ராஜாக்கள் குட்டூரில் நீலகண்டேஸ்வர தேவாலயத்திற்கு சில தோட்டங்களைத் தானம் கொடுத்துள்ளனர் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. தவிர இவர்கள் அல்லாயக் காகதி கணபதி சக்ரவர்த்தியினிடம் கன்னர சோழன் ராஜப் பிரதிநிதியாக இருந்து பார் ஆண்டதாக நந்தலூர் சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன.

147) மேற்கு சாளுக்ய சக்ரவர்த்திகளுக்குப் பிரதிநிதிகளாகத் தெலுங்கு சோழர் (சங்கரசசோழ மஹாராஜா) இவர் 11-வது சகாப்த காலத்தில் தோன்றியவர். த்ரைலோக்யமல்லன் என்ற மேற்கு சாளுக்ய சக்ரவர்த்தியின் பிரதிநிதிகளில் இவர் இருந்தார். இவருக்கு சமதிகத பஞ்ச மஹாசப்த, மஹாமண்டலேஸ்வரா, மத்யதேசாதீஸ்வர, ஜய்யனவம்சான்வய, கிகாலகுல ரத்ன ப்ரதிப, குமாரங்குச நய்யனசிங்க, காஞ்சிபுர திரிபுரமாஹேஸ்வர என்ற பிருதுகள் உண்டு. இதனுல் இவர் ஒரு மஹாமண்டலேஸ்வரன் என்பது ஸ்பஷ்டம் ஆகின்றன. இவருக்கு பத்மலதேவியென்ற பார்யை உண்டு. இவர் ஜய்யண வம்ச நீலகண்ட தேவனுடைய குமார்த்தி. இவருக்கும் சங்கரச சோழனுக்கும் ஜெனித்த மல்லஹாரணி தேவி தெலிங்கானுவில் கங்காபுர நம்பனுண்டயாடிர தேவாலயத்திற்கு சில பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இந்த கிராமம் நைஜாம் ராஜ்யத்தில் உள்ளன.

148) ராஜாதித்யரச சோழ மஹாராஜு, இவரும் ஒரு மண்டலேஸ்வரராக கல்யாணபுர ராஜதானியில் மாடிசிர கிராமத்திய பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்தார். திரிபுவன மல்ல மேற்கு சாளுக்ய சக்கரவர்த்திக்கு இவர் பிரதிநிதியாக இருந்து தன் பெயரால் ராஜாதித்யேஸ்வர தேவாலயத்தைக் கட்டி சாலிவாகன சகம் 8-ஞ கிறிஸ்து சகம் 1083-ஞ அநேக பூமிகளையும், சில சாமான்களையும் கொடுத்துள்ளார். இவருக்கு விரோதி மண்டலிக காதன மஹேச, சுகவிபகநிக்ஷகரரிதசஹகாரமனம், நந்தனவினேத லாவகம், கண்டரோரணம், விஜயராதிதம், யஜயசஹரணம் என்ற பிருதுகளும் பெற்றுள்ளனர்.

149) நிருகனி சோழ மஹாராஜு, இவரும் ஒரு மண்டலாதிபதியாவார். த்ரைலோக மல்ல சக்ரவர்த்தியின் பிரதிநிதிகளில் ஒருவர் ஆக தெலிங்காணவில் அலம்புற கிராமத்தில் இவர் ஒரு சாசனம் எழுதி வைத்தனர். அதில் இவர் தெலுங்கு சோழர் தரித்திருந்த பிருதுகளைத் தரித்துக் கொண்டதாக உள்ளன. காஞ்சீபுர த்ரிபுற மஹேஸ்வர பிருது ஒன்றை சங்கரச சோழனைப் போலவே இவரும் பிருது களைத் தரித்துக் கொண்டனர். அந்த பிராந்தியத்திற்கு அதிகாரியாக இருந்தார்.

150) மல்லரச சோழ ராஜு, இவர் தெலுங்கு சோழ ராஜாக்களில் கோடூறு கிளையைச் சேர்ந்தவர். இவர் த்ரிபுவன மல்லன் என்ற மேற்கு சாளுக்ய சக்கரவர்த்தியி னிடம் ஒரு மஹாமண்டலேஸ்வரனாக இருந்து இவருக்கு மஹாமண்டலேஸ்வர சலுவானெ கட்டம், கோடூர்புரவேஸ் வர, பதிஹிதரத்னுகர, ரிபுதிமிரதிவாகர, தியதுத்தர ஹ்ரு தனசிங்க, தியாளநாகமநய்யன கந்தவார என்ற பிருதுகள் உண்டு. தவிர கல்கதீயுறவரேஸ்வர, அநேக சமரசகண்ட னேபலப்த, விஜயலக்ஷ்மீ சமாலிங்கித, விசாலவக்ஷஸ்தலம், க்ஷத்ரியபவித்ர, புவனத்ரிநேத்ர என்ற பிருதுகளுமிருந்ததாக மற்றொரு பக்கம் எழுதப்பட்டுள்ளன. தெலுங்கு சோழ ராஜாக்கள் கல்கடி புரவரேஸ்வர பிருதுகளையும் தரித்திருந் தனர். அதே போல இவரும் தரித்தனர். இந்தக் கோடூர் குலத்தவருக்கு சோழர் கூட கொணிதென குலத்தவரைப்

போலவே தாசவர்ம சந்ததியார்களும் காணப்படுகின்றனர். இந்த விஷயங்களைக் கொலனுபாக சாசனத்தில் இக்குலத்தவர் எழுதி வைத்துள்ளார்கள். தவிர இம்மஹாராஜா சர்வஜித்து வருஷத்தில், மப்பளபூடி ஸ்ரீ பரம்ஹேஸ்வரஸ்வாமிக்கு பஞ்ச உபசார பூஜைக்காக வேண்டி, விதரணேந்த்ர ராசியென்ற பண்டிதருக்கு சில பூமிகளைத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். மேற்கு சாளுக்யர் நடத்திய யுத்தத்தில் இவர் சேனுதிபதியாக இருந்து ஜெயம் பெற்றதாக இவருடைய பிருதுகளால் தெரியவருகின்றன.

151) குண்டூர் ருத்ரயன சோழராஜு. இவர் ஒரு மஹாமண்டலேஸ்வர பிருது தரித்தவர். இவர் தெலிங்கானுவில் நீலகொண்டபல்லி என்ற பிரதேசத்தை ஆண்டு வந்ததாக சாலிவாகன சகம் 1047-ஸு இவர் ராஜ்ய பரிபாலனம் செய்து வருகையில், அந்த கிராமத்தில் பெத்த செருவுதூமு பக்கத்திலுள்ள பூமிகளைக் கடத்தூர் மஹாலிங்கேஸ்வர தேவாலயத்திற்கு தானமாகக் கொடுத்து சாசனம் செய்துள்ளார். இந்த பூமி கொண்டபல்லி கம்பம் மெட்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு 18 மைல் தூரத்திலிருக்கின்றன.

152) கந்தூரி உதயன சோழராஜு, இவருங்கூட ஒரு மஹாமண்டலேஸ்வரராக இருந்து, வீரமாஹேஸ்வர, கோடூர்புறவரேஸ்வர, சூர்யவம்சோத்பவ, குலதிலக, கஸ்யப கோத்ர, கரிகாலன்வய என்ற பிருதுகள் உண்டு. அதனுல் இவர் கோடூர் தெலுங்கு சோழ குலத்தவரென்றும், இவரிடத்தில் சுங்க அதிகாரிகளும், தண்டநாயக, நல்ல சித்தமய்ய, அரசித்தமய்ய என்றவர்கள் சாலிவாகன சகம் 1084-வருஷத்தில் கோடூரில் ஸ்வயம்பு சோமநாதருக்கு தீப நைவேத்தியத்திற்காக கங்காபுரியில் சுங்கங்களை தானமாகக் கொடுத்தார். அக்காலத்தில் கோடூரில் கோகர்ண சிங்க நாணயங்களிருந்தன. இந்த சுங்க அதிகாரிகள் சாசனம் மஹாபூபு ஜில்லாவில் ஜடசர்ல கிராமத்தில் உள்ளன. இவருக்கும் காகதீய ருத்ரதேவ மகாராஜனுக்கும் யுத்தம் நடந்த காலத்தில் ருத்ரதேவன் ஜெயம்பெற்று பட்டணத்தை நாசம் செய்து அந்த இடத்தில் ஒரு தடாகத்தை உண்டாக்கினுர். அதனுல் இவருக்கு வியாதி பீடித்து இறந்து போகவே

இவர் குமார்த்தி பத்மாவதியை ருத்ரதேவன் விவாகம் செய்து கொண்டார். தெலுங்கு சோழ கன்னிகையாகிய இவளை துர்ஜய குலத்தவன் ஆகிய ருத்ரதேவன் விவாகம் செய்து கொண்டதைப்பற்றி, இவர்களிருவரும் ஒரு குலத்தவரென்று தெரிகின்றன. உதயனசோழன் மஹா துன்மார்க்கன் என்றும், இவர் தாயார் முறையாகிய பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டனர் என்று ருத்ரதேவ சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கோடூர் குலத்தவர் ஆகிய சோழர்களிலிருந்து கம்மவார் என்ற பிரிவினர், கோடூரிவார், கந்தார, கந்துலுகுன்ட, கந்தால, குந்தூறு முதலான வீட்டுப் பெயர்கள் ஏற்பட்டன என்று முதல் பாகத்தில் குறிப்பிட்டுள்ளோம். ஏருவவார் என்றவர்களும் இந்த வம்சத்தைச் சேர்ந்தவரேயாவார்.

153) சந்தராதித்ய சோழ ராஜு, இவர் சாசனம் சாலிவாகன சகம் 1060-ஷு காலத்தவர். சக்கரகூட ராஜ்யாதிபதியாகிய தாராவர்ஷனிடத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்து வந்தனர். இவரும் தெலுங்கு சோழ வம்சத்தைச் சேர்ந்தவரேயாவர், இவர் வரசூர பட்டணப்ராந்தியத்தை ஆண்டுவந்தனர், அப்பட்டணத்தில் இவர் சாலிவாகன சகம் 1060-வருஷத்தில் சந்தராதித்ய சமுத்ரம் என்ற தடாகத்தை நிர்மாணித்து தன் பேரால் ஒரு சிவாலயத்தைக் கட்டி, அதற்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்து வட்ட நாட்டில் ஒரு கிராமத்தை தாராவர்ஷனுடைய அனுமதியின் பேரில் தானசாசனம் செய்துவைத்தனர்.

154) பத்ரபூபாலன், இவர் பச்சிம சாளுக்ய சக்கரவர்த்தியாகிய புவனைகமல்லனிடம் பிரதிநிதியாக இருந்து வந்த ஒரு தெலுங்கு சோழ ராஜு, இவர் வித்வத் கோஷ்டிக்குத் தக்க போஷகராகவுமிருந்து நல்ல பட்டப்பெயர் பெற்றனர். இவர் நீதி சாஸ்தரம் முக்தா வழி, சுமதி சதகம் முதலான கிரந்தங்களை எழுதியுள்ளார். நீதிசாஸ்தர முக்தா வழி ஸ்லோகம், (கந்தபத்) ஸ்ரீவிபுண்டகர்விநாமி, க்ஷ்மாவரதளறேபலப்த ஜெயலக்ஷ்மீசம், பாவிநுண்ட சுமதிசதகமு, காலிஞ்சினப்ரோடகாவ்ய, கமலாசனுண்டன்.

இவருக்கு ராஜராஜ மஹேசுரன் என்றும், ஜகதிசாபர ஜஸ்ஸன் என்றும், திரைக்கர சதுராசிஸ்வர என்றும், ரவி குல சேகரன் என்ற பிருதுகளும் உண்டு. இவரை பத்தேன என்று அழைப்பதும் உண்டு. இவர் எந்த இடத்தில் யுத்தம் செய்து ஜெயம் பெற்றார் என்பது காணப்படவில்லை. இவர் வேலை நாட்டைப் பரிபாலனஞ் செய்து வந்ததாக அபிப்பிராயம்.

155) புன்னூர் ஹங்கைசரச சோழ மஹாராஜா, இவர் மேற்கு சாளுக்ய சக்ரவர்த்தியாகிய திரிபுவன மல்லதேவ னுக்குப் பிரதிநிதியாக இருந்து புன்னூர் பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்ததாகவும், இவர் சாளுக்ய விக்ரமனின் 29-ம் தன்னுடைய குருவாகிய ஹஜ்ஜ கலசேன பட்டாசாரிய னுக்கு சில பூமிகளைத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். இவருக்கு சமதிகத பஞ்சமஹாசப்த, மஹாமண்டலேச்வர, அகோத்யசிம்மாசன, வராஹலாஞ்சன, புடகூர்புறவராதீஸ்வர, கோவிந்த. நரசிம்ஹா. பத்மாவதிலப்தவரப்ரசாத என்ற பிருதுகள் பெற்றுள்ளனர். இந்தப் புன்னூரையே வீட்டுப் பெயராக வைத்துக்கொண்டதாக இவர் சாசனத்தில் காணப்படுகின்றன. இந்த வம்சா வழியினரே பொண்டுர்களர் என்று முதல் பாகத்தில் தெரிவித்துள்ளோம். புன்னூர் மைசூர் ராஜ்யத்தில் உள்ளன.

156) எருவவார், கலிகால வம்சத்தினரும், கோடூரை ராஜதானியாக வைத்துக்கொண்டு ஆண்டு வந்ததாகவும், தெலுங்கு சோழ ராஜ தந்திரியார், இந்தக் கோடூர் குலத்து தாசவர்ம வம்சத்தியரும், இந்தக் கோடூர் சோழ ராஜாக்களுடைய சிலர் சரித்திரங்களைச் சொல்லியுள்ளோம். இவர்களில் எருவப்ராந்தங்களை ஆண்டவர்களே இந்த எருவவார் வீட்டுப் பெயர்களை வைத்து வந்தனர். இந்த வம்சத்தில் 12-வது சதாப்த முதல் பிரசித்தி பெற்று வந்தவர்களுடைய சரித்திரமே நமக்கு ப்ரபலம், ப்ரமாணம் ஆகின்றன.

157) எருவதொண்டயராஜு, கிறிஸ்து சகம் 1121-ஆம் இந்த வம்சத்தினரில் தொண்டயராஜு, மேற்கு சாளுக்ய சக்கரவர்த்தியாகிய திரிபுவன மல்லதேவனுக்குப் பிரதிநிதியாக இருந்துவந்தார். இவர் ஒரு மஹாமண்டலேஸ்வரன், இவர் பஞ்சமஹாசப்த கௌரவ பிருதுகளைத் தரித்து வீர மகேஸ்வரராய் இருந்தவர். இவருக்கு கோடூர்புரவராதீஸ்வர என்ற பிருதும் உண்டு. இவருடைய பார்யை மைலம்ப தேவி சாலிவாகன சகம் 1043-ஆம் ஸ்ரீ திராக்ஷாராமபீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபம் சமர்ப்பித்து ஸ்வாமியை தரிசித்து வந்தனள். வேங்கி. சாளுக்ய ராஜ்யங்கள் அல்லகல்லோலமாக இருந்த காலமே. மேற்கு சாளுக்ய ராஜாக்களுடைய பிரதிநிதிகள் இப்பிராந்தியத்திற்கு வந்ததாகக் காணப்படுகின்றன. காகதிய ருத்ரம்ம தேவி சக்ரவர்த்தினி காலத்தில் எருவமல்லி தேவசோழனும், மற்றொரு தொண்டயராஜனும் பிரதிநிதிகளாக இருந்தனர். அவர் அந்த அம்மையார், சேனாதிபதிகளில் அம்பதேவுண்டு, கோநகந்நா ரெட்டியும் ஜெயம் பெற்றதாகக் காணப்படுகின்றன. அவர்களும் இந்த எருவ வம்சத்தினரே.

158) எருவ பீமராஜு, கிறிஸ்து சகம் 1200-ஆம் காலம் இந்த எருவ வம்சபீமராஜன் என்றவர் மிக்க பிரசித்தி பெற்றவராக இருந்தார். இவரைத் தவிர மற்றொரு பீமராஜனும் மிக்க பிரசித்தி பெற்றனரென்று 14-வது சகாப்த காலத்தில் கவிநாதர்கள் வர்ணித்துள்ளனர். மேலே சொல்லப்பட்ட பீமராஜனுக்கு போலாம்ப என்ற பார்யையினால் சௌஹத்த நாராயண பிருது பெற்ற தாமநரபாலனை தரிசித்தனர். இந்த தாமநரபாலனுக்கு லக்ஷ்மீதேவியினிடம் சோம பூபதியும், இவருக்கு சுராம்பாவுக்கு கங்காதரன் என்ற பட்டப் பெயரும், அரிகண்டரகண்ட, ராயவேஸ்யாபுஜங்க என்ற பிருதுகளைப் பெற்ற அன்னதேவ சோழனும், இவருக்கு யிருகாம்பிகை யென்ற மனைவியால், காமபூபதி என்ற பக்தீஸ்வர சோழன் என்ற குமாரனும், இவருக்கு அன்னதேவ சோழன் என்றவரும் பிறந்ததாகவும், அன்னதேவன் சாசனத்தால் தெரியவருகின்றன. இந்த பீமராஜனுடைய தாயாரின் பெயர் அன்னெமாம்ப என்பர்.

159) தெலுங்கு சோழ ராஜாக்களால் ஏற்பட்ட வம்சங்கள். கிறிஸ்து சகம் 12-வது சகாப்த முதல் 15-வது சகாப்தம் வரையிலிருந்து தெலுங்கு சோழ ராஜாக்களின் வம்சங்களிலிருந்து இனி சொல்லப்படும் வம்சாவழியின ருடைய விருத்தாந்தங்கள் சாசனங்களால் திருஷ்டாந்தம் கிடைத்துள்ளன. எருவபக்திராஜு, அனதேவ சோழ ராஜாக்களைக் குறித்துச் சொல்லப்படும் ராஜமயேந்தர, ஸ்மூஜிய தாம்பர சாசனத்தாலும், திராக்ஷாராமபீமேஸ்வ ராலய சாசனத்தாலும், கொல்பூடி காமநாயுடு சாலிவாகன சகம் 1207-வருஷத்தில் ஆத்மகூர் தாலூக்கா சிரமண கிராமத்தில் எழுதி வைத்த சாசனத்தில் தெலுங்கு சோழர் கள் தரித்திருந்த உரையூர் புரவராதீஸ்வர பிருதுகளை எழுதி வைத்துள்ளதினாலும். அதே போல பத்யமத்ர ராஜுவின் குமாரன் பய்யராஜு, சாலிவாகன சகம் 1212-வருஷம் ராஜவோலுவில் எழுதி வைத்த சாசனத்தைக் கொண்டும், சாலிவாகன சகம் 1117-ஷ கீர்த்திராஜு, மல்லிசோழராஜு விப்பர்ல பிரதேசத்தில் எழுதி வைத்துள்ள சாசனத்தில் கரிகால வம்சத்தினரென்று எழுதியுள்ளதைப் பற்றியும், சாலிவாகன சகம் 1348-ஷ கநுபர்த்தியில் ஆலமந்தலநாகய தேவசோழராஜனுடைய குமாரன் வீர அவுகுபூதேவ சோழ ராஜனும், சாலிவாகன சகம் 1350-வருஷம் ஒங்கோலு தாலூகா நாகுலபாடி கிராமத்தில் ஆலமந்தல கங்கய்யதேவ சோழராஜனும் எழுதிவைத்த சாசனங்களில் சோழ சப்தங் களையே பிரயோகித்துள்ளதாலும், சாலிவாகன சகம் 1136-வருஷம் காவலியில் மன்மசித்தியின் தம்பியாகிய கடநல்லெ தங்கமஹாராஜு எழுதி வைத்த சாசனத்தைக்கொண்டும் சாலிவாகன சகம் 1403-வருஷம் திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜம்புகேஸ்வரத்தில் வாலக காமய்ய வரபு அக்கலராயடு, உரையூர் புரவராதீஸ்வர பிருதைத் தரித்து எழுதிவைத்த சாசனத்தைக் கொண்டும், சாலிவாகன சகம் 1476-வருஷம் கும்பகோணத்தில் ஆதிகும்பேஸ்வர தேவாலயத்தில் குருராஜ ருத்ரதேவ சோழ மஹாராஜனும், சோழ சப்தத்தைப் பிரயோகித்து எழுதிவைத்த சாசனத்தைக் கொண்டும், சாலிவாகன சகம் 1452-வருஷம் ஸ்ரீரங்கத்தில் சென்னய்ய பாலதேவுடு உரைபுரவராதீஸ்வராதி பிருதுகளுடன் எழுதி

வைத்த சாசனத்தைக்கொண்டும், சோழ ராஜாக்களிலிருந்து

1) ஏருவவார்
2) கொல்லபூடிவார்
3) பத்யவார்
4) கீர்த்திராஜுவார்
5) அலமந்தலவார்
6) கடநல்லெவார்
7) வாலகவார்
8) குருராஜுவார்
9) சென்னய்யவார்

என்ற குலத்தவர் ஏற்பட்டதாக காணப்படுகின்றன. இதைத் தவிர முதல் பாகத்தில் விவரித்துள்ளபடி 'ஸ்ரீரங்க மஹாத்மியம்' என்ற கிரந்தத்தைக்கொண்டு 8 கட்டா வம்சத்தினரைப்பற்றியும், 9 சூரய்ய தேவர வம்சத்தவரை, ரெட்ட மத சாஸ்தரத்தைப் பற்றியும், 10 கொண்ட்ராஜு வம்சத்தினரும், தெலுங்கு சோழ வம்சத்தினரென்றே ஸ்பஷ்டமாகக் காண்கின்றன. கொண்ட்ராஜுவாரும், சூர்யதேவரவார்களும் உரையூர் புரவராதீஸ்வர பிருதுகளைத் தரித்துக் கொண்டுள்ளனர் என்பது பிரசித்தம்.

இது தவிர தெலுங்கு சோழர் பரிபாலித்து வந்த பிரதேசங்கள்

11) வல்லூறு, 12) நெல்லூறு, 13) கோடூறு, 14) மோவூறு, 15) மாலெம்பாடு, 16) கொணிதென, 17) கம்செர்ல, 18) பொண்டூறு, 19) நெக்கொண்ட, 20) கந்தூறு முதலானவற்றில் அந்தப் பேர்களைக்கொண்டு அந்தந்தக் குலத்தினர் வீட்டுப் பெயர்களை ஏற்படுத்திக் கொண்டனர் என்பது பிரமாணம். இம்மடி திக்கராஜு தரித்துக்கொண்ட இம்மடி என்ற வாக்கியப்படி தத் வம்சாவழியினர் அந்த (21) இம்மடி க்ருஹ நாமங்களை ஏற்படுத்திக்கொண்டனர் என்பது பிரசித்தம்.

160) கம்மவாரின் தெலுங்கு சோழ வம்சங்கள், இம்மாதிரியாக ஏற்பட்ட வம்சங்களில், கம்மவாரில் இன்றைக்கும் இதில் சொல்லப்பட்ட வம்சாவழியினர் சிலர் தெலுங்கு சோழ வம்சத்தினர் ஆனதாகத் தெரிகிறது. அதனால் காஞ்சீபுர சோழர்களுக்கு இவர்கள் ஞாபகார்த்த தாயாதிகள் என்று சொல்லலாம்.

1) ஏருவார்
2) ஆரியதேரவார்
3) கொல்லபூடிவார்
4) ஆமாந்தலவார்
5) கோடூரிவார்
6) நெல்லூருவார்
7) பொதூரிவார்
8) வல்லூருவார்
9) கொணிதெனவார்
10) மாலெபாடிவார்
11) கம்செர்லவார்
12) பொந்தூருவார்
13) நெக்கொண்டவார்
14) கந்தாரவார்
15) இம்மடிவார்
16) கட்டாவார்

இவர்கள் அல்லாமல் இவர்களுடைய பந்துக்களும் அநேக முறைய விருத்தாந்தங்கள், அநேகமாக நமக்கு கால வித்தியாசத்தால் தெரியாமல் போய்விட்டன. அவர்களில் அநேகர் சில இடங்களில் வசித்து வந்து வேறு வேறாக விட்டுப் பெயர்களை மாற்றிக்கொண்டனர். அதனால் அநேகர் சோழ வம்சத்தினர் என்று அறிகிறோம். சாசனங்களில் மேலே கூறப்பட்ட வம்சத்தினர் இன்றைக்கும் வசித்து வருகின்றனர் எனலாம். சில மாறுதல்கள் இருந்தாலும், இதில் சிலர் கொண்டராஜுவார், கட்டாவார் என்றவர்கள் இன்றைக்கும் க்ஷத்திரியர்களில் இருக்கின்றனர். இவர்களுடைய விருத்தாந்தங்கள் சரித்ரங்களில் பிரபலமாய் இருக்கின்றன. கம்மவாரிலும் கூட கட்டாவார்

இருக்கின்றனர். இது மாதிரி தெலுங்கு சோழர்களும் ஆந்தர ப்ரதேசத்தில் சிலரும், கம்மவாரில் சிலரும் இருப்பதாக ஆதாரங்களிருக்கின்றன. தெலுங்கு சோழ ராஜாக்களுடன் கம்மவாரும் கலந்துள்ளதாகவும், இதைப்போலவே ராஷ்டரகூட ராஜாக்களிலிருந்து ஏற்பட்ட ரெட்டிப் பிரபுக்களுடன் சம்பந்தம் காணப்படுவதால் இவர்களுக்குள் சோழரும் ஐக்கியமாயினர் என்று சொல்லலாம். இந்த ரெட்டி வீரர்கள் அநேகர் சூரிய வம்சத்தினரென்று எழுதிக்கொண்ட திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. அக்காலத்திலிருந்து இன்றைய ஆந்தர க்ஷத்திரியர்களும் ரெட்டி, கம்மவாருக்கும் சம்மந்தம் இருந்தன. சாலிவாகன சகம் 1248-வருஷம் அம்பிநரசிம்மாலயத்தில் ஜகதாள இம்மடி தேவ ரெட்டியார் குமாரன் ப்ரோலி ரெட்டி தான் சூர்ய வம்சத்தில் சுமத்திரன் குமாரனுகிய விஸ்வவரனுடைய குமாரன் ஆகிய இவர் ராஷ்டரகூட வம்சத்தினன் என்று எழுதி வைத்துள்ளார். திருவள்ளூர் வீரராமஸ்வாமி தேவாலயத்தில் வேமபூபாலன் சாலிவாகன சகம் 1326-ஸு எழுதி வைத்த சாசனத்தில் தான் சூரிய குலத்தவன் என்றுள்ளன.

161) மற்றைய கம்மவாரின் விஷயங்கள், இதுவரையிலும் துர்ஜய, சோழ, சாளுக்ய, ஹைஹய ராஜவம்சத்திலிருந்து ஏற்பட்ட கம்மவாரின் திருஷ்டாந்தங்களை கிடைத்த மட்டில் குறிப்பாக விவரித்திருக்கின்றன. இன்னும் அநேகர் எந்த வம்சத்திலிருந்து தோன்றினர் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம் ஆகின்றன. வைஸ்ய வர்க்கத்திலிருந்து வந்து கம்மவாரில் கலந்து கொண்டதாகவும், அவர்களுக்கு குலகோத்ரங்கள் ஏற்பட்டுள்ளதாக முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ளன. இவர்களைத் தவிர மிச்சமுள்ள கம்மவார் மேலே கூறப்பட்ட ராஜ வம்சத்திலிருந்தும், அவர்களின் பந்து வர்க்கம், காம்ப்பு, க்ஷத்ரிய வர்க்கத்திற்கு 11-வது சகாப்தம் வரையிலும் யாதொரு வித மான பேதமும் ஏற்படவில்லை. இந்த வம்சத்திலிருந்து ஏற்பட்ட கம்மவாரின் சரித்ரங்களை அறிந்து கொள்வோம்.

162) ராபத்திவார், ராபர்த்திவம்சராஜு, ராபர்த்திவார் என்ற கம்மவாரில், ராபர்வாராக விளங்குகின்றனர். இவர்கள் மிக்க பூர்வீகர்களாகக் காணப்படுகின்றனர். இந்த வம்சராஜு தெரிந்தவரையில் பிரபலஸ்த்தராவார். இவர் சாலிவாகன சகம் 1056-ஞ கிறிஸ்து சகம் 1134-ஞ காலத்தவராகக் காணப்படுகின்றன. இவர் ஒரு மண்டலாதிபதி. அநேக கிராமங்களுக்கு அதிபதி. இவரிடத்தில் உத்தியோகஸ்தராயிருந்த தண்டநாயக போலம் பெத்தன்ன என்றவர் திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் எழுதிவைத்த சாசனம் சாலிவாகன சகம் 1056-ஞ அதில் இவருடைய பிரஸ்தாபம் காணப்படுகின்றன.

163) ராபர்திப்ரோலய்ய, இவர் வெலநாட்டு குலோத்துங்க சோழ கொங்க ராஜனிடம் ஒரு உத்தியோகஸ்தராக இருந்ததாக இவருடைய குமார்த்தியாகிய வெலமுனை கொம்மப்ப என்றவள் சாலிவாகன சகம் 1072-ஞ கிறிஸ்து சகம் 1150-ஞத்தில் குண்டூர் ஜில்லா நாதெண்ட்ல கிராம தேவஸ்தானத்திற்கு அகண்ட தீபதானம் சமர்ப்பித்து எழுதிவைத்த சாசனத்தில் காணப்படுகின்றன. அந்த சாசனத்தில் ராபர்த்திவார் என்று எழுதப்பட்டுள்ளன.

164) ராபர்த்தி கொசனய்ய, சாலிவாகன சகம் 1075-ஞ கிறிஸ்து சகம் 1153-ஞ காலத்தவர். இவர் கோனசீமைப்ரபுவாகிய ஹைஹய வம்சத்திய கோனபீமராஜனிடம் தண்டநாயகராயிருந்து கீர்த்தி பெற்றவர். இவர் தாயார் மேசமவ்வ இவர் தந்தை காமநாயுடு. இவர் திராக்ஷாராமபீமேஸ்வராலயத்தில் சாலிவாகன சகம் 1070-வருஷம் பஞ்சலோகத்தால் தண்டாயுதம் செய்து ஸ்வாமிக்கு சமர்ப்பித்துள்ளார். மறுபடியும் இவர் சாலிவாகன சகம் 1075-வருஷத்தில் அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். ஒரு சாசனத்தில் இவரைப் புகழ்ந்து எழுதிவைத்த ஸ்லோகம்:

ஸ்ரீமான்தார்மிகச்சஸ்வத்வித்வத்ஜனித
சுத்தசரிதசௌஜன்ய ரத்னகர:

இதனால் இவர் மிக்க தார்மிகன் என்று பிரசித்தமாகக் காணப்படுகின்றன. கோனபீமராஜுவானவர் கோன

சீமையிலிருந்து கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்துவந்ததி ஞல் அங்கு இவர் சென்றிருக்கலாம் என்று நினைக்கவேண்டி இருக்கிறது.

165) ராபர்தி முப்பிநாயுடு, இவர் வெலநாட்டு ஸ்ரீ குலோத்துங்க ராஜேந்தர சோழனிடம் படவல் என்ற அதிகாரியாக இருந்தார். இவர் குமாரன் சூரய்ய என்றவர் கொங்க நாயகனுக்கும் பிம்மாம்பிகைக்கும் பிறந்தான். இவஞலேயே இவன் தந்தையும் கட்க விருத்தியினுலேயே ஜீவித்ததாக இவர் சாசனம் கூறுகின்றன. இவர் சாலிவாகன சகம் 1088-வருஷம் கிறிஸ்து சகம் 1136-வருஷத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபதானம் செய்து வைத்துள்ளனர்.

166) ராபர்த்தி மங்கி ராஜு, இவர் சாலிவாகன சகம் 1188-வருஷம் கிறிஸ்து சகம் 1266-வருஷ காலத்தவராவார் இவருக்கு லக்ஷ்மீதேவியென்ற பார்யையும், உபேந்த்ரராஜன் என்ற குமாரனும் இருந்தனர். இவருடைய பார்யையாகிய லக்ஷ்மீதேவி சாலிவாகன சகம் 1188-வருஷத்தில் தன் குமாரனுக்கு ஆயுராரோக்ய நிமித்தமாக அகண்ட தீப தானம் செய்ததாக ஒரு சாசனம் காண்கின்றன. இந்த மங்கிராஜு ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் 20 திருமணிகளையும், வெள்ளி புஷ்பங்கள் 100-ம் வைத்துள்ள தாக சாசனம் எழுதிவைத்துப் பெயர் பெற்றனர்.

167) ராபர்த்தி உபேந்த்ர தேவுடு, இவர், மேலே சொல்லப்பட்ட மங்கிராஜனுடைய குமாரன் ஆவார். இவர் பார்யை அயிதாசானி. இவர் காலத்திலுங் கூட இவர்களுக்கு ராஜ்ய பரிபாலனம் இருந்ததாகக் காணப்படு கின்றன. இதஞல் இவர் பார்யை சாலிவாகன சகம் 1185-வருஷம் கிறிஸ்து சகம் 1263-வருஷத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் தாடிதோன்ட என்ற உற்சவத்திற்காக விஸ்வநாத பட்டணம் என்ற கிராமத்தைக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துப் பிரசித்தி பெற்றனர்.

168) செஜ்ஜப்ரோலி நாயகுடு, இவர் ஸ்ரீமன்மஹா மண்டலேஸ்வர, வெல நாட்டு குலோத்துங்க ராஜேந்தர சோழராஜனிடம் அதிகாரியாக இருந்து பெயர் பெற்றதாகக் காணப்படுகின்றன. இவர் சாலிவாகன சகம் 1085-ஞ கிறிஸ்து சகம் 1663-வருஷத்தில் சூரிய கிரஹண காலத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார். சாசன ஸ்லோகம்:

சாகாப்தே பாணநாகாம்பர சசிகணிதேயாதி
சூர்யோபராகே:
சோயம்சம்பூர்ண புண்ய சுகவிசுரதரு:
செஜ்ஜப்ரோலு சுசீல:
ஸ்ரீமத்பீமேஸ்வராயத்ரிபுரவிஜயினேப்ராதி
சத்தீப முச்சை
த்ராக்ஷாராமேஸ்வராயத்திரிபுவனகுரவேதீப
மாசந்த்ர தாரம்.

அமராவதியில் மற்ரெருரு சாசனம், வெல நாட்டு கொங்கநர பாலனிடம் இவர் பார்யையாகிய கொம்மாசானியார் சமையல் வேலையில் பிரசித்து பெற்று, வண்ட்டல கொம்மா சானியென்ற பெயர் பட்டம் பெற்றுள்ளதாக எழுதப் பட்டுள்ளன. இவர் அமரேஸ்வரஸ்வாமிக்கு தீபதானம் செய்ததாக சாசனம் எழுதியும் இருக்கின்றன. இந்த செஜ்ஜ வம்சத்தினர் கம்மவாரில், இப்பொழுது ரேபல்லி தாலூக்காவில் சிங்குபாலம் பிராந்தியத்தில் வசித்துவருபவர் கள் சஜ்ஜாவாரென்றும் பெயர்களையே கொண்டாடுகின்ற னர். ப்ரோலிநாயகன் தாயார், தந்தையர்களின் பேரால் எழுதிய சாசனங்கள் சிதிலமடைந்துள்ளன. ஆயினும் செஜ்ஜாவார் இந்தப் பிராந்தியர் என்பது துணிபு.

169) எலமஞ்சி கொம்மிநாயகுண்டு, இவர் குலோத் துங்க சோழன் என்ற கிழக்கு சாளுக்ய ராஜனுடைய காலத்தில் பிரசித்தி பெற்றவராகக் காணப்படுகின்றனர். இவருக்கு எர்ரமாம்ப என்ற சதீமணியுண்டு. இவர் சாலிவாகன சகம் 1072-ஞ கிறிஸ்து சகம் 1150-ஞ

திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபம் சமர்ப்பித்தும், இரும்பினுல் செய்யப்பட்ட 50 வாகனங்களையும், உலோகத்தால் செய்யப்பட்ட தண்டார்யுதம் சமர்ப்பித்து சாசனம் எழுதிப் பெயர் பெற்றனர். எலமாஞ்சிவார் சாளுக்ய வம்சத்தினரென்றும், கம்மவாரென்றும் சரித்திரங்களில் காணப்படுகின்றன. கம்மவாரும், எலமஞ்சிவாரும் ஒரே குலத்தவரென்று இவரால் தெரியப்படுகின்றன.

170) ஐய்யநாரப்ப நாயகுண்டு, இவர் வெலநாட்டு ராஜா (கொங்க 3-வது என்றும்) வினிடத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்தார். இவர் தலகடதீவு முதலான கிராமங்களுக்கு அதிகாரியாக இருந்தும், இவர் தந்தையாகிய பீம நாயகுண்டு. இவருக்கு ஜல்லய்ய. சூரய்ய என்ற சகோதரர்களிருந்தனர். இவர்கள் எல்லோரும் யுத்த வீரர்களாக விளங்கியிருந்தனர். ஜல்லய்ய, கந்நார தேவனுடைய யுத்தத்தில் ஜெயம் பெற்றனர் என்றும், இந்த கந்நரதேவன் தெலுங்கு சோழருக்குச் சேர்ந்தவர் ஆவார்.

நாரப்ப நாயகுண்டு கிருஷ்ணு சாகர சங்கமத்தில், கோட்டபுறம், ராஜபவனங்களை நிர்மாணித்து, அந்த இடங்களில் நல்ல தோட்ட பூமிகளை ஏற்படுத்தியும், அங்கு கராள பைரவ ஆலயம் கட்டியும், விஷ்ணு ஆலயம் ஒன்றைக் கட்டியும் பிரசித்தி பெற்றனர். தவிர வட்டிகூர் கிராமத்தில் தன் தந்தையின் பேரால் பீமேஸ்வராலயத்தைக் கட்டியும், அங்கு பீமசமுத்ரம் என்ற குளத்தை நிர்மாணித்தும் வைத்தனர். இவர் க்ரொய்யூர் என்ற கிராமத்தில் வாசம் செய்து வந்தார். இவருக்கு பின்ன சோழன் என்ற குமாரனும் இருந்தான்.

171) பின்ன சோழன், இவரும் வெலநாட்டு சோழ ராஜனிடம் பிரதிநிதியாகவும், சேனுதிபதியாகவுமிருந்தார், இவருக்கு ஐயப்ப நாயகுண்டு, ப்ருதுவீ நாயகுண்டு, நாரப்ப நாயகுண்டு என்ற குமாரர்களும், நாராம்ப, பேராம்ப என்ற குமார்த்திகளும் இருந்தனர். இவர் பார்யை தாமாம்ப, இவர் குமாரர்கள் எல்லோரும் சிப்பாய்களாகப் பெயர் பெற்றவராகயிருந்தனர். காகதி கணபதி தேவ

சக்கரவர்த்தி வெலநாட்டை ஜெயிக்க வந்த சமயம் இவர் பராக்ரமத்தைக்கண்டும், பெண்மணிகளாகிய நாராம்ப, பேராம்ப என்றவர்களை விவாகம் செய்து கொண்டும், இவர் குமாரனுகிய ஐயப்ப நாயகனைத் தன் யானைச் சேனைக்குத் தலைவனுக நியமித்துக்கொண்டனர். பின்னசோழன் வெல நாட்டு ராஜாவின் பேருக்கு தன் குமாரர்களில் ஒருவனுகிய ப்ருதுவிநாயகன் என்று பெயரிட்டதாகக் காணப்படுகின்றன.

172) ஜெயப்பநாயகுண்டு, கணபதி தேவசக்கரவர்த்தி யினிடம் கஜ சேனுதிபதியாக மிக்கப்பிரசித்தி பெற்றனன். இவர் சக்கரவர்த்தியாகவும் பெயர் பெற்று, வைரிகோதூம கரட்ட என்ற பிருதும் உண்டு. ஜெயப்ப நாயகுண்டு சக்கரவர்த்திக்காக, கலிங்க தேச திக் விஜய யாத்திரை செய்து, அந்த ராஜ்யத்தை ஜெயித்து கணபதி தேவ சக்கர வர்த்தியின் வசம் ஒப்படைத்து வைத்தனர். இவர் சாலிவாகன சகம் 1175-ஸு ஸ்ரீ திராக்ஷாராமபீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபதானம் செய்தும், சக்கரவர்த்தியின் பெயரால் கணேஷ்வராலயத்தைக்கட்டியும், அநேக கிராமங்களைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர். இரு சாலிவாகன சகம் 1153-வருஷத்தில் இந்தக் கோவிலுக்காக படகு ஒன்றுக்கு 4 அணு நித்யம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். இவர் சேப்ரோலு பிரதேசத்தில் தன் தந்தை யின் பேரால் சோமேஸ்வராலயத்தைப் பிரதிஷ்டை செய்து, தேவதாசிகளுக்கு இரண்டு மாடி வீடுகளை கட்டிக்கொடுத்தும் தேவஸ்தானத்திற்கு மோதுகூர் கிராமத்தைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துக் கீர்த்தி பெற்றுள்ளனர். இவர் மிக்வித்வாம்சராகவுமிருந்து நர்த்த சாஸ்த்ரம் என்ற கிரந்தத்தை எழுதி வைத்துள்ளனர். இவர் சேப்ரோலு கிராமத்தில் உள்ளபக்த சிரோன்மணிகளுக்கு ஆதாரபுருஷன் என்பது பிரஸ்தாபம். இந்த ஐய்ய வம்சத்தினர் கரிகால குலத்தவரென்று முதல் பாகத்தில் குறிப்பிட்டுள்ளோம். சங்கரசசோழனும் இந்த குலத்தவரென்றே அவர் எழுதி வைத்த சாசனத்தால் தெரியப்படுகின்றன.

173) கொல்லபூடி காமாநாயகுண்டு, தேவிநாயகுண்டு இவர்கள் சாலிவாகன சகம் 1207-ஆம் காலத்தவராவார். இவர்கள் தெலுங்கு சோழரைச் சேர்ந்தவர்கள் ஆனதால் இவர் சாசனங்களில் உரையூர்புறவாதீஸ்வர என்ற பிருதை தரித்துக்கொண்டனர். இவர்களிருவரும் சகோதரர்கள். கேசமநாயகுண்டு என்றவருடைய புத்திரர்களாவார்கள். இவர்கள் ஆத்மகூர் தாலூக்கா சிரமன கிராம அதிகாரவாசிகளாகப் பெயர் பெற்றனர். இவர்கள் பல்லவ ராஜாவாகிய விஜயகண்ட கோபாலனுக்குப் பிரதிநிதிகளாகயிருந்து, இவர்கள் அங்குள்ள மல்லிகார்ஜனஸ்வாமிக்குச் சில பூமிகளை தானமாகக் கொடுத்து சாசனம் எழுதிவைத்தனர். சாலிவாகன சகம் 1207-வருஷத்தில் இவர்களுக்கு கண்டரகண்ட, ப்ரஜமெச்சுகண்ட என்ற பிருதுகளும் உண்டு. இக்குலத்தவர் குலோத்துங்க ராஜா பரிபாலன காலத்திலிருந்து பிரசித்தி பெற்றதாகக் காணப்படுகின்றன. குலோத்துங்க ராஜ்ய 18-வருஷத்தில் கொல்லபூடி நாயகர் என்றவர் அந்த கிராமத்தில் கேசவஸ்வாமி தேவாலயத்திற்கு மானியம் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். அவர் கூட இந்த வம்சாவழியினரே ஆவார் என்று சொல்லலாம். கொல்லபூடிவார் சாளுக்ய வம்சத்தவரென்று சந்தேகித்து முதல் பாகத்தில் குறித்துள்ளோம். ஆயினும் இவர்களின் சரித்திரங்கள் காரணமாகச் சோழ ராஜவம்சத்தவரென்றே சொல்லலாம். இந்த கொல்லபூடிவார் இன்றைக்கும் கம்மவாரில் இருக்கின்றனர்.

174) ஆலூரி போதி நாயுடு, இவர் ஆலூர்புறவராதீஸ்வரனுக இருந்து இவர் சகல புவன ராஜ்யலக்ஷ்மீநிவாச, சலமத்துகண்ட, சௌசாங்கேய, சகல லக்ஷிமிநிவாச, விவேக கமலாசன, சிஷ்ட்ட சமுத்தரண, பதிகார்யசாதக, பரநாரீதூர, பதிமெச்சுகண்ட, துர்ஜயகுல விபூஷணவார்திவர்தனசுதாகர, சத்யரத்னுகர, ஸ்வாமித்ரோஹரகண்ட, சஹகார நிவாச, பிடுவரதி முதலான பிருதுகளைப் பெற்றவர். இவர் சோழ நாராயண தேவதிவ்ய ஸ்ரீபாதபத்மாராத குண்ட என்றும் எழுதிவைத்துக்கொண்டுள்ளார். அதனுல் இவர் குலோத்துங்க சக்கரவர்த்தி ஒருவருக்கு பிரதிநிதியாக இருக்கலாம் என்பதும், 11-வது சகாப்த காலத்

தவராவர். இவருடைய தாயார், தந்தை மல்லி நாயுடு. இவர் ஸ்ரீகாகுளத்தில் ஸ்ரீகாகுளஸ்வாமிக்கு அகண்ட தீப தானம் செய்து பருதிகடபந்தமு பூமியைத் தானசாசனம் செய்து வைத்துள்ளார். இவர் துர்ஜய குலத்தவரென்றும், சதுர்த்தன் என்றும் சொல்லிக்கொண்டனர். இவர் தரித்து இருந்த பிருதுகளில் சில, துர்ஜய குலத்தவருக்கும், காகதிய ராஜாக்களுக்கும், வெலநாட்டு ராஜாக்களுக்கும் உண்டு. இவரும் அவ்வம்சத்தைச் சேர்ந்தவனுதலால் அப்பிருதுகளைத் தரித்துக்கொண்டனர் என்பது பிரமாணம்.

175) தூம்பர்த்தி சித்தப்ப நாயுடு, (நாயகுண்டு) குண்டூர் ஜில்லா நரசராவ் பேட்டை தாலூக்காவில் தூம்பா டென்ற கிராமம் பூர்வத்தில் தூம்பர்த்தியென்றும் பெயரிட் டிருந்தனர். அந்த கிராமவாசிகள் தூம்பர்திவாரென்றும். தூமாட்டிவார் என்றும் பிரசித்தி பெற்றனர். அங்கிருந்த தூம்பர்த்தி சித்தப்ப நாயகுண்டு அந்தக் கிராமத்திற்கு அதிகாரியாக இருந்து புத்தவர்மஹல் ராஜ்யாதிபதியுமாகி உள்ளார் என்பது பிரசித்தம். இவர் குலத்தவராகிய காபய நாயகனின் சாசனத்தில் காணப்படுகின்றன. இதன் விபரம் இச்சண்பக மாலையால் காணலாம். அடமயுநந்தலம்புநிவி, தாதபவாரண காஹசாவளிம் படிய முநா நிகாகலந்ரு, பாலக சின்ஹலு புத்தவர்ம சேபடகினவாண்டு நாயச்ச, பாமணி சித்தபநாய காங்குண்டிப் புடமிதிதிய விரபட, புங்கவுமன் முண்டுதாத்தசம்பதன், இந்த சித்தப்பநாயகுண்டு, காபய நாயகுனி பேரன் என்றும், தூம்பர்த்தி சாசனம் கூறுகின்றன. இந்த சித்தப்ப நாயகன் எர்ரமண்ட ராஜாவின் நியமனப்படி எதிரிகளுடன் போர் புரிந்து ஜெயம் பெற்றதினுலிவருக்கு ஆதகூர் கிராமத்தை இனமாகக் கொடுத்ததாகவும் அந்த சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் சேவணி, சிங்கன, ஜெகதேவுண்டு முதலானவர்களுடன் போராடி அவர்களைத் தோற்கடித்ததாகக் காணப்படுகின்றன. இவர் சா-ச. 1054-வருஷத்தில் அங்குள்ள சிவாலயத்திற்கு அகண்டதீப தானம் செய்ததாகவும் தேவாலயத்திற்கு சேவர்களையும், நடன நாட்டியத்திற்கும் மற்றகாரியங்களுக்கும் அதிகாரிகளை

நியமித்தும் வைத்தனர். இவருக்கு மண்டபாம்ப என்ற பார்யை நிடம் காபயநாயகுண்டு என்ற குமாரனைப் பெற்றனர்.

176) தூம்பர்த்தி காபயநாயகுண்டு. இவர் வெலநாட்டு ரெண்டாவது கொங்கராஜுவிடம் சேனாதிபதியாகப் பிரசித்தி பெற்றுள்ளதாக இவர் சாசனத்தில் இந்த பத்யத்தால் தெரியப்படுகின்றன. (உத்பலமால) ஸ்ரீ வெலநாட்டு கொங்க ந்ருப. சேசுரு ஸ்ரீ கருசித்த பேதலித்ராவண ராவணுந்தகப. ராக்ரமுவிச்ரம சக்ரிபூரிதேஜோவிபவாபிரா மூண்டகு. சோடநசக்ரமுகொல் சிதத்ப்ரசா தாவகலில தால்ச்சினம, ஹாத்முண்டுகாபடுதர்ம சிஹுடை. இவர் தூம்பர்த்தியில் ஒரு சிவாலயங் கட்டியுள்ளார். இந்த வம்சத்தினரே இப்பொழுது கம்மவாரில் தூமாட்டிவார் என்றவர்களிருக்கின்றனர். இவர் கிறிஸ்து சகம் 1150-ஹு காலத்தவரென்று தெரியவருகின்றன.

177) விப்பர்ல அமரிநாயகுண்டு. விப்பர்லவார் 12-வது சகாப்தமுதல் பிரசித்தியாக உள்ளதாக காணப்படுகின்றன. இந்த அமரிநாயகன் வெலநாட்டு குலோத்துங்க ராஜேந்தா சோழராஜுனிடம் பாளையக்காரன் என்ற பட்டம்பெற்ற உத்யோகஸ்த்தனகயிருந்தார். இவர் தந்தை போதிநாயகுடு, இவர் சாலிவாகன சகம் 1091-வருஷத்தில் (ஸ்ராஹி 25) ஸ்ரீதிராக்ஷாராம பீமேஸ்வராலயத்திற்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். இவர் தாயார் பெல்ல மாம்ப.

178) விப்பர்ல அமரிநாயகுண்டு (2) இவர் சாலிவாகன சகம் 1158-ஹு காலத்தவராகிய சாமந்த்த நரபாலுனவார். இவருக்கு சமடிகத பஞ்ச மஹாசப்தசாமந்த்த, துரகரேவந்த்த, துர்ஜயகுலவிபூஷண, தெலமதல்மிலிசான, பரபல சாதக, ஸ்வாமித்ரோஹ குலாந்தக, சங்க்ராமபீம, செளசகாங்கேய, கொத்தங்கோனாராசகுடிய, கோவுலமாரி, புலியமார்க்கொலுவ கடகமுன்னெருவ மண்டலிக தூமகேது முதலான பிருதுகள் உண்டு. இவைகளை முதல் பாகத்தில் விவரித்துள்ளன. இந்த பிருதுகளைக் கொண்டு இவர் ஒரு

பெரிய சேனாதிபதியாகவும் நினைக்கலாம். இவர் சாலிவாகன சகம் 1158-ல் பெஜவாடாவிலுள்ள மல்லேஸ்வர ஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து பெயர்பெற்றனர். இவர் துர்ஜ்ஜய குலத்தவரென்று எழுதிவைத்துள்ளதால், இதை நன்கு கவனித்து அறிய வேண்டும். விப்பர்லவார் கம்மவாரில் இன்றைக்கும் அநேகர் இருக்கின்றனர். வெலம வாரிலுங்கூட இந்த வம்சாவழியினர் அனேகர் இருக்கின்றனர்,

179) பண்டாரி முப்பிநாயகுண்டு, இவர் வெலநாட்டு குலோத்துங்க ராஜேந்தரசோழராஜு (2) விடம் பண்டார உத்யோகத்திலிருந்ததால் அதையே குலப்பெயராக வைத்துக் கொண்டு ஸ்ரீதிராக்ஷாராமபீமேஸ்வராலயத்தில் சாலிவாகன சகம் 1087-வருஷத்தில் அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். இவருடைய தாயார் பெயர் பெத்தமாம்ப என்று சொல்வர்.

180) நிடுப்ரோலி சப்பிநாயகுண்டு. இவர் வெலநாட்டு குலோத்துங்க சோழராஜு (2) விடம் கட்டட நிர்மாண அதிகாரியாகயிருந்தார். அதனாலிவர் வம்சத்தினருக்கு கொட்டூரிவார் என்ற பட்டம் கிடைத்தன. இவருடைய குமாரன் எரியமநாயகுண்டு என்றவர் சாலிவாகன சகம் 1085-ல் ஒரு சாசனம் எழுதிவைத்துத்தான் சூரிய வம்சத்தவரென்று குறிப்பிட்டுள்ளார்.

181) கொட்டூரி எரியமநாயகுண்டு, இவருங்கூடக் கட்டடங்களில் (கோஷ்டங்கள்) அதிகாரியாக வெலநாட்டு குலோத்துங்கசோழ நரபாலனிடம், இருந்ததாக இவர் சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் சாலிவாகன சகம் 1085-ல் காலத்தவரே ஆவார், இவர் ஸ்ரீதிராக்ஷாராம பீமேஸ்வராலயத்திற்கு நித்தி பூஜைக்காக வேண்டி அநேக திரவியங்களைக் கொடுத்தும் அநேக பூமிகளையும் கொடுத்த னர், தவிர அன்னத்தாராமம் என்ற கிராமத்தில் ஒரு பாக்கு தோட்ட பூமியையும் கொடுத்து க்யாதி பெற்றனர். இவர் கொடுத்த பாக்குமரத் தோட்டத்தில் ஆயிரம் பாக்குச்செடி களிருந்தன. பின்னரிவர் வெலநாட்டுச் சோழராஜனிடம்

தனுதிகாரியாகயிருந்து சாலிவாகன சகம் 1089-வருஷத்தில் ஒங்கோலு தாலூகா கொண்டமஞ்ஜுலூர் என்ற கிராமத்தில் ஒரு சிவாலயத்தைக் கட்டியும் பிரதிஷ்டை செய்து பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதிவைத்தனர்.

182) மொரம்பூடி போதிநாயுடு. இவர் வெலநாட்டுக் குலோத்துங்க கொங்க நரபாலனிடம் மந்திரியாகயிருந்து பிரசித்தி பெற்றனர். இவர் தந்தை காடய்ய, போதிநாயுடு சாலிவாகன சகம் 1077-வருஷத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபதானம் செய்து லோஹத்தால் தண்டாயுதம் செய்துவைத்தும் மத்தியான நிவேதனத்திற்காக, நன்னப செட்டியார் பூமிக்கு மேற்கு பாகத்தில் (3) புட்ல (3840) எக்கரா பூமியைக் கொடுத்து கீர்த்தி பெற்றனர். இந்த வனிகண்ட்றவாடி மொரம்பூடி இவருடைய கிராமம். இந்தப்பெயர் மாறி நாளாவட்டத்தில் மொரம்பூடியென்று பெயர் வைத்துக்கொண்டனர். இது தெனாலி தாலூகாவில் உள்ளது.

183) விஜ்ஜுமுபோதராஜு. இவர் குலோத்துங்கசோழ ராஜனிடம், அதிகாரியாகயிருந்தார். இவரிடத்தில் எர்ரி போதனு என்ற சேவகனிருந்தான். சாலிவாகன சகம் 1062-ஸு ஸ்ரீ பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபம் சமர்ப்பித்துள்ளார். இவர் தாயார் விஞ்ஜம தேவியார் தந்தை பீமராஜு. விஞ்ஜமதேவியார் சாலிவாகன சகம் 1067-வருஷத்தில் ஸ்ரீ பீமேஸ்வராலயத்தில் அகண்ட தீபம் சமர்ப்பித்து ஸ்வாமியை தரிசனம் செய்து சந்தோஷம் அடைந்தார். கம்மவாரில் இன்றைக்கும் விஞ்ஜமவார் இருக்கின்றனர். இந்த வம்சம் மிக்க பிரசித்திபெற்று விளங்குகின்றன.

184) நல்லூரி வெள்ளாளன், இவர் பேரூர் நாட்டு க்ஷத்திரியன் என்று ஒரு சாசனம் எழுதிவைத்துள்ளனன். சாலிவாகன சகம் 1037-வருஷத்தில் ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்தில் சில பூமிகளைக்கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளனர்.

185) நல்லூரிலிருக்கும், இவ்வம்மையாருக்கும் மேலே சொல்லிய வெள்ளாளருக்குமிருந்த சம்மந்தம் தெரியவில்லை யாயினும், இவரும் அவர் காலத்தவரென்றும், மகாராணி யென்றும் காணப்படுகின்றன. இவர் 1022-வருஷத்தில் ஸ்ரீ பீமேஸ்வராலயத்திற்கு கிஸ்து வசூல் தொகையில் நான்கில் ஒரு பாகம் தானஞ் செய்துள்ளதாகவும், தவிர 4 புட்ல 1280 வள்ள பூமியும் கொடுத்து சாசனம் எழுதி வைத்துப் பெயர் பெற்றதாகவும், இதனல் குலோத்துங்க சோழ நல்லூரி, ருக்கம என்றும் எழுதியிருக்கின்றன. ஆயினும் சம்மந்தம் தெரியவில்லை. அவர் பேரால் நல்லூர் என்பதின் காரணமாக இவர்களிருவருக்கும் சம்மந்தம் இருக்கலாம் என்பது தெளிவு. இந்த வம்சத்தினருக்கு குத்தவாடியில் (ரட்டிகம்) அதிக்கம் இருந்ததாக சாசனத் தால் தெரியவருகின்றன. குத்தவாடி என்பது இன்றைய குடிவாடா தாலூக்கா என அபிப்பிராயப்படுகின்றனர்.

186) பாமுலபாடிவாறு, பாமுலபாடி கொம்மநாய குண்டு. இவர் பாமுலபாடிமண்டன என்றவருடைய பாரியையே டுமாம்ப வயிற்றிற் பிறந்தவர். இவர் ஒரு சேனதி பதியாக இருந்து பாமுலபாடி மல்லிகார்ஜ்ஜுனஸ்வாமிக்கு சாலிவாகன சகம் 1094-வருஷத்தில் அகண்ட தீபதானம் செய்துள்ளனர். இது இவர் தாய் தந்தையர்களின் புண்யார்த்தமாகச் செய்யப்பட்டது. இவ்விஷயம் இவர் எழுதி வைத்த பத்யகாவியத்தில் காணப்படுகின்றன.

187) பாமுலபாடிகேதன குமாருண்டு கொம்மன, மேலே சொல்லப்பட்ட காலத்திலேயே மற்றொரு கொம்மன என்றவர் கூட இந்த வம்சத்தில் பிரசித்தி பெற்றிருந்தார். இவர் பாமுலபாடி கேதன குமாரன். இவரும் மல்லிகார்ஜ ஜுனஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார்.

188) பாமுலபாடிவேமய்ய, இவர் சாலிவாகன 1095 ஹ காலம் மிக்க பிரசித்தி பெற்றிருந்தனர். இவர் யெரகாங்க புத்திரராவார். இவரும் மல்லிகார்ஜ்ஜுன ஸ்வாமிக்கு பாமுலபாடியிலிருந்து அகண்ட தீபதானம்

செய்துள்ளார். சாசனத்தையும் எழுதிவைத்திருக்கின்றனர்.

189) பாமுலபாடி கொண்டய்ய, இவர் பாமுலபாடி பீமனருடைய குமாரன். இவர் தாயார் காமபசானியாவார் இம்மஹான் தன் தாய்தந்தையர்களின் தர்மார்த்தமாக பாமுலபாடி மல்லிகார்ஜுனஸ்வாமிக்கு அகண்ட தீப-தானம் செய்து வைத்துக் கீர்த்திபெற்றவராவார்.

190) பட்டிப்ரோலி சோடபநாயகுண்டு, இவர் சாலி-வாகன சகம் 1102-ஞு காலத்தவராவார். இவர் வெல நாட்டு 2-வது குலோத்துங்க ராஜேந்தர சோழராஜனிடம் பட்டிப்ரோலுக்கு அதிகாரியாக இருந்து பிரசித்தி பெற்றவர். இவர் தந்தை கம்செம நாயகுண்டு. இவர் தாயார் குண்டசானி. இவருக்கு காமாசாணியென்ற பார்யையுமிருந்தாள். இவர் தன் தாய் தந்தையருக்கும், தனக்கும், பார்யைக்கும் ஆகவேண்டி தர்மார்த்தமாக ஸ்ரீ திராக்ஷாராம பீமேஸ்வராலயத்திற்கு அகண்ட தீபதானம் கொடுத்து லோஹாயுத தண்டம் ஒன்று சமர்ப்பித்து சாசனம் செய்துவைத்துள்ளார். இந்த பட்டிப்ரோலிவார் இன்றைக்கும் கம்மவாரில் பிரபலமாக இருக்கின்றனர் ரெட்ட சிந்தல பிராந்தியம் என்ற பிரதேசத்தில்.

191) ஈடுபுகண்ட்டி சேவகேதி நாயுடு, இவர் 12-வது சகாப்த கால முதல் மிக்க பிரசித்தி பெற்றவராக இருந்து வந்ததாகக் காணப்படுகின்றன. இவருடைய சாசனம் ஒன்று பெஜவாடா மல்லேஸ்வராலயத்தில் இருக்கின்றன. அந்த ஸ்வாமிக்கு அகண்ட தீபம் சமர்ப்பித்து மான்யமாக அவர் பண்ணையிலிருந்த பட்டி ஆடுகளைக் கொடுத்துள்ளதாக எழுதப்பட்டிருக்கின்றன. (S I I Vol. XV. P 252)

192) நாதெண்லகேதிநாயுடு, இவர் சாலிவாகன சகம் 1177-ஞு காலத்தவர் ஆவார். இவர் தந்தையின் பெயர் பீமநீடு. தாயார் பெயர் யரகாசானி. இவருங்கூட பெஜவாடா மல்லேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். நல்ல கீர்த்தி ப்ரதாஞுமாவார் என்றும் (S I I Vol. IV P 252) காணப்படுகின்றன.

193) கொல்லூரி குடியபநாயகுண்டு. இவர் 12-வது சகாப்த காலத்தில் பிரபல கீர்த்தி மிக்கவராக இருந்து வந்தனர். குண்டூர் தாலுக்காவில் காஜ கிராமத்தில் நரேந்த்ரேஸ்வர மஹாதேவனுக்கு சந்தியா தீபத்திற்காக அநேக திரவியங்களைச் செலுத்தி சாலிவாகன சகம் 1078-வருஷத்தில் சாசனம் எழுதி வைத்துள்ளார். அக்காலம் அக்கிராமத்திற்கு காஜ்ஜ என்று பெயர் இருந்ததாகக் காணப்படுகின்றன. (S I I Vol. IV P 253)

194) கொல்லூரி பிமிநாயகுண்டு, இவர் கூட 12-வது சகாப்த காலத்தவரேயாவார். இவர் தந்தையின் பெயர் காபிநாயகுண்டு. தாயார் பெயர் பேடாசானியாவார். இவர் சாலிவாகன சகம் 1067-வருஷத்தில் ப்ரேபல்லி (பாபட்லு) பாவநாராயணஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து சாசனம் எழுதி வைத்தனர். (S I I Vol. VI No. 129)

195) த்ரோணுதி நாரபநாயகுண்டு. இவரும் 12-வது சகாப்தகாலவாசி. இவர் தந்தையாகிய த்ரோணுதி வேமே நாயகுண்டு. இந்த நாரபநாயகுண்டு சாலிவாகன சகம் 1071-வருஷத்தில் ப்ரேபல்லி பாவநாராயணஸ்வாமிக்கு அகண்ட தீபம் சாதித்து பிரசித்தி பெற்றனர். (S I I Vol. VI No. 134)

196) கங்கனுல மல்லெநாயகுண்டு, இவர் 13-வது சகாப்தவாசி. இவர் தந்தை கத்தெநாயகுண்டு. இந்த மல்லெ நாயகர் சாலிவாகன சகம் 1163-வருஷத்தில் பாபட்ல ஸ்ரீ பாவநாராயணஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் சமர்ப்பித்து சாசனம் எழுதிவைத்துக் கீர்த்திபெற்றனர்.

197) சிறுசூரி பிமநாயகுண்டு, இவர் 11-வது சகாப்தவாசியாவார். இவர் குலோத்துங்க சோழ ராஜா 9-வது வருஷம் பாபட்ல ஸ்ரீ பாவநாராயணஸ்வாமிக்கு அகண்ட தீபதானம் செய்து கீர்த்தி பெற்றனர். இவர் பெண்ணுத ஜாடிவைச் சேர்ந்தவர் என்று சொல்வர். அக்காலத்தில் பெஜவாடா பிராந்தியம் மிக்க பிரசித்தியாக இருந்ததென்று சொல்லுவர். இவர் தந்தையின் பெயர் பிக்கிநாய குண்டு.

198) முசுகூரி கொண்டய்ய, இவர் கீழ் நாட்டைச் சேர்ந்தவரென்று சொல்லிக் கொண்டனர். இவர் கூட குலோத்துங்க ராஜா பாலன காலத்தவரென்றும், அதனால் இவர் 11-வது சகாப்த வாசியென்று சொல்லலாம். இவர் எழுதி வைத்த சாசனம் பாபட்ல ஸ்ரீ பாவநாராயணஸ்வாமி தேவாலயத்தில் காணப்படுகின்றன.

199) கொட்டிபர்தி யெர்ரம நாயகுண்டு, இவர் சா-ச 1120-வருஷ காலத்தவர். இவர் அமராவதியில் ஸ்ரீ அமரேஸ்வர ஸ்வாமிக்கு அகண்ட தீபம் சமர்ப்பித்து சாசனம் எழுதிவைத்தனர். இந்த தீபதானம் கோட்ட கேத ராஜனுக்காக வேண்டி தர்மார்த்தமாகச் செய்யப்பட்டது. அதனால் இவர் அவருக்குப் பிரதிநிதியாயிருக்கலாம் என்றும் அதில் இவர் வம்சம் இப்படி எழுதப்பட்டது. இந்த கொட்டிபர்தி யெர்ரமநாயுகுண்டுக்கு ரேசம என்ற பார்யையினிடம் சோமன்ன, வென்னன என்றவர் பிறந்தனர். பின்னர் அந்த வம்சத்தில் காலப நாயுடு ஜெனித்து. இவருக்குத்தான் பிறந்ததாகச் சாசனம் எழுதப்பட்டுள்ளன. இவர் பூண்டியில் ஒரு தடாகத்தை உண்டாக்கிப் பிரசித்தி பெற்றனர். இவர் சதுர்த்த வம்சத்தவரென்று சாசனத்தில் காணப்படுகின்றன. இந்த வம்சத்தினரே கிரமமாகக் கொட்டிபாடிவாராக மாறியதாகச் சொல்லப்படுகின்றன.

200) முப்பிடிநாயகுண்டு, இவருடைய தந்தையின் பெயர் நாகிநாயகுண்டு. தாயார் கங்கசாநம்ம. இவர் காகதீய 2-வது பிரதாபருத்ர சக்ரவர்த்தி மஹாப்ரதானஸ்த்தர்களில் ஒருவர் ஆவார். இவருடைய தானசாசனங்கள் கந்துகூர் சீமையில் காணப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1319-வருஷத்தில் காஞ்சீபுர ராஜ்யத்தைக் கண்ட கோபால சோழராஜு, பிரதாபருத்ர சக்ரவர்த்திக்குப் பிரதிநிதியாக ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தனர். அக்காலத்தில் பாண்டிய, கேரள ராஜாக்கள் படையெடுத்து வந்து ஜெயித்து ராஜ்யத்தை சுவாதீனம் செய்து கொண்ட சமயம், சக்ரவர்த்திக்குத் தெரிந்தவுடனே முப்பிடி நாயகுண்டு முதலான வீரர்களை அனுப்பிய பொழுது இவர் தன்னுடைய பலபராக்ரமத்தினால் பாண்டிய, கேரள ராஜாக்களை முதுகு

காட்டி ஓடும்படியாகச் செய்து கிறிஸ்து சகம் 1319-வருஷம் ஜூன் மாதம் 19-ந் தேதியில், மானவீரன் என்ற நாமன்ன கண்ட கோபாலனையே ராஜ்யாதிபதியாக்கினர். இவர் காஞ்சீபுரத்திலுள்ள அருளாசலப்பெருமாள் தேவாலயத்தில் அந்த மாதம் 16-ந் தேதியில் அநேக தானதர்மங்கள் செய்து சாசனமும் எழுதி வைத்தனர். தவிர வேகவதீ நதிக்குத் தென் பாகத்தில் நானாவிதமான புஷ்பங்கள் தரக்கூடியதாகிய நந்தவனத்தை உண்டுபண்ணியும், இக்காரியங்களுக்காகவும், நிவேதன காரியங்களுக்காகவும் 240 மாடலு 940 ரூபாயும், நித்ய நைவேத்யத்திற்கு 360 மாடலு 1440 ரூபாயும், தேவாலய சாஸ்வத மண்டபங்களுக்கு 382 மாடலு 1528 ரூபாயும், பிரதி மாதமும் தக்க ஆதாயம் வரும்படி வரக் கூடிய பெய்யூறு, அயிரசேரி, பாண்டைபாகம் என்ற கிராமங்களைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தும், கந்துகூர் சீமையில் நீலகண்டீஸ்வர ஸ்வாமிக்கு ஒரு தானம் கொடுத்துச் சாசனம் எழுதி வைத்தும் இவர் பாகநாட்டு சீமையும், தொண்டமண்டலமும் இராஜதானி யாக வைத்துக்கொண்டு பரிபாலனம் செய்து வந்தார். இவர் வெலம குலத்தைச் சேர்ந்தவராவார் என்று ஸ்ரீ மா. ராம ராவ், B. A., B. Ed., அவர் அபிப்ராயப்படுகினும், வெலம வார் பூர்வீகமாக மிக்க பிரசித்தி பெற்றவராவார். இவர் சாசனத்தில் எவ்விடத்திலும் வெலம சகாப்தம் காணப் படாததாலும், இவர் ஸ்ரீ சி. வீரபத்ர ராவ் பந்துலுகார் அபிப்பிராயப்படி கம்மவாரில் சேர்ந்தவரென்று நிஷ்யமாகச் சொல்லலாம். இவருக்கு பெதருத்ர நாயுடு என்ற குமாரன் ஜெனித்துப் பிரசித்தி பெற்றனர் என்பது பிரமாணம்.

201) பெதருத்ர நாயடு, இவர் கூட காஞ்சீபுர யுத்த காலத்தில் கலந்துகொண்டதாகக் காணப்படுகின்றன. இவர் சாசனம் கிறிஸ்து சகம் 1322-ஞ் திராக்ஷாராமபீமேஸ்வரா லயத்திலிருக்கின்றன. அதில் இவர் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றதாகவும், அங்குள்ள ரங்கநாதன் என்பவரை வென்று, ஓடும்படி செய்ததினால் கோட்ட திக்க ராஜு மற்றும் சில வீரர்களையும், நாராயண வனத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்திற்கு அனுப்பி அங்குள்ள காடுகளை

அழிக்க விசாயக்கிருந்து வேண்டிய சேனைகளை ஏற்படுத்திக் கொடுத்தும், அவர்களுக்கு அங்கு வாசம் செய்ய மலைச்சரகளும் ஏற்படுத்தியிருந்ததாலிதை அறிந்து இவர் அந்தத் திக்கன்னாலைக் கொன்று, மன்னே துரைகளை வசப்படுத்திக் கொண்டு, நெல்லூர் ராஜ்யத்தை சுவாதீனமாக்கிக்கொண்டதாகத் தெரியவருகின்றன. ஒரு சமயம் ஹொய்சல ராஜாவாகிய 3-வது வீரபல்லால ராஜனுக்கும், இவருக்கும் சந்தரகிரி பிரதேசத்தில் தகராறு ஏற்பட்டதினால் பிரளய கலகம் உண்டாயிற்று. அதில் திருவெங்களநாத யாதவ ராஜனாகிய சேனாதிபதியை, ருத்ரம நாயகன் மீது யுத்தத்திற்கு அனுப்ப அந்த யுத்தத்தில் ருத்ர நாயுடு தோற்று ஓடிப் போகவே இவர்கள் வெற்றி அடைந்தனர்.

202) வீரசைவ வீரப்ரதாப சோழராயுடு. இவர் சாலிவாகன சகம் 1223-வருஷ காலத்தவராவார். இவர் மஹாராஜாதி பிருதுகளைத் தரித்தவர். இதனால் ஸ்வதந்த்ர ப்ரபுவாக விளங்கினார். இவருடைய பாலனம் நெல்லூர் ஜில்லா பேகூர் பிராந்தியத்திலிருந்தன. இவர் பேகூரில் சாலிவாகன சகம் 1223-ல் பிறந்து சகம் 1301-ல் காலம் ஆராதனையை நடத்திவந்தார். அந்த ஊரின் வர்த்தகர்கள் சிலர் அந்தஊர் தேவாலயத்திற்கு சில பூமான்யங்களை கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர். அதில் இம்மஹா ராஜனுடைய ஆட்சிக்கு உட்பட்டவரென்று குறிப்பிட்டு உள்ளனர். இவர் கூட சோழ ராஜப்ரதிநிதியென்றே இவர் பேரால் தெரியவருகின்றன.

203) சட்டவரதராஜு. இவர் சட்ட ஹரிதாச ராஜனுடைய குமாரனவார். இந்த வரதராஜா 'கருடபுராணம்' 'ஸ்ரீ ரங்கமஹாத்மியம்' முதலான கிரந்தங்களை எழுதி வைத்துப்பிரசித்தி பெற்றனர். இவர் எழுதிய கிரந்தங்களில் 'பரமபாகவத சரித்திரம்', 'கஜேந்த்ர விஜயம்', 'புண்டரீக சரித்திரம்', 'ருக்மாங்கத சரித்திரம்' முதலானவைகளாகும். இவர் ஸ்ரீ வைஷ்ணவ பக்தசிரேஷ்டராதலால் 'ஸ்ரீரங்கமஹாத்மியம்', 'பரமபாகவத சரித்திரம்' திருப்பதி வெங்கடேச ஸ்வாமிக்கு மிக்கப் பிரதாபத்தைக் காட்டியும், ஸ்ரீரங்க

மஹாத்மியத்தில் இவர் தன்னுடைய வம்சாவழியைப் பிரஸ்தாபித்து, சூரிய குலத்தவராகிய கரிகால சோழ வம்சத்தையும், தெலுங்கு பிஜ்ஜல ராஜனையும், இவர் வம்சத்தவ, ரங்கராஜனையும், இவருக்கு ஸ்ரீரங்கராஜனையும், இவர் குமாரர்கள் ஐவரில் ஒருவராகிய கட்ட ஹரிதாச ராஜனையும், தன் தந்தையாகிய கட்ட ஹரிதாச ராஜனும் ஜெனித்ததாக எழுதிவைத்தனர். இவர் கால நிர்ணயத்தைத் நிர்ணயிக்கச் சாத்தியமில்லாதிருப்பினும், கிறிஸ்து சகம் 1616-வருஷத்தில் ராமதேவராயர் பக்ஷமாக யுத்தம் நடத்திய தஞ்சாவூர் ரகுநாத ராயருக்கும், கொப்பூர் ஜக்க ராஜனுக்கும் நடந்த தோபூர் யுத்தத்தில் கட்ட ரங்கப்ப ராஜன் என்ற வீராக்ரேசன் கலந்துகொண்டதாக ரகுநாதாப்யுதய நாடகத்தில் உள்ளன. இவர் மேலே சொல்லப்பட்ட ரங்கராஜாவாயின், இந்த வரதராஜா 17-வது சதாப்த காலத்தவராக இருக்கலாம் என்பது பிரமாணம். கட்டாவார் க்ஷத்திரியர்களிலும், கம்மவாரிலும், பட்ராஜாக்களிலும் இருக்கின்றனர். கம்மவாரில் சிலர் கூட தெலுங்கு பிஜ்ஜல வம்சத்தினராக இருந்து, கட்டாவார் இப்பவும் இருக்கின்றனர். கட்டாவார் வாசிரெட்டி பிரபுக்களுக்கு முக்கிய பந்துக்களாக ஆதியிலிருந்து வருகின்றனர். இதனும் கம்மவாரில் உள்ளவர்கள் சோழ வம்சத்தவரென்று கூறலாம். கிறிஸ்து சகம் 1361-வருஷ காலத்தில் வெலம வீரர்களுக்கும், சாளுக்ய ராஜாக்களுக்கும் நடந்த யுத்தத்தில் கட்டவெங்கராஜனும் இருந்து கீர்த்தி பெற்றுள்ளனர். கட்டாவார் சோழ வம்சத்தினராயினும், அவர் சாளுக்யரைச் சேர்ந்தவனென்றே வெலுகோட்டிவார் வம்சாவழி காட்டுகின்றன. இந்த இரு குலத்தவருங் கலந்து வந்ததினால் இம்மாதிரி எழுதலாயிற்று. இந்த வம்சத்தினர் மதபேதங்களை மாற்றிக் கொண்டதினால் வெவ்வேறு பிரிவினராகப் பிரசித்தி பெற்றனர்.

204) பென்னம நாயுடு, பெருமாண்டி நாயுடு. இவர்களிருவரும் காகதி கணபதி தேவ சக்ரவர்த்தி கஜ சாஹிணியில் ஒருவராகிய பாஸ்கதேவரிடம் பிரதிநிதிகளாகப் பேர் பெற்றுள்ளனர். இவர்களிருவருக்குமுள்ள சம்மந்தம் தெரிய

வில்லை. இவர்கள் ஸ்ரீகாகுளம் ஸ்வாமிக்கு கொடாலி கிராமத்தில் 5 புட்லபூமியை (1600 வ) தானம் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளனர். இந்தப் பென்னம நாயுடு வைப்பற்றியே கம்பவாரிலுள்ள பென்னமநேனிவார் ஏற்பட்டதாகச் சொல்லலாம். கொடாலி ப்ராந்தியத்தில் இன்றைக்கும் பின்னமநேனிவார் இருக்கின்றனர்.

205) கொல்லூரிப்ரபுக்கள். சிந்தம நாயுடு, முத்தம நாயுடு, வெலநாட்டு குலோத்துங்க சோழனிடம் சிந்தம நாயுடு பிரத்யதிகாரியாக இருந்து கொல்லூரி ப்ரபு என்ற பெயர் பட்டம் பெயர் பெற்றனர். இவருக்கு குண்டமாம்பிகையினிடம் முத்தம நாயுடு ஜனனமாகி, கலியுக சூத்ரக மஹாராஜனென்று பெயர் பட்டம் பெற்றனர். இவருக்கு மேடம என்ற பார்யையினிடம் கொம்மம்ம என்ற புத்திரி பிறந்து சாலிவாகன சகம் 1076-வருஷத்தில் அவனி கட்ட லக்ஷ்மீ நாராயணஸ்வாமிக்கு அகண்டதீபம் சமர்ப்பித்துள்ளார். நுங்கம என்ற மற்றொரு பெண்மணி பிறந்து வளர்ந்து வந்து சாலிவாகன சகம் 1074-வருஷத்தில் ஒரு தானசாசனம் எழுதி வைத்துள்ளார். இந்த வம்சத்தினர் வெலநாட்டு ராஜாக்களுடைய பந்துக்கள் ஆகப் பெயர் பெற்றனர். இந்த சிந்தம நாயுடு போல் கொல்லூர் பிராந்தியத்தில் சிம்தமநேனிவார் எற்பட்டிருந்தனர் (ஏற்பட்டிருப்பர்) என்று முதல் பாகத்தில் குறிப்பிட்டுள்ளன. ஒரு வேளை கொல்லூருவார் ஆயினும் ஆகலாம்.

206) எருவநாயகுடு, சாலிவாகன சகம் 1110-வருஷ காலம் வெல நாட்டு 2-வது ராஜேந்த்ர சோழனிடம் பிரதான அதிகாரியாக இருந்த கொல்லூரி விபுண்டு ஒருவர் ஆகிய எருவநாயகுடு, இவர் தந்தை கடியன்ன யென்றும், இவர் வெலநாட்டு 2-வது கொங்க ராஜனிடம் சமாதான அதிகாரியாக இருந்ததாகவும், இவர் தந்தை யெரப நாயுடு என்றும் சாலிவாகன சகம் 1110-வருஷம் எழுதி வைத்த ஸ்ரீ கூர்மநாத தேவாலய தானசாசனத்தில் தெரியவருகின்றன. இவர்கள் எல்லோரும் கொல்லூர் பிரபுக்களே ஆவார்.

207) முக்ராமல உப்பிநேண்டு, இவர் சாலிவாகன சகம் 1218-ஸு காலவாசியாவார். இவர் தந்தை பேரிநீண்டு. இவரை மேல்நேக உப்பிநீண்டென்றும் சொல்வர். இவர் தாயார் சூரசானி. இவர் சாலிவாகன சகம் 1218-வருஷத்தில் பாலகொல்லு க்ஷீராராமேஸ்வராலயத்தில் அகண்ட தீபம் சமர்ப்பித்து 3 புட்ல (960 வ) பூமியைக் கொடுத்தும் சாசனம் எழுதிவைத்து க்யாதி பெற்றனர். இந்த வம்சத்தினர் இப்பொழுது கம்மவாரில் முக்காமலவார் என்று விளங்குகின்றனர்.

208) குருகண்டி கொம்மிநாயகுண்டு. இவர் 12-வது சகாப்த காலம் டாமலூர்புரத்திற்கு அதிகாரியாக இருந்து பிரசித்தி பெற்றுள்ளனர். இந்தஊர் தெனாலி தாலூகாவில் உள்ள தாவுலூர் என்று தெரியவருகின்றது. இவர் ஈநனி கண்ட்றவாடி குருகண்ட்டி சாசனநிபதியாக இருந்து வெல நாட்டு குலோத்துங்க கொங்கராஜனிடம் ஆலோசகராக இருந்து சாலிவாகன சகம் 1077-ஸு ஸ்ரீ அமரேஸ்வரஸ்வாமிக்கு அகண்ட தீபம் சமர்ப்பித்து கீர்த்தி பெற்றனர். இந்த வம்சத்தினர் இப்பொழுது கொரகண்டிவார் என்று கம்மவாரில் இருக்கின்றனர்.

209) பெஜவாடா காலபநாயகுண்டு. இவர் பெஜவாடாகண்டவாடிமன்னனியபுரவராதீஸ்வரன் என்று சொல்லி வந்தனர். அதனால் இந்த வம்சத்தினர் பெஜவாடா, இல்லையெனில் மன்னெ என்ற வீட்டுப்பெயர் தரித்துக்கொண்டு இருப்பர். இவருக்கு ஜடாசோழராஜ்ய சமுத்தரண, மன்ம குலாபரண, பிரசண்டதக்ஷதக்ஷிண, புஜாதண்ட, கோதண்டப்ரசண்ட, கலஹஜெயநாத, வேங்கி விஷயாதிநாத, சேகொலுகண்ட சத்யமார்த்தாண்ட, பிரதாபலங்கேஸ்வர முதலான பிருதுகள் உண்டு. அதனால் இவர் ஒரு சேனாதிபதியாக இருந்ததாகத் தெரிகின்றன. இவர் சாலிவாகன சகம் 1176-வருஷம் விநுகொண்ட தாலூக்காவில் இனுமெள்ள கிராமத்தில் காகதி கணபதிதேவ சக்ரவர்த்திக்குப் புண்யார்த்தமாக ஸ்ரீ சென்னகேஸ்வரஸ்வாமிக்குப் பிரதிஷ்டை செய்வித்துப் பேர் பெற்றனர். அதனால் இவர் ராஜப்பிரதிநிதிகளில் ஒருவர் என்று சொல்லலாம். கம்மவாரில் இனு-

மெர்ல கோத்ரவாசிகள் மன்னெம்வாரிலிருப்பதால், இந்த வம்சத்தினர் மன்னெம் க்ருஹ நாமஸ்தர் கூட மாறியிருப்பர் என்பது பிரமாணம்.

210) வெலிசெர்லமல்லிநாயகுண்டு, இவர் சாலிவாகன சகம் 1082 வருஷ காலத்தவர், இவருக்கு மன்மகுலவார்தி வர்தனசுதாகர, சௌஜன்ய ரத்னகர, சுபட்டமார்த் தாண்ட, சிவபாதசேகர, நயமர்த்திகண்ட, வெலிசெர்ல புரசாசன, விவேக கமலாசன, பந்துஜென சமுத்தரண முதலான பிருதுகள் உண்டு. இவர் சாலிவாகன சகம் 1082 வருஷம் முரிகிபூடியில் ஒரு குளத்து பூமியை மல்லிகார்ஜ்ஜுன காமேஸ்வரஸ்வாமிக்கு தானம் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். கம்மவாரில் இப்பொழுது வெலிசெர்ல கோத்ரத்தவரும் (நிம்மகட்டவார்) வெலிசேட்டி க்ருஹ நாமஸ்தர்களும் இருக்கின்றனர். இந்த மல்லிநாயகுண்டு யாருடைய மூலபுருஷனே தெரியவில்லை. ஆயினும் வெலி செர்ல கோத்ரத்தவரே இந்த வம்சத்தினர் என்று தெரிய வருகின்றன.

211) மந்தடிகோட்டண்டு, இவர் 11, 12-வது கால கம்ம வீரர்களில் ஒருவராகக் காணப்படுகின்றனர். இவர் வெலநாட்டு கொங்க நரபாலனிடம் ஒரு அதிகாரியாக இருந்து பிரசித்தி பெற்றனர். குண்டூர் தாலூக்கா மந்தடமு கிராமத்தில் உள்ள மல்லிகார்ஜ்ஜுன தேவாலயத்திற்கு ஒரு தானசாசனம் செய்து வைத்தனர். அதில் ஒரு பத்யம் கூறுவது: "சூராமாம்பிககுமிக்கிலி புண்யுண்டுதார கீர்த்தி லக்ஷ்மீலலனசமேதுண்டுலெ, மீஹிதசித்துண்டுபுட்டெங் காம்கபூ, பாலகுனிஷ்டப்ருத்யுண்டுஸ, பாமணிமந்தடி கோட்ட எடாப்பகன்" இதனல் இவர் கொங்க நரபாலனிடம் அதிகாரியானதால் மிக்க பிரசித்தியிள்ள சபாமணி என்றும் (சபாநாயகன்) இவர் தாயார் சூரமாம்ப யென்றும் காண்கின்றன. கொங்க நரபாலனுடைய காலம் நிர்ணயமாகக் காணமுடியவில்லை, அதனல் இவருடைய கால நிர்ணயத்தையும் குறிப்பிட்டுச்சொல்ல இயலவில்லை.

212) ப்ரேகேட்டி போலய்ய, இவர் கோட்ட 2-வது கேதராஜனிடம் (அமராவதிப்ரபுவு) மந்திரியாக இருந்ததாகவும், அவருடைய குலத்தவரென்றும் இவர் சொல்லிக் கொண்டாராம். இவர் சத்தெனபல்லி தாலூக்கா வேல்ப்பூறு கிராமத்தில் ராமலிங்கேஸ்வர ஆலயத்தில் ஒரு சாசனம் எழுதி வைத்துள்ளனர். அந்த சாசனத்திலுள்ள சீசபத்ய விபரம் வருமாறு:

ஸ்ரீ,,பவித்ருண்டுப்ரேகேட்டி, புறவல்லபுண்டுகுணு, கருண்டு
கனுண்டு, தனகுலஸ்வாமினு, த்ததராஜகஜராஜ
ம்ருகராஜவருஜக, மெச்சுகண்ட பூபாலு சப்பாம்பிகா,
புத்ருதன்டை, கேதவல்லபுஜெகத்கித கீர்த்தி,
ப்ரீதிங்கொல்சிதனனு, நீதிவாசலத, காகட்கமுலப்ர,
கல்பதரனி யோகயோகுடைன, முன்னதசம்பதல்,
தால்சிநெடெபுதுலு,' தன்னுபொகட,

மத்த,.அனிசம்புன் தனபுத்திபேர்மிபதிதம், த்ராவாப்தி
வாட்டிஞ்ச்சுசும்,
தனவிக்ராந்திநராதிவர்க்கமுபுஜா, தற்பம்புபம்ஜிம்சுசும்
தனதாக்ஷண்ய விசேஷதன் புதுலமி, த்ரசேணிரக்ஷிம்சுசும்
தனரெங்கேததராதலேசுசசிவோ, த்தம்சுண்டுப்
ரோலம்டிலன்.

இந்த வம்சத்தினர் கம்மவாரில் போங்க்கன்டிவார் என்று சொல்லப்படுகின்றனர்.

213) காகதீய ராஜ்ய பதநாநந்தரஸ்த்திதி, கிறிஸ்து சகம் 1323-வருஷ மத்தியில் வீரப்ரதாபருத்ர ராஜ்ய விஷயத்தை முன் சொன்ன விதம் மஹம்மதியர்களால் வாரங்கல் பட்டணத்தை நாசம் செய்த பின்னர், இவருடையவும், இவர் வம்சத்தினருடையவும் சரித்திரம் நமக்குக் கிடைக்கவில்லே. அவர் மந்திரியாகிய சாகி கன்னம நாயுடு, கம்மவார் குலத்திற்கு பிரதான புருஷர்களில் ஒருவராக இருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவர் சகுடும்பமாக மஹம்மதீய மதத்தில் கலந்து டில்லி நவாப்பினிடம் பிரதிநிதியாக இருந்தனர். அவர் நம் மதத்தினராயினும், வாரங்கல்

ராஜ்யம் மஹம்மதியர் வசமாகியும், ஆந்தர வாசிகளுக்கு மிக்க அனுகூலஸ்த்தராகவே இருந்தனர். அதனால் இந்து ராஜ்யத்தை மறுபடியும் பிரபலப்படுத்தியதற்கு ஏதுவாக இருந்தது என்றும், ரெட்டி வீரனுகிய கொப்புலகாபயநாய குண்டும், இவர் குமாரர் நாமய்யநாயகுண்டும் பிரயத்தனம் செய்தும், இந்துக்கள் எல்லோரையும் ஏகமாகத்திரட்டி வாரங்கல் பட்டணத்தை முற்றுகையிட்டு ஜெயித்து வசப் படுத்திக் கொண்டனர். அப்பொழுது காயபநாயகுடு 'சுரத்ராண' பிருது தரித்துக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்ய ஏற்பாடு செய்து, தன்னுடைய ஆட்சியை கோதா-வரி வரையிலும் பிரபலப் படுத்திபும் பிரஜைகளுக்குக் குதூகலம் உண்டாகும்படி செய்தனர். அக்காலத்தில் வெலமவார் என்ற குலத்தினர்கள் தங்களுக்குச் சுதந்திரமாக தனி ராஜ்யம் ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். காபய ராஜ்ய அதிகாரத்திற்கு உட்படாமல் கலகம் செய்ய ஆரம்பித்தனர். வெலமவாரில் யேசம நாயடு என்றவரும், பகருத்தீன் என்ற சேனுதிபதியும், தெலிங்காணு தேசத்தை ஸ்வாதீனம் செய்துகொள்ளப் பிரயத்தனம் செய்து வந்தனர். வெலம வாருக்கும், மஹமதியருக்குங்கூட அடிக்கடி தகாதாக்கள் ஏற்பட்டு வந்தன. பிலம்பட்டம், இந்திராலப் பிராந்தியங் களில் வெலமவாருக்கும், குல்பர்க்க மஹம்மதீய (மல்லிக் சப்பர்தின் முதலானவர்கள்) சைன்யத்திற்கும் யுத்தம் ஏற்பட்டன. வெலமவாருடன் போராட சகாயத்திற்கு காபயநாயகன் கிறிஸ்து சகம் 1351-ஆ காலம் மஹம்மதிய சேனுதிபதியாகிய அல்லாவுத்தீனு ஹுசேனுவுக்கு உள்படா மல் தப்பமுடியவில்லை. இப்படி வெலம வீரர்களும், ரெட்டி வீரர்களும் அந்நிய ஜாதியருக்கு உட்பட்டு, பரஸ்பரம் மனத் துவேஷங்கள் கொண்டே ராஜ்ய பரிபாலனம் செய்துவந்த னர். சாளுக்ய வம்சத்தினருக்கும், வெலமவாருக்கும் மன ஒற்றுமை இல்லாமலிருந்தன. இந்து ராஜ்யம் யாருக்கு? அவர்களுக்கே சொந்தம் என்று நினைத்துக்கொண்டு, இதரர் களை அடக்குவதற்கு சூழ்ச்சி செய்து வந்தனர். இந்த ஸ்திதி யில் மொளுகூர் (மோகுலூரர்) கடபண்ட, மும்மடி, மைலாறு ராஜாக்களுக்கும் பிரமாதமாக யுத்தம் ஏற்பட்டன. அதில் கம்ம வீரர்கள் கூட ரெட்டியார்களுக்கு வசப்பட்டிருந்தனர்.

ஆயினும் அந்த யுத்தத்தில் வெலம வீரர்களே ஜெயம் பெற்றனர். இதனால் வெலமவாருக்கு எல்லையில்லாத தைரியம் உண்டாயிற்று. கிறிஸ்து சகம் 1360-ல் காலம் வெலம ப்ரபுக்களில் பொர்ர தாசா நாயகர் குமாரராகிய சிங்கம நாயகனுக்கும், சாளுக்ய ராஜாக்களுக்கும் யுத்தங்கள் நடந்துவந்தன. சிங்கம நாயுடு ஒரு படையைத் திரட்டிக் கொண்டு ஜல்லிபல்லியில் அநேகரைக் கொன்று தள்ளினர். அதனால் வெலமவாருக்கு அதிக ஆக்ரோஷம் ஏற்பட்டு, சிங்கம நாயகர் குமாரர்களாகிய அனபோதா நாயுடு, மாதா நாயுடு தங்களுடைய சைனியங்களுடன் ஜல்லிபல்லி கோட்டையை முற்றுகையிட்டு 20 ஆயிரம் வீரர் படையும், 6 ஆயிரம் குதிரைப்படையுடனும், 700 யானைப்படைகளுடன் சென்றனர். இதை அறிந்து சாளுக்ய ராஜாக்கள் 5 லக்ஷம் 20 ஆயிரம் படையுடன் எதிர்த்துப் போராடினர். அதில் வெலம வீரர்கள் ஜல்லிபல்லிக் கோட்டையை விட்டு இனுபர்தி கோட்டைப் பக்கம் சென்று கோர யுத்தம் நடத்தினர். இந்த யுத்தம் கிறிஸ்து சகம் 1361-வருஷம் (சார்வரி வருஷம் கார்த்திகை மாதத்தில்) நடந்தன. இதில் சாளுக்ய வீரர்கள் சம்ஹரிக்கப்பட்டனர். கடைசியில் ஜல்லிபல்லி, யினுகுர்தி கோட்டைகள் வெலம வீரர்களுக்கே வசமாயின. ஜல்லிபல்லி கோட்டையிலிருந்த 101 சாளுக்ய ராஜாக்களை செக்கிலிட்டு ஆட்டியும், அநேக சித்திரவதைகள் செய்தும், அவர்களுடைய ரத்தத்தினால் அனபோதா நாயுடு, மாதா நாயுடு என்ற வீரர்கள் தங்கள் தந்தையாகிய சிங்கம நாயனி உத்திரவுப்படி அவருக்கு நீரோதகம் செய்யப்பட்டன. இதனால் இவர்கள் (பரசுராமனைப் போல) பரசுராம பிருது தரித்துக்கொண்டனர். சாளுக்யர்களுக்கு கோரமான கொலைகள் நடந்த பின்னர், சாளுக்யர் என்று சொல்வதற்கு சங்கோசப்பட்டு அவர்களில் ஹைதசேஷு, மச்ச, சம்பெட்ட, கட்டா முதலான வம்சத்தினர் முதலானோர்கள் கடைசியில் கம்மவாராகவே வாழ்ந்ததாகக் காணப்படுகின்றன. சில அவர்கள் சென்ற பிரதேசங்களின் பெயர்களை வைத்துக்கொண்டு வாழ்ந்தனர் என்றும் காணப்படுகின்றன.

பின்னர் வெலம வீரர்களில் ஒருவராகிய அனபோநா நாயடு. ராஜுகொண்ட பிரதேசத்தில் அவர் சகோதரராகிய மாதா நாயுடு தேவரகொண்ட பிரதேசத்திலும் ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு, அதை விருத்தி செய்வதற்காக அநேக பிரயத்தனங்கள் செய்து வந்தனர். தேசடி வேமா ரெட்டியும், அவர் குமாரனாகிய அனபோதா ரெட்டியும் தத்பூர்வ அத்தங்கியில் ராஜ்யத்தை ஸ்தாபனம் செய்துகொண்டு அது விருத்தி அடைவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்து வந்தனர். வெலம வீரர்களுக்கும், ரெட்டி வீரர்களுக்கும் மறுபடியும் தரணிக்கோட்டை மத்தியில் யுத்தங்கள் நடந்து வந்தன. அங்கு இப்போதும் நருகுள்ளபாடு, எமுகபாடு என்ற கிராமங்கள் அந்த யுத்த காலத்திலோ, பின்னர் ஏற்பட்ட யுத்தத்திலோ அது பிரசித்தி பெற்றுள்ளன.

அனபோத நாயுடு என்ற வெலம வீரர் ஒரு பக்கமாகவும், ரெட்டி வீரர்கள் மற்றொரு பக்கமாகவும் ராசவாருடன் பிரமாதமாகக் கோர யுத்தம் மேலே சொல்லப்பட்ட இடத்தில் நடத்தி அவர்களை இம்சித்து வந்தனர். கிறிஸ்து சகம் 1369-வருஷத்தில் அனபோத நாயடு பீமவர ப்ராந்தியத்தில் நடந்த யுத்தத்தில் காபயநாயகனைச் சம்ஹாரம் செய்து தள்ளினர். இதற்குள்ளாக காபயநாயகன், அல்லாவுதீன் உச்சேனு நவாபுக்கு உள்ளாயினர். பின்னர் வெலம ப்ரபுவாகிய அனபோத நாயடு தன் அந்தரங்கக் காரியதரிசியாகிய எருவபர்த்தி ராஜனுக்கு (கம்மவாரும், சோழ வம்சத்தினரும்) தூண்டிவிட்டு அவரை அனபோதா ரெட்டியின் மீது ஏவ, அந்தப் போராட்டத்தில் அனபோதா ரெட்டி சூரவர ப்ரதேசத்தின் பக்கம் ஓடிப்போய்விட்டனர். இதே போல கொப்புல வம்சத்தார் மீதும் பக்திராஜு சென்று போராட்டம் ஆரம்பிக்க அப்பொழுது அல்லாவுதீன் சேனைகளையும், கஜபதி சேனைகளையும் ஒன்றாகத் திரட்டி இவர்களுடன் எதிர்த்துப் போராடும்படி ஏவ, இவர் பின் வாங்கி ஓடச்செய்தனர். கடைசிவரையிலும் எருவவார் கஷ்டப்பட்டும், மறுபடியும் சைனியங்களைத் திரட்டி, மிக்க பராக்ரமத்துடன் எதிர்த்து, வெலம ப்ரபுவாகிய வேதகிரி (1) சகாயத்துடனும், குல்பர்க்கா ராஜாவாகிய பிரோஜிஷா

சகாயத்தாலும் காமபுரியில் கிறிஸ்து சகம் 1366-வருஷ காலத்தில் இராஜ்யத்திலுள்ளவர்களின் முயற்சியினாலும் ராஜ்யத்தை நிலைநாட்டிக் கொண்டனர். எருவபக்திராஜனும், அநதேவ சோழராஜனும் அங்கு ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தனர். ஆயினும் இந்த ராஜ்யமுங் கூட அதிக காலம் நிற்கவில்லை. கிறிஸ்து சகம் 1417-வருஷத்தில் ராஜமயேந்தர பாலகனாகிய தொட்டய்ய அல்லா ரெட்டி விஜயநகர ப்ரபுவாகிய 2-வது ஹரிஹர ராயர் சைன்ய சகாயத்தால் அநதேவ சோழனை எதிர்த்து அவரைச் சம்ஹாரஞ் செய்து அந்த ராஜ்யத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டனர். இதற்கு முன்னதாகவே குறிஜால முப்பபூபதி கோதாவரி நதி தீரத்திலுள்ள ராமகிரியில் ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்தும் ராஜ்யத்தை ஆண்டு வந்தார். இதுவும் கொஞ்ச காலத்தில் அன்னியர் வசமாயிற்று. இது நிற்க கொண்டவீடு சீமைப்பிரபுவாகிய பெதகோமட்டி வேமா ரெட்டிக்கும், குல்பர்க்க பாலகனாகிய பிரோஜிஷாவுக்கும் நேசம் ஏற்பட்டு வந்தன. அவர் ராஜமயேந்த்ர பாலகனாகிய ரெட்டி ப்ரபுவுடன் யுத்தத்திற்குப் போனதை எண்ணி, தேவரகொண்ட பிரதேசத்திலிருந்து வெலம வீரனாகிய வேதகிரி 2-வது படையெடுத்து தரணிக்கோட்டைப் பிராந்தியத்தில் மாசா நாயுடுவை சம்ஹரித்து ஜெயத்துடன் சென்றனர். பெதகோமட்டி வேமா ரெட்டி திரும்பி வரும் பொழுது இந்த சமாச்சாரம் தெரிந்து உடனே பிரோஜிஷா சைனியத்துடன் தேவரகொண்ட பிராந்தியத்திற்குச்சென்று வேதகிரி 2-வது யுத்தத்தில் ஜெயம் பெற்று, சிறைப் பிடித்து வந்து சிரச்சேதம் செய்து பின்னர் வெலம ப்ரபுவாகிய 2-வது அநபோத நாயடு, விஜயநகர பாலகராகிய தேவராயருடன் சந்தித்து அவர் சகாயத்துடன் பானகல்லு, நல்லகொண்ட சீமையின் மீதும்படையெடுத்தனர். பிரோஜிஷா அந்தப்ரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டனன் அப்பொழுது மிக்க உக்ரமாக இந்து ராஜாக்கள் எல்லோரும் கூடி, மஹமதிய வீரர்களை ப்பிடித்துத் தலைகளை வெட்டி, ஒரு பாலத்தைக் கட்டினார்கள், பின்னர் மஹமதிய சுல்தான் முதுகு காட்டி ஓடிவிட்டனன்.

வெலம வீரனாகிய மாதா நாயடு, அப்புறம் பெதகோ-மடி வேமா ரெட்டியின் மீது கொண்டவீடியில் பிரவேசித்து

கிறிஸ்து சகம் 1419-ஆல் காலத்தில் ஜெயித்ததாகக் காணப்படுகின்றன. இது இப்படி இருக்கின்ற சமயம், கிறிஸ்து சகம் 1557-ஆல் சுல்தான் அல்லாவுத்தீன் இறந்து போகவே, அவர் குமாரன் ஹுமாயூன்ஷா ராஜாவாக வந்ததும், வாரங்கல் ராஜ்யத்தை வெலம ப்ரபு ஆக்ரமித்திருந்தார். ஆதலால் இவர் மீது, கிவாஜா ஹஸன் நைஜாம், முல்கு சேனாதிபதிகளை அனுப்பி, அநேக சேனைகளைக் கொண்டு அவர்கள் தேவரகொண்ட பிரதேசத்தை நாசம் செய்து ராஜ்யத்தையும் பற்றிக்கொண்டனர். அந்தப் பிரதேச பாலகராகிய லிங்கநரபாலன் அவர்களை ஜெயிக்க முடியாத நிலையில், கபிலேந்திர கஜபதி சகாயத்தைப்பெற்று ஜெயித்து விடலாம் என்று அவரை வேண்ட, அவர் எப்படியாவது தன் ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தவேண்டுமென்று எண்ணி இருந்தவையினால், உடனே சகாயத்திற்கு ஒப்புக்கொண்டு, தன் குமாரனாகிய ஹம்வீரனை அங்கு சில சேனைகளுடன் அனுப்பி மஹம்மதியர்களைத் தாக்க ஏற்பாடு செய்தனர். பின்னர் அவர்கள் கம்பம்மெட்டு, தேவரகொண்ட பிரதேசங்களுக்குச் சென்று மஹம்மதியர்களைத் தாக்க அவர்கள் ஓடி விட்டனர். அதன் பின்னர் லிங்கமராஜனை ராஜகோட்டையில் நிறுத்தி ஹம்வீரன், கிரமப்படி தெலிங்கான பிரதேசத்தை வசப்படுத்திக்கொண்டு கிறிஸ்து சகம் 1461-வருஷத்தில் வாரங்கல் ராஜ்யத்தையும் ஆக்ரமித்துக் கொண்டனர்.

கபிலேந்திர கஜபதி மிக்க பராக்ரமசாலி ஆனதால், இவர்கள் ராஜ்யத்தை விஸ்தரிக்கச் செய்து கிறிஸ்து சகம் 1464-வருஷத்தில் தன் ராஜ்யத்தையும், ஆந்த்ர தேசத்தைப் பூராவும் வசப்படுத்திக் கொண்டனர். தவிர இவருடைய ராஜ்யம் தென்னார்க்காடு வரையிலும் விஸ்தாரப்படுத்திக் கொண்டனர். அதன் சின்னங்களும் காணப்படுகின்றன. இவர் காலத்தில் கொண்டவீடு பிராந்தியங்களை எல்லாம் கபிலேஸ்வர குமாரபாத்ரனாகியவர் ராஜப்பிரதிநிதியாகப் பரிபாலனம் செய்து வந்தார். இவருக்குப் பின்னர் புருஷோத்தம கஜபதி கிறிஸ்து சகம் 1471-ஆல் வரையிலும், பின்னர் பிரதாபருத்ர கஜபதியும் ஆந்த்ர தேசத்தையும் பரிபாலித்து வந்தார்கள். இந்த கஜபதிகளின் பரிபாலன

காலத்தில் விஜயநகர ராஜ்யாதிபதிகளாகிய பிரௌட தேவ-ராயர், மல்லிகார்ஜுன ராயர், சாளுவ நரசிம்மராயருக்கும் இவர்களுக்கும் அநேக யுத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. இதன் மத்தியில் சிறிய ராஜ்யங்கள் நிலைநிற்க அவகாச-மில்லாது இருந்தன. கடைசியில் கிறிஸ்து சகம் 1514-15 வருஷத்தில் கிருஷ்ணதேவராயர் உதயகிரி, கொண்டவீடு, கொண்டபல்லி முதலான பிராந்திய கஜபதிகளின் மீது படையெடுத்து ஜெயித்து வசப்படுத்தும் வரையிலும் கஜபதி-களின் ஸ்வாதீனத்திலேயே இருந்தன. இவர் 4-தடவை அவர்கள் மீது படை யெடுத்து ஜெயித்தார்.

கிருஷ்ணதேவராயர் இறந்து போன பின்னர், அச்சுத தேவராயர் பரிபாலித்து வந்தார். அப்பொழுது குலிகுத்புஷா என்ற கோல்கொண்டா ராஜாவானவர் கிறிஸ்து சகம் 1530-ல் கொண்டவீடு துர்க்கத்தின் மீது படை யெடுத்து வந்து கைப்பற்றிக்கொண்டனர். அவினும் இதைக் கேட்ட அச்சுதராயர் உடனே தன் சேனைகளை ஏவி, அவர் களைத்துரத்தி, ராஜ்யத்தை வசப்படுத்திக் கொண்டனர். கிறிஸ்து சகம் 1563-வருஷத்தில் இப்ராஹீம் குதுப்ஷா கொண்டவீடு பிரதேசத்தை ஸ்வாதீனம் செய்து கொள்ள ஏற்பாடு செய்து யுத்தம் ஆரம்பித்து தாக்கமுடியாமல் ஓடிப் போயினர். இவர் அதற்குள்ளாக சும்மா இராமல் கிறிஸ்து சகம் 1565-ல் தள்ளிக்கோட்டைப் பக்கம் மஹம்மதியர் களுக்கும், விஜயநகரத்தாருக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் விஜயநகர சாம்ராஜ்யம் பலஹீனமாகிய பின்னர், முதல் ஸ்ரீரங்கராயர் பெனுகொண்டா பிரதேசத்திற்குச் சென்று அங்கு ராஜ்ய பரிபாலனம் செய்து வருகின்ற காலம், கொண்டவீடு, உதயகிரி ராஜ்யங்களை ஆக்ரமித்துக் கொண்டனர். இந்த யுத்தங்களில் வெற்றி பெற்ற எருவவார் என்றவர்களும், நிஜாலவார் என்றவர்களும் அதமாகிப் போய்விட்டபடியால், சாகினாரின் சிலர் உத்திரப் பிரதேசங்களுக்குப் பிரிந்து போய் சில காலத்திற்குப் பின்னர் பெத்தாபுரப் பிராந்தியத்தில் மஹம்மதியரிடம் ராஜப்பிரதி நிதிகள் ஆக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபனஞ் செய்துகொண்டும், வெலம ரெட்டிமார்களும் நசித்து போய்விட்டபடியாலும், கம்ம நாட்டில் கம்ம வீரர்களுக்கு நாதனில்லாதபடி

நேர்ந்தன. இந்தக்காலத்தில் சூராதி சூரர்களாகிய கம்ம வீரர்கள் சிலர் ரெட்டி ராஜாக்களிடமும், கஜபதிகளிடமும் மற்றும் சிலர் விஜயநகர ராஜ்யத்தில் சேனாதிபதிகளாக, ராஜப்பிரதிநிதிகளாகவும் சேர்ந்துவந்தனர். இவர்களுடைய சரித்திரங்களை இனி வரும் பாராக்களில் விவரிக்கப்படும்.

214) எருவவார், எருவபக்தீஸ்வர சோழன், இந்த எருவவாரின் சரித்திரங்கள் சிலவற்றை முந்திய பாராக்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து சகம் 1360-வருஷ காலத்தில் இவர் பாலனம் காணப்படுகின்றன. இவருடைய பூர்வீகஸ்த்தானமாகிய எருவ பிராந்தியத்திலிருந்து கோதாவரி ப்ரதேசங்களுக்கு வந்து அங்கிருந்த ரெட்டி ராஜா அநபோதரிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்ததாக சரித்திரக்காரர்கள் குறிப்பிடுகின்றனர். அநதேவ சோழனுடைய சாசனத்தால் இவர் மிக்க வீரப்ரதாபகராக இருந்ததாகவும், பொக்கர முதலான வெனராஜாக்களையும், குலபுண்டியில் யுவராஜாவாக இருந்த காலமே ஜெயித்ததாகவும், பாஞ்சதார்லப் பிரதேசத்தில் கஜபதியையும், பரணிபாடு பிரதேசத்தில் சிங்கபூபதியையும், பெதகொண்ட பிரதேசத்தில் திபர்கான் முதலானவர்களையும், சூரவர ப்ரதேசத்தில் வீரான்னபோதனை ஓடச்செய்ததாகவும், துருஷ்கருடைய சைனியத்துடன் கர்னாடக ராஜனைத் தோற்கடித்ததாகவும், அத்திலிப் பிரதேசத்தில் நடந்த யுத்தத்தில் சத்துருக்களை எதிர்த்து ஓடச்செய்து, 10 ஆயிரம் சைனியங்களை ரக்ஷித்ததாகவும், உண்டிராஜனுடைய சகாயத்தால் காகரபர்த்தியின் பக்கம் நடந்த யுத்தத்தில் கன்னட சைனியத்தையும் ஹதம் செய்ததாகவும், காட்டய வேமா ரெட்டி குடும்பத்தினர் தன்னுடன் நடந்த யுத்தத்தில் தோற்றுச் சரணடைய அவர்களை ரக்ஷித்ததாகவும் தெரியவருகின்றன. இதிலிருந்தது ருஷ்க சேனாதிபதிகள் பஹமனீ சுல்தானாகிய அல்லாவுத்தீன் ஹசன்கங்கு சைன்யத்தைச் சேர்ந்தவரே ஆவாரென்றும் அநபோதா ரெட்டி (அந்தங்கிப்ரபுவு) கொப்புல காபைய்ய நாயகருக்காக கஜபதியுடன் போராடிய சமயம் இவருங்கூடச் சேர்ந்து இருக்கலாமென்றும், அப்பொழுது கஜபதியை ஓடச்செய்து காபய நாயகன் ஒரு சிறிய ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளதாக சரித்திரக்காரர் அபிப்ராயப்

படுகின்றனர். இவர் எக்காரணத்தாலோ பின்னர் ரெட்டி ராஜாக்களுடன் விரோதம் செய்துகொண்டு, ராஜ்யத்திற்காக யுத்தம் நடத்தியதாகவும் காணப்படுகின்றன. இவர் காமபுரி என்ற பட்டணத்தை உண்டாக்கி, காமராஜு என்ற பெயரும் சூட்டிக்கொண்டு அப்பட்டணத்தை ஆண்டு வந்ததாகவும், கோதாவரிப் பிராந்தியத்தில் அநபோதா ரெட்டி பாலனம் கிறிஸ்து சகம் 1356-வருஷத்தில் தீர்ந்துபோனதால் மறுபடியும் அநவேமா ரெட்டியார் பரிபாலனம் கிறிஸ்து சகம் 1373-வருஷத்தில் அங்கு காணப்படுவதால், இதன் மத்ய காலத்தில் இவர் பரிபாலனம் செய்துவந்ததாக சரித்திரக்காரர் அபிப்பிராயப்படுகின்றனர். அநவேமா இவருடன் சிநேகமாகி இவரை ராஜப்பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டதாகக் காணப்படுகின்றன. இதன்றி அநவேமா ரெட்டி ப்ரபுவானவர் தன்னுடைய குமார்த்தியை இவர் குமாரனாகிய பீமராஜனுக்கு விவாஹம் செய்து கொடுத்ததாக சிவலீலாசம் காசீகண்டம் என்ற கிரந்தத்தில் எழுதப் பட்டுள்ளதாக இந்த ஸ்லோகத்தால் தெரியவருகின்றன. இந்த ஸ்லோகம், மத்தகோகில.

அநவேமக்ஷிதிபாலுபௌத்ரியகுவே, மாம்பாமஹாதேவி
கின்கநுண்டையல்லடபூமிபாலுனகுசம், கிராமஸ்த்திலீ
காண்டிபுல்தநம்ல்வேமவிபுண்டுவீரவசுதா, த்யக்ஷுண்டு
தொட்டப்ரபும்டுநு நன்னய்ய யுபாஹு விக்ரமகளா,
டோபப்ரதாபோன்னதுல், ஸ்ரீநாதுனிகாசீகண்டமு

சிவலீலா விலாசத்தில் பத்யத்திற்கு முதல் பாகம் 104-ல் காணலாம்.

இந்த விவாஹம் பக்த்தீஸ்வர சோழன் காலத்தில் நடந்தது. இல்லையென்று சொல்வதற்கு ஆதாரமில்லாதிருக்கின்றன. லோகல் ரிகார்டுகளில் ஒரு சாசனத்தில் இவர் குமாரனாகிய அநதேவ சோழ கிறிஸ்து சகம் 1366-ஷ் அநவேமா ரெட்டியார் பரிபாலனத்திற்கு முன்னதாகவே சிம்ஹாசனம் ஏறியதாகக் காணப்படுகின்றன. பக்த்தீஸ்வர சோழன் கோழகிரீஸ்வராலயத்திற்கும், பட்டச வீரபத்ராலயத்திற்கும் தங்க முலாம் பூசியதாகவும், இவர் காசிவிஸ்-வேஸ்வர தேவாலயத்திற்கு அநேக கிராமங்களும், பட்டசத்

திக் பிராம்ஹணர்களுக்கு 100 கோதானங்கள் கொடுத்துப் பிரசித்தி பெற்றனர். இவர் பர்வதஸ்வாமிக்கு செருவாடு, அத்துகூறு கிராமங்களைக் கொடுத்தும், திரிபுராந்தகஸ்வாமிக்கு ஆமுதாலபல்லி கிராமத்தைக் கொடுத்ததாகவும், ஸ்ரீநாத மஹாகவி எழுதிய 'ஸிவராத்திரி மஹாத்மியம்' என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளன. இம்மகாராஜா ஸிவபக்தராகையால் நித்யம் 6 காலத்திலும் தரிசனம் செய்வதே செய்துவந்தனராம். இவருடைய பார்யை அந்நெமாம்பா. இவருடைய குமாரர்கள் பீமராஜு, அநதேவசோழன் என்ற இருவர். பக்தீஸ்வரன் சாலிவாகன சகம் 1227-வருஷம் ஸ்ரீசைல யாத்திரை செய்து விஸ்வேஸ்வர என்ற பிரம்மச்சாரிக்கு கண்டயகொல என்ற கிராமத்தை அக்ரஹாரமாகக் கொடுத்துள்ளார். இந்த விஸ்வேஸ்வர பிரம்மசாரி ஸ்ரீசைலத்தில் வாசம் செய்துகொண்டு, சிஷ்யகோடிகளுக்கு வித்தை கற்பித்தும், தெலுங்கு நாட்டில் மதப்பிரச்சாரம் செய்து வந்தனர். அதனால் கீர்த்தியும் பெற்றனர். இந்த பக்திராஜனுக்கு கண்டபேருண்ட, ராயவேஸ்யாபுஜங்காதி பிருதுகள் உண்டு. இவருடைய பூர்விகர்கள் மும்மடிப்ரோல ப்ரதேசத்தில் வாசம் செய்ததாகவும் அபிப்ராயம்.

215) எருவ அநதேவ சோழ மகாராஜு, இவர் தந்தைக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்தும், இவருடைய சிறிய தாயாரின் குமாரனாகிய பீமராஜு ரெட்டிகளுக்கு பந்துவாகி, ஒரு தந்திர உபாயத்தால் பதப்ரஷ்டன் ஆனதாகவும் காணப்படுகின்றன. பீமராஜு அநவேமா ரெட்டியின் சகாயத்தால் இவருக்கு உரியதான ராஜ்யத்திலிருந்து விலக்கிவிடவே இவர் திரிபுராந்தக ப்ராந்தியத்திற்குத் தமது பூர்விக ராஜ்யமாகிய எருவ சமஸ்தானத்தைப் பரிபாலிப்பதற்காக அங்கு சென்றுள்ளராயினும், அது வெகு காலத்திற்கு முன்னதாகவே விஜயநகர ராஜ்யாதிபதியாகிய 2-வது ஹரிஹர ராயருக்கு ஸ்வாதீனமாயிருந்ததால், ஒன்றும் செய்ய முடியாத நிலையில், தேவரகொண்ட ராஜ்யாதிபதியும், வெலம வம்சாதிபதியுமாகிய வேதகிரியை ஆஸ்ரயித்து தன் குறைகளைத் தெரிவிக்க அவர் உடனே தன் சேனைகளைக் கொடுத்து உதவ, பீமராஜுனுக்கு உதவியாக கொண்டவீடு ப்ரபுவாகிய அநவேமா ரெட்டி சைனியத்தையும் திரட்டிக்

கொண்டு வந்து யுத்தம் செய்யக் கடைசியில் அநவேமா ரெட்டி ப்ரபுவாகிய ஸிங்கபூபதி புத்திரனாகிய அநபோதா நாயுடு 2 படைகளையும் நாசம் செய்துவிட்டதாகவும் தெரிய வருகின்றன. ஆயினும் அநதேவ சோழன் ராஜ்யத்தை அடையமுடியவில்லை என்றே காணப்படுகின்றன. அநதேவ சோழன் குல்பர்கா ராஜனாகிய பெரோஜ்ஷாவை ஆச்ரயித்து அவருக்கும் கர்ணாடக ராஜாக்களுக்கும் நடந்துகொண்டுள்ள யுத்தத்தில் சேர்ந்து கொண்டு, சாகரப் பிரதேசத்தில் கர்ணாடர்கள் ஓடும்படியாகச் செய்து கோட்டையை ஆக்ரமித்து வசப்படுத்திக்கொண்டு, அவரையும் விஜிதராக வைத்துக் கொண்டு. தன் ஆட்சியை நடத்தி வந்தனர் என்று காணப்படுகின்றன. இதற்குள்ளாக ரெட்டி ராஜ்யாதிபதியாகிய குமார ரெட்டி காலகதி அடைந்துவிடவே ராஜ்ய விஷயமாக பெதகோமடிவேமபூபாலனுக்கும் காடய பிரானுக்கும் தகராறு ஏற்பட்டுள்ள சமயம், இதைத் தெரிந்து கொண்டு மறுபடியும் தன் ராஜ்யத்தைக் கைப்பற்றுவதற்காக பிரயத்தனஞ் செய்துகொண்டு, ராசகொண்ட வெலம வீரர்களையும், யவனர்களையும் வசப்படுத்திக் கொண்டதாகக் காணப்படுகின்றன. அப்பொழுது வெலம வீரராகிய ராஜுகிரிக்கும் அநேக ராஜாக்களுக்கும் (ரெட்டியார்கள் ராஜப் பிரதிநிதிகளாக இருந்தனர்) யுத்தங்கள் நடந்துகொண்டு இருந்தன. பெண்டபூடி கோட்டையை வேதகிரி கைப்பற்றிக் கொண்டதாக வெங்கடகிரி ராஜவம்சாவழியினர் தெரிவித்தனர். இந்த யுத்தத்தில் ஜெயம் பெற்றதினாலேயே கடைசி வரையிலும் ராஜாதிராஜ பரமேஸ்வர, பூர்வசிம்ஹாசனாதீஸ்வராதி பிருதுகளைத் தரித்துக்கொண்டு, தன் ராஜ்யத்தை வசப்படுத்திக்கொண்டதாக சரித்திரக்காரர்களின் அபிப்பி-ராயம். இப்படி அநதேவ மஹாராஜா பிரபலமாகியிருக்க, காடய வேமா ரெட்டி ராஜ்யத்திற்கு நஷ்டம் ஏற்படவே, அவர் மறுபடியும் அந்நதேவ சோழன் மீது பழி வாங்க எத்தனம் செய்து வந்தனன். இச்சங்கதியை முன்பே தெரிந்துகொண்ட வேதகிரி பூபாலன், தன் மந்திரியாகிய பினமாத நாயகனை ராஜமஹேந்தரத்திற்கு அனுப்பி அநதேவ சோழனைக் கண் இமைகளைப்போல காப்பாற்ற ஏற்பாடு செய்துவந்தனர் என்று தெரியவருகின்றன. இது நிற்க,

காடயவேமுடு என்றவர் தன் பந்துக்களாகிய விஜயநகர ஹரிஹர ராயரை ஆஸ்ரயித்து அவர் தந்த அநேக சேனைகளை வசப்படுத்திக்கொண்டு அநதேவ மஹாராஜன் மீது படை பலத்தைப் பிரயோகித்து கடும் யுத்தம் செய்ய, அநதேவ சோழன் தன்னுடைய பூர்வீக சிநேகிதர்களாகிய குல்பர்கா சுல்தான் பரோஷிஜாவை ஆஸ்ரயித்து அவரிடமிருந்து அநேக சேனைகளைத் திரட்டிக்கொண்டும், தேவரகொண்ட வெலம வீரர்களுடைய சைன்யங்களையும் வரவழைத்துக் கொண்டு, திடீரென 4 பக்கங்களிலும் எதிரிகளை வளைத்துக் கடுமையாகத்தாக்க. குண்டுகொலனு பக்கம் வெலம வீரரால் காடயபீமனைப் புறங்காட்டி ஓட்ச்செய்துவிட்டனர். அந்த யுத்தத்திலேயே கொப்புநூள்ள திப்பா நாயகனால், காடயவேமன் சம்ஹரிக்கப்பட்டதாக அவர்களுடைய வம்ச சரித்திரம் கூறுகின்றன. அத்திலி பிரதேசத்தில் ஒரு பிரமாதமான யுத்தம் நடந்ததாகவும் சொல்லப்படுகின்றன. காகரப்பர்த்தி பிரதேசத்திலும் விஜயநகர சேனைக்கும் அநதேவனுக்கும் ஒருயுத்தம் நடந்ததாகவும், அதில் அநதேவனே ஜெயம் பெற்றதாகவும், கர்னாடக சைன்யம் சிதறிப்போய் விட்டதாகவும், காடயவேமன் மரணமடைந்த தாகவும், பின்னர் நடத்த யுத்தங்களில் தோல்வி அடைந்த தாலும், காடய வேமனுடைய குடும்பத்தினர் 10 ஆயிரம் சைன்யத்துடன் அநதேவ சோழனைச் சரணடைய, அவர்களை மன்னித்து ஆசி கூறியும் அவர்களை அனுப்பச் சில காலம் வரையில்தான் ஒற்றுமை இருந்து வந்தன. ஏனென்றால் காடய வேமனுடைய சைன்யாதிபதிகளில் ஒருவனும், ராஜமயேந்தர பாலகனுமாகிய தொட்டய்ய அல்லா ரெட்டியும் மறுபடி ராஜ்யத்தைக் கைப்பற்ற ஏற்பாடு செய்து, அநதேவ சோழனுக்கு ராஜமயேந்தரப் பிரதேசம் சுவாதீனம், ஆகாமற்படி அநேக ஏற்பாடுகள் செய்துவந்தனர். இதற்குள்ளாக பிரோஜிஷா தெலிங்கானா மார்க்கமாகப் படையெடுத்துவரக்கண்டு, எதிர்த்துப்போராட, அப்பொழுது விஜயநகர தேவராயர் சகாயம் கூட அல்லா ரெட்டிக்கு இருந்தன. கிறிஸ்து சகம் 1417-வருஷ காலம் மற்றொரு கோர யுத்தம் நடந்ததில் துரதரிஷ்ட்டவந்தனாகிய அநதேவ சோழ மஹாராஜா சக குடும்பமாக நல்லா ரெட்டி

யினுல் கொல்லப்பட்டனர் என்றும். ஸ்ரீ நாதகவி எழுதிய பீமேஸ்வர புராணத்தில், அல்லா ரெட்டிக்கு உதவியாகப் போராடிய அரியேடி லிங்கன்னுவுடன் ஓடிப்போய்விட்டதாக எழுதப்பட்டிருக்கின்றன. அநதேவ மஹாராஜா தன் தந்தையைப்போலவே சைவ பக்த்தராயிருந்து, நித்யம் 6 தடவையில் ஸ்வாமியைச் சேவித்து வந்தவர். இவர் திராக்ஷாராம பீமேஸ்வராலயத்திற்கு சுவர்ண கலசம் வைத்தும், சுவர்ணத்தால் ரிஷப வாகனத்தைச் செய்தும் சாசனம் எழுதி வைத்தனர். இவர் தன் தந்தை காலத்தில் கட்டப்பட்ட காமபுரி பட்டணத்திலேயே வசித்து வந்தனர் என்று கூறப்படுகின்றன. காமபுரி (கல்யாணபுரி) எந்தப்பிரதேசத்திலிருந்ததென்பது காணப்படவில்லை ஆயினும் அங்கு நித்யம் கஸ்த்தூரி, நவரத்தினங்கள் முதலான வஸ்துக்கள் விற்கப்படும் சாலைகள் இருந்தனவென்றும், இந்த மஹாராஜா ஐக்கவாய என்ற ராஜனை ஓட்டிவிட்டதாகவும் தன்னுடைய சாசனத்தில் எழுதிவைத்துள்ளார்- இவர் ஸ்ரீ சக்கரவர்த்தி குமார்த்தையாகிய காம்பிகை என்ற கன்னிகையை விவாகம் செய்துகொண்டு வீரபத்ர ராஜன் என்ற குமாரனைப் பெற்றனர் என்றும், இவருங்கூட யுத்தங்களில் பிரவேசித்ததாகவும், அநதேவ மஹாராஜா வீரபத்ராலயத்திற்கு அநேக கிராமங்களைக் கொடுத்தும், தன் பேரால் விசரி நாட்டில் அந்நதேவ சோழ அக்ரஹாரம் கட்டியும், பிராம்ஹணர்களுக்குக் கொடுத்தும், அநேக பிராம்ஹண விவாஹங்களுக்கு நிதி கொடுத்துக் காரியங்களை நடத்தியும் பிரசித்தி பெற்றனர். இவர் எழுதி வைத்த கிறிஸ்து சகம் 1388-ஆம் சாசனம் ஒன்று திரிபுராந்தப் பிராந்தியத்திலிருக்கின்றன, இவர் சாசனம் சாலிவாகன சகம் 1335-வருஷத்தில் தாய்-தந்தையர்களுக்கு புண்யார்த்தமாக பாலகொல்லு க்ஷீராராமேஸ்வராலயத்திற்கு பூமிதானம் செய்தனர். (S. I I V. No. 145)

216) ஏருவபீமராஜு 2, இவர் பக்தீஸ்வர சோழனுடைய குமாரர்களில் ஒருவர் என்று தெரிவித்தோம். இவர் கொண்டவீடி பாலகனுகிய அநவேமா ரெட்டியின் குமாரத்தியை விவாஹம் செய்து கொண்டு, தன் குமார்த்தியாகிய

வேமாப்பாவை ராஜமயேந்தர பாலகராகிய தொட்டய்ய அல்லா ரெட்டிக்கு விவாகம் செய்துகொடுத்து, அவருடைய சகாயத்தால் தன்னுடைய சகோதரனாகிய அநதேவசோழன் மீது பழி வைத்து, ரெட்டிகளுக்கும், அவருக்கும் நடந்த போரில் தான் ஜெயித்துப் பிரதானி ஆயினதாகக் காணப்படுகின்றன. ஆயினும், ராஜமயேந்தர ப்ரதேசத்தையோ, மற்ற பிரதேசத்தையோ இவர் பரிபாலித்து வந்ததாகக் காணப்படவில்லை. இவர் அல்லாரெட்டியினிடம் சேனாதிபதியாகவே இருந்தார். தாள்ளபொத்தூர் சாசனத்தில் காணப்படுகின்றன. பஹாவீரனாகிய பீமராஜு சகோதரனுடன் விரோதங்கொண்ட காரணத்தால் இவர்களின் ராஜ்யம் அன்னியர் வசமாயிற்றே ஒழிய இவர்களுக்கு பிரதிபலிக்கவில்லையென்று கூறுகின்றனர்.

217) எருவ கேசவ ராஜு, எருவ வம்சத்தில் பிரசித்தி பெற்றவர்களில் இவர் ஒருவர். எருவ சிங்க ராஜனுக்கும், லக்ஷிமீதேவிக்கும் புத்திரனாகிய இவர் சாசனம் ஒன்று அமராவதியில் உள்ள அமரேஸ்வராலயத்தில் காணப்படுகின்றன. அதனால் இவர் சிலுமூர் கிராமத்தில் 1 புட்ல 320 வள்ள பூமியை அத்தேவாலயத்திற்குக் கொடுத்து சாசனம் எழுதி வைத்ததாகக் காண்கின்றன. கம்மவாரில் எருவவார் என்றவர்கள் இந்த வம்சத்தினரே ஆவார். இவருடைய வம்சத்தினர் விஷயம் பின்னர் சரித்திரங்களில் காணப்படவில்லை ஆயினும் சாலிவாகன சகம் 1579-வருஷ காலம் விப்பர்ல கோத்ரவாசிகளாகிய யேர்வ பேரா ரெட்டி, லிங்கம ரெட்டி, கொண்டா ரெட்டி, பெத வெங்கன திம்மா ரெட்டி, சின்ன வெங்கன என்றவர்கள் கனிகிரி தாலூக்கா கூட குண்ல கிராமத்தில் கோபாலஸ்வாமிக்கு கருங்கற்களினால் பிரமாதமாகக் கோவில் கட்டி வைத்ததாக சாசனங்களால் தெரிய வருகின்றன. இவர் தந்தை லச்சி ரெட்டியென்றும், பாட்டனார் கொண்டா ரெட்டி என்றும் எழுதப்பட்டுள்ளன. இவர்களுக்கும் மேலே சொல்லப்பட்ட ராஜவம்சத்தினருக்கும் உண்டாகிய சம்மந்தா சம்மந்த விஷயங்கள் காணப்படவில்லை. இவர்கள் எல்லோரும் ரெட்டி வம்சத்தினரென்றே காணப்படுகின்றன.

218) மச்சவாரு—மச்சகன்னவிபுண்டு, மச்சவார் சாளுக்ய வம்சத்தில் சேர்ந்தவரென்று வெலுகோடிவார் வம்சத்தாரால் தெரியவருகின்றன. இவர்கள் கம்மவாரில் அடபவார் என்றவர் முக்கிய பந்துக்கள் ஆகியிருக்கின்றனர். 14-வது சகாப்த காலம். இந்த மச்ச வம்சத்தினர் அநேகர் வீர புருஷர்களாகயிருந்து பத்மநாயக ராஜாக்களுடன் விரோதிகளாயிருந்து வந்தனர். அக்காலத்தில் பலர் ராஜ்யத்திற்காகப் போராடி வந்தனர். மச்ச வம்சத்தில் சுமார் கிறிஸ்து சகம் 1321-வருஷம் காலம் அன்னராஜன் என்றவர் இருந்தார். அவர் வெலுகோடி எர்ரதாச நாயகனால் யுத்தகளத்தில் கொல்லப்பட்டதாக வெலுகோடிவார் வம்சாவழியில் இந்த ஸ்லோகத்தால் தெரியப்படுகின்றன. இந்த ஸ்லோகம்:

> விருண்டாயாசப்ருதுவீ, விபுண்டதுலபுஜா, விக்ரமமன் யக்ருதருபுண்டைமச்சகன்ன, ப்ரமுகன்ருபநுதுலன், ப்ராணமுல்வாபின்யயெச்சன் (நோராஜான்) கட்க நாரன், துனிமெதுரகலம், தோலிதத்சைன்யராஜீ, பொராஜீதாட்டிசெல்லன். கொலசலமபுரின், கோட்டி காகோட்டிதெச்சன்.

எர்ரதாசா நாயனி புத்திரனாகிய சிங்கம நாயடுவும ஜிலுகு பல்லி பக்கம் நடந்த யுத்தத்தில் ஒரு மச்சகந்நயனைக்கொன்று விட்டதாக எழுதப்பட்டுள்ளன. இந்த யுத்தத்தில் தந்தை யும் குமாரனும் கலந்துகொண்டு போராடினார்கள்.

219) மச்சகொம்மாநேனி, பாசண்டு, இவர் குமார னாகிய பாசன், இந்த தந்தையும் குமாரனும் மகாவீரபுருஷர் களாக இருந்தனர். இவர்கள் வெலுகோடி யெர்ரதாசா நாயகன் புத்திரனாகிய சிங்கம நாயகனுடன் கோரமான யுத்தம் செய்து தோற்று ஓடிப்போய்விட்டதாகவும், மகதல ப்ரதேசத்தில் நடந்த யுத்தத்தில் மச்சகொம்மா நாயகரைச் சம்ஹாரம் செய்துவிட்டதாகவும், மறுபடியும் ஜிலுகுபல்லி யிடம் நடந்த யுத்தத்தில் சிங்கம நாயகரால் பாச நாயகர் சம்ஹரிக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றன.

220) மச்சருத்ரர், இவர் கூட மிக்க வீரபராக்ரமத்துடன் யுத்தங்களில் கலந்துகொண்டு வந்தனர். துரதிர்ஷ்டவசமாக மகதல ப்ரதேசத்தில் நடந்த யுத்தத்தில் இவருங்கூட சிங்கம நாயகரால் கொல்லப்பட்டதாகக் காணப்படுகின்றன ஜிலுகுபல்லி, மகதல ப்ரதேசங்களில் நடந்த யுத்தங்களில் கம்ம வீரர்கள் அநேகர் சம்ஹரிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றன. சிங்கம நாயகன் அங்கு மச்ச நாயகர்கள் தலைகளைக் கண்டதுண்டம் செய்து பிருதுகள் பெற்றனர் என்றும், இந்த சிங்கம நாயடு கடைசியில் ஜல்லிப்பல்லி கோட்டையை முற்றுகையிட்ட சமயம் தம்மல பொம்மனுல் குத்தப்பட்டு மரணமடைந்தனர்.

221) மச்சயோபல ராஜு, இவர் சிந்து வம்ச ராஜாக்களிற்சேர்ந்தவரென்று வெலுகோடி வம்சாவழியினரால் தெரியப்படுகின்றன. (புடம் 18) ஜல்லிபல்லி வீர க்ஷேத்திரத்தில் 5 லக்ஷத்து 60 ஆயிரம் கால் பலத்துடன் இந்த மச்ச ஓபுலராஜன் முதலான சேனுதிபதிகள் கூடி அனபோதா நாயடு, மாதா நாயடு இவர்களுடன் கிறிஸ்து சகம் 1361-வருஷம் சார்வரி-வருஷம் கோரமான யுத்தம் நடத்தினர். இந்த ரணகளத்தில் வீரசூரனுகிய யோபலராஜனும், அனபோதா நாயடுவால் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றன. இந்த மச்சவார் அநேகர் மடிந்துபோக, ஹதசேஷராகியவர்கள் எங்கேயோ தலைமறைவாகியிருந்து நாளாவட்டத்தில் கம்மவார் என்று சொல்லிக்கொண்டு வந்தனர். 17-வது சகாப்த காலம் மச்சகொண்ட நரபாலன் என்பவரிருந்து அவருடைய குமார்த்தையாகிய திருமலம்ம என்ற பெண்மணியை நரசிம்மராஜனுக்கு பாணிக்ரஹணம் செய்து கொடுத்ததாக ஜானகீராகவம் என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றன.

222) மச்சகாசி நாயடு, (நேனி) இந்த வம்சத்தில் சாலிவாகன சகம் 1337-ஹு கிறிஸ்து சகம் 1415-ஹு காலம் மச்சகாசி நேனி என்றவர் கொண்டவீடு பிரதேசத்தில் மிக்க பிரசித்தி பெற்றவராக இருந்தனர் என்று காணப்படுகின்றன இவருடைய மனைவியின் பெயர் நாகசானி. இவர்களுடைய

புத்திரி கொலவேமசானி தேவியார். இவர் சாலிவாகன சகம் 1337-வருஷம் கொண்டவிடு மைலார தேவஸ்த்தானத்திற்கு மத்யரங்கமு என்ற த்வச ஸ்தம்பத்தை, தாய், தந்தையரின் புண்யார்த்தமாக நிர்மாணித்து சாசனம் எழுதி வைத்தனர்.

223) கொண்டவார், கொண்டமல்ராஜு. கிறிஸ்து சகம் 1361-ஞ் காலத்தில் இந்த வம்சத்தினரில் கொண்டமல்ராஜு என்ற மஹாவீரபுருஷரிருந்தார். இவர் சாளுக்ய ராஜவம்சத்தைச் சேர்ந்தவரென்று வெலுகோடிவார் வம்சத்தினர் தெரிவிக்கின்றனர். வெலம வீரர்களாகிய அநபோதா நாயடு, மாதா நாயடு என்றவர்கள் (ராஜகொண்ட, தேவா கொண்ட ப்ரபுக்கள்) ஜல்லிபல்லி கோட்டையின் மீது படையெடுத்து வந்த காலம், இவரும் சாளுக்ய ராஜாக்களுடன் கோர யுத்தம் நடத்தினராயினும், அவர்களால் ந்தரணரங்கத்தில் சம்ஹரிக்கப்பட்டன. இந்த வம்சத்தினர் பின்னர் என்ன ஆயினர் என்பது புலப்படவில்லை. ஆயினும் கம்மவாரில் இன்றைக்கும் நுன்னகொண்டவார் என்பவர்கள் இந்த சாளுக்ய வமசத்தினரே ஆவாரென்று சொல்லப்படுகின்றன.

224) சம்மெடவார், (சம்மெடகொண்டராஜு) சம்மெடவார் சாளுக்ய வம்சத்தினரென்று வெலுகோடிவார் வம்சாவழி காட்டுகின்றன. இவர்களையே சம்மெடவார் என்றும், சம்பெடவார் என்றும் எழுதப்பட்டுள்ளன. கிறிஸ்து சகம் 1361-ஞ் வருஷ காலம் இந்த வம்சத்தில் சம்பெட கொண்டராஜென்று சொல்லப்பட்ட மஹாவீர ப்ரதாபன் இருந்தான். கிறிஸ்து சகம் 1361-ஞ் இநுகுர்தி பிரதேசத்தில் வெலம வீரர்களுக்கும், சாளுக்ய ராஜாக்களுக்கும் நடந்த கோர ரணகளத்தில் பங்குகொண்ட வீரர்களில் இவரும் ஒருவர். துரதிர்ஷ்டவசமாக இந்த சூரசிகாமணியுங்கூட அந்த ரணகளத்தில் ராவுலிங்கைய நாயகன் குமாரன் அநபோத நரபாலன் சாளுக்ய ராஜர்களால் மடிந்ததாக வெலுகோடிவார் வம்சாவழியினர் தெரிவிக்கின்றனர். அன்று முதல் அந்த ராஜ்யத்தில் சாளுக்யர் என்று சொல்வது கஷ்டமாக இருக்கின்றன. அங்குள்ளவர்கள் கிரமமாகக்

கம்மவார் என்று சொல்லி வருகின்றனர் என்று காணப்படு கின்றன. தவிர மிக்க தூரப்பிரதேசத்திலுள்ளவர்கள் க்ஷத்திரியர் என்று மாமூலாகச் சொல்லிக்கொண்டே வருகின்றனர்.

225) சம்மெட சோமநரபாலன், இந்த வம்சத்தில் சுமார் கிறிஸ்து சகம் 1417-வருஷ காலத்தில் கடப்பை ஜில்லா பெர்னிபாடு பாலகராக இவர் விஜயநகர சாம்ராஜ்ய பிரபுவாகிய 2-வது தேவராயருக்கும் பிரதிநிதி என்று சரித்திரர்கள் கூறுகின்றனர். இவர் கொண்டவீடு பிராந்தியத்தில் நடந்த யுத்தத்தில் ராயராவ் பிருதாங்கிதராகிய வெலுகோடி அநபோத நரபாலனால் துரத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றன. பின்னர் இவருடைய பாலனம் நிலை நாட்டியதாகக் காணப்படவில்லை. இவருக்குச் சின்னமநேனி என்ற குமாரனிருந்தார். பின்னர் பெர்னிபாடு பிரதேசத் திற்கு அதிபதியானார்.

226) சம்மட பின்னமநேனி, இவருக்கும் வெலுகோடி மாதா நாயகர் குமாரனாகிய லிங்கம நாயகருக்கும் நடந்த போரில் இவர் தோற்றோடிப்போனதாகவும் வெலுகோடிவார் வம்சாவழி தெரிவிக்கின்றன. தேவராயர் ராஜ்ய பரிபாலன காலம் ஏற்பட்ட சாசனத்திலும் கூட இந்தப் பின்னம நேனி பெர்னிபாடு பாலகனாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். லிங்கம நாயன மறுபடியும் தேவராயரை ஜெயித்து ராஜப்பிரதிநிதி ஆயினார் என்று தெரிகின்றன- இந்த சம்மெட வம்சத்தினர் இன்றைக்கும் கம்மவாரில் நிலையாகவுள்ளனர். இந்த வம்சத் தினர் ஒருவர் கிருஷ்ணதேவராயரிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்ததாகவும், சிம்ஹாத்ரிக்கு ஜெயஸ்தம்பம் நிலைநாட்டிய தாகவும் பிரஸ்தாபம் காணப்படுகின்றன. அவர் சுமார் கிறிஸ்து சகம் 1520-ஆம் காலத்தவராக இருக்கலாம் என்று சொல்லப்படுகின்றன. (L. R. 18)

227) ஆரவீடுவம்சம், கோநேடிவார், கோநேடி கொண்டராஜு, கிருஷ்ண தேவராயர் சம்மந்திகளாகிய ஆரவீடுவம்சத்தினர் சாளுக்ய குலத்தினரேயென்று முன்னம்

கண்டுள்ளோம். இந்த வம்சத்தில் கேநேறு நாதன் என்று சொல்லப்பட்ட அவர் ஆரவீடு புக்கராஜனுக்குப் பின்னர் ஜெனனமானதாகவும், இந்த வம்சத்திலேயே மற்றும் சிலர் கோநேடி அய்யாலு என்றவர் பின்னர் ஜெனித்து வேறே பிரிவினராக இருந்தனர். மஹாமண்டலேஸ்வர ராமராஜனுடைய குமாரன் பெயர் கோநேடி அய்யதேவுண்டு. இவருடைய குமாரன் திம்மராஜு. இந்த திம்மராஜு உதயகிரி ரகுநாதஸ்வாமிக்கு கோபுரம், மண்டபம், பிரகாரங்கள் கட்டியும், கோநேறு என்ற தெப்பக்குளம் ஒன்றையும் நிர்மாணித்துப் பெயர் பெற்றனர். இவருக்கு "டம்பாது கம்ம" பிருதுள்ளதாக சாசனத்தில் எழுதிவைத்துள்ளார். (டம்பு+ஆதி+கம்ம) இதற்கு தாத்பரியம், கனம்பொருந்திய ஆதிகம்ம என்பது பொருள் என்று கூறியுள்ளனர். இந்த அர்த்தம் சரியானதாகின், முன் சொல்லப்பட்ட சாளுக்ய ராஜர்களைப்போலவே இக்குலத்தவர் சிலர் கம்மவார் என்று சொல்லிக்கொண்டு மாறிப்போய்விட்டனர் என்று சொல்லலாம். ஏனென்றால் கோநேடி அல்லது கோநேறுவார் இன்றைக்கும் கம்மவாரிலிருக்கின்றனர். கோநேடி கொண்டராஜு என்ற வீரனொருவன் கிறிஸ்து சகம் 1616-வருஷம் தோபூருக்குப் பக்கம் கொப்பூரி ஜெக்கராஜனுக்கு ஸ்ரீராம தேவராயர் பக்ஷமாக, ரகுநாதராயனுக்கும் ஏற்பட்ட போரில் ஸ்ரீ தேவராயர் பக்ஷமாக நின்று யுத்தம் செய்ததாக, ரகுநாதாப்யுதமென்ற நாடகத்தில் காணப்படுகின்றன. இந்த ஆரவீடு சாளுக்ய குலத்தினர்கள் கிரமமாகக் கிருஷ்ண தேவராயரிடம் சம்மந்தப்பெற்று கம்ம குலத்துடன் சம்மந்தத்தைக் குறைத்துக்கொண்டதாக நினைக்கவேண்டுமென்று சரித்திரக்காரர் கூறுகின்றனர்.

228) நந்தியால சிட்ராஜு, இந்த ஆரவீடு வம்சத்தில் சிலர் நந்தியாலவார் என்று பெயர் ஏற்படுத்திக்கொண்டதாக ஆரவீடு வம்ச சரித்திரத்தால் தெரியவருகின்றன. கம்மவாரில் உள்ள நந்தியாலவார் கூட இந்த வம்சாவழியினரென்றே சொல்லலாம். சிலர் நந்தியாலவார் க்ஷத்திரியர் என்று சொல்லிவருகின்றனர் அப்படியுமிருக்கலாம். கிறிஸ்து சகம் 1616-வருஷ காலம் நந்தேலசிட்ராஜென்ற வீரர் ஒருவர் தோபூரில் நடந்த யுத்தத்தில் கலந்துகொண்டனர்.

அவருங்கூட இந்த ஆரவீடு சாளுக்ய வம்சத்தவராகவே காணப்படுகின்றனர்.

229) மண்டுவமல்லிநேண்டு, இவர் மணுங்கூர் கோட்டை ராஜாவாக 15-வது சகாப்தத்திலிருந்தார். அக்காலத்தில் வெலுகோடிவார் வம்சத்தவராகிய மாதய்ய லிங்கநரபாலன் இந்தக் கோட்டையின் மீது படையெடுத்து வந்து இந்த மல்லிநேண்டுவை ஜெயித்ததாக வெலுகோடிவார் வம்சாவழியால் தெரியவருகின்றன. மண்டா அல்லது மண்டுவவார் துர்ஜய குலத்தைச்சேர்ந்தவரென்று முன்னமே கூறியுள்ளோம். இவர்கூட அந்த வம்சாவழியைச் சேர்ந்தவ ரென்று சொல்லலாம்.

230) மஞ்செள்ளவார், மஞ்செள்ள நரஹரிநேனி, இவர் மஞ்செள்ள பின்னம நாயகருடைய குமாரன். இந்த வம்சத்தினர் ராஜமயேந்தர பாலகராகிய ரெட்டி பிரபுக்களிடத்தில் ராஜப்பிரதிநிதிகளாயிருந்து பெயர் பெற்றனர். கிறிஸ்து சகம் 1416-வருஷ காலத்தில் தொட்டய்ய அல்லா ரெட்டி என்றவர் ராஜமயேந்தர பாலகராயிருந்தார். அவர் காடய்ய வேமா ரெட்டிக்கு பந்துவாகவும், சேனாதிபதியாகவும் இருந்து அவர் மரணமடைந்த காலம். இவர் ராஜ்யாதிபதியாக வந்ததாகக் காணப்படுகின்றன. இந்த நரஹரி நாயன அல்லா ரெட்டியின் ராஜாங்கத்தில் நிறுவியவர்களில் ஒருவராவார். அதனாலேயே இவருக்கு ராஜப்பிரதிஷ்டாபகர் என்ற பிருதும் கிடைத்தன. அந்தக்காலத்தில் அல்லா ரெட்டிக்கும் மற்ற பிரபுக்களுக்கும் பெதகோமட்டி வேமா ரெட்டி (கொண்டவீடுப்ரபுவு) அநதேவ சோழன் (காமபுரி பாலகன்) பிரோஜிஷா (குர்பர்க்கா பாலகன்) முதலானவர்களுக்கு விரோதம் ஏற்பட்டு யுத்தங்கள் நடந்துவந்தன. அந்த யுத்தங்களில் நரஹரிநேனியார் தனது வீரத்தைக் காட்டி அல்லாரெட்டிக்கு ஜெயம் உண்டாகும்படி செய்து, கடைசி வரையில் ராஜ்யத்தை நிலைபெறச் செய்து இந்த பிருது பெற்றதாகக் காணப்படுகின்றன. இவர் சாலிவாகன சகம் 1338-வருஷம் கிறிஸ்து சகம் 1416-வருஷம் ஸ்ரீராமேஸ்வராலயத்தில் (பாலகொல்லுவில்) கல்யாண மண்டபம் கட்டியும், கோபுரம் நிர்மாணம் செய்தும் சாசனம்

எழுதி வைத்தனர். இவர் மஞ்செள்ள நகராதி பதியாக பெயர் பெற்றுள்ளனர் இவரிடத்தில் கிறிலெங்க்க அல்லது கூகிலெங்க்க சிரிகிரிநேடு என்றவர் மந்திரியாக இருந்தார். இவர் தன்னுடைய ஐஸ்வரியத்தைக் கொண்டு ஒரு மண்டபத்தைக் கட்டியும், ரதத்தையும் நிர்மாணித்தும், உயர்ந்த தங்கத்தினுல் பிரபையையும், வஸ்த்திரங்களையும் சமர்ப்பித்து பெயர் பெற்றனர். இந்த வம்சாவழியினர் இப்பொழுது கம்மவாரில் மஞ்சாலவார் என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் போங்குநூள்ள கோத்தரவாசிகள். சிரிகிரிநேனியின் தந்தையாகிய நாரபூபாலன், நரஹரிநேனியார் தந்தையாகிய பின்னமஹிபால னிடம் நல்ல பெயர் பெற்றுள்ளதாகவும், சிரிகிரிநேண்டு சாலிவாகன சகம் 1341-வருஷம் அங்கு ராமலிங்கேஸ்வரருக்கு சில பூமிகளைக் கொடுத்துள்ளதாக மற்றொரு சாசனத்தால் தெரியவருகின்றன. கம்மவாரில் கூசிவாரென்ற வம்சத்தினர் இவர்களைச் சேர்ந்தவரோ இல்லையோவென்பது தெரியவில்லை.

231) வாசிரெட்டிவார். வாசிரெட்டி போதநீடு. வாசிரெட்டியாரின் விருத்தாந்தம் 14-வது சகாப்தம் வரை தெரியப்படவில்லை. இவர்கள் வல்லுட்ல கோத்ர வாசிகள். இவர்களில் 14-வது சகாப்தத்தில் வாசி ரெட்டி வாசய ப்ரபு என்றவரிருந்தார். இவர் குமாரன் போநிநீடு சாலிவாகன சகம் 1352-வருஷ காலத்தவராவார். இவர் ராஜமகேந்தர பாலகராகிய அலகைய்ய வேமா ரெட்டியிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்து பிடாரபுறப்பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்ததாகக் காணப்படுகின்றன. இவர் அங்கு விஷ்ணு, சூர்ய, விஸ்வேஸ்வர, கௌரி, குக்குடேஸ்வராலயங்கள் 5-ம் கட்டுவித்து பிரதிஷ்டைகள் செய்து சாசனங்கள் எழுதியும், அந்தப் பிராந்தியத்தில் 4 லக்ஷத்து 60 ஆயிரம் பனம் செடிகளை நட்டுவித்தும், அதனுல் மனுதேவேந்த்ரன் என்ற பட்டம் பெற்றுள்ளதாக ஒரு சாசனத்தில் காணப்படுகின்றன இவருடைய பார்யை போதசானி. இவருக்கு வேமய்ய என்ற குமாரன் இருந்தான். போதநீடு, பீடாபுரத்தில் குந்தீமாதவப்பெருமாளுக்கு லக்ஷிமீதேவி நகரத்தைக் கட்டுவித்தும், பிருந்தாவனம் ஒன்றை நிர்மாணித்து, நகரத்திற்கு

வெள்ளைச்சுண்ணும்பு பூச்சு செய்வித்து சாலிவாகன சகம் 1352-வருஷத்தில் ஒரு சாசனம் எழுதிவைத்தும், மேலே சொன்ன தேவாலயப் பிரதிஷ்டைகள் பிரமாதி-வருஷம் சௌமிய-வருஷம் சாதாரண-வருஷங்களில் செய்யப்பட்டன இவர் குமாரனுகிய வேமய்ய தன் தாயாரின் தர்மார்த்தமாக பிருந்தாவனம் ஒன்றை நிர்மாணித்துச் சாசனம் எழுதி வைத்துள்ளார். போதிநீடு தன் பிரபுவாகிய அல்லய்ய வேமா ரெட்டியின் பெயரைத் தன் குமாரனுக்குச் சூட்டிய தாகவும் காணப்படுகின்றன.

232) வாசிரெட்டி மல்லிகார்ஜ்ஜுனுண்டு, இந்த வம்சாவழியிலும் விருத்தாந்தம் சுமார் கிறிஸ்து சகம் 1525-வருஷம் வரையிலும் காணப்படவில்லை. வாசிரெட்டி வம்ச சரித்திரத்தைப்பற்றி ஆராய, இந்த வம்சத்தில் பின்னர் வாசிரெட்டி, மல்லிகார்ஜுநன் என்றவர் வாசி நகராதிபதி யாக, ஹயிதர்ஜங்கு என்றவர் ராஜப்பிரதிநிதியாக இருந்ததாகக் காணப்படுகின்றன. ஆயினும் இவருடைய விருத்தாந்தம் சரியாக விளங்கப்படவில்லை. இவர் பகுசஹா சோல்கொண்ட நவாப் குதூரஷா வம்சத்தியருடைய சேனுதி பதி என்று காணப்படுகின்றன. சாடு பத்யத்தில் தரி கொண்டவீடுகி தக்ஷுடை விலசில்லு நலவாசி ரெட்டி மல்ல ப்ரபுடு என்று வர்ணிக்கப்பட்டுள்ளன, இது சரியானதாய் இருக்கின், இவர் நெல்லூர் ஜில்லாவாசிலியிலாவது, கொண்டவீடியிலே ஒரு பிரதிநிதியாக இருந்திருக்கலாம். இந்த மல்லிகார்ஜுனகுக்கும், அயிதர்ஜங்குவுக்கும் கப்பங் கள் விஷயமாக தகாதா ஏற்பட்டு கடைசியில் பிரமாதமாகிய யுத்தம் ஏற்பட்டன. ஹைதருவிடத்தில் காதர்ஜங்கு, ஹௌபதுஜங்கு, முகர்ஜங்கு முதலான சேனுதிபதிகள் இருந்தனர். மல்லிகார்ஜுன ப்ரபுவினிடத்தில், பீமசிங்கு என்ற பிரதான சேனுதிபதி இருந்தார். இரு தரத்தாருக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் பிரதானியாகிய ஹயிதர்ஜங்குவை மல்லிகார்ஜ்ஜுனரும் இறந்து போய்விட்டதாகவும், மல்லி-கார்ஜுன பூபதிக்குச் சகாயமாக வந்த அவருடைய மருமகன் ராவெல வீரமல்லா நாயடுவும் மடிந்து விட்டதாகவும், அதனுல் மல்லிகார்ஜ்ஜுனருடைய பாலனம் மறைந்து போய்

விட்டதாகக் காணப்படுகின்றன, கிருஷ்ணதேவருக்குப் பின்னர் கிறிஸ்து சகம் 1530-வருஷம் கூலிகுதுஷா என்ற கோல்கொண்ட நவாப் சைன்யம் கொண்டவீடியை ஆக்ரமித்துக்கொள்ள அச்சுதராயர் மறுபடி ஜெயித்து வெற்றி பெற்றனர். குதுஷா சைனியத்தைச் சேர்ந்தவர்கள் பலாத்காரமாக கப்பம் வசூலிக்க ஏற்பாடு செய்தனர் என்று காணப்படுகின்றன.

233) வாசி ரெட்டி சதாசிவ நாயடு, மல்லிகார்ஜ்ஜுன னுக்குப்பிறகு அவர் புத்திரனை ஒரு தாசியின் வசம் ஒப்படைத்து, நூதக்கி கிராமத்திற்கு அனுப்பியதாகவும், அங்கேயே கொஞ்ச காலமிருந்து பின்னர் வயது வந்தவுடனே அநவேமா ரெட்டியை ஆஸ்யிரத்து மறுபடியும் கொஞ்சம் ராஜ்யத்தை சம்பாதித்ததாக வம்ச சரித்திரத்தில் காணப் படுகின்றன. ஆயினும் இது கவிதையாக இருக்கலாம். இவர் கோல்கொண்ட நவாப் ஆகிய இப்ரஹீம் குதுஷா காலத்தில் கிறிஸ்து சகம் 1550–81-வருஷத்திலிருந்து அவரிடத்தில் சேனதிபதியாகவோ அல்லது பிரதிநிதி யாகவோ இருந்திருக்கலாம். அவர் காலத்திலேயே கொண்டவீடி சீமை குதுஷா வசமிருந்தன. தத் பூர்வமாக இது கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்கு உட்பட்டதாகவும், அவருடைய பிரதானிகளாகிய கஜபதிகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. சதாசிவராயர் கொடாலி ராமநரபால னுடைய குமார்த்தியை விவாஹம் செய்துகொண்டு மல்லிகார்ஜுனன் என்ற குமாரனைப் பெற்றனர். அவருக்கு ஸ்ரீசைலம்பதி, மல்லிகார்ஜுன, சதாசிவ, கங்காதரர் என்ற நான்கு புத்திரர்கள் இருந்தனர். இதில் ஸ்ரீசைலபதி கட்பாவம்சஜ என்ற ஸ்யாமலாம்பையை விவாகம் செய்து கொண்டு வெங்கடாத்ரி என்ற குமாரனைப் பெற்று வளர்த்து வந்த காலம். இவருடைய பாலஞ விசேஷம் தெரியா விடினும், வெங்கடாத்திரிக்கு, கங்கிநீடு, மாதிநீடு, வெங்க டாத்ரி, குர்விநீடு, சின்னவெங்கடாத்திரி என்ற 5 புதல்வர் களிவிருந்தனர். இவர்கள் கங்கிநீடு மோவுலூரிலும், மாதி நீடு தாடிகிரியிலும், வெங்கடாத்ரி பல்லகிரியிலும, குர்விநீடு போலூரிலும், சின்னவெங்கடாத்ரி நந்திகாமத்திலும்

செளதரிகளாக இருந்ததாகவும் வம்ச சரித்திரம் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றன. இந்தப் பட்டம் மொகலாயர்களால் ஏற்பட்டதாகவும் த்ருஷ்டாந்தம். கிறிஸ்து சகம் 1632-வருஷ காலம் கோல்கொண்ட நவாப் ராஜ்யம் டில்லி ஷாஜஹானுக்கு உட்பட்டதினல் அவர்கள் காலத்தில் பிரதிநிதிகளுக்குச் செளதரி பட்டங்கள் ஏற்பட்டதாக நிச்சயிக்கலாம். ஸ்ரீசைலபதியின் சஹோதரர் சதாசிவ நாயடுவுக்கு மல்லிகார்ஜுனன். இவருக்கு வீரராகவ நாயுடு. இவருக்கு லிங்கம நாயடு. இவருக்கு வீரப்ப நாயடு, மல்லி நாயடு, மாதா நாயடு, பெஜ்ஜய நாயுடு என்ற நால்வர் குமாரர்கள் ஜெனித்தனர். இவர்களில் மாதா நாயடு பிரசித்தி பெற்று ஆத்மகூர் நிடமர்ரு என்ற கிராமங்களுக்கு செளதரி ஆயினர்.

வீரப்ப நாயடு குமாரர்கள் சிங்கம நாய்டு, லிங்கம நாயடு, மாதா நாயடு, மல்லி நாயடு, இதற்குள்ளாகப் பிரசித்தி பெற்ற லிங்கம நாயடு தாடிகொண்ட பட்டணத்திற்கு செளதரி ஆயினதாகவும், இவர்கள் எல்லோரும் கிறிஸ்து சகம் 1632—1670-ஞ மத்தியில் டில்லி சக்ரவர்த்திகளுக்குப் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு கோல்கொண்ட அல்லா குதுப்ஷா அப்துலுக்குக் கப்பம் கட்டி வந்ததாகக் காணப்படுகின்றனவென்று சரித்திரர் கூறுகின்றனர்.

234) வாசிரெட்டி வீரப்ப நாயுடு, மேலே சொல்லப்பட்ட நந்திகாசீம செளதரி ஆகிய வாசி ரெட்டி, சின்ன வெங்கடாத்ரிக்கு வீரப்பநீடு, சின்னவீரன்ன, பெஜ்ஜன என்று மூவர் குமாரர்கள் இருந்ததாகவும், இவர்களில் மூத்தவனன வீரப்பநீடு பிரசித்தி பெற்று, கிறிஸ்து சகம் 1660-வருஷம் கோல்கொண்ட நவாப்பிடம் நந்திகாம பிரதேசாதிபதி ஆகியதாக கிருஷ்ண ஜில்லா மான்யுவில் எழுதப்பட்டுள்ளன. இதனலிந்த வம்சத்தினர் வரிசையாக செளதரி பதவிகள் பெற்று வந்ததாகக் காணப்படுகின்றன. இவர்களுடைய வரலாற்றை மூன்ருவது பாகத்தில் குறித்து எழுதப்படும்.

235) குரிஜால முப்பபூபாலன், இவர் கெளதமீ பிரதேசமாகிய சப்பிநாட்டில் ராஷ்டரத்தையும், ராமகிரியை

ராஜதானியாகவும் பரிபாலித்து வந்தவர். இவருக்கு நீறுநெத்துருகண்ட அல்லது நிறுநெத்துறுகண்ட, கண்ட கோபால, கோபால காஞ்சிரக்ஷபாலகா, சோழராஜ்ய ஸ்தாபனுசார்ய, தொந்திமன்னியவிபாள, சலமர்த்திகண்ட, கஜகந்தவாரண, ராஜகஜகேசரி, மூறுராய ஜகதளவிபாளாதி முதலிய பிருதுகள் பெற்றவராவார். இவருடைய மந்திரி எழுதிய பத்மபுராணம் உத்தர காண்டத்தில் காணப்படுகின்றன. இந்தக்கிரந்தம் 10 பாகங்களுடையது. இதன் பிரதியொன்று ஆந்தர சாஹித்ய பரிஷத் காரியாலயத்தில் இருக்கின்றன. இதை எழுதியவர் வாணசகந்த என்றவர் இவரிடத்தில் மந்திரியாக இருந்து கீர்த்தி பெற்றவர். இவருடைய காலநிர்ணயம் சரியாகத் தெரியவில்லை ஆயினும் பிருதுகளைப்பற்றி இவர் 2-வது பிரதாபருத்ரனுடைய காலத்தவராகக் காணப்படுகின்றன. அதனுல் 14-வது சகாப்த காலத்தவரென்று சொல்லலாம். இவரிடத்தில் சிங்கன்ன என்றவர் ஆஸ்த்தான கவீஸ்வரராக இருந்தார். இவர் எழுதிய வாசிஷ்ட ராமாயணத்தில் இவரைக்குறித்து வர்ணித்துள்ளார். இதனுல் இந்த வம்சத்திய மூல புருஷன் கூனய்ய என்றும், இவர் குமாரன் முப்பராஜென்றும், இவர் குமாரன் தெலுங்கு ராஜன் என்றும், இவருக்கு மல்லாம்பையினிடம் இந்த முப்பபூபாலன் பிறந்ததாகக் காணப்படுகின்றன. தெலுங்கு ராஜனுக்கு மல்லாம்பையினிடம் இவரும், முத்த ராஜனும் ஜெனித்ததாகவும் பத்ய காவியத்தில் உள்ளன. இந்த முத்த ராஜன் இவருக்கு ராஜாங்க காரியங்களில் ஈடுபட்டிருந்ததாகவும் சொல்லப்படுகின்றன. இந்த வம்சத்தில் தெலுங்கு ராயரே முதல்வராவென்று சில பண்டிதர்கள் கூறுகின்றனர். ஆயினும் இந்த இருவரும் ஒரு வம்சாவழியினரல்லவென்று மேலே சொல்லிய வம்சாவழி ஸ்பஷ்டமாகத் தெரிவித்துள்ளன. இந்த சப்பி நாட்டு ராஜ்யம் சில காலம் நிலைநாட்டியதாகத் தெரியவில்லை. இந்த ராஜ்யத்தில் கிறிஸ்து சகம் 1433-வருஷத்திற்குப் பின்னர் அகமதுஷா என்ற குல்பர்க்கு சுல்தான் படை எடுத்து வந்து கம்ம ராஜாக்களை ஜெயித்து நாட்டை ஆக்ரமித்துக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இந்த சுல்தான் ராமகிரியைத் தன் குமாரனுக்குக் கொடுத்து

ஆண்டு வரும்படி கிறிஸ்து சகம் 1435-வருஷத்தில் கொடுக்கவும். அந்தப் பிராந்தியங்களில் அநேக யஷ்டேட்டுகளை உண்டாக்கியதாகக் காணப்படுகின்றன. காகதிய அரசர்களைப்போலவே இந்த முப்ப பூபாலன் அநேக பிருதுகளைத் தரித்தவரானதால் அந்த வம்சத்தைச் சேர்ந்தவரென்றே சொல்லலாம். இந்த குரிஜாலவார் கம்மவாரில் இன்னுறைக்கும் இருந்து வருகின்றனர். ரெட்டிகளிலுமிருக்கினும், அவர்கள் ரெட்டி வம்சத்தவராகமாட்டார்கள் என்பது நிர்ணயம்.

236) சனகுர்த்தி பாவிநாயணிங்காடு: யீவிபாடி நாயணிங்காரு, இவர்களிருவரும் சாலிவாகன சகம் 1259-ஸு கிறிஸ்து சகம் 1337-ஸு காலத்தவர். ஒங்கோலு தாலூகா வீரன்னபாடி கிராமவாசிகளாவார்கள். இவர்கள் ஷெ கிராமத்தில் ஸ்ரீ லக்ஷ்மிநரஸிம்ஹஸ்வாமி தேவாலயத்திற்கு பிருந்தாவனத்தை நிர்மாணித்து சாசனம் எழுதிவைத்துப் பிரசித்திபெற்றவர் ஆவார்கள்.

237) பௌச்சுல பீமநாயுடு, இவர் சாலிவாகன சகம் 1324-வருஷ காலத்தவர் ஆவார். இவர் தர்சி தாலூக்கா ராஜம்பல்லி கிராமவாசியாவார். அங்குள்ள கோபிநாத ஸ்வாமி தேவாலயத்திற்கு சாலிவாகன சகம் 1324-வருஷத்தில் பந்துமு என்ற பிரதேசத்தில் 10 வள்ள நஞ்சை பூமியைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். பக்திமான் என்றும், தார்மீகரென்று பிரசித்தி பெற்றவராவார்.

238) கம்செர்ல கொண்டமநாயடு, இவர் சாலிவாகன சகம் 1324-ஸு காலத்தவராவார். இவர் ராஜம்பேட்டை கிராமவாசியாவார். இவர் அங்குள்ள கோபிநாத தேவாலயத்திற்கு 2 குண்டல பூமியைத் தானமாகக் கொடுத்துச் சாசனம் எழுதிவைத்துக் கீர்த்தி பெற்றனர்.

239) பொதிலபல்லி சிங்கமநாயடு, இவர் சாலிவாகன சகம் 1260-வருஷ காலத்தவர். ஒங்கோலு தாலூக்கா தேனுவுகொண்ட கிராமத்தில் தேவாலயத்திற்கு இவர் சாலிவாகன சகம் 1260-ஸுத்தில் சில பூமிகளைக் கொடுத்து

சாசனம் எழுதி வைத்துள்ளார். இவரும் அந்தக் காலத்தில் கிராமாதிகாரியாக இருந்தார் என்றும் சொல்லப்படுகின்றன

240) சிடிவார், சிடிபோதி நாயடு. வல்லபய்ய, சென்னய்யலு, இந்த வம்சத்தினர் கம்மவாரிலிருக்கின்றனர். இவர்களில் சாலிவாகன சகம் 1349-வருஷ காலத்தில் சிடி போதிநீடு என்றவர் பிரசித்தி பெற்றவராக இருந்தார். இவர் தந்தையின் பெயர் மும்மட்நேனி. தாயார் பெயர் ப்ரோலாம்பா. இவர் பாடிபன்ல என்ற கிராமத்தில் சில பூமிகளை அமராவதியிலுள்ள அமரேஸ்வராலயத்திற்குக் கொடுத்துச் சாசனம் எழுதி வைத்துக் கீர்த்தி பெற்றனர். சுமார் இவருடைய காலத்தில் சிடிவல்லபய்ய என்ற வீரன் இருந்து, வெலம வீரனாகிய மாதய்ய லிங்கபூபாலனுடன் போராடி புதர்களில் விழுந்துவிட்டதாக வெலுகோட்டிவார் வம்சாவழி தெரிவிக்கின்றன. சிடிசென்னய்ய என்ற வீரனும் இவருடன் போராடித் தோற்று ஓடிப்போனதாக, இதைக் குறித்து இந்த வம்சத்தினருங்கூட அந்த யுத்தத்தில் கலந்து கொண்டதாகக் காணப்படுகின்றன.

241) கூனபுலி அனபோதா நாயனிங்காரு. இவர் சாலிவாகன சகம் 1338-வருஷ காலவாசியானவர். இவர் இன்றைய குண்டூர் ஜில்லாவில் நிடுப்ரோலு கிராமவாசியாவார். இவர் தந்தை குண்டா நாயுடு. தாயார் லக்கசானி இவர் தன் தாயார், தந்தையின் புண்யார்த்தமாகப் பொன்னூரில் ஸ்ரீ பாவநாராயணஸ்வாமி தேவாலயத்திற்கு நிடுப்ரோலியில் அநேக தோட்ட பூமிகளைக் கொடுத்துச் சாசனம் எழுதி வைத்துர், பிருந்தாவனத்தையும் நிர்மாணித்து பிரசித்தி பெற்றனர். இந்த வம்சத்தினர் கம்மவாரில் கோநபுலி அல்லது கோநபல்லிவார் என்றவர் பிரபலமாயிருக்கின்றனர்.

242) ஆலமந்தலவார், ஆலமந்தலநூகய தேவ சோழ ராஜு, இவர்கள் சோழ வம்சத்தினராகக் காணப்படுகின்றன. ஆலமந்தலநூகய்ய தேவசோழராஜு சாலிவாகன சகம் 1320-வருஷ காலம் கநுபர்திப் பிரதேசத்தில் ஒரு பாலகனாக இருந்ததாகத் தெரியவருகின்றது. இவருக்கு வீர

அவுகுபூதேவ சோழ ராஜன் என்ற குமாரன் இருந்தான். இவர் சோழ சம்பந்தமாகவே சாசனம் எழுதிவைத்துள்ளார்.

243) ஆலமந்தல வீர அவுகு (சோழ பூதேவன்) பூதேவ சோழ ராஜு, ஆலமந்தல நாகய்ய தேவ சோழ ராஜு குமாரனுகிய இவர் சாலிவாகன சகம் 1348-வருஷ காலம் இவருக்குத் திரிபுவனபிருத்ருலவென்னுசம்பொ என்ற பிருதுகள் உண்டு. சாலிவாகன சகம் 1348-ஞு கநுபர்த்தியில் பூமிதானம் கொடுத்து சாசனம் எழுதி வைத்து க்யாதி பெற்றனர். அந்தப் பிராந்தியத்தைத் தன் தந்தைக்குப் பின்னர் பரிபாலித்து வந்தனர் என்று காணப்படுகின்றன.

244) அலமந்தல கங்கய்ய தேவ சோழ ராஜு, சாலிவாகன சகம் 1350-வருஷத்தில் இவர் ஒங்கோலு தாலூகா நாகுலபாடி பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்தார். இவர் தந்தையின் பெயர் அநபோதய்ய தேவசோழராஜு. இவருடைய பாட்டனர் திருமலராயடு. பாட்டியார் பெத்தம்ம தேவி. இவர் தாயார் பெயர் சின்னம்ம தேவி. இவர் தன் தாய், தந்தையர்களுக்காகவும், பாட்டி, பாட்டனுக்காகவும் நாகுலபாடியில், பிராம்ஹணர்களுக்கும், பண்டாரர்களுக்கும் ஜீவன உபயோகத்திற்காக அநேக தோட்டங்கள், காட்டு பூமிகளைத் தானம் கொடுத்துச் சாசனம் எழுதியது சாலிவாகன சகம் 1350-வருஷத்தில். இதனுல் மிக்க பிரசித்தி பெற்றனர். இந்த ஆலமந்தலவார் சோழ சப்பத்தை மாத்திரம் தரித்து வந்தனர். ஆயினும் இவர்களுடைய பூர்விக பிருதுகளைத் தரித்துக்கொள்ளவில்லை அக்காலத்தில் அந்த பிருதுகளுக்கு மகத்துவம் குறைந்து வந்தமையால். காகதிய ராஜ்யம் பிரபலமாகி வா நூதன பிருதுகளைத் தமக்கு அக்காலத்திய மன்னர் தந்ததாகக் காணப்படுகின்றன. இந்த பிருதுகள் ரெட்டி பிரபுக்களோ, வெலம பிரபுக்களோ கொடுத்திருக்கலாம். இந்த ஆலமந்தலவார் என்றவர்கள் கம்மவாரில் மண்டாதி பிராந்தியங்களில் வசித்துவருவதாகத் தெரியவருகின்றன.

245) வாலககாமய்ய வரபு அக்கலராயண்டு, இவர் சாலிவாகன சகம் 1403-வருஷ காலத்தவர். இவருக்குத் தெலுங்கு சோழ ராஜாக்கள் தரித்திருந்த உறையூர் புறவரு தீஸ்வர என்ற பிருது உண்டு. அதனால் இவர் அந்த வம்சத்தினரே ஆவார் என்று கூறலாம். இவர் திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜம்புகேஸ்வர பிராந்தியங்களுக்கு அதிபதிப் பட்டம் பெற்று பரிபாலித்து வந்ததாகக் காணப்படுகின்றன. காவேரிக்கு வடக்கேயுள்ள தனது ஆட்சிக்கடங்கிய பூமியில் ஒரு வேலி ( ) பூமியை ஜம்புகேஸ்வராலயத்திற்கு தானம் கொடுத்து சாசனம் எழுதிவைத்துப் பிரசித்தி பெற்றனர். இவர் ஒரு மஹாமண்டலேஸ்வரராவார். அதனாலிவர் அநேக மண்டலங்களைப் பரிபாலித்ததாகச் சொல்லப்படுகின்றன.

246) சென்னய்ய, பாலய்ய தேவுண்டு, இவர் கூட தெலுங்கு சோழ ராஜாக்கள் தரித்த உறையூர் புறவரேஸ்வராதி பிருதுகளைத் தரித்தவராவார். இவர் சாசனம் ஒன்று ஸ்ரீரங்கத்தில் இருக்கின்றன. இவர் கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்தவரென்று காண்கின்றன. அதனால் கிறிஸ்து சகம் 1530-ஆல் காலத்தவரென்றும், இவர் கிருஷ்ணராயர் நியமனப்படி ஸ்ரீ ரங்கேஸ்வரஸ்வாமிக்கும், நிசுலவல்லி தேவருக்கும் அநேக தங்க நகைகள் செய்தும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்தும், ஸ்ரீரங்கநாயகருக்கு ஒரு புஷ்ப நந்தவனம் ஒன்றை நிர்மாணித்தும் பிரசித்தி பெற்றனர். இவர் சாலிவாகன சகம் 1452-ஆல் எழுதப்பட்டுள்ளன. இந்த வம்சத்தினர் விஷயங்கள் பின்னர் தெரியப்படவில்லை. (56 of 1892)

247) குருராஜு, ருத்ரதேவ சோழமஹாராஜு, இவர் சாலிவாகன சகம் 1476-வருஷ காலத்தவராவார். இவர் மஹாமண்டலேஸ்வரன் என்றவர், மஹாராஜா என்ற பிருது தரித்தவர். இவர் கும்பகோண பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்தனர் என்று காணப்படுகின்றன. இவர் கும்பேஸ்வரஸ்வாமியின் பூஜைக்காக வேண்டியும், நித்தியம் பிராம்ஹணர்களுக்குப் பிரசாதம் வழங்குவதற்காக வேண்டியும் சாலிவாகன சகம் 1476-ஆல் கிறிஸ்து சகம் 1554-ஆல்

ஆநந்தநாமசம்வச்சரம், வாயலூர் ஏழாங் கட்டவைக்கி கிராமங்களைத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துப் பிரசித்தி பெற்றனர். இந்த வம்சாவழியினர் எங்கேயாவது இருக்கிறார்களா என்பது தெரியவில்லை.

248) ராவெள்ளவாரு, ராவெள்ளவம் சீகுலு கம்மவாரில் மிக்க பிரசித்தி பெற்றவராகிய சூர வம்சத்தினர்களுடைய விஷயம் 13-வது சகாப்த காலம் முதல் தெரிய வருகின்றன. கிறிஸ்து சகம் 1257-வருஷத்தில் பரிபாலித்து வந்த சாளுக்ய சக்கரவர்த்தியாகிய 3-வது ராஜராஜ காலத்தில் ஒரு ராவெள்ளநாயகன் இருந்ததாக ஒரு சாசனத்தில் காணப்படுகின்றன. பின்னர் இவருடைய விருத்தாந்தம் கால வித்தியாசத்தால் மாறிப்போய்விட்டதாகவும் காணப்படுகின்றன. ஆயினும் இவர்கள் அங்கங்கு சேனைத்தலைவர்களாக இருந்துவந்ததாகக்காணப்படுகின்றன இவர்களுக்கிருந்த சலமர்த்திகண்ட என்ற பிருதுவின் விஷயமாக யோசிக்கும் பக்ஷத்தில் இவர்கள் துர்ஜ்ஜய குலத்தைச் சேர்ந்தவர்களென்று முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ளன.

249) ராவெள்ள வீரமல்லபூபதி, இவர் விஜயநகர சாம்ராஜ்ய பாலகராகிய சாளுவநரசிம்ஹராயரிடம் முதலில் ஒரு சேனாதிபதியாக இருந்து பிரசித்தி பெற்றுவந்தார். இந்த மல்லநரபாலன் குடிவாடா கோட்டையின் பக்கம், ராயருக்கும், மஹமதியர் குதுபுஷாவுக்கும் நடந்த யுத்தத்தில், தன்னுடைய வீரபராக்ரமத்தைக் காட்டி ராயரிடம் அநேக பிருதுகளைப் பெற்றுக்கொண்டும், ராஜஹ்ருதயபல்லப்ரதாப ப்ரபாவுண்ட என்று பிரத்யேகமாக கௌரவம் பெற்று வந்தார். ராவெள்ளவார் சரித்ர விருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் விளக்கமாக சௌகந்திகப்ரசவாபகரணம் என்ற கிரந்தத்தில் ரத்னாகரம் கோபால கவிராயர் இந்த மல்ல பூபதியைப்பற்றி வர்ணித்துள்ளார்.

இதற்குள் குதுபுஷா ஹபஹமனீ சுல்தானிடம் ராஜப் பிரதிநிதியாக இருந்த கூலிகுதுபுல்முல்கு அவரேயென்றும், இவர் கிறிஸ்து சகம் 1495-ஞ் முதல் 1512-ஞ் வரை அவரிடம் பிரதிநிதியாக இருந்து பின்னர் பஹமனி சுல்தானை

திரஷ்கரித்து குதுபுஷாஹ என்று பெயர் வைத்துக்கொண்டு சுதந்தரமாக கோல்கொண்ட நவாபென்றும் சரித்ரகாரர்கள் குறிப்பிடுகின்றனர்கள். அதனுலிந்த மல்லபூபாலன் கிறிஸ்து சகம் 1495-வருஷ காலத்தவனென்று கூறலாம். அந்தக் காலத்தில் நரசிம்ஹராயருக்கும், பீஜப்பூர், பீடர், கோல்-கொண்ட நவாப்புகளுக்குப் கோரமான யுத்தங்கள் நடந்து வந்தன. இது கிறிஸ்து சகம் 1493-வருஷ காலத்திலும், பின்னருமிருந்தன, இந்த யுத்தங்களில் வீரபுருஷராகிய இவர் சேனுதிபதியாக இருந்து வெற்றி பெற்று வந்தனர். இவருக்கு கொண்டபூபதி என்ற சகோதரனிருந்தும் அவர் எக்காரணத்தைக்கொண்டோ, நம்முடைய ஆஸ்தானத்தில் வழங்கப்பட்ட மானியங்களை ஏற்றுக்கொள்ளாமல், ராயர் சமஸ்த்தானத்தில் ராஜப்பிரதிநிதியின் மீது பட்டு ராஜாக் களெல்லோருக்கும் பத்தியங்களை எழுதிக்கொண்டிருந்த காலம். அந்த பட்டுமல்லபூபாலன் மீது பத்யங்களை கவனிக்காதிருந்ததை உணர்ந்து, ராயர் கேட்க அதற்கு அவர் சொல்லிய பதில் இந்த பத்யத்தில் பார்க்கவும்.

> அ'' தோடம்புட்டிநட்டி-தொய்யலி மனுவிச்சி, வயகாரக
> தான்னி - வலசிநட்லு ப்ரதம மந்து நிச்சி, ராவெல
> கொண்டய, கமதமந்துஞ்ஜேனு-கலுபுகொனியே

என்று கவனித்து தான் படித்ததாகவும், அதன்மேல் ராயர் அப்படிச் செய்யலாமாவென்று மல்ல நரபாலனை வற்புறுத்தி வர, அநதத் தம்பியானவன் அப்படிச் செய்வானு என்று இவர் சொல்ல, அபிமான சூரனுகிய அந்தக் கொண்டயன் உடனே தன் கைவாளால் ஆத்மஹத்தியைச் செய்துகொண்ட தாகவும் ஒரு கதாப்ரச்சாரம் காணப்படுகின்றன ஆயினும் இதை நம்புவதற்கு ஆதாரம் காணப்படாததால், அந்தப் பேர் பெற்ற தம்பி மல்லபூபாலனுக இருந்ததாக சௌகந்தி கப்ரசவாபஹரண கிரந்தத்தில் இதைப்பற்றி வர்ணிக்கப்பட வில்லை ஆதலால் இக்கதையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந்த மல்லபூபாலன் பெதாரிகட்ல ப்ரதேசத்தை ராஜதானி யாக வைத்துக்கொண்டு ஆண்டதாகச்சொல்லப்படுகின்றன. இந்த வம்சத்தினருக்கு பசவசங்கரடெக்யமு என்ற பிருது உண்டு. இவர் மகமதியர்களுடன் செய்த யுத்தத்தில்

வெற்றி பெற்று வந்ததினல் ஒரு பட்டு ராயரிடம் இவரைப் பற்றிப் பாடிய பத்யம் (உத்பவ மாலை)

எ" அல்லவே கம்மமூஹலட, நாவல ராவெள
வம்ச சந்த்ருடெள
மல்லய பூபதுற்பறச, மக்ரபலம்புலு மண்டலாக்ரமுல்
ஜுல்லபு டீடெடுலுன்பசவ, சங்கரு டெக்கமுபூரிவிறபூ
வல்லப மல்லிகார்ஜுனுண்டு, வாடேசுமீ
ஜெகதேகவீறுடுன்.

ராவெள்ளவார் பச்சகுள்ளபாடு ராஜதானியாக வைத்துக்கொண்டு அலங்கீறு பாதுஷா காலத்தில் பரிபாலனம் செய்து வந்ததாக கொச்செர்ல கோட்டை புராணத்தில் கூறப்பட்டுள்ளன. (See No. 1)

இவருடைய செளந்தரியத்தைக் கண்ணுரக்கண்ட வர்களிவரை, வீரமல்ல பூபதியென்று கூறிவந்தனர் ஆதலால் அதே பெயர் நிலைபெற்றன. இந்தப் பெயரால் அநேக உதாரணங்கள் கிடைத்துள்ளன. இதன் கீழ் கீத சரணங் களில் சில பத்யங்களில் உள்ளன.

"சமரரகுராமாவெள்ள, சார்வபௌம, வைரிஹ்ருத் பல்ல யுத்தண்ட, வீரமல்ல" விஸ்தார பயத்தால் விட்டனம். மணிமஞ்சரில் பார்க்க. ராவெள்ளவார் விஜயநகர ராஜ்யத் தில் பாளையக்காரர்களில் ஒருவர் ராஜதானிக்கு அதிகாரி யாகச் சென்று அங்கு முகாமிட்டுக்கொள்ள 1260 குண்டல விஸ்தீர்ணமுள்ள பூமி இருந்ததாக 'விஜயநகரசாம்ராஜ்யபு' என்ற பிரதான ரிக்கார்டு புஸ்தகத்தில் காணப்படுகின்றன. இந்த மல்லபூபாலன் நரசிம்ஹராயர்க்குப் பின்னர், வீரநர-சிம்ஹராயருடையவும், கிருஷ்ணதேவராயருடையவும் காலத்தில் உள்ளதாகவும் காணப்படுகிருர். போர்ச்சுகீசு எழுத்தாளர் ஆகிய ந்யூநிஜு என்றவரை அனுசரித்து சீவெலனு கிரந்தகர்த்தா எழுதிய "போர்ஜுகோடன்எம்-ரைர்" என்ற ஆங்கில சரித்திரத்தில் கிருஷ்ணதேவராயர் ராஜப்பிரதிநிதிகளில் ஒருவராகிய மல்லபநாயகன் பேரால் அவர் வசமிருந்த மூலதனம் 13000 வராஹங்கள் என்றும்

6000 சால் பலமும், 400 குதிரைப்படையும் இருந்ததாகவும், ராயருக்கு இவர் 3-ல் ஒரு பங்கு கப்பம் செலுத்தி வந்ததாக வும் எழுதி வைத்துள்ளார். அந்த மல்லப நாயகன் இந்த வீரமல்ல பூபதியே ஆவார். வேறு அல்லவென்று சொல்ல லாம். இந்த மல்லிகார்ஜுனனுக்கு திப்பநரபாலன் என்ற குமாரன் ஜெனித்தான். மல்லிகார்ஜுனன் கிருஷ்ணதேவ ராயருக்கு 3-வருஷங்களுக்கு முன், அதாவது கிறிஸ்து சகம் 1527-வருஷத்தில் இறந்து போய்விட்டதாகவும், இந்த மல்லிகார்ஜ்ஜுனரைப் போல வீரபுருஷர்கள் சேனாதிபதி களாக இருந்ததினால் இந்து ராஜ்யம் மஹமதியர்களுக்குப் பணியாமல், ராஜ்யத்தை ஸ்திரமாகப் பாதுகாத்துக் கிருஷ்ணதேவராயருக்கும் ராஜ்யத்திற்கும் கீர்த்தி உண்டாக் கித்தந்தனர் என்பது பிரசித்தம்.

250) ராவெள்ள திப்பபூபாலுண்டு, இவருங்கூட வீர-நரசிம்ஹராயர் காலத்திலும் கிருஷ்ணதேவராயர் காலத்திலும் சேனாதிபதியாக இருந்து நல்ல பெயர் பெற்றனர். வீரநரசிம்ஹராயருக்கும், கஜபதிகளுக் கும் நடந்த யுத்தத்தில் இவர் காட்டிய வீரபராக்கிரமத்திற் கும், சூழ்ச்சிகளுக்கும் மெச்சி அநேக பிருதுகளும், சன்மானங் களுங்கொடுத்தனர். குடை, கொடி, சாமரை, மாலைகளும், யானைகள், குதிரைகள், காலாள்கள், ரதங்கள், வெண்பட்டு குடாரங்கள், ராஜமுத்திரைகள் முதலான வற்றைக்கொடுத்து கௌரவித்தனர் என்பது பிரசித்தம் என்பதை 'சௌகந்திகபிரசாபஹரணம்' என்றதில் கூறப் படுகின்றன புருஷோத்தம கஜபதி வீரநரசிம்ஹராயர் காலத் திலும் பிரதாபருத்ரகஜபதி கிருஷ்ணதேவராயர்காலத்திலும் பிரமத சேனாதிபதியாக இருந்து வந்ததினால், இந்த திப்பநர பாலன் எதிரி படைகளை முதுகு காட்டி ஓடச் செய்தது யாரை என்று தெரியவில்லை. ஆயினும் கிருஷ்ணதேவராயர் கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச்சென்ற சமயம் கஜபதி சைனியங்களுடன் யுத்த களத்தில் போராடியவா களில், இந்த ராவெள்ளவார் கூட இருந்ததாக, குமாரதூர் ஜட்டி எழுதிய 'கிருஷ்ணராயவிஜய,த்தில் கூறப்படுகின்றன.

இந்த திப்ப பூபதிக்குப் பெத்தமாம்ப என்ற சதீமணியி

னிடம் அய்யபராஜு, வெங்கடாத்ரி என்ற இரு குமாரர்கள் இருந்தனர். இந்த வெங்கடாத்ரி விஷயங்சள் சரித்திரபூர்வ மாக ஒன்றுங் காணப்படவில்லை.

251) ராவெள்ள அய்யபுராஜு, இவர் மிக்க பராக்ரம சாலியென்று சொல்லலாம். இவருக்கு பாபராஜு என்ற பெயரும் உண்டு. இவருக்கு லக்ஷ்மாம்ப என்ற பார்யையும், திப்பபூபாலன் என்ற குமாரனுமிருந்தனர். இவருங்கூட சாளுவ நரசிம்ஹராயர் காலத்திலும், கிருஷ்ணதேவராயர் காலத்திலும் சேனாதிபதியாக இருந்ததாகக் காணப்படு கின்றன. இவர் கந்தனவோலு (கர்நூல்) பக்கம் நடந்த யுத்தத்தில் எதிரியை ஜெயித்துக் கோட்டையை வசப்படுத் திக்கொண்டதாகவும், இந்தப் பிரதேசத்தில் அளியராம ராயர் பாட்டனாராகிய ராமராஜுவும் நரசிம்ஹராயருக்குப் பிரதிநிதியாக இருந்து அந்த யுத்தத்தில் தன்னுடைய வீர பராக்ரமத்தைக் காட்டி வெற்றியடைந்தனர். இந்த விஷயம் 'பத்யபால பாகவதம்' என்றதிலும், திவிபதபால பாகவதம், ராமராஜியம், 'வசு சரித்திரம்' முதலிய கிரந்தங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இந்த கர்நூல் யுத்தம் சரித்திரப் பிரசித்தி பெற்றுள்ளன. இதில் அய்யப்பராஜு காட்டிய வீரபராக்ரமத்தை 'சௌகந்தி ப்ரசவஹாபஹரண'த்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இந்த கர்நூல் யுத்தம் 70 ஆயிரம் குதிரைப் படையுடன் மஹமதி யர்கள் எதிர்த்துப்போராடியும் ஜெயிக்க முடியாமல் முதுகு காட்டி ஓடும்படி செய்தனரென்று 'பாலபாகவத'த்தில் கூறப்படுகின்றன. இவருக்குப் பின்னர் இவர் குமாரராகிய திப்ப பூபதி என்றவர் ராயருக்குப் பிரதிநிதியாகப் பிரசித்தி பெற்று விளங்கினர் என்பது பிரசித்தம்.

252) ராவெள்ள திப்பபூபாலன்டு 2, இவர் காலத்தில் யாதவானிதுற்கப் பிரதேசத்தில், மஹமதியர்கள் மறுபடியும் யுத்தம் ஆரம்பித்நதாகக் காணப்படுகின்றன. அந்த யுத்தத் திலிவர் ராயருக்கு ஆதரவாக எதிர்த்துப் போராடி தன் வீர பராக்ரமத்தால் துருஷ்கர்களை முதுகு காட்டி ஓடும்படி செய்து, ஜெயலக்ஷிமியின் பாக்கியத்தைப் பெற்றுள்ளதாச்க சௌகந்திகபிரசவஹாபகரணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

இவருக்கு வெங்கமாம்ப என்ற சதிமணியினிடம், லிங்கநரபாலன் என்ற குமாரன் தோன்றி, இவர் தக்க பருவத்தில் ஆதவானி துர்க்க யுத்தத்தில் பிரவேசித்து அளிய ராமராயர் (கிருஷ்ணதேவராயருடைய மருமகன்) தந்தையாகிய திம்ம ராஜுவும் இதில் பிரவேசித்துப்பராக்ரமத்தைக் காட்டியதாக 'பாலபாகவத'த்தில் எழுதப்பட்டுள்ளதால் அவருக்கு இந்த திப்பபூபாலன் சகாயமாக இருந்ததாக சரித்திரக்காரர்களில் ஒருவராகிய K. ஈஸ்வர தத்து அபிப்பிராயப்படுகிறார். அளியராமராயருங்கூட இதில் கலந்து கொண்டதாகக் காணப்படுகின்றன. இதனால் இந்த ராமராயருக்கு "ஆதவேனிதுர்க்காபஹாருண்ட" என்ற பிருதைத் தரித்துக்கொண்டதாகவும், அதை அவர் ஜெயித்துப் பெற்றதாக ராமராஜீயத்திலுங்கூட எழுதப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட ரணகண்ட் யுத்தங்களில் தன்னுடைய வீர பராக்ரமத்தைக் காட்டி இவர் சக்கரவர்த்திகளிடத்தில் மிக்கப் பிரசித்தி பெற்றனர்.

253) ராவெள்ள லிங்கபூபாலன், இவர் 2-வது திப்ப நரபாலனுடைய புத்திரனுவார். மிக்க தர்மிஷ்டன் என்று பெயர் பெற்றவராவார். இவருடைய பார்யை சித்தாம்ப. நர்ராவுலபர்வதப் பிரசித்தி பெற்ற கம்ம வம்சத்தில் பிறந்தவர். இந்த லிங்க நரபாலனுக்குக் கொண்டபூபதி என்றவரும், அய்யப்பராஜு என்ற இரு குமாரர்கள் பிறந்து பிரசித்தி பெற்றனர். இவர் கிறிஸ்து சகம் 1510-வருஷ காலத்தவராகக் காணப்படுகின்றனர். இவருடைய விருத்தாந்தங்கள் காணப்படவில்லை என்று கூறப்படுகின்றன

254) ராவெள்ள கொண்டபூபாலன், ராவெள்ள லிங்க நரபாலனுடைய குமாரர்களில் ஒருவராவார். இவர் மிக்க பராக்ரமசாலியாவார், இவருக்கு அநேக பிருதுகள் ராயரிடமிருந்து கிடைத்தன. இவைகளெல்லாம் யுத்தத்தில் காட்டிய வீரத்தால் பெறப்பட்டவைகளேயாகும். சௌகந்திகபிரசவாபஹரணம் என்ற கிரந்தத்தில் இவர் பெற்ற பிருதுக்களின் வர்ணனைகள் கூறப்படுகின்றன. இதைப்பற்றி பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து ராயருடன் சென்ற

பொழுது அங்கு நடந்த யுத்தத்தில் இவர் காட்டிய வீர பராக்ரமத்தைக் கண்ட ராயர் இவருக்கு நற்சான்ருக வழங்கிய பிருதுக்குப் பெயர் வேதாளபிருது என்பர். யேதுல சாஹியென்ற மஹமதிய பாலனுகியவர் (பீஜப்பூர் சுல்தான்) மானவபுரிக்குப் பக்கத்தில் நடந்த போரில், இந்த கொண்ட பூபதி தன்னுடைய வீரபராக்ரமத்தைச் சௌகந்திகப்ரசவா பஹரணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன என்பது பிரசித்தம். அளியராமராயருடைய தந்தையுங்கூட இந்த யுத்தத்தில் இருந்ததாக பாலபாகவதத்தில் காணப்படுகின்றன. இம் மஹாவீரபுருஷன் ரணகளத்திற்குச் செல்லும்பொழுது கலியாணகோலத்துடன் சென்றதாக வர்ணிக்கப்பட்டுள்ளன ராயர் பீஜப்பூர் மீது படையெடுத்து முற்றுகையிட்டது 1512–30-ஆம் காலம். இதற்கு மத்தியில் கொண்டபூபாலன் நடத்திய மானவபுரி யுத்தம் நடந்ததாக காணப்படுகின்றன.

255) ராவெள்ள அய்யப்பநாயகுடு 2, இவர் கொண்ட நரபாலனுடைய சகோதரர். இவருக்கு சாஹசவிக்ரமார்க் கன், வரவீரகோலாகலன், செஞ்சுமலசூரகாருண்டு என்ற பிருதுகள் உண்டு. இதைப்பற்றியே இவருடைய வீரபராக்ர மம் நன்கு புலப்படுகின்றன, இவர் பார்யை வெங்கமாம்ப. இவர் குமாரர் கொண்டபூபாலன். இந்த அய்யப்ப நாயுடு, அழியராமராயர் காலத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்ததாக த்திவிபத காவியத்தில் கூறப்படுகின்றன. இதனுல் அய்யப்ப நாயடு கிறிஸ்து சகம் 1542-65-ஆம் காலத்தவரென்று கூறப்படுகின்றன.

256) ராவெள்ள லிங்கநரபாலன் 2, இவர் ராவெள்ள கொண்டபூபாலருடைய குமாரராவார். தன்னுடைய பித்ராதிகளைப் போலவே மிக்க கீர்த்தி பெற்றனர். இவர் கவீஸ்வரர்களுக்குத் தக்க உதவியாக வாழ்ந்து வந்தார். இவர் சாயப நாயகன் என்ற அநந்த நரபாலனுக்கு ஸ்ரீரங்க-மாம்பையிடம் பிறந்த பாஸ்கராம்ப என்ற பெண்மணியைப் பாணிக்ரஹணஞ் செய்து கொண்டு திருமணிக்கோட்டை ராஜதானியைப் பரிபாலித்துவந்தார். அப்பொழுது அப்துல் பாதுஷா சைனியத்துடன் வந்து கோட்டையை முற்றுகை யிட்டுப் போர் புரிய, அதை ஜெயித்து தளவாய் ஆகிய

வெங்கடராயரிடம் புகழ் பெற்று, பேனுகொண்ட பட்டணத்திற்கு கைதிகளைக் கொண்டு போகும்பொழுது அவர்கள் மிக்கப்பரிதாபப்பட்டதினால் கருணையுடன் அவர்களை விடுதலை செய்து அனுப்பிவைத்தார் என்று சௌகந்திகப்ரசவாபகரண கிரந்தத்தில், கிரந்தகர்த்தாவாகிய ரத்னாகரம் கோபாலகவி வர்ணித்துள்ளார். இவர் அனேக பிருதுகளைப் பெற்றுள்ளனர். இவருக்கு ராமபத்ர நரபாலன் என்ற குமாரன் ஜனித்து தக்க வயதில் பிரசித்தி பெற்றனன். இவர் நடத்திய யுத்தங்களுக்காக வேண்டி ராஜா கொடுத்த வெகுமதிகளின் விபரம்: யானை, குதிரைகள், ரதம், காலாள், ரத்னாபரணாதிகள், சிந்து தேசாதிபதியானவர் ரெட்டைக் குதிரைகள் பூட்டிய ரதத்தையும், சௌராஷ்ட்ர நரபாலனுர் ஒரு ரத்னாகரத்தைக் கொடுத்ததாகவும் சௌகந்திகப்ரசவாபஹரண கிரந்தத்தில் இவ்விஷயங்களைப் பற்றி பிரமாதமாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவருக்கேற்பட்ட பிருதுகள், அஸ்வரேவந்த, ரணதீரகண்ட, நிராதங்கமல்ல, ப்ரானுதசிபஹலலாட, பரபலபீம, சலமர்த்திவரகண்ட, ஆதவனிதுற்ககாவலிபாள, ஹத்துமூவ்வரகண்ட, ஹரியக்ஷசௌர்ய, கக்கோலுராய என்ற பிருதுகள், இதன் விபரங்கள் முதல் பாகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. 71-வது பாராவில் இவர் ஜெயித்த அப்துல் பாதுஷாவின் சைன்யம் கோல்கொண்ட ராஜ்யம் கிறிஸ்து சகம் 1611-72-வருஷ மத்தியில் பரிபாலித்த அப்துல்லா குதுப்ஷாவினுடையதேயாகும். வெங்கடபதிராயருடைய காலத்திலேயே இந்த யுத்தம் நடந்ததாகவும். அதனுல் கிறிஸ்து சகம் 1611—14-வருஷ மத்தியில் நடந்திருக்கலாமென்பது. அதனுல் இவர் சுமார் கிறிஸ்து சகம் 1586—1614-வருஷ மத்ய காலம் வீரப்பிரதாபத்தைக் காட்டிய சிம்ஹம் என்று சொல்லலாம். இவர் கவிதா போஷகராயிருந்து சௌகந்திகப்ரசவஹபகரண கிரந்தத்தை எழுதி வைத்ததினுல், ராவெள்ளவார் சரித்திரம் நமக்கு அநுகூலமாக இருக்கின்றன. இவருடைய ஆஸ்தானத்தில் ரத்னாகரம் கோபாலகிருஷ்ண கவி ஆஸ்தான பண்டிதராக இருந்தவராவார். அந்த கிரந்தத்தை எழுதி இவரைப்பற்றி சிலாகித்து எழுதி வைத்தனர்.

258) ராவெள்ள கொண்ட பூபாலன் 2. இவர் ராவெள்ள 2-வது அய்யப்ப நாயகருடைய குமாரர். இவர் மிக்க தயாள குணமுடையவராவர். யுத்தங்களில் தோற்று ஓடிய ராஜாக்களையும், சேனாதிபதிகளையும் மரியாதையுடன் அவர்களிடம் தயையுங்காட்டி கீர்த்தி பெற்றவராவார். இவருக்கு ராமபத்ர நரபாலனும், திம்ம பூபதி என்ற இரு குமாரர்கள் இருந்தனர்.

259) ராவெள்ள ராமபத்ர நரபாலன். இவர் 2-வது கொண்ட நரபாலனுடைய குமாரராவார். இம்மஹான் தன் தாய், தந்தையர், பாட்டன் முதலானோருடைய கீர்த்தியும் போலவே கீர்த்தியைப்பெற்று மிக்க தர்மிஷ்டனாக வாழ்ந்தனரென்று காணப்படுகின்றன. மற்ற விஷயங்கள் காணப்படவில்லை.

260) ராவெள்ள திம்ம பூபாலன், இவர் ராமபத்ரநர பதிக்குச் சகோதரராவார். இவருக்கு சௌசஷ்டி வித்யை களிலும் மிக்க ஆர்வம் கொண்டவரென்றும், மிக்க வீரபராக் ரமம் உடையவரென்றும் சௌகந்திகப்ரசவாபஹரணத்தில் மிக்க வர்ணிக்கப்பட்டுள்ளன. இவர் பெனுகொண்ட ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்த ஸ்ரீ ரங்கராயருக்கு ராஜப் பிரதிநிதியாக இருந்தவராவார்.

261) ராவெலகோநேட்டி சின்னதிம்ம நாயடு, இவர் உதயகிரி சீமை பாலகனாக சாலிவாகன சகம் 1504-வருஷம் கிறிஸ்து சகம் 1582-வருஷ காலத்தவராவர். இவருடைய தந்தையின் பெயர் திருமலை அய்ய, பாட்டனார் ராமவெல கொண்ட்டி நாயகுண்டு என்பர். இவர் கோவூர் தாலூக்கா விடவலூர் கிராமத்தில் போலேரி அம்மன் மேட்டில் எழுதி வைத்த சாசனத்தில் (நூறு குழி) பூமியை தானமாகக் கொடுத்ததாகக் காணப்படுகின்றன. இவர் தந்தை, பாட்டனார் முதலானவர்கள் உதயகிரிக் கோட்டையைப் பரிபாலித்து வந்ததாகக் காண்கின்றன. இவருங்கூட முதல் ஸ்ரீரங்கராயருக்குப் பிரதிநிதியாயிருக்கலாம் என்று தோன்று கின்றது. No. 1. No. 124 சாசன நெம்பர்களால் தெரிய வருகிறது.

262) ராவெல திருமல நாயனிங்காரு. இவர் கிறிஸ்து சகம் 1575-வருஷ காலத்தில் பொதிலி சீமையில் பாலகனுக இருந்தார். இவர் தந்தையின் பெயர் திப்பாநாயனிங்காரு. இவர் மற்றொரு திப்பா நாயன குமாரராவார். இவர் எழுதி வைத்த சாசனம் ஒன்று நெல்லூர் ஜில்லா சகலபாடு கிராமத்திலிருக்கின்றன. இவரும் ஸ்ரீரங்கராயருக்கு ராஜப் பிரதிநிதியாக இருந்ததாகக் காணப்படுகின்றன. இவர் தந்தை, பாட்டன் முதலாயினோர் பொதிலி சீமையைப் பரிபாலித்து வந்தனர்கள். இவருக்குப் பொதிலி, தும்மலூர் கிராமங்களில் மிக்க செல்வாக்கும், கீர்த்தியும் இருந்ததாகவும் இவர் எழுதி வைத்த சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் அந்த கிராமங்களுக்கு அதிகாரியுமாவார் என்றும் அல்லது ஒரு சேனாதிபதியாகவுமிருக்கலாம். அதனுல் இவர் அங்குள்ள சங்கமேஸ்வர தேவாலயத்திற்கு 320 வள்ளம் (ஒக புட்டி) பூமியைத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர் என்றும் காணப்படுகின்றன.

263) ராவெள்ள முத்து நாயகேந்தரடு. இவர் ராவெள்ள லிங்கபூபாலருடைய சகோதரர். இவர் கோட்டபாடி மாகாவானீந்தாருடைய குமாரத்தி ஆகிய திருமலாம்பையை விவாகம் செய்துகொண்டு, இவரும், மாயனுராகிய மாகராஜனும், தஞ்சாவூர் ராஜாவாகிய ரகுநாத நாயடுவுக்கும், கொப்பூர் ஜக்கராஜனுக்கும் கிறிஸ்து சகம் 1616-வருஷத்தில் தோபூர் பிரதேசத்தில் நடந்த யுத்தத்தில் ஜக்கராஜனுக்கு உதவியாக நின்று போராடித் தோற்று ஓடிப் போய்விட்டதாகவும், ரகுநாதப்யம் என்ற நாடகத்தில் (பாரேழுக்கல வென்டபாடி மாகராஜு) என்று எழுதப்பட்டு உள்ளன. இந்த விஷயம் தஞ்சாவூர் ஆந்தர நாயக சரித்திரத்தில் காணப்படுகின்றன. இவருக்கு வெங்கபூபாலன் என்ற குமாரன் இருந்தான்.

264) ராவெள்ள வெங்கபூபாலன், முத்துநாயகேந்தரருடைய குமாரராகிய இந்த வெங்க பூபாலன், இவருக்கு வெங்கடபதி நாயடு என்ற பிரசித்தியும் உண்டு. இவர் சௌசஷ்டி வித்தைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். இவர் பெனுகொண்ட ராஜதானியைப் பரிபாலித்து வந்த 2-வது

வெங்கடபதிராயருடைய ராஜப்பிரதிநிதிகளில் ஒருவராக இருந்துவந்ததாகக் காணப்படுகின்றன. இவரிடத்தில் ராவில வெங்களப்ப என்றவர் பிரதிநிதியாக இருந்தார். வீரன்னகனுபூர் என்ற கிராமச் சுங்கங்களை அங்குள்ள ஸ்ரீ விஸ்வேஸ்வர தேவாலயத்திற்கு தானமாகக் கொடுத்துச் சாசனம் எழுதிவைத்துள்ளார் சாலிவாகன சகம் 1538-வருதில் இவருங்கூட தன் தந்தையுடன் தோபூர் யுத்தத்தில் பங்கு கொண்டிருந்ததாகவும் ரகுநாத நாயகருடைய சைனியங்களுடன் போராடித் தோற்றோடியதாக விஜயநகரசரித்ராதரம் என்ற கிரந்தம் பாரா 249, 290-ல் கூறப்பட்டு உள்ளன.

265) ராவெல வெலிகொண்ட வெங்கடாத்ரி, கிறிஸ்து சகம் 1616-ஞ காலத்தவர். தஞ்சாவூர் நாயக்க மன்னர்கள் பரிபாலித்து வந்த காலத்தில் இவர் ஒரு யுத்தத்தில் மட்ல அநந்த பூபாலனுடன் எதிர்த்துப்போராடிய காலம். தன்னுடைய வீரப்பிரதாபத்தைக் காட்டி ரணகளத்தில் வீரசுவர்க்கம் சேர்ந்ததாக விஜயநகர சரித்திர ஆதார கிரந்தம் புடம் (249-290) தெரியவருகின்றது. இவர் மிக்க தேவதா பத்தியுடையவர்.

266) ராவெள்ள பாபா நாயனிங்காரு, இவர் கிறிஸ்து சகம் 1660-வருஷ காலத்தில் ஆரிகட்லவார் ஆட்சி மஹமதீயர்கள் வசம் சேர்ந்தன. அப்போது கோல்கொண்ட பிரதேசத்தை நவாப் அப்துல்லா குதூஷ்பா பரிபாலித்து வந்தார். அவர் தபேதாரில் ஒருவராகிய ஹஜரத் ஷேகு நாங்கென்றவர் ஆரிகட்ல பிராந்தியத்திற்கு அதிபதியாக வந்தார். அவரிடத்தில் இந்த ராவெள்ள பாபநாயனிங்கார் ஒரு யிஜாராதாராக இருந்து அந்த இடத்தில் படுகுலேறு என்ற கிராமத்தில் (45 குச்செள்ள) பூமியைச் சமன் செய்து கட்டிடங்கள் கட்டி (காண்ட்ராக்டராயிருந்து) அதற்கு பட்டாபிராமபுறம் என்று பெயரிட்டு அக்ரஹாரமாகச் செய்து சாலிவாக்ன சகம் 1582-வருஷத்தில் சாசனம் எழுதி வைத்து சந்தரகிரஹ்ண காலத்தில் ஸ்ரீவெங்கடாசலபதிக்குச் சமர்ப்பித்து கீர்த்தி பெற்றனர் என்பது பிரசித்தம்.

267) ராவுலவார், ராவுலவெங்களப்ப, வல்லுட்ல கோத்ரீகர்களாகிய ராவெள்ளவார் விருத்தாந்தம் இதுவரையிலும் தெரிவித்துள்ளோம். ராவுலவாரென்ற பெயர் பெற்றவர்கள் லோகபாலகோத்ரீயர்களாகக் கம்மவாரில் பிரசித்தி பெற்றவர்கள். கிறிஸ்து சகம் 1617-வருஷ காலம் ராவுல வெங்களப்ப என்றவர் இந்த வம்சத்தில் பிரசித்தி அடைந்தவர். இவர் ராவெல வெங்கடபதி நாயகரிடம் பிரதானியாக இருந்துவந்தார். இவர் தந்தை வெங்கடப்ப. பாட்டன் வெங்களப்ப ராவெல வெங்கடபதி நாயகர். இவருக்கு நெல்லூர் ஜில்லாவில் வீரன்னகனுபூர் என்ற கிராமத்தை மான்யமாகக் கொடுத்தார். இவர் அந்த கிராமாதிகாரியாக இருந்து அந்தக் கிராமச் சுங்கங்களை சாலிவாகன சகம் 1538-வருஷத்தில் அங்குள்ள விஸ்வேஸ்வராலயத்திற்கு தானமாகக் கொடுத்துச் சாசனம் எழுதி வைத்துக் கீர்த்தி பெற்றனர்.

268) ராவுல வெங்கடாத்ரி. கிறிஸ்து சகம் 1645-ஆம் காலம் இவர் ராவெள்ள முத்துகிருஷ்ணப்ப நாயகருக்குப் பிரதிநிதியாக இருந்து வந்தார். அதனாலிவருக்கு நெல்லூர் ஜில்லாவில் சர்வேபல்லிச்சீமையில் உள்ள கோடூர் கிராமத்தை மான்யமாகப் பெற்று அங்கோர் பெரிய குளத்தை நிர்மாணித்து தர்மசாசனம் எழுதி வைத்தார். அவர் எழுதி வைத்த சாசனங்கள் நாரிகேளபல்லி மடுவனூர் கிராமத்தில் உள்ளன. N. I. G. 112. N. I. N. 33.

269) பெம்மசானிவார், இவருடைய விருத்தாந்தங்களைப்ரௌடதேவராயர் காலத்திலிருந்து தெரியவருகின்றன இவர்கள் கம்மவாரில் முதலில் சாமான்ய குடும்பஸ்த்தராக இருந்து வந்ததாகவும், இவர்களுடைய பூர்வ நாமங்கள் ஆலம்வாரென்றும், முதலில் திம்மநாயகருடைய தந்தை ஆலம் வெங்கடபதி நாயடு என்றும். இவருடைய தாய், தந்தையர் சிறுவயதிலேயே இறந்து விட்டதாகவும், அப்பொழுது பெம்மசானி என்ற வளர்ப்புப் பெண்ணால் வளர்க்கப்பட்டதால் அவருக்கு பெம்மசானி திம்மநாயுடு என்று பெயர் ஏற்பட்டதாகவும், இவர் முதலில் பாபுரேள்ள பக்கத்திலிருந்தமையால் பாபுரேள்ள திம்மா நாயுடென்றும்

ஒரு பெயர் இருந்ததாகவும் ஸ்த்தாநீக சரித்திரத்தில் கூறப் படுகின்றனவென்பது பிரசித்தம்.

270) பெம்மசானி திம்மா நாயுடு, கிறிஸ்து சகம் 1431-வருஷ காலத்தில் இவருச்குப் பிரௌடதேவுராயர் தேசாதிபதியென்ற பட்டம் கொடுத்து வைத்ததாக ஸ்த்தானிக சரித்திரத்தில் கூறப்படுகின்றன. இந்தப்ரௌட தேவராயர் காலத்தில் ஏற்பட்ட அநேக யுத்தங்களில் பங்கு எடுத்துக்கொண்டு தன்னுடைய வீரபராக்ரமத்தால் எதிரி களை அடக்கி ஜெயம் பெற்ற காரணத்தால் இவருக்கு கண்டி கோட்டை ராஜ்யத்தைக் கொடுத்து சன்மானித்ததாகவும், மற்றொரு சமயம் ப்ரௌடதேவராயர் கல்பர்க்குக்கோட்டை யை முற்றுகையிட்டுக் கொடூரமான யுத்தம் நடக்கையில் பெம்மசானி திம்மா நாயுடு 8000 சைனியங்களுடன் சென்று போர் புரிந்ததாகவும், கும்மநாயக பாளையக்காரர் சரித்திரத் தால் தெரியவருகின்றன. இவர் கண்டிகோட்டையில் எருக்கல சலபதி ராஜா கட்டிய கோட்டைய மறுபடியும் புதுப்பித்துக்கொண்டிருந்த சமயம் இவர் காலகதி அடைந்து விட்டதாகவும் காணப்படுகின்றன. ஆடகியிலுமிவர் ஒரு அரண்மனை கட்டியதாகவும், இவருடைய தாயார் வெங்கடம்மாள், இவ்வம்மையார் பேரால் திம்மா நாயடு வெங்கடாபுறம் என்ற கிராமத்தைக் கட்டியதாகவும், அங்கொரு கிணற்றையும் வெட்டுவித்துப் பிரஜைகளுக்கு அநேக சௌகரியங்கள் செய்து கொடுத்ததாகவும், பின்னர் இவர் குத்தி, கண்டிகோட்டை முதலான பிரதேசங்களைப் பரிபாலித்து வந்ததாகவும், பெம்மசானியார் ராஜ்யம் அபிவிருத்தியாகிப் பிரபலம் அடைந்தனவென்றும், இவருடைய ராஜ்யத்தில் நெல்லூர், குண்டூர், அநந்தபுரம், கிருஷ்ண மண்டலத்தில் சில பாகங்கள் இருந்ததாகவும், இவர் ராயருக்கு 900000 லக்ஷ ரூபாய் கப்பங் கட்டி வந்ததாக வும், இவருடைய ராஜ்யத்தில் மொத்த வருவாய் (2500000) இருபத்தைந்து லக்ஷம் ரூபாயும், இவருக்குக் கால் பலம் 25000-ம் 15000-ம் குதிரைப் படையும், 40 ஆனைகளும் இருந்ததாக வும், இந்த வம்சத்தினருக்கு ஆதிவீர என்ற பிருதும் இருந்ததா கவும் ஸ்ரீ முன் மங்கிலக்ஷ்மீநரசிம்ஹாசர்மா

எழுதியிருக்கிறார். பெம்மசானிவார் சரித்திரத்தில், இந்த வம்சத்தினராகஷி காலத்தில் வெள்ளி, தங்க நாணயங்கள் செய்துள்ளனர் என்றும் லோகல் ரிக்கார்ட்டில் உள்ளன. அந்த நாணயங்களுக்கு தங்கள் குலதேவதையாகிய வீர பத்ரர் பெயர் ஒருபக்கம் நாகரலிபியில் உள்ளன. மற்றொரு பக்கத்தில் ஸ்ரீ வெங்கடரமணஸ்வாமியின் உருவம் ஏற்படுத்தியுள்ளனர். தாம்பரம் காசுகள் வெள்ளிப்பணங்கள் ரூபாய்கள் தங்க பவுன்களில் இந்த பிம்பம் வரைந்துள்ளன. இந்த நாணயங்களை புளக்கத்திலிருந்ததாக ஸ்தானிக சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த பெம்மசானிவார் விஜயநகர ராஜ்யத்திலுள்ள பாளையக்காரர்களில் மிக்க பிரசித்திபெற்றவர்களாவார். இவர்கள் விஜயநகரத்திற்குச் சென்று குடியேறிய காலத்திலிவர்களுக்கு 1240 குளி பூமியிருந்ததென்றும் விஜயநகர சாம்ராஜ்யம் என்ற கடிதபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர்களுக்கு முதலில் குத்தி, கண்டிகோட்டைப் பிரதேசங்கள் மட்டும் சுவாதீனத்திலிருந்ததாகவும் காணப்படுகின்றன. இந்த திம்ம நாயுடுவுக்கு வீர திம்ம நாயுடு என்ற குமாரன் இருந்ததாக ஸ்தானிக சரித்திரங்களில் காணப்படுகின்றன. ராமலிங்க நாயுடு என்ற குமாரன் இருந்ததாக காடிபத்திரி சரித்திரத்தில் தெரியவருகின்றன. சாடுபத்யங்களில் ராமலிங்க நாயுடுவின் தந்தை சென்னவிபுடு என்று கூறுகின்றன. இவ்விஷயங்களை உறுதி செய்வதற்குத் தகுந்த ஆதாரம் கிடைக்கவில்லை ஆயினும் சரித்திரங்கள் பத்தியங்களைச் சமமாக எண்ணும் பக்ஷத்தில் இந்த திம்ம நாயுடு குமாரன் வீரதிம்ம நாயுடு என்றும் இவர் மல்லிகார்ஜ்ஜுனராயர் காலத்தில் குத்தி, கண்டிகோட்டை ராஜ்யங்களைப் பரிபாலித்து வந்ததாகவும் நிர்ணயிக்கலாம். இந்த வம்சத்திலிருந்து பின்னர் பிரசித்தி பெற்றவர் ராமலிங்க நாயுடுவே ஆவார்.

271) பெம்மசானி ராமலிங்க நரபாலன், மேலே சொல்லப்பட்ட திம்ம நாயுடுவுக்குப் பின்னர் இந்த ராமலிங்க நரபாலனுடைய சரித்திரங்கள் நமக்குக் காணப்படுகின்றன. ஆயினும் மத்யசரித்திரங்கள் காணப்படவில்லை. ராமலிங்க நரபாலனுடைய தந்தை சென்னவிபு

டென்று சாடுபத்யத்தால் தெரியவருகின்றன. இவருக்கு பெததிம்ம நாயுடு என்ற சகோதரன் இருந்ததாகவும் காணப்படுகின்றன. இவர்களிருவரும் சாளுவ வீரநரசிம்ஹ ராயருடையவும் ஸ்ரீகிருஷ்ணதேவராயருடையவும், பிரதிநிதி களாகயிருந்து வந்தனர். மேலே சொல்லப்பட்ட வீரதிம்ம நாயுடுவுக்கு சென்னவிபுண்டென்ற குமாரனிருந்து, இவருக்கு இருவர் ஜெனித்ததாகவும் யூகிக்கஅவகாசம் கிடைக்கின் றன. சென்னவிபுடு சாளுவ நரசிம்ஹ, வீரநரசிம்ஹராயர் காலத்தில் இருந்திருக்கலாம்.

1) விஜயநகர சாம்ராஜ்யம், ப்ரௌட தேவருக்குப் பின்னர், இவர் குமாரர் மல்லிகார்ஜுன ராயரும், பின்னர் இவர் வம்சத்தில் மற்றொருவரும் கிறிஸ்து சகம் 1487-வரு ஷம் வரை பரிபாலித்து வந்தனர். பின்னர் சாளுவவம்சத்திய நரசிம்ஹராயர் 1493-வரையிலும், பின்னர் இவர் குமாரர் இம்மடி நரசிம்ஹராயர் (2) கிறிஸ்து சகம் 1505-வருஷம் வரையிலும் ராஜ்யப்பரிபாலனம் நடத்தி வந்தனர். இந்த இம்மடி நரசிம்ஹராயரிடம் சேனாதிபதியாகிய துளுவ வம்ச நரசநாயுடு பின்னர் விஜயநகரத்தை ஆண்டு வந்த தாலும், சுதந்திரம் பெறவில்லை ஆயினும் இவர் குமாரனாகிய வீரநரசிம்ஹராயர் கிறிஸ்து சகம் 1509-வருஷம் வரை சுதந்திரமாகப் பரிபாலித்து வந்தார். இவருக்குப் பின்னர், பரிபாலனம் செய்தவர் ஸ்ரீகிருஷ்ணதேவராயர்.

ராமலிங்க நரபாலன் கிருஷ்ணதேவராயரிடம் 80-ஆயிரம் சேனைக்குத் தலைவராகயிருந்தார். தாடிபத்ரிபாலனம் இவர்கீழாகவிருந்தும் மொத்தமாக, குர்தி ராஜ்யம் பூராவும் சாளுவ திம்மய்ய, கோவிந்தய்ய, இவர்களுக்கு கொடுத்து சாலிவாகன சகம் (1427-1435) மத்தியில் அமுலிலிருந்த தாகவும். தாடிபத்ரிசாசனம் காட்டப்படுகின்றன. S. I, I, V, IV, No, 800-802 & 803. இந்த அதிகாரம் வீரநர சிம்ஹராயர், கிருஷ்ண தேவராயர், அச்யுத ராயர் ஆகிய இந்த மூவர் காலத்தில் அமுலில் இருந்தன. அதனால் பெம்ம சானிவார் இந்தப் பிரபுக்களிடத்தில் சேனாதிபதிகளென்ற யோதாவில் தாடிபத்ரி ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தனர்.

கண்டி கோட்டையாடகி, முதலிய பிரதேசங்களும் இவர்களின் ஆட்க்ஷியின்கீழ் இருந்தன. அந்த காலத்தில் கல்பற்கு ராஜதானியாகவே துல்கான் என்ற மஹமதியன் ஆண்டு வந்தான். அப்பொழுது ராயர் அவர்மீது படையெடுத்துச் சென்ற சமயம் அவருக்கு கோல்கொண்டப்ரபுவாகிய குதுபனமுல்க்கும், அகமத் நகரப்ரபுவாகிய நிஜாம் சாஹிபு என்றயேதுல்கானுக்கும் உடைந்தையாக வந்து எதிர்த்து நடந்த யுத்தத்தில் ஜெய, அபஜெயமில்லாமலிருந்தது. அப்பொழுது ராமலிங்க நாயுடு விராவேசத்துடன் 10 ஆயிரம் சேனையுடன் பிரவேசித்து துருக்ஷகர் சேனையையொடுக்கியும் அநேக விரர்களைக் கொன்றும், விரலக்ஷ்மீ கடாக்ஷத்தால் ஜெயம் பெற்று ராயருக்கு மேன்மையை உண்டாக்கி வைத்ததையால், ராயர் இவர்மீது மிக்க பரிவுகொண்டு அநேக சன்மானங்கள் கொடுத்துக் கொண்டாடினர். இந்த யுத்தத்தின் மகிமையை கிருஷ்ணதேவராய விஜயம் என்ற கிரந்தத்தில் விஸ்த்தாரமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

பாரதி சுக்லசம்புடம் 624 ஆந்தர சாஹித்ய பரிக்ஷத் பத்திரிக்கை சம்புசடம் (3) பாரதி சுக்ல சம்புடம் இவருடைய பராக்ரமத்தை அந்த யுத்தத்தில் காட்டியதை 2-சுலோகங்களால் எழுதப்பட்டுள்ளன. அந்த யுத்தத்தில் 10 ஆயிரம் கம்ம விரர்களின் சகாயத்தால் சூரசிகாமணி அற்புத பராக்ரமத்தைக் கண்டு அநேக சைன்யங்களை முதுகு காட்டியோடச்செய்தும் 3 வஜ்ஜர விரர்களைச் சம்ஹரித்தும் இந்த வீரப்ரதாபன், ஜூடுறு, பெடகண்டி, பேதமுசெர்ல பிராந்தியங்களில் நடந்த கோரயுத்தங்களிலும் தன்னுடைய வீரபராக்ரமத்தைக் காட்டினர். இவர் சிந்த்த குன்ட்டரகு பதிராஜு, சலகம் திம்மராஜு, சஹஜிய்யகான் என்ற வைரி வீரர்களை ஜெயித்து பேதம் செர்லகோட்டையை நிலமட்டம் செய்துவிட்டனர் என்ற விஷயத்தை சாடுபத்யத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. இந்த ராமலிங்க நரபாலன் தன் பெயரால் தாடிபத்திரியில் ராமலிங்கேஸ்வராலயம் ஒன்று கட்டி பிரதிஷ்டை செய்தும் பூஜைகள் யுக்தமாக நடைபெறச்செய்து வைத்தனர். தவிர ராயருடைய அனுமதியின் பேரில் சத்திரம் கட்டி வைத்தார். இவர் பேரால் ராமலிங்க நாயனி பல்லெ, என்ற கிராமத்தையும் நிர்மாணித்தார்.

இந்த கிராமம் இப்பொழுது தாடிபத்திரிக்கு 4 குரோஸ் தூரத்தில் உள்ளது. இவர் கட்டி வைத்த ராமலிங்கேஸ்வராலயத்திற்குப் பக்கத்தில் ஒரு மாந்தோப்பும் நிர்மாணித்துள்ளார். சர்க்கார் செலவிலேயே நித்ய பூஜையுத்ஸவாதிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. தவிர எர்ரமல கொண்டப்ரதேசத்தில் வேபுகேஸ்வராலயம் கட்டிவைத்தார். இவருக்கு ராஜகோபாலம்ம, கோவிந்தம்ம என்ற 2 குமாரத்திகள் இருந்ததாகக் காணப்படுகின்றன. இந்த ராஜகோபாலம்மாள், ராமலிங்க நாயனிபல்லெ, என்ற கிராமத்தில் ராஜகோபாலஸ்வாமி தேவாலயம் கட்டிவைத்தார். அதற்கு 8 தூமூல (   ) பூமியை தானமாகக் கொடுத்தும், கோவிந்தம்மாள் ஒரு கிராமத்தைக் கட்டி வைத்தும், அங்கொரு பெரிய குளத்தை நிர்மாணித்தும், தண்ணீர்ப் பந்தல் கட்டிவைத்துள்ளார். அந்த அம்மையார் கட்டிவைத்த கிராமத்திற்கு பட்டகேதயென்ற பெயர். பட்டகேதயென்றவனே அங்கு விவகார விஷயங்களை விசாரிக்கும் அதிகாரியை நியமிக்க காரணத்தால் அப்பெயர் ஏற்பட்டது இந்த ராமலிங்க நரபாலன் கிருஷ்ணதேவராயருக்குப் பின்னரும் இருந்ததாகக் காணப்படுகின்றன. இவருக்குப் பின்னர் சலகம்திம்மராஜு, ராஜ்யத்திற்காகப் போராடிக் கடைசியில் சம்ஹரிக்கப்பட்டனன்.

272) பெம்மசானி பெததிம்ம நாயடு, இவர் ராமலிங்க நரபாலனுடைய குமாரன் என்றோ, சகோதரன் என்றோ சொல்லவியலாதவகையிலிருக்கின்றன. தாடுபத்ரி சரித்திரத்தில் இவர் சோதரர் என்றும் தாடிபர்தி முதலான ரிகார்ட்டுகளில் குமாரனென்றும் காணப்படுகின்றன. இவருங்கூட வீரநரசிம்ஹராயர், கிருஷ்ணதேவராயர் காலத்தவரென்றும், இவர் காலத்தில் நடந்த யுத்தங்களில், இவர் தஸ்தூரிகான் என்ற துருஷ்கனைச் சம்ஹரித்துள்ளனர் என்று பத்யங்களால் தெரியவருகின்றன. இவருக்கு நரசிம்ஹ நரபாலன் என்றவரும் பலிசின்ன நாயடு, சினதிம்மபூபதி என்ற 3 பேர் குமாரர்களிருந்ததாக, சிலதாடு பத்யங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. இதில் நரசிம்ஹ நாயடு என்ற பெயர் தன்னுடைய ராஜாவாகிய வீரநரசிம்ஹராயர் இங்கு வைத்ததாகக் காணப்படுகின்றன. இவர் யுத்த

பராக்ரமத்தைக் குறித்து ஒரு சாடுபத்யத்தில் விஸ்த்தார மாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவர் தாடிபத்ரியில் சிந்தல ராயஸ்வாமிக்கு கோவில் கட்டி வைத்து, அதில் சிற்ப சாஸ்தரப்ரகாரமாக கற்ப கிருஹம், சுகவாஸிக, நூதிலே, மத்தியில் ரங்கமண்டபம், ஆஸ்தான மண்டபம், சௌதாந்த ராளம், கோபுரம், ப்ரகாரங்கள், ஸ்த்தூபிகை, கோசாலை, யாக மண்டபம், கல்யாண மண்டபம், ஆழ்வாராதி மண்ட பம், சயந ஆலயம், கருட மண்டபம், ஆஞ்சநேயர் ஆலயம், வராஹ மண்டங்கள், பாகவத, ராமாயண, அஷ்டதிக் பாலகாதி சித்திரப்ரதுமைகள் பிரகாசிக்கும்படியாக கட்டி வைத்து, கண்டா திருமலய்ய ராமாயணம் ராமாச்சாரியார் அவர்களையே அர்ச்சகராக நியமித்தும், தாடிபத்ரி திருவேங் கடாச்சாரியர் அவர்களை ஆச்சாரியராக நியமனம் செய்து, தேவாலயத்திற்குப் பக்கமாக கோநேரி என்ற தெப்பம் நிர்மாணித்தும், நித்யாராதனைகள் உற்சவாதிகள் யுக்தப்படி நடந்துவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவைத்த தாக தாடிபத்ரி கையெழுத்துப் பிரதியில் எழுதிவைக்கப் பட்டுள்ள.

இவர் காலத்தில் மாகாணி பூமிகளை விருத்தி செய்வ தற்காக ஏற்பாடு செய்து வைத்தனர். தாடிபத்ரியில் இவர் பந்துவாகிய உத்தண்ட நாயுடுவை ப்ரதிநிதியாக நியமித்து, கண்டிகோட்டையில்தானிருந்து கொண்டு பரிபாலித்து வந்தனர். கண்டிகோட்டையில் இவர் காலத்தில் மறுபடியும் பலப்படுத்தப்பட்டண. உத்தண்ட நாயடு இவர் அனுமதி பேரால் கிராமாதி காரியங்களையும் பார்த்து வந்தார். இவர் மடவங்க என்ற பிரதேசத்தைத் தன் தாயார் பேரால் சாசனம் செய்து அங்கொரு பெரிய வாய்க்கால் வெட்டி பூமிகளை நஞ்சையாக்கி அந்த வாய்க்காலுக்கு திம்மா நாயடு கால்வாய் என்று பெயரிட்டு வைத்தார்.

இவரிடத்தில் யேனுகுல சென்னு நாயடு என்றவர் பந்துவாக இருந்து வந்தார். இவர் காள்ளபாடு என்ற கிராமத்தைக் கட்டிவைத்து, பக்கசென்ராயணஸ்வாமிக்கு தர்பார் மண்டபம் ஒன்று கட்டி ப்ரதிஷ்டை செய்து இந்த

மண்டபம் முன் சொல்லப்பட்ட சென்னவிபுனுடைய பேரால் (ராமலிங்க நாயடு தந்தை) கட்டப்பட்டனவென்றும், இவர் காலத்தில் தாடிபத்ரி ஆற்றின் பக்கத்தில் 4 கவலைக்கிணறுகளை வெட்டியும், அநேக பூமிகளை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தி வந்தனர். தாடிபத்ரிக்கு ஒரு கோஸ் தூரத்தில் சல்லாவாரி பல்லெ என்ற கிராமத்தைக் கட்டிவைத்தனர். இந்த கிராமத்தில் சல்லாவார் என்ற கம்மவார் வாசம் செய்து வந்தமையால் அப்பெயர் ஏற்பட்டன என்றும் கூறப்படுகின்றன.

இவருக்குச் சானம்ம என்ற கூடப்பிறந்த பெண்மணி இருந்தார். மிக்கிலிநேனி நலசென்னு நாயடு கட்டி வைத்த ஊரின் பக்கம் அவ்வம்மையார் ஒரு குளத்தை வெட்டி வைத்தார். அதில் ஜம்பு விசேஷமாக வளர்ந்து வந்தமையாலதற்கு ஜம்புலபாடு என்ற பெயர் ஏற்பட்டன.

இவர் வஜ்ரகிரி மலையின் மீது நரஸிம்ஹஸ்வாமிக்கு ஆலயங் கட்டிவைத்தார். தவிர தாடிபத்ரிக்கு 3 கோஸ் தூரத்தில் ஒரு கிராமத்தையும், ஒரு பெரிய குளத்தையும் கட்டிவைத்துள்ளார். அந்தக் குளத்தில் தண்ணீர் சரியாக நிற்காத காரணத்தால், அதற்கு ஓடு திம்மா நாயடு குளம் என்று பெயரிடப்பட்டன. இந்த பெத திம்மா நாயுடுவை அக்கபூபாலனென்று கூப்பிடுவதாகவும் காணப்படுகின்றன. இவர் செய்த காரியங்கள் எல்லாம் இன்னும் அநேகமாக உள்ளதாகக் காணப்படுகின்றன. அவைகளை எல்லாம் தெரிந்து கொள்வதற்கு சாத்தியமில்லாததால் விட்டனர்.

273) பெம்மசானி பலிசின்ன நாயகேந்த்ருடு. இவர் பெததிம்மா நாயடு அக்ரகுமாரன் ஆவார். இவரும் ஒரு அதிகாரியாக இருந்தார் என்றும், மல்நகான் என்ற துருஷ்க சேனாதிபதியுடன் நடந்த யுத்தத்தில் பிரவேசித்து எதிரி சேனைகளைத் துரத்தியும் கீர்த்தி பெற்றனர். இதற்கு மேல் இவருடைய விஷயங்கள் காணப்படவில்லை, மஹமதியர்களுடன் நடத்திய யுத்தத்தில் மரணமடைந்ததாக நினைக்க வேண்டியிருக்கிறது.

274) பெம்மசானி அரதிம்மா நாயடு, இவரே சினதிம்ப நரபாலனென்றுங் கூறுவர். அக்கபூபாலன் என்ற பெததிம்ம பூபாலனுக்கு இவர் குமாரனுகக் காணப்படுகிருன். பெம்மசானிவாரில் இவர் அத்யந்த கீர்த்தி பெற்றவராவார். இவருக்கு "ஹத்துமுவ்வரகண்ட, அதனுல் கண்டபிருத, கண்டிகோட்ட துர்க்காத்யக்ஷ, கண்டரகண்ட, கருடநாராயணங்கவிஹார, சாத்ரவமதவிபால, ஹன்னிப்பரகண்ட, சேபட்டு கண்டர சூர்யபத்ரசின்ஹா, கண்டராதித்ய, மன்னெமார்த்தாண்டாதி" பிருதுகள் உண்டு.

ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் விஜயநகர ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்த பின்னர் காலகதி அடைய அந்த ராஜ்யத்தை அவர் மருமகனுகிய அளியராமராயர் சுவாதீனத்திலிருந்தன. இவர் அச்சுதராயர் அநுக்ரஹத்தால் பரிபாலித்து வந்தனர். அப்பொழுது ராமராயருக்குக் கோட்டையில் சத்துருக்கள் அதிகமானதால், அவர் ஒரு சமயம் தன் உயிருக்காக வேண்டி கண்டிகோட்டைக்கு ஓடிப் போய்விட்டனர். அப்பொழுது இந்த திம்மா நாயடு ராயரைக் கண்ணிமையைப்போல பாதுகாத்து வந்தனர். அப்பொழுது ராயர் சத்துருக்கள் இவர் மீது படையெடுத்து வர, கோமலிப்பிரதேசத்தில் கோரமான யுத்தம் நடந்தன. அதில் இவரும், இவருக்கு உதவியாக வந்த பாளையக்காரர்களைக் கலந்து, சலகம் திம்மராஜுவை அவருடைய சைனியத்துடன் ஹதம் செய்து, ராமராயரை விஜயநகரத்திற்கு சிம்ஹாசனுதிபதியாகச் செய்தனர். அதனுல் ராயர் மிக்க சந்தோஷப்பட்டு அரதிம்ம நாயடுவுக்கு விசேஷ வஸ்த்துக்களைப் பரிசாகக் கொடுத்துப் பாராட்டினுர் என்ற விஷயத்தை நடிமிதொட்டி பாளையக்காரருடைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகின்றன. (L. R. T. Vol. 12 P. 213-V-39) இதை தாடிபர்தி கையெழுத்துப் பிரதிகள் நிரூபிக்கின்றன. ஆயினும் சலகம் திம்மராஜுவை ராமலிங்க நரபாலன் ஓடவைத்ததாக சாடுபத்யங்கள் கூறுகின்றன. ஒருவேளை அவருங்கூட அக்காலம் வரை இருந்திருக்கலாம்.

அரசிம்ம நாயடு கிறிஸ்து சகம் 1550-ஆவது சௌம்ய-நாம வருஷத்தில் தாடிபத்ரியில் சிந்தலராயஸ்வாமிக்கு யெனுமுசிந்தல பல்லெ என்ற கிராமத்தை தானமாகக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். இவர் இன்னும் கங்கமலபாடு என்ற இடத்திலும், பெத்தபெல்மிமடையிலும், கலசகூடூரிலும், வென்னபூஸமல்லியிலும் (7) புட்ல பூமியை (2240 வல்லம்) சர்வமான்யமாகக் கொடுத்தனர். இவர் தன் பேரால் ஒரு தடாகத்தை வெட்டி, கரை கட்டி தண்ணீர் நிற்க வைத்தார். இவர் ஒரு சமயம் தான் கோரிய சாலெ கிராமத்தை இவர் ஒரு பிராம்ஹணரைக் கொன்ற பிரம்ஹத்தி தோஷ நிவர்த்திக்காக வேண்டி கிறிஸ்து சகம் 1552-வருஷத்தில் திம்மநாயன பேட்டை என்று கட்டியும், அதை ப்ராம்ஹண அக்ரஹாரமாக்கி, அங்கொரு பெரிய தடாகத்தைக் கட்டியும், தன்னால் கொல்லப்பட்ட பிராம்ஹணருடைய சிலையை ஒரு பக்கம் வைத்தும், யாடகீ விரபத்ர என்ற நாகர எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாணயங்களை வைத்தும், தன்னாட்டில் அந்த நாணயங்கள் செலாமணியாகப் புழக்கத்தில் வைத்துக்கொண்டிருந்ததாகவும், தாடிபத்ரி கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகின்றன. யாடசபரிசனு பெம்மசானிவார் பிரதான வாசஸ்தலமானதால் அங்கு தமது குலஸ்வாமியாகிய விரபத்ரன் பேரால் நாணயங்கள் தயார் செய்ததாகக் காணப்படுகின்றன. இந்த யோதாக்ரேசனாகியவர் மற்றோர் யுத்தத்தில் ஜெயம் பெற்று அநேக குதிரைகள், அநேக ஆயுதங்கள் முதலானவற்றைக் கைப்பற்றியதாகவும் காணப்படுகின்றன. அதில் தோற்று ஓடியவர்கள் இவரைப் புகழ்ந்து கொண்டாடியதாகவும், பத்யங்களில் காணப்படுகின்றன.

275) பெம்மசானி நாரசிம்ஹநரபாலன். இவர் விஜய நகர ராஜ்யாதிபதியாகிய அளியராமராயர் காலத்தில் அவர் சேனாதிபதிகளில் ஒருவராகப் பிரசித்து பெற்று வந்தனர் ஆவார். கண்டிகோட்டை, தாடிபர்தி முதலான பிரதேசங்களைப் பரிபாலித்து வந்தார். இவர் பரிபாலன காலத்தில் சாலிவாகன சகம் சகம் 1472-வருஷ காலத்தில் கன்டெடன எல்லப்ப, காமராஜு, ராமன்ன முதலாயினோர் தாடிபர்தி

யில் தர்மசாசனங்கள் எழுதிவைத்துள்ளனர். இவர் பெத திம்மபூபாலருடைய புத்திரர். மிக்க பராக்ரமசாலி. ஜம்முலமடுகுபக்கம் நடந்த யுத்தத்தில் அலவராயர் என்ற சேனாதிபனை எதிர்த்து அவனைத் தோற்கடித்ததாக பத்யங்களில் காணப்படுகின்றன.

இவருக்கு துருஷ்கர் தலைகளின்மீது பாதங்கள் வைத்த விருக்ரேசன் என்ற பட்டமிருந்ததாக "மஸ்கர துருஷ்க மஸ்தகன் யஸ்த்தசரண சமஸ்த்த சஸ்த்த" என்ற பத்யத்தால் தெரியவருகின்றன. இவருடைய தந்தையும், சகோதரனும் ஜெயித்த அஸ்த்துரிகான், மஸ்தகான் என்றவர்களை, வெலுகோட்டி குமார திம்ம நாயடுகாரும் ஜெயித்ததாக அவர் வம்சாவளி சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளன. அதனால் இவர்கள் எல்லோருங்கூடி துருஷ்கர்களுடன் போராடியதாகக் காணப்படுகின்றன. இந்த நரசிம்ஹநரபாலன் வெல்லலூர் கிராமத்தில் சில பூமிகளை சென்னமராஜு, கிருஷ்ணமராஜு குமாரனாகிய லிங்கமராஜு பண்டிதருக்கு இனமாகக் கொடுத்துள்ளார். அதை அவர் கிறிஸ்து சகம் 1594-வருஷத்தில் அங்குள்ள சிந்தலராயஸ்வாமிக்கு சூர்ய கிரஹண காலத்தில் சமர்ப்பித்ததாக ராபுபந்ரி கைபெழுத்துப் புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளன.

276) பெம்மசானி பெததிம்ம நாயடு, சினதிம்ம நாயடு, இவர்களிருவரும் பெம்மசானி நாரசிம்ஹ நரபாலனுடைய குமாரர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அவருக்குப் பின்னர் கிறிஸ்து சகம் 1584-1614-வருஷ மத்தியில் பெனுகொண்ட ராஜதானியைப் பரிபாலித்து வந்த 2-வது வெங்கடபதி ராயருக்கு சேனாதிபதிகளாகவும், ராஜப்பிரதிநிதிகளாகவுமிருந்ததாக காணப்படுகின்றன. இவர்கள் கண்டிகோட்டை, யாடகி முதலான பிரதேசங்களைப் பரிபாலித்து, அநேக ரணகளங்களில் ராயருக்கு உதவியாக அநேக பிருதுகளைப் பெற்றதாகவும். இவர்களுடைய வீர-பராக்ரமத்தைக்கண்ட வெங்கடபதி ராயர் இவர்களுக்கு கருட நாராயண பிருது, த்வஜத்தையும், நவரத்ன பூமாலை, துராய், கவசங்கள், ஆனைகள் முதலான சின்னங்கள் பொறிக்கப்பெற்ற போர்வைகள், வீரகங்கணங்கள்,

பல்லாக்குகள் முதலானவற்றைச் சன்மானமாகக் கொடுத்து வாழ்த்தியதாக சாறு சந்த்ரோதய கிரந்தத்தில் வர்ணிக்கப் பட்டுள்ளன. இந்த கிரந்தத்தை இவர் ஆஸ்த்தான மந்திரியும், கவீஸ்பரனுகிய சென்னமராஜு, சேஷ மந்திரி குமாரனுகிய சென்னமராஜு என்றவர் எழுதி வைத்துள்ளார். அதில் அவர் பெத திம்மபூபாலருடைய மந்திரியென்று சொல்லிக்கொண்டு அவருடைய வைபவத்தைப்பிரமாதமாக வர்ணித்துள்ளார். வெங்கடபதி ராயர், திம்மபூபதிக்குச் சன்மானமாக அனுப்பிய வஸ்த்துக்களில் குல்லாயி மீது வெண்சங்கத்தினுடைய சின்னம் பொரிக்கப்பட்டதும், முத்துச்சரங்கள் பதிக்கப்பெற்ற பல்லக்கையும், தன் மந்திரி பிரதானியாகிய சென்னம ராஜனுக்கும் சன்மானமாகக் கொடுத்து கௌரவித்தனர். இந்த மந்திரி பிரதானி தாடி-பர்த்தியில் ஒரு கோபாலகிருஷ்ணர் ஆலயத்தைக்கட்டிப் பிரதிஷ்டை செய்து நவரத்தின கிரீடம், பீதாம்பரம் முதலியவற்றைச் சமர்ப்பித்தும், கோநேரி என்ற தடாகத்தை நிர்மாணித்து, நந்தவனத்தை உண்டாக்கி வைத்தும், தன் தாயார் பேரால் சர்வாம்பபுறம் என்ற அக்ரஹாரம் கட்டி வைத்துப் பிரசித்தி பெற்றதாக தான் எழுதி வைத்த கிரந்தத்தில் காணப்படுகின்றன.

சினதிம்மநாயடு சாசனங்கள் கிறிஸ்து சகம் 1578-வருஷத்தில் எழுதப்பட்டதாக தாடிபர்த்தி கையெழுத்துப் பிரதிகளில் எழுதப்பட்டுள்ளன. பெததிம்ம நாயடுவுடன் கலந்தோ, அவருக்குப் பின்னரோ சின்னதிம்மா நாயடு கண்டிகோட்டாதிபதியாக இருந்ததாக, இவர் ஆஸ்த்தான பண்டிதராகிய சித்ரகவி அனந்தகவி எழுதிய பிரபந்தத்தில் காணப்படுகின்றன.

இந்த சின்னதிம்ம நரபாலன் ஏழை எளியவர்களுக்கு விவாஹாதி காரியங்கள் செய்து வைத்து வந்ததாகவும், மிக்க பரோபகார ப்ரபுவென்றும் பிரஜைகளால் கொண்டாடப்பட்டவர் ஆவார். இந்த பெம்மசானிவார் இன்றைக்கும் அந்தப்பிராந்தியத்தில் சுபகார்யாதி சடங்குகளில் பிரதானமாகக் கலந்து கொண்டு முதல் தாம்பூலம் பெற்றுவருகின்ற

ணர். சின்னதிம்ம பூபதியார் கிறிஸ்து சகம் 1578-வருஷத்தில் தாடிபர்த்தி சிந்தலராயஸ்வாமிக்கு சில பூமிகளைக் கொடுத்தும், கிறிஸ்து சகம் 1585-ல் நைவேத்யத்திற்கு வேண்டிய மான்யங்களை ஏற்படுத்தியும், கிறிஸ்து சகம் 1593-வருஷம் சினதாடிபர்த்தி காடுகளைக் கொடுத்துச் சாசனம் எழுதி வைத்துள்ளார். தவிர, ரங்கஸ்வாமி தேவாலயத்திற்கு துண்டு கிராமத்தைக் கொடுத்துச் சாசனம் எழுதிவைத்ததாகவும் காணப்படுகின்றன. இதனால் கண்டிகோட்டை பாலனம், தல்லிகோட்டை யுத்தம் வரையிலும் பெம்மசானி வம்சாவழியினர் ஆதீனத்திலிருந்ததாகவே ஸ்பஷ்டமாகக் காணப்படுகின்றன.

கிறிஸ்து சகம் 1586-வருஷம் கோல்கொண்டா நவாபாகிய மஹம்மது கூலி குதுப்ஷா கண்டிகோட்டையின் மீது படையெடுத்து ஜெயித்து, அங்கு சஞ்சர்கான் என்றவரை அதிகாரியாக நிறுத்தப்பட்டதாக பெரிஷ்டா என்றவர் எழுதி வைத்துள்ளார். ஆயினும் சில காலங்கூட நிற்கவில்லை. வெங்கடபதிராயர் இவ்விஷயத்தைக் கண்டறிந்து பெனு-கொண்டாவிலிருந்து சைன்ய சமேதராக வந்து யுத்தம் செய்து, சஞ்சர்கானுக்குச் சகாயமாக வந்த மூர்த்துஜாகான், ருஸ்தங்கான் என்ற வீரர்களைப் பெண்ணையாற்றங்கரையில் நடந்த யுத்தத்தில் அவர்களை ஜெயித்து, மஹம்மதிய சைனியங்களை சின்னாபின்னப்படுத்தியும், சிரச்சேதங்கள் செய்து கண்டிகோட்டையை விட்டு ஓடும்படிசெய்து, கோட்டையை சுவாதினம் செய்து பெம்மசானி வாரையே அங்கு அரசராக நியமித்து வைத்ததாகக் காணப்படுகின்றன பெத நிம்மபூபதி ஜெயித்ததாகச்சொல்லப்பட்ட யுத்தங்களில் இதுவும் ஒன்று. இந்தயுத்தத்தில்கண்டிகோட்டை முதல்கிருஷ்ணைப்பிரதேசம் வரையிலிருந்த ராஜ்யமும் வெங்கடபதிராயர் வசம் ஆயின.

277) பெம்மசானி பெதவீரநரபாலன், இவர் கிறிஸ்து சகம் 1594-வருஷ காலத்தவர். இந்த பெம்மசானி வம்சத்தில் கண்டிகோட்டையை பரிபாலித்து வந்தவர்களில் ஒருவராக இவர் காணப்படுகிறார். இவர் முதல் ஸ்ரீரங்கராயருக்கு பிரதிநிதியாக இருந்ததாகவும் சாருசந்த்ரோதய கிரந்தத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

இதற்கு உதாரணமாக லிங்கைய மந்திரி சாசனத்தில் கிறிஸ்து சகம் 1594-வருஷ காலம் சாலிவாகன சகம் 1516-வருஷம் தாடிபர்த்தியில் காணப்படுவதாக, தாடிபர்த்தி கையெழுத்துப் பிரதிகளில் எழுதப்பட்டுள்ளன. சாசனத்தில் அவர் பெம்மசாணி நாரசிம்ஹநரபாலனிடம் இனமாகப் பெற்ற பூமிகளை, சூர்யகிரஹண காலத்தில் சிந்த்தலராயஸ்வாமிக்கு மான்யமாகக் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளன. அதனால் இந்த பெதவீர நரபாலனும், அவருடைய சமகாலத்தவரென்றும் கூறலாம். இந்த பராக்ரமசாலியினுடைய காலத்தில் விஜயநகர சாம்ராஜ்யம் சில பாகங்கள், துருஷ்கர் வசமாகிவிட்டன. தல்லிகோட்டை பக்கம் கிறிஸ்து சகம் 1565-வருஷத்தில் நடந்த யுத்தத்தில் மஹாப்ரளயம் போல வந்து கூடிய லக்ஷக்கணக்கான மஹமதியர் தாகத்திற்கு போதாமல், விஜயநகர ராஜ்யம் சின்னபின்னப்பட்ட பின்னர், இந்த பெதவீர நரபாலன் சபரிவாரமாகத் தென்னாட்டிற்குப் புறப்படவேண்டி ஏற்பட்டன. மதுரை ராஜ்யம் அப்பொழுது விஜயநகர ராஜாக்களுடைய பந்துக்களே பரிபாலித்துவந்தனர். அப்பொழுது அங்கு விஸ்வநாத நாயடு ராஜாவாக இருந்தார். இவர் கிறிஸ்து சகம் 1536-1600-வருஷ மத்தியில் இவர் பாலனம் நடந்தன. வீரப்ப நாயடு அதனால் விஸ்வநாத நாயகரிடம் சென்று அவர் கீழிருந்த 72 பாளையக்காரர்களுக்குப் பிரதானியாகச் சேர்ந்தார். ஆயினும் இவருக்கு விஸ்வநாத நாயடு சமான கௌரவத்துடன் நடந்துகொண்டார். இவருக்கு திருநெல்வேலி ஜில்லாவில் குருவிகுளம் ஜாகீராக வழங்கப்பட்டன. அங்கு அதற்கு முன் குரவிதல, யவனன் என்றவர் அதிகாரியாக இருந்தார். அதை அவர் இஷ்டபூர்வமாக சுவாதீனத்திற்குவிட மறுத்தமையால் அங்கேயும் ஒரு சின்ன யுத்தம் நடந்தன. அதற்குள்ளாக வீரப்ப நாயடு ஜெயம் பெற்று விஸ்வநாத நாயகருடைய ஆக்ஞாப் பிரகாரம் குருவிகுளத்தை ஸ்வாதீனம் செய்துகொண்டனர்.

விஸ்வநாத நாயகர் ராஜ்யத்தில் குருவிகுளம் இலையரநேந்தல் முக்கிய பட்டணமாக இருந்தன. இந்த விஷயம் டெயிலர் துரை எழுதி வைத்த மான்யுவலில் இருக்கின்றன.

பெம்மசானிவார் அங்கு பாளையக்காரர்களாயிருந்து மதுரை திருச்சினாப்பள்ளி ராஜாக்கள் அநேகமாக உதவி புரிந்து வந்தனர். திருச்சினாப்பள்ளி ராஜ்யத்திற்கு கேரள ராஷ்டரம் சுவாதீனமாவதற்குள் இவர்களுடைய ஒத்தாசை அவசியமாக இருந்தன.

மதுரை, திருச்சினாப்பள்ளி ராஜ்யங்கள் பின்னர் நீண்ட காலம் நிற்கவில்லை. அவை அன்னியர் வசமாயிற்று. கிரமமாக இந்த ராஜ்யங்கள் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் வசம் அடைய நேர்ந்தன. அப்பொழுது பெம்மசானிவார் ஜாகீர், ஜமீன்தாரியாக மாறிற்று. இந்த பெம்மசானிவார் வம்சத்தைக் குறித்து, மதுரை, திருச்சினாப்பள்ளி ராஜாவினுடைய மந்திரியாகிய விஜயமீனாக்ஷிநாயடு ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்குக் கொடுத்த லிகிதபூர்வ கடிதத்தில் கூறப்படுவது என்னவென்றால், ராயர் அரசாட்சி காலத்தில் பெம்மசானி வம்ச பூர்விகர்கள் கண்டிகோட்டை பரிபாலகராக இருந்தனர். அந்த ஸ்தலம் க்ஷீணமடைந்த பின்னர் அவர்கள் தென்னாட்டிற்கு வந்து மதுரை, திருச்சினாப்பள்ளி ராஜாவாகிய விஸ்வநாத நாயடு ஆதரவால் குருவிகுளம் ஜாகீரைப் பெற்று வாழ்ந்துவந்தனர். அதுமுதல் விஸ்வநாத நாயடு ஆள்கையிலிருந்த ராஜ்யத்தில் குருவிகுள பாலகராகிய பெம்மசானிவாரைத் தவிர, மற்றய பாளையக்காரர்கள் எல்லோரும் ராஜதரிசனத்திற்குப் போகும்பொழுது, தங்கத்தினாலாவது, வெள்ளியினாலாவது செய்யப்பட்ட புஷ்பங்கள், ஒரு பட்டு பீதாம்பரம் முதலான வஸ்துக்களை ராஜசந்நிதியில் சமர்ப்பித்து, ராஜாவினுடைய பாதங்களைத் தொட்டு சேவித்து எழுந்து அஞ்சலி அஸ்தராய் நிற்கையில் ராஜா அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து உபசரிப்பது வழக்கம், ஆசாரமும் ஆகும்.

இந்த பெம்மசானி நாயடு ஏதாவதொரு நாளைக்கு ராஜதரிசனம் செய்யவந்தனர் என்று அறிந்தவுடனே விஸ்வநாத நாயடு எதிர் சென்று கைகுவித்துச் சேவித்து, சமாசனம் கொடுத்து கௌரவிப்பதும் உண்டு. இந்த அபூர்வ கௌரவமே பெம்மசானிவாரின் மகத்தம் காட்டப்படுகின்றன.

இனி கண்டிகோட்டை விஷயத்தைப்பற்றி ஆராய்வோம். கண்டிகோட்டைக்கு பெம்மசானி சினதிம்ம பூபாலரே ஆவார். கிறிஸ்து சகம் 1616-72-ஞ மத்தியில் பரிபாலித்து வந்த கோல்கொண்ட சுல்தான் அப்துல்லா என்றவர் தீவிரமாக முற்றுகையிட்டும் கடைசி வரையிலும் சுதந்திரத்திஞலேயே கிறிஸ்து சகம் 1652-வருஷம் ஆகஸ்டு-மாதம் 25-ந்தேதியில் பூர்ணமாக பெம்மசானிவாரிடமிருந்து ஸ்வாதீனம் பெற்றுக்கொண்டதாக (தீவ்நாட்) பரிசோதகருடைய அபிப்பிராயம். கிருஷ்ணு பிரதேசம் வரையிலும் வெங்கடபதிராயர் ராஜ்யமாக இருந்ததென்றும் கூறியுள்ளோம். கிறிஸ்து சகம் 1643-வருஷத்தில் 3-வது ஸ்ரீரங்கராயர் காலத்தில் கோல்கொண்ட சுல்தான் உதயகிரி பிராந்தியத்திற்கு யுத்த சன்னத்தநாக வந்த பொழுது ஸ்ரீரங்கராயர் எதிர்த்து அவர்களைத் துரத்திவிட்டனர். கிறிஸ்து சகம் 1649-வருஷ காலத்தில் ராயருடைய ராஜ்யம் சில பாகங்களை ஆக்ரமிக்கப்படவே ஸ்ரீரங்கராயர் ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு ராஜதானியை மாற்றிக்கொண்டதாகக் காணப்படுகின்றன. ஆயினும் கிறிஸ்து சகம் 1659-வருஷம் ராயர் பெனுகொண்ட பிரதேசத்தை ஜெயித்துப் பெற்றுக் கொண்டதாகவும், இந்த 3-வது ஸ்ரீரங்கராயர் அந்த்ய காலத்திற்கு உள்ளாகவே கண்டிகோட்டை மஹமதியர் வசமாகிவிட்டதென்றும், இந்த மாதிரி கண்டிகோட்டை ராஜ்யம் தம்மவார் கையிலிருந்து நழுவி விட்டன.

278) யேர்லகட்டவார், தேவாகோட்ட சமஸ்தானம், யேர்லகட்ட குர்வாராயுண்டு அல்லது குர்விந்டு. இவர்களுடைய சரித்திரங்கள் 15-வது சகாப்தம் வரையிலும் தெரியவில்லை. இவர்கள் ரேசர்ல கோத்ரஜாகிகள். தள்ளி கோட்டை யுத்தத்திற்குப் பின்னர் கொண்டவீடு சீமை கோல்கொண்ட நவாப் குதுப்ஷா வம்சாவளியினருகிய இப்ராஹீம் குதுப்ஷா பாலனத்திற்கு வந்ததாக முன்னமேயே தெரிந்துகொண்டனம். அவர் தன் கீழாக அநேக தேசாதிபதிகளை, ஜமீன்தாரர்களாக மாற்றியதாக காணப் படுகின்றன. இவர் கிறிஸ்து சகம் 1592-வருஷம் வரையிலும் பரிபாலித்து வந்ததாக அவருடைய சேனதிபதியாகிய

அமீன் முல்க்கு எழுதிவைத்த அமீஞ பாதுசா சாசனத்தில் காணப்படுகின்றன.

கிறிஸ்து சகம் 1576-வருஷ காலத்தில் எர்லகட்ட வம்சத்தில் மிக்க பிரசித்திபெற்ற எர்லகட்ட குர்வாராயுண்டு என்ற குர்விநீடு, தேவரகோட்ட சமஸ்த்தான பாலனங்களை சம்பாதித்ததாக கிருஷ்ண ஜில்லா மான்யுவலில் எழுதப் பட்டுள்ளன. அவர் இந்தப் பிராந்தியங்களில் குதுஷ்பா விடத்திலேயே ஜமீன்தாரராக இருந்தார்.

குர்வாராயுண்டு சமஸ்தான பாலனம் கிறிஸ்து சகம் 1607-வருஷம் வரையிலும் நடந்து வந்தன. இவருடைய பரிபாலன விசேஷம் தெரியப்படவில்லை. இவர் கிறிஸ்து சகம் 1627-வருஷம் வரை பரிபாலித்து வந்ததாக அபிப்பிராயப் படுகின்றனர். இவருக்குத் திருமலநீடு, கங்கிநீடு, கஞ்சிநீடு என்ற 3 புத்திரர்கள் பிறந்தனர். குர்வாரர்யர்க்குப் பின்னர் இவர் மூத்த குமாரன் திருமலநீடு ராஜ்யத்திற்கு வந்து கிறிஸ்து சகம் 1665-வருஷம் வரை 57 வருஷம் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். அப்பொழுதிருந்த கோல்கொண்ட நவாப் அப்துல் குதுப்ஷாவிடம் நேசத்திற்கு அநேக துன்பங்கள் நேர்ந்ததைச் சமாளித்து வந்ததாகவும் கிருஷ்ண ஜில்லா மான்யுவல் கூறுகின்றன. இந்த வம்சத்தினர் சரித்திரத்தை பின்னர் மூன்றாவது பாகத்தில் எழுதப்படும்.

279) நல்லாகூரவய்ய, இவர் சாலிவாகன சகம் 1539-வருஷ காலத்தவராவார். இவர் வேலூர் பக்கமுள்ள பாவாஜிகொண்ட என்ற பர்வதத்தின் மேலுள்ள தேவாலயங்களுக்கு சில மான்யங்களைக்கொடுத்து சாசனங்கள் எழுதி வைத்துள்ளார். அந்த சாசனங்களில் சிதிலமேற்பட்டுள்ளதால், அவர் எந்தக்காரியங்களைச் செய்தனரோ அதைக் கண்டுகொள்ள முடியவில்லை. இந்த சாசனங்கள் பிங்கள-ஸூ (சாலிவாகன சகம் 1539-ஸூ) எழுதப்பட்டவை. இவர் மிக்க பிரசித்தி பெற்றவரென்று புகழ்ந்துள்ளனர்.

280) உத்தண்ட நாயுடு, இவர் பெம்மசானி ராமலிங்க நாயடு பந்துக்களில் ஒருவராக மிக்க பிரசித்தி பெற்றவர்.

அதனால் 16-வது சகாப்தத்திற்குட்பட்டவராவார் என்றும் ராமலிங்கநரபாலன் தாடிபர்த்தியில் கட்டிய கோட்டையில் கொஞ்சகாலமிருந்து பின்னர் பெததிம்மா நாயடு கண்டி கோட்டைக்கு அதிபதியாகிய காலம், தாடிபர்த்தி கோட்டையில் இந்த உத்தண்ட நாயடு அதிகாரியாக இருந்து பிரசித்தி பெற்றதாக தாடிபர்த்தி கையெழுத்துப் பிரதிகளில் எழுதப் பட்டுள்ளன.

281) எனுகுல சின்ன நாயுடு. இவர் பெம்மசானி பெத திம்மநாயனி பந்துக்களில் ஒருவராவார். அதனால் கமார் கிறிஸ்து சகம் 1530-ஆவ் பிராந்தியராவார். இவர் தாடி-பர்த்திக்கு 2 குரோஸ் தூரத்தில் காண்ட்லபாடு என்ற கிராமத்தைக் கட்டுவித்தும், அங்கு பக்கசன்ன ராயனிஸ்-வாமி தேவாலயமும் திம்ம நாயடு தந்தையின் பேரால் கட்டியதாகவும் காணப்படுகின்றன. சல்லாவார் என்ற கம்மவார் விவசாயம் செய்த இடத்தில் இவர் ஒரு சிற்றூரைக் கட்டியதாகவும், அதற்கு சல்லாவாரிபல்லெ யென்று பெயர் ஏற்பட்டு பிரசித்தி அடைந்ததாகவும் காணப்படுகின்றன.

282) சாயபநேனி வெங்கடாத்ரி நாயனிங்காரு. இவர் சாலிவாகன சகம் 1291-வருஷ காலத்தவர். இவருக்கு பொதிலி தாலூக்கா குர்லமடுகு கிராமத்தில் வாசமாயிருந்தார். இவர் சில பூமிகளைக் கொருமாமிள்ளா குபதிஸ்வா சாஸ்திரிக்குத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். இந்த வம்சத்தினர் தாபாடி சீமையைப் பரிபாலித்து வந்தனர் என்று சரித்திரங்களில் காணப்படுகின்றன.

283) மிக்கிலிநேனி நலசன்ன நாயுடு, பெம்மசானிவார் பந்துக்களில் ஒருவராகிய இவர் 16-வது சகாப்த காலத்தில் தாடிபர்த்தியில் பிரசித்தி பெற்றுவந்தனர். தாடிபர்த்திக்கு பக்கத்தில் இவர் ஒரு கிராமத்தைக்கட்டி, அதன் பக்கமாகவே கீழ் பாகத்தில் இவருடைய சகோதரி ஆகிய சானம்ம, ஒரு குளத்தை வெட்டி வைத்தார், அங்கு சணல் விஸ்தாரமாக வளர்ந்து வருவதினால், அந்த கிராமத்திற்கு ஜம்புலபாடு என்று பெயர் ஏற்பட்டது. (ஜம்பு--சணல். தெலுங்கு-தமிழ்)

284) ஜாபல்லி ராமாநாயனிங்காரு, இவர் சாலிவாகன சகம் 1448-வருஷ காலத்தவராவார். மிக்க வீர தீர பராக்ரமசாலி என்று பெயர் பெற்றவர். இவர் காவலி தாலூக்காவில் சில பாகங்களில் அதிகாரியாக இருந்து பணியாற்றி வந்தார். இந்த அதிகாரம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஏற்பட்டதே. இவருக்கு கரவால பைரவ, கண்டரகண்ட, கண்டபைரவகண்ட, நிவிதூரகாரயென்ற பிருதுகள் இருந்ததாக இவர் எழுதி வைத்த தங்கேள்ள கிராம சாசனத்தில் தெரிகின்றன. இந்த ஜாபல்லிவார் கம்பவாரில், வெலமவாரில் இருக்கின்றனர். இவர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவரென்று தெரியவில்லை.

285) கிலாரி தத்தலய்ய, இவர் சாலிவாகன சகம் 1466-வருஷம் காலவாசி. தாய் தந்தையர் பெயர், மங்கம்ம, கொண்டம நாயுடு. இவர் காவலி தாலூக்கா காம்புலகூண்ட்ட, வக்கெலகுண்ட்ட முதலான பிரதேசங்களுக்கு அதிகாரியாக இருந்தார். இவர் அங்குள்ள கோவிலுக்கு, ராவுலகூண்ட்ட பிரதேசத்தில் 4 தினைக்காடுகளையும், வக்கெலகுண்ட்ட பிரதேசத்தில் 5 தினைக்காடுகளையும் தானமாகக் கொடுத்துச் சாசனம் எழுதிவைத்துள்ளார்.

286) சூர்யதேவரவார், இவர் கிறிஸ்து சகம் 1500-வருஷ காலத்தில் புலிவர்ந சீமையில் 50 கிராமங்களுக்கு அதிபதியாக இருந்து ஆண்டுவந்ததாகக் காணப்படுகின்றன. இது இப்போதைய ரேபல்லி தாலூக்காவில் உள்ளன. இவர் தெலுங்கு சோழ வம்சத்தினரென்று தெரிவித்துள்ளோம். இந்த வம்சத்தினருக்கு உறையூர்புரவிஹார. உறையூர் ஸ்ரீ பாதபத்மாராதக, புலியதலாடராய, கண்டபேருண்ட, புலியமார்க்கோலுகண்ட, கண்டரகண்ட, கடகஹன்னிப் பறகண்ட, சப்தநிவிதூரகார, கதனபிரசங்க முதலான பிருதுகளைப் பெற்றதாக சாட்டு பத்தியங்களில் கூறப்படுகின்றன. இவருக்கு வெள்ளித்தட்டில் தாம்பூலமும், பச்சைப் பட்டாடையும், கனகதண்டமும், அநுமக்கொடியும் முதலான கௌரவப்பட்டங்கள் பெற்றதாகவும், இவர்களுக்கு விப்பர்ல கோத்ரமும், புலிவர்ந சீமைப்பாலகத்வ

மும் விருத்தி அடைந்து வந்தன. இதை சமுது என்று லோகல் ரிகார்டில் கூறப்பட்டுள்ளன.

287) சூரியதேவர திம்மநரபாலன். இவர் புலிவர்த்தி சிமையைப் பரிபாலித்து, அங்கு ராசூறு, பெடேறு கோட்டைகளைக் கட்டியதாகவும் சாடுபத்யங்களில் கூறப்படுகின்றன. இவர் குமாரராகிய முசலய்ய நாயகுடு, கிருஷ்ணதேவராயர் கஜபதிகளுடன் போராடிய காலத்தில் ஆரட்லகோட்டையில் நடந்த யுத்தங்களிலும் கலந்துகொண்டு போராடியதாகவும் சாடுபத்யங்களில் கூறுவதால் சுமார் கிறிஸ்து சகம் 1490-வருஷ காலத்தவரென்று கூறலாம். இந்த வம்சத்தினர் சிலர் மஹாவீரபராக்ரமத்துடன் அத்தலூர் பிரதேசத்தில் நடந்த யுத்தத்தில் கஜபதிகளுடைய யானைகளுடன் எதிர்த்து போராடியதாகவும், இந்தப் போர் 7 நாள் நடந்ததாகவும், அதில் ஜெயம் பெற்றதினால் மேலே சொல்லப்பட்ட மரியாதைகள், கிருஷ்ணதேவராயர் கொடுத்ததாகவும் தெரியப்படுகின்றன. இவர்கள் பிருதுகளில் விசாகப்பட்டண கஜ-குண்டுகண்டர என்றிருப்பதால், இவர்கள் கஜபதிகளுடன் போராடுவதற்காக அந்தப் பிராந்தியங்களுக்குப் போனதாக நிர்ணயிக்கப்படுகின்றன. திம்மநரபாலனுங்கூட அவ் யுத்தங்களில் கலந்துகொண்டிருக்கலாமென்றும் தெரியவருகின்றன. இவருக்கு யெர்ரநரபாலன், முசலய்ய நாயகுண்டு என்ற இருவர் குமாரர்களிருந்தனர். சிலர் எர்ரபூபாலன் சகோதரனென்று கூறுவர். திம்மநரபாலன் வீரநரசிம்ஹதேவராயர் ராஜப்பிரதிநிதியாவார். இவரும் மேலே கூறப்பட்ட பிருதுகளைத் தரித்ததாகவும் காணப்படுகின்றன.

288) சூரியதேவர யெர்ரநரபாலன். திம்ம பூபதிக்குப் பின்னர் புலிவர்த்தி சிமைக்கு இவரே பாலநாக வந்து மிக்க வீரப்பிரதாபராக விளங்கினார். இவர் திம்மநரபாலன் தரித்திருந்த பிருதுகளையெல்லாம் பெற்று தரித்துக் கொண்டார். இந்த வம்சத்தினருக்கு ஏற்பட்ட பிருதுகளில் மத்தியில், பெக்கண்ட்றுநாயகுலநக்செத்துரகண்ட, மஹிமதோகோடிகரவால பைரவ, துஷ்டகோபகோகுலமாரிமர்தன, தர்பிரராதிதூமகேதி, ஹிதஹேறதி முதலான பிருதுகளும் உண்டு என்றும் கூறப்பட்டுள்ளன.

289) சூர்யதேவர முசலய்ய நாயுடு. இவர் சூரிய தேவர திம்மநரபாலனுடைய குமாரன். வீரநரபாலனுக்குப் பின்னர் புலிவர்தி சீமைக்கு அதிபதியாயினர். இவர் ஆறட்ல கோட்டையின் பக்கம் நடந்த யுத்தத்தில் பிரவேசித்து சத்துருக்களை வென்று ஜெயம் பெற்றதாக சாடு பத்யங்களில் கூறப்படுகின்றன. இந்த திம்ம பூபாலனும், வீரநரபதி விறலித்த பிருதுகளைத் தரித்துக்கொண்டனர். இவர் கிருஷ்ணதேவராயர் ராஜப்பிரதிநிதியாகக் காணப்படு கின்றனர். அதனால் இவர் கிறிஸ்து சகம் 1520-வருஷ காலத்தவரென்று கருதலாம். இவர் ஆறட்ல கோட்டைப் பக்கம் நடத்திய யுத்தம், கஜபதிகளுக்கும், கிருஷ்ணதேவ ராயருக்கும் ஏற்பட்டதேயாகும். அல்லசானி பெத்தனமஹா கவி எழுதிய பத்யத்திலுமுள்ளன. இந்த வம்சாவழியினர் விருத்தாந்தங்கள் பின்னர் தெரியப்படவில்லை. ஆயினும் லோகல் ரிகார்ட்டு புடம் 41, பக்கம் 471-ல் இந்த வம்சத்தினராகிய நரஸிம்ஹநரபாலன் (சிவரிவாடு) புலிவர்ந பிர-தேசத்தில் 50 கிராமங்களுக்கு அதிகாரியாக இருந்து பரிபாலித்து வந்ததாக எழுதப்பட்டுள்ளன. (சௌதரி) பட்டம் பெற்றதாகவும் காண்கின்றன. இந்தப் பட்டங்கள் மஹமதியர் காலத்தில் ஏற்பட்டதாக சுமார் கிறிஸ்து சகம் 1640-வருஷத்திலிருந்து வழக்கத்திலுள்ளன. இவரும் அக் காலத்தவரே ஆவார். இவருடைய பரிபாலனத்தைக் குறித்து 3-வது பாகத்தில் எழுதப்படும்.

கிறிஸ்து சகம் 1690-வருஷத்தில் இந்த புலிவர்நசீமை ராசூர் கோட்டையானது வெலம பிரபுக்களுக்குச் சேர்ந்து விட்டதாகக் காணப்படுகின்றன. இந்த ராசூர் கோட்டை யில் சூர்ய தேவராவார் புருப் ரிகார்டு ஒன்று காணப்பட்ட தாகவும், இதை எழுதி வைத்தது பழைய ஜமீன்தார் என்று சொல்லப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1690-ல் அவுரங்க ஜீப் டில்லி சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த காலம் ஹைதரா-பாத்தில் அவருடைய சேனாதிபதி ரோஹல்லாகான், பசரத் கான் இவர்கள் மூர்த்தஜானகர் என்ற கொண்டவீடுப் பிரதேசத்தை, வெலமப் பிரபுவாகிய மாணிக்யாராவ், ராமா ராவ் இவர்கள் வசம் ஒப்படைத்ததாகவும், ஒரு பர்மா

நாயுண்டு கிருஷ்ணு ஜில்லா மான்யுவலில் எழுதப்பட்டுள்ளன அதனுல் சூரியதேவரவார் பாலனம் அந்தப் புலிவர்ரு சீமையில் கிறிஸ்து சகம் 1640-வருஷம் 90 வருடங்களுக்கு மத்தியில் நடந்திருக்கலாம். ஆயினும் கிருஷ்ணு ஜில்லா மான்யு-வலில் கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்து மாணிக்யாராவ் வம்சத்தினரே பரிபாலித்து வந்தனர் என்று சொல்லிக் கொண்டதாக எழுதப்பட்டுள்ளன. இவ்விஷயங்கள் மேலே கூறியுள்ளதற்கு பின்னமாக இருக்கின்றமையால் இதை நிர்ணயிக்க இயலாமலிருக்கின்றன.

290) மேதரமெட்டவார், மேதரமெட்ட நரபூபதி, மேதரமெட்டவார் தம்மலூறு கோத்ரவாசிகளாவார். இவர்களுடைய சரித்திரம் 15-வது சகாப்தம் வரை எங்கும் வெளிவரவில்லை. இந்த வம்சத்தில் கிறிஸ்து சகம் 1520-வருஷ காலத்தில் மேதரமெட்ட நரசபூபதி என்றவர் பூமிபாலகனுக இருந்ததாகக் காணப்படுகின்றன. இவர் புவுநூர்புறவரா-தீஸ்வரன் என்று பெயர் பெற்றனர். இவர் தந்தையின் பெயர் அய்யலராஜுவரபு. ஔபலராஜு, இவர் கஜபதி ராஜாவுக்கு (பிரதாபருத்ர கஜபதி யென்று சொல்லலாம்) சஹாயகர்த்தாவாக இருந்ததாகவும் மஹம்மதீய சுல்தானின் கர்வத்தை அடக்கியதாகவும் சில சாடு பத்யங்களில் சொல்லப்படுகின்றன. இது தவிர இவருக்கு ஏற்பட்ட பிருதுகளில் "கஜபதி மன்னீடு, ராசூரிதுர்க்காருண்டு" என்றவைகளும் உண்டு. அதனுல் கிறிஸ்து சகம் 1520-வருஷ காலம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் நடந்த ராயசூர்ய யுத்தத்தில் இவர் பிரவேசித்துள்ளனரோயென்று தோன்றுகின்றன. அப்போது கஜபதி, கிருஷ்ணதேவராயருக்குச் சகாயமாக இருந்தாராயென்று அனுமானிக்க வேண்டியிருக்கிறது. இவருக்கு கொதமநாயகுலமகுடு, கோடலகொங்க, சுருமாயி, கஜபதிமன்னீடு, ராஜிவேஸ்யாபுஜங்குடு, ராசூரி துர்க்கா பஹாருடு கேளாதிராயடு, சக்கோலு ராயாங்குடு முதலான பிருதுகள் பெற்றவரென்று சாடுபத்யங்களில் கூறப்படுகின்றன. இவருக்கு ரமணபூபாலுண்டு என்ற குமாரன் இருந்தான். இவருடைய வீரபராக்ரமத்தைப் பற்றியும்-யுத்த நிபுண சாதுர்யத்தைப் பற்றியும் கவிநாதர்கள் பிரபலமாக வர்ணித்துள்ளனர்.

291) மேதரமெட்ல ரமணபூபதி, இவர் நரசபூபால ருடைய குமாரன். இவரும் தன் தந்தை தரித்திருந்த பிருது களைத் தரித்துக்கொண்டனர். இவரும் முன் நடந்த யுத்தங் களில் தந்தையுடன் கூடிப் போர்க்களங்களில் தன் வீரபராக் ரமத்தைக்காட்டி நல்ல கீர்த்தியும் பெற்றுள்ளனர். இவர் பேரால் சில சாடுபத்யங்கள் எழுதப்பட்டுள்ளன. அதை விஸ்த்தர பயத்தால் இங்கு குறிப்பிடவில்லை.

292) மேதரமெட்ல கொண்டபப்ரபுவு, இவர் மேதர மெட்ல நரபாலருடைய குமாரர். இவருக்கும் மேலே சொல்லப்பட்டுள்ள நரசபூபதிக்கும், ரமண பூபதிக்கும் உள்ள சம்மந்தங்கள் காணப்படவில்லை. இவர் கஜபதி ராஜனிடத் தில் சேனதிபதியாக இருந்ததாகவும், அதனல் இவர் 16-வது சகாப்த காலத்தவரென்றே கூறலாம். இவருக்கு சுருமாயி, கேளாதிராய, காங்கேய சௌர்ய என்ற பிருதுகள் உண்டு, இவர் பேரால் பத்யங்களும் எழுதப்பட்டுள்ளன. இதனல் இவர் அநேக யுத்தங்களில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற தாகப் புகழப்பட்டுள்ளன. இவருக்குப்பின்னர் இவர் களுடைய சரித்திரங்கள் காணப்படவில்லை.

293) மேதரமெட்ல சிங்கி நாயுடு, இவர் சாலிவாகன சகம் 1440-வருஷ காலத்தவராவார். இவர் பொதில தாலூக்கா சிலமகூறில் கிராமவாசியாக இருந்தவர். விவசாயத்தைச் செய்து வந்தனர். அந்தக்காலத்தில் அவர் கிராமத்தில் கிராமாதிகாரியாகி, கிராம காரியங்களை கவனித்து வந்தார். இவர் அந்த ஸ்தலத்திலுள்ள கைலாச-நாத பீம சமஸ்தானதிகளுக்கு 10 குழி நஞ்சை பூமியைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தார். இது அந்தக் காலத்தினுடைய வழக்கத்தைக் காட்டுகின்றன. இந்த மேதரமெட்டவாருக்கு தம்மலூர் கோத்ரம் இந்த வம்சத்தி னருடைய சரித்திர(3)ம் பாகத்தில் எழுதப்படும்.

294) புரமுதிம்மாநேடு, கிறிஸ்து சகம் 1616-வருஷ காலத்திய கம்மவாரில் பிரசித்தி பெற்றவர்களில் ஒருவரா வார். அக்காலத்தில் கொப்புரி ஜக்கராஜுவுக்கும், தஞ்சாவூரில் ராஜாவாக இருந்த ரகுநாத நாயுடுவுக்கும்

நடந்த கோட்டூர் யுத்தத்தில் இவர் பிரவேசித்துப் போராடிய பொழுது இந்த திம்மாசேடு, அக்காலனுடையமாகவிருந்து கொண்டிருந்ததாக ராஜநாதாப்யுதய நாடகத்தில் கூறப்படுகின்றன. "திருவடிதிநாயக்கி, திக்கெல்ல செட்டி, புறமு-திம்மாசேடு, புறமண்டலவெலங்கதுபொர்ரா, செட்டிவோனை, தலவத்தி சொக்கெல்ல, தலுப்புக்கொம்மாரு"

295) குருநாடலி திம்மருசைய்யா. இவர் சாலிவாகன சகம் 1433-வருஷ காலத்தியவராவார். கிருஷ்ண தேவ ராயர் காலத்திய சேனாதிபதிகளில் ஒருவராகிய இவர் அம்மலப்போரு சீமையில் கொக்கெல்லகோட்டை, சடக-சாலுக்கப்பட்டு, கோனுகுன்ட்ட கிராமங்களை இவர் ஆட்சியில் பரிபாலித்து வந்ததாக இவர் எழுதிவைத்த சாசனத்தில் காணப்படுகின்றன. சாலிவாகன சகம் 1433-வருஷம் இவர் கோனுகுண்ட்ட கிராமத்தில் அமரேஸ்வரஸ்வாமிக்கு சில பூமிகளைக் கொடுத்துச் சாசனம் எழுதிவைத்துள்ளார். No. I O. 46.

296) அப்பிசெட்டி வெங்கன்ன. இவர் சாலிவாகன சகம் 1470-வருஷ காலத்தவராவார். இவர் தகப்பனார் ராமராயடு. இவர் மஹாமண்டலேஸ்வர ராமராஜா, திம்மைய தேவராஜா, காரியகர்த்தாக்களில் ஒருவராகப் பிரசித்தி பெற்றவர். கூடூர் தாலூக்கா கிருஷ்ணபட்டணத்தில் இவருடைய சாசனம் ஒன்று சாலிவாகன சகம் 1470-வருஷத்தில் காணப்படுகின்றன.

297) கூறபாடிவார், கூறபாடி அய்யப்ப நாயடு. இவர் கிருஷ்ணதேவராயர் காலத்திய பாளையக்காரர்களில் ஒருவராகியவர், மிக்க பிரசித்தி பெற்றவர். இவர் எந்தப் பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தாரோ அது தெரியப்படவில்லை. ஆயினும் இவர் விஜயநகரத்திற்குத் தன் பரிவாரத்துடன் வந்தபொழுது இவர் நிவாசம் செய்வதற்காக வேண்டி 310 குழி பூமியை மானியமாக அனுபவித்து வந்ததாகவும் தெரியவருகின்றன. அதனால் இவர் கிறிஸ்து சகம் 1520-இல் காலத்தவரென்று தீர்மானிக்கலாம். கூறபாடிவார் சம்ப

வாசிஷ வைத்துட்ட கோத்ர, மைபுராண கோத்ரிகள் இப்பொழுமிருக்கின்றனர்.

298) கூறுபாடி கோபீந்து, இவர் பைநாடு தாலூக்கா, தூர்கி கிராமவாசியானவர். இவர் சாலிவாகன சகம் 1475-ல் கிறிஸ்து சகம் 1553-ல் காலத்திலவர். இவர் தந்தையின் பெயர் மாதய்ய. இவர் விஷ்ணு பக்தியில் மிக்க பிரசித்தி பெற்றவர். இவருடைய பூர்வீகர்கள் பெதகூறு பாடியிலிருந்தனர். காகதி கணபதிதேவ சக்கரவர்த்தி காலத்தில் தூர்கி கிராமத்தில் வங்கேஸ்வரஸ்வாமி தேவாலயத்தை வாயிபண்டிதர் என்றவர் கட்டிவைத்தார். ரமாரமி 300 வருஷத்திற்கு அந்த தேவாலய ஸ்தம்ப கற்கள் உடைந்து போனதால், இந்த தர்மாத்தாவாகியவர் சாலி-வாகன சகம் 1475-வருஷத்திற்குச் சரியான பிரமாதீச-வருஷத்தில் புது கல் தூண்களைத் தயார் செய்து பிரதிஷ்டை செய்வித்துப் பிரசித்தி பெற்றனர். இவர் எழுதிவைத்த சாசனங்கள் பண்டித சிரோமணிகளியற்றிய பத்யங்களில் காணலாம்.

299) அடபாவார், அடபாகூனய்ய நரபாலன். அட-பாவார் சாளுக்ய வம்சத்திலிருந்து ஏற்பட்டிருக்கலாமென்று முன்னமேயே கூறியிருக்கின்றோம். இவர்களுடைய பந்துக்களாகிய மச்சவார் கூட அவர்களைச் சேர்ந்தவர் ஆவார்கள். இவர்கள் புதுநாடு கோத்ர வாசிகள். இவர்களுடைய விருத்தாந்தம் 15-வது சதாப்தம் வரையிலும் தெரியவில்லை. 16-வது சதாப்தத்தில் இந்த வம்சத்திலிருந்து கூனய்யநரபாலன் என்றவர் மிக்க பிரசித்தியுடன் கஜபதி ராஜாவுக்கு வலதுபுறம் போல அவருடனிருந்து, கொண்டபல்லிவீடு பிரதேசத்தைப் பரிபாலித்து வந்ததாக, அவருக்கு 5-வது தாத்தா வாகிய அடபநாரபூபதி, பெதபூடி பிருஹன்னல மந்திரியினுல் எழுதிவைத்த 'ஞானசிராகலம்' என்ற பிரபந்தத்தில் காணப்படுகின்றன. இவர்கள் அப்போதைக்கு மற்ற சம்பவரைப் போலவே விஷ்ணு பாதங்களில் ஜெனித்தவரென்று சொல்லி வந்தனர். கொண்டவீடு சீமை ரெட்டிப் பிரபுக்கள் பாலை காலம் சுமார் கிறிஸ்து சகம் 1432-வருஷத்தில் விஜயநகர ராஜ்யாதிபதியாகிய ஹரிஹரராயருக்குச் சிறாத பத்தியில்,

மத்தியில், தேவரகொண்ட, ராசகொண்ட பாலகராகிய வெலம ப்ரபுக்களால் ஆக்ரமிக்கப்பட்ட போதிலும், கிறிஸ்து சகம் 1447-வருஷம் வரை விஜயநகர ஆட்சியின் கீழாகவே இருந்தன. அப்போதைக்கு 2-வது தேவராயர் பரிபாலித்து வந்தனர். அவ்வருஷமே அவர் காலகதி அடைந்த பின்னர் கொஞ்ச காலத்திற்குள் மஹாசூரராகிய கபிலேஸ்வர கஜபதி ஆக்ரமித்துக்கொண்டதாகக் காணப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1460-ஐ காலம் கொண்டவீடு சீமையில் அவருடைய பாலனம் இருந்ததாக சரித்திரக்காரர்கள் நிர்ணயித்தனர். அடபா வேலம்ப்ராபாலன் இக்காலத்தவராகவிருந்து கஜபதி தொடங்கிய தண்ட யாத்திரைகளில் பங்கு கொண்டதாக நிர்ணயிக்கலாம். அதில் ஜெயம் பெற்றதினால் கஜபதி இவருக்கு மேலே சொல்லிய சன்மானங்கள் கொடுத்துள்ளதாக காணப்படுகின்றன. இவருக்கு பெதநிம்மவிபுடு, பினய்ய என்ற இருவர் வீரபராக்ரமசாலிகளாகிய புத்திரர்களிருந்தனர். இவர்களும் கஜபதி ராஜனிடமே பிரதிநிதிகளாகயிருந்தனர் என்று கூறலாம்.

300) அடபா பெதநிம்ம நரபாலனுடைய வம்சம் மேலே சொல்லப்பட்ட நரபாலனுக்கு தசாவதாரம் என்பது போல பத்துபேர் குமாரர்கள் ஜெனித்தனர். ஜேஷ்ட குமாரன் அக்கநரபாலன். பின்னர் மல்லவிபுடு, கூனப்ப, நரசிம்ஹன், திம்மன்ன, தெலுங்குராவு, கிருஷ்மவிடு, வனந்தராவ், கோடசௌரி, சின்னக்கநரபாலன் என்ற சகோதரர்கள் 10 பேர். இவர்களெல்லோரும் ஒற்றுமையுடன் நடந்து கொண்டமையால் அக்கநரபாலன் நல்ல பெயர் பெற்று சர்வமாம்ப என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டு சின்னதிம்ம நரபாலன் என்ற புத்திரனைப் பெற்று வாழ்ந்தனர்.

301) அடபா சினதிம்மபூபதி, இவருடைய பாலன விசேஷங்கள் தெரியப்படவில்லை. இவர் பத்துலபீமநரபதியுடன் பிறந்த அந்நமாம்பையை விவாகம் செய்துகொண்டு அக்கவிபுடு, நரசிம்ஹன் என்ற இரு புத்திரர்களைப் பெற்று, இதில் நரசிம்ஹபூபதி மிக்க தர்மாத்மாவென்றும், பிரதாப சாலியென்றும் சொல்லப்பட்டனர். இவர் மச்சகொண்ட

நரபாலனுடைய புத்திரி திருமலம்ம, பேரம்மாளை விவாகம் செய்துகொண்டு, திருமலம்மாளிடம் ராயநரபாலன், நாரப்ப நரபாலனென்றவர்களையும், பேரம்மாளிடம் அநந்தநரபாலனைப்பெற்றனர். இவர்களில் ஜேஷ்ட குமாரனாகிய ராயநர பாலன் மிக்க பிரசித்தி பெற்று அநேக யுத்தங்களில் பிரவேசித்ததாகவும் காணப்படுகின்றன. இந்த யுத்தங்கள் கிருஷ்ணராயர் மரணுந்த காலத்தில் நடந்திருக்கலாமென்று தோன்றுகின்றன.

302) அடபாநாரநரபாலன், மஹாவீரனுகிய இவர் யுத்தங்களில் கீர்த்தி பெற்றிருக்க, இவர் சகோதரராகிய நாரநரபாலனும் அதில் கலந்துகொண்டு தன்னுடைய வீர பராக்ரமத்தைக் காட்டியுள்ளார். கண்ட்ரராயிநேனி குமார்த்தையாகிய கோனமாம்பாளை விவாகம் செய்துகொண்டு திருமலராயவிபு வென்ற குமாரனைப் பெற்றதாக 'ஜானகீராகவம்' என்ற பத்யத்தில் கூறப்பட்டுள்ளன. இந்த நாரநரபாலன், பண்டித கோஷ்டி விநோதனுகியதால் தன் பேரால் ஒரு கவியைப் பாடுவதற்கு, கிருஷ்ண கவிந்தானை அழைத்து 'ஜானகீராகவம்' என்ற கவியை எழுதச்செய்து பேர் பெற்றனர். இந்த சரித்ரத்தைக் குறித்துக் கவியில் "பகுகல்பனுனல்ப பந்துரசூக்திநுவரசி யிந்செ ஜானகீராகவம்பு" என்று எழுதப்பட்டுள்ளன, இந்த நாரநரபாலனுடைய ஆஸ்தான வைபவத்தைப்பற்றி மிக்க வர்ணிக்கப் பட்டுள்ளன.

303) சிறுமாமிள்ளவாறு, சிறுமாமிள்ள பெத்தநர பாலுடு சிறுமாமிள்ளவாரில் மைபடிநல கோத்ரீகர்கள் 16-வது சகாப்தத்தில் மிக்க பிரசித்தி பெற்றவர்களாகவிருந்தனர் இந்த வம்சத்தினர் வித்யாதநரேந்தரன் என்ற வாசிரெட்டி வெங்கடாத்ரி ப்ரபுவின் பூர்விகர்களாகியவர்கள் ராஜபந்துக்களாக 18-வது சகாப்த காலம் பிரசித்தி பெற்றுள்ளனர். இந்த வம்சத்தில் கிறிஸ்து சகம் 1520-வருஷ காலத்தில் சிறுமாமிள்ள பெத்தன்ன என்றவர் அத்யந்த கீர்த்தி வகித்து வந்தனர். இவர் விஜயநகர சாம்ராஜ்யாதிபதியாகிய கிருஷ்ணதேவராயரிடத்தில் ஒரு சேனாதிபதியாக இருந்து அவரால் சஹராஜ முத்திரைப்பர்ககளைப் பெற்று வந்ததாக

வும், மற்றும் சில பிருதுகளைப் பெற்றனர் என்றும், இந்த வம்சத்தில் பாபய்ய என்றவர் 17-வது சகாப்த காலத்தில் எழுதப்பட்ட 'சகுந்தலா பரிணயம்' என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றன. இவர் மேருதிரிம்மடி திருமலை குமார சிங்காரர்புர சிஷ்யன் என்றும், சங்கிராம விஜய பிருதுகளைப் பெற்றவரென்றும், ராயர் சமஸ்தான காரியங்களில் காரிய கர்த்தாவாக இருந்து கீர்த்தி பெற்றனர் என்று கூறப்படுகின்றன. இவருக்கு திம்மநாபாலனென்ற குமாரன் தோன்றிப் பிரசித்தி பெற்றனர் என்று கூறப்படுகின்றன.

304) சிறுமாமிள்ள திம்மநாபாலன். இவர் சிறுமாமிள்ள பெத்தன்ன சேனாபதியின் புத்திரனாகிய இவருங்கூட ராயர் கொலு கூடத்திலிருந்ததாகக் காணப்படுகின்றன. இவருடைய விரபராக்ரமத்தைக் கிருஷ்ணகவி 'சகுந்தலா பரிணயத்தில்' வர்ணித்துள்ளார். இவருக்கு வெங்கடாத்ரி, ராமய்ய என்ற இரு புத்திரர்கள் பிறந்தனர். அதில் வெங்கடாத்ரி வாசிரெட்டிப்பிரபுவுடன் பிறக்கமாதம்மாளை பரிணயம் செய்து கொண்டு வெங்கடபதியென்ற குமாரனைப் பெற்றனர். இந்த வெங்கடபதியின் பேரப்பிள்ளைகளில் ஒருவராகியவர் 'சகுந்தலா பரிணய' கிரந்தத்தை எழுதச் செய்த சிறுமாமிள்ள பாபய்ய சௌரி. இவர் சரித்திரம் 3-வது பாகத்தில் விவரிக்கப்படும். பாபய்ய சௌரி எழுதி வைக்கச்செய்த கிரந்தத்தில் சிறுமாமிள்ளவார் வம்ச சரித்ர விபரங்களை அவர் காலம் வரையிலும் விபரமாகத் தெரிவித்துள்ளார். இந்த கிரந்தம், பில்லவக சரித்திரமென்று கூட சில இடங்களில் கவிகளின் சரித்திரங்களில் ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலுகாரு எழுதியுள்ளார். இந்த மாதிரி பிரௌட பிரபந்தத்தை எழுதச் செய்த சிறுமாமிள்ளவார் கீர்த்திப் பிரதாபங்கள் சிரம் போல விளங்கி வருகின்றன என்பது பிரசித்தம்.

305) கும்முடுறிவார், கும்முடுறி ராமய்ய தேவமஹாராஜு, இவர் 15-வது சகாப்த காலம் பிரசித்தி பெற்றவராவார். இந்த வம்சத்தினர் இன்று கம்மவாரில் விஜ்ஞூர் என்ற கிராமத்திலிருப்பதாக காணப்படுகின்றன. இந்த வம்சத்தினருக்கு 15-வது சகாப்தகாலம் பினமெருவு

பிரதேசத்தில் அதிகாரிகளாக இருந்துள்ளனர். இந்தப் பிரதேசம் தர்சி தாலூக்காவைச் சேர்ந்தது. இந்த வம்சத்தில் சாலிவாகன சகம் 1349-வருஷ காலத்தில் இருந்த கும்மூடுறி காமய்ய தேவமஹாராஜாவின் குமாரர் ராமய்ய தேவமஹாராஜா தன் அதிகாரத்தில் தொனகொண்ட கலா பரமேஸ்வரிக்கு அந்த கிராமத்தில் உள்ளவர்கள் அநேக தானியங்களை கொடுத்துவருவதற்கு வேண்டிய கட்டளையை ஏற்படுத்தி ஒரு சாசனம் எழுதிவைத்துள்ளார். இவர் விஜய நகர ராஜ்ய பாலகராகிய பிரதாப தேவராயர் ராஜப்பிரதிநிதியானவர். இவர் அந்த சாசனத்தை தேவராயர் புண்யார்த்தமாக எழுதப்பட்டன. இவர் தன் பெயருக்கும், தன் தந்தையின் பெயருக்கும், மஹாராஜதேவ சப்தத்தை வைத்துக்கொண்டனரே ஆயினும், அம்தஜம்பர கண்டாதி பிருதுகளையும் தரித்துக்கொண்டனர். ஆனால் இவர் சர்வாதிகாரியென்றே கூறப்படலாம். இந்த வம்சத்தினர் வழங்கி வந்த தேவ சப்தத்தைக் குறித்து, இவர்கள் சோழர் அல்லது சாளுக்ய சாகையிற் சேர்ந்தவரென்று யூகிக்கலாம்.

306) தாசரிவாரு, தாசரிதிம்மாநேடு, கம்மவாரில் தாசரிவார் 16-வது சகாப்த காலமுதல் பிரசித்தியாக இருந்ததற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவர்களுக்கு வல்லூட்ல, ரேசர்ல, பமிடிபாள்ள, மாறூட்ல என்ற நான்கு கோத்ரங்கள் அமலிலிருந்து வந்தன. இதில் மாறூட்ல கோத்ரவாசிகளாகிய தாசரிவார் நரசராவ்பேட்டை தாலூக்கா புருஷோத்தம பட்டணம் பிராந்தியங்களில் வாசஞ்செய்துவந்தனர். இவருக்கு தாசரிநாரபநேடு என்றவர் மூலபுருஷராவார். இவருக்கு திம்மாநேடென்ற குமாரன் தோன்றி கிறிஸ்து சகம் 1579-வருஷ காலத்தில் வீரசிகாமணியாகப் பெயர் பெற்றனர். இவர் வெலிகோடி கஸ்தூரி ரங்கப்ப நாயுடுவுக்குப் பிரதிநிதியாக இருந்து அவருடன் நடத்திய யுத்தத்தில் தோற்றோடியதாக வெலுகோடிவார் வம்சாவழியினின் சரித்திரத்தில் காணப்படுகின்றன.

இந்த யுத்தம் பஹுூச: பத்வேலி தாலூக்கா கோடூர் கிராமத்தின் பக்கம் கிறிஸ்து சகம் 1579-வருஷ காலத்தில் நடந்ததாகக் காணப்படுகின்றன. இதற்குள் மட்ல திம்ம ராஜு முதலானவர்கள் தங்கள் சேனைகளுடன், மற்றைய அதிகாரிகளுடன் கலந்துகொண்டு எதிர்த்தும், கஸ்தூரி ரங்கப்ப நாயடுவுடன் கோரயுத்தம் நடத்திப் போராடினார்கள். இந்த யுத்தம் தல்லிகோட்டை யுத்தாந்தர காலத்தில் விஜயநகர பாலகராகிய ஸ்ரீரங்கநாயடு பெனுகொண்டாவுக்குச் சென்று அங்கிருந்துகொண்டு இராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தார். அக்காலத்தில் கொண்டவீடிப் பிரதேசத்திலும் யுத்தங்கள் நடந்துவந்தன. கொண்டவீடுவினு கொண்டமன்னீலப் பிராந்தியங்களை ஜெயித்ததாக கூறப்பட்டுள்ளன. இவருக்கு சாகிநேடு என்ற குமாரன் தோன்றியதாகவும், அதில் சூரம்ம என்ற பார்யையினிடம் கங்கிநீடு, நாகன்னதிம்மன், எர்ரன்ன என்ற நான்கு பேர் பிறந்ததாகவும், அதில் கங்கிநீடுவுக்கு அக்கம்ம என்ற மனைவியினிடம் நாகிநேடு, சினகங்கைய்ய என்ற குமாரர் பிறந்ததாகவும், அதில் சினகங்கைய்யா, வட்டெபூடி பெத்தய்ய என்ற கவீஸ்வரனுல் எழுதி வைத்த மாகமாஹாத்மயம் என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றன.

307) தாசரி சினகங்கைய்ய, இவர் புருஷோத்தம பட்டண பாலகனுயிருந்த பிரசித்தி புருஷராவார். இவர் கவி போஷகராயிருந்து வட்டெபூடி பெத்தய்ய என்றவரை 'மாகமாஹாத்மயம்' என்ற கிரந்தத்தை எழுதும்படி நியமித்து அவருக்குச் சன்மானங்கள் கொடுத்துக் கீர்த்தி பெற்றனர். இவர் கிறிஸ்து சகம் 1660-வருஷ காலத்தவரென்றும், கஜபதிகள் பிரதிநிதியென்றும், ஆந்தர கவி சரித்திரங்களில் ஸ்ரீ கந்துகூரி வீரேஸ்வரலிங்கம் பந்துலுகார் நிர்ணயித்துள்ளார். இவர் அரிச்சந்த்ர கஜபதி சேனுதிபதிகளில் ஒருவராகிய முகுந்த தேவருடைய பிரதிநிதியாக காணப்படுகின்றனர் மகாமஹாத்மியம் இரண்டாவதுபத்யத்தில் வர்ணிக்கப் பட்டுள்ளன இவர் அரிச்சந்ர நரபாலனிடம் ரத்னும்பரங்களை பரிசாகப் பெற்றதாகப் பத்யங்களில் கூறப்படுகின்றன. சாலிவாகன சகம் 1518-வருஷம் இந்த

அரிச்சந்த்ரமஹாராஜா சாசனம் பாலகொல்லுவில் உள்ளன இந்த சினகங்கய்ய புருஷோத்தம பட்டண பாலகன் என்பதற்கு ஆதார பத்யங்களில் கூறப்படுகின்றன. இவர் மத்தாலி திருமலாச்சாரியார் ஸ்வாமிகளுடைய சிஷ்ய ரென்னும், பிராம்ஹண சமூகத்தாருக்கு மிக்க போஷக ரென்றும், மாறுட்ல கோத்ரவாசியென்றும் கூறப்படுகின்றன இவருக்கு மல்லமாப்ப என்ற சதியினிடம் பிறந்த பாபிநீடு, அக்கன்ன, சொப்பிநீடு, அக்கய்ய என்ற 4 புத்திரர்கள் உண்டு. இவர் காலத்தில் வைஷ்ணவ மதம் பிரபலமாக பிரகாசித்து வந்தன என்றும் மாகமாஹாத்மய கிரந்த கர்த்தாவாகியவர் எழுதி வைத்துள்ளார் என்பது பிரசித்தம்.

308) சிக்கால அக்கலய்ய, இவர் சாலிவாகன சகம் 1444-வருஷ காலத்தவராவார், தந்தையின் பெயர் கொண்டமநீடு. தாயார் பெயர் ரங்கம்ம, இவர் உதயகிரி நாலூக்கா அலமேல்மங்காபுரத்தில் ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டை செய்து வைத்து சாசனம் எழுதி வைத்து கீர்த்தி பெற்றனர். இந்த வம்சத்தினர் இப்பொழுது கம்மவாரில் இருப்பதாகக் காணப்படவில்லை.

309) சாயபநேனிவார், சாயபநேனி சினசாயப நாயடு, இந்த குலத்தினர் முதலில் கிருஷ்ணா ஜில்லாவில் பொத்தூர் கிராமத்தில் வாசமாக இருந்தனர். இந்த வம்சத்திய சின சாயபநாயகுடு என்றவர் மிக்க பிரசித்தி பெற்று ஒரு பிராம்ஹணருடைய சகாயத்தால் கோல்கொண்ட சுபேதாரை அணுகி ஜாகீர்களையும், அதற்கு வேண்டிய தள-வாடங்களையும் பெற்று அவருக்கு மிக்க இஷ்டமித்திரராகி யிருந்ததாகவும், இவருக்கு நாலாவது தரத்தவராகிய சின-வெங்கடாத்ரி, பெத்த வெங்கடாத்திரி, நாயடுகாரர்கள், டில்லி சக்கரவர்த்தியாகிய ஔரங்கஜீப் காலத்தினராக காணப்படுவதால், சினசாயப நாயடு சுமார் கிறிஸ்து சகம் 1620-வருஷ காலத்தவராயிருக்கலாம். அப்போது கோல்-கொண்ட பரிபாலகயிருந்தவர் அப்துல்லா குதுஷ்பா, இவரிடத்தில் சினசாயப நாயடு ராஜப்பிரதிநிதியாக இருந்து பரிபாலித்து வந்ததாகச் சொல்லப்படுகின்றன. இவருடைய

பூர்வீகர்கள் குர்ராலமடுவில் 14-வது சகாப்த காலம் அமர்ந்ததாக முன்னர் தெரிவித்திருக்கின்றனை. இவருக்கு கங்கப்ப நாயடு என்ற குமாரனிருந்தான்.

310) சாயபநேனி கங்கப நாயடு, இவர் தநதை சம்பாதித்துக்கொடுத்த ராஜ்யத்தை விருத்தி செய்து பரிபாலித்து வந்த காலம், இவருக்கு வினுகொண்ட, கொண்டவீடு சீமைகளில் அதிகாரமிருந்து வந்தன. இவர் குமாரன் வெங்கடாத்ரி இவர் மிக்க பிரசித்து பெற்று விளங்கினுர். இவர் ஸ்ரீசைல பர்வதத்திற்குக் கிழக்கில் 17-குரோஸ் தூரத்திலுள்ள தூபாடி சீமையும் பரிபாலித்து வந்தார். இவர் தத்தநால பட்டணத்தை நூதனமாகக் கட்டி, அங்கே ராஜாங்கத்தை மாற்றி அமைத்துக்கொண்டு உள்ளனர். இந்தப் பிரதேசம் முன்னர் ஒரு சிற்றூராக இருந்தன. இதை மூன்று கோஸ் விஸ்தீரணமுள்ள பட்டணமாக்கி அதில் 500 கோமுட்டி வீடுகளும், 500 மார்வாடியார் வீடுகளும், 60 சபாநாயகர் வீடுகளும், பிரத்யேகமாக நிர்மாணித்தும், 11 யானைகளுக்கு கொட்டகைகளும், குதிரைப் படை, ரதப் படை, காலாட் படை முதலானவற்றிற்கு சாலைகளையும் நிர்மாணித்தும், பிரபுக்கள், மந்திரிகள், உத்யோகஸ்தர்கள் முதலானேருக்கும் கட்டடங்களைக் கட்டியும், வித்யாலயம், ஆயுதசாலை, நௌகசாலை (ஓடங்கள்) முதலாகிய தொழிற்சாலைகளையும் நிர்மாணித்தும், வைத்யசாலை, தர்மசத்திரங்கள், மடங்கள், தேவாலயங்கள், தெப்பங்கள், பேட்டைகள், வியாபாரஸ்தலங்கள் முதலானவற்றையும் இன்னும் அந்நகரத்திற்கு வேண்டிய சாலைகளையெல்லாம் நிர்மாணித்துப் பிரபலமாக ஆண்டுவந்தார். இவருக்கு பெத்தவெங்கடாத்ரி, சின்னவெங்கடாத்ரி என்ற பேரன்மார் இருந்தனர். இவருடைய குமாரனின் பெயர் தெரியவில்லை. அவ்விருவரும் பிரபலமாகப் பிரசித்தி பெற்று வாழ்ந்தனர். இவர் ஆபுஹசான் குதுஷ்பா என்ற தானீஷா காலம் கிறிஸ்து சகம் (1672–88-வருஷம்) என்று தோன்றுகின்றது.

311) சாயபநேனி பெதவெங்கடாத்ரி சினவெங்கடாத்ரி பூபாலர்கள், இவர்களுக்கு கோல்கொண்ட

பகருல்லாகான் என்றவருக்கும் தகாதா ஏற்பட்டு, பகுருல்லாகான், இவர் கோட்டையின் மீது படையெடுத்து நாசம் செய்ததாகவும், இந்த பகுருல்லாகான் ஒளரங்கஜீப் சக்ரவர்த்தியிடம் கிறிஸ்து சகம் 1708-ஹு தக்கன் சுபேதாராக நியமிக்கப்பட்ட ஜுல்பிகாருகான் என்றவராக இருக்கலாம் என்றும், சின்னவெங்கடாத்ரி நரபதி பல்லிகொண்ட துர்க்கத்தை சுவாதீனம் செய்துகொண்டதாகக் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசம் யாருடையதென்பது தெரியப்படவில்லை. சின்னவெங்கடாத்ரி ப்ரபு மிக்க வீரபராக்ரமசாலியென்றும், இந்த வம்சத்தினர் சிவபக்தர்கள் என்றும், இவர் தன் குருவுக்கு வினுகொண்ட சீமையில் அங்குலபாடி கிராமத்தின் கிழக்கே சிவபுரமென்ற கிராமத்தை நிர்மாணித்து, ஜீவனார்த்தமாக 50 குச்சள்ள பூமியை, அதாவது 700 வள்ளம் தானசாசனம் எழுதிவைத்தும், பிராம்ஹணர்களுக்கு ஒரு அக்ரஹாரம் நிர்மாணித்துக் கொடுத்தும், தத்தனுல பட்டணத்திற்கு 6 குரோஸ் தூரத்தில் இவர் எர்ரகொண்டபாளையம் என்ற கிராமத்தைக்கட்டி வைத்தும், அதில் வைரங்களைச் சாணை பிடிக்கும் தொழிற்சாலையை நிர்மாணித்தும், இவரிடத்திலிருந்த அய்யப்பராஜென்ற பிராம்ஹண உத்யோகஸ்தரை மேற்பார்வையாளராக நியமித்து வைத்திருந்தனர். அவர் ஏதோ தவறு செய்த காரணத்தால் ஒரு வருஷ காலம் தண்டனை விதித்து கைது செய்துள்ளனர். இந்த பிராம்ஹணர் விடுதலை ஆகிச் சென்று ராஜனுக்கு விரோதியாகிய பகுருல்லாகானிடம் சேர்ந்துகொண்டு, இவர் மீது அநேக புகார்களைச் சொல்லி, அவனை வசப்படுத்தி யுத்தத்திற்கு ஏற்பாடு செய்துகொண்ட காரணத்தால், அந்த பிராம்ஹணருக்கும், ராஜாவின் கோட்டைக்கும், ராஜ்யாங்கத்திற்கும் நாசம் ஏற்படலாயிற்று. பகருல்லாகான் தத்தனுல கோட்டையின் மீது படையெடுத்து வந்து முற்றுகையிட்ட சமயம் சின்னவெங்கடாத்ரி ப்ரபு கோட்டையில் இல்லை. பெத்தவெங்கடாத்ரி ப்ரபு இருந்து அவர்களை எதிர்த்து போராடிய சமயம், வீரசுவர்க்கமடைய நேர்ந்தது. அதனால் எதிரிகள் சுலபமாகப் பிரவேசித்து கோட்டையை வசப்படுத்திக்கொண்டனர். இதைத்தெரிந்த ராஜகுடும்பத்தினர் எல்லோரும் அக்கினிப்

பிரவேசம் செய்துகொண்டனர். இந்த யுத்தத்தில் பகுருல்லாகான் சைனியங்கள் 96 லக்ஷம் வெள்ளி நாணயங்கள், தங்க நாணயங்கள் முதலானவற்றைக் கஜானாவிலிருந்து கைப்பற்றிக்கொண்டனர். பின்னர் ராஜத்துரோகியாகிய அய்யப்ப பிராம்ஹணரை நம்பலாகாதென்று யோசித்து, பஹமதியர் அவரைத் தகுந்த சிக்ஷை செய்து சம்ஹரித்தனர். துன்மார்க்கனாகிய பகுருல்லாகானும் கோல்கொண்டாவுக்குப் போகும்பொழுது நடுவழியில் அகால மரணமடைந்தனன். பின்னர் சின்னவெங்கடாத்ரி ப்ரபுவானவர் வந்து நடந்த விருத்தாந்தங்களை அறிந்து, தன் குடும்பத்தினர் அக்கினிப் பிரவேசமானதை எண்ணித் தாங்கமுடியாமல், தானும் தன் வாளாயுதத்தால் குத்திக்கொண்டு வீர சுவர்க்கமடைந்தனர். தன் குடும்ப ஸ்திரீகள் அக்கினிப் பிரவேச காலம், ஒரு ஆண் குழந்தையை தாசியினிடம் ஒப்படைத்த குழந்தையை அத்தாசியானவள் கொண்டவீடு சீமைக்கு எடுத்துச்சென்று வளர்த்து வந்தனள். அதனாலிந்த வம்சம் விருத்தியடைந்து வந்தன. பின்னர் இந்த வம்சத்தினர் சரித்திரம் 3-வது பாகத்தில் எழுதப்படும். இந்த வம்சத்தில் குமார் கிறிஸ்து சகம் 1550-வது காலத்தில் சாயபநாயனி அநந்த நரபாலன் என்றவர் இருந்து அவருக்கு ஸ்ரீரங்கமாம்ப என்ற பெண்மணியின் கர்ப்பத்தில் ஜெனித்த பாஸ்கராம்ப என்ற குமாரத்தியை ராவெள்ள லிங்கநரபாலனுக்குக் கொடுத்து விவாஹம் செய்துவைத்ததாக 'சௌகந்திகப்ரசவாபஹரண'மென்ற கிரந்தத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த வம்சத்தினர் விஷயங்கள் காணப்படவில்லை.

312) வெலிசேடிவார், வெலிசேடி திரபதிகொர, இவர்கள் கந்தாள கோத்திரீகர். இவர்கள் விசாகப்பட்டணம் ஜில்லா விஜயநகர கஜபதிகளின் சமஸ்தானத்தில் விவசாயிகளாக இருக்கின்றனர். இந்த வம்சத்தினர் கஜபதிகளின் சமஸ்தானத்தில் 17-வது சகாப்த கால முதல் சேனாதிபதிகளாக இருந்தனர். இவர்களுக்கு வெலிசேடி திரபதிகொர, இவர் விசிஷ்ட கோதாவரி நிகடத்தில் வெலிசேயென்ற கிராமத்தை நிர்மாணித்துள்ளதால், இந்த வம்சத்தினருக்கு வெலிசேடிவார் என்ற பட்டப் பெயர் ஏற்பட்டதாகவும்,

இந்த வம்சத்தினரில் குருராயரால் பாடப்பட்ட 'தர்ம நந்தனவிலாசம்' என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த திருபதிதுரையின் பார்யை மங்கமாம்ப கற்பத்தில் ஜெனித்த மல்லிகார்ஜுனன் என்ற குமாரன் மிக்க பிரசித்திக்கு வந்தனன் இவர் நல்ல பிராயத்தில் கலிங்க நாட்டில் கஜபதிகளுடைய ஆஸ்தானத்தில் பிரவேசித்து, அங்குள்ள ராஜனிடம் நட்புகொண்டு போகபுரி சீமையில் ரணஸ்தலி பக்கம் பம்புபல்லியென்ற கிராமத்தை நிர்மாணித்து, அங்கு தன் பேரால் மல்லிகார்ஜுன தேவாலயம் கட்டி பிரதிஷ்டை செய்துவைத்ததாக 'தர்மநந்தன விலாச' கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளன.

இவர் பண்ட்டுபல்லி பாலகனுகவும் இருந்தார். இவருடைய பார்யை அச்சம்ம தேவி. இத்தம்பதிகளுக்கு கூர்மராய, நாரப்ப, திரபதிதொர என்ற மூவர் புத்திரர் தோன்றினர். கஜபதிகளிடம் சேனுதிபதிகளாக இருந்ததாக வும் காணப்படுகின்றன. மல்லிகார்ஜுன துரைக்கு 5-வது வாரிசுதாரர்கள் சுமார் கிறிஸ்து சகம் 1800-ஷ காலத்தவ ராகிய வெலிசேடி குருராயடு என்றவர், பூசபாடி நாராயண கஜபதி மஹாராஜாவினுடைய சேனுதிபதியென்று ஷெ கிரந்தத்தில் தெரியப்படுகின்றன. அதனுல் இந்த மல்லிகார் ஜுனதுரை பூசபாடி கிருஷ்ணராஜு பிரபுக்களின் காலத்தில் சேனுதிபதியாகி இருக்கலாமென்று நிச்சயமாகக் கூறலாம். இந்த வம்சாவழியினர் சரித்திரம் மூன்முவது பாகத்தில் எழுதப்படும்.

313) வேஜெள்ளவார், இவர்களே ஏஜெள்ள, ஏஜெண்ட்ல, வேஜெள்ள, வேஜெண்ட்ல என்று கூறுவர். ஆயினும் இவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தினரேயாவர், கம்மவாரில் ஆந்த்ர க்ஷத்திரியர்களிலும் காணப்படுவதால் இந்த கிருஹ நாமம் 14-வது சக காலத்திற்கு முன்னமே ஏற்பட்டதாகத் தோன்றுகின்றன. இந்த வீட்டுப் பெயர் உடையவர் சிலர் பிரசித்தியாகயிருந்து 14-வது சகாப்த முதல் ஆந்த்ர க்ஷத்திரியராக விளங்கியதாகக் காணப்படு கின்றன இவர்கள் மந்தபாடிவார்களுக்கு பந்துக்களென்றும்

வேளெள்ளவார் வம்சாவழியினரென்றும் கிரந்தங்களில் காணப்படுவதாலும், மந்தபாடிவார் துர்ஜய குலத்தவரான தாலும், இவர்களுங்கூட அவர்களைச் சேர்ந்தவரே ஆவார். இவர்களில் அய்யப்பராஜு என்றவர் சாலிவாகன சகம் 1450-வருஷ காலத்திலிருந்து ஐதராபாத் நவாப்பிடம் குட்லூறு சீமைக்கு ஜாகிர் பெற்றுக்கொண்டனர். அது முதல் அந்த வம்சத்தினர் அதை அனுபவித்து வருகின்றனர். இன்றைக்கும் இந்த வம்சத்தினர், தெட்டு சமஸ்தானதிகள் என்று கூறப்படுகின்றனர். இவர்கள் வசிஷ்ட கோத்ரவாசிகள் ஆவார்.

கம்மவாரிலுள்ள வேளெள்ள இல்லையேல் யேளெள்ளவார் இந்த வகையிற் சேர்ந்தவராயினும் 14-வது சகாப்தமத்தியில் விட்டுப்போயினர் அதிலிருந்து கம்மவாரென்று பிரஸ்தாபித்து வருகின்றனர், இவர் பந்துக்களில் மந்தபாடிவார் சிலரும் கம்மவாரில் இருக்கின்றனர்.

314) கொண்டவீடிசீம சௌதரிபட்டங்கள், கம்மவார் அனுஷ்டித்து வந்த வரலாறுகள் கூறப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1579-ஸ் கொண்டவீடி சீமையை கோல்கொண்ட நவாப் இப்ரஹீம் குதுஷ்பா மறுபடியும் வசப்படுத்திக் கொண்டு ராயராவென்ற மஹாராஷ்ட்ர சேனாதிபதியாக நியமிக்க, அப்பொழுது அவர் கொண்டவீடி சீமை கிராமங்கள்மொத்தம் 497ஐ 14 சமித்துக்களாகப் பிரித்து அதைப் பரிபாலிக்க தேசபாண்டிய, சௌதரி, மணியகாரர், இல்லையெனில் கிராம பாலகர், தேசாதிபதிகள், ஜமீன் என்ற 4 வித பாலகர்களை நியமித்து, தேசபாண்டிய சமிதி வசூலிக்க கணக்கர்களையும், சௌதரிகளையும் கிராமங்களில் கிஸ்து வசூலிக்க மணியகாரர்களையும், தண்டல், தலையாரிகளையும் நியமித்து, இவர்களுக்கு மேலதிகாரிகளையும் ஏற்படுத்தி இவர்களுடைய விஷயங்களை நவாபுக்கு தெரிவிக்க வேண்டிய அதிகாரிகளையும் நியமித்திருந்தார். இவரல்லாமல் கொண்டவீடியில் பாரா முஸ்தீப்பு அதிகாரிகளும் இருந்தனர். இந்த பாலனம் பாரா முஸ்தீபுகளின் ஆதிக்கத்தில் நடந்து வந்தன. இம்மாதிரி ஏற்பாடு செய்து 14 சமுத்துகளின் அதிகாரத்திற்கு

14 கிராமங்களைக் கொடுத்து, அதாவது பிரத்தி பாடுக்கு 14 நூதக்கி 14, பொன்னூறுக்கு 44, முனிகொண்டாவுக்கு 56, ராவிபூடிக்கு 12, குண்டூறுக்கு 34, புலிவர்ருக்கு 52, சந்த ராவூறுக்கு 10, சேப்லோலுக்கு 36, மங்களகிரிக்கு 33, நாதெண்ட்லாவுக்கு 100, கூசிபூடிக்கு 56, தாடிகொண்டாவுக்கு 22. இந்த சமித்துக்களில் எல்லாம் நாதெண்ட்ல பெரியதாக இருந்தது. இவைகளுக்கு நல்லபோதுவாரென்ற கம்மவார் சௌதரிகளாக இருந்தனர்.

இதுவல்லாமல் கம்மவார் எல்லா சமுதுகளுக்கும் சௌதரிகளாக இருந்ததாக ஸ்தானீக சரித்திரங்களில் காணப்படுகின்றன.

1. நாதெண்ட்ல சமுது நல்லபோதுவார். இவர்களுடைய விஷயங்கள் அநேக சரித்திரங்களில் எழுதப்பட்டுள்ளன.

2. பொன்னூர் சமுது அலவர்த்திவார் கட்டெம்பூடி பிரதியில்.

3. சேப்ரோலு சமுது தேவபக்துனிவார் L. R. vol. XIX and XIV P. 252.

4. சந்தராபூர் சமுதுமானம்வார் L. R. vol. 39.

5. புலிமர்த்தி சமுது சூரியதேவரவார், வேமுலபல்லிவார், கொசராஜுவார் L. R. vol. 47 P. 475-476. L. R. vol. 56, 312, 548-549.

6. ராவிபூடிசமுது, வட்லமூடிவார், L. R. vol. 50 P. 497, புவ்மாகுலூரில் உள்ள கையெழுத்துப் பிரதியில் வால்யூம் 5, பக்கம் 529. வட்லமூடிவார் காலத்தில் ரொம்ப்பிசர்லாவில் கோபாலஸ்வாமி ஆலயங்கட்டி சாசனம் எழுதிவைக்கப்பட்டுள்ளன

7. ஏர்லகட்ட மைநேனிவார், L. R. vol. 50 P. 411, நந்தி கிராம சீமையில் வாசி ரெட்டியார் அநேகர்

சௌதரி வேலை அதிகாரிகளாக இருந்துவந்தனர். மூனுகால சீமையில் கார்லபாடிவாருக்கு பூர்வம் சௌதரி உத்யோகமிருந்ததென்றும் பின்னர் அதை விக்கிரயம் செய்துவிட்டதாகவும் ஒரு சரித்திரம் கூறுகின்றன. நாகாவார், பத்தெ-போலுவார், நலமாறுவாரென்ற ரெட்டிகளுக்கு ஷெ உத்யோகமிருந்ததாக கையெழுத்துப் பிரதிகளில் எழுதப்பட்டுள்ளன.

ராயராவுக்குப் பின்னர் கொண்டவீடு சீமையில் பாலனம் அஸ்தகதமாயினும் மறுபடி கோல்கொண்ட நவாபுக்கு கிறிஸ்து சகம் 1591-ஆ காலம் வசமாகியதிலிருந்து அவராட்சியில் ஜமீன்தார்களை ஏற்படுத்தும் வரையிலும் இந்த சௌதரிகளின் அதிகாரமே அமுலில் இருந்து வந்தன. ஆயினும் பாரா முஸ்தீபு அதிகாரங்களை நீக்கி அந்த ஸ்தானங்களுக்கு அமீர்முல்க் என்றவர் சர்வாதிகாரியாயினர். இவருக்குப் பின்னர் கொண்டவீடு சீமைக்கு நவாபுகள் அதிகாரிகளாக வந்தும், சௌதரி அதிகாரிகள் தங்கள் அதிகா-ரத்தை நடத்தி வந்தனர். கடைசியில் 1122-ம் பசலி (கிறிஸ்து சகம் 1712-வருஷத்தில்) இந்த சௌதரி பாலனங்களைக் குறைத்து, ஜமீன்தாரர்களை நியமித்ததாக ரிகார்ட்டுகளில் காணப்படுகின்றன. அது முதல் சௌதரிகள் ஜமீன்தார்களுக்குக் கீழாயினர். சர்க்கார் உத்யோகங்களும் இழந்தன.

இந்த சௌதரி பதவிகள் முதலில் தெலிங்கானுவில் ஏற்பட்டதாக முதல் பாகத்தில் புடம் 170-ல் உதாரணமாகக் காட்டியுள்ளன. இந்தச்சௌதரி உத்யோகத்தில் கம்மவார் அதிகமாயிருந்ததனுல் கம்மவாருக்கு சௌதரி என்ற பட்டங்கள் ஏற்பட்டனவென்பதும், கம்மவாரில் இன்றைக்கும் நாயடு பட்டங்கள் விளக்குகின்றன என்பது பிரசித்தம்.

315) சஜபதிகளுடைய அதிகாரம், கோல்கொண்ட நவாப்பாகிய கூலிகுதுஷ்பா முன் நடந்த யுத்தங்களிலிருந்து சும்மாயிராமல் கிறிஸ்து சகம் 1591-வருஷம் மறுபடியும் கொண்டபல்லி, கொண்டவீடு சீமைகளை ஆக்ரமித்துக் கொண்டும், அதிகாரம் செலுத்த முடியாமல் கொண்டபல்லியின் வடக்கிலிருந்து கஜபதி ராஜாக்கள் படையெடுத்துவந்து கொண்டபல்லியை வசப்படுத்திக்கொண்டனர். ராமச்சந்த்ர கஜபதி என்றவர் தெலிங்கானவில் சில பாகங்களை ஆக்ரமித்து ஒரிஸ்ஸாவுடன் சேர்த்துக்கொண்டு தன் ராஜதானியை கொண்டபல்லிக்கு மாற்றிக்கொண்டனர். இவரிடத்தில் ஒரு லக்ஷ கால்படையும், 10 ஆயிரம் குதிரைப் படையும் இருந்தன. இவருடன் கஜபதி ராஜா வித்யாதரன் என்றவரும், அரிச்சந்திரன் என்ற நரபாலனிடமும் இந்த அளவு சைன்யங்கள் இருந்தன. இவர்களுடைய பாலனம் அந்தப் பிரதேசத்தில் எவ்வளவு காலம் இருந்தனவென்பது தெரியவில்லை. மறுபடியும் இந்த மூவருங்கூடி கூலிகுதுஷ்பா மீது படையெடுத்துப் பிலங்களுந்நரி பக்கமுள்ள நதிக்கரையில் கோர யுத்தம் நடத்தப்பட்டன, அதில் வித்யாதரன் இறந்து போகவும், ராமச்சந்திர கஜபதி துருஷ்கர் கையில் அகப்பட்டுக்கொண்டு விட்டதினால், கொண்டபல்லி கோட்டை துருஷ்கர் வசமாயின. பின்னர் அரிச்சந்திர நரபாலனும், அவருடைய சேனாதிபதியுமாகிய முகுந்தராஜனும் கிறிஸ்து சகம் 1601 வருஷம் வரை கூலிகுதுஷ்பாவுடன் அநேக யுத்தங்கள் செய்து வந்து கடைசியில் பெங்கால் ராஜ்யம் பாதி வரையிலும் துரத்தி விட்டு ஜெயம் பெற்றதாக பிரௌட எழுத்துக்களால் தெரியவருகின்றன. கொண்டவீடு சீமையில் மாத்திரம் கிறிஸ்து சகம் 1592-முதல் 1598-வருஷம் வரை குதுஷ்பா பிரதிநிதியாகிய அமீன்முல்கு பாலனம் காணப்படுகின்றன.

கிறிஸ்து சகம் 1593-வருஷம் இவருடைய துரஷ்பாலனத்தைச் சகிக்க முடியாமல் மங்களகிரி ஜனங்களும், பந்தர், நிஜாம் முதலான கிராம மக்கள் எல்லோரும் ஒன்று கூடி இந்தப் பிரதேசங்களை விட்டு வேறு நாட்டுக்குப் போய்க் கொண்டிருக்க, கோல்கொண்ட நவாப் கொஜ்ஜா அல்லீ

என்றவரை அனுப்பி அவர்களுக்கு வேண்டிய பூமிகளை நம்பிக்கையுள்ள குடிமக்களுக்குக் கொடுத்து, விவசாயங்களுக்கு வேண்டியவற்றையும் கொடுத்து ஆதரித்து மக்கள் சாந்தியடையும்படி செய்தும், தேசத்தையும் நன்கு பாதுகாத்து வந்ததாக மங்களகிரியில் எழுதிவைத்துள்ள சாசனத்தால் தெரியவருகின்றன. இந்தக்காலத்தில் கஜபதி ராஜாக்களில் வித்யாதரனிடம் ஒரு பிரதிநிதியாக கம்மவாரில் அடபாவார் கூறப்ப நரபாலன் என்றவரும், அரிச்சந்திர நரபாலனுடைய சேனாதிபதியுமாகிய முகுந்தராஜனிடம் பிரதிநிதியாக இருந்த தாசரிசினகங்கய்ய என்றவிருந்து இவர்கள் நடத்திய கோர யுத்தங்களில் வேலை செய்து அநேக சன்மானங்கள் பெற்றதாக முன்னர் கூறியுள்ளோம். தாசரிசின கங்கைய்ய அரிச்சந்த்ர நரபாலனிடம் அநேக சன்மானங்கள் பெற்றுக்கொண்டதாக சொல்லிக்கொண்டனன். ஆயினும் அடபாகூநப நரபாலராகியவர் வித்யாதரனிடம் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டும், பின்னர் கொண்டபல்லி, கொண்டவீடு பாலனத்தையும் கைப்பற்றியதாக ஜானகீராகவத்தில் கூறப்படுகின்றன. கஜபதிகளுக்குப் பின்னர் கம்மவாரில் அடபாவார் கொண்டபல்லி, கொண்டவீடு சீமைகளைத்தாண்டி தென் ஜில்லாக்களில் குடியேறியதாகக் காணப்படுகின்றன. இவர்களின் பந்துக்களாகிய மச்சவார், பத்துலவார், கண்ட்ரலவாருங்கூட அப்பிரதேசங்களுக்குப் போயினர். தாசரிவார் மாத்திரம் அங்கங்கு தங்கியிருந்தனர்.

316) கம்மவார் சிங்கள தீவிற்குள் நடந்த யுத்தத்தில் கலந்துகொண்டது, கொண்டபல்லி, கொண்டவீடு ஸ்திதி அப்படியிருக்க, தக்ஷண தேசத்தில் மதுரை ராஜ்யத்தில் நாகம நாயடு, பின்னர் விஸ்வ நாயடுவும், விஜயநகர சாம்ராஜ்ய பிரதிநிதிகளாகப் பரிபாலித்து வந்தனர். விஸ்வநாத நாயடு பரிபாலன காலத்திலேயே கண்டிகோட்டையிலிருந்து பெம்மசானி பெதவீறப்ப நாயடு சபரிவாரத்துடன் வந்து குருவிகுளம் பாளையக்காரராக இருந்து வந்ததாக முன்னமே கூறப்பட்டுள்ளன. இந்த மதுரை ராஜ்யத்தின் பின்னர் பெதகிருஷ்ணப்ப நாயடு பாலனம் அமலுக்குவந்தன கிறிஸ்து சகம் 1564-வு 1572-வு மத்தியில் நடந்தன.

இவருக்கு சிம்ஹளதீப ப்ரபுவாகிய தம்பிச்சி நாயடு கப்பங் கட்டி வந்தார். தம்பிச்சி நாயடு சுதந்தரம் பெற ஆசை கொண்டு கிரமப்படி கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டாமல் இருந்ததினால் அதை வசூலிக்க வேண்டி கிருஷ்ணப்ப நாயடு தன் தளவாயாகிய பிசநபாகம் சேசப்ப நாயடுவை சைன்யத்துடன் அனுப்பினார். சேசப்ப நாயடு தன்னிடமிருந்த 27 சர்தார்களுடன் சென்று கப்பம் செலுத்திவிடும்படி கோரியும் அவர் கட்டுப்படாததால் யுத்தம் மூண்டன. அதில் ஜெயம் பெற்று கப்பம் பெற்றுக்கொண்டு மதுரை வந்து கிருஷ்ணப்ப நாயடுவிடம் ஒப்படைத்தனர். இவ்விடத்திலிருந்த சர்தாரர்களில் கம்மவார் ராவிள்ள ரமணப்ப நாயடு, பெம்மசானி ருத்ரப்ப நாயடு, பச்சா கஸ்தூரி நாயடு, நாதின்ள நாரணப்ப நாயடு, ராவுல வெங்கட்ராய நாயடு முதலானவர்கள் இருந்தனர். இவர்கள் எல்லோரும் கலந்து தத்தம் பரிவாரங்களுடன் போர் புரிந்து ஜெயித்து வந்ததற்கு வேண்டி, ராஜா அவர்களை கௌரவித்து, அநேக சன்மானங்களைக் கொடுத்து வாழ்த்தினார் என்று சிம்ஹளத்வீப கையெழுத்துப் பிரதியில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த சர்தாரர்களில் ராவிள்ள ரமணப்ப நாயடு இலயராசனேந்தல் சமஸ்தானத்திற்கும், பெம்மசானி ருத்ரப்ப நாயடு குருவிகுள சமஸ்தானத்திற்கும் பூர்வீகர்களாகக் காணப்படுகின்றனர். இந்த யுத்தம் கலி 4559-௵ கிறிஸ்து சகம் 1459-௵ நடந்ததாக பாண்டிய ராஜ கர்நாடக துரைகள் விஷயமாக எழுதப்பட்ட லோகல் ரிக்கார்ட்டு வால்யம் 38 புடம் 284-ல் உள்ளன. ஆயினும் இந்த யுத்தம் கிறிஸ்து சகம் 1564-வருஷத்தில் பின்னர் நடந்ததாக கிருஷ்ணப்ப நாயடு கால நிர்ணயத்தால் தெரிய வருகின்றன.

இந்த மதுரை ராஜ்யத்தின் கீழ் அநேக கம்ம வீரர்கள் சைன்யங்களிலிருந்தும், சிலர் சர்தார் பதவிகளில் இருந்ததாகவும் கிறிஸ்து சகம் 1616-வருஷத்தில் நடந்த தோப்பூர் யுத்தத்தில் மதுரை ராஜாக்கள் தோற்றோடியதால் அந்த பிரதிநிதிகளாகயிருந்த கம்மவார் முதலானவர்களும் புறக்கணித்துப் போனதாக முன்னமே கூறப்பட்டுள்ளன. இந்த யுத்த விஷயம் இங்கு தெரிந்து கொள்ள வேண்டி இருக்கின்றன.

317) தோபூர் யுத்தம், பெனுகொண்டாவில் கிறிஸ்து சகம் 1614-வருஷம் வெங்கடபதிராயர் 2-வது ஸ்ரீரங்கராயருக்கு ராஜ்யத்தை ஒப்படைத்து சுவர்க்கமடைய இவர் 2-வருஷ காலமே ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தார். அதில் ராஜ்ய குடும்பங்களில் சில சச்சரவுகள் ஏற்பட்டு நடந்து வரும்பொழுது வெங்கடபதிராயருடைய மைத்துனர் கொப்பூர் ஜக்கராஜு, அவரை கிறிஸ்து சகம் 1616-வருஷம் சக குடும்பமாக எல்லோரையும் காராக்ருஹத்தில் அடைத்துக்கடைசியில் அவர்களைச் சம்ஹரித்து, தன்னுடைய தங்கையின் பக்ஷமாக அரசாள யோசனை செய்து, மந்திரி பிரதானிகளிடம் தெரிவிக்க அவர்கள் இஷ்டப்படாததையும் எண்ணுமல் தன்னிஷ்டப்படி தானே பரிபாலனம் நடத்தி, சேனுதிபதிகளையும் வசப்படுத்திக்கொண்டு வந்தனர். இதில் கம்மவாரில் சாகமூரிவார், ராவெள்ளவார் முதலானவர்கள் இருந்தனர்.

இது அப்படியிருக்க வெலம சேனுதிபதிகளில் ஒருவராகிய யாசம நாயடு, கொல்லப்பட்ட ஸ்ரீ ரங்கராயர் பக்ஷமாக அவர் புத்ரர்களில் ஒருவராகிய ராமதேவ ராயரை காராக்ருஹத்தில் அடைத்து வைத்திருந்த காலமே தந்திரமாக வெளிக்கொணர்ந்து காப்பாற்றி வைத்திருந்தார். பின்னர் தானும், தஞ்சாவூர் மஹாராஜாவாகிய ரகுநாத ராயரும் கலந்து கொண்டு கொப்பூர் ஜக்கராஜுடன் தோபூர் பக்கம் கோர யுத்தம் நடத்தினுர்கள். அப்பொழுது மதுரை ராஜா முத்துவீரப்ப நாயடு கொப்பூர் ஜக்கராஜு பக்கம் பக்ஷங்கொண்டுள்ளதால் மதுரை ராஜப் பிரதிநிதிகள் ஆகிய கம்மவார் எல்லோரும் அந்த யுத்தத்தில் கலந்து கொள்ள நேர்ந்தன. கிறிஸ்து சகம் 1616-வருஷம் நடந்த இந்த யுத்தத்தில் ஜக்கராஜு இறந்து போக, அவர் சைனி-யங்கள் சின்னுபின்னமாகி ஓடிப்போகவே, ராமதேவராயர் நெல்லூரிலிருந்து கொண்டு பட்டாபிஷேகம் செய்து கொண்டனர். அதனுல் ஜக்கராஜு பக்கமாயிருந்த கம்ம வீரர்களுக்கு ராமராயர் ராஜ்யத்தில் உத்யோகங்கள் குறைந்து வரவே, கம்ம வீரர்களிற் சிலர், ராவெள்ளவார், பெம்மசானிவார் முதலாயினேர்கள் மதுரை ராஜனிடம்

மந்திரிகளாகவும், பிரதிநிதிகளாகவும் சேர்ந்தனர். பின்னர் ராமதேவராயர் கிறிஸ்து சகம் 1641-வருஷம் வரை பரிபாலனம் செய்து வந்தும், அவருக்குப் பதிலாக 3-வது ஸ்ரீரங்கராயர் கிறிஸ்து சகம் 1642-வருஷத்தில் பட்டம் ஏற்றுக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தார்.

318) மதுரை தஞ்சாவூர் யுத்தங்கள், மதுரை ராஜ்யத்தில் முத்துவீரப்ப நாயுடு பரிபாலன காலத்தில் கிறிஸ்து சகம் 1609-க்கு 1623-க்கு மத்தியில், புரமுதிம்மாநேநி என்றவருடன் மற்றைய கம்ம துரைகள் அந்த பிராந்தியத்தில் மிக்க மேன்மையுடனிருந்து, தோபூர் யுத்தத்தில் கலந்துகொண்டனர். ராவெள்ள வம்சத்தினர் இதுவரையிலுமங்கிருந்தனர்களாதலால், தஞ்சாவூர் நாயக ராஜாக்களுக்கும் மதுரை நாயக ராஜாக்களுக்கும், ராஜாங்க விஷயத்தில் தகாதாக்கள் ஏற்பட்ட சமயம், அந்த யுத்தங்களிலிருந்து கடைசிவரை மிக்க சாமார்த்தியமாகச் சமாதானமுறையிலீடுபட்டு, இருதிரத்தினருக்கும் ஒற்றுமை ஏற்படுத்திய மஹான்களுக்கு சில கிராமங்கள் ஜாகிர் செய்து கொடுக்கப்பட்டன. அந்த கிராமங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலிங்கூடயிருக்கின்றன. தத் வம்சாவழியினர் அங்கு சென்று நிவாசம் ஏற்படுத்திக் கொண்டதாகச் சாசனங்கள் சரித்ரங்களில் காணப்படுகின்றன. சொக்கநாதராஜு கிறிஸ்து சகம் 1659-க்கு 1682-க்கு மத்தியில் பரிபாலனம் செய்துவந்த காலத்தில் அந்த யுத்தம் நடந்திருக்கலாமென்பது துணிபு.

319) மஹமதியவிஜ்ரும்பணம், இந்த ராஜ்யத்தில் கம்மவாரின் ஸ்திதி இப்படியிருக்க 3-வது ஸ்ரீரங்கராயர் காலத்தில் ஒருபக்கம் கோல்கொண்ட நவாப் அப்துல் குதுஷ்பா படையெடுத்துவந்து ஸ்வாதீனஞ் செய்து கொண்ட கொண்டபல்லி உதயகிரி சீமைகளிலுள்ள பிரஜைகளுக்குத் திருப்தியில்லாமல் நடந்து கொண்டும், மற்ற சிலபகுதிகளையும் சுவாதீனம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து கர்னாடகத்தில் ஒரு நவாபை நியமித்து அவன்கீழால் கண்டிகோட்டைப் பிராந்தியங்களையும் கலக்கி வசப்படுத்த ஏற்பாடு செய்தகாலம் அங்குஅதிகாரியாயிருந்த பெம்மசானி

திம்மநாயுடு (அங்கப்ப நாயுடு புத்திரன்) கப்பம் கட்டி வந்தார். கிறிஸ்து சகம் 1652-ஞு காலம் மீர்ஜூம்லா என்றவர் அங்கு சுபேதார் யோதாவில் வந்து கண்டி கோட்டை சீமையை பெம்மசானிவார் வசம்விட மனமில்லாமல் கோட்டையை முற்றுகையிட்டு தகர்க்க ஏற்பாடு செய்துவந்தான். அப்படியிருந்தும் கோட்டையிலிருந்து பெம்மசானி திம்மா நாயுடு அதிபயங்கரமான பீரங்கிகளைப் பிரயோகித்து துருஷ்கர் சேனையை நாசம் செய்து வந்தனர். ஆயினும் அதைக்கண்டு பயமில்லாமல் மீர்ஜூம்லா தந்திரத்தால் கோட்டையை ஸ்வாதீனம் செய்து கொள்ளவெண்ணி திம்மா நாயுடுவுடன் சமாதானம் செய்துகொள்ள ஏற்பாடு செய்துகொண்டு கண்டிகோட்டையைவிட்டுவிட்டால் குத்தி ராஜ்யத்தைக் கொடுப்பதாக வாக்களித்துள்ளதையெண்ணி யும் உயிர்ச்சேதமில்லாமல் சமாதானமாக நடந்துகொள்வதேமேல் என்றும் எண்ணி அதற்கு உடன்பட்டு, சபரிவாரமாக கோட்டையைவிட்டுப் புறப்பட்டுவர, மீர்ஜூம்லா அந்த கோட்டையை சுலபமாக வசப்படுத்திக்கொண்டு குத்திராஜ்யத்திற்கு பதிலாக அநுமநகுத்தி என்றகிராமத்தை மாத்திரம் கொடுக்க அதை அங்கிகரிக்காமல் அவனைச்சபித்து விட்டு தர்மவரப்ராந்தியங்களுக்குப் போயினர்கள். இதே மாதிரி நம்நாட்டில் மஹமதியர்களுடைய ராஜ்யாதிகாரம் பரவ நேரிட்டது. மஹமதியர்பாலன ஆரம்பம் வரையிலும் இருந்த கம்மவாரின் சரித்திரங்கள் இனி விளக்கப்படுகின்றன.

320) மந்தடிபோலிநாயகுடு, இவர்கள் மிக்க பிரசித்தி பெற்றவர்களாவார். இவர்களில் இந்த போலிநாயகுடு, சகம் 1050-ஞு காலத்தவராவார். இவர் வெலநாட்டு கொங்கநரபாலனிடம் சேனாதிபதியாகயிருந்து வந்தார். இவருக்கு சமஸ்த்த குணாலங்கார, விகளிதமதகல்பத்விபத ஹூங்கார, பஹிண்டி பாலகுலாசலமிருகேந்த்ர, தனதும் பர்த்தி புறவராதீஸ்வர என்ற பிருதுகளும் உண்டு. இவருக்கு மட்டநாயகுடு என்ற சகோதரர் இருந்தார். வாசிநாயகுடு என்ற குமாரனுமிருந்தனன். இவர் தர்மார்த்தமாக வெல்லடூரில் திரிகோடீஸ்வரஸ்வாமிக்கிவர் சகோதரன் ஒருகோயில் கட்டிவைத்து சக 1061-ஞு (122) புட்லபூமியைக்

கொடுத்து பிரசித்திபெற்றனர். இவர் குமாரனுகிய வாசி நாயடு சகம் 1055-வருஷத்தில் தன்தந்தையின் புண்யார்த்தமாக அகண்டதீபதானம் செய்துவைத்தனன். இந்த காலத்திலிவர் சுவர்க்கமடைந்தனர்.

321) மந்தடிகொண்டப நாயடு இவர் சகம் 1082-ஆம் காலத்தவர், இவருடையபார்யை போலம்ம சகம் 1082-ஆம் குடிபூடு பீமேஸ்வராலயத்தில் ஸ்வாமிக்கு ஒருதானஞ்செய்து வைத்ததாக ஸ்தானிக சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

322) விப்பர்ல கொண்டப நாயுடு. குண்டப நாயன் னு இந்த விப்பர்லவார் மிக்க பிரசித்தி பெற்றவர் என்றும் துர்ஜய குலத்தவரென்றும் முன்னமே கூறியுள்ளோம். கிறிஸ்து சகம் 1218 வருஷகாலத்தில் தரணி கோட்டையை ராஜதானியாகவைத்துக் கொண்டு கோட்டை கேதராஜு பரிபாலித்து வந்தார் இவருக்காக வேண்டி இவ்விருவருங்கூடி முக்காம கிராமத்தில் மல்லிகார்ஜுனஸ்வாமிக்கும், திரிபுராந்தகஸ்வாமிக்கும் கணேஸ்வரனுக்கும் பூதானம் கொடுத்து சாலிவாகன சகம் 1130-வருஷத்தில் சாசனம் எழுதி வைத்துள்ளனர். அக்காலத்திலிவர்கள் கேதராஜனிடம் பரிபாலகராயிருந்திருக்கலாம் என்பது துணிபு.

323) நல்லவார், நல்லசூரப்ப நாயடு, நல்லாவார் என்ற கம்மவாரில் மிக்க பிரசித்திபெற்றவர்களாக இருக்கின்றனர். இவர் சாலிவாகன சகம் 1153-ஆம் கிறிஸ்து சகம் 1231-ஆம் காலம் நெல்லூரில் சோழ ராஜர்களுடன் கண்ட கோபால திருகாலதிதேவ மஹாராஜாக்களின் ராஜ்ய பாலனங்கள் செய்துகொண்டிருக்கையில் அவரிடத்தில் மூக்கன்டிகாமய்யதேவன் என்றவர் ஒரு ராஜப்பிரதிநிதியாகயிருந்தார். இவரிடத்தில் ஒரு அதிகாரியாக நல்ல சூரப்ப நாயுடு இருந்து வோகூர் பிராந்தியங்களில் அதிகாரம் செலுத்திவந்தார். இவர் வோகூரில் மல்லிநாதஸ்வாமி தேவாலயங்கட்டி ப்ரதிஷ்டை செய்து கீர்த்திபெற்றனர். (LR, VOL 18)

324) புலிபாடுகாங்கி நாயகுடு, புலிபாடுவார் என்றவர்களுங்கூட பிரசித்திபெற்றனராகவும் காணப்படுகின்றனர்

அங்கே கொங்கிநாயடு என்றவர் சாலிவாகனசகம் 1220-ஞ கிறிஸ்து சகம் 1298 வருஷகாலத்தில் இனர் ஸ்ரீ கிரிபாடு கிராமத்தில் விவசாயியாகயிருந்து அந்த கிராமத்திலுள்ள தேவாலயத்திற்கு செலகுடிபாடிலிலுள்ள சில தோட்ட பூமி களைக்கொடுத்து தான சாஸனம் எழுதிவைத்து கீர்த்திபெற்றத் ததாக காணப்படுகின்றன. (No. 319 of 30)

325) சிரிபுறபுமல்ல நாயகுடு. ரெட்டி பிரபுக்கள் காலத் தில் கொண்டவீடியில் 14-வது சகாப்தம். இருந்து நரசா ராய்பேட்டை தாலூகாவைச்சேர்ந்த இக்கரு கிராமத்தி லுள்ள மலையின்மீது மல்லிகார்ஜுனஸ்வாமிக்கு ஆலயங் கட்டி தேவப்பிரதிஷ்டை செய்துவைத்து பிரசித்திபெற்ற னர். இவர் தந்தையின் பெயர் ராமநாயகுடு.

326) காவூறிவார், காவூறிபோதிநீடு, காவூறிவார் என்ற சம்மவார் ஆதிசட்டகோத்திரர்கள். இந்த வம்சத்தின ராகிய வோதிநீடு என்றவர் கிறிஸ்து சகம் 1320-ஞ சகம் 1242-வருஷ காலத்தியராவார். புப்பலபாடி கிராமத்தில் மிக்க கீர்த்தி வெற்றிபெற்றிருந்து சென்னகேசவஸ்வாமி தேவாலயத்திற்கும் சென்னமல்லேஸ்வாமி தேவாலயத்திற் கும் அநேக தனம் சிலவு செய்து ஜீரண உத்தாரணம் செய்து பிரதிஷ்டாதிகாரியங்களை முறைப்படி நடத்தி பூஜாதி காரியங்களுக்காக அநேக பூமிகளைக் கொடுத்து வைத்ததாக லோகல் ரிகார்ட்டுகளில் காணப்படுகின்றன. புப்பலபாடிகை எழுத்துபிறதிகளிலும் காணப்படுகின்றன இந்த ஆலயங்களை அமின்முல்கு காலத்தில் நாசப் படுத்தப்பட்டும், மறுபடி பசலி 1176 கிறிஸ்து சகம் 1765 வருஷம் ரமணப்ப நாயடு முதலானோர் கூடி அநேக தனம் சிலவுசெய்து இடிபாடுகளைத்திருத்தி அமைத்தும் மஹாதியர் பாதைகளால் பூர்த்தி அடையாமல் நின்றன. கடைசியில் பசலி 1998-ஞ கிறிஸ்து சகம் 1788-வருஷத்தில் கொல்லி மல்லய்ய, வீடு கட்டுவதற்சாகத் தோண்டிய இடத்தில் விக்கிரஹங்கள் காணப்படவே கிராம மக்களுக்கு அறிவித்து பசலி 1199-வருஷத்தில் புனருத்தாரணம் செய்து வைத்த னர் என்று கூறப்படுகின்றன.

327) முசுநூறிவார். முசுநூறி முச்சி நாயடு, இந்த வம்சத்தில் இவர் கிறிஸ்து சகம் 1221-ஆம் காலம் மிக்கபிரசித்தி பெற்றவர். ஜம்மி பல்லி கிராமத்தில் மல்லிகார்ஜுன ஸ்வாமிக்கு சகம் 1143-வருஷத்தில் சில தோட்ட பூமிகளைக் கொடுத்துச் சாசனம் எழுதி வைத்ததாக (No. 188 of 17)ல் காணப்படுகின்றன.

328) முசுநூறிப்ரோலி நாயகுடு, 14-வது சதாப்த காலம் பிரசித்திபாலகராவார். காகதியவீரபிரதாபருத்ர ராஜ்யம் கிறிஸ்து சகம் 1323-ஆம் மஹமதியர்களால் பங்கப் பட்டபின்னர் மஹமதியர்கள் கிராமங்களில் பிரவேசித்து தேவாலயங்களை நாசப்படுத்தியும், பிராம்மணாதி சர்வ வர்ணத்தினரையும் இம்சித்து வந்தனர். அப்போது இவர் சகோதரராகிய காபய்ய நாயுடும் சைனியங்களைத் திரட்டிக் கொண்டு மஹமதியர்களை விரட்டியோடச் செய்து பிரஜைகளுக்கு உற்சாகமூட்டிக் காத்து வந்தனர். அப்பொழுது இவர் ரேகபல்லி துர்கத்திற்கு அதிபதியாக யிருந்தார். இவர்களுடைய ராஜ்யம் கோனசீமை வரையிலுமிருந்தன. இவர் கோனசீமையில் விலசயென்ற கிராமத்தை ஒரு பிராம்மணனுக்கு தானங்கொடுத்து தாம்பர சாசனம் எழுதி வைத்தார். இவருக்கும் இவர் தம்பிக்கும் இந்துராயத்ராண பிருதும் உண்டு. இவருடைய ராஜ்ய ஆதிக்கம் வாரங்கல் வரை விருத்தி அடைந்து செழித்து வளர்ந்துவந்தன.

329) முசுனூறி காபய நாயகுடு, ப்ரோல நாயடுவுக்கு பின்னர் இவர் ராஜ்யாதிபதியாக வந்தார். இவருடைய பரிபாலன காலத்தில் நல்லகொண்ட வெலம பிரபுக்கள் மாத்திரம் கட்டுக்கடங்காமல் போராடி வந்தார்கள். கோதாவரிப்ரதேசம்வரை பரிபாலித்துவந்த ரெட்டிப்பிரபுக்கள் இவருக்கு உட்பட்டிருந்தனர்கள். இவருடைய பாலனம் கிறிஸ்து சகம் 1369-வருஷம்வரை பிரபலமாக நடந்து வந்தன. இந்த வருஷத்தில் வெலமவாருடன் யுத்தம் நடந்தன. இந்த பீமவரபு யுத்தத்திலிவர் சம்ஹரிக்கப்பட்டனர். இவர் குமாரனாகிய நாமய்ய நாயகுடு அநேக யுத்தங்களில் தன்னுடைய வீரபராக்ரமத்தால் எதிரிகளை வென்று ஜெயம்

பெற்றனர். காபய நாயகுடு வாரங்கல் ராஜதானியை ஆண்டுவந்தனர். அப்பொழுது வெலம வீரர்களுடன் போராடிய காலத்தில் கிறிஸ்து சகம் 1351-வருஷம் அல்லாவுதீன்உசேன் நவாபுசளுக்கு உட்பட்டுவிட்டதாக சரித்ரகாரர்களுடைய அபிப்ராயம். காபய நாயகுடு வீட்டுப் பெயர் கொப்புலவாரென்று முன்னம் கூறப்பட்டுள்ளனவாயினும் குரஜவலச தாம்பர சாசனத்தில் இவர் முசுனூறி வம்சத்தினரென்று எழுதப்பட்டுள்ளன. இவர் ரெட்டிப் பிரபுக்களில் சம்மந்தம் பெற்றதினுல், ரெட்டி குலத்தவரென்று முன்னம் கூறியுள்ளோம். ஆயினும் முசுனூறிவார் கம்மவாரில் மாத்திரமிருப்பதால், இவர் கம்மவாரென்றே நிர்ணயமாகின்றன. இவர் ராஜ்யத்தில் ரேகபல்லிதுர்க்கம், கொஞ்சகாலத்திற்குப்பின்னர், மஹமதியர் பாலனத்திற்கு வந்து அங்கு வத்ஸவாய தெலுங்குராஜென்றவர் பரிபாலனம் செய்து வந்ததாக ராமவிலாசத்தில் ஒரு பத்யம் கூறுகின்றன. அதையிங்கு விஷ்தரபயத்தால் எழுதப்படவில்லை.

330) பண்டாரம்சவுண்நாயனிங்காரு சாலிவாகன சகம் 1299-வருஷம் கிறிஸ்து சகம் 1377-வருஷ காலம் இவர் தேவராயர் விஜயநகர சாம்ராஜ்ய பரிபாலன காலத்தில் பாண்டூர் கிராமத்தில் வாசம் செய்துவந்தனர். இவர் அந்த கிராமத்தில் பனம் தோப்பு வைத்துப் பிரபலப்படுத்தி பிரசித்திபெற்றவராவார் என்று லோகல் ரிகார்டில் காணப்படுகின்றன என்பது பிரசித்தம்.

331) சூரிகொண்டம நாயடு, இவர் பூனூர் கிராம விவசாயியாவார். சாலிவாகன சகம் 1312-வருஷம் கிறிஸ்து சகம் 1390-வருஷ காலம் அந்த கிராமத்தில் உள்ள மதனகோபாலஸ்வாமி தேவாலயத்திற்கு சில தோட்ட பூமிகளைக் கொடுத்துச் சாசனம் எழுதிவைத்துள்ளார். லோகல் ரிகார்ட்டு 14-ல் காணப்படுகின்றன.

332) தங்கேடி சிரிகிரி நாயடு, இந்தவம்சத்தில் தோன்றிய இவர் சகம் 1281 வருஷம் கிறிஸ்து சகம் 1359-வருஷத்திலிருந்து மந்தாடி பிரதேசத்தில் அதிகாரியாகயிருந்து, அந்த கிராமத்திலுள்ள மல்லிகார்ஜுனஸ்வாமிக்கு சகம்

1218-வருஷம் அந்த கிராமத்தை தானமாகக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துப் பிரசித்திபெற்றவரிவர் கம்மவாரிற் சேர்ந்தவராவர். லோகல் ரிகார்டு வால்யம் 14-ல் காணப் படுகின்றன. இந்த கம்மவார் இன்றைக்கும் பிரபலமாக உள்ளனர்.

333) வன்டிபில்லிவாரு, ஜமீன்தார், ரெட்டிப் பிரபுக் களின் பிரதிநிதிகள், ப்ரோலுநாடு, காகிநாடு, சலபாகநாடு என்ற கிராமங்கள் ராஜமயேந்தர பாலகராகயிருந்த காடய வேமாரெட்டி பிரபு காலத்தில் 15-வது சகாப்தத்தில் வன்டி பில்லிவார் என்ற கம்மவார்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவர்கள் அந்த கிராமங்களுக்கு ஜமீன்தார்களாகயிருந்தனர். அதில் அந்த வம்சத்தினருக்கு தகாதாக்கள் ஏற்பட்டு கை கலந்துகொண்டு மடிந்தனரென்றும், பின்னர் அந்த ஜமீன் வெலமவாரிற்சேர்ந்த சிட்டேடிவாருக்கு கொடுக்கப்பட்டன வென்றும் பிடாபுறம் கையெழுத்துப் பிரதியில் காணப்படு கின்றன. (L. R. 19) இந்த ஜமீன் பாலனம் கஜபதிகளுடைய காலத்தில் 15-வது சகாப்தமென்றும் மற்றொரு பிரதியில் காணப்படுகின்றன. (L. R. VOL. 19) புடம் (148) இந்த வம்சத்தினர் ராஜ்ய விஷயங்கள் காணப்படவில்லை.

334) லிங்காலகேசமநேனி, இவர் காவடி ரகுபதிராஜு விடம் பிரதிநிதியாகயிருந்து குமுடூர் என்ற கிராமத்தை அக்ரஹாரமாகச் செய்து பிராம்ஹணர்களுக்கு கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். (No. 243 of 24)

335) உப்புலஅநுமய்ய, இவர் சுமார் கிறிஸ்து சகம் 1400-வருஷ காலத்தில் ராஜமயேந்தரபுரபாலகராகிய காட மவேமாரெட்டிக்கு பிரதிநிதியாகயிருந்து வேமாரெட்டியின் புண்யார்த்தமாக கோதாவரி ஜில்லாவில் உள்ள முல்லேறு கிராமத்தில் வேமசமுத்ரம் என்ற பெயரால் ஒரு பெரிய தடாகத்தை நிர்மாணித்து அங்கொரு சாசனம் எழுதி வைத் துள்ளனர். (No. 238 of 24)

336) நிம்மல அய்யப நாயகுடு, இவர் எரிகொட்டி பிராந்தியத்தில் ஒரு அதிகாரியாகயிருந்து ஏர்விளம்பி வரு

ஷத்தில் அங்கொரு குளத்தை வெட்டி சாசனம் எழுதி வைத்து பிரசித்திபெற்றனர் (No. 175 of 21) இவர் கம்ம வாரில் நிம்மலவார், நிம்மலார் குலத்தைச் சேர்ந்தவ ரென்று காணப்படுகின்றன.

337) மேதரமெட்டல ராமய்ய, இவர் சாலிவாகன சகம் 1415-வருஷம் கிறிஸ்து சகம் 1493-வருஷ காலத்தவர் இவரும் அக்காலத்தில் அநேகபிரதேசங்களுக்கு அதிகாரியாக யிருந்து கம்மவாரின் பிரதான குலதெய்வமாகிய ரேணுகா தேவியாருக்கு 4 பெயர்கள் ஏற்பட்டுள்ளன. முதல் பெயர் 1) ரேணுகை. 2) தேவர. 3) எல்லம்ம. 4) ஒருகன்டி இந்தஅம்மவாருக்கு விளையக்கூடிய தானியங்களில் சலகைக்கு 4-ல் ஒரு பங்கு செலுத்தவேண்டுமென்று கட்டளையிட்டு சாசனம் எழுதி வைத்துள்ளார். சாசன (No. 418 of 15) இது பிரசித்தம்.

338) பண்டாருகங்கன்ன இவர் சகம் 1357-வருஷம் கிறிஸ்து சகம் 1435-வருஷத்தில் இவர் நரசாராவ்பேட்டை தாலூகா கொணிதென கிராமத்திற்கு அதிகாரியாகயிருந்து சகம் 1357-வருஷத்தில் அந்த பிரதேசத்தில் ஒரு சந்தையை நிர்மாணித்து நிபந்தனைகளுடன் நடத்த ஏற்பாடு செய்து சாசனம் எழுதிவைத்தனர். (No. 374 of 15) சாசன நம்பர்.

339) கொணிரேடி நாகிநேடு, மாதிநேடு. ஜலாதியி லுள்ள ஸ்ரீ கோபிநாதஸ்வாமிக்கு இவர்களின் நன்மைக்காக ஒருதான சாசனம் எழுதிவைத்துள்ளதாக (No. 427 of 15)ல் காணப்படுகின்றன.

340) அடபாவாரின் பூர்வ சரித்திரம், அடபாகுண்ட ராஜு, இவர்கள் சாளுக்யவம்ச அடபவிஷ்ணுவர்தனருடைய சந்ததியர். இவர் பந்துக்களாகிய மச்சவார்கூட சாளுக்ய வம்சத்தினரென்று முன்னம் கூறியுள்ளோம். அடபாகுண்ட ராஜு இந்த வம்சத்தில் பிரபல கீர்த்தி பெற்றவராவார். நாசராவ்பேட்டை தாலூகாவில் உள்ள ரொம்பிசெர்ல கிராமத்தில் ஒரு கோட்டையைக்கட்டி பரிபாலனஞ் செய்து வந்ததாக வினுகொண்டதண்டகங்களில் எழுதப்பட்டுள்ள தால் தெரியவருகின்றன. இவர் 14-வது சகாப்தகாலத்

திற்கு முற்பட்டவரென்று தெரிகின்றன. (இவ்விஷயங்கள் கொண்டவிடி சாம்ராஜ்யத்தில் காணலாம்)

341) அடபா கோப்பைய, இவர் சகம் 1215-வருஷம் கிறிஸ்து சகம் 1293-வருஷ காலத்தவர். இவர் தனுகு தாலூக்காவைச் சேர்ந்தவர், அத்தாலூக்கா மல்லிபூடி கிராமத்திலுள்ள யகஸ்த்தீஸ்வரஸ்வாமிக்கு அர்த்த அகண்ட தீபம் சமர்ப்பித்து சாசனம் எழுதி வைத்துள்ளார். (No. 535/28) இவர் தாயார் பெயர் வல்லசானி என்று சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன.

342) அடபாநாகன்ன நாயுடு, இவர் கிறிஸ்து சகம் 1457-வருஷ காலத்தவர். இவர் தந்தை திம்மா நாயடு, பாட்டனர் ரங்கப்ப நாயடு. இவருக்கு ஸ்வாமித்ரோஹர-கண்ட என்ற பிருதுகளும் உண்டு. அதனல் இவர் அக்காலத்தில் சேனதிபதியாய் இருக்கலாம் என்று சொல்லலாம். இவர் பட்னம் கிராமத்தில் கேசவஸ்வாமி சன்னிதிக்கு துவஜஸ்தம் ஒன்று கருங்கல் தாணல் பிரபலமாகச் சித்தரித்துள்ளன. அதை சகம் 1379-வருஷத்தில் சாசனம் எழுதிவைத்துச் சமர்ப்பித்து பிரசித்தி பெற்றனர் என்று காணப்படுகின்றன, (No 668/23)

343) அந்தப் பிராந்தியத்திற்கு சர்வாதிகாரியாக இருந்தனர். கஜபதி ராஜாக்களுடைய காலத்தில் பிரசித்தி விஜயநகர பரிபாலனத்தில் ராஜப்பிரதிநிதிகளாக இருந்த கம்மவாரின் சரித்திர பாக்கிகளை இனி விவரிக்கப்படும். தூபாடி சீமபாலனமு, சாயபநேனிவாறு, ராஜா சாயபநேனி வெங்கடபதி நாயடு. கஜபதி ராஜாக்கள் ஆந்தர தேசத்தைப் பரிபாலனம செய்து வந்த காலத்தில் கம்மவாரில் மிக்க பிரசித்தி பெற்ற வம்சத்திலிருந்து சாயபநேனிவாருடைய வம்சம் .இந்த வம்சத்தினருடைய சரித்திரங்கன் சிலவற்றை முன்னமே கூறியுள்ளோம். இவர்கள் தூபாடி சீமையை கஜபதிகளுடைய காலம் முதல் பரிபாலித்து வந்த திருஷ்டாந்தங்கள் கிடைத்துள்ளன. அதனுடைய சாரங்கள் சாயபநேனிவாரில் ராஜா பிருது தரித்து வந்தவரில் இந்த

வெங்கடபதி நாயுடு முதல்வரென்று சொல்லலாம். இவர் சாலிவாகன சகம் 1401, விளம்பி-வருஷம், கிறிஸ்து சகம் 1479-வருஷ கால பாலகராவார். திரிபுராந்தகம் என்ற நாயாடி சீமையைப் பரிபாலித்து வந்தார். இவர் பிரதாப ருத்ர கஜபதியினிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்து பாலித்து வந்ததாகவும் லோக்கல் ரிகார்டு வால்யூம் 14. புடம் 536-537-ல் காணப்படுகின்றன. அதனுடன் இவர் ராஜ்யபரிபாலன காலத்தில் திரிபுராந்தக தேவாலயத்தில் பூஜை முதலான உத்சவாதி காரியங்கள் மிக்க பிரபலமாக நடத்திவந்தனர். அந்தக் கைங்கர்ய செலவுகளுக்கு வேண்டி வருஷம் ஒன்றுக்கு 720 வராஹன்களைச் சமர்ப்பித்து சாசனம் எழுதி வைத்து உள்ளார். இந்த சாசனம் 1401-வருஷத்தில் எழுதப்பட்டது. பரிபாலன விஷயங்கள் கிடைக்கவில்லை ஆயினும் சாசனங்களில் சமஸ்கிருத பாஷையில் எழுதியிருக்கிறதும் நன்றாகக் கண்டுகொள்ளலாம்.

344) வினுகொண்ட சீம பாலகுலு, சாகி கன்னம நீடு. இவர் கிறிஸ்து சகம் 1477-வருஷ காலம் இந்த வம்சத்தில சிறந்த கீர்த்தி பிரதாவராவார். ஆந்திர தேச பிரதாபருத்ர கஜபதியினிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்து வினுகொண்ட பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தனர். அக்காலத்தில் அந்த பட்டகோட்ட (கன்னம) நாதுல கோட்டையைக் கட்டியும், ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ஹஸ்வாமி தேவாலயம், விஷ்வக்சேனர் ஆலயம், கோபுரம், தீர்த்த கிணறு முதலானவைகளை நிர்மாணித்து பிரதிஷ்டாதி காரியங்களைக் கிரமமாக நடத்தி வைத்து, நித்யபூஜை உத்சவாதிகளுக்கு மான்யங்கள் எழுதி வைத்தும் உள்ளனர். சாலிவாகன சகம் 1399-வருஷம் ஹேவிளம்பியில் எழுதப்பட்டுள்ளதில் இவருக்கு "கரவால பைரவ, புளியமார்க்கோதுகண்ட, கண்டபேருண்ட" என்ற பிருதுகள் தரித்திருந்ததாகவும் எழுதப்பட்டுள்ளன. தவிர இவருடைய வம்சத்தைப்பற்றி பிரபலமாக பத்யங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன. (N. 527, 528 14) இந்த வம்சத்திற்கு மூலபுருஷன் நாகி கன்னம நாயகுடு என்றும், இவருக்கு பெதகன்ன நாயகுடு என்ற குமாரன் பிறந்து, இவருக்கு திம்ம பூபாலன், காதபூபதி, சென்னநாயகுடு என்றவர் பிறந்து,

இதில் காதுபூபாலனுக்கு சந்ததிகளே வென்ற பெத்த திம்ம நரபதியும், பிரதாபசாலியாகிய கன்னமநாயகுண்டு, கலிகளைக் காக்கும் விக்கபூபதி, சத்ருவைராசிபினதிம்ம நரபாலன் என்றவர் பிறந்து வளர்ந்து வந்தனரென்றும், இதில் கன்னமநாயகுண்டு என்றவரே தேவாலயங் கட்டி வைத்ததாகக் காணப்படுகின்றன. இது ஸ்பஷ்டம். 2-வது பிரதாபருத்ர சக்ரவர்த்தியினிடமிருந்த சாகி கன்னம நாயடுவுக்கும் இந்த வம்சத்தினருக்குமிருந்த சம்மந்த விஷயங்கள் காணப்படவில்லை. அவருடைய தந்தை நாகபூபதி பேர், இந்த வம்சாவழியில் காணப்படவில்லை. ஆயினும் இவர்கள் எல்லோரும் ஒரே வம்சத்தினரே ஆகலாம் என்று சொல்லப் படுகின்றன. இவர் தன் தாய் தந்தையர் புண்யார்த்தமாக மேலும் தேவாலயங்கள் கட்டி கோபுர பிரதிஷ்டாதிகள் செய்து கல்யாண மண்டபம், பள்ளியறை என்ற மண்டபம் முதலியவைகளை நிர்மாணித்து கீர்த்தி பெற்றனர் இவர்மிக்க அபிமானத்துடன் பிராமணர்களை ஆதரித்து வந்தனர் இவர் தன்னுடைய ராஜ்யத்தில் எந்தபுர, பேரூரு கிராமங்களை அக்ரஹாரமாகச் செய்து அதற்கு தன் பேரால் கன்னபுற அக்ரஹாரமென வழங்கப்பட்டன. தவிர இவர் நாகன்ன முறிபூடி (முக்திபூடி) கிராமங்களையும் அக்ரஹா-ரங்களுக்குக் கொடுத்துள்ளனர். இந்த வம்சாவழியினர் விஷயங்கள் பின்னர் தெரியப்படவில்லை. இவர் பரிபாலித்து வந்த விநுகொண்ட சீமையில் 16 அதிகாரிகளும், 207 கிராமங்களும் இருந்தன. இவர் கொடுத்த அக்ரஹாரங்கள் பூநாறு, கொணிதெல, இனகல்லு இலவகல அதிகாரிகளுக்கு உட்பட்டிருந்தன.

345) தாள்ளூறிவார், தாள்ளூறியாகித்தெ. இவர் சுமார் 15-வது சகாப்த காலம் பிரசித்தியுடன் வாழ்ந்து வந்ததாகக் காணப்படுகின்றன. இவர் இந்த கிராமத்தில் சென்ன கேசவஸ்வாமிக்கும், நாச்சியாரம்மை தேவதைக்கும் கோவில் கட்டிவைத்து, லாங்கூர் கஜபதியினிடம் 12 குச்சள்ள பூமி (168 வள்ளம்) யை இனமாகப் பெற்று தேவஸ்தான கைங்கரியங்கள் யுக்தப்படி நடத்திவர ஏற்பாடு செய்து சாசனம் எழுதிவைத்துள்ளார். இது பாவுலூர் லோகல் ரிகார்ட் (L.R Vol. 5 P. 464-465) காணப்படுகின்றன

லாங்கூர் கஜபதி கிறிஸ்து சகம் 1424-1431-வருஷ மத்தியில் இருந்தவர். இந்த தாள்ளூரிவாரும், சாயபநேனிவாரும் பந்துக்களாவார்கள் என்று கூறப்படுகின்றன.

346) கந்திபள்ள பய்யனநேடு, கந்திமள்ளவார் என்றவர்கள் கம்மவாரில் இருக்கின்றனர். இவர்களுடைய கோத்ரம் யார்ளுல, ரேசெர்ல. இந்த வம்சத்தினர் கஜபதிகளுடைய காலத்தில் கிறிஸ்து சகம் 1460-1515-வருஷ மத்தியில் இருந்த பய்யனநேடு என்றவர் மிக்க பராக்ரமசாலி இவர் பேரூர் கிராம விவசாயி. இவருக்கு அங்குள்ள சோமேஸ்வரஸ்வாமி பிரசன்னமாகிய காரணத்தால் ஒரு கோவில் கட்டி பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்ததாக லோகல் ரிசார்ட் வாலியம் 50-ல் எழுதப்பட்டுள்ளன.

347) பேரால சுவர்ண கிராம அதிகாரிகளுடைய தகாதா கஜபதிகளுடைய ஆட்சியில் கொண்டவீடி பிரதேசத்தில் உள்ள பேரால கிராமத்திற்கும், சுவர்ண கிராமத்திற்கும் மத்தியில் எல்லை விஷயமாக தகாதா ஏற்பட்டு, சுவர்ண கிராமத்திற்கு உரிய போதிநேனி குருவாகியவருக்கும், பேரால வாசிகளுக்கும் தகாதா ஏற்பட்டு அதில் அக்காலத்தில் காரம்பேடு ஏர்லகட்ட பெதகுருவு என்றவர் மிக்க பிரசித்தி பெற்றவராவார். காருமஞ்சி சௌதரி, பங்குலூர் ராமன்னகார் (கம்ம வம்சத்தினர்) முதலானவர்கள் மத்யஸ்தர்களாக இருந்து இரு கட்சிகளுக்கும் பக்ஷபாதகமில்லாமல் தகாதாவைத் தீர்த்து ஒற்றுமையை உண்டாக்கினர் என்று லோகல் ரிகார்ட் வால்யம் 14-ல் எழுதி வைத்துள்ளன.

348) கொண்டபல்லி கம்ம வெங்கடபதி நாயடு, இவர் 15-வது சகாப்த காலம் மிக்க பிரசித்தி பெற்ற மஹாபுருஷராவார். இவர் கோமடுகு கிராமத்தில் சாலிவாகன சகம் 1390-வருஷம் கிறிஸ்து சகம் 1468-வருஷத்தில் சென்னகேசவ ஆலயம் கட்டிப் பெயர் பெற்றனர். லோகல் ரிகார்ட் 11-ல் எழுதிவைக்கப்பட்டுள்ளன.

349) யாடகி கோட்டை நிர்மாண கதை, மிக்கிலிநேனி மால்யவந்துடு. 14-வது சகாப்த காலம் மால்யநேனி

கோட்டை என்று சொல்லப்பட்ட மலையின் மீது வாசம் செய்துவந்தார். அங்குள்ள மலைவாசிகளை வசமாக வைத்துக் கொண்டு அதிபதியாயிருந்தார். இந்த மலைப்பிரதேசம் விஜயநகர ராஜ்யத்தைச்சேர்ந்தது. இவருக்கு உத்தண்டய்ய என்ற தம்பியும் இருந்தார். இவர் அந்தப் பிராந்தியத்தில் நடமாடிக்கொண்டிருக்கையில் ஒநாய் ஒன்று நாய்களின் மீது பாய்ந்ததைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அது அவைகளுடன் விசுவாசமாக விளையாடிக்கொண்டுள்ளதை கவனித்து இந்த ஸ்தலம் மிக்க விசேஷமாயிருக்கலாமென்று யோசித்து அங்கொரு கிராமத்தை நிர்மாணித்து, அதற்கு யாடகி என்ற பெயர் வைத்தனர். அங்கு போது ராஜு என்ற ஒரு தேவரை பிரதிஷ்டை செய்து அங்கிருந்த குளத்திற்கு கரை கட்டி விஸ்தாரப்படுத்தி, கிணறு ஒன்றை வெட்டியும் வைத்ததாகவும், கொஞ்சகாலத்தில் அங்கிருந்து வெளியேறியதாகவும் யாடகி கையெழுத்துப் பிரதியில் காணப்படுகின்றன.

இந்தக் கிராமத்தைக் கட்டுவதற்கு முதலில் அந்தப் பிரதேசத்தைக் கண்டு, அதன் வளத்தை அறிந்தவர். கிலாரி நாயடு என்றவருங்கூட அங்கேயே இருந்து வந்தனர். இந்த கிராமத்தை விட்டுப்போன பிறகு பின்னர் அந்த கிலாரி நாயடு பேரன் காடிநீண்டு என்றவர் அந்த கிராமத்திற்குச் சென்று வாசம் செய்து வந்தார். இவர் பிரௌட தேவராயருடன் கிறிஸ்து சகம் 1430-வருஷத்தில் தனது கிராமமென்று, அதன் நிர்மான கதையைச் சொல்ல அதைக் கேட்டு அவர் அங்கு ஒரு கோட்டையை நிர்மாணிக்க பெம்மசானி திம்ம நாயுடுவை அனுப்ப அவர் அந்தக் கோட்டையக் கட்டினர். லோக்கல் ரிக்கார்டு வால்யம் 19, 41-ல் இவ்விஷயங்கள் காணப்படுகின்றன.

350) மிக்கிலி நாயனிங்காறு, ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜயநகரத்தை ஆண்டு வந்தனர். அப்பொழுது மிக்கிலி நாயனிங்கார் என்றவருக்கு சாலுவ திம்மரசய்ய என்ற கிருஷ்ணராயர் மந்திரி ரொம்பிசர்ல என்ற கிராமத்தை மானியமாகக் கொடுக்க, அவர் அதற்கு

அதிகாரியாக இருக்கையில் அங்குள்ள சங்கர தேவாலயத்திற்குக் கொடுத்து தானசாசனம் எழுதிவைத்தார். சாசன நெம்பர் 294/15. இந்த மிக்கிலிநாயனுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள சம்மந்த விஷயங்கள் தெரியவில்லை. ஆயினும் இவரும் அந்த வம்சத்தைச் சேர்ந்தவரென்று எண்ணலாம். இந்த மிக்கிலி நாயடு கிருஷ்ணதேவராயரிடம் சேனாதிபதி என்ற ஓதாவில் அந்தக் கிராமத்தை மானியமாகக் கொடுப்பதற்கு ஏதுவாயிற்று என்று கூறுகின்றனர். மிக்கிலிநேனிவார் இப்பொழுது கம்மவாரில் தான்யால கோத்ரவாசிகள் ஆக இருக்கின்றனர் என்பது பிரசித்தம்.

351) கண்டெ கன்னம நாயடு, இவர் சாலிவாகன சகம் 1420 கிறிஸ்து சகம் 1498-வருஷ காலத்திய கம்மவார் வம்சத்தவர். இவர் தந்தையின் பெயர் எல்லம நாயடு. இவருக்கு பெத்த அம்மி நாயடு என்ற மூத்த சகோதரர் இருந்தார். இவர் தன் தாய், தந்தை, சகோதரர்களின் புண்ணியார்த்தமாக தொய்யமல (தொர்ரெமல) கிராமத்தில் ஆஞ்சநேயர் சந்நதிக்கு ஒரு தீர்த்த கிணற்றை நிர்மாணித்துப் பிரசித்தி பெற்றனர். இதன் விஷயம் லோக்கல் ரிக்கார்டு வால்யம் 15-ல் உள்ளன.

352) கண்டபோதய்ய, இவரும் கன்னம நாயுடு காலத்தவரே ஆவார். இவர் சாலிவாகன சகம் 1417-ஷூ கிறிஸ்து சகம் 1495-ஷூ காலத்தில் ராமலிங்கஸ்வாமி ஆலயம் கட்டி வைத்து பிரதிஷ்டை செய்து பெயர் பெற்று சாசனம் எழுதி வைத்தனர். நெ. 467/15-ல் காணப்படுகின்றன.

353) சல்லா வீரம நாயடு, இவர் சாலிவாகன சகம் 1408-ஷூ கிறிஸ்து சகம் 1486-ஷூ காலவாசி. விஜயநகர பாலகராகிய சாளுவ நரசிம்ஹராயர் காலத்தில் இவர் ராஜப் பிரதிநிதியாக இருந்த ஜகதாபி கஞ்சிராஜா என்றவரிடம் இவர் பனிபென்ட கிராமாதிகாரியாக இருந்தார். இவர் கஞ்சி ராஜனுடைய புண்ணியார்த்தமாக சென்னராய ஸ்வாமிக்குச் சில தோட்டங்களைத் தானமாகக் கொடுத்து

சாசனம் எழுதிவைத்தனர், லோக்கல் ரிக்கார்டு வால்யம் 18.

354) எனுமுல திம்மா நாயடு. இவர் சாலிவாகன சகம் 1439-ஸு கிறிஸ்து சகம் 1517-ஸு காலவாசியாவார். இவர் தந்தை நாரப்ப நாயடு. இவர் பகிடேல கோட்டைப் பக்கமுள்ள ஆஞ்சநேயர் சந்நிதியில் ஒரு சாசனம் எழுதி வைத்தனர். இவர் அக்காலத்தில் மிக்க பிரசித்தி பெற்ற பெற்ற குடும்பத்தினராக இருந்தவர். இவர் தன் தாய், தந்தையர் புண்ணியார்த்தமாக பெஜவாடாவில் மல்லிகார்-ஜுன தேவாலயத்திற்கு 21 வள்ள பூமியைத் தானமாகக் கொடுத்து சாலிவாகன சகம் 1439-வருஷ ஈஸ்வர வருஷத்தில் எழுதிவைத்துள்ளார். லோக்கல் ரிக்கார்டு வால்யம் 16-ல் உள்ளதைக்கொண்டு தெரியவருகின்றன. இவர் பகடால பிராந்தியத்தை ஆண்டு வந்து அங்குள்ள தேவா கோவிலுக்கு பூர்வ காலத்தில், கொண்ட ராஜாக்கள் அநீதியாக வசூலித்து வந்ததை நீக்கி, புதிதாக யுக்தப்படி பிரஜைகளின் இஷ்டபூர்வமாக நிர்ணயம் செய்து தேவஸ்தான பூமிகளை ஈஸ்வர வருஷத்திற்குச் சரியான சகம் 1439-வருஷத்தில் சர்வமானியமாகச் சாசனங்கள் செய்து வைத்ததாகப் பகடால கிராம சரித்திரங்கூறுகின்றன. லோக்கல் ரிக்கார்டு (15) இவர் கிருஷ்ணதேவராயர் காலத்திய ராஜப்பிரதிநிதி ஆவார் என்று கூறப்படுகின்றன. இந்த திம்மா நாயடு கிருஷ்ணராயர் மந்திரியாகிய திம்மருசு புண்ணியத்திற்காக தெனாலி தாலூக்காவில் உள்ள அங்கலகுருரு (அங்கலகுறிச்சி) என்ற கிராமத்திலுள்ள மண்டகோபிநாத ஆலயத்திற்குச் சில பூமிகளைக் கொடுத்து தானசாசனம் எழுதிவைத்தனர். நெ. 634/21.

355) செருகுபல்லி கோபிநீடு. இவர் 16-வது சகாப்த காலம், நள-வருஷம் அங்கலகுறிச்சி கிராமத்தில் மண்ட கோபிநாத தேவாலயத்திற்கு வேண்டிய மராமத்து காரியங்களைச் செய்து ஒரு மண்டபத்தை ஜீர்ண உத்தாரணம் செய்தும் ஒரு சாசனம் எழுதி வைத்துள்ளார். சாசன நெ. 635/21-ல் காணப்படுகின்றன.

356) சதலவாட ராமா நாயடு, இவர் சாலிவாகன சகம் 1443-வருஷம் கிறிஸ்து சகம் 1521-வருஷத்தில் வேல்புநூர் கிராமவாசியாக இருந்தவர், இவர் அந்தக்கிராமத்தில் சாலிவாகன சகம் 1443-வருஷம் ராமநாதஸ்வாமி தேவாலயம் கட்டி வைத்து. சில பூமிகளைத் தானசாசனம் செய்துவைத்துப் பிரசித்தி பெற்றவராவார். சாசன நெ. 573/15-ல் கண்டு கொள்ளலாம்.

357) அன்னமநேனி சின்னதம்மய்ய, இவர் சாலிவாகன சகம் 1443-வருஷம் கிறிஸ்து சகம் 1521-வருஷத்தியவராவார். விஜயநகர பரிபாலனம் செய்த கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்தவர். இவர் மோசல கிராமத்தில் கேதவரபு கோட்டை கோபாலகிருஷ்ணஸ்வாமி தேவாலயத்திற்கு அநேக பூமிகளை மானியம் செய்து வைத்ததாக லோக்கல் ரிகார்டு வால்யம் 12-ல் தெரியவருகின்றன.

358) உப்பலபாடி திம்மா நாயகுடு, இவர் சாலிவாகன சகம் 1460-வருஷ காலத்தவராவார். இவர் விஜயநகர பரிபாலகராகிய அச்சுததேவராயர் காலத்தவரென்றும், இவர் பட்டிப்ரோல் கிராமாதிகாரி என்றும் சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் சாலிவாகன சகம் 1460-வருஷம் கிறிஸ்து சகம் 1538-வருஷத்தில் எழுதிவைத்த சாசனம் லோக்கல் ரிக்கார்டு நெ. 14-ல் உள்ளன.

359) பெம்மசானி கொண்டய்ய நாயடு, சாலிவாகன சகம் 1449-வருஷம் கிறிஸ்து சகம் 1527-வருஷத்தில் புப்பலபாடி கிராமத்தில் அதிகாரியாக இருந்துவந்தனர். புப்பலபாடியில் பிடிகிடிமாதிநேடு என்றவர் சாலிவாகன சகம் 1449-வருஷத்தில் ஒரு குளத்தை வெட்டிக் கரைகள் கட்டி, அதற்குச் சில பூமிகளையும் விட்டுத் தானசாசனம் எழுதி வைத்துள்ளார். அந்தப் பூமியானது பண்டங்கள் மேயக்கூடிய மேய்ச்சல் தரையென்றும், குரையென்றும் சொல்வர் ஜனங்கள்.

360) பிடிகிடி மாதிநேடு, இவர் சாலிவாகன சகம் 1449-ஸு கிறிஸ்து சகம் 1527-ஸு காலம். இவர் புப்பல

பாடி கிராமவாசியாவார். இவர் அந்தக்கிராமத்தில் சாலிவாகன சகம் 1449-வருஷத்தில் ஒரு தடாகத்தை நிர்மாணித்து அதற்கு, அந்த கிராம பாலகராகிய பெம்மசானி கொண்டய்ய நாயடுகாரு சில பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். அதில் இம்மாதிநேடு தந்தையின் பெயர் மும்மய்ய என்றும், பாட்டன் பெயர் மாதிநேடென்றும் தெரியவருகின்றன. நெ. 241/32-33 என்பது சாசன நெம்பர். இவர் கிருஷ்ணதேவராயர் ராஜப் பிரதிநிதியாக இருந்தவர்களில் ஒருவராவார் என்று கூறப் படுகின்றன.

361) கிஞ்சுபல்லி அன்னம நாயடு, அப்பிநாயன்லு. இவர்கள் குண்டூர் ஜில்லாவில் ப்ரத்திபாடு கிராமப் பிராந்தியங்களில் பிரசித்தி பெற்றவராவார். இந்த வம்சத்தியவராகிய கிஞ்சுபல்லி அன்னம நாயடு சாலிவாகன சகம் 1450-ஆம் கிறிஸ்து சகம் 1528-ஆம் காலத்தவர். இவர் தந்தையின் பெயர் போதிநீடு. இவர் விஜயநகர கிருஷ்ணதேவராயர் சமகாலத்தவர் ஆவார். இவர் தன் தாய் தந்தையின் புண்ணியத்திற்காக சாலிவாகன சகம் 1435-வருஷத்தில் ப்ரத்திபாடு கிராமத்தில் கன்பேச்வர தேவாலயங் கட்டி வைத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். சாசன நெ. 142/17 லோகல் ரிக்கார்டு வால்யம் 15. இவருடைய தாயார் பெயர் கிட்டம்ம. இவர் சகோதரராகிய அப்பி நாயடு. சக 1450-வருஷத்தில் அந்த தேவாலயத்தில் முன் மண்டபம் கட்டிவைத்தனர். நெ. 143/17.

362) ஆலமந்தலவார், இவர்களிற் சிலருடைய விஷயங்களை முன்னமே தெரிவித்துள்ளன. இந்த ஆலமந்தல சர்வைய்ய தேவசோழராஜு எந்தக்காலத்தவரென்று தெரியவில்லை. இவருடைய தந்தையின் பெயர் எர்ரய்ய தேவ சோழ ராஜு. இவர் திரிபுராந்தக பிருதுகளைப் பெற்று உள்ளார். இவர் குந்துர்ரு கிராமத்தில் புருஷோத்தம தேவாலயத்திற்கு அநேக பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். அந்தப் பிராந்தியம் இவருடைய ஆட்சிலிருந்ததாகக் காணப்படுகின்றன. நெ. 355/15.

363) ஆலமந்தலகாரா கொல்லி தேவ சோழ ராஜு. இவருக்கும் திரிபுவனபிருத்ர, வென்னுசம்பெர முதலான பிருதுகள் உண்டு. இவர் பேரூர் பிராந்தியத்தைப் பரிபாலித்து வந்தார். சகம் 1450 சௌமிய-ஹூ பேரூர் சோமேஸ்வரஸ்வாமிக்கு 3 புட்ல பூமி 960 வள்ள பூமியைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்ததாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 38-ல் காணப்படுகின்றன.

இந்த வம்சத்தினர் தெலுங்கு சோழ வம்சத்தினராய் இருந்து கம்மவாரில் சேர்ந்து கொண்டதாக முன்னமே கூறப்பட்டுள்ளன. தெலுங்கு சோழர் சிலர் யாதவ ராஜாக்களுடனும், சாளுக்ய ராஜாக்களுடனும் சம்மந்தம் செய்து கொண்டும், சிலர் க்ஷத்திரியர் என்றும், பிள்ளைவார் என்றும், ஆழ்வார்கள் என்றும் சொல்லிக்கொள்வதாகக் காணப்படுகின்றன. (உதாரணமாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 104) இந்தத் தெலுங்கு சோழர்களிலிருந்து பட்லவார், மஞ்சிராஜுவார், பொத்தூரிவார், கொண்டூறி வார், ராசிராஜுவார், மஞ்சிராஜுவார், கொட்டிகன்டி வார், வங்கலிவார், மாட்ராஜுவார், காலுவபோடிவார் முதலானவர்கள் கூட ஏற்பட்டு விஜயநகர சாம்ராஜ்யம் நடந்துவந்த காலத்தில் க்ஷத்திரியர்கள் என்று விவாதித்து வந்ததாக லோக்கல் ரிக்கார்டுகளில் அந்தந்த வம்சாவழி யினர் சாசனங்களால் தெரியவருகின்றன. ஆயினும் கம்ம-வாரில் இவர்கள் சேர்ந்ததாகக் காணப்படவில்லை. இதே போல ஆரவீடி சாளுக்ய வம்சத்தில் சேர்ந்தவரென்று சொல்லிக் கொண்டு வரும் மங்கலம்பாடிவார்களும், வெலபாடிவாரும் கூட சாளுக்ய நாராயணதி பிருதுகளைத் தரித்து கொண்டு க்ஷத்திரியர் என்று வியவகரித்து வந்தனர். இவர்கள் சிலர் கம்மவாரில் சேர்ந்துகொண்டதாகக் காணப் படுக்கின்றன.

364) சாளுக்கிய வம்சாவழியினர், சம்மெடவார், இந்த சம்மெடவார் சாளுக்கிய வம்சத்தியரென்றும், ஆத்ரேய கோத்ரீகர் என்றும் சொல்லிக்கொண்டு வந்த சிலர் க்ஷத்திரியர்களிலும், சிலர் கம்மவார்களிலும் சேர்ந்துபோன தாக முன்னமே சொல்லியுள்ளோம். இவர்களில் கொண்ட ராஜு, வெங்கடராஜு, குருவராஜு, பின்னயராஜு,

திருமலய்ய, தேவசோழராஜு, கப்பராஜு, சிவராஜு முதலானோர் விஜயநகர ராஜ்ய ஆட்சி காலத்தில் சித்தவட பிராந்தியத்தில் பாலகராக இருந்து வந்ததாக லோக்கல் ரிக்கார்டு 11-ல் தெரியவருகின்றன. கம்மவாரில் சேர்ந்த தாகக் காணப்படாததால், அவர்களுடைய சரித்திரங்களை இங்கே கூறப்படவில்லை. இவர்களிற் சிலர் பிளவு பட்டுப் போனதாக மாத்திரமே அந்தச் சரித்திரங்களில் கிரகிக்க வேண்டியிருக்கிறது.

கம்மவாரில் வாசி ரெட்டிகளுக்கும் கூட "சாளுக்ய நாராயண" பிருதுகள் இருந்ததாக 'அஹல்யா சங்க்ரந்தன' என்ற கிரந்தத்தில் கூறப்படுவதால், கம்மவாரில் சில சாளுக்யர் சேர்ந்தனர் என்பது ஸ்பஷ்டம். சாளுக்ய ராஜாக்கள் ஆந்த்ர தேசத்தில் இந்த மாதிரி சேர்ந்த காலத்திலேயே தொண்டமண்டலத்திருந்தவர்கள் அங்கே யாதவ, கங்க, பல்லவ, தெலுங்கு சோழ வம்சத்தினருடன் சம்பந்தம் பெற்று, பிள்ளையார்கள், நயனார்கள், யாதவராயர்கள், ஆழ்வார்கள், முதலியார்கள், செட்டியார்கள், முதலானவர்களுங்கூட மாறியதாகக் காணப்படுகின்றன 1. இதற்கு திருப்பதி தேவஸ்தான சாசனப் புடம் 1-ல் (101 முதல் 107) வரை ஏற்பட்ட சாசனங்கள் மதராஸ் எபிக்ராபிகா 197/1892, 46/1893, 181-195/1903, 601/1907, 271/1921 சாசனங்கள் பிரமாணம் ஆகின்றன இவர்கள் எல்லாரும் கிரமமாக அந்தந்த இடங்களில் வசித்தவர்களைப் பற்றி, சுத்த க்ஷத்ரியர்களாக ஏற்றுக்கொள்ள முடியாததால் ராஜ்யாதி அதிகாரங்கள் விடுபட்டுப் போன பின்னர் சுதந்தரமாக தங்கள் இஷ்டப்படி இராமநுஜ மதஸ்தர்களாகியும் சூத்ரப்ராயர்கள் ஆனதாகக் காணப்படுகின்றன.

365) ராவிவார், ராவிகொண்டநாயனிங்காரு, ராம நாயனிங்காரு, இந்த ராவிவார் என்றவர்கள் கம்மவாரில் சில கோத்ரீகர்கள் இருக்கின்றனர். மாரேடு, வீரங்குல, கம்செர்ல, செறுகுநூள்ல, வல்லுட்ல, போலோள்ள கோத்ரங்கள் இவர்களுக்கு உள்ளன. இதில் ராவிகொண்டா நாயடு, ராமிநாயனிங்கார் என்றவர்கள் ஒங்கோலு தாலூக்

காலில் 16-வது சகாப்த காலம் மிக்க பிரசித்தியுடன் வாழ்ந்து வந்ததாகவும், இவர் விஜயநகர ராஜா சதாசிவ ராயர் காலத்தவராகியதால் சுமார் கிறிஸ்து சகம் 1530-ஆம் காலம் ஒங்கோல் தாலூக்கா பொத்தூர் கிராம பிராந்தியங்களில் இவர் பரிபாலனம் நடந்து வந்ததாகக் காணப்படுகின்றன. இவர் அந்த கிராமத்தில் உள்ள ஸ்ரீ திருவேங்கடஸ்வாமி தேவாலயத்திற்கு அநேக மானியங்கள் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். அதைத் தாள்ளபாக திருமலய்ய என்றவருக்குப் புண்ணியார்த்தமாக கொடுத்ததாகத் தெரியவருகின்றன. இந்தத் திருமலய்ய என்றவர் இவருக்குக் குருவாக இருக்கலாமென்று தோன்றுகின்றன. சாசன நெ. லோகல் ரிக்கார்டு 113.

366) கோள்ளசினராம, பெதராம நரபாலர்கள், இவர்கள் இனுகன்டி பிப்பால கோத்ரீகர்கள் கம்மவாரில் இருக்கின்றனர். அதில் பிப்பால கோத்ரீகராகிய கோள்ளவார் வம்சத்திலிருந்து இவர்களிருவரும் விஜயநகர சாம்ராஜ்யம் 16-வது சகாப்த காலம் பரிபாலனம் செய்து வந்த அச்சுத தேவராயர் காலத்தவராவார்கள். இதில் சினராம நரபாலன் நன்னெ பிரதேசத்திற்கு ராஜாவாக இருந்தும் வந்தனர். இவர் அச்சுததேவராயருக்கு வலது புஜம் போல இருந்து வந்தனர். உபநாரிசிம்ஹமென்றும், கொதமநாயங்கர கண்ட என்றும், ஸ்வாமித்ரோஹரகண்ட என்றும் பல பிருதுகள் பெற்றவராவார். இவர் தம் தமையனுருக்கு (அதாவது) பெதராமநரபாலனுடையபோால், பச்சகற்பூர திருவேங்கட கவி என்ற பட்ராஜுவால் எழுதப்பட்ட 'சொக்கநாத சரித்திரம்' என்ற கிலிபத காவியத்தில் பிரமாதமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுடைய தாய், தந்தையர் பெயர், பசவபூபாலன், திம்மமாம்ப என்பது. இந்தப்பெதராம நரபாலனுங்கூட அவர் சகோதரனைப்போலவே அச்சுத தேவராயரிடம் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்து "உபனூரசிம்ஹா, ஸ்வாமித்ரோஹரகண்டன் என்றும், அச்சுததேவராயதண்டாங்கர் என்ற பிருதுகளைப் பெற்றதாகவும் யெதத் கிரந்தகர்த்தாவாகியவர் பிரபலமாக வர்ணித்துச் சரித்திரம் எழுதி வைத்தனர் என்று காணப்படுகின்றன.

367) பச்சாவார், பச்சாநை நாரய்ய, இவர் சாலிவாகன சகம் 1458-வஷ கிறிஸ்து சகம் 1536-வஷ காலத்தவர். விஜயநகர சாம்ராஜ்யத்தில் அச்சுத தேவராயர் காலத்தில் ராஜப்பிரதிநிதிகளில் ஒருவராகிய சித்தவடம் சீமை பாலகுைகிய சலகராஜா பினதிருமலய்ய தேவராஜனிடம் இவர் ஒரு காரியகர்த்தாவாக இருந்து பிரசித்தி பெற்றவர். பாண்யம் மல்லிகார்ஜுன தேவாலயத்திற்கு யக்ஞசாலை மண்டபம், துவஜஸ்தம்பம் நிர்மாணித்து தங்க முலாம் பூசி வைத்தும், சாலிவாகன சகம் 1457-வருஷம் மன்மத-வருஷத்தில் குண்ட்லமட அக்ரஹாரத்தில் உள்ள தேவாலயத்திற்கும் ஒரு துவஜஸ்தம்பம் நிர்மாணித்து வைத்ததாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 6-ல் தெரியவருகின்றன. இவர் கலிகிரி கிராமத்தில் முக்தகோமேஸ்வரருக்கு 20 (குழி) குண்ட்டல பூமியைக் கொடுத்துள்ளனர் என்று லோக்கல் ரிக்கார்டு வால்யம் 6-ல் எழுதிவைத்திருக்கின்றன.

368) பச்சா கஸ்த்தூரி நாயுடு, இவர் கிறிஸ்து சகம் 1564-1572-வருஷத்தில் இவர் (விஜயநகர அச்சுத தேவராயர் காலத்தில்) மதுரை ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்த பெதகிருஷ்ணப்ப நாயடு அவர்களிடம சேனுதிபதிகளில் சர்தாராக இருந்து சிம்ஹளத் தீவில் நடந்த யுத்தத்தில் கலந்து கொண்டு அங்கு சர்வாதிகாரியாக இருந்த தம்பிச்சி நாயடுவைத் தோற்கடித்து வெற்றி பெற்றதாக முன்னமே கூறியுள்ளன.

369) கொடுகுபாபி நாயடு, இவர் சாலிவாகன சகம் 1460-வருஷம் கிறிஸ்து சகம் 1538-வருஷ காலம் விஜயநகர அச்சுத தேவராயர் காலத்தில் சகலராஜு பெததிருமலய்ய தேவராஜுவிடம் காரியகர்த்தாவாக இருந்து சென்னூர் சீமையைப் பரிபாலித்து வந்த காலம். இவருக்கு ஸ்வாமித்ரோஹரகண்ட என்ற பிருது பெற்றுள்ளார். அந்தச் சீமையில் அமுலுபாக கிராமத்தில் கேசவஸ்வாமி தேவாலயத்தை நிர்மாணித்து, தீர்த்தவாவி, பூங்கா முதலானவற்றையும் நிர்மாணித்து, அந்த கிராமத்திற்கு அல்லமாம்பாபுறம் என்று நாமம் இயற்றி பிரசித்தி பெற்றனர் என்று 'நமுலுபாகஸ்தானீக' சரித்திரத்தில் கூறப்படுகின்றன. லோக்கல்

ரிக்கார்டு வால்யம் 14-லும் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

370) கொடுகு பூமா நாயடு, இவர் கூட 16-வது சகாப்தகால வாசி, கிறிஸ்து சகம் 1520-வருஷம் விஜய நகர ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் பரிபாலனம் செய்துகொண்டு இருக்க, அவருக்கு ஸ்வேதச்சத்ரம் பிடிக்கும் உத்யோகஸ்தராக இருந்து, புடூர் கிராமத்திற்கு இரண்டு மைல் தூரத்திற்கு கிழக்கில் உள்ள கோடூர் கிராமத்தில் ஒரு சிற்றூரைக் கட்டி அதற்கு பூமேபல்லி என்று தன் பேரிட்டு, தெலிகெ சோல கோபால ஆசார்யர் என்றவருக்கு சர்வசுதந்திரமாக அக்ரஹாரமாகக் கொடுத்து, வாம்ன முத்திரையிட்ட சிலா சாசனம் எழுதிவைத்துள்ளதாக சந்த்ரகிரி பாலையாகிய சாசன ரிக்கார்டில் எழுதப்பட்டுள்ளன. இந்த பூமேபல்லிக்கு வேதாந்த ஆசார்யபுறம் என்ற நாமம் பிரசித்தம். இது பின்னர் ஏற்பட்ட திருநாமம். 'ஸவிஜீவிதம்' என்ற கிரந்த காவியத்திலும் காணலாம்.

371) வேமுல ராகவய்ய, இவர் சாலிவாகன சகம் 1498-வருஷ காலவாசியாவார். கொண்டபடு கிராமவாசி இவர் சதுர்த்த குலஸ்தர் என்று தன்னுடைய சாசனத்தில் எழுதி வைத்துள்ளார். இவர் அந்தக் கிராமத்தில் கோபிநாத தேவாலயத்திற்கு 2 குச்செள்ள 28 வள்ள பூமியைக் கொடுத்தும், மற்றும் சில பூமிகளைக் தண்ணீர்ப்பந்தல் காரியத்திற்காக கொடுத்தும் சாசனம் எழுதி வைத்துள்ளார். இவர் அந்தப் பிராந்தியத்தைப் பரிபாலித்து வந்ததாகக் காணப்படுகின்றன. நெ. 89/16.

372) வேமுல சென்னமய்ய, இவர் விஜயநகர சதாசிவராயர் காலத்தில் ராஜப்பிரதிநிதியாகவும் இருந்த மண்டலேஸ்வர திம்மராஜு குமாரன் பாபாராஜுவிடம் ஒரு காரியகர்த்தாவாக இருந்து இவருக்கு பாபதிம்மராஜு சாலிவாகன சகம் 1473-வருஷம் கிறிஸ்து சகம் 1551-வருஷம் குன்லகுன்ட கிராமத்தில் சில பூமிகளை மானியமாக கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர். நெ. 360/32-33. இவர் தந்தை வரதராஜென்றும், பாட்டன் சென்னமய்ய என்றும், முப்பாட்டனர் கூர்மய்ய என்றும் லோக்கல் ரிகார்டு

வால்யம் 37-ல் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

373) சப்பிநேனி குண்டா பாத்ருடு. கிராமங்களை மிராஸ்தார்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்ட காலம் சுமார் 15, 16-வது சகாப்தம் ஆக இருக்கலாம். காகிநாடா கிராமத்து மிராஸ்தாராக இவரை நியமித்ததாகவும், அங்கு இவர் அதிகாரஞ் செலுத்தி வந்ததாகவும் லோகல்ரிகார்டில் எழுதிவைக்கப்பட்டுள்ளன. வால்யம் 60. இது கோல்கொண்ட நவாபு இப்ரஹீம் குதுப்ஷா காலமாக இருக்கலாம் ஆயினும் இவர் தரித்திருந்த பிருதின் விஷயமாக ஆராயும் பொழுது 15-வது சகாப்தம் கஜபதிகளிடம் ராஜப்பிரதிநிதி யாக இருந்தவர் என்று காணப்படுகின்றன.

374) தேவபக்துனிவார், தேவபக்துனி கொண்டய்ய, இவர் மிக்க பிரசித்தி பெற்றவராகக் காணப்படுகின்றனர். இவருடைய வம்ச விருக்ஷம் ஒன்று, இவருக்கு குருவாக இருந்த பண்டிதாராத்ய வீரேசலிங்கம் அவர்களின் கணக்கில் கிடைத்தன. அதில் 30 தற பேர்கள் இருக்கின்றன. இந்த வம்சத்திற்கு மூல புருஷன் நாகன்ன என்றவர் சுமார் 14-வது சகாப்தமாயிருக்கலாம். அவருக்குப் பின்னர் வீரபத்ரய்ய, கொண்டபநீடு, சாம்பய்ய, கொண்டபநீடு என்று வரிசையாகப் பெயர்களிருக்கின்றன. கொண்டபநீடு என்றவருக்கு 4 பேர் குமாரர்கள். வீரன்ன, லக்ஷ்மய்ய, சுப்பய்ய, சித்தய்ய. இவர்களுடைய சந்ததியார்களும், பெதபூடி, காஜ, சேப்ரோலு, கொண்ட்ரு, லப்புருண்ட்ரு, நெலிவோலு முதலான கிராமங்களுக்குப் போய் வாசம் செய்துவந்தனர். இவர்கள் (கோத்ரம்) பசுபநூல்ல கோத்ர வாசிகளாக இருக்கின்றனர். சேப்ரோலு கிராமத்தில் வசித்து வந்த இந்த வம்சத்தவர்களில் சாலிவாகன சகம் 1475-வருஷ காலத்தில் கொண்டய்ய என்றவர் மிக்க பிரசித்தி பெற்றுள்ள கிராமாதிகாரியாக இருந்து ஒடி கிராமத்தில் சாலிவாகன சகம் 1475-ஆம் குமாரஸ்வாமிக்கு ஆலயங்கட்டி பால்குண, சுக்லபக்ஷ 11-வது திதியில் பிரதிஷ்டை செய்து ஒரு சாசனம் எழுதி வைத்துப் பேர் பெற்றனர். (சாசன நெ. S II. IV. No. 105) இது விஜய-நகர அளியராயர் பரிபாலன காலம் நடந்ததாகக் காணப்

படுகின்றன. இந்த தேவபக்தவாரில் பின்னர் இருந்தவர்களும் பிரசித்தி பெற்று வாழ்ந்தனர். மஹமதியர் ஆட்சி காலத்தில் சேப்ரோலு சமுது சௌதரிகளாக இருந்து வந்ததாக லோக்கல் ரிக்கார்டுகளில் தெரியவருகின்றன.

375) யேனுகுல கேசவ நாயடு, இவர் சாலிவாகன சகம் 1479-வருஷம் கிறிஸ்து சகம் 1557-வருஷ காலம் விஜயநகர சதாசிவராயர் பரிபாலன காலம். அவருக்கு ராஜப்பிரதிநிதியாக குத்தி சீமையைப் பரிபாலித்து வந்த மஹாமண்டலேஸ்வர, ராமராஜு திருமல ராஜய்ய தேவ மஹாராஜிடம் இந்த கேசவ நாயடு காரியகர்த்தாவாக இருந்து பிரசித்தி பெற்றனர். இவர் தந்தையின் பெயர் திம்மா நாயடு. சதாசிவராயர் திருமலராஜனுக்குக் கொடுத்த (பதக்கம்—மெடல்) அநதகுஸ்தி சீமைக்குச்சேர்ந்ததாகிய கோடூரி கிராமத்திலுள்ள சென்னராயஸ்வாமிக்கு இவர் ஒரு தானசாசனம் எழுதி வைத்ததாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 15-ல் தெரியவருகின்றன. சாசனம் நெ. L. R. 37-ல் காண்க.

376) சுங்கரவார், சுங்கரசெந்நரசு, இவர் சாலிவாகன சகம் 1482-வருஷம் கிறிஸ்து சகம் 1560-வருஷம் விஜயநகர சதாசிவராயர் காலத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்த சித்திராஜு ஸ்ரீரங்கராஜுலு தேவராஜு ஆதவேனியில் பரிபாலகத்வம் நடத்திவந்த காலத்தில் அவரிடத்தில் இவர் கெரசௌகண்ட ராஜ்ய சுங்க அதிகாரியாக இருந்துவந்தார். அப்பொழுது இவர் அங்குள்ள ராஜராஜேஸ்வரி தேவருக்கு ஒரு பல்லக்கு செய்து (அதாவது சப்பரம்) வைத்துள்ளார். லோக்கல் ரிக்கார்டு வால்யம் 23-ல் காணப்படுகின்றன.

377) சுங்கர பீதாம்பரய்ய, இவரும் சென்னரசு காலத்தவரே. இவர் துர்மதி-வருஷம் சாலிவாகன சகம் 1483-வருஷம் ராஜராஜேஸ்வரஸ்வாமிக்கு சந்தி தீபாராதனைக்கு வேண்டி தனதான சாசனம் எழுதிவைத்தனர். லோக்கல் ரிக்கார்டு நெ. 23-ல் காணப்படுகின்றன.

378) கம்பாலபாடி மதா நாயடு, இவர் சாலிவாகன

சகம் 1487-வருஷம் கிறிஸ்து சகம் 1565-வருஷ காலத்தில் எர்ரகுடி கிராம விவசாயியாக இருந்து அங்குள்ள ராமேஸ்வர தேவாலயத்திற்குச் சில பூமிகளைக் கொடுத்துள்ளதாக ஸ்தானீக சரித்திரத்தில் காணப்படுகின்றன. லோக்கல் ரிக்கார்டு வால்யம் 41. இந்த வம்சாவழியினர் கம்மவாரில் மிக்க பிரபலஸ்தர்களாக வாழ்கின்றனர் என்பது பிரசித்தம்.

379) அடபா நாகப்ப நாயனிங்காரு 11. இவர் சாலிவாகன சகம் 1495-வருஷம் கிறிஸ்து சகம் 1573-வருஷ காலவாசி. இவர் விஜயநகர வீரப்பிரதாப ஸ்ரீரங்க தேவ ராயர் காரியதரிசிகளில் ஒருவராக இருந்து பிரசித்தி பெற்றவர். பொன்னூர் சர்க்காரின் நல்லூர் பிராந்தியத்தை பரிபாலித்து வந்தவர். இவர் பாலனம் சகம் 1500-வருஷ காலத்தில் நடந்ததாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 3-ல் கூறப்படுகின்றன. இவர் சகம் 1495-வருஷம் ஆங்கிரஸ-வருஷத்தில் வல்லூரில் பிராம்ஹணர்களுக்கு அநேக பூமி தானங்கள் செய்து சாசனம் எழுதி வைத்துள்ளார். நெ. 806/26. இந்த வம்சத்தில் அடபாநாயனிங்காரு என்றவர் சக 1448-வருஷம் கிறிஸ்து சகம் 1526-வருஷ காலத்தில் ராஜாதிகாரியாக இருக்க, இவர் கீழ் காரிய கர்த்தாவாக இருந்த கோடிஜநாயனிவல்லப நாயடு என்றவர் முன்னூறில் ஒரு தர்மசாசனம் எழுதிவைத்துள்ளதாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 17-ல் தெரியவருகின்றன. ஆயினும் இந்த நாயடுவுக்கும் நாகப்ப நாயடுவுக்கும் உள்ள சம்மந்த விவகாரங்கள் காணப்படவில்லை.

380) ராவூரிவாரு. ராவூரி சென்னப்ப. இவர் கிறிஸ்து சகம் 1574-வருஷத்தில் ராவூரில் விவசாயியாக இருந்து பிரசித்தி பெற்றவர். இவர் தந்தையின் பெயர் திம்மா நாயடு. இவர் அந்த கிராமத்திலுள்ள தேவாலயத்திற்கு பூமியைத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர். சக 1496-வருஷம் சாசன நெ. 533/14. இந்த ராவூரிவார் சிலர் சாயபநேனிவார் தூபாடி சீமையில் ராஜப் பிரதிநிதியாக இருந்து வந்தனர்.

381) ராவூரி சின்னகுப்பி நாயடு, இவர் வெங்கடகிரி பிராந்தியத்தில் ஒரு உத்தியோகஸ்தராக இருந்து விக்ரம-ஆ கூளூர்பேட்டை தாலூக்காவிலுள்ள உச்சூர் கிராம ஸ்ரீ பீமேஸ்வராலயத்திற்குச் சில பூமிகளைத் தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துப் பிரசித்தி பெற்றவ ராவார், (N. I. S. 20) இவர் தந்தையின் பெயர் பாப்ப நாயுடு.

382) ராவூரி வெங்கடாத்ரி நாயடு. ராவூரிவார் வெலி கண்ட்ற கோத்ரீகர்கள். இவர் கிறிஸ்து சகம் 1638-ஆ பசுவேமுல கிராம விவசாயி. இவர் அந்த கிராமத்திலுள்ள பட்டாபிராமேஸ்வரஸ்வாமிக்கு சகம் 1560-வருஷம் விய-வருஷத்தில் தன தானம் செய்து சாசனம் எழுதி வைத்துப் பிரசித்தி பெற்றவராவார். நெ. 314/30. இவர் சாயப நேனிவாருக்கு முக்கியமான பந்துவாக இருந்து, அவர் ராஜ்யத்தில் பிரதிநிதியாக இருந்து வந்ததாகக் காணப் படுகின்றன.

383) பருசூரிவார், பருசூரிபாபா நாயனிங்காரு, இவர் சாலிவாகன சகம் 1496-வருஷம் கிறிஸ்து சகம் 1574-வருஷ காலத்தில் இவர் பெம்மசானி திம்மா நாயனிங்காருக்கு பேரன் என்றும், அதனால் இவர் தாயார் பெம்மசானி திம்மா நாயனிங்காருக்கு குமார்த்தை என்றும், இவர் அந்தக் காலத் தில் கோசூர் கிராம அதிகாரியாக இருந்து அங்கு சந்தையும், மார்க்கெட்டும் கட்டி, அதற்கு வரி முதலானவைகளை நிர்ணயம் செய்து, பவ-வருஷத்தில் சாசனம் எழுதி வைத்துள்ளார். நெ. 282/32-33. இந்தக் கிராமம் குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்தது.

384) கங்கிநேனி லிங்கமநீடு, இவர் கொர்ரபாடு கிராமக் குடித்தனக்காரர் ஆவார். அந்தக் கிராமத்தில் ஒரு குளத்தை வெட்டி, அதற்கு கரை கட்டி வைத்துச் சாசனமும் எழுதி வைத்துள்ளார். நெ. 280/32-33. மிக்கப் பிரசித்தி பெற்றவராவார்.

385) கூடுறு சென்னம நாயடு, விஜயநகர சதாசிவ ராயர் பரிபாலன காலத்தில் கந்தவோலு பிராந்தியத்திற்கு அதிகாரியாகிய ஸ்ரீ ரங்கராஜு குமாரர் வெங்கடாத்ரி தேவ ராஜனிடம் இவர் காரியகர்த்தாவாக இருந்தார். இவர் சாலிவாகன சகம் 1497-வருஷம் கிறிஸ்து சகம் 1575-வருஷத்திற்குச் சரியான பவ-வருஷம் பேதம் செர்ல என்ற இடத்தில் வங்கலபஸ்ஸோ சுபத்ரோசுகார்லு என்றவருக்கு இனுமாக சில பிரதேசங்களைக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். லோக்கல் ரிக்கார்டு வால்யம் 10-ல் காணப்படுகின்றன.

386) அலவர்த்தி கொண்டப்ப, யலவர்த்திவார், இல்லை யேல் வெலிவர்த்திவார். ஆரவெல்லி கோத்ரஸ்தர். இந்த வம்சத்திய ஷெ கொண்டப்ப என்றவர் சகம் 1525-வருஷம் கிறிஸ்து சகம் 1603-வருஷ காலம் மிக்க பிரசித்தி பெற்றவ ராவார். இவர் தந்தை பசிவிநேனி, பாட்டன் திப்பநேனி. இவர் வேமுல கோட்டையில் ஒரு குளத்தை வெட்டி கரை கட்டி சாசனம் எழுதி வைத்துள்ளார். சகம் 1525-வருஷத்தில் லோக்கல் ரிக்கார்டு 13-ல் காணப்படுகின்றன.

387) பண்டாருபல்லி கொண்டம நாயடு, இவர் கிறிஸ்து சகம் 1642-வருஷ காலவாசியாவார். இவர் தந்தை ஸ்ரீரங்கநாயகுலு. பாட்டன் பண்டாறுபல்லி அம்மநாயகுடு இவருடைய கோத்ரம் ஸ்ரீஹரி கோத்ரம். வீரப்பிரதாப ஸ்ரீரங்கராய தேவமஹாராஜு 3. இவர் பரிபாலன காலத்தில் நிடுமுக்கல கிராமத்திலுள்ள கோபிநாதஸ்வாமிக்கு சில தோட்ட, காடு பூமிகளைக் கொடுத்து தானசாசனம் எழுதி வைத்துப் பிரசித்தி பெற்றவராவார். சாசன நெ. 113/17. 16-17 சகாப்த காலத்திய கம்மவாரிற் சிலர், கோத்ராதிகளை மாற்றப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்ததாக இவருடைய சரித்திரத்திலும், சில ஆதாரங்களிலும் நிர்ணயப்படுகின்றன. பெம்மசானிவாருக்கு கௌண்டின்ய கோத்திரம் என்று ஒருபத்திரத்தில் எழுதியிருந்த விஷயத்தை முன்னமே தெரிவித்துள்ளோம். கொண்டபநாயனிங்கார் என்றவர் காஸ்யப கோத்ரீகர் என்று சகம் 1505-வருஷ

காலத்தில் ஒரு சாசனம் காணப்படுகின்றன. நெ. 266/16. போயர்கள் வால்மீகி வம்சத்தினர் என்றும், வால்மீகி கோத்ர வாசிகளென்றும் சாசனங்கள் எழுதி வைத்துள்ளவை கிடைத்துள்ளன. அந்தக் காலத்தில் அவர்கள் ஜாதியை மாற்றிக்கொள்ளவேண்டி ஏற்பாடு செய்துள்ளனர் என்பது பிரசித்தம்.

388) கொச்செர்ல கோட்ட சீம பாலனம், ராவெள்ள வார், ராவெள்ள மல்லா நாயடு, இந்தக் கோட்டையை வீரபிரதாபராயரிடம் இவர் ராஜப்பிரதிநிதியாக சகம் 1554-வருஷம் கிறிஸ்து சகம் 1622-வருஷ காலம் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தனர். இவர் தந்தை வீரப்பநாயடு. பாட்டனூர் மல்லா நாயடு. இவர் தன் பரிபாலன காலத்தில் தன் ராஜ்யத்திலுள்ள சிங்கரி கொண்ட, பத்தெபாடு என்ற இரண்டு கிராமங்களை அங்குள்ள சென்னராயஸ்வாமிக்கு பூதானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்து பிரசித்தி பெற்றனர். சாசன நெ. 423/23 லோக்கல் ரிக்கார்டு வால்யம் 13, பக்கம் 215-216. இந்த சாசன நகல் வெங்கடாத்திரியிலுள்ளன. 285, 1905. இவருக்குப் பின்னர் பாலகர் விபரம் காணப்படவில்லை.

389) ராவெள்ள திம்மா நாயடு, சுமார் 17-18-வது சகாப்த கால வாசியாக இருக்கலாம். இவர் நெல்லூர் ஜில்லாவில் உள்ள கோட்டை சீமையைப் பரிபாலித்து வந்தவராவார். இவர் அங்கு தன் பேரால் ஒரு கிராமத்தை நிர்மாணித்தும், தவிர இம்மள பசிவி ரெட்டி முதலாகிய வரால் ஜருகுமல்லி என்ற கிராமத்தைக் கட்டச்செய்து, தன்னுடைய பிரதேசத்தில் விவசாயத்திற்கு வேண்டிய வற்றையும் ஏற்பாடு செய்து, கிராமாதி பிரஜகள் விருத்தி அடைவதற்கு வேண்டிய காரியங்களையும் செய்துவைத்து, காளாஸ்திரியில் ஈஸ்வரருக்கு ஆலயம் நிர்மாணித்து பிரதிஷ்டை செய்து, பூஜாதி காரியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தும், அங்கொரு சந்தைப்பேட்டையைக் கட்டி வியாபாரிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து, பிரதி திங்கட்கிழமைகளில் சந்தையை நடத்தி வர ஏற்பாடு செய்து, பேஹார், ஜாடர், சாலெவார்களை

அந்த ஆலய நிர்வாகத்தை நடத்திவர அதிகாரிகளாக நியமித்து, நித்யபூஜ முதலியவைகள் யுக்தமாக நடத்திவர ஏற்பாடு செய்து வைத்தனர் என்று லோக்கல் ரிக்கார்டு வால்யும் 41/171-ல் எழுதியிருப்பது காணப்படுகின்றன. ஔரங்கஜீப் சக்கரவர்த்தியாக நம் நாட்டைப் பரிபாலித்து வந்த காலம் அதாவது கிறிஸ்து சகம் 1700-ஸு காலத்தில் அவரிடம் டபேதாராக இருந்தவர். பச்சகுள்ளபாடு ராஜதானியாக ராவெள்ள திம்மா நாயடு பரிபாலித்து வந்ததாக, கொச்செர்ல கோட்டை ஸ்தல புராணத்தில் நெ. I. D. 35 எழுதப்பட்டுள்ளன. இவரும் அவரும் ஒருவராக இருக்கலாம். இந்த திம்மா நாயடுவுக்கு வெங்கடாத்ரி என்ற குமாரன் இருந்து அவருக்குப்பின்னர் கொச்செர்லகோட்டை சீமையை பரிபாலித்து வந்தார்.

390) ராவெள்ளவாரின் மற்றைய சில விஷயங்கள், வெங்கடபதிராயர் காலத்தில் கிறிஸ்து சகம் 1586-1614-வருஷ மத்தியில் ராஜாங்கத்திற்கு எதிரிடையாக நடந்து கொண்டமையால் மட்ல அனந்த ராஜுவை சேனைகளுடன் அனுப்பி போராடுங்காலம் அநேக உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக லோகல் ரிக்கார்டு வால்யம் 23, 208-254 மறுபடி ஒழுங்காக நடந்துகொண்டதாகவும் காணப்படு கின்றன. பின்னர் கிறிஸ்து சகம் 1616-வருஷ காலம் ராவெள்ள வெலிகொண்ட வெங்கடாத்ரி என்றவர் மட்ல அனந்த பூபாலனுடன் எதிர்த்து வீர சுவர்க்கம் அடைந்து விட்டதாக முன்னமே கூறியுள்ளோம். வீரவெங்கடராயர் காலத்தில் சகம் 1527-வருஷம் விசுவாவசு-வருஷம் கிறிஸ்து சகம் 1605-வருஷம் ராவெள்ளவார் முதலானோர் வெங்கட ராயர் பக்ஷமாக யுத்தத்தில் நிர்வாகம் செலுத்தி வந்ததாக சித்தவடம் கோட்டையின் கிழபுறம் மதிலின் மீதுள்ள சாசனத்தில் எழுதியுள்ள சீசமாலிக பத்யத்தில் காணப்படு கின்றன. லோக்கல் ரிக்கார்டு வால்யம் 22. இதில் ராவெல வெலி வெங்கடாத்ரி ரண பூமிக்குப் பலியானார் என்று வர்ணிக்கப்பட்டுள்ளன.

பதிராயர் வசம் கிறிஸ்து சகம் 1591-வருஷத்திலிருந்து மறுபடியும் கூலிகுதுஷ்பா வசமாகி, இதிலிருந்து மஹமதியர் ராஜ்யத்தி னுள்ளாகவே இருந்தன.

கிறிஸ்து சகம் 1652-வருஷம் ராயல்சீமை என்ற தத்தமண்டலம் பூராவும் மஹமதியர் வசம் ஆயின. அதனுல் அதுமுதல் கொண்டு வேலூர் ராஜதானியாகப் பரிபாலித்து வந்த 3-வது ஸ்ரீரங்காராயருக்குப் பிரதிநிதிகளாயிருந்த கம்ம பிரபுக்கள் எல்லோரும் கோல்கொண்ட நவாபுக்கு உள்ளாக நேர்ந்தன. இந்தக் கோல்கொண்ட ராஜ்யத்திற்கு டபேதார் உத்தியோகத்திற்கு கர்நாடக நவாப்புகளுக்கும், கடப்பை நவாப்புகளுக்கும் ஸ்வாதீனமாயின. கண்டி கோட்டை சீமை பரிபாலகராகிய பெம்மசானிவார் சில காலம் நவாப்புகளின் கீழ், மீர்ஜூம்லா வந்து கிறிஸ்து சகம் 1652-வருஷத்தில் துலைக்கும் வரையிலும் ராஜ்யாதிகாரி களாகவே இருந்துவந்தனர். அப்துல் குதுஷ்பா பரிபாலித்து வந்த காலம். பூர்வீக ராஜப்பிரதிநிதிகளாகிய கம்மவார் எல்லோரும் தேசாதிகாரிகள். கிராமாதிகாரிகளாக மாறிப் போயினர். இவர்களில் தூபாடி சீமை பிரபுக்களாகிய சாயபநேனிவார்களும், நந்திக்ராம, கொண்டவீடு சீமைப் பிரபுக்களாகிய வாசி ரெட்டிவார்களும், தேவரகோட்டை சீமை பாலகராகிய யேர்லகட்டவார்களும், கொச்செர்ல கோட்டை சீமை பாலகராகிய ராவெள்ளவார்களும் முக்கிய மானவர்கள். இந்த அப்துல்லா குதுஷ்பா கோல்கொண்ட ராஜ்யத்தை கிறிஸ்து சகம் 1672-வருஷம் வரையிலும், பின்னர் அபுஹஸான் குதுஷ்பா என்ற தானீஷாகிறிஸ்துசகம் 1687-வருஷம் வரை பரிபாலித்து வந்தார். இதற்குள் தானீஷா இந்துக்கள், இந்து மதம், துருஷ்கர் மதங்களில் துவேஷமில்லாது நடத்திவந்தனர். இவர் காலத்தில் அடிசு மல்லி, தண்டமூடி முதலான இடங்களில் தேவாலயப் பிரதிஷ்டாதிகள் கம்மவார் நடத்திவந்த விஷயங்களை முதல் பகுதியில் குறிப்பிட்டுள்ளன. கோல்கொண்டாவிலும் இந்து தேவாலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளன. தானீஷா ராஜ்யத்தில் இந்துமத அபிவிருத்திக்கு அனுகூலமாக இருக்கக் காரணம், கோல்கொண்ட ராஜ்யம் டில்லி சக்கர

வர்த்தியாகிய ஔரங்கஜேபு அந்த வருஷத்திலேயே ஜெயித்துப்பெற்றுக்கொண்டனர். அதனால் கோல்கொண்ட ருதுஷ்பா சுல்தான்கள் கீழ் உத்தியோகஸ்தர்கள், சௌதரிகள் முதலானவர்கள் எல்லோரும் டில்லி சக்கரவர்த்திக்குக் கீழர்யினர். இந்த டில்லி சக்கரவர்த்தியாகியவரின் வம்சத்தினர் கிறிஸ்து சகம் 1748-வருஷம் வரை அநேகர் ஆந்தர தேசத்தைப் பரிபாலித்துவந்தனர். கிறிஸ்து சகம் 1712-வருஷம் பசலி 1122-வருஷ காலம் சௌதரிகளையும் மற்ற பதவினர்களையும் மாற்றி, கிராமங்களை எல்லாம் கொண்ட-விடி சீமையில் ஜமீன்தாரர்களை ஏற்படுத்தியதாக லோக்கல் ரிக்கார்டில் காணப்படுகின்றன. இந்த மஹமதியர் பரிபாலனத்திலுங்கூட சாதாரண குடும்பத்தினராகிய கம்மவார் எல்லோரும் ராஜ்யத்தில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளால் அவரவர்களுடைய வாசஸ்தலங்களை மாற்றி வெவ்வேறு பிரதேசங்களுக்குப் போய் கிராமங்களிலும், பட்டணங்களிலும் வாசம் செய்து வந்ததாகக் காணப்படுகின்றன.

2) கண்டிகோட்டை ராஜ்யம், துருஷ்க ப்ரபுத்வ காலம். பெம்மசானி திம்மா நாயடு. விஜயநகர சாம்ராஜ்யம் கிறிஸ்து சகம் 1565-வருஷ காலத்தில் மஹமதியர்களால் பின்னப்பட்ட பின்னர் கண்டிக்கோட்டை சீமைப் பிரபுக்களாகிய பெம்மசானிவாரும் மஹமதியர் ஆட்சிக்குக் கீழ்பட நேர்ந்தமையால் பெம்மசானி வெங்கடபதிநாயடுகார் பிரபௌத்திரனும், கிரியப்ப நாயடு பௌத்ரனும், அங்கப்ப நாயடு புத்திரனுமாகிய நரபதி மஹாராயமன்னெராஜஸ்ரீ பிருதாங்கிதராகிய பெம்மசானி திம்மா நாயடு சகம் 1532--வருஷம் சுமார் 1574-வருஷம் வரை அதாவது கிறிஸ்து சகம் 1652-வருஷம் அங்கு ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்ததாக லோக்கல் ரிக்கார்டுகளில் பாலூர் கிராம பாவி-சாசனம் 1588-வருஷம் வரை அவர் பரிபாலனம் நடத்தி வந்ததாகவும் எழுதி வைத்திருக்கின்றன. ஆயினும் அந்த தேதி புரப்பாடாகவுள்ளன. மற்றோர் இடத்தில் சகம் 1571-வருஷம் வரையென்று எழுதப்பட்டுள்ளன.

இவரிடத்தில் தொட்லேடி ரங்கநாதன் என்றவர் ஒரு காரியகர்த்தாவாக இருந்து அநேக கிராமங்களைக் காக்கும் அதிகாரியாக இருந்ததாகவும் காணப்படுகின்றன. இவர் தலமஞ்சி பட்டணம் முதலான 14 கிராமங்களைக்கூட்டி ஒரு சாசனம் எழுதியுள்ளார். (1) இந்த திம்மா நாயடு காலத்தில் கண்டிகோட்டை சீமையை கோல்கொண்ட நவாபாகிய அப்துல்லா குதுஷ்பா கடப்பை சுபேதார்கள் வசம் ஒப்படைத்ததாகவும், அப்பொழுது அங்கு சைய்யத் மீராவுசேன், வரபு, ஏகநாமகான் என்றவர்கள் சுபேதார் களாயிருக்க, திம்மா நாயடு மான்யம் செலுத்திவந்ததாக வும் அந்த பாலனத்தில் கோல்கொண்ட சாயிபுகளுக்கு சுயேட்சையாக ஒரு கிணற்றை வெட்டி கரை கட்டிக் கொடுத்ததாக லோக்கல் ரிக்கார்டு வால்யம் 15-ல் காணப் படுகின்றன.

இவர் காலத்தில் மஹமதியர் ஆட்சி காரணமாக அது வரை தம் குல குருவுக்கு தேசத்தில் மரியாதைகள் நடக்காது என்று பயந்து கேட்க, அவைகளையெல்லாம் கொடுத்து தேச சமயாசாரபத்தரம் எழுதிவைத்துள்ளார். அதில் அந்தக் காலத்திய சௌகரியங்களை அனுசரித்தும் விஷயங் களைக் குறிப்பிட்டுள்ள விபரங்களின் நகல், சகம் 1566-வருஷம் தாரண வருஷத்தில் முசள்ள கோத்தர, வெங்கட பதி நாயடு பிரபௌத்ர, கிரியப்ப நாயடு பௌத்ர, அங்கப்ப நாயடு புத்ர, நரபதிமஹாராஜ மன்னெஸ்ரீ பெம்மசானி திம்மா நாயடுகாரு, உ. ப. வே. திருமல புக்கபட்டணம் குமார தாதாச்சாரியார் ஸ்வாமிகளுக்கு எழுதி வைத்துக் கொடுத்த தேச சமயாசாரப் பத்திரம்.

பூர்வம் தங்களுடைய திருமாளிகைக்கு நரபதி கிருஷ்ணமஹாராயர் காலத்திலிருந்து நடத்தி வந்த தேச சமயாசாரம். தேசம் மிலேச்சர் ஆக்ராந்தம் ஆகிவிட்டபடி யால், தங்கள் திருமாளிகைக்கு நடக்கவேண்டிய வைதிக. ஆசார காரியங்கள் கிரமப்படி நடத்தி வரவேண்டுமென்று கிராம மக்களாகிய சிஷ்ய கோடிகளுக்கு ஆக்ஞையை விதித்துள்ளீர்கள். அதன்படி அடியார்களாகிய நாங்கள்

பஞ்ச சமஸ்காராதிகளைச் செய்துகொள்ள ஏற்பாடு செய்து கொண்டிருந்த சமயம், கோல்கொண்ட பாதுஷா அவர்கள் நம் கண்டிகோட்டை தாலூக்காவுக்கு (4,50,000) சீமை களுக்கு ஹரி சேவை, குரு சேவை, முத்திரை காணிக்கை, தேவாலய கட்டணம், பசிவு முத்திரை, குற்றம், ஒப்பு, தண்டனை, கண்டனம், பத்து, பாவாடம் முதலாகிய தேச சமய ஆசாரம் முதலானவற்றை தங்களிடம் சமர்ப்பித்துள்ளனம். தவிர தங்கள் பூர்வீகர்கள், பாஞ்சால புருஷர்களாகிய பெரியாசார்யார்கள் கட்டி வைத்துள்ள புக்க பட்டணத்தில் உள்ள திருமாளிகை சிம்ஹாசனத்திலிருந்து தங்களுக்குச் சமர்ப்பித்த புக்கபட்டணம் தங்களுக்கு எங்கள் புத்ர, பௌத்ர, பாரபர்யந்தம் அனுபவித்துக் கொண்டு சுகத்திலிருக்கவும்.

3) கண்டபேருண்ட முத்திரை திம்மா நாயடு எழுதிய லோக்கல் ரிக்கார்டு 13, பக்கம் 435-440 என்று காணப்படுகின்றன. இதனால் அந்தக் காலத்தில் கண்டி-கோட்டை ராஜ்யம் நான்கு லக்ஷத்து ஐம்பது ஆயிரம் சீமையாகப்பெயர் பெற்றதாக ஸ்பஷ்டமாகக் காணப்படுகின்றன. அதனாலேயே இந்த ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காக வேண்டி, கண்டிகோட்டையில் கோட்டை பிரமாதமாகக் கட்டப்பட்டு இருந்தன. இந்த கண்டிகோட்டையில் 31 பீரங்கிகள் 2 முகப்புகளில் வைக்கப்பட்டிருந்தன. இவைகளுக்கு வேறு வேறு பெயர்கள் உண்டு. அதில் இராம பாணம் என்ற பெரிய பீரங்கி ஒன்று. இந்த திம்மா நாயடு தம் ஆசார்யருக்கு விட்டிருந்த புக்கபட்டணம் தவிர சகம் 1566-வருஷம் பாலூர் கிராமத்தையும் அக்ரஹாரமாகக் கொடுத்துள்ளதாக சின்தகுன்ட கையெழுத்துப் பிரதியில் காணப்படுகின்றன. லோக்கல் ரிக்கார்டு வால்யம் 12, பக்கம் 435-438 எழுதி வைத்திருக்கின்றன.

அங்கப்ப நாயடு குமாரராகிய இந்த திம்மா நாயடு சக-வருஷம் 1567 சித்ரபானு வருஷம் எர்ரகுடி என்ற இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டி வைத்தனர். லோகல் ரிகார்டு வால்யம் 57, பக்கம் 408. இந்த திம்மா நாயடு

வந்தும், ராயர் வம்சத்தினர் காலத்தில் பரிபாலித்து வந்தவர்களுக்கும் இருந்த சம்மந்தா சம்மந்தம் காணப்படவில்லை. இவர் ப்ரப்பிதாவாகிய வெங்கடபதி நாயடு பேரல்லாமல் பிதாமகராகிய ஓபய்ய நாயடு பேரல்லாமல் சரித்திரங்களில் எங்கும் காணப்படவில்லை. ஆகலால் இந்த வம்சம் ப்ரத்யேகமாகவே இருந்து மஹமதியர் பாலனத்தில் அவருடன் நட்பு கொண்டு இந்த ராஜ்யத்தை நிர்வகித்து வந்தனர் என்பது பிரமானம. பெம்மசானிவார் வம்சம் சம்பூரண வம்ச விருக்ஷம் ஒன்று கிடைத்தும் இதை நிர்த்தாரணம் செய்யமுடியவில்லை. இவருடைய ராஜ்யத்தில் வைரப் படிவங்கள் கண்டுபிடித்து நிறைய ஆதாயம் ராஜ்யத்திற்கு வந்துகொண்டிருந்தன.

இவர் பரிபாலன காலத்தில் பிராம்ஹண மதங்களுக்கு எவ்விதமான கெடுதல்கள் ஏற்படாவண்ணம் பிரத்யேகமாக விஷ்ணு மதத்தினரைப் போஷித்து வந்தனர். தேவாலயங்கள் முதலானவைகளுக்கும் வேண்டிய பாதுகாப்புகளும் உண்டு. இந்தக்காலத்தில் கண்டிகோட்டைப் பிராந்தியங்களில், தட்டார் என்ற (விஸ்வப்ராம்ஹ குலத்தவர்) வம்சத்தவர்கள், பொம்மலாட்டங்களை ஆடி வருபவர்கள், பலிஜர் சிலர் மற்றும் சில ஆட்டங்களை ஆடியும், ஜாதி வார்த்தைகளைப் பிரமாதமாகப் படித்தும் வருவார்கள். இவர்களுக்கு முறகம்பல்லெ என்ற கிராமத்தைச் சுதந்திரமாகக் கட்டி வைத்தும் கொடுத்தனர். இம்மாதிரியான சமூக காரியங்கள் சுபேதார் அதிகாரம் ஏற்படும் வரை நடந்துவந்தனவென்றும் லோகல் ரிகார்டு வால்யம் 35-ல் காணப்படுகின்றன. மஹமதியர் ராஜ்யத்திற்கு உள்ளாகி இருந்தும் இந்த சீமையில் செய்து வந்த மான்யங்கள் சுதந்தரம் பெற்று வந்துள்ளன.

இந்தக் காலத்தில் ஏரி, குளம், தடாகங்கள் பக்கங்களில் நஞ்சை நிலங்களை நன்குகப்பராமரித்து விவசாயங்கள் விருத்தியாக நடத்தி வந்தனர். அநுமத் குண்டம் என்ற இடத்தில் சக 1530-வருஷம் கொடியாறு பக்கத்தில் ஒரு பெரிய குளத்தை இந்த திம்மா நாயடு கட்டிவைத்தனர் என்று லோகல் ரிக்கார்டு வால்யம் 37, பக்கம் 237-ல்

வல்லூர் கிராமத்தில் சிற்பி ஒருவருக்கு சகம் 1532-வருஷத்தில் ஒரு பூமியை மானியமாகக் கொடுத்தனர். சிற்பியின் பெயர் பண்டப்ப. சாசன நெ. 436/21. இது தவிர சக 1558-வருஷத்தில் நரிபெட்ல கிராமத்தில் இவர் பிரதிநிதியாகியவர் ஔபளாலயன கைங்கர்யபரர்களுக்கு சில பூமிகளை தானமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். சாசன நெம்பர் 431/21-ல் காணப்படுகின்றன.

4) கண்டிகோட்டை பதன விஷயம், மீர்ஜும்லா கோல்கொண்ட நவாப் பக்ஷமாகப் படைகளைத் திரட்டிக் கொண்டு, இதுவரையிலும் கண்டிகோட்டை சீமைக்கு ஏற்படுத்தியுள்ளது மாமூல்படி கொடுத்து வந்த கப்பம் போதாதென்று பேராசையுடன் துர் எண்ணங்கொண்டு அங்குள்ள வைரப்படிவங்களை அபகரித்துக்கொள்ள வேண்டி அங்கு சென்று துர்காபதியாகிய திம்மா நாயடுவிடம் தூது அனுப்பி, கோட்டையை விட்டு விடும்படி கூறக்கேட்ட வீர பராக்ரமசாலியாகிய அவர், வம்ச பாரம்பரியமாக ஆண்டு வந்த ராஜ்யத்தை உங்கள் இஷ்டப்படி ஸ்வாதீனத்திற்கு விட இஷ்டமில்லை. உங்கள் படை பலத்தைக்கொண்டு ஸ்வாதீனம் செய்து கொள்ளலாம் என்று தூதுவனிடம் பதில் சொல்லி அனுப்ப, அதைக்கேட்ட மீர்ஜும்லா மஹா உக்ரத்துடன் கோட்டையை முற்றுகையிட உத்திரவு செய்ய, படையினர் மிக்க குதூகலத்துடன் முற்றுகையிட, திம்மா நாயடு தன்னுடைய சேனாதிபதிகளிடம் விஷயத்தைச் சொல்லி தன்னிடமிருக்கின்ற நாலாயிரம் படைகளைத் தயார் செய்து, உடனே கோட்டையிலுள்ள 31 பீரங்கிகளில் முதல் தரமான 'ராமபாணம்' என்ற பீரங்கியை பிரயோகஞ் செய்து ஆர்ப்பரிக்க, எதிரிப்படையினர் அநேகர் அழியவும், கோட்டையிலும் சில பாகம் அழிய, பின்னர் மீர்ஜும்லா வெகுநாள் வரையிலும் தாக்குப்பிடித்துப் போராடியும் வசப்படுத்த முடியவில்லை. பின்னர் தந்திரமாக கோட்டையை வசப்படுத்திக் கொள்வதற்காக வேண்டி சமாதான முறையில் ஒரு ஒப்பந்தம் எழுதி அனுப்பினர். ஒப்பந்த விவரம் இரு தரப்பினரும் மனவேற்றுமையில்லாமல் மனப்பூர்வமாக ஒத்து நடந்து கொள்வது நல்லது. நீங்கள்

இந்தக் கோட்டையை விட்டு, தக்கிதுர்க்கம் கோட்டையை நீர் ஸ்வாதீனம் செய்துகொண்டு சுகமாக வாழவேண்டும் என்று கோருகின்றனன். தூதுவன் கொண்டு வந்து நாயுடு விடம் கொடுக்க, அதைப்பார்த்து மந்திரி பிரதானிகளிடம் யோசனை செய்து சம்மதம் தெரிவித்து அனுப்ப நவாபும் மிக்க சந்தோஷப்பட்டு பரிவர்த்தனம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து நாயுடுவை சகபரிவாரத்துடன் அனுப்பிவிட்டுக் கோட்டையை ஸ்வாதீனம் செய்து கொண்டு குடியேறினன். திம்மா நாயுடு அங்குள்ள தேவாலய விக்ரகங்கள், ஆபரணங் களெல்லாம் அந்த இடத்தில் (ராஜசெருவு என்ற இடம்) பூபதனம் செய்து விட்டுச் சென்றனர்.

இதற்குள்ளாக தம் மந்திரிகள் கூடி மீர்ஜும்லாவை வசப்படுத்தி, முன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மாற்றி அநுமனகந்தி கிராமத்தை நீர் ஏற்றுக்கொண்டு தக்கி-துர்க்கத்தை விட்டுவிடவேண்டுமென்று எழுதி தூதுவனிடம் கொடுத்தனுப்பத் தூதுவன் சென்று நாயடுவிடங் கொடுக்க அதைப் பார்த்த பொழுது தான் ஏமாற்றம் அடைந்ததை உணர்ந்து, அந்தக் கிராமத்தில் இருக்க மனம் இசையாமல் சேனாதிபதிகள், அதிகாரிகள் எல்லோரையும் கலந்து யோசனை செய்து, ராஜாங்கத்தின் மீது வெறுப்புற்று அவர் வெவ்வேறு இடங்களில் வாசம் செய்து கொள்ளும்படி சக குடும்பத்துடன் வேறு கிராமத்திற்குச் சென்று வாசம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டு, தர்மாவரம் பிராந்தியத் திற்குச் சென்றதாக கண்டிகோட்டை சாசனத்தில் காணப்படுகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 16-ல் எழுதப்பட்டுள்ளன. இந்த திம்மா நாயடுவிடம் 30 பேர் சர்தார்களும், 4000 சேனையும் இருந்தனவென்று முன்னர் கூறப்பட்டுள்ளன. இந்த ரீதியில் கெடிகோட்டை மஹமதியர் வசமாயின.

5) பெம்மசானிவார் கண்டிகோட்டை ராஜ்ய விசேஷங்கள் கூறப்படுகின்றன. பெம்மசானிவார் சுமார் கிறிஸ்து சகம் 1431-வருஷம் முதல் 1652-வருஷம் வரை 200 வருஷங்கள் கண்டிகோட்டை சீமையைப் பரிபாலித்து

வந்தனர். இவர்களில் இம்மடி திம்மா நாயடு காலத்தில் மல்லெல கிராமமுங்கூட இவர் பாலனத்திலிருந்தன. அதில் குடியிருந்து வந்த மாதாரிகள் (சக்கிலியர்) சக்கிலியர்கள் கிராமவாசிகளுக்கு மிக்க இடையூறுகள் செய்துவந்தனர். இந்த விஷயத்தைக் குடிமக்கள் நாயடுவிடம் தெரிவிக்க உடனே அவர் அங்கு சென்று விசாரித்து தகுந்த தண்டனை விதித்து அவர்களை அடக்கி வைத்தனர். (அந்த துஷ்டர்களை சிரச்சேதம் செய்து) அடக்கியதாகக் காணப்படுகின்றன. மல்லெல கிராம கைபியத்துப் பிரதியிலும் தெரிய வருகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 7.

சாலிவாகன சகம் 1388-வருஷ காலம் ஜெடி திம்மா நாயடு கொண்டபல்லெ என்ற கிராமத்திற்கு விரூபாக்ஷ புரமென்று பெயரிட்டு அதை இம்மடோர் ம்ருத்யுஞ்சய சாஸ்திரி என்ற பிராம்மணருக்கு அக்ரஹாரமாகத் தானம் கொடுத்துள்ளதாக லோகல் ரிகார்டு வால்யம் 12, பக்கம் 435-440-லும் மெகன்ஸிசங்க்ரமணத்திலும் (15–3–39) எழுதப்பட்டுள்ளன. இந்த கிராமம் ஆதியில் சிக்கராயர் அவர்களுக்குக் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளன. இந்தப் பத்திரத்தில் பெம்மசானிவாருக்கு கௌண்டின்ய கோத்ரம் என்று எழுதியுள்ளன. இதே போல பிராம்மணர்களும் கோத்ரங்களை மாற்றி வேறு கோத்ரங்களை ஏற்படுத்திக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இந்த பெம்மசானி வாரி கண்டிகோட்டை சீமையைப் பரிபாலித்து வந்த காலம் கோவில்கள், மடங்கள், சத்திரங்கள், தண்ணீர் பந்தல் முதலான தர்ம காரியங்களுக்கு வேண்டிய பூமிகள், கிராமங்கள் எல்லாவற்றையும் மானியங்களாகக் கொடுத்து சாசனங்கள் எழுதிவைத்துள்ளார். லோகல் ரிகார்டு வால்யம் 12-15, பக்கம் 117-118-20 காணப்படுகின்றன.

பெம்மசானி நரசிம்ஹ நாயடு பரிபாலன காலம் வத்திரேல கிராமத்தில் பேரம் நாகிரெட்டி, சமுறு ரெட்டி என்றவர்களுக்குச் சன்மானமாகச் சில பூமிகளை மான்யம் கொடுத்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 20 எழுதியுள்ளன. பாரம்பல்லெ கிராமத்தில் பெம்மசானி திம்மா நாயடு ஒரு

கோபுரம் கட்டி வைத்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 28, பக்கம் 43-ல் எழுதப்பட்டுள்ளன.

6) வஜ்ராங்களின் எற்றுமதி விஷயங்கள், பெம்ம-சானிவார் பரிபாலன காலத்தில் பய்யனபல்லெ, கனுபர்த்தி, குர்ரம்பாடு, சினமாசிபல்லி கிராமங்களில் வஜ்ர பாடிவங்களை எடுத்து நிதம் 1 சேர் அளவு ஏற்றுமதி செய்துவந்தனர். இக்கனிப்ரதேசங்கள் சென்னூர் தாலூக்காவில் உள்ளன. இந்த ஏற்றுமதி அநேக தேசங்களுக்கு அனுப்பி வந்ததாக லோகல் ரிக்கார்டு வால்யம் 22-ல் காணப்படுகின்றன.

நரசிம்ஹநாயபாலன், சென்னமராஜூ, லிங்கன்ன என்றவருக்கு நெல்லூர் கிராமம் மானியமாகக் கொடுத்து சாசனம் சகம் 1516-வருஷத்தில் எழுதி வைத்துள்ளார். நெல்லூர் கைஎழுத்துப் பிரதி லோகல் ரிக்கார்டு வால்யம் 39-ல் உள்ளன. பெம்மசானி திம்மா நாயுடு தன் சகோதரி கொவிந்தம்மாளுக்கு பாரதிபுரத்தை ஜாகீர் செய்து கொடுத்துள்ளார். அங்கு அவ்வம்மையார் பேரால் ஒரு பேட்டையைக் கட்டிவைத்தனர். லோகல் ரிகார்டு வால்யம் 35, பக்கம் 10. அந்தக் காலத்தில் வஜ்ராகரங்களை எடுப்பதற்கு விதித்திருந்த வரியை இந்த திம்மா நாயுடு நீக்குதல் செய்து சாசனம் செய்து வைத்தனர் என்று கூறப்படுகின்றன. ராயர் ராஜ்ய பரிபாலன காலத்தில் கம்மவாரிற் பிறந்திய இந்த திம்மா நாயுடு சகம் 1431-வருஷத்தில் சுக்ல வருஷம் புலிமள்ள கிராமத்தில் தேவாலயத்திற்கு கோபுர ப்ராகார மண்டபாதிகளை நிர்மாணித்து 3 கிராமங்களை மானியமாகக் கொடுத்து பூர்வீதி யுக்தப்படியே ஆராதனை உத்சவாதிகள் நடத்தி வந்ததாகவும் லோகல் ரிக்கார்டு வால்யம் 44-ல் காணப்படுகின்றன.

7) நல்லமோதுலவாரு, நல்லமோதுஸ்வாமி, மஹமது குலி பாதுஷா கோல்கொண்டாவில் கிறிஸ்து சகம் 1581-1611-வருஷமத்தியில் ராஜ்ய பரிபாலனம் செய்துவர அவரிடம் கொண்டவீடு சீமைக்கு அமல்தார் என்ற அதிகாரியாக அமீன்முல்க் என்றவரை நியமித்து அந்தப் பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்த காலம். அவர் நீதி விரோதமாக

அநேக தேவாலயங்களைப் பாழ் படுத்தியும், பிரஜைகளுக்கு அநேக கஷ்ட நஷ்டங்களைக் கொடுத்து வர, அதைத் தாங்க முடியாமல் பிரஜைகள் எல்லோரும் கூடி யோசனை செய்து பெரிய மனிதர் நால்வரை நியமித்து கோல்கொண்டாவுக்குப் போய் நவாபிடம் தங்களுக்கு நேர்ந்துள்ள விஷயங்களைச் சொல்லி முறையிட, அந்தக்காலத்தில் நாதெண்லசமுது என்றவர் சௌதரி பட்டம் பெற்றுள்ளவர், நல்லமோது வாரைச் சேர்ந்தவர் ஒருவர் ஊர் மக்களிடம் சொன்னதாவது நாம் அனைவரும் கட்டுப்பட்டு, கலையாமல் ஒன்றுகூடி அந்த பஹமதியருடன் போராடி நம் காரியங்களை வெற்றியுடன் ஜெயிக்கின்ற வரையிலும் நம் கையால் மேளியைத் தொடுவதில்லையென்றும் பிரதிக்ஞை செய்துள்ள விஷயங்கள் நவாபுக்குத் தெரிந்து உடனே குடிமக்களுக்கு ஆதரவு தெரிவித்து, அந்த துஷ்டனாகிய அமீன் முல்லாவை அங்கிருந்து வரவழைத்து சிவலைகான் என்றவரை அமல்தாராக அனுப்பி வைத்தனர். இந்த நல்லமோதுவாரி செய்த பிரயத்தனம் பலித்ததாகச் சொல்லுகின்றனர். தவிர அவர் காட்டில் வைத்திருந்த மேளியானது தளிர்விட்டு மராமரி விட்டதாகவும் கூறப்படுகின்றன. இந்த நல்லமோதுவார் இன்றைக்கும் பிரபலமாக வாழ்ந்து வருகின்றனர்.

8) நல்லமோது ரமணப்ப, இவர் கிறிஸ்து சகம் 1697-வருஷம் சாலிவாகன சகம் 1619-வருஷத்தில் இவர் கோல்கொண்ட நவாபாகிய குதுபுத்தீன் அசப்ஜா காலத்தில் நாதெண்ல அதிகாரி (சௌதரி) யாக இருந்ததாகக் காணப்படுகின்றன. இவரும் மாஜோரி கொண்டல நாயுடு காரும் கூடி சாலிவாகன சகம் 1619-வருஷம் எதிர்பாடு கிராம கர்ணங்களுக்கும், குடிமக்களுக்கும் தகாதா ஏற்பட்டு ரிப்போர்ட் செய்திருந்தனர். நவாப் அதை அங்கீகரித்து இவர்களுக்கு சாதகமாக அநுமதி கொடுத்தனர். பின்னர் எதிர்பாடு கிராமத்தை அம்மபூடி ராமகிருஷ்ண சோம-யாஜிக்கு இனாமாகக் கொடுத்துள்ளதாக காணப்படுகின்றன எழுதிவைத்துக் கொடுத்த தாக்கீது நகல், லோகல் ரிகார்டு வால்யம் 3-ல் இருக்கின்றன. மாஜோரிவார் அந்த கிராமங்களுக்கு சௌதரிகளாகவும், ஜமீன்தார்களும், நல்லமோதுவார் சௌதரிகளாகவும் இருந்ததால் அவர்களிருவரும் அந்த தாக்கீதில் கையெழுத்திட்டனர்.

9) நல்லபோது எல்லாபந்தே, நாயேகுண்ண துர்க்கத்தில் சேனாதிபதியாக இருந்து கிறிஸ்து சகம் சுமார் 1600-1690-வரை பக்கத்தில் இவர்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட கிராமங்கள் 100-க்கு நூறுபாடு கிராமம் ஒன்று என்று சேனாகல் நோட்ஸ் வால்யூம் 60. பக்கம் 19-ல் காணலாம்.

10) பட்லவாரு, பட்லகூபநேநி, கூபநேநிவாரு, பட்லவார் கம்மவாரில் கிறிஸ்து சகம் சுமார் 1592-வருஷ காலம் இவர் அமினபாத கிராமத்தில் பிரசித்திபெற்ற அதிகாரியாக இருந்து கோல்கொண்ட நவாபாக இருந்த இப்ராஹிம் பாதுஷா, குதுபுஷ்பாக்களிடத்தில் வேலை செய்து கொண்டு கொண்டவீடு சீமைக்கு அமீன்கா கிறிஸ்து சகம் 1591-வருஷத்தில் பக்தராயராம் குதிரை தண்டு துணைகளுடன், 20 ஆயிரம் காலாட்படையுடனும் வந்து மலைமீதில் பிரவேசித்து கொண்டவீடு சமீபத்தில் ஒரு கிராமத்தைக் கட்டி அதன் பக்கத்திலிருக்கும் முன்னமேயிருந்த தேவாலயத்தை இடித்து நாசஞ்செய்து, அதிலிருந்த சிலைகளை எடுத்து எறிந்துவிட்டு, அதை மஸ்ஜிதாக மாற்றினார்கள். இதேபோல அநேக தேவாலயங்களை எல்லாம் நாசஞ்செய்து வந்தனர். இவைகளையெல்லாம் கண்டறிந்த பட்லகூபநேநி அந்தச் சிலைகளையெல்லாம் எடுத்து வந்து பத்திரப்படுத்தி, பூஜை காரியங்களையும் நடத்தி வந்தனர். அமீன் முக்து என்றவன் ராஜகாரியங்களைக் கவனிக்காமல் பறவைகளை வேட்டையாடி வந்ததாகக் கண்டறிந்த கோல்கொண்ட நவாப் உடனே கிறிஸ்து சகம் 1598-வருஷத்தில் சாவைரூபத்த அவனுடைய கண்களை பிடுங்கிவிடச் செய்து, அவனை சிறைக்குள் அடைக்கிறார். சாலிவாகன சகம் 1524-இல் கிறிஸ்து சகம் 1602-வருஷத்தில் கூபநேநி குமாரனாகிய கூபநேநி அமீனபாதுக்குக் கிழக்கில் ஒரு கோவில் கட்டி விக்கிரகங்கள் ஸ்தாபிதஞ் செய்து பூஜை முதலான காரியங்களை யுக்தமாக நடத்திவந்தார்.

10) நாசரவார், நாசரஅநந்தய்ய, இவர்கள் கம்ம-வாரில் என்னுடைய கோத்ரவாசிகளாக இருக்கின்றனர். தவிர நாரா, நாகேரல, நார்லவார் என்றவர்களும் இருக்கின்றனர்.

ஆதலால் வேறு வேறு கோத்ரங்களை அநுஷ்டித்து வருகின்றனர். நாராவாரில் கிறிஸ்து சகம் 1619-ம் வருஷத்தில் அநந்தய்யா என்றவர் பிரசித்தி பெற்றவராக வாழ்ந்து வந்தனர். இவர் விநுகொண்டா சீமையில் சில கிராமங்களில் கந்தாய வசூல் செய்துவந்தனர். இவர் காலத்தில் குண்டுபல்லி பாஸ்கரன் என்ற யோகி இருந்தார். இவர் மந்திரயந்திரங்களில் மிக்க பிரசித்திபெற்றவராவார். 64 வித்தைகளும் கற்று, அக்கினி ஸ்தம்பம் முதலானவற்றில் மிக்க நிபுணராகப் பெயர் பெற்றவராவார் தன்னிடம் வந்த ரோகிகளுக்கு தக்க சிகிச்சைச் செய்து குணப்படுத்தி வந்தார். பின்னர் நவாபும் இவருக்கு நல்ல மதிப்புக் கொடுத்து தம்மிடத்திலேயே வைத்துக்கொண்டார். முதலில் சாலிவாகன சகம் 1541-வருஷ காலம் இந்த நாரா அநந்தய்யனிடம் 12 வள்ளம் பூமியை மானியமாகப் பெற்று அதில் விளையும் வஸ்துக்களை ஏழை எளியவர்களுக்கு வழங்கி வரவேண்டுமென்று சாசனம் எழுதி வைத்துள்ளனர். இது போலவே அநேக பூமிகளை இனாமாகப் பெற்று தன் வசம் செய்து கொண்டுள்ளனர்.

11) கொல்லூரி நாகிநேடு, பண்டிகொண்டமநீடு, பெதகுறிச்சி சேவய்ய, குனிரம்நேடு, மலிநேனி ஸ்ரீரங்கைய்யது. இவர்கள் உதயகிரிமலையின் மீதில் அநந்த தேவாலயம், நரஸிம்ஹஸ்வாமி தேவாலயம், கோபிநாத ஆலயம் முதலியவைகளைக் கட்டியிருக்கின்றனர். அங்கு சிதிலமாக உள்ள சிலாசாசனங்களில் இவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டு உள்ளன. அதனால் இவர்கள் அந்த ஆலய நிர்மாணகர்த்தாக்களாக இருக்கலாமென்றும், அந்தப் பிராந்தியங்களுக்கு மிக்க பிரசித்தி புருஷர்கள் என்றும் காணப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1700-வருஷ காலத்தவரென்றும் நிர்ணயமாக எண்ணப்படுகின்றன.

12) எலமஞ்சிலி ராமிநீடு, யலமஞ்சிவார் சாளுக்ய வம்சத்தினர் என்று முன்னமே கூறியுள்ளோம். இவர்கள் வல்லூட்ல கோத்ரீகர்களாக இருக்கின்றனர். இவர்களில் ராமிநீடு என்றவர் கிறிஸ்து சகம் 1579-வருஷ காலத்தவர் ஆவார். இந்த வம்சத்தினர் தங்கள் ஆசார்யரிடமிருந்து

பெற்ற தாளபத்திரத்தில் இவரைக் குறித்துச் சொல்லுகின்ற விஷயங்களின் மேல் விபரங்கள், மேடூர் சீமைக்கு மேன்மை பெற்ற சௌதரி என்றவர் உத்யோகம் செய்து வந்தனர். இவருக்கு ஆண் சந்ததி இல்லாததால் கிழக்கிலிருந்து வந்த எலமஞ்சிலி ராமிநேனி என்றவரைத் தன்னிடம் வைத்துக் கொண்டனர். சர்க்கார் உத்தியோகஸ்தராகிய சௌதரி தனக்குப் பதிலாக கிஸ்து வசூல் துகையை கோல்கொண்டாவுக்கு அனுப்பும் பொழுது இந்த ராமிநீடுவைக் கூட அனுப்பினர். வழியில் பல கிராமஸ்தர்கள் கூடி எல்லோரும் போகும் பொழுது சிலர் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்திக்குக் கையில் காசில்லாது இவரிடம் அவர்கள் முறையிட, அவர்களுக்கு வேண்டி தன்னிடம் இருந்த துகையை அவர்கள் வசம் கொடுத்து சர்க்காருக்கு செலுத்த ஏற்பாடு செய்தனர். ஆயினும் தங்கள் கணக்கில் பாக்கியிருப்பதை நவாபிடம் தெரிவித்தனர். நவாபு உடனே இவரை தண்டிக்கும்படி உத்திரவிடவே, இதை அறிந்த அவர், முன்னர் லாங்கூல கஜபதி அவர்களிடம் சமஸ்கிருத பண்டிதராக இருந்தும். கோல்கொண்ட நவாபுக்கு நண்பருமாக இருந்த சக்ரவர்த்தி ஸ்ரீநிவாசாச்சாரியர் அவர்களிடம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி முறையிட, அவர் உடனே நவாபிடம் சென்று, தண்டிக்கப்பட்டவர் தன் சிஷ்ய கோடிகளிற் சேர்ந்தவரென்று சொல்லி அவர் செய்த காரியம் ஏழைக் குடிமக்களுக்குத் தான் செய்த உதவியை விவரித்துச்சொல்லியும், எலமஞ்சிவாரில் இவர் தான் இருக்கின்றனர் என்னுடைய சிஷ்யன் ஆகையால் மன்னிக்கவேண்டுமென்று கூற, நவாபும் அதை ஏற்றுக்கொண்டு விடுதலை செய்தனர். நவாபும் ராமிநீடுவைப் பார்த்தும், அவருடைய நடையுடை பாவனைகளைக் கண்டும், குரு-சிஷ்யன் என்பதையும் கண்டு மிக்கப்பரிவுடன் அவரைக் கொண்டாடி, ராமிநீடுவுக்கும் சௌதரி பட்டம் கொடுத்து அனுப்பினர். இதற்குள் மேடூரி சௌதரி ராமிநீடு வந்து சேராமல் காலதாமதம் ஏற்பட்டதால் அதை விசாரித்துக்கொண்டிருக்கையில் ராமிநீடு ஆசார்யருடன் அங்கு வந்து சேர்ந்து நடந்த விஷயங்களை எல்லாம் தெரிவித்தனர். உடனே ஆசார்யஸ்வாமிகளுக்கு முறைப்படி மரியாதைகள் நடத்திவைத்தனர். பின்னர்

மேலிமி சௌதரி தன் குமார்த்தையாகிய நானம்மாளை அவருக்குப் பாணிக்ரஹணம் செய்துவைத்தார். இந்தத் தம்பதிகளும், அவர் சந்ததியர்களும் அந்த ஆச்சார்யர் ஸ்வாமிகளுக்கு சிஷ்யர்களாக கிருஷ்ணா நதிப்பக்கம் பிரமாதமாகக் கொண்டாடினர் என்று கூறப்படுகின்றன.

சௌதரி பட்டங்கள் கிறிஸ்து சகம் 1579-1711-வரை மத்தியில் அமலில் இருந்து வந்தன. லாங்கூல கஜபதி கிறிஸ்து சகம் 1424-31-வருஷ காலத்தவரானதாகக் காணப்படுகின்றன. சகம் 1200-வரு பசலி 688 பகுதான்ய வருஷத்தில் கோல்கொண்ட விருத்நாந்தம் நடந்ததாகத் தாளபத்திர நகலில் உள்ளன. இந்தத் தேதிகள் கொஞ்சம் மாறுபட்டுள்ளன, இந்த வம்சாவழியினர் கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களில் எலமஞ்சிவாரென்று வாசஞ்செய்து வருகின்றனர்.

13) விப்பர்த்தி மல்லிநேடு, வெங்கடாத்ரி கரகன்ன நாயடுகார்லு, இவர்கள் சாலிவாகன சகம் 1570-வருஷம் கிறிஸ்து சகம் 1648-வருஷ காலத்தில் இம்மூவரும் துவ்வ கிராமத்தில் குடியானவர்களாக இருந்து வந்ததாகவும் காணப்படுகின்றன. இவர் தந்தை திம்மா நாயடு. இவர் சகம் 1570-வருஷத்தில் கோபாலராயஸ்வாமி தேவாலயத்தை ஜீர்ணஉத்தாரணம் செய்து சாசனம் எழுதி வைத்து உள்ளனர். சாசன நெம்பர் 15/29-30.

14) சாகி ரகுநாதய்ய, இவர் கிறிஸ்து சகம் 1619-வருஷம் சகம் 1541-வருஷ காலம் வப்பிசர்ல கிராமத்தில் குடியானவராக இருந்து அங்குள்ள ஆஞ்சநேயர் சன்னதிக்கு ஒரு மண்டபம் கட்டி வைத்து சாசனம எழுதி வைத்துள்ளார் சாசன நெ. 566/1910.

15) கூசிவெங்கடகிரி, வெங்கடாத்ரி, வெங்கடபதி நாயடு, இவர்கள் சாலிவாகன சகம் 1598-வருஷம் கிறிஸ்து சகம் 1676-வருஷ காலம் இம்மூவர் சகோதரர்களும், இவர் தந்தையாகிய பாபி நாயடுவும், பாட்டனர் திம்மா நாயடு, இவர்களுடைய கோத்ரம் கலுமூறு கோத்ரம். இவர்கள்

மூவரும் சேர்ந்து வெலிபுட்ல கிராமத்தில் சகம் 1598-ஞு அக்ரஹாரம் உண்டாக்கி பிராம்ஹணர்களுக்குக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளனர். ஸ்தானீக சரித்திரம் வால்யம் 14-ல் எழுதப்பட்டுள்ளன. இதனுல் இவர்கள் அந்தப்பிராந்தியத்தை பரிபாலித்து வந்ததாகக் காணப் படுகின்றன. சகம் 1567-வருஷம் சித்ரபானு-வருஷத்தில் பெம்மசானி திம்மா நாயடு கண்டிகோட்டை பிராந்தியத் தில் அரசாட்சி செய்து வந்தார். அப்பொழுது கூசிவார் என்ற கம்மவார் பிரபலமாக எர்ரகுடி, அநுமத்குண்டம், முறுநந்தி முதலாகிய சில கிராமங்களை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அங்கு விவசாய காரியங்களை நடத்தி வந்ததாகக் காணப்படுகின்றன.

இந்த கூசிவார் பாலனம் பெருசோமுல கிராமத்தில் நடந்ததாக அந்த கிராம கர்ணம் பெருமாளுக்கும் இவர் களுக்கும் தகாதா ஏற்பட்ட சமயம் அதை விசாரிக்க அவரை அங்கு அனுப்பியதாகவும், அந்தக் குரோதம் மனதில் வைத்துக்கொண்டுதத் வம்சத்திய சூரப்ப என்றவர் அனுமகுண்டம் ஜமீன்தாராகிய புல்லா ரெட்டியிடம் சென்று புகார் செய்து அவர் அனுப்பிய சிப்பந்தியுடன்வந்து பெருசோமுல கிராமத்தை ஆக்ரமித்துக்கொள்ளும்படி செய்ததாகவும், அப்பொழுது கூசிவார் வேறிடத்திற்குப் போய்விட்டதாகவும் அநுமத்குண்ட கையெழுத்துப் பிரதி யில் காணப்படுகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 21லும் எழுதிவைத்துள்ளனர்.

16) வக்கலகட்ட வீரப்ப, இவர் ஒரு கிராமாதிகாரி யாக கம்மவாரில் கிறிஸ்து சகம் 1700-வருஷம் அம்மகில்லா தார் தாலூக்கா தனகொண்ட, பெதகந்துகூறு, சங்கரா புரம், கன்னமடகால முதலான பிராந்தியங்கள் இவருடைய ஜாகீரில் சேர்ந்தவைகள். கற்பூறம் கோனப்ப பந்த்துலு ஆதிக்கத்தின் கீழாக குடிமக்களுக்குக் கொடுத்த காலம் இவர் அதைப் பெற்று வந்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 10-ல் காணப்படுகின்றன.

17) தொப்பலபூடி ரமணப்ப, இவர் கிறிஸ்து சகம் (1687) வருஷ காலத்தில் குண்டூர் சமுதுக்களில் சேர்ந்து, அடுசுமல்லெ கிராம குடிமக்களில் இவர் பிறசித்தி பெற்றவ ராவார். அந்த கிராமத்திலிவர் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி தேவாலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டாதி காரியங்களைப் பூர்த்தி செய்து வைத்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 3-ல் சதுர் கிராம கையெழுத்துப் பிரதியில் காணப்படுகின்றன. இந்த தேவாலய நித்யபூஜை காரியங்களுக்கு கர்த்தாவாக பராங் குசர் என்றவர்களை நியமித்தும் அர்ச்சக பரிசாரகர்களுக்கு 15 வள்ள தோட்டக்கால் பூமியை மானியமாகக் கொடுத் துள்ளதாக மற்ருெரு ரிகார்டில் எழுதப்பட்டுள்ளன, கோல் கொண்ட நவாப் தானிசா காலத்தில் இந்து தேவாலயங்கள் நிர்மாணித்து வந்ததாக இவருடைய ரிகார்டுகளில், சரித் திரங்களில் தெரியவருகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 60-ல் விஸ்தாரமாக எழுதி வைத்துள்ளன.

18) அர்டாட புச்சன்ன, இவர் அடுசுமல்லி கிராமக் குடிமக்களில் ஒருவராகியவராவார் கிறிஸ்து சகம் (1687) வருஷ காலம் அந்த கிராமத்தில் வீரபத்ரஸ்வாமிக்கு ஆலயங் கட்டி வைத்துள்ளதாகச் சதுர் கிராம கையெழுத்துப் பிரதி யில் எழுதி வைத்துள்ளன, இவரும் தானிசா காலத்தவ ரென்று கூறப்படுகின்றன.

19) தேவிநேனி பசவன்ன நாயுடு, இவருடைய வம்சத் தினர் செறுகூறு பாலுட்லகோத்ர கம்மவார் ஆவார், இவர் சுமார் கிறிஸ்து சகம் (1690) வருஷ காலத்தவராக காணப் படுகின்றவர், இவர் இன்றைய பாபட்ல தாலூக்கா தண்ட மூடி கிராமக் குடிமக்களைச் சேர்ந்தவர் ஆவார், மொகலாய அமானீசா காலத்தில் அந்த கிராமத்தில் ராமலிங்கேஸ்வர தேவாலயம் கட்டி பிரசித்தி பெற்றனர், பின்னர் இந்த ஆலயம் கொஞ்ச காலத்தில் சிதிலமடைய வெல்லங்கி பச வைய்ய என்றவர் நிர்மாணஞ் செய்து பூஜாதி காரியங்கள் யுக்தப்படி நடந்துவர ஏற்பாடு செய்து வைத்தனர், இவ் விஷயம் லோகல் ரிகார்டு வால்யம் 3-ல் எழுதி வைக்கப் பட்டுள்ளன, தண்டமூடி சரித்திரம் 60 வால்யம் முதலான

வற்றில் கண்டு கொள்ளலாம். இவரும் கோல்கொண்ட நவாப் காலத்தவராதலால் ஆலயங்களைக்கட்ட தடையில்லை என்று சொல்லலாம்.

20) கொச்செர்ல கோட்டை சீம சமஸ்தானம். ராவெள்ளவெங்கடாத்ரிப்பிரபுவு, இவர் கொச்செர்லகோட்டை சீமையை கிறிஸ்து சகம் (1710) வருஷ காலத்தில் பரிபாலித்து வந்தார். இவர் தன் காலத்தில் ஷெ கிராமத்தை தன் பந்துக்களாகிய சாயபநேனிவார்களுக்கு ஜாகீராக வந்த தாக கொச்செர்லகோட்டை ஸ்தல புராணத்தில் உள்ளன. இவருக்கு மல்லாநாயுடு என்ற குமாரன் இருந்து இவருக்குப் பின்னர் இந்த கோட்டையைப் பரிபாலித்து வந்ததாகவும். கோல்கொண்ட நவாபின் பிரதிநிதிகள் என்றும் கூறப்படுகின்றன.

21) ராவெள்ள குமார வீரமல்லா ராவு, இவருடைய சாசனம் ஒன்று குடிபாடில் இருக்கின்றன, அந்த கிராமத்திலுள்ள ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமிக்கு இவர் பிருந்தாவனம் ஒன்று நிர்மாணித்து சாசனம் ஒன்று எழுதி வைத்துள்ளார் இவர் சௌகந்திக புஷ்பாபஹாரணம் என்ற கிரந்தத்தை அப்பய்ய என்ற கவிநாதரால் எழுதச் செய்து கீர்த்தி பெற்றனர் 2 இந்த வீரமல்லாராவ் என்றவரும் மேலே சொல்லப்பட்ட மல்லா நாயுடுவும் ஒருவரென்றோ வேறு யென்றோ காணவில்லை இவர் கொச்செர்ல கோட்டை பாலகரென்று நினைக்கலாம்.

22) ராவெள்ள உத்தண்ட மல்லா நாயுடு, ராவெள்ள மல்லா நாயுடுவுக்குப் பின்னர் அவர் குமாரராகிய இந்த உத்தண்டமல்லா நாயுடு கொச்செர்ல கோட்டைச் சீமையைப் பரிபாலித்து வந்ததாக ஸ்தல சரித்திரம் கூறுகின்றன, இவர் பரிபாலித்து வந்த காலத்திலேயே ஈஸ்டிந்தியா கம்பெனியர் இந்த நாட்டில் அதிகாரத்தை நடத்தினர் என்றும் கிறிஸ்து சகம் (1764) வருஷ காலம், ஆகயிருக்கலாம் என்றும், அப்பொழுது ஆரிகட்ல சீமையை மட்டும் இக் குடும்பத்தினர்களுக்குக் கொடுத்து, மிகுதியுள்ள பாகத்தை கம்பெனியார் ஸ்வாதீனம் செய்து கொண்டதாகவும், இவர் காலத்

தில் கொச்செர்லகோட்டை கர்ணம் விஷயமாக தகாதா ஏற்பட்டு பரிஷ்காரமாயிற்று கொண்டப்ப என்ற வருக்கு கர்ணம் உத்யோகம் அவர் வெங்கம நாயுடு காலத்தில் கிடைத்ததென்றும் ஸ்தல சரித்திரத்தில் கூறப்படுகின்றன.

23) ராவெள்ள திருவெங்களப்ப நாயுடு. இவர் கிறிஸ்து சகம் (1751) வருஷ காலம் கொச்செர்ல கோட்டை சீமை பாலகரில் ஒருவராக காணப்படுகின்றனர் இவர் தூபாடி சீமையைப் பரிபாலித்து வந்த சாயபநேனி சென்னப்ப நாயுடு பேரனும் சுப்பா நாயுடு குமாரனுமாகிய சேஷாசலபதி நாயுடுவுக்கும் மல்லிகார்ஜுன நாயுடுவுக்கும் தாய் மாமனாகியிருந்தார் அதனால் தூபாடி சீமை பாலனத்தை சுப்பா நாயுடு காலமாகிவிட்டபடியால், அவர் குமாரர்கள் சிறு வயதினராகயிருந்தமையால் 3 வருஷ காலம் இந்த திருவெங்களப்ப நாயுடு பரிபாலித்து வந்து பின்னர் சுப்பா நாயுடு புத்திரரில் சேஷாசலபதி நாயுடுவுக்கும், அம்பா நாயுடு புத்திரர்களுக்கும் ஒப்படைத்துவிட்டதாக தூபாடி சீமை சரித்திரங் கூறுகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 8-ல் காணலாம்.

24) சர்வேபல்லி சீமை பரிபாலனம், ராவெல்லமுத்து கிருஷ்ணப்ப நாயனிவாரு 2 இவர் சாலிவாகன சகம் (1634) வருஷ கிறிஸ்து சகம் (1712) வருஷ காலபாலகராவார், இவர் நெல்லூர் ஜில்லா சர்வேபல்லி சீமையைப்பரிபாலித்து வந்தார் இவரிடத்தில் முக்ய கர்த்தாவாகயிருந்த துரப்பல்லி பானங்கார் என்றவர். கூடூர் தாலூக்காவில் உள்ள மடமனூரில் ஒரு குளத்தை நிர்மாணித்து தர்ம சாசனம் எழுதி வைத்த காலம் சாலிவாகன சகம் (1634) வருஷ அதில் கிராமக் குடிமக்கள் எல்லோரும் குளத்தின் மராமத்தின் சிலவுகளுக்கு வேண்டி ஏக்கர் ஒன்றுக்கு 10 வள்ளம் நவ தானியம் கொடுத்து வருவதாக சாசனம் எழுதி வைத்துள்ளனர் லோகல் ரிகார்டு நெம்பர் 52 இந்த முத்து கிருஷ்ணப்ப நாயுடுவிடம் நாரிகேளபல்லி கிராமத்தில் இராவரபு நிம்மநங்கார் என்ற பிரதிநிதியிருந்து அந்த கிராமத்தில் ஒரு குளத்திற்கு வேண்டி சாசனம் எழுதிவைத்துள்ள சாசனம் கிருஷ்ணப்ப நாயுடுவின் அனுமதியின் பேரிலேயே செய்துள்ளார் சாலிவாகன சகம் 1610-ல் எழுதப்பட்டன.

25) மேதரமெட்லவாரு ரொம்பிசர்ல துர்கமு, மேதர மெட்ல நரசிம்ஹா நாயுடு, இவர் சாலிவாகன சகம் (1551) வருஷ கிறிஸ்து சகம் (1629) வருஷ காலத்தவரென்றும் கோல்கொண்ட நவாப் அப்துல்லா குதுஷ்பா பரிபாலனத்தில் இவர் பிரதிநிதியாக யிருந்ததாக காணப்படுகின்றன. இவர் தந்தையின் பெயர் அய்யப்ப நாயுடு இவர் குண்லபல்லி கிராமத்தில் வீறபத்ராலயம், ஆஞ்சநேயர் ஆலயம் கட்டி வைத்து ஒரு தோட்டத்தை மானியமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார் சாசன நெம்பர் (77/32-33) இந்த நரசிம்ஹா நாயுடு குண்லபல்லி பிராந்தியத்தைப் பரிபாலித்து வந்தனர், இவருடைய தந்தையின் புண்யார்த்தமாக ஷெ கோவில்களைக் கட்டிவைத்தனர்.

இந்த மேதரமெட்லவார் ரொம்பிசெர்ல பிராந்தியத்தியத்தை ஸ்ரீ ரங்கதேவராயர் காலத்தில் பரிபாலித்து வந்து ரொம்பிசெர்ல கோட்டையிலிருந்து வெங்கல பேரிகைகள் வெண்பட்டுக்குடை டேராக்கள், நகாரிகள், முதலான ராஜ சின்னங்களை வைத்துக்கொண்டு அதிகாரம் நடத்தி வந்தனர்கள், அப்போது ரேவள்ளவார் தம்முடைய படையுடன் வந்து போராடினரென்றும் அந்த யுத்தம் 3 வருஷ காலம் நடந்தனவாயினும் கோட்டையை சுவாதீனம் செய்து கொள்ள முடியவில்லை, கடைசியில் ரேவள்ளவார் ஒரு கொல்ல பெண் வேடத்துடன் கோட்டைக்குள் சென்று ரகசியமாக கோட்டைக்கு வெளியில் உள்ள குளத்திலிருந்து தண்ணீர் போகும் குழாயை அடைத்து விட்டமையால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படவே கோட்டையிலுள்ளவர்கள் வெளியேவர முடியாமற்போகவே தாங்க முடியாமல் இரவு காலத்தில் கோட்டையை விட்டு வெளியேறியதாகவும், அப்பொழுது ராவெள்ளவார் கோட்டையை சுலபமாக சுவாதீனம் செய்து கொண்டனர் என்றும், அவர்களே மொகலாயர் ஆக்ஷிவரையிலும் பரிபாலித்து வந்ததாக ரொம்பிசெர்ல ரிகார்டு கூறுகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 56 (பக்கம் 451)-ல் காணப்படுகின்றன.

இந்தக் காரணத்தால் மேதரமெட்லவார் ராஜ்யம் நசித்துப் போயிருக்கலாம் இதனுல் ரேவள்ளவார், ராவெள்ளவா

ராகி இருக்கலாமென்று தோன்றுகின்றன. இந்த இரண்டு வர்க்கத்திற்கும் இருந்த விரோத காரணம் தெரியவில்லை. ஆயினும் மேதரமெட்லவார் முதலில் கஜபதிகளிடம் பிரதி-நிதிகளாயிருந்தனர் என்று முன்னமே தெரிந்திருக்கின்றோம். ரொம்பிசெர்ல பிராந்தியம் கஜபதிகளிலிருந்து ராயர் வம்சத்தினருக்கு கிறிஸ்து சகம் 1520-வது காலம் சுவாதீனம் ஆன பொழுது இந்த யுத்தம் நடந்திருக்கலாம். ஆயினும் ஸ்ரீரங்கராயர் காலத்தில் நடந்திராதென்று தோன்றுகின்றன. இதை நிர்ணயிக்க முக்கியமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

26) சர்தாறு மேதரமெட்ட நரஹரி நாயடு, இவர் பசலி 1176, கிறிஸ்து சகம் 1766-வருஷ காலத்தவரென்று காணப்படுகின்றனர். இவருடைய பூர்வீகர்களும், இவரும் முதலில் அந்தங்கி சீமையைப் பரிபாலித்து வந்த மந்தபட்டி வாரிடம் சர்தார்களாக இருந்தவர்கள் பசலி 1176-வருஷத்தில் சிந்தபல்லி சமஸ்தானதிபதியாக ஸ்ரீ ராஜா வாசிரெட்டி ராமன்னபகதூர் ஜமீன்தார்காரும், தாமும் மாணிக்யாராவு ஜமீன்தாரும் (ராசூறுரேபல்லி ஜமீன்கள்) தாலூக்காக்களில் சில ஸ்தாவர சொத்துக்களைப் பெற்றுக்கொண்டு குடிமக்களை அடக்கி வைப்பதற்காக வேண்டி இவரையும் மற்றும் சில சர்தார்களையும் வரவழைத்து தன்னுடைய ஆஸ்தானத்தில் இருக்கும்படி ஏற்பாடு செய்தும், இவர் தன்னிடமிருந்த 50 பேர் சிப்பந்திகளுடன் அங்கு சென்று கிராமங்களில் கட்டுப்-பாடுகளை ஏற்படுத்தி அதிகாரத்தைச் செலுத்தி வந்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 57-லிருந்து தெரியவருகின்றன. இந்த சர்தார் உத்யோகங்கள் பின்னர் ராஜா வெங்கடாத்ரி பிரபு காலத்தில் பிரிட்டிசார் அதிகாரத்தில் குறைக்கப் பட்டதால், இந்த வம்சத்தினர் சாமான்யரைதுக்களாக (விவசாயிகளாக) மாறிவிட்டனரென்று காணப்படுகின்றன.

கம்மவார் சரித்திரம்
3-வது பாகம்

2-வது பிரகரணம்

கம்மவார் அநேக கிராமங்களை நிர்மாணித்து வந்த விஷயங்கள் கூறப்படுகின்றன.

27) கம்மவார் சென்னை மாகாணத்தில் பிரவேசித்த தாக முன்னமே கூறப்பட்டுள்ளன. இவர்கள் அந்தந்த இடங்களில் கிராமங்கள், பேட்டைகள், கோவில், குளங்களையும் நிர்மாணித்து வசித்து வந்ததாக சரித்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்தப் பிரவேசமானது ஆதியிலிருந்தே நடந்து வந்திருக்கின்றன. விந்தியம் முதல் கன்யாகுமரி, சிலோன் முதலான பிரதேசங்கள் இவர்களுடைய ஆட்சியில் இருந்தன. மஹமதியர் காலத்தில் நடந்ததாகச் சொல்வது சொற்பமே. அதாவது நம்மளுக்கு இப்பொழுது அதிகமாகக் காணப்படுவது. மங்களகிரி சாசனத்தைப்பற்றி மஹமது கூலீகுதுஷ்பா ஆட்சியில் சில கிராமங்களிலிருந்து வெளி-யேறியதாகவும் கூறப்பட்டுள்ளன.

கம்மவார் அந்தந்த கிராமங்களில் அநேக பூமிகளைப் பெற்று விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர்கள். இவர்கள் நிர்மாணித்த நூதன நிர்மாணங்களை ஒரு பட்டியலில் எழுதப்பட்டுள்ளன. அதன் விபரங்களின் ஜாபிதா :-

நெ.	கிராமப் பெயர்கள்	நிர்மாணித்தவர்கள்	கால விபரங்கள்	லோகல் ரிகார்டு
1	உமா மஹேஸ்வரம்	லெக்கல சூரப்ப	சகம் 1611-ஞ	சிந்தபல்லி வால்யம் 10
2	கோதுர்க்கம்பூடி	கோவிந்துகுண்டால நாயுடு	,, 1701	,,
3	பாபிநேனிவாரிபல்லெ	கட்டா வெங்கடபதி பூர்வீகர்கள்	இதற்கு முன்னர்	,,
4	திம்மநாயனிபேட	பெம்மசானி திம்மா நாயடு	,, 1472	,, 11
5	போலிகிராமம் குப்ப-வாரிபல்லெ	மல்லெம்பூடி கொண்டம நாயடு	சகம் 1609	,, 17
6	கம்மவாரிபல்லெ	ஸ்வபட்லவநேனி பசிவிநேடு	,, கி-ச. 1665	,, 17
7	வெங்கடபல்லெ	திவ்வெலவெங்கடநாயடு	,, 1675	,,
8	கூசிவார்பல்லெ	கூசி வெங்கட நாயடு	,, 1755	,,
9	காரம்பல்லெ	நேலபாடி ஜங்கமநாயடு நல்லப்பநேனி வெங்கட நாயடு	,, 1690	,,
10	ரம்பாவாரிபல்லெபாகம்	போலூரி வெங்கன்ன	,, 1775	,, 67
11	மேகாவாரிபல்லெந-நந்தோ	மேகா வெங்கடபதி வகையரு	,, 1616	,, 68
12	நாகிநேனிபல்லெ	நாகிநேனி சூரவப்பா	,, 1665	,, 68
13	கொல்லவாரிபல்லெ-பூடுகூர்	கொல்லா வெங்கம நாயடு	,, 1665	,,

நெ.	கிராமப் பெயர்கள்	நிர்மாணித்தவர்கள்	கால விபரங்கள்	லோகல் ரிகார்டு
14	மிட்டமீதபல்லெ என்ற கம்மவார்பல்லெ	கோவிந்தப்ப நாயடு	,, 1585	,,
15	கம்மபல்லெ	புர்ரநேனி வெங்களப்ப	,, கி-ச. 1735	,, 17
16	கொம்மாவாரிபல்லெ	கொம்ம, கம்மவார்	,, ,, 1615	,,
17	சிங்கனவாரிபல்லெ	கோபாலய்ய நாயடு	,,	,,
18	சுண்டுவாரிபல்லெ	,,	,,	,,
19	கொந்திவாரிபல்லெ	,,	,,	,,
20	பெதவேரபாடு கம்மபல்லெ	க. மல்லம நாயடு	,, 1745	,,
21	நாகவரம் கம்மபல்லெ	நாரபநேனிகார்	,,	,, 19
22	கம்பசமுத்ரகம்மபல்லெ	,,	,,	,,
23	கந்துலவாரிபல்லெ	கந்துல ராமநாயடு	,, 1755	,,
24	சிட்டவேலி நடுபல்லெ	ராமா நாயடு	சகம் 1755	,, 19
25	யாடகிமல்யேனிகோட்ட	மிக்கிலிநேனி மால்ய வந்துடு	,, 1400	,, 41
26	சிவகங்க	ராஜாயார்கட்ட அங்கிநீடுபகதூர்	,, 1793	,, 19
27	கம்மவாரி பாலெம்	,,	,,	
28	சந்திள்ளபல்லெகொல்ல லுப்பலபாடு மஜரா	ராஜாராம நாயடு	,, 1807	,, 20
29	முசலிமோவூர்கம்ம பாலெம்	கம்மவெங்கா நாயடு	,, 1695	,, 20

நெ.	கிராமப் பெயர்கள்	நிர்மாணித்தவர்கள்	கால விபரங்கள்	லோகல் ரிகார்டு
30	ராமன்னபேட்ட	ராஜா வாசிரெட்டி ராமன்னபகதூர்	,, 1765	,, 89
31	கோவிந்தம்மபேட்ட அமீன்பேட்ட	பெம்மசானி கோவிந்தம்மகாரு	,, 1535	,, 35
32	பாரதீபுரம்பேட்ட	,,	,,	
33	சிரிகிரிபல்லெ	போதூர் நாராயணப்ப	,, கி-ச. 1777	,, 35
34	ராள்ளபொத்துடுர்	66-கம்ம பிரபுக்கள்	,, ,, 1525	,,
35	போடியம்மநாறு	,,	,, ,,	,, [னம்
36	தாடிபர்திபிராம்ஹண பல்லி	மாதிநேனி பாபன்ன வகையரு	,, ,, 1762	நேருமஞ்றி சாச
37	நாகசானிபல்லெ	வேகிய நாகசானி	,, 1540	,, 35
38	புல்லலசெருவு கிராமம்	யேருவ வெங்கடபதி	,, 1534	,,
39	அண்டபூர்கம்மபேட்ட	ராமா நாயனிவாரு	,, ,, 1796	,, 36
40	கட்டாவாரிபல்லெ	சட்டா நோபன்ன	,, ..	சாசனப்படி
41	வனம்பல்லெ	கட்டாபாபன்னகார்	,, 1780	,, 44
42	ராஜுபேட்ட	சுண்டூரி முசிலி நாயடு	,, 1760	,,
43	கம்மவாரி குண்ட்ட	ராமச்சந்திர நாயடு	,, 1642	,, 48
44	காமராஜுகட்ட கொமரபோலு	மைநேனி கம்மவார்	அனவேமாரெட்டி காலம்	,, 50
45	மத்திரேலராஜாபேட்ட	ராஜா வாசிரெட்டி வெங்கடாத்ரி பிரபு	,, கி-ச. 1810	,, 50

நெ.	கிராமப் பெயர்கள்	நிர்மாணித்தவர்கள்	கால விபரங்கள்			லோகல் ரிகார்டு	
46	மாசுபல்லிபொன்ன போலு	கம்மவார், ராமன்ன	,,		,,	,,	56
47	கங்கணலபல்லெ	கம்மவார் பெண் கங்கணம் விசர்ஜநத்திற்கு முன் இறந்துவிட்டதால் அதன் காரணம் ஆக இப்பெயர் ஏற்பட்டது	,,		,,	,,	
48	ரொம்பிசெர்ல தாசரி பாலெம்	குந்தேடி தாசரி நாயடு	,,	,,	1520	,,	34
49	முனிமடுகுகோட்ட	பெம்மசானி திம்மாநாயடு	,,	,,	,,	,,	
50	பட்டுபுரா நரசப்ப நாயனிபேட்ட	சுன்டூர் சக்கரப்ப நாயடு	,,		1619	,,	5
51	சக்கரப்பநாயனி பேட்ட	,,	,,		,,	,,	
52	கண்டிகோட்ட கம்மபாலெம்	,,	,,			,,	15
53	பொம்மவரம் பாலம் மஜரா கம்மபல்லெ	,,	,,		,,	கடப்ப ஜில்லா பத்ரங்கள்	
54	சௌடம்மபல்லெ	விப்பர்ல பெதராமன்ன	,,				

28) இம்மாதிரியாக கம்மவார் அநேக கிராமங்களையும் சிற்றூர்களையும் நிர்மாணித்துக்கொண்டுள்ள வரலாறுகள் சில சரித்திரங்களில் காணப்படுகின்றன, மற்றவை கல்வெட்டுகள், சாசனங்கள், பந்ய காவியங்கள், நாடகங்களிலும் காணப்படுகின்றன. கிறிஸ்து சகம் (1787) வருஷ குண்டூர் ஜில்லா போலேறு கிராமத்தில் பிரென்சு பாதிரியார் பாவினென்ட்டி என்ற துரை மிக்க உற்சாகத்துடன் (50) கம்மவார் குடும்பத்தினர் செங்கல்பட்டு ஜில்லா கிலசேறி கிராமத்திற்கு அனுப்பி. இவர்கள் அங்கு சென்று குடி அமைத்துக் கொண்டு வாழ்ந்ததாக கிருஷ்ணா ஜில்லா மான்யுவலில் எழுதி வைத்துள்ளார்.

3 கடப்பை நவாப்களின் ஆக்ஷியில் கம்மவாரின் ஸ்திதி கூறப்படுகின்றன, டில்லி சக்ரவர்த்தியாகிய ஔரங்கஜேப் வம்சத்தினர் கிறிஸ்து சகம் (1710) வருஷ காலம் சும்ருத்தின் அசப்ஜா கோல்கொண்ட நவாப்பாகவும் தாவுத்கான் ஆற்காடு நவாப்பாகவும நியமிக்கப்பட்டு இருந்தனர். ஆற்காடு நவாப் ராஜ்யம் மறுபடியும் கடப்பை சுபேதார் வசமும் கர்னாடகம் சுபேதார் வசமாயினவென்றும (2) பிரிவுகளாக ஏற்படுத்தி கர்னாடகத்திற்கு பாதுல்லாகானும் கடப்பைக்கு அப்துல் மஜைமத்கானும், நியமிக்கப்பட்டனர். மயானை அப்துல் (1735) வருஷ வரை பாலித்து வந்தான், அவருக்குப் பின்னர் கடப்பைக்கு அப்துல் மஜைமத்கான் அதிகாரியாக வந்து கிறிஸ்து சகம் (1747) வருஷ வரையிலும் பின்னர் அப்துல் மசிதுகான் (1757) வருஷ வரை பாலித்து வந்தார், இவருக்கு உட்பட்டு சிட்டிவேலி தாலூக்கா பொத்தபிநாடு, புலுகுல நாடு சீமைகளை மட்ல வெங்கடராமராஜு என்ற தெலுங்கு சோழ வம்சத்திய ராஜா பரிபாலித்து வந்தனர்.

இந்த வெங்கடராமராஜனிடம் கம்மவாரில் சுண்டூரி முசலி நாயுடு என்றவர் திவானாகயிருந்து. அக்காலம் நடந்த யுத்தங்களில் கடப்பை நவாபுகளின் பக்ஷமாக வேலை பார்த்து வந்தார். அந்த சமஸ்தானத்தில் இவருக்குக் கிழாக 3 ஆயிரம் சைன்யங்களுமிருந்தன, ஹைதர் அலி என்றவர் வந்து யீந்யேயரை ஜயிக்கும் வரையிலும், இந்த மட்லவாரும், கம்

மாளரும் கடப்பை நவாபிற்குக் கீழாகவே யிருந்து வந்தனர், முசலி நாயுடு மந்திரியாகயிருந்த காலம் ராஜ்யத்தில் அநேக யுத்தங்கள் நடந்தும் சில மாற்றங்கள் ஏற்பட்டும் வந்தன, வேமுலபாடு ஸ்தானீகர்களாகிய வேமுலவார், கடப்பை நவாபுசளுக்கு எதிராக யுத்தங்களை நடத்தி வந்தனர். பல வந்தராவு என்பவர் மகாராஷ்டர அதிபதியினுடைய சைன்யம் தேசத்தையே ஜெயிக்க வேண்டுமென்ற சுபாவத்துடன் திரிந்து கொண்டிருந்தன, திரும்பிரெட்டி பல்லெ சமஸ்தான மொன்று கடப்பை நவாபுகளுடன் எதிர்த்து சுதந்தரம் பெறப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தன, அதனுல் கடப்பை நவாப்பின் உத்தரவை அனுசரித்து நம்ம சுண்டூரி முசலி நாயுடு யுத்த காரியங்களை நிர்வகித்து வந்து கடைசியில் கிறிஸ்து சகம் (1769) வருஷம் காலமாகி விட்டனர், கடப்பை நவாபுகளின் ஆக்ஷி கிறிஸ்து சகம் (1770) வருஷத்தில் ஹைதர அலியின் வசம் ஆகி விட்டன என்று காணப் படுகின்றன.

அக்காலத்தில் முசலிநாயுடு வம்சத்திய சுண்டூரி சக்கரப்ப நாயுடு மட்லவார் சமஸ்தானத்தில் உள்ள திவான்கிரியில் பிரவேசித்து ஹைதரலியின் கட்டளைப்படி நடத்தி வந்தனர், இவருக்குப் பின்னர் சுண்டூர் நாரப்ப நாயுடு பிரவேசித்து அக்காரியங்களை நடத்தி வந்தனர். பின்னர் திப்புசுல்தான் பரிபாலனத்தில் நிஜாமல்லீகானுக்கும் இந்த திப்புசுல்தானுக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் கோல்கொண்ட நவாபின் பக்ஷமாகப் போராட மட்ல வெங்கடராம ராஜுவின் அனுமதியின் பேரில் நரசப்ப நாயுடுவை சைன்யத்துடன் அனுப்பப் பட்டன. இந்தப் போரில் சேனுதிபதி இறந்து போகவே திப்பு ஜெயமடைந்தனன், பின்னர் இந்த பிராந்தியங்களுக்கு (1800) வருஷம் சந்தூலால் சுபேதார் பதவியேற்றுக் கொண்டனர், இவர் காலத்தில் சுண்டூர் ஜங்கம நாயுடு திவான்கிரி அதிகாரத்தை நடத்தி வந்தனர்.

கிறிஸ்து சகம் (1652) வருஷம் கம்மவாரில் சேர்ந்த பெம்மசானிவார்கண்டி கோட்டை பிரபுத்வம் மாறிய பின்னர் இந்த வம்சத்தினர் யாரும் மஹமதியர்களுக்கு கீழாக

உத்யோகம் செய்யவில்லை, இந்த நவாபுகளின் பரிபாலன காலத்திலேயே கம்மவார் அநேக இடங்களில் கிராமங்கள், குளம் குட்டைகள் முதலானவற்றை நிர்மாணித்து வந்தனர் என்று முன்னமே கூறியுள்ளோம் இதே மாதிரியாகக் கடப்பை நவாபுகளின் ஆக்ஷியிலுங்கூட கம்மவார் சேனாதிபதிகளாகவும், விவசாயிகளாகவும் பிரக்யாதி பெற்று வந்தனர் என்று காணப்படுகின்றன.

29) பிரென்சுவார் பாலனம், டில்லி சக்கரவர்த்தி குடும்பத்தில் கிறிஸ்து சகம் (1724) வருஷத்தில் அநேகமான கலஹங்கள் யேற்பட்டு நடந்த காலம் கோல்கொண்ட நவாபு அசப்ஜா சுதந்தரம் பெற்று, இவருக்குப் பின்னர் கிறிஸ்து சகம் (1749) வருஷம் கோல்கொண்ட பாலகராக வந்த மீர்ஜ பாஜங்கா பாலனத்திற்கு வருவதற்குள் சகாயமாக பிரன்சு சேனாதிபதியாகிய டூப்லெக்ஸ் வடசற்காருக்கு தன் சைனியத்தை உதவியாக ஒப்படைத்தனன், அவர்களுடைய ஆக்ஷி சுமார் (1759) வருஷம் வரை நடந்து வந்தன.

இந்த பிரென்சுவாரின் பரிபாலனம் கொண்டவீடு சீமையில் உள்ள தேவாலயங்களின் மான்யங்களை ரத்து செய்தும் அநேக ஆலயங்களைப் பாழ்படுத்தியும் வந்தனர், குடிபாடு, சேப்ரோலு, சந்தவோலு முதலான கிராமங்களிலிருந்த தேவாலயங்களைப் பாழ்படுத்தினர், உத்தரப்ரதேச பாலகனாகிய பிரென்சுகாரன் பெயர், மன்சியர்லஸ்கர் என்றவர் ஆவார். சத்யானந்தஸ்வாமியென்ற பிரென்சு பாதிரி மதந்துவேஷங்கொண்டு தேவாலயங்களை நாசப்படுத்தி வந்தது மல்லாமல் அதை இடித்து அந்த கற்களைக்கொண்டு பேடேலர் கிராமத்தில் ஒரு கிறிஸ்தவ சர்ச்சைக் கட்டியதாகவும், அதனால் மஹமதியர் காலத்தில், பிரென்சுகாரர்களுக்கும், இடையில் தேசத்தில் கோவில், குளங்களை நிர்மாணிக்க அநேக இடைஞ்சலாக இருந்து வந்தன. பிரதிநிதிகள், ஜமீன்தார்கள், செளதரிகள் ஆகியவர்களாலும் அக்காரியங்களை நடத்த முடியவில்லை.

1757-வருஷம் பின்னர் இந்த ராஜாங்கங்கள் நிஜாம் ராஜ்ய வசமாயிற்று. இதை ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்

அநேக பிரயத்தனம் செய்து மேலதிகாரிகளுக்கு லஞ்சங்கள் கொடுத்து வசப்படுத்தி நவாப் மந்திரிகளைக் கலைத்து விட்டனர். இது கிறிஸ்து சகம் 1764-வருஷம் நடந்தன. குண்டூர் சர்க்கார் மாத்திரம் நவாப் நிஜாமல்லீகான் தன் தம்பிக்குக் கொடுத்திருந்த ராஜ்யத்துடன், கம்மவார் சமஸ்தானங்களும் கம்பெனியார் வசமாகி விட்டன. அக்காலத்தில் ஜமீன்தாரர்களிடமிருந்த சைனியங்களை குறைத்துக்கொள்ளும்படி உத்திரவுகள் பிறப்பித்தனர். அதனால் அதுவரையிலும் அதிகார உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் அனைவரும் விவசாயத்தை நடத்தி வந்தனர். கம்மவாரும் விவசாயிகளாக காரியாதிகளை நடத்திவந்தனர். இதில் சாகமூர், பத்தினிவார், பொல்லெபல்லிவார், மேதர மெட்டவார், ராவூரிவார் முதலான குடும்பத்தினர் அந்த உத்தியோகங்களில் இருந்தனர் என்று தெரிகின்றன. இவர் களெல்லாமல் சைனியங்களை வைத்துக்கொண்டு போஷித்து வந்த ஜமீன்தார்களில் யேர்லகட்டவார், வாசிரெட்டிவார், சாயபநேனிவார், ராவெள்ளவார் முதலானவர்கள் எல்லோரும் சாமான்யமாகிய கிஸ்தி வசூல் காரிய அதிகாரி களாக மாறிவிட நேர்ந்தனவென்று கூறப்படுகின்றன.

30) கம்மவார் அநேக தேவாலயங்களை நிர்மாணித்து கைங்கரியங்கள் நடத்திவந்த விபரங்கள். ஈஸ்ட் இந்தியா கம்பெனியர் நம் நாட்டில் கால் வைத்தவுடனே சர்க்காரினால் மத விஷயங்கள் எல்லாம் குறைந்து விட்டன. நியாய விசாரணைக்காக வேண்டி சப்-கோர்ட்டு, சுப்ரீம் கோர்ட்டு முதலானவற்றை ஏற்படுத்திப் பிரஜைகளுக்கு நியாயம் முறைகளைக் கையாண்டு வந்தனர். 1862-ம் வருஷத்தில் மதராஸில் ஹைகோர்ட்டு ஸ்தாபிக்கப்படும் வரையில் இந்த கோர்ட்டுகளே காரியங்களை நடத்திவந்தன. வெகுகாலமாக நடத்திவந்த ஜமீன்தார் பட்டதாரிகள் முதலாயினோர் தம் ஆதிக்கத்திலிருந்த "பிரதேசங்களில் தேவாலய காரியங்களை புனருத்தாரணம் செய்ய ஏற்பாடு செய்து வந்தனர். பிரெஞ்சுக்காரருடைய அட்டூழியங்கள் அடக்கப்பட்டன. முக்கிய பிரதேசங்களில் ஜமீன்தார்களே அக்காரியங்களில் ஈடுபட்டு நடத்திவந்தனர். அநேக பூமிகளையும், அக்ரஹா-

ரங்களையும் மான்யங்களாக வழங்கி வந்தனர். தேவாலய காரியங்களுக்கு அர்ச்சக, பரிசாரகர்கள், நடன-நாட்டிய, மேளதாள கைங்கர்யபரர்கள், வேதபாராயணாதிகளுக்கு வேண்டியவர்களை நியமித்தும் திரிகால பூஜை உத்ஸவாதிகள் முதலான காரியங்களுக்கு வேண்டிய தன-தான்யாதிகள், கோ, அஸ்வ, கஜாதிகள் முதலியவற்றையும் நியமித்து வைத்தனர். தவிர மேற்பார்வைக்காக அதிகாரிகளையும் நியமித்து யுக்தப்படி தேவாலய காரியங்களை நடத்தி வந்தனர்.

கொண்டவீடு சீமையில் மேலான சமஸ்தானம் ஜமீன்தார் கம்மவாரில் வாசிரெட்டிவார்கள் இவர்களின் ஆதிக்கத்தில் அநேக கிராமங்கள் இருந்து வந்ததினால் அவர்களின் இஷ்டம்போல மானியங்கள் வழங்கிவந்தனர். வாசிரெட்டி ராமநரபாலகனுகியவர் என்றவரும். வெங்கடாத்ரிப் பிரபுவும் பிராம்ஹண அக்ரஹாரங்கள் முதலானவற்றை புனருத்தாரணஞ் செய்து வந்த விஷயங்கள் லோகல் ரிகார்டு களிலும், சரித்திரங்களிலும் விஸ்தாரமாக விளக்கப்பட்டு உள்ளன. தவிர அதில் சேராத சில கிராமங்களில் அநேகமாக இக்காரியங்கள் நடந்துள்ளன. இந்துமத ஸ்தாபனங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் நிறைவேற்ற இம்மஹான்கள் இருவரும் மிக்க பிரயாசைப்பட்டு வந்தனர். பக்தர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்துவந்தனர். இதே போலமற்றைய ஜமீன்களும் தங்கள் கிராமாந்தரங்களில் அநேகமாக கோவில்கள், குளங்கள், தடாகங்கள், சத்திரங்கள், வித்யாலயங்கள் முதலானவற்றையும் நிர்மாணித்து வந்தனர் கொப்பர்ரு, கொச்சர்ல, போடபாடு, பெதகார்லபாடு ஜூலகல்லு முதலான பிரதேசங்களில் அக்காரியங்கள் நடந்துவந்தன.

இக்காரியங்கள் நடத்தி வந்ததை ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்கள் 1817-வருஷம் தேவாலய பரிசீலனைகளை ஜில்லா கலெக்டர்கள் வசம் ஒப்படைத்து ஒரு சாசனம் எழுதி வைத்துள்ளனர். சாசனங்கள் எழுதிவைத்தும் தேவாலயங்களில் மிச்சமாகும் தனங்களை அவர்களே எடுத்துக்கொண்டு வந்தனர். ஆயினும் தேவாலய காரியங்களை முக்கியமாக நடத்திவந்தனர்.

31) பொத்தபி புலுகுலநாடு சீமைகள், சுண்டூரிவார், சுண்டூரிசின முசலி நாயடு, இவர்கள் 18-வது சகாப்தகாலம் வேமுலபல்லி பிராந்தியங்களில் போலீஸ் உத்தியோகங்களில் இருந்தவர்கள் சிலர், பூமிகளை சேர்த்திய வசப்படுத்தி விவசாயம் செய்து வந்தவர்களில் சரசப்ப நாயடு வேமுலபல்லியிலிருந்தனர். இந்த கிராமம் பொத்தபி சீமையைச் சேர்ந்தது. இவருக்கு முசலி நாயடு, சினமுசலி நாயடு, சக்ரப்ப நாயடு, ரங்கப்ப நாயடு என்ற 4 பேர் குமாரர்கள் இருந்தனர். இவர்களில் சினமுசலி நாயடு கொஞ்சமாக தெலுங்கு படித்திருந்தமையால் ஒரு உத்தியோகத்தில் இருந்துகொண்டு பொத்தபி நாடு, புலுகுல நாட்டு சீமைகளை பரிபாலித்து வந்த மட்ல வெங்கடராமராஜுவினிடமிருந்த 3 ஆயிரம் சேனைகளுக்குத் தலைவனாக இருந்து வந்தார். இவரிடத்தில் திவான் கிரி என்றவரும் இருந்தார். இவர்கள் அந்த உத்தியோகத்தை சகம் 1675-வருஷம் கிறிஸ்து சகம் 1753-வருஷ காலத்தில். இந்த முசலி நாயடு முதலில் மட்ல அநந்தராஜு பௌத்திரனும், திருவெங்களராஜு புத்திரனும் ஆகிய இந்த வெங்கடராம ராஜுவிடம் சென்னூறு, கூடூறு, பரசனூலபொங்கூறு, கௌரவரம் முதலாகிய கிராமங்களை இனமாகப் பெற்றுக்கொண்டு தன்னுடைய முயற்சியினால் பிரபலப்படுத்திக்கொண்டு உள்ளனர். இந்த இனம் சகம் 1679-வருஷம் கிறிஸ்து சகம் 1757-வருஷம் பெற்றனர். அப்பொழுது இந்த சீமையை ஆக்ரமித்துக்கொள்ள எண்ணி, கடப்பை நவாப் உத்திரவுப் படி, வேமுலபாடு கோட்டையின்மீது, மட்லவெங்கடராஜுவும், அவர் திவானாகிய முசலி நாயடுவும் தம் சேனைகளுடன் படையெடுத்து அதில் முக்கியஸ்தராகிய குமார நாயடுவைப் பிடித்துக்கொண்டு கோட்டையை முற்றுகையிட்டுப் போராடி வசப்படுத்திக்கொண்டு வந்தமையால் நவாப் மிக்க சந்தோஷப்பட்டு, முசலி நாயடுவுக்கு ராசவேலி தாலூக்காவில் 5 கிராமங்களை ஜாகீர் செய்து கொடுத்தனன். அதிலிருந்து இவருக்கு நவாபுகளிடம் மிக்க கீர்த்தி, புகழ் கிடைத்தன. பெதவெங்கடராம ராஜுகாரும் திவானின் திறமையைப் பாராட்டி பொங்குலூர் கிராமத்தையும் ஜாகீர் செய்து கொடுத்தனர். இவர் தன் அதிகாரத்தை

கிரமப்படி நடத்தி வந்தனர். மூசலி நாயடுவும், நாராயண ராஜு என்றவர்கள் ஏதோ காரணத்தால் ஸ்ரீநிவாசலு, ராமன்ன என்றவர்களின் சண்களைத் துளைத்து விட்டனர். அவர் கடப்பை நவாபிடம் சென்று இவ்விஷயத்தைச் சொல்லி முறையிடக் கேட்ட நவாப், மிக்க பரிதாபங் கொண்டும், மூசலி நாயடு மீது படையெடுத்து வந்து கொண்டிருந்த விஷயத்தை அறிந்து, ரகசியமாகப் பொங்கு ஊறுக்கு ஓடிப்போய் விட்டனன் என்று லோகல் ரிகார்டு வால்யம் 22, பக்கம் 285-ல் எழுதப்பட்டுள்ளன. மூசலி நாயடு போய்விட்ட பின்னர் அங்கு விவகாரங்கள் ஏற்பட்டு வந்ததில்லை. வெங்கடராமராஜு அவரை வரவழைத்து யதாப்பிரகாரம் திவான்கிரியை ஆண்டுவரும்படி நியமித்தனரென்று காணப்படுகின்றன.

மூசலி நாயடு தன் தம்பியாகிய ரங்கப்ப நாயடுவுக்கு கௌரவரத்தில் ஒரு வீடு கட்டிக்கொடுத்து அவரை அங்கு குடி வைத்துவிட்டுத் தன் பரிவாரத்துன் மட்லவார் ராஜ்யத்திலிருந்து பலவந்தராவ் என்ற மஹாராஷ்டர சேனாபதியுடன் சேர்ந்து கொண்டனன். அப்பொழுது அவர் வசம் இருந்த சேனை தளவாடங்கள் 3 ஆயிரம் இருந்தன. மட்லவார் சமஸ்தானத்திற்கு தன் தம்பியாகிய சக்கரப்பநாயடுவை திவான்கிரியில் இருக்கும்படி ஏற்பாடு செய்தனன். இவர் பலவந்தராவ் சைனியத்தில் சேர்ந்த பின்னர் கடப்பை சுபே நவாபாகிய மசிதுகான் தாலூக்கா சித்தவடம் கோட்டையையும் மற்றும் சில ஜமீன்களையும் ஜெயித்து கடப்பையில் டாணா ஏற்படுத்திவிட்டு போயினர். அதன் மேல் மூசலி நாயடு வெலுகோடி பங்காரேசம நாயடுவால் தம் சமஸ்-தானத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அங்கு மூசலி நாயடுவுக்கு தேவுலபல்லியை ஜாகீர் செய்து கொடுக்கப்பட்டன. ஜூபல்லெ சமஸ்தானதிபதியாகிய ராமராயனிங்காரும்கூட அவருக்கு வாவிண்டபர்த்தி கிராமத்தை ஜாகீர் செய்து கொடுத்தனர். இந்த ஜாகீர்களை மூசலி நாயடு தன் பரிவாரத்துடன் அவர்களுடைய சமஸ்தானங்களைக் காத்து வருவதற்காக கொடுக்கப்பட்டனவென்று தெரிய வருகின்றன. இதனால் அவர் திருப்தி அடையாமல் மூசலி நாயடு மறுபடியும் பலவந்தராவிடம் போய்ச்சேர்ந்து

அவரிடத்தில் அநேக வெகுமதிகள் பெற்று சிட்டவேலியில் பிரவேசித்தார்.

முசலி நாயடு இதை விட்டுச்சென்ற பின்னர் ஜூபல்லி லக்ஷ்மாராயணிகாருடன் விரோதம் ஏற்பட்டு வந்ததினுல் முசலி நாயடு மட்லவாரி சேனையுடன் தன் சேனையையும் கூட்டிக்கொண்டு சென்று அவர்களுக்குச் சேர்ந்துள்ள பொதிலே, மாரெள்ல சீமைகளை ஜூபல்லிவாரிடமிருந்து பிரித்து வெங்கடகிரி சமஸ்தானதிபதியாகிய பங்கார் ஏசம நாயடுவுக்குச் சுவாதீனம் செய்துவைத்தனர். அதனுல் ஜூபல்லெவார் அங்கிருந்து வெளியேறினர். இந்தக் கிராமங்களைச் சுவாதீனம் செய்வதற்குள் முசலி நாயடு ஆர்க்காடு நவாப்பின் அனுமதியும் பெற்றிருந்தனன். பின்னர் இந்தப் பிரதேசங்களை ஜாகீர் செய்துகொண்டு, தன் மருமகனுகிய பத்தினி வெங்கம நாயடு என்றவரை அங்கு நியாயாதிபதியாக நியமித்தார். இந்த ஜாகீர் அதிகமாக இருந்ததை அறிந்து பொதிலெ சீமையை விட்டுக் கொடுத்தனர், இவர் ஒரு பக்கம் மட்ல வெங்கடராமராஜு வுக்கு திவானுகவும், இங்கு இஜார்தாராகவும் இருந்த காலத்தில் கிஸ்தித் துகை அதிகமாக பாக்கி நின்றதால், வசூல்தாரராகிய கா. சா. ராமன்ன என்ற பிராம்ஹணர் எவ்வளவோ பிரயத்தனப்பட்டு நோட்டீசுகளைக்கொடுத்தும் வசூல் செய்ய முடியவில்லை ஆதலால் அவர் நவாபிடம் புகார் செய்ய, உடனே நவாபு தந்திரமாக முசலி நாயடுவையும், வெங்கட ராமராஜுவையும் சமஸ்தானத்திற்கு வரும்படி தாக்கீது அனுப்ப, இவர்களிருவரும் அங்கு செல்ல நவாபு இவர்களுக்கு நல்ல மரியாதையுடன் கௌரவித்து, வெங்கட ராமராஜுவை அனுப்பிவிட்டு, முசலி நாயடுவைக் கைது செய்து நெல்லூருக்கு அனுப்பி, அங்கு சிறையில் பந்தோபஸ்தாக வைத்து விட்டு இவர் சொத்துக்களையெல்லாம் ஜப்தி செய்து 3 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து கொண்டும், அவரை விடுதலை செய்யவில்லை. ஆயினும் முசலி நாயடு எப்படியோ மாய உபாயமாக சிறையிலிருந்து வெளிவ்யே வந்து மறுபடியும் மட்ல வெங்கடராமராஜுவினிடம் சேர்ந்து திவான்கிரியில் இருந்துவந்தனர். அப்பொழுது நவாபினுல்

பறிக்கப்பட்ட 3 லக்ஷம் ரூபாய்க்கு வேண்டி முசலி நாயடு விடம் 1 லக்ஷம் ரூபாய் கொடுத்தார். இது இப்படியிருக்க கிறிஸ்து சகம் 1758-வருஷம் ஈஸ்வர-வருஷம் கடப்பை நவாப் ஆகிய மசீதுகான் குர்ரம் கொண்ட வகையறு பாதியைத் தன் வசப்படுத்திக்கொண்டனன்.

இதற்குள் கிறிஸ்து சகம் 1762-வருஷம் சகம் 1684-வருஷம் சித்ரபானு-வருஷத்தில் சர்வர்கான் என்றவரும், நேரசம் சமஸ்தானாதிபதியாகிய பேரா ரங்கா ரெட்டியும் கூடி கிராமங்களை ஆக்ரமிக்க ஏற்பாடு செய்துவந்தனர். அப்பொழுது நவாப் சையத்கான், ரம்ழுதுகான் என்றவர்கள் கூடி இவர்களை அடக்கி வந்தனர். அந்தச்சமயத்தில் மட்ல வெங்கடராஜூவும், முசலி நாயடுவுங்கூடி தன்னுடைய 3 ஆயிரம் படைகளைத் திரட்டிச் சென்று மாயலூர் பக்கம் உள்ள குந்துகட்ட என்ற இடத்தில் பிரமாதமான யுத்தம் நடத்தி அங்கே சர்வர்கான் என்ற தலைவனைத் துண்டம் செய்து மற்றவர்களை விரட்டிவிட்டு அங்குள்ள பிரஜைகளுக்கு டாணுக்களை நிர்மாணித்துக் கொடுத்துக் காப்பாற்றியதை அறிந்து நவாப் சந்தோஷப்பட்டு வெங்கடராஜூவுக்கு சில ஜாகிர்களையும், முசலி நாயடுவுக்கு சென்னூர் பிராந்தியத்தில் நாகசானி பல்லெ என்ற கிராமத்தையும் ஜாகிர் செய்து கொடுத்தனன். முசலி நாயடுவை கைது செய்த காசானி ராமன்ன என்றவரைப் பிடித்து அங்கங்களைக் கொய்து சம்ஹாரஞ் செய்து பழி தீர்த்துக்கொண்டனர்.

வெங்கடராமராஜூவின் குமாரராகிய திருவெங்கள ராஜூவுக்கும், முசலி நாயடுவுக்கும் சமாதானமில்லாமல் இருந்த சமயம் பலர் முசலி நாயடு மீது புகார்கள் செய்துவர அதை நம்பி முசலி நாயடுவைக் கைது செய்து, அவர் சொத்துக்களை ஜப்தி செய்து 1 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து கொள்ள ஏற்பாடு செய்தனர். அதனால் அவர் ரூபாய் 50 ஆயிரம் செலுத்தி விட்டு, பாக்கித்துகைக்கு சந்த்யாலராகவ ராஜூகாரை ஜாமீனாக ஏற்படுத்தி, திவானுகிரியிலிருந்து விலகி, வெங்கடகிரி சமஸ்தானபதியாகிய பங்காரு ஏசம நாயடுவைக் கண்டு விஷயங்களைக் கூறியும், அங்கு அவரால்

யாதொரு சகாயமும் கிடைக்காத காரணத்தால், மாக-ராஜு பாலெம் என்ற இடத்திற்குப் போயினர். அவர் போனவுடனே மல்லவாரி பாலெம் பிரதேசத்தில் கிஸ்தி வசூல் சரியாக வசூலாகாமல் தகாதாக்கள் ஏற்பட்டிருந்தன. அதனால் நந்த்யால ராஜுவின் கோரிக்கையின் காரணமாக அவர் மறுபடியும் திரும்பிவந்து திவானுகிரியில் தங்கினர். மட்லவார் நூதனமாக புவநேஸ்வர, சோமேஸ்வர தேவாலய பிரதிஷ்டைகள் செய்து வந்த காலம் சகம் 1689-வருஷம் கிறிஸ்து சகம் 1767-வருஷத்தில் அவர் வாசம் செய்தனர்.

கிறிஸ்து சகம் 1768-வருஷம் சகம் 1690-வருஷம் திப்பிரெட்டிபல்லெ சமஸ்தான அதிபதியாகிய சினநரசிம்ஹ நாயடு கடப்பை சுபேயிக்குத் திரும்பி சாகெர்லபாடி கோட்டையிலிருந்து அதைப் பலப்படுத்திக்கொண்டிருக்க, நவாப் ஹாலிங்கான் உத்திரவுகளின்படி வெங்கடராமராஜு வும், முசலி நாயடுவும் தங்கள் சேனைகளுடன் சென்று நவாப் சேனையையும் சேர்த்துக்கொண்டு போய் அவருடைய டாணவை சுவாதீனம செய்துகொண்டனர். பின்னர் முசலி நாயடு வேமுலகாரிபல்லைக்குச் சென்று அங்கு கிறிஸ்து சகம் 1769-ஆ விரோதிகிருது வருஷத்தில் காலமாகி விட்டனர். இதற்குள் ஹைதர் அலி, முசலி நாயடு கொடுக்கவேண்டிய கப்பம் பெற்று வரும்படி அதிகாரிகளை அனுப்ப அவர்கள் சென்று பார்க்கும்பொழுது அவர் மரணம் அடைந்ததைக் கண்டனர்.

மட்லவார் ராஜ்யம் பூராவும் முசலி நாயடு சொற்படி நடந்துவந்துள்ளன. அவருக்குப் பின்னர் தம்பி ஆகிய சக்கரப்ப நாயடு பிரதிநிதி ஆயினர். ஈடிமார்ப்பூர் கிராமத்தில் முசலி நாயடு ஒரு புளியம்தோப்பை நிர்மாணித்துள்ளார். லோகல் ரிகார்டு வால்யம் 44. இவர் காலத்தில் சிந்தகொம்மதின்னையில் 2 வயல்களை 15 ரூபாய்க்குக் கொடுத்ததாக ஆர்டர் லோகல் ரிகார்டு வால்யம் 38, பக்கம் 137-ல் காணப்படுகின்றன.

32) சுண்டூரி சக்கரப்ப நாயடு. இவர் திவானாக வருகின்ற காலத்தில் பொத்தபி, புலுகுல நாட்டுச் சீமையை பரிபாலித்து வந்த மட்ல சமஸ்தானத்தவர் தெலுங்கு சோழ வம்சத்தைச் சேர்ந்தவரே ஆவார். ஹைதர் அலிக்கு உட்பட்டு பிரதிநிதிகளாயிருந்து சைன்யத்திற்கு 2 லக்ஷம் ரூபாய் ஹைதர் அலிக்கும், 1 லக்ஷம் ரூபாய் தாலூக்கா கிஸ்து வசூல் சிலவுகளுக்காகவும் கொடுப்பதாகவும் நிர்ணயம் செய்துகொண்டுள்ளனர். இதற்குள் கிறிஸ்து சகம் 1771-வருஷம் வெங்கடராமராஜுகார் ராஜபிளவையினால் இறந்து போகவே, இந்த சக்கரப்ப நாயடு பரிபாலன விஷயங்கள் தெரியவில்லை. இவருக்கு அச்சம்ம, திம்மம்ம என்ற குமார்த்திகள் இருந்தனர். இவர்கள் இருவரும் ஈடமார்ப்பூர் கிராமத்தில் மாந்தோப்புகள், புளியந்தோப்புகளை நிர்மாணித்துப் பிரசித்தி பெற்றனர். லோகல் ரிகார்டு வால்யம் 44, இந்த சக்கரப்ப நாயடு தன் பேரால் ஒரு பேட்டையையும், கிராமத்தையும் கட்டியுள்ளார். லோகல் ரிகார்டு வால்யம் 17. இவர் சரவர்கான் என்ற நவாபிடம் உத்தியோகஸ்தராயிருந்து பட்டபுராவியில் சில பூமிகளை இனாமாகப் பெற்று, தன் தந்தையின் பேருக்கு ஒரு பேட்டையைக் கட்டினார். (சரசப்ப நாயனிபேட்டை) என்பது லோகல் ரிகார்டு வால்யம் 18, 19-ல் காணப்படுகின்றன.

33) சுண்டூரி சர்வப்ப நாயடு, இவர் சுண்டூரி வெமுசலி நாயடு குமாரர். சக்கரப்ப நாயடுவுக்குப் பின்னர் இவர் மட்லவார் சமஸ்தானத்தில் திவானகைப் பதவி ஏற்றார். அப்பொழுது திருவெங்களவரபு அப்பையராஜு ராஜ்யாதிகாரத்திலிருந்தார். இவர் ஹைதருக்குப் பிரதிநிதியானதால் இவருடைய ஆஸ்த்தானம் கிறிஸ்து சகம் 1782-வருஷத்தில் ஹைதர் சேனையுடன் கலந்து போயின பின்னர் ஆரணியில் காலகதி அடைந்துவிட்டனர். அப்பொழுது ஹைதர் திவானகிய சர்வப்ப நாயடுவை வரவழைத்து அப்பைய்ய ராஜு குமாரர்கள் சிறு வயதுள்ளவர்களானதால், அந்த பிராந்தியத்தைத் தானே பரிபாலித்து 2 ஆயிரம் சைனியத்துடன் ராஜ்ய காரியங்களை நடத்திவந்தார். ஹைதர்

இறந்த பின்னர் இவர் ஸ்ரீரங்கபட்டணம் போய்விட்டதாகக் காணப்படுகின்றன. பின்னர் 3 சஹ காரியங்களைப்பெற்றுக் கொண்டு புருளி ரங்கப்ப நாயடு சிட்டவேலிக்குச் சென்று திப்புசுல்தான் காலத்தில் வெங்கடராமராஜு தாலூக்கா ஜபுராயிற்று. அப்பொழுது வெங்கடராமராஜு திப்பு சுல்தான் மீதுள்ள விரோதத்தால் கோல்கொண்ட நவாபு நிஜாம் மல்லீகான் பக்கமாக வந்த பரிதுத்கான் என்றவர் திப்புசுல்தான் சைன்யங்களை எதிர்த்து சித்தவட்டம் கோட்டையை முற்றுகையிட்டுப் போராடுகையில் தன் திவானாகிய நரசப்ப நாயடுவையும், உதவி சேனையையும் அனுப்பினார். அப்பொழுது நரசப்ப நாயுடு எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டு அறுபதாயிரம் (60) ரூபாய் கப்பத்தையும் கொடுக்கும்படி உடன்படிக்கை செய்து கொண்டு அவருடன் குர்ரம் கொண்டவரை சென்றுள்ள சமயம், திப்புசுல்தான் குமாரர்கள் பத்தேஹைதர், நவாப் மீர்க்மகதீன்கான் சேனைகளுடன் வந்து போராடி, அமீஜு வைத் தலைவெட்டித் தள்ளினர், இதை அறிந்த நரசப்ப நாயடு உடனே அங்கு வந்து சேர்ந்தனர். தேக சௌக்கியம் இல்லாது கொடிய பீடிதம் ஏற்பட்டு கிறிஸ்து சகம் 1791-வருஷத்தில் இறந்துவிட்டார். இவருக்கு பட்டபுராவி, கொத்தூர் என்ற கிராமங்கள் ஜாகீர் செய்து கொடுக்கப் பட்டன. இவருக்குப் பின்னர் சிட்டவேலி தாலூக்கா சமஸ்தானத்தில் இவர் தம்பி ஜங்கம நாயடு திவானாச் சேர்ந்தார்.

34) சுண்டூர் ஜங்கம நாயடு, கிறிஸ்து சகம் 1792-ஸு சிட்வேலி சமஸ்தானத்தில் திவானாக இருந்தார். அப்பொழுது வெங்கடராமராஜுகார் 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே கப்பம் கட்டி வந்தார். கிறிஸ்து சகம் 1798-ஸு இந்த சமஸ்த்தான பேஷ்கர் செலுத்தாமல் தாமதப்பட்டு வந்தன. இந்த நிலையில் வெங்கடராமராஜுகார் தாயாதி வெங்கடராகவ ராஜுகார் தாயாதி வெங்கடராகவராஜு என்றவர் தன்னிடமிருந்த சுண்டூரி ரங்கப்ப நாயடு பேரனாகிய முசலி நாயடுவுக்குச்சில சேனைகளையும் உதவியாகக்கொடுத்து சிட்வேலி தாலூக்காவை ஜப்தி செய்து சொத்துக்களை

எடுத்துவரும்படி அனுப்ப அவர், நாகய்யபேட்டை, புடுகுண்டபல்லெ கிராமங்களைச் சூறையாடிக் கொண்டுவர அவர்களை எர்ரகுண்ட கோட்டை முன் கைது செய்து விட்டனர். இதை அறிந்த சதல்லீகான் என்றவர் வந்து ராகவராஜுவைக் கலந்து போராட, அதில் ராகவராஜு வுக்குத் துப்பாக்கி குண்டு பட்டு மயங்கி விழுந்து விடவே உடனே சிகிச்சைக்கு எடுத்துச்சென்றனர். ஆயினும் மஹமதியர் வெற்றிபெறமுடியாமல் சமாதானம் செய்து வெங்கடராமராஜுவுக்கு ஒரு தாலூக்காவைக் கொடுத்து விடுவதாகத் தீர்மானம் செய்துவந்தனர் என்றதை அறிந்த வெங்கடராமராஜு செட்டிகுண்ட அடவிக்குப்போய் வாசம் செய்துகொண்டிருக்கப் பின்னர் சதல்லீகான் வெங்கடராம ராஜுவுக்கு ஒரு தாலூக்காவையும், 90 ஆயிரம் ரூபாயும் கொடுத்து சமாதானத்துடன் போயினர். ஜங்கம நாயடு பின்னர் சந்தூலால் சுபேதாரிடம் சென்று சமஸ்தானத்திற்கு 1 லக்ஷம் ரூபாய் வெங்கடராஜு மூலமாகக் கொடுப்பதாகச் சொல்லி அவர் சகாயத்துடன் கிறிஸ்து சகம் 1800-வருஷத் தில் வெங்கடராகவராஜுவுடன் போராடி அவர் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, சந்துலாலுக்கு ரூபாய் 40 ஆயிரம் கொடுத்தனன். அதற்குள் வெங்கடராகவ ராஜும் ஒரு லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகத் தெரிவிக்க, சந்துலால் வெங்கடராமராஜுவை அனுப்பி தாலூக்கா சுவாதீனம் கொடுத்தும், அத்துடன் நில்லாமல் மறுபடியும் வெங்கட ராமராஜுவைக் கைது செய்து ஐதராபாத்துக்குக் கொண்டு போய் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிடம் ஒப்பித்து அவர் சொத்துக்களை எல்லாம் சுவாதீனம் செய்துகொண்டு, வெங்கடராம ராஜுவை மன்றோ துரையிடம் ஒப்பித்து விட அவரை குத்திதுர்க்கம் மீது கொண்டு சேர்த்தனரே யன்றி சமஸ்தானத்தைக் கொடுக்கவில்லை. அதுமுதல் சுண்டூரிவார் திவான்கிரியுங்கூட மாறிப்போய்விட்டன என்று லோகல் ரிகார்டு வால்யம் 22-ல் காணப்படுகின்றன. இந்த சரித்தி ரத்தினுல் மஹமதியர் ஆட்சியின் பின்னர் சமஸ்தானங்களில் அநேக இடையூறுகளும், கஷ்ட நஷ்டங்களும் நடந்து கொண்டே வந்திருக்கின்றன.

35) பிராம்ஹணபல்லிதுர்க்க நிர்மாணம், தம்மிநேனி வேமநாயடு, மாதிநேனி பாபன்ன, பொத்தூர் வேமபுலு கிருஷ்ணய்யகார் வேமபுலு, கடப்பை சுபேதார் மட்டாளு அப்துல் அலிகான் தாடிபர்த்தி பிராந்தியங்களைப் பரிபாலித்து வர கிறிஸ்து சகம் 1762-ஆம் பிராம்ஹணபல்லி கிராமத்தை இவர்கள் 4 பேரும் அதிகாரிகளாக இருந்து கொண்டு அந்தப்பக்கத்தில் வசித்து வந்த துஷ்டர்களை அடக்கி அங்கு ஒரு கல் கோட்டையைக் கட்டி பிரஜைகளைக் குடியேற்றி, அக்கோட்டையில் ஒரு கிணற்றை வெட்டி, ஒரு குளத்தையும் நிர்மாணித்து அதற்கு கல் கட்டு கட்டுவித்து, அந்த ஏரியின் மீது அத்தி, ஆலம், புளியம் முதலிய மரங்களை நட்டு விருத்தி செய்து வைத்ததினால் பிராம்ஹணபல்லிக்கு தம்மனார் பிராம்ஹணபல்லியென்று பெயர் ஏற்பட்டதென்று லோகல் ரிகார்டு வால்யம் 55, பக்கம் 160-ல் காணகின்றன. இவர்கள் முதலில் தாடிபர்த்தியில் உள்ள கொண்டாபுரமெ கிராமத்தில் வாசஞ் செய்துவந்தனர். இவர்கள் கட்டி வைத்த கோட்டை பின்னர் என்னவாயிற்று என்பது தெரியப்படவில்லை.

36) சலுராயிபாடு முதலான ஜாகீர்கள், செருகுநாரசிம்ஹ நாயடு, அஹோபல நாயடு, இவர்கள் இருவரும் கடப்பை நவாபு பரிபாலனத்திலிருக்க, அலீகான் பட்டத்திற்கு வந்து பரிபாலித்துவருகையில் இவர்கள் சலுராயிபாடு, துரிமெள்ள, எர்ரபாலெம் முதலான சில கிராமங்களை ஜாகீர் செய்து கொண்டு அவைகளைப் பரிபாலித்து வந்தனர். அதனால் இவர்கள் சுமார் கிறிஸ்து சகம் 1770-வருஷ காலத்தில் இருந்தவர்களென்று காணப்படுகின்றன.

37) பொன்னம்பல்லி காவலிரக்ஷணமுலு, பெட்ல பாபா நாயடு, இவர் 18-வது சகாப்த காலத்தவரென்று காணப்படுகின்றன. இவர் ஜம்மலமடுகு தாலூக்காவில் பொன்னம்பல்லி தாலூக்கா கிராம பிராந்தியங்களில் காவல் படைகளையும், பிரஜைகளையும் அங்கு குடியேற்றி சகல சவுகரியங்களுடன் பரிபாலித்து வந்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 20-ல் தெரியவருகின்றன.

38) சாயபநேனிவாரு, தூபாடி சீமை சமஸ்தானம்,
14-வது சகாப்த முதல் பேர் பெற்ற சாயபநேனி வாரில் சகம்
(1291) வருஷத்தில் வெங்கடாத்ரி நாயுடு குராலமடுகு
கிராமத்தில் பிரசித்தியுடன் வாழ்ந்து வந்ததாக 2-வது
பாகத்தில் கண்டுள்ளோம். அக்காலத்திலிருந்து இந்த
வம்சத்தினர் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தனர். கஜபதி
ராஜாக்கள் நம் தேசத்தை ஆண்டு வந்த காலத்தில், சகம்
(1401) வருஷ காலக்கிரமத்தில் ஷை வெங்கடபதி நாயுடு
தூபாடி சீமையைப் பரிபாலித்து வந்த விஷயங்களை முன்னமே
தெரிவித்துள்ளோம். அது (பிரதாபருத்ர கஜபதியின் காலம்)
அது முதல் தூபாடி சீமை இந்த வம்சத்தினர் பரிபாலனைத்
திலேயே இருந்து வந்தன. இந்த சீமையில் (533) கிராமங்
களிருந்தனவென்று லோகல் ரிகார்டு வால்யம் (38 பக்கம்
411)-ல் காணலாம். இந்த வம்சத்தினரின் விருத்தமொன்று
லோகல் ரிகார்டு வால்யம் (47)-ல் இருக்கின்றன. அதில்
சாயபநேனி மாச் நாயுடு என்றவர் கிருஷ்ண தேவராயர் கால
முதல் (20) வருஷ காலம் ராஜ்ய பரிபாலனம் செய்து
வந்தனர். இவர் குமாரன் வெங்கள நாயுடு என்றவர் பின்னர்
40 வருஷ காலம் பட்டதாரியாக ராஜ்ய பரிபாலனம் செய்து
வந்தனர். இவருக்கு வெங்கடாத்ரி நாயுடு ஜனித்து (50)
வருஷ காலம் ஆட்சி நடத்தி வந்த சகம் (1477) வருஷம்
இவருக்கு சாயபநேனி நாயுடு, வராபுரங்கப்ப நாயுடு என்றவர்
கள் பிறந்து சகம் (1514) வருஷம் வரை பரிபாலித்தனர்
என்றும், இவருக்கு கங்கப்ப என்றவர் பிறந்து சகம் (1532)
வருஷ வரை இருந்து இறந்துவிட்டதாகவும் இவருக்கு
வெங்கடாத்ரி என்றவரும், இவருக்கு வெங்கடபதி, சித்
தன்ன என்றவர் தோன்றி சகம் (1556-1560) வருஷம் வரை
ராஜ்ய பரிபாலனம் செய்து வந்ததாக சொல்லப்படுகின்றன.

39) சாயபநேனி கங்கப்ப நாயுடு பேரனும் வெங்
கடாத்ரி புத்திரனுமாகிய கங்கப நாயுடு தூபாடி சீமையைப்
பரிபாலித்து வந்தும் திரிபுராந்தகத்தில் சகம் (1536) வருஷத்
திற்கு சரியான ஆநந்த வருஷம் அங்குள்ள சென்ன கேசவ
ஸ்வாமி தேவாலயத்திற்கு (4) கிராமங்களை மானியமாகக்
கொடுத்தனர், குர்ரபுசால, சென்னராயனி பல்லெ, கார்

லதில்லென (2) இவ்விஷயம் சாசனங்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. (A. R. No 2360 & 1905) வருஷம் இதன் நகல் ஒன்று லோகல் ரிகார்டு வால்யம் (13) இவர்களுடைய வம்ச விருக்ஷத்தில் தெரியப்படுத்தியுள்ளது (L. R. V. 47)-ல் ஒரு சங்கப்ப நாயுடுவின் பெயரே காணப்படுகின்றதே ஒழிய (2)-வது சங்கப்ப நாயுடுவின் பெயர் காணப்படவில்லை, தவிர முதல் சாயப நாயுடு கிருஷ்ணதேவராயருக்கு பிரதிநிதியென்று கூறியும் அவர் சகம் (1377) வருஷம் கிறிஸ்து சகம் (1455) வருஷத்தில் காலகதியடைந்து விட்டதாக வம்ச விருக்ஷத்தில் கூறப்பட்டுள்ளன. இது பொருத்தமாகத் தோன்றவில்லை, கிருஷ்ணதேவராயர் கிறிஸ்து சகம் (1510-30) வருஷ மத்தியில் இருந்தவரென்று சரித்திரங்கள் கூறுகின்றன.

சாயப நாயுடு சைனியம் ஒன்று விஜய நகரப் பக்கம் நடந்த யுத்தத்தில் 77 பாளையக்காரர்களில் (பாளையங்களில்) இது ஒன்று என்றும், அந்த 280 குறி கணக்குடையதென்றும் விஜயநகர சாம்ராஜ்யம் சீமைகளில் காணப்படுகின்றன. பாரதி சுக்ல வருஷம் ஆஸ்வீஜ சஞ்சிகை பக்கம் (624)-ல் இந்த கணக்கு கிறிஸ்து சகம் (1604) வருஷத்தில் வெங்கடபதி ராயர் காலம் தயார் செய்யப்பட்டதால் அதுவரை சாயபநேனிவாரி பாளையங்கள் இருந்ததாகத் தெரிய வருகின்றன என்பது ஸ்பஷ்டம்.

இந்த வம்சாவழியினர் சகம் (1401) முதல் (1486) வருஷம் இந்தப் பாலகருடைய வம்சாவழியை நிர்ணயிக்க சில சாதனங்கள் கிடைக்கவில்லையாதலால் இதைப் பூர்த்தி செய்யமுடியவில்லை.

இப்பொழுது கிடைத்துள்ள இந்த வம்சாவழியினர் சாசனங்களைக்கொண்டு சகம் 1486-வருஷம் முதல் சாயப-நேனி கங்கப்ப நாயுடு அளியராமராயர் பிரதிநிதியாக சுமார் சகம் 1511-வரை காலம் அவர் குமாரராகிய வெங்கடாத்ரி 2-வது வெங்கடபதிராயர் பிரதிநிதியாகவும், பின்னர் 2-வது சங்கப நாயுடு சகம் 1536-வருஷம் தூபாடு சீமையைப் பரிபாலித்து வந்தவர். இவர் வெங்கடதேவராயர் பிரதிநிதி

என்று சாசனத்தில் எழுதி வைத்துள்ளார். இதைக் கிறிஸ்து சகம் 1614-ஐ வரை தாபாடி சீமை மஹமதியர் வசம் ஆகவில்லையென்பது நிச்சயம்.

சாயபநேனி திம்மா நாயடுவின் அனுமதியின் பேரில் நாகி செட்டி என்றவர் சகம் 1564-வருஷம் கிறிஸ்து சகம் 1624-வருஷத்தில் சித்தாபுரத்தில் உள்ள வீரபத்திர ஆலயத்தின் பக்கம் சில தேவதைகளைப் பிரதிஷ்டை செய்து மான்யங்கள் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளதாக லோகல் ரிகார்டு வால்யம் 15, பக்கம் 321-ல் எழுதப்பட்டு உள்ளன. இதில் வீரதேவராயமராயர் பிரதிநிதியென்றே சொல்லியுள்ளார். இந்த திம்மா நாயடுவுக்கும், கங்கப நாயடுவுக்கும் என்ன சம்மந்தம் என்ற விபரம் தெரியவில்லை. இந்த சாசனத்தைக் குறித்து கிறிஸ்து சகம் 1624-வருஷம் வரை தாபாடி சீமையை ராயதேவராயா ஆட்சியிலிருந்து வந்தனவென்று காணப்படுகின்றன. கிறிஸ்துசகம் 1624-45 வருஷ மத்தியில் இந்த ராஜ்யமும் கோல்கொண்டா நவாபின் மருமகனாகிய அப்துல் குதுப்ஷாவுக்கு உட்பட்டுப் போனதாக காணப்படுகின்றன.

கங்கப நாயடு மஹமதிய ஆட்சியின் காரணமாக தேசம் அராஜகம் ஆனதால், தன்னிடமிருந்த நியோகி பிராம்ஹணராகிய ராமய்யரை, அப்துல் குதுப்ஷாவிடம் அனுப்பித் தன்னை ராஜப்பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கும்படி அனுப்ப, அவர் சென்று தெரிவிக்க, அவரும் சம்மதித்து, ஆத்மகூர், சித்தாபுரம், தாபாடி சீமை, கம்பம் முதலான பிராந்தியங்களுக்கு அதிகாரியாக இருந்து ஆண்டு வரும்படி நியமனம் செய்தனர். என்று காணப்படுகின்றன. தாபாடி சரித்திரம் கங்கப்ப நாயுடு பேரை எழுதாமல் அப்துல்லா பேரை மட்டும் குறித்து அனுப்பியது சாயப நாயுடு என்று தெரிய வருகின்றன. வீட்டுப்பெயர் மாத்திரம் குறித்துள்ளதால் அக்காலத்திலிருந்தவர் இவரே ஆனதால் அப்துல் குதுப்ஷாவிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்தவர் இவரே முதல்வரென்று காணப்படுகின்றன. தவிர சரித்திரமும் கூறுகின்றன. இந்த கங்கப்ப நாயுடு சகம் (1532) வருஷம் கிறிஸ்து சகம் (1610) வருஷம் இறந்துபோனதாக தாபாடி

சரித்திரம் கூறுகின்றன. இந்த விஷயமும் யுக்தியென்றே தோன்றுகின்றன. கிறிஸ்து சகம் (1614) வருஷம் இவருடைய சாசனம் விஷயத்தை முன்னமே கூறப்பட்டுள்ளன.

இவர் பேரராகிய வெங்கடபதி நாயுடு பரிபாலனம் சகம் (1565) கிறிஸ்து சகம் (1643) வருஷத்திலிருந்ததாக இவர் எழுதி வைத்த சாசனம் நெம்பர் (46/15)-ல் தெரிய வருகின்றன, இந்த கங்கப நாயுடு கிறிஸ்து சகம் (1615–1643) வருஷ மத்தியில் காலமடைந்து விட்டதாக காணப்படுகின்றன.

40) சாயபநேனி வெங்கடாத்திரி பிரபு, இவர் கங்கப்ப நாயுடு காலமான பின்னர் அவர் குமாரர் ஆகிய இவர் தூபாடி சீமையை ஆண்டு வந்தனர். இவர் தன் பேரால் ஒரு கோட்டையைக் கட்டியும், சென்னகேசவ ஸ்வாமி தேவாலயம் கட்டியும், பெரிய ஏரி ஒன்றை நிர்மாணித்தும், தன்னுடைய சீமையில் அநேக தேவாலயங்களைக் கட்டியும் பிரசித்தி பெற்றனர் என்று தெரிகின்றன. இவர் தத்தவால பட்டணம் என்று நூதனமாகக் கட்டியதாகவும் அதை (3) கோஸ் விஸ்தீரணமுள்ளதாகவும், அதில் (500) பேர் கோமுட்டி செட்டியார்கள் வீடுகளும், 500 மார்வாடி வீடுகளும் 60 மாடி வீடுகளும் 11 யானைகள் புகுந்து வரும்படியான கொட்டகைகளும் ஏற்படுத்தி பிரபுக்களை மாடிகளில் வாசஞ்செய்து வருவதற்கான வசதிகள் முழுவதும் செய்து வைத்ததாக லோகல் ரிகார்டில் எழுதப்பட்டுள்ளன. இவருக்கு வெங்கடபதி சித்தன்ன என்றவரும்குமாரர்கள், அக்கம்ம என்ற சகோதரியுமிருந்தார்கள், இவ்வம்மையார் வேணுகோபால தேவாலயம் ஒன்று நிர்மாணித்து சம்ரோக்ஷணாதி காரியங்களை யுக்தப்படி செய்வித்து ஒரு ப்ராகாரத்தையும் கட்டி வைத்ததாக தூபாடி சரித்திரங் கூறுகின்றன. வால்யம் (13)-ல்.

41) சாயபநேனி வெங்கடபதி, சித்தன்ன நாயண்ட்லு, வெங்கடாத்ரி பிரபுவினுடைய குமாரர்கள் பின்னர் தூபாடி சீமையைப் பரிபாலித்து வந்தனர் வெங்கடபதி சகம் (1556-1560)-வருஷத்தில் அநேக தான தர்மங்களைச் செய்து

சாசனம்எழுதிவைத்துள்ளார் சகம் (1567) வருஷம்சுவபானு வருஷத்தில் எழுதி வைத்த சாசனம் ஸ்ரீ சைலத்தில் உள்ளன 46/15 இவர் ஸ்ரீ சைலத்தில் லோஹங்களை எடுத்து விற்பனை செய்து வந்தவர்களுக்கு விதித்திருந்த வரிகளையும் நீக்கி வைத்தனர், இவரும் கூட அப்துல்லா குதுஷ்பாவுக்கு ராஜப்பிரதிநிதியாக இருந்ததாகவும் இவர் சகம் (1560) வருஷ காலத்தவரென்று ஒப்புக்கொண்டனர் ஆயினும் மஹமதியர் ராஜப்பிரதிநிதி என்பதை கட்டுக்கவி என்று ஒப்புக்கொள்ளவில்லை.

வெங்கடபதிக்கு திம்மா நாயுடு, ரங்கப்ப என்ற இருவர் குமாரர்களிருந்தனர், வெங்கடபதி காலமாகிவிடவே இவர் தம்பி சித்தன்ன நாயுடு தன் ராஜ்யத்துடன் இந்த ராஜ்யத்தையும் இக் குடும்பத்தையும் பாதுகாத்து வந்தனர் இது சகம் (1577) வருஷத்தில நடந்ததாக காணப்படுகின்றன.

42) சாயபநேனி ரங்கப்ப, திம்மா நாயண்ட்லு, சித்தன்ன நாயடுவுக்குப் பின்னர், ரங்கப்ப, திம்மா நாயுடு இவர்களுக்கு வயது வந்த காலம் ராஜாங்க மாறுதல் ஏற்பட்டமையால் கோல்கொண்ட நவாபிடம் சென்று தங்கள் ராஜ்யத்தைக் கொடுத்து விடுமாறு கோர அவர், இவர்கள் வசம் சில படைகளைக் கொடுத்து, தனக்கு அடங்காது எதிர்த்து வந்த வடநாட்டு சாயபுகளைக் கட்டுப்படுத்தி வருமாறு நியமித்து அனுப்ப, இவர்கள் படைகளுடன் சென்று அவர்களை வசப்படுத்தி வந்து நவாபிடம், பரிசாக சில பிராந்தியங்களும் இவர்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்டு பரிபாலித்து வரும்படி நியமனம் செய்து அத்தாக்ஷிப் பத்திரமும் எழுதி வைத்துள்ளார், அவர் கொடுத்த சீமையில் 66 கிராமங்கள் சேர்ந்துள்ளன. சகம் (1578) வருஷ முதல் கொண்டு இந்த சீமைகளைப் பரிபாலித்து வந்தனர், இவர்களில் திம்மா நாயுடுவுக்கு பெதவெங்கடாத்ரி நரபாலனும், ரங்கப்ப நாயுடுவுக்கு சினவெங்கடாத்ரி நரபாலனும் பிறந்து வந்தனர்.

ரங்கப்ப நாயுடு சகம் (1597) வருஷம் கிறிஸ்து சகம் (1676) வருஷம் பிரம்மய்யலிங்கம் அய்யர் என்றவருக்கு அக்ரஹாரம் கொடுத்துள்ளனர், இதற்கு முன்னமே சகம்

(1582)-வருஷத்தில் வெங்கடாத்ரி நரபாலன் இந்த குருவுக்கு அந்துகுலபாடியில் 700 வள்ளம் பூமியும் ஒரு அக்ரஹாரமும் கொடுத்துள்ளார், அந்த சாசனத்தில் சாயபநேனிவார் கோத்ரம் மாதால என்று எழுதியுள்ளன. ரங்கப்ப நாயுடு சாதுலூரில் 90 வள்ளம் பூமியும் அக்ரஹாரத்தையும் பிராம்ஹண ஆசார்ய புரோகிதர்களுக்கு கொடுத்தனர். தவிர கிறிஸ்து சகம் (1675) வருஷம் முதல் கொண்ட மனுரப்ப, மல்லப்ப, வரபு கோரப்ப, என்ற பிராம்ஹண பண்டிதர்களுக்கு சாதுலூரில் 60 வள்ளம் பூமியை தானம் கொடுத்துள்ளதாக தூபாடி சரித்திரத்தில் கூறப்படுகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் 8-ல் எழுதப்பட்டிருக்கின்றது. ரங்கப்ப நாயுடு, திம்மா நாயுடு இவர்கள் கிறிஸ்து சகம் (1677) வருஷம் வரை ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தனர். அதன் மேல் இவர் குமாரர்களாகிய பெதவெங்கடாத்ரி, சின வெங்கடாத்திரி ராஜ்ய பரிபாலனத்திற்கு வந்தனர்கள். இவர்களிருவரும் அப்துல்லா குதுஷ்பா பரிபாலனம் கடைசியில் தானீஷா என்றவரின் ஆக்ஷியிலிருந்ததாக காணப்படுகின்றன.

தானீஷா பாலனம் இந்து மதத்திற்கு சாதகமாகவே இருந்தமையால் இவர்கள் பரிபாலனத்திலுள்ள பிரதேசங்கள் அக்ரஹாராதிகள் அபிவிருத்தியடையச் செய்து வந்தும், தேவாலயங்கள் முதல் பிராம்ஹணாதிகள் எல்லோருக்கும் அநேக விதமான சௌகரியங்களைச் செய்து வந்தனர்கள்,

43) சாயபநேனி பெத வெங்கடாத்திரி சினவெங்கடாத்திரி பூபதிகள், இவர்களின் ஆக்ஷியில் தத்தநால கோட்டை நாசமடைந்து விட்ட விஷயங்களை முன்பாகத்தில் விளக்கியுள்ளோம். இன்னும் சில விஷயங்களை இங்கு கண்டு கொள்வோம். இவர்களில் சின்ன வெங்கடாத்திரி நரபதி மிக்க பிரபல குண சாதுர்யமுள்ள பூபால திலகராவார். கிறிஸ்து சகம் 1682-வருஷம் ஹிஜிரி 1093-வருஷத்தில் கோல்கொண்ட நவாபிடமிருந்த திம்மாஜி பந்துலுவிடமிருந்து, கம்பம், கொச்செர்லகோட்டை, மாசெர்ல, தூபாடு, அத்தங்கி, அம்மனம்ப்ரோலு, தர்சி, பொதகமூர்,

அல்லூர், பெள்ளூர், சிமலகூர்ரு, பொதிலெ வகையரு 15 பரகணைக்களில் கப்பம் வசூல் நூற்றுக்கு மூன்று வராஹன் வரை செலுத்தவேண்டுமென்றுரிகார்ட்டு பெற்றுக்கொண்டு இந்த கிராமங்களில் சுமார் 1000 இருக்கும் என்று காணப் படுகின்றன.

ஹிஜிரி 1101. கிறிஸ்து சகம் 1690-வருஷம் மற்றொரு சதசை சின்னவெங்கடாத்ரி நரபாலன் பெற்று கிறிஸ்து சகம் 1707-வருஷத்தில் கோல்கொண்டா நவாபின் மூலமாக 3 பரகணைப் பிராந்தியங்களில், வெங்கடகிரியில் குமாரயாசம நாயடுவாருக்கு ஜாகீராகக் கொடுத்துள்ளதனால் சகம் 1629-வருஷத்தில் இவர் ஒரு உடன்படிக்கையுடன் தான பத்திரம் குமாரயாசமநாயடு பேருக்கு எழுதி வைத்துக்கொடுத்து இருவரும் ஒற்றுமையாக இருந்து காரியாதிகளை நடத்தி வந்தனர். அக்காலத்தில் இவரிடமிருந்த படைகளின் விபரம்: சின்ன வெங்கடாத்ரி நரபாலனிடம் 5 ஆயிரம் குதிரைப் படையும், 15 ஆயிரம் காலாட் படையுமிருந்தன. இதனால் இவர் ராஜ்யத்தில் வரி, வட்டம், கிஸ்து முதலான வற்றை வசூல் செய்ய உமாராவ், ஜாகீர்தார் முதலானவர் களை நியமித்து வசூலித்து வந்தனர். இவருடைய சைனியத் தில் செஞ்சி வீரர்கள் அதிகமாக இருந்து வந்தனர்.

இவர் எர்ரகொண்டபாளையத்தில் ஒரு நூதனமான ராஜபவனத்தைக் கட்டிவைத்தார். இவர் மிக்க பராக்கிரம சாலியாக 12 பரகணைப்பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்தனர். ஒரு சமயம் இவர் தேச யாத்திரையாக வேறு சீமைகளுக்குச் சென்றிருந்த சமயம், கோல்கொண்டா நவாபின் விரோதியாகிய பகருல்லாகான் என்றவன் இங்கு ராஜா இல்லாததை அறிந்து தன் படையுடன் வந்து போராடிக் கோட்டையில் பிரவேசித்து ராஜா குடும்பத் தினரை பலாத்காரமாக நிர்ப்பந்திக்க, அவர்கள் தப்பித்துக் கொண்டு, தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி அக்கினிப் பிரவேசமானதாக 2-வது பாகத்தில் கூறப்பட்டுள்ளன. பெதவெங்கடாத்திரி நாயடு இந்த யுத்தத்தில் இறந்துபோய் விட்டனர்.

சினவெங்கடாத்திரி நாயடுவுக்கு அக்காலத்தில் மல்லிகார்ஜுன நாயடு என்ற 5-வயது பாலகுமாரன் இருந்தான், இவர் ராணிவாச ஸ்திரீகளால் முன்னர் தாள்ளூறு, தக்கெள்ளபாடு கிராமங்களிலிருந்த பந்துக்கள் ஆகிய ராவெள்ள, கிலாறுவார்களிடம் ரகசியமாகக்கொண்டு போய் ஒப்படைத்தனர். இந்த சின்னவெங்கடாத்திரிக்கு பெத்தம்ம என்ற குமாரத்தி இருந்து மேதாமெட்டவாருக்கு விவாகம் செய்து கொடுத்துள்ளனர் என்று N. I. D. 31-ல் காணப்படுகின்றன. சினவெங்கடாத்திரி நரபதி சகம் 1632, கிறிஸ்து சகம் 1710-வருஷத்தில் தன்னுடைய முக்கிய பட்டணம் நாசமடைய ராணிவாசஸ்திரீகள் அக்கினிப் பிரவேசம் ஆனதைக் கேட்டு வந்து பார்த்து துக்க சாகரத்தில் மூழ்கி, தானும் தன் வாளாயுதத்தால் தற்கொலை செய்து கொண்டனர். இவரிடத்தில் முக்கியஸ்தர்களாக சூரேபல்லி வார், மூலபூறிவார் என்ற பிராம்ஹணர்கள் இருந்தனர். இந்த சினவெங்கடாத்ரி நரபாலன் காலத்தில் கோல்கொண்டாவில் குட்ருத்தீன் அசப்கான் என்ற நவாபின் பாலனம் இருந்தன. ஆயினும் அங்கங்கு சுல்தான்களே சர்வாதிகாரத்தையும் நடத்தி வந்ததாகக் காணப்படுகின்றன.

44) ராஜா சாயபநேனி மல்லிகார்ஜுனர் சமஸ்தான புனருத்தாரணம், தாள்ளூறு தக்கெள்ளபாடியார்களால் போஷிக்கப்பட்டு வந்த சாயபநேனி மல்லிகார்ஜுனன் கிரமமாக வயதுவந்த பின்னர் மல்லிகார்ஜுன ராஜகுமாரனுக்கு உதவியாக முன் ராஜப்பிரதிநிதியாக வெங்கடாத்ரி நாயடு, நல்லாடி வெங்கடபதி (கொல்ல) வொர்லகுண்ட்ட திருமலப்ப நாயடு (வெலம்) வும் கலந்து ரூபாய் 20 ஆயிரம் சேர்த்துக்கொண்டு மல்லிகார்ஜுன பூபதி ராஜகுமாரனையும் ஜோகன்ன குமாரர்களாகிய சின்னப்ப, புருஷோத்தம நாயடு அவர்களையும் சேர்த்துக்கொண்டு சென்று ஆனையின் மீது ஆரோகணம் செய்து பரிவாரத்துடன் கோல்கொண்ட நவாபிடம் நடந்த விஷயத்தைச் சொல்ல, அவர் யோசனை செய்து விஷயத்தை அறிந்து ராஜமரியாதையுடன் வரவேற்று, உபசரித்து, மிக்க பரிதாபத்துடன் இவர்களை ஆதரிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் பிரதானி

முதலானவர்களுடன் கலந்து, பழையபடி ராஜ்யத்தைக் கொடுப்பதாக நிர்ணயித்து விருகொண்டபிவை பிராந்தியங்களில் 225 கிராமங்கள் அடங்கிய துர்க்கங்களைக் கொடுத்து ஆண்டுவரும்படி நியமனம் செய்துவைத்தனர். பின்னர், மல்லிகார்ஜுனராஜா பூர்வமந்திரி பிரதானிகளுடன் பந்துவர்க்காதியர் சூழ பரம்பரை ஆசார்ய புரோஹிதர் முதலானவர்களைக்கொண்டு நல்ல சுபகரமான காலத்தில் பட்டாபிஷேகம் செய்துகொண்டு, அநேக தான தர்மாதி காரியங்களை யுக்தப்படி நடத்தி மிக்க பிரசித்தியுடன் ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தனர். இவருக்குத் துற்காவ மல்லிகார்ஜுனர் என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளன. இது நிற்க கிறிஸ்து சகம் 1723-வருஷம் கோல்கொண்ட ராஜ்யத்தில் அராஜகம் தலையெடுத்தன. இதற்கு டில்லி சக்கரவர்த்திகளில் ஏற்பட்ட மாறுதல்களே காரணம்.

அக்காலத்தில் தேசங்களில் விபுராம்கான் என்ற மஹமதியன் கலவரங்களை ஏற்படுத்தி வந்தனன். எர்ர (குண்ட) கொண்ட மீதிலும் போர் தொடுத்தனன். முதலில் பகருல்லாகான் நடத்திய மாதிரியே, சாயபநேனிவார் ஆதிக்கத்திலுள்ள கிராமங்களில் அட்டூழியங்களைச் செய்து வர, இந்த மல்லிகார்ஜுன பூபதி தன் பரிவாரங்களைத் திரட்டிக்கொண்டு எதிர்த்துப்போராடி, அநேக எதிரிகளைக் கொன்று தள்ளி குதிரையின் மீது ஏறிக்கொண்டு கோர யுத்தம் நடத்திக் கடைசியில் வீர சுவர்க்கம் அடைந்ததாகக் காணப்படுகின்றன. அப்பொழுது எதிரியாகிய விபுராம் கான் அந்த கிராமத்திலுள்ள ஸ்திரீகளையெல்லாம் சிரச்சேதம் செய்து கிராமத்திற்கே தீ மூட்டி நாசம் செய்தனன் என்று சகம் 1645, கிறிஸ்து சகம் 1723-வருஷத்தில் நடந்ததாக காணப்படுகின்றன.

இராஜ்யத்திற்கு ராஜா இல்லாததால் கோல்கொண்ட நவாபு வேறு பிரதிநிதியை ஏற்படுத்தி அந்தப் பிரதேசத்தை பரிபாலித்து வர ஏற்பாடு செய்துள்ளதாக சரித்திரங்கள் கூறுகின்றன.

45) சாயபநேனி சன்னப்ப, புருஷோத்தம நாயஸ்ட்ரு சமஸ்தானத்தின் வரலாறு கூறப்படுகின்றன. கொஞ்ச காலம் மேற்கண்டபடி நடந்த பின்னர் சாயபநேனி ஹொகன்ன குமாரர்கள் சன்னப்ப, புருஷோத்தம நாயடு என்றவர்கள் பிரசித்தி பெற்று, தன் வம்சாவழியினருக்கு பாத்தியப்பட்டிருந்த ராஜ்யத்தைத் தங்களுக்குக் கொடுக்குமாறு கோல்கொண்ட நவாபிடம் சென்று விஷயத்தைச் சொல்லினர். ஆயினும் அந்தப்பிரதேசங்களை சாலவாரம் கும்மா ராவுக்கு ஜாகிராகக் கொடுத்திருந்தமையால் கடைசி வரை நூபாடு சீமையில் 58 கிராமங்களும், கொச்செர்ல கோட்டைச் சீமையில் 10 அல்லது 20 கிராமங்கள் மிகுதி இருந்தவற்றை பேஷ்கஸ் செய்து கொடுத்தும், அதைப் பரிபாலித்து வரும்படி நியமனம் செய்தனர். அதன் பின்னர் சன்னப்ப, புருஷோத்தம நாயடு சுவாதீனம் செய்து பரிபாலித்து வந்தனர். இவர் காலத்தில் மந்திரியாகவும், ராஜபந்துவாகவும் இருந்து வந்த ராவூர் சின்ன சென்னப்ப நாயடுவுக்கு எர்ரபாளெம், எக்கோஜிகூடம் என்ற கிராமங்களைக்கொடுத்து உதவி செய்தனர்.

புருஷோத்தம நாயடு சகம் 1640-வருஷம் ராஜ்ய பாலனங்களைப் பரிசீலித்து வந்தனர். பின்னர் சன்னப்ப நாயடு பரிபாலனத்திற்கு வந்தனர். இவர் மிர்பம்பல்லெ கிராமத்தில் ஒரு நூதன கிருஹத்தை நிர்மாணித்துள்ளனர். இவரிடம் ராவூரிவார் என்ற கம்மவாரும், வொர்லகுண்ட்டவாரென்ற வெலமவாரும், போடவாரும், சோடவாரும், ஹாதோவாசவாரும், நல்லாபுவாரென்ற கொல்லர்களும் என்ற பாளையக்காரர்களிருந்தனர். சமஸ்தானத்தில் பிரதேசங்கள் குறைந்து போயினும், இவர் பரிபாலனத்தில் பிரஜைகளுக்கு நல்ல போஷகமிருந்து வந்தன. புருஷோத்தம நாயடுவுக்கு அம்பா நாயடு என்ற குமாரன் இருந்துவந்தான். சென்னப்ப நாயடுவுக்கும், சுப்பா நாயடு, நாராயணப்ப நாயடு என்ற குமாரர்கள் தோன்றினர். இந்த சுப்பா நாயடுவுக்கு சேஷாசல நாயடு என்ற மறு பெயரும் உண்டு.

புருஷோத்தம நாயடுவுக்குப் பின்னர் இவர் குமாரர்களாகிய அம்பா நாயடு, சென்னப்ப நாயடு இருவரும் கூடி தம் சீமைகளைச் சமபாகம் செய்து கொண்டு பரிபாலித்து வந்தனர்கள். இதற்குள் சென்னப்ப நாயடு சகம் 1653-வருஷம், கிறிஸ்து சகம் 1731-வருஷத்தில் காலம் அடைந்து விட்டதாக சரித்திரங் கூறுகின்றன.

46) சாயபநேனி அம்பா நாயடு. இவர் தன் சிறிய தகப்பனாரிடம் சமபாகத்தைப் பெற்று அவர் மரணமடைந்த காலத்தில் அவர் குமாரர்கள் சுப்பன்ன, நாராயணப்ப நாயடுகள் சிறு வயது உடையவர்களாதலால் இராஜ்யம் பூராவையும் 20-வருஷம் தானே பரிபாலித்து வந்தார். பின்னர் அவர்களுக்கு வயது வந்த பின்னர் தங்கள் பாகத்தை கொடுக்கும்படி கேட்டும் கொடுக்கவில்லை. எவ்வளவோ பெரியவர்கள் சொல்லியும் கட்டுப்படவில்லை. ஆதலால் சமஸ்தானத்தில் பிளவு ஏற்பட்டு அநேக கிராமங்கள் வெங்கடகிரி சமஸ்தானத்திற்கு சேர்ந்து போயின. மீதி இருந்த சீமைக்கு 300 வராகன் கப்பம் செலுத்தும்படி கோல்கொண்ட நவாபு தீர்மானம் செய்தனன்.

47) சாயபநேனி சுப்பா நாயடு, நாராயணப்ப நாயடுகள், அம்பா நாயடு தம் தந்தையின் பாகத்தை கொடாத காரணத்தால் கோல்கொண்ட நவாபிடம், பேஷ்வா என்ற பாலாஜி பாஜி ராவிடம் விஷயத்தைச் சொல்லி மூலூர் வீரராஜேன்ற நியோகி பிராம்மணரை அனுப்ப, அவர் சென்று நவாபிடம் விஷயத்தை அறிவிக்க அவர் கேட்டு, நாராயணப்ப நாயடுவை அங்கு வரும்படி கடிதம் அனுப்பினார். இதற்குள்ளாக இந்த பிராந்தியங்களில் சில பாகங்களை கடப்பை சுபேயிக்கு கோல்கொண்ட நவாபு மாற்றிவிட்டதாகவும், கடப்பை சுபேமயானிவார் என்றவருக்கு ஜாகீர் செய்து கொடுக்கப்பட்டன. சகம் 1672-வருஷத்தில் கடப்பை சுபேதார் அனுப்பிய கோதண்டய்ய என்ற நாயபு சீமை டவல்தார், இந்த நாராயணப்ப, சுப்பன்ன நாயடுகள் தம்முடைய சொற்படி நடக்காத காரணத்தால் போயலபல்லெ கிராம மலையடிவாரத்தில் தலைகளை வெட்டி கொலை செய்து விட்டதாகவும், அவருக்கு முன் அந்த கர்னோபந்துலு

பௌஜுதாரராக இருந்ததாகவும், பின்னர் சதாசிவ ராவு பௌஜுதாரராக இருந்தார். (L. R. Vol. 38)

அம்பா நாயடு தன் சிறிய தகப்பனர் குமாரர்களுக்கு சுப்பா நாயடு, நாராயணப்ப நாயடுகளுக்கு சமஸ்தானத்திலிருந்து பாகத்தை கடைசி வரையிலும் கொடுக்காமல் காலதாமதம் செய்து வந்தமையால், இதைக்குறித்து கம்பத்திலிருந்து வந்த சர்க்கார் அதிகாரியாகிய சதாசிவ ராவிடம் இவ்விஷயத்தைச் சொல்லியதன் பேரில் அவர், அம்பா நாயடு, சுப்பா நாயடு, நாராயணப்ப நாயடு இவர்களை வரவழைத்து விசாரித்து, அவர்களை இம்சித்து, சிறையிலிட்டனர். பின்னர் அவர்கள் சிறைச்சாலையிலேயே மரணமடைந்து போயினர்.

சுப்பா நாயடுவுக்கு சேஷாசலபதி, மல்லிகார்ஜ்ஜுன நாயடு என்ற இருவர் குமாரர்கள் இருந்தனர். தந்தை இறந்த காலத்தில் இவர்களுக்கு ஐந்து வயது பிராயம். இவர்களுக்கு தாய் மாமனாகிய ராவெள்ள திருவெங்களப்ப நாயடு. அம்பா நாயடுவுக்கு மல்லிகார்ஜ்ஜுனன், நாரசிம்ஹன், வெங்கடாத்ரி என்ற மூவர் புத்திரர் பிறந்து சிறுவயதிலேயே இருவர் மரணமடைந்துவிட்டனர். அம்பா நாயடு சகம் 1673-வருஷம் வரை 24 வருஷம் பரிபாலித்து வந்து இவரும் காலமாகிவிட்டனர். இவருக்கும் ராவெள்ள திருவெங்களப்ப நாயடுகாரே மூன்று வருஷ காலம் ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்த பின்னர் சுப்பா நாயடு குமாரர்களில் சேஷாசலபதி, அம்பா நாயடு குமாரர்களில் மல்லிகார்ஜுன நாயடு இவர்களுக்கு வயது வந்த பின்னர் ராஜ்யத்தை பாகம் செய்து கொண்டு தங்கள் சுவாதீன ராஜ்யத்தைப்பரிபாலித்து வந்தனர்.

48) சாயபநேனி சேஷாசல நாயடு, மல்லிகார்ஜ்ஜுன நாயடு இவர்கள் இருவரும் தம் வம்ச பரம்பரையிலிருந்த துபாடி சீமையை இவர்கள் பரிபாலித்து வந்தனர். கடப்பை சுபேதார் மயாணி சாயிபுக்கு உட்பட்டுப் போயினர். அப்போது இவர்கள் 632 வராஹன் சுபே செலுத்திவந்தனர்.

அப்பொழுது மயாணி சுபேயில் அப்துல் ஹலிங்கான் ஆட்சியி லிருந்தன. சகம் 1700-வருஷம் பின்னர் சேஷாசல நாயடு வுக்கும் தீவிரமாக விவகாரங்கள் ஏற்பட்டு நடந்து வந்ததை அறிந்த கடப்பை சுபேதார் என்ற மஹமதியன் படை எடுத்து வந்து இந்தச் சீமைக்கு 1900 வராஹன் செலுத்தும் படி உத்திரவிட்டுச் சென்றனன். சேஷாசல நாயடு என்ற சேஷாசலபதி நாயடு மீர் சாயபுக்கு உட்பட்டிருந்த வெங்கடகிரி சமஸ்தானத்திற்கும், வெலுகோடி சமஸ்தானத்திற்கும் உட்பட்டிருந்த கோட்டை சீமையில் உள்ள குரிசேடி கனிகிரி பிராந்தியங்கள் மீர்சாயபு வசமாகும்படி செய்ததினால் அவருக்கு தயவு வந்து தன்னிடமிருந்த 4 மாத காலம் சேஷாசல நாயடு பரிவாரத்திற்கு மாதம் 300 வராகன்களைக் கொடுத்தும், தூபாடி சீமையின் பேரிலும் 632 வராகன் களைக் குறைத்தும் வைத்தனர். இது இப்படி இருக்க மல்லிகார்ஜுன நாயடு கோல்கொண்ட நவாபிடம் போய் விஷயத்தைச் சொல்ல, அவருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விடும்படி கடப்பை சுபேதாருக்கு உத்திரவு செய்ய, உடனே அவர் ஹிஜிரி 1204, கிறிஸ்து சகம் 1784-வருஷத்திற்குள் ஒரு பதில் அனுப்பவே, மல்லிகார்ஜுன நாயடு அதன்படி அந்தப் பிரதேசத்தை தன் வசப்படுத்திக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தார். அதற்குள் காலம் சமீபித்து விட்டபடியால் சகம் 1717, கிறிஸ்து சகம் 1795-வருஷத்தில் அவர் மரணமடைந்து விட்டனர். அதனால் சேஷாசல நாயடுவே சர்வாதிகாரி ஆயினர்.

49) சமஸ்தானங்களுக்கு ஏற்பட்ட துர்தசை. இந்த சேஷாசல நாயடு காலத்தில் ஜல்லிவார் என்ற போயர்கள் சிலர் தங்கள் பரிவாரத்துடன் சென்று கிராமங்களில் ஜனங்களுக்கு அநேக இடஞ்சல்கள் செய்து வரவே, இதை அறிந்த சேஷாசல நாயடு சைனியத்தை அனுப்பி, அவர்களை அடக்கி வந்தனர். ஆயினும் சர்க்கார் மூலியமாக யாதொருவிதமான சகாயமும் உதவியும் கிடைக்கவில்லை.

இது இப்படியிருக்க, ஆற்காடு நவாபு, ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கு தன் வசமிருந்த ராஜ்யங்களைக் கொடுத்து

விட்டனர். சகம் 1722, கிறிஸ்து சகம் 1800-வருஷம் அன்று முதல் கம்பெனியார் ஆட்சி ஏற்பட்டு மன்றோல் துரை என்றவர் அதிகாரத்திலிருந்தன. அப்பொழுது சேஷாசல நாயடு செலுத்த வேண்டிய கப்பத் தொகையை கட்டிவிடும்படி கோர, அவர் ஒரு பாகத்தைச் செலுத்தியும், பாழடைந்த கிராமங்களில் வரவேண்டிய கிஸ்தியை வசூலிக்க முடியாத காரணத்தால் இரண்டு மூன்று தடவைகளில் செலுத்தி விடுவதாக வாய்தா பெற்றுக்கொண்டு காரியங்களை நடத்தி வருங்காலம் முதுகில் ராஜபிளவை ஏற்பட்டு சேஷாசல நாயடு காலமாகிவிட்டபடியால், இவர் குமாரர் சாயபநேனி சுப்பா நாயடு பட்டத்திற்கு வந்து பரிபாலனம் நடத்தி வந்தார்.

50) சாயபநேனி சுப்பா நாயடு புதிதாக ராஜ்யங்களை நடத்த முடியாத காரணத்தால், மன்றோல் துரைக்கு அதிகாரிகள் தெரிவிக்க, அவர் சுப்பா நாயடுவை கிஸ்தி வசூல் செய்து அனுப்புமாறு கோரி, வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்தி, கப்பத்தையும் குறைத்துக்கொண்டு பாக்கியை செலுத்தி வரும்படி நியமனம் செய்தனர். அதன் மேல் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 10 ரூ. வீதம் இனும் கொடுக்கும்படியும், சமஸ்தானத்தில் நாள் ஒன்றுக்கு 6 வராகன் சிலவு ஆகிவருகிறதென்றும் கம்பினியார் அதிகாரியிடம் தெரிவித்துக்கொள்ள இவ்விஷயத்தை கலெக்டர் விசாரித்து முறைப்படி கிராமவாசிகள் கோரியபடி பூமிகளுக்கு தனி பட்டாக்கள் ஏற்படுத்தி 1221-ம் பசலி கிறிஸ்து சகம் 1811-வருஷம் கிராமங்களுக்கு இஜாராக்களை ஏற்படுத்தியும், சுப்பா நாயடுவுக்கு அலவன்சு மாத்திரம் கொடுத்து வருமாறு ஏற்படுத்தியும் வந்ததனால் காலா காலத்தில் சுப்பா நாயடு ரைத்துக்களைப்போல மாறிவிட்டனர். இந்த சுப்பா நாயடு வம்சாவழியினர் இப்பொழுது காமாக்ஷி மஞ்சா பிரசாத்து காரும், பொம்மராஜு பல்லெயில் வசித்து வருகின்றனர்.

சேஷநரபாலனுடைய ஆட்சி காலத்தில் சகம் 1761-ஷு திரிபுராந்தகத்தில் தேவஸ்தானத்திற்கு துவஸ்தம்பம் வைத்துள்ளதாக சாசனங்களில் காணப்படுகின்றன.

51) குத்தா நாராயண, இவருடைய கால நிர்ணயம் காணப்படவில்லை. ஆயினும் இவர் கிராமத்தில் ஒரு பெரிய குளம் வெட்டி குடிமக்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து வைத்துள்ளதாக ஸ்தானீக சரித்திரம் 50-வது பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

52) சர்தார் மேதரமெட்ல கோபன்ன நாயடு, இவர் கொப்பர்ரு கிராமத்தில் இருந்தவர். பசலி 1218, கிறிஸ்து சகம் 1808-வருஷம் அங்கு ஸ்ரீ கோபாலஸ்வாமி தேவாலயத்தை நிர்மாணித்து பூஜாதி காரியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்துள்ளதாக லோகல் ரிகார்டு வால்யம் 57-ல் குறிக்கப்பட்டுள்ளன. இவருடைய பூர்விகர்கள் அந்நங்கி சீமையில் உள்ள மந்தபட்டிவார் சமஸ்தானத்தில் சர்தார்களாக இருக்கின்றனர் என்று லோகல் ரிகார்டு வால்யம் 60-ல் காணப்படுகின்றன.

53) மேதரமெட்ல பெத்தம்ம. இவர் சாலிவாகன சகம் 1594, கிறிஸ்து சகம் 1672-வருஷம் தர்சி தாலுக்கா கல்லூரி கிராமவாசி இவர் அந்தக் கிராமத்தில் குடிமக்களுக்காக வேண்டி, ஒரு பெரிய சமுத்திரம் போல குளம் வெட்டி, கரை கட்டி வைத்துள்ளார். இவ்வம்மையார் தன்னுடைய வம்சத்தைப் பிரசுரிக்காமல், தான் பிறந்த வம்சத்தினரைக் குறிப்பிட்டுள்ளார். மாதாள கோத்ரம் சாயப நாயடு, கோபால நாயடு பிரபௌத்ரி, ரங்கப்ப நாயடு பௌத்ரி, வெங்கடாத்ரி நாயடு புத்திரி என்று சாசனத்தில் காணப்படுகின்றன. இவர் கோத்தரம் தம்மனூரு கோத்தரம்.

54) கொம்மநேனி குரவப்ப நாயடு, இவர் கோத்ரம் போகோலி கோத்ரம். கிறிஸ்து சகம் 1729-வருஷ காலத்தவர். இவர் தந்தையின் பெயர் கொண்டப்ப நாயடு. இவருக்கு 5 பேர் புத்திரர். இவர்கள் ஐவரும் சேர்ந்து இவர் கிராமத்தில் சிவ. கேசவஸ்வாமி தேவாலயங்களை நிர்மாணித்து, பூஜாதி காரியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தும், அங்கொரு குளம் வெட்டி, கரைகள் கட்டியும், பூந்தோட்டத்தை உண்டாக்கியும் பிரசித்தி பெற்றனர். சாசன நெ. 72-17, சகம் 1651-வருஷம் எழுதப்பட்டுள்ளன.

55) சல்லா ஸ்ரீராமநாயடு, கிறிஸ்து சகம் 1729-ஷூ காலம் செங்கல்பட்டு ஜில்லா ஜீயர்புரம் பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்தனர். இவர் சகம் 1651-வருஷம் சிவராம கிராமத்தில் ஸ்ரீலக்ஷ்மீ நரசிம்ஹர் தேவாலயத்திற்குச் சில பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதிவைத்துள்ளார். சாசன நெ. 219-22.

56) சர் ராஜு கோதண்டய்ய, இவர் கிறிஸ்து சகம் 1747-ஷூகாலம் மார்க்காபுரத்தில் சென்னகேசவஸ்வாமிக்கு ரதத்தை நிர்மாணித்துள்ளனர். ஸ்தானீக சரித்திரம் 38-ம் பக்கம் காணப்படுகின்றன.

57) மண்டப அய்யன்ன நாயடு, கிறிஸ்து சகம் 1750-காலம் சூரவரம் கிராமத்தில் சென்னகேசவஸ்வாமி தேவாலயத்தை ஔரங்கஜீப் காலத்தில் பாழடைந்து போனதை புனருத்தாரணம் செய்து பசலி 1660-வருஷத்திற்குப் பின்னர் அந்த கிராமத்தை இனுமாகக் கொடுத்து உள்ளதாக 1740-வருஷ லோகல் ரிகார்டு வால்யம் 50-ல் காணப்படுகின்றன. இந்த மண்டுவ (மண்டபவார்) பூர்வம் வீரபராக்ரமசாலிகளாக, கிறிஸ்து சகம் 1616-வருஷம் ராமதேவராயரிடமிருந்து யுத்தம் நடத்திய தஞ்சாவூர் ரகுநாத நாயடு சரித்திரத்தில் காணப்படுகின்றன.

58) எட்லபாடி வெங்கடராமய்ய, கிறிஸ்து சகம் 1798-வருஷம் தெனாலி தாலூக்கா போடபாடு கிராமத்தில் சகம் 1720-வருஷம் வரை பாழாகியிருந்த சோமேஸ்வர தேவாலயத்தை புனருத்தாரணம் செய்து பூஜாதி காரியங்களை யுக்தப்படி நடத்தி வர பொன்னூர் வெங்கட்டய்ய என்ற பிராம்ஹணரை நியமித்து வைத்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 50-ல் காணப்படுகின்றன.

59) சர்தார் பத்தினி சங்கரப்ப, நரசன்ன நாயடுகார், இவர்கள் கிறிஸ்து சகம் 1766-ஷூ அத்தங்கி பாலகராகிய மந்தபட்டியாரிடம் சர்தார்களாக இருந்தனர். இவர்களின் கீழாக ஒவ்வொருவருக்கும் (50) பேர் சிப்பந்திகள் இருந்தனர் இவர்கள் அந்த சீமையில் உள்ள பிரஜைகளுக்கு மிக்க

பாதுகாவலராக இருந்துவந்தனர். பசலி 1176-வருஷத்தில் ஸ்ரீராஜா வாசிரெட்டி ராமன்ன ஜமீன்தார், மாணிக்யா ராவ் ஜமீன்தார் (ராசூர், ரேபல்லி ஜமீன்கள்) கிராமங்கள் சிலவற்றை வசப்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்துவர அதனால் கலவரங்கள் ஏற்பட அதை அடக்குவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்து இவர்களிருவரும் தங்களுக்கு வசப்பட்டு இருந்த சர்தார்களைக் கலந்துகொண்டு மேதரமெட்ல கோபன்ன நாயடு, பொல்லிபல்லி திருவெங்களப்ப என்றவரை பதவிக்கு வருமாறு அழைத்து, சிப்பந்திகளுக்கு சப்பளம் வகையறாக்களைக்கொடுத்து கொப்பர்ரு கிராமத்தை அவர்களுக்கு இனாமாகக் கொடுத்தும், இவர்கள் தங்கள் பரிவாரங்களுடன் சென்று அங்குள்ள அதிகாரிகளை வசப் படுத்திக் கொண்டு காரியாதிகளை நடத்தி வந்தனர். இவர்களும் கொப்பர்ரு கிராமத்தில் பசலி 1192-வரை நடத்திவந்தனர், பின்னர் ராஜாவாசிரெட்டி வெங்கடாத்ரி பிரபு பரிபாலனம் 3 வருஷ காலம் இவ்விதமாக நடத்தி வந்தனர். அதற்குள்ளாக பிரிட்டிஷ் ஆட்சியின் மூலமாக வெங்கடாத்ரி நாயடு தன் ஜமீன்களில் உள்ள சர்தார்களையும் அவர்களின் சைனியங்களையும் குறைத்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடு ஆனதால், இவர்களை எல்லோரையும் குறைத்துக் கொண்டும், சர்தார் குடும்பத்திலிருந்தவர்களும் காலக்ர-மத்தால் ரைதுகள் ஆயினர். (குடியானவர் ஆயினர்)

60) மத்திநேனி நரசிம்ஹதாஸ், இவர் கிறிஸ்து சகம் 1888-வருஷம் காலம் நரசாராவ்பேட்டை தாலூக்காவைச் சேர்ந்த பிரபல குடியானவர். இவர் அந்தக் கிராமத்தில் சீதாராமர் கோவிலுக்கு உத்சவ விக்ரஹங்கள் செய்து வைத்தும், 3 ஏக்கர் நன்செய் பூமியை எழுதிவைத்துப் பிரசித்தி பெற்றனர். நெ. 416-15. இந்த கைங்கரியங்கள் எல்லாம் சகம் 1810-வருஷத்தில் நடத்தப்பட்டன.

61) கார்லபாடி லக்ஷ்மீநாராயண, சுப்பைய என்றவர் கள் சாலிவாகன சகம் 1766-வருஷம் பெத்தகார்லபாடு குடியானவர்கள். இவர்களின் தந்தையின் பெயர் சேஷாசலங்கார். இவர் அந்த கிராமத்திலிருந்த ஸ்ரீராமர்

சந்நிதி தெருவாசி இருக்கதைப் பலருக்குத் தாராளம் செய்து பிரதிஷ்டாதி காரியங்களை யுக்தப்படி நடத்தி சாசனம் எழுதி வைத்தனர் சகம் 1766-வருஷம். செ. 27-29.

62) லிங்கிசெட்டி பொதி நாயுடு. இவர் ஒரு செருக்கப் பாக இருக்கவர். இவர் அந்த கிராமவாசியாகிய ஒரு குடிக்கு ஒரு பூமியை இறையாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தனர். செ. 536-15.

63) சல்லா வெங்கடபதி நாயுடு. கிறிஸ்து சகம் 1770-வருஷம் இவர் கொடமர்த்தி, கொல்லபல்லெ, அமி-மாருபல்லெ கிராமங்களுக்கு அதிகாரியாக இருந்துவந்தார். இவருக்குப் பின்னர் இவர் குமாரர் கொண்டம நாயுடு, மன்ரோ துரை காலத்தில் அதிகாரியாக இருந்ததாக லோகல் ரிகார்டு வால்யூம் 37-ல் காணப்படுகின்றன. இந்த வெங்கடபதி நாயுடு தந்தையின் பெயர் திப்பா நாயுடு.

64) கம்மாவார் புச்சலநாடு. காசிரெட்டி கோத்ரம். குலகல்லு கிராமவாசி. சகம் 1711, கிறிஸ்து சகம் 1789-வருஷத்தில் அந்த கிராமத்தில் மல்லாதுர்க்கதிபாதாயனி ரமீன்தார் ஆட்சியில் இருக்க, அங்குள்ள ஸ்ரீ கோபால-ஸ்வாமி தேவாலய ஜீர்ண உத்தாரணம் செய்தும், விக்ரேஷ ... ஆலயங்களுடைய ஒரு மடாலயமும் நிர்மாணித்தும், தீர்த்தக்கிணறு ஒன்று வெட்டியும் கீர்த்தி பெற்றதாக சாசனம் எழுதப்பட்டிருக்கின்றன. செ. 294-30.

65) குட்டலபல்லி வெங்கப்ப நாயுடு. கிறிஸ்து சகம் 1874-வருஷம் குண்டூர் ஜில்லா பல்நாடு தாலுகாவில் பிரசித்தி பெற்ற குடும்பத்தினர் ஆவார். தந்தையின் பெயர் வெங்கப்ப நாயுடு. பாட்டன் கங்கா நாயுடு. இவர் அந்த கிராமத்தில் ஒரு கிணற்றை உண்டாக்கி, கிராமவாசிகளுக்கு வெகுவும் சௌகரியம் செய்து வைத்ததாக செ. 288—30 சாசனத்தில் காணப்படுகின்றன.

66) காடேபள்ளி பாபிரெட்டி. தெனாலியில் நரசிம்ம ஸ்வாமி தேவாலயத்திற்கு ஒரு தோட்ட பூமியைக்கொடுத்து

சாஸனம் எழுதி வைத்துள்ளார். 323-32-33. மேற்படியூர் நெல்லூர் ஜில்லாவில் உள்ளன.

67) நெல்லூரி பாபிரேடு, கிறிஸ்து சகம் 1623-ஹு அத்தூர் கிராமவாசியானார். இவரும் மற்ற கிராமவாசிகளும் கூடி அங்கொரு பெரிய குளம் வெட்டி, கரைகள் கட்டி ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து வந்து சாஸனம் எழுதி வைத்துள்ளார். நெ. 273-34-35. கோல்கொண்ட அப்துல் குதுப்ஷா காலம் சகம் 1545-ஹு.

68) சாகமூரிவார், இவர்கள் கம்மவாரில் போகபுடி அயோத்யா கோத்ரவாரிகள். இவர்களுடைய சரித்திரம் கால வித்தியாசத்தால் நசிந்து போனதாக சில உதாரணங்களால் தெரியவருகின்றன. இதில் சிலர் கிறிஸ்து சகம் 1616-வருஷம் விஜயநகர சாம்ராஜ்ய ராமதேவராயர் பக்ஷமாக தஞ்சாவூர் ரகுநாதராயராலே அவர்களுக்கும் கொப்பூர் ஜக்கராஜனுக்கும் நடந்த யுத்தத்தில் ராமதேவராயர் பக்ஷமாகயுத்தம் நடத்திய வெலுகோடி யாசமநாயடுவுடன் தோற்றுப்போனதால் க்ஷீணதசை அடைந்துவிட்டதாகக் காணப்படுகின்றன.

69) சாகமூரி வெங்கட நரஸிம்மன். இவர் ஒரு சிற்றரசராக இருந்து பிரசித்தி பெற்றதாக வித்வான்கள் அநேக பாடல் களைப்பாடியுள்ளனர். ஸ்ரீ வேதிர் ப்ரபாகர சாஸ்திரி ஒரு பிசபத்யத்தையும் பாடியுள்ளார். இவர் தந்தையின் பெயர் ரகுநாயகப் பிரபுவு.

70) சாகமூரி அநந்தப்ப, உதயகிரி பிரதேசத்தில் மிக்க பிரசித்தி பெற்றவராவார். உதயகிரி ராஜ்யம் கிறிஸ்து சகம் 1622-வருஷம் மகம்மதியர் வசமாகிய பின்னர், இந்த வம்சத்தினர் கொண்டவீடு சீமையில் பிரபலஸ்தர்களாக இருந்து கொச்சர்ல கிராமத்தில் சென்னமல்லேஸ்வர ஆலயம், சென்னகேசவ ஆலயங்களை நிர்மாணித்து நடத்தி வந்தனர். தவிர ஆஞ்சநேயருக்கு ஆலயத்தைக் கட்டியும், வேண்டிய சாதனங்களை ஏற்படுத்தி வைத்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 56, பக்கம் 508-ல் காணப்படுகின்றன.

இந்த வம்சத்தினர் கிறிஸ்து சகம் 1800-வருஷம் ஸ்ரீ ராஜா வாசிரெட்டி வெங்கடாத்ரி பிரபுவிடம் சேனாதிபதிகளாக இருந்ததாகவும் காணப்படுகின்றன.

71) சாகமூரி ஜன்னய்யா. இவர் ஒரு பிரசித்தி பெற்றவரென்றும், இவர் தந்தை எல்லய்ய என்றும் ஒரு பத்யத்தில் வித்வான்கள் பாடியுள்ளனர்.

72) சாகமூரி ராமனப்ப, கிறிஸ்து சகம் 1750-இல் புலுகுலபாடு சீமையில் பொத்தபி நாடு மட்ல பெத்த வெங்கடராமராஜா பரிபாலனத்தில் இவர் போலீஸ் உத்தியோகத்திலிருந்து மலைப்பிரதேசங்களில் ஒரு கிராமத்தை நிர்மாணித்துள்ளதாக லோகல் ரிகார்டு வால்யம் 17-ல் காணப்படுகின்றன. இவர் தன்னுடைய பரிவாரத்துடன் ஸ்ரீ வெங்கடராமராஜா ராஜ்யத்தில் கள்ளர் பாதைகளை நீக்கி, கிராமவாசிகளுக்கும், இராஜாங்கத்திற்கும் அநேக நன்மைகளைச் செய்து வந்ததாகவும் காணப்படுகின்றன.

73) சாகமூரி வெங்கய்ய நாயுடு. சர்க்கார் கொச்செர்ல நகரத்திற்கு அதிகாரியாக இருந்து பிரஜைகளுக்கு அநேக நன்மைகள் செய்துள்ளனர். கிறிஸ்து சகம் 1800-வருஷம் ஸ்ரீ ராஜா வாசிரெட்டி. வெங்கடாத்ரி பிரபு புத்திரியாகிய ராஜ்யலக்ஷ்மி என்ற கன்னிகையை விவாகம் செய்து கொண்டு ராஜபந்துக்களாக பிரசித்தி பெற்றுள்ளனர்.

74) சாகமூரி லக்ஷ்மிதேவம்மகாரு. கிறிஸ்து சகம் 1915-வருஷம் இவருடைய பர்த்தா சாகமூரி வெங்கடப்ப அய்யா என்றவர். இவர் தன்னுடைய [illegible] (ரூ. 10,000) பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள கட்டடத்தை நிர்மாணித்துக் கொடுத்துள்ளார். இந்த பவனம் முதலில் தர்ம சத்திரத்திற்காக ஏற்பாடு செய்தும், பின்னர் பெரியோர்களின் சொற்படி வித்யா பவனத்திற்குக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தும், இவர் தற்காலம் [illegible] இருக்கும் [illegible] லக்ஷ்மி நாராயண பிரசாதுக்கு உற்ற பந்துக்கள் ஆகியும் உள்ளனர். தவிர

லக்ஷ்மி நாராயண பிரசாத்துவினுடைய சகோதரராகிய ராஜு பிரசாதுக்கு இவ்வம்மையார் பெண் கொடுத்த மாமியாராகவும் இருக்கின்றார்,

—:·:—

3-ம் பாகம்
சதுர்த்தப்ரகரணம்

---

75) ராகவபுரம், மாகல்லு, சிந்தலபாடி சமஸ்தானங்கள், வாசிரெட்டிவார். வாசிரெட்டி ராகவய்ய, ராமய்ய, சந்தரமௌளி நரபாலர்கள். இவர்களில் சிலருடைய விருத்தாந்தங்களை இரண்டாம் பாகத்தில் தெரிவித்துள்ளோம். இவர்களில் கிறிஸ்து சகம் 1794-ல் ஸ்ரீ வாசிரெட்டி சந்தரமௌளிப்பிரபு காழு நிலைவத்த அகல்யாசம் கிரந்தன விலாசத்தில் இவர்களுக்கு கண்டரகண்ட ஜகநொப்பகண்ட, சாளுக்ய நாராயண என்ற பிருதுகள் உண்டென்று கூறப்படுகின்றன. இவர்கள் முதலில் சாளுக்ய வம்சத்தினராக இருந்து பின்னர் ரெட்டிப் பிரபுக்களிடம் பெரு பிருதுகளைப் பெற்றனர். வாசிராஜாக்கள் என்ற வீட்டுப் பெயர் பெற்றவர்கள். சாளுக்யர்களில் இருந்ததாக திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன. வெலுகோட்டிவார் வம்சாவழியில் காணலாம். இந்த வம்சத்தில் வீரப்ப நாயுடு என்ற வீரபநேடு கிறிஸ்து சகம் 1670-வருஷம் கோல்கொண்ட நவாபு மூலமாக நந்திகிராம பிரதேசங்களைப் பரிபாலித்து வந்ததாக இரண்டாவது பாகத்தில் கூறியுள்ளோம்.

இவருக்கு கட்டா நாரஸிம்மனுடைய குமாரத்திகள் பெதவெங்கம்ம, சினவெங்கம்மா என்ற சகோதரிகள் இருந்தனர். இந்த பெதவெங்கம்மாள் திருவயிற்றில் வெங்கடாத்ரி, பெத்தநீடு, ராமச்சந்திரன் என்ற மூவர் தோன்றினர். சினவெங்கம்மாளுக்கு ராகவய்ய, ராமய்ய, சந்தரமௌளி என்ற குமாரர்களும் தோன்றினர். ஆயினும்

பின்னர் இவர்களே ராஜ்ய பரிபாலன அதிகாரம் பெற்று ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தனர்.

76) வாசிரெட்டி பெதபத்மநாப நரபாலன், இவர் தந்தைக்குப் பின்னர் 'ராகவபுரி' சமஸ்தாளுதிபதியாக வந்து பரிபாலித்தார். இவருக்கு புச்சி ராகவ நாயடு, ராமன்ன, அச்சன்ன, சந்தரமௌளி, நாகன்ன என்ற குமாரர்கள் இருந்தனர். இதில் புச்சி ராகவ நாயடு சிந்தபல்லி சமஸ்-தாளுதிபதியாகிய வாசிரெட்டி நரபாலனுக்கு தத்துப்புத்திரனுகியதாக கிருஷ்ண ஜில்லா மான்யுவலில் கூறுகின்றன.

77) சிந்தபல்லி சமஸ்தானம், வாசிரெட்டி சினபத்மநாப நரபாலர்கள். இவர் மாகல்லு பிரதேசத்தில் கிறிஸ்து சகம் 1688-வருஷம் வாசி ரெட்டி ராமநரபாலன் இறந்த பின்னர், இவர் குமாரர்கள் வீரபநேடு, ராகவய்ய, சினபத்மநாபன், சந்தரமௌளி, ராமலிங்கன்ன, நரஸிம்ஹன் என்ற ஆறு குமாரர்கள் இருந்தனர். இவர்களில் மூத்தவன் மாகல்லு பிரதேச பாலகளுகிப் பரிபாலித்து வந்தனர் என்று சரித்திரம் கூறுகின்றன.

இவருடைய பரிபாலனத்தில் 500 கிராமங்கள் இருந்தன. இதில் நந்திக்ராமம், கம்மம்மெட்டு, வினுகொண்ட, கொண்டவீடி, சந்நராபுரி, கூசிபூடி, ராயபூடி, பெனுகஞ்சிப்ரோலு, பேதவோலு முதலாகிய பிரதேசங்கள். இவருடைய சமஸ்தானத்தில் சேனே, பரிவாரங்களின் சிலவு நாள் ஒன்றுக்கு 3 காணி (காணி என்பது ரத, கஜ, துரங்கம் என்பது) ரூ. 5000—0—0 சிலவு ஆகும். கம்மவார் சமஸ்தானத்தில் இது முக்கியமானது என்று தெரியவருகின்றன.

சினபத்மநாப நரபாலன் காலத்தில் சிந்தபல்லி என்ற நகரத்தில் ஒரு பிரம்மாண்டமான கோட்டையைக் கட்டிய தாகவும், 20-வருஷ காலம் ராஜ்ய பரிபாலனம் நடத்திய தாகவும், இவர் காலத்திலேயே, கிறிஸ்து சகம் 1710-வருஷத்தில் கொண்டவீடி சீமையில் ராசூர் ஜமீன்தாரர் களில் மாணிக்காராவு மாசூர்காரர்களுக்கும், வாசிரெட்டி

பிரபுக்களுக்கும் தகாதா ஏற்பட்டு, கோல்கொண்ட பிரதேசத்தை ஔரங்கஜீபு வசப்படுத்திக்கொண்ட பின்னர், கிறிஸ்து சகம் 1690-வருஷத்தில் ஔரங்கஜீபின் சேனாதிபதியானவர் பல ஜமீன்களைத் தன் வசப்படுத்திக்கொண்டதாகவும், கொண்டவீடு சீமை பாலனத்தை மாணிக்காராவ் வம்சத்தினர் வெலமவாருக்குக் கொடுத்துவிட்டதாகவும் கிருஷ்ணா ஜில்லா மான்யுவல் கூறுகின்றன.

இந்த சினபத்மநாப நரபாலன், ராகவபுர சமஸ்தான பாலகனாகிய பெத்தபத்மநாபனுடைய குமாரனாகிய புச்சிராகவ நாயடுவுக்குத் தத்து குமாரனாகப்போய்விட்டதனால் இரண்டு சமஸ்தானங்கள் ஒன்றாகச் சேர்ந்து விட்டன. இவர் அநேக பிராம்மண சமாராதனங்களை நடத்தியும், நவராத்திரி உத்சவ காலங்களில் தம்பதி பூஜைகளை நடத்தியும், இவருடைய பரிபாலன காலத்தில் வேலூர் பிராந்தியங்களில் 9 கிராமங்களை மாசூர் வெங்கன்ன ஜமீன்தார் விக்கிரயம் செய்ய அவைகள் சமஸ்தானத்திற்குச் சேர்க்கப்பட்டன. (லோகல் ரிகார்டு வால்யம் 3-ல் காணப்படுகின்றன.)

இவர் சகோதரனாகிய ராமலிங்கன்ன என்பவர் குண்டூர் பட்டணத்தில் ராமச்சந்திரபுர அக்ரஹாரம் கட்டியும், அதற்குப் பணியாட்களை நியமித்தும், பிராம்மணர்களுக்கும் அவர்களுக்கும் 720 ஏக்ரா பூமியை மான்யமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்தும் சாலிவாஹன சகம் 1640-வருஷத்தில் நடந்ததாகக் காணப்படுகின்றன. இந்த வம்சத்தினர் தேவபக்தி, பிராம்மண பக்தி உடையவர்கள் என்று சரித்திரங் கூறுகின்றன. இந்த சினபத்மநாபாலன் கிறிஸ்து சகம் 1710-வருஷம் பரமபதம் அடைந்து விட்டனர்.

78) வாசிரெட்டி புச்சி ராகவநாயடு. சினபத்மநாப-ருடைய தத்து குமாரராகிய இவர் பரிபாலித்த விசால சமஸ்தானம், ராகவபுர சமஸ்தானங்கள் இரண்டையும் கிறிஸ்து சகம் 1710-வருஷத்திற்குப் பின்னர் பரிபாலித்து வந்தனர். இவருக்கு சந்ததி இல்லாததால் இதை சந்திர-மௌளி பரிபாலித்து வந்ததாகக் காணப்படுகின்றன. கிறிஸ்து சகம் 1718-வருஷம் வரை. இதற்குப் பின்னர்

பெதநரஸன்னபூபதியாகி ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தார் என்று லோகல் ரிகார்டு வால்யம் 564 கூறுகின்றன

79) பெதநரஸன்னபூபதி. சாலிவாகன சகம் 1647-வருஷம், கிறிஸ்து சகம் 1725-வருஷ காலம் சிந்தலபாடி வெண்டு சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்து, சிட்லகாமேஸ்வர சோமயாஜிக்கு மஞ்சால கிராம அக்ரஹாரத்தைக் கொடுத்துச் சாசனம் செய்துள்ளார். லோகல் ரிகார்டு வால்யம் 12-ல் காணப்படுகின்றன. இவ்விஷயங்கள் காஞ்சீபுர சாசனம், கிருஷ்ணா ஜில்லா மான்யுவலிலும் உள்ளன. இவருடைய ஆட்சி 5-வருஷ காலம் இருந்ததாக எர்ரகுண்ட்டபாலம் கைமெழுத்துப் பிரதியிலும், லோகல் ரிகார்டு வால்யம் 564-லும் கூறப்படுகின்றன. பெதநரஸன்ன பூபதிக்குப் பின்னர். இந்த சமஸ்தானம் புச்சிராகவ நாயடுவின் பெரிய தகப்பனுராகிய வீரநரபாலன் குமாரர் சூரநரபாலன் வசம் ஆயிற்று. இவர் சுமார் 12 வருஷம் பரிபாலித்த பின்னர் சினசூரன்ன 3 வருஷ காலம் பரிபாலித்ததாக லோகல்ரிகார்டு வால்யம் 56-பக்கம் 564-ல் காணப்படுகின்றன. இதன் பின்னர் இவர் குமாரர் நரஸன்ன, சினராமலிங்கன்ன, சிந்த்தபல்லி கோட்டை நரபாலராகப் பிரசித்தி பெற்றனர் என்று கூறப்பட்டுள்ளன.

80) வாசிரெட்டி சினநரஸன்ன, சினராமலிங்க நரபாலர்கள், பின்னர் கிறிஸ்துசகம் 1733-வருஷம் சிந்த்தபல்லி சமஸ்தானுதிபதிகளாயினர்.

சினராமலிங்கநரபதி தேவரகோட்டை சமஸ்தானுதிபதியாகிய ஸ்ரீ ராஜா ஏர்லகட்ட கோதண்டராம நரபாலர் புத்திரியை விவாகம் செய்து கொண்டார் இவர் காலத்தில் வெலமவாருக்கும் கம்மவாருக்கும் கோர யுத்தம் நடந்தன பசலி 1157 வருஷம் கிறிஸ்து சகம் 1748 வருஷத்தில் மேதரசாலேயில் நடந்ததாக வம்ச சரித்திரங் கூறுகின்றன.

பானுகண்டி சேஷய்ய என்ற வெலம வம்சத்தினர் அக்காலத்தில் வாசிரெட்டி சமஸ்தானத்திற்கு வரப்போக இருந்த சமயம் ஒரு மஹாசபையில் பிரசங்கம் செய்கையில்

நரச பூபாலனைக் குறித்துக் கேவலமாகத் தூஷித்த காரணத்தால் இந்த யுத்தம் நடந்தது என்றும், அப்பொழுது சேஷய்யனுக்கு சகாயமாகப் பாதூரி பட்டணாதிபதியாகிய மர்லால சூரபூபாலன் சைனியத்துடன் சென்று அவர் முறையிட்டதையுன்னிகுலாபிமானத்தால் ஆவேசம் தோன்றி ஒரு கிராமத்தை ஆக்ரமித்துக்கொண்டு தமது முன்னோரின் வசமிருந்ததென்று வாதாடி, தன் காலத்தில் அதை சுவாதீனம் செய்து கொண்டதாகவும், வினுகொண்ட சீமையிலுள்ள நந்திபாடிரமஸ்தானத்திற்கு சேர்ந்த பாகத்தை உடனே விட்டுக் கொடுக்க வேண்டுமென்றும், இல்லையெனில் யுத்தம் ஆரம்பிக்கப்படுமென்று கபுர் எழுதி அனுப்பினர், இந்த கிராமங்களின் மொத்தம் 25. மல்ராஜு ராமநாயகனுடைய வசத்திலிருந்ததைப் பெற்றுக்கொண்டதாக லோகல் ரிகார்டு வால்யம் 1-ல் காணப்படுகின்றன. நரஸபூபதி வெலமவாரின் கோரிக்கைக்கு இணங்காததால் யுத்தமே நடந்ததென்றும், இதில் அநேக வெலமவீரர்கள் மடிந்தனரென்றும் கம்மவீரர்கள் வெற்றி பெற்றனர் என்றும் காணப்படுகின்றன. இதில் முக்கியமானவர்கள் சிறுமாமிள்ள வெங்கடபதி, வாசிரெட்டி நரசய்ய, சினராமலிங்க நரபாலன், சந்துரமௌளி, எர்லகட்ட கோதண்டராம நரபாலன், வெலமவாரில் சூரப்பபாலன், சேஷய்ய, திருபதி நாயடு, நீலார்த்தி ராவ், பலேராவ், குண்டாராயடு முதலானவர்கள் வெலமவாரில் அநேகர் மடிந்துவிட்டமையால், பாதூர் ரகு நரபாலனுடைய குமாரர் நரசாராவுக்கு பட்டம் சூட்டினர், கம்ம வீரர்கள் ஜயக்கொடி தரித்துக்கொண்டு சிந்தபல்லி பிரவேசமாயினர்.

நரஸபூபதி கிறிஸ்து சகம் 1758 வருஷம் வரை ராஜ்ய பரிபாலனம் நடத்தியதாகக் காணப்படுகின்றன.

இந்த சினராமலிங்க நரபாலனிடம் சகம் 1676 வருஷம் ராமதாசு, ராமலபந்த்துலு என்றவர் மந்திரியாக இருந்தார். இவர் பாகாலபாடு கிராமத்தில் உள்ள தேவாலயத்தை ஜீரண உத்தாரணம் செய்துள்ளார், தவிர பேதவோலு கிராமத்தை ஒரு பிராம்ஹணருக்கு தானம் கொடுத்துள்

ளார் என்று லோகல் ரிகார்டு வால்யம் 326-ல் காணப் படுகின்றன.

81) வாசிரெட்டி நாகன்ன நரபாலன், இவர் வாசி ரெட்டி பெதபத்ம நாபருடைய 3-வது குமாரன், இவர் கிறிஸ்து சகம் 1761-வருஷம் ராஜ்ய பரிபாலனத்திற்கு வந் தார் இந்த காலத்திலேயே டில்லியில் சாஹலம் சக்கரவர்த்தி கோல்கொண்ட சுபேதார் மீர்நைஜாம் அலீ நவாப், உடனே இவர் பேராலும், லக்ஷ்மீபதி பேராலும் சமஸ்தான பதவிக்கு ஒரு ஏற்பாடு செய்து கொடுக்க அதனுல் கொல்லூறு, பேதவரம், பெல்லம்கொண்ட, வினுகொண்ட ராயபூடி. முதலான கிராமங்களைக் காத்துப் பரிபாலித்து வரும்படி சாசனம் எழுதி வைத்துள்ளதாக கிருஷ்ணு ஜில்லா மான்யுவலில் கூறப்படுகின்றன.

இந்த நாசன நரபாலன் சில காலம் கடந்த பின்னர். சிந்த்தலபாடி வம்சத்திலருக்கு சில கிராமங்கள் வசமாகி விட்டதினுல் ராஜ குடும்பத்தினர் மாறிவிட்டதாகவும் காணப்படுகின்றன. இவருக்கு 3 குமாரர்களிருந்தனர், ராமன்ன, ஜக்கன்ன, வெங்கடாத்ரி என்ற பெயருடைய வர்கள், வெங்காம்ம என்ற பெண் புத்திரியுமிருந்தனள். இந்தப் பெண்மணியை சிறுமாமிள்ள நாயுடம்ம என்ற கம்ம வீரனுக்கு விவாகம் செய்து கொடுத்துள்ளதாக சகுந்தலா பரிணயத்தில் கூறப்பட்டுள்ளன.

82) வாசிரெட்டி சந்திரமௌளி குமாரன் ராகவ நா பாலன், கிறிஸ்து சகம் 1686-வருஷம் சிந்த்தலபாடி வன்டு சமஸ்தானத்தை வாசிரெட்டி வீரப்ப நாயனி குமாரர்களில் சந்திரமௌளி பரிபாலித்து வந்ததாக முன்னமே கூறி யுள்ளோம். அவர் தன் பாகத்தை 7 வருஷ காலம் பரி பாலித்தார். இவருக்கு கௌரமாம்ப என்ற பெண்மணியிடம் பிறந்த ராகவ நரேந்தரனுக்கு ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு பரகதி அடைந்து விட்டார். இந்த சந்திரமௌளி சத்துரு துர்க்கப் பிரதேசத்திற்குச் சென்று யுத்தங்களைச் செய்து ஜயம்பெற்று சுமார் கிறிஸ்து சகம் 1693 வருஷம் வரை ஆண்டதாகவும் பின்னர் ராமநரேந்தரன் பட்டத்

திற்கு வந்து சாகமூரி வெங்கடாம்பா என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டு 13 வருஷ காலம் ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்ததாக கிருஷ்ணா ஜில்லா மான்யுவலில் காணப்படுகின்றன.

83) வாசிரெட்டி ராஜ மௌளி 1 இவர் சிந்தலபாடு வண்டு சமஸ்தானத்தைப் பெற்று நந்திக் கிராமத்தில் முனியேரு என்ற கால்வாயை வெட்டி அநேக பூமிகளை நன்செய் ஆக்கிப் பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தும், புகழுடன் 8-வருஷ காலம் ஆசை நாயகியுடன் பரிபாலனம் நடத்தி, கிறிஸ்து சகம் 1714-ல் காலகதி அடைந்தமையால் தன்னுடைய மைனர் குமாரன் சந்தரமௌளிக்கு இளவரசு பட்டம் கட்டி, அவர் தம்பி ஆகிய லக்ஷ்மீபதி ராஜ்யாபிஷேகம் ஏற்றுக்கொண்டு நடத்தி வந்தார். இவர் பிராம்மணர்களை நன்கு ஆதரித்து வந்தார் என்று சரித்திரம் கூறுகின்றன.

84) வாசிரெட்டி லக்ஷ்மீபதி. இவர் அச்சன்ன என்ற பந்துவுடன் ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்து, நீர்கொண்டார் வம்சத்திய பார்வதி அம்மாளை பாணிக்கிரஹணம் செய்துகொண்டு, ராமலிங்க, வீரய்ய நரபாலன் என்ற 2 குமாரர்களைப் பெற்று, சுவர்க்கம் அடைந்துவிட்டமையால், மறுபடியும் இவருடைய சிறிய தகப்பனாரே ராஜ்ய பாரத்தை ஏற்று நடத்தி வந்தார். இந்த லக்ஷ்மீபதியானவர் 40-வருஷ காலம் ராஜ்யத்தை ஆண்டதாகவும், கடைசியில் கிறிஸ்து சகம் 1745-வருஷத்தில் ராமலிங்க நரபாலனுக்கு ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு சுவர்க்கம் அடைந்தார் என்றும், இவருடைய குமார்த்தி ஆகிய கன்யாரத்தினத்தை சிறுமாமிள்ளா கோதண்டராமய்ய என்றவருக்கு விவாகம் செய்து கொடுத்ததாகவும் 'சகுந்தலா பரிணயம்' என்ற கிரந்தத்தில் கூறப்படுகின்றன.

இந்த லக்ஷ்மீபதியினுடைய காலத்திலேயே சந்தர-மௌளி பேருக்கு நந்திபாடிவன்ட்டு 8 ஆயிரம் வராஹனுக்கு மட்டும் ராஜா சூரநரபாலனிடத்தில் பெற்றுக்கொண்டதாக லோகல் ரிகார்டு வால்யம் 3-ல் கூறப்படுகின்றன.

85) முத்யால சமஸ்தானம் வாசிரெட்டி பெதராம லிங்க, விரன்ன நரபாலர்கள், கிறிஸ்து சகம் 1745-ஷு ராமலிங்க நரபாலன் சிந்த்தலபாடிவன்ட்டு சமஸ்தான பாலனத்தை ஏற்றுக்கொண்டு பாதி பாகத்தைத் தன் தம்பி ஆகிய வீரநரபாலனுக்குக் கொடுத்து ராஜ்யாதிகாரங்களை யுக்தமாக நடத்தி வந்தனர். அக்காலத்தில் சிந்த்தலபாடியிலிருந்து முத்யாலபாடுக்கு தன் சமஸ்தானத்தை மாற்றிக் கொண்டதால் இதற்கு முக்யால நகரம் எனப் பட்டப்பெயர் ஏற்பட்டதென்றும், பெதராமலிங்க நரபாலன் சிந்த்தலபாலம் நகரத்தில் 5 குச்சிள்ளு பூமி 70 ஏக்ரா நிலத்தை பில்லமர்ரி பாபன்ன சோமயாஜிக்கு அக்ரஹாரம் கட்டிக் கொடுத்துள்ளதாக லோகல் ரிகார்டு வால்யம் 14, பக்கம் 55-ல் காணப்படுகின்றன.

இம்மாதிரியான பரோபகார சிந்தனையுள்ள பிராமணர்களாகிய இக்குலத்தினருக்கும், சிந்த்தபல்லிவன்டு பரசுறு பாலகராகிய வாசிரெட்டி நாகநரபாலருடைய வம்சத்தினருக்கும் விரோதங்கள் ஏற்பட்டு போராட்டமும் நடந்து வந்தன. அதில் கிறிஸ்து சகம் 1760-வருஷத்தில் ராமலிங்கநரபாலனுடைய தம்பி வீரநரபாலனை, நாகநரபாலன் குமாரனாகிய ஜக்கபூபதி கொன்றுவிட்டதாக கிருஷ்ணா ஜில்லா மான்யுவலில் கூறப்பட்டுள்ளன.

இந்த தகராறுக்களில் ராமலிங்க நரபாலனுங் கூட சில காலம் பரிபாலனம் நடத்தி வந்ததாகவும், இவர் கிறிஸ்து சகம் 1745-வருஷத்தில் மோடுபல்லியில் ஒரு கோட்டையைக் கட்டியதாக லோகல் ரிகார்டு வால்யம் 5-ல் காணப்படுகின்றன.

இவர் சிறுமாமிள்ள வம்ச வெங்கடாம்ப என்ற பெண்மணியையும், புக்தம்பாக வம்ச பத்மா க்ஷீதேவி ஆகிய 2 பேர்களை விவாஹம் செய்து கொண்டு, முதல் மனைவிக்கு 2 குமாரர்களும், 2-வது மனைவிக்கு 3 குமாரர்களும் பிறந்தனர். இவர் கிறிஸ்து சகம் 1757-வருஷம் வரை ராஜ்ய பரிபாலனம் நடத்தியதாக லோகல் ரிகார்டு வால்யம் 5, பக்கம் 515-ல் குறித்துள்ளன.

இவர் குமாரர்களில் மூத்த குமாரன் பட்டத்திற்கு வந்து, பின்னர் லக்ஷ்மீபதி, ராகவைய்ய, சந்தரமௌளி, வெங்கய்ய என்ற வெங்கடாத்ரி, இவர்கள் வரிசையாக ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தனர். அக்காலத்தில் கோல்கொண்ட நவாபுக்கும், நைஜாம் நவாபுக்கும் யுத்தம் ஏற்பட்டு, இந்த ராஜ்யங்களையும் வசப்படுத்திக்கொள்ள ஏற்பாடு நடக்கையில், கொண்டவீடு சமஸ்தானாதிபதி அதில் பிரவேசித்து சமாதானஞ் செய்து, கப்பம் கட்டி வர ஏற்பாடு செய்தனர். பின்னர், இவர்களும் ஒப்புக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்தனர் என்று சகம் 1668-ஆ லோகல் ரிகார்டு வால்யம் 57, பக்கம் 161-ல் காணப்படு கின்றன.

86) ராஜா வாசிரெட்டி ராஜமௌளிப்பிரபு 2, இவர் வாசிரெட்டி ராமலிங்க நரபாலனுடைய மூத்த குமாரன் ஆகிய ஜக்கபூபதி அநியாயமாக முக்த்யால பாகத்தை ஆக்ரமித்து கடைசியில் மகமதியரால் மரணமடைந்து விட்டார். பலசத்ஜங்கு நவாபானவர் இவரையே ராஜ்யாதி காரியாக நியமித்து, ராஜா பிருதையுங் கொடுத்து சிந்தலபாடு வன்டு சமஸ்தானதி பட்டமும் கொடுத்து பஞ்சமஹா-சப்த சாமந்தநரபாலன் என்று பிருதும் தந்து கௌரவித்து வாசிரெட்டி ஜமீன் பிரதேசாதிபதியாக நியமனம் செய்து வைத்தார். கிறிஸ்து சகம் 1771-வருஷம் நடந்ததாக கிருஷ்ண ஜில்லா மான்யுவலில் காணப்படுகின்றன.

கிறிஸ்து சகம் 1770-ல் ஈஸ்ட் இண்டியா கம்பெனியார் வசம் இந்த ராஜாங்கங்கள் எல்லாவற்றையும் மகமதியர் ஒப்படைத்து விட்டனர். கிறிஸ்து சகம் 1778-ம் வருஷம் இவர் குமாரரிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு சுவர்க்கம் அடைந்தனர் என்று லோகல் ரிகார்டு வால்யம் 57, பக்கம் 161—162-ல் கூறப்படுகின்றன.

87) வாசிரெட்டி பாபய்யவரபு நாகநரபாலன், இவர் கிறிஸ்து சகம் 1778-வருஷம் நந்திகாம பிரதேசாதிபதி ஆயினர். ஆயினும் சுவல்ன காரணத்தால் இவர் சிறிய தந்தையின் குமாரனாகிய வெங்கடாத்ரியே ராஜ்ய காரியங்

களை நடத்தி வந்தார். அவர்களுடைய பந்துக்களின் துர்போதனையால் விவகாரங்கள் ஏற்பட்டு, கவர்ன்மெண்டா ரிடம் புகார் செய்ய, அவர் அதைப்பரிசீலனை செய்து ராஜாங்கத்தை மாற்றி ஜில்லாக்களாக்கி, கலெக்டரின் கீழ் ஜமீன்தாரர்களை ஏற்படுத்தினார்கள் என்று கிருஷ்ணா ஜில்லா மான்யுவல் தெரிவிக்கின்றன. இவர் அன்னெமாம்ப என்ற பெண்ணை விவாகம் செய்து கொண்டு ராமநாயடு, ராமநாத பாபு நாயுடு என்ற இரு குமாரர்களைப் பெற்றனர்.

88) வாசிரெட்டி லக்ஷ்மீபதி, சந்திரமௌளி நரபாலர் கள், இவர்கள் மதராஸ் கவர்ன்மெண்ட்டு அதிகாரத்தின் கீழாக சிந்த்தலபாடிவண்டு சமஸ்தானங்களைப் பரிபாலித்து வந்து, வெங்கடாத்ரி பிரபுக்கும், இவருக்கும் தகாதப ஏற்பட்டு யுத்தங்களும் நடந்துள்ளன. அதுசமயம் லக்ஷ்மீபதி இறந்துபோய்விட்டதால், இவர் தம்பியாகிய சந்திரமௌளி ராஜ்யாதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்து சகம் 1816-வருஷம் வரை நடத்தி வந்தார். புத்தும்பாக வம்சத்தில் தோன்றிய லக்ஷ்மீதேவியென்ற நாரீமணியை விவாகம் செய்துகொண்டு ஜினவெங்கடாத்ரி என்ற நரபாலனைப் பெற்றார். இவருக்கு வயது வந்த பின்னர் ராஜாங்கத்தாரால் கௌரவிக்கப்பட்டு ராஜாங்க அதிகாரம் பெற்று வாழ்ந்து வந்தார் என்று கிருஷ்ணா ஜில்லா மான்யு வலில் எழுதப்பட்டுள்ளன.

89) வாசிரெட்டி சந்திரமௌளி 2, இவர் வாசிரெட்டி நாகன்னாவின் 3-வது குமாரனாகிய வெங்கடாத்ரியின் புத்திரன் ஆவார். இவருடைய பெரிய தந்தையாகிய ஜக்க பூபாலனே ஸ்ரீராஜாவாசிரெட்டி வெங்கடாத்ரி பிரபுவுக்குத் தந்தை. ஸ்ரீ வெங்கடாத்ரி பிரபு இவரை நாகன்ன வரபு பாபைய்யனை நிர்ப்பந்தம் செய்து கடைசியில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் பலாத்காரத்தால் விடுதலை அடைந்து இருவரும் ஜீவன உபயோகத்திற்கு மட்டும் போஷகம் பெற்று வந்தார்கள் இவர்கள் கவிநாயகராகப் பிரசித்து பெற்றனர். இவர் வெமன்னாவுடன் கூடி சங்கமேஸ்வரரால் இவர் அகல்யா சங்கிரந்தவிலாசம் என்ற காவியத்தை இயற்றினர். அதில் சந்திரமௌளி தன் பூர்வீகர் பெற்ற பட்டத்தைப்

பெற்றதாகவும், "ராஜாதிராஜ மஹாராஜ ராஜமேசக கண்டீரவ, கண்டரகண்ட, ஜசசெற்புகண்ட சாளுக்ய நாராயண, ராஜமன்னெ கல்தாறு, பிரஹ்மகந்தில விஜயாங்க ரிருத" என்ற பட்டங்களைப் பெற்று வந்தனர். இவர் சீனுமாபிள்ளை அக்கநர பாலனுடைய புத்திரியாகிய வெங்கட ரமணம்மா என்ற பெண்மணியை விவாகம் செய்து, பத்மநாப ராமன்ன, ஜகந்நாதன் என்ற இரு குமாரர்களைப் பெற்று வளர்ந்து வந்த ஜெகந்நாத பாபுவை ஸ்ரீ வெங்கடாத்ரி பிரபு தத்து புத்திரனைப் பெற்று ராஜ்யாபிஷேகம் செய்தனர் இந்த சந்திரமௌளி ராயாவின் மொழிபெயர்ந்த கிரந்தத்தில் இவருடைய மூத்த குமாரன் ஜனித்த பின்னர், ஜகந்நாத பாபு பிறப்பதற்கு முன்னமே எழுதி வைத்ததாக காணப் படுகின்றன. இந்த கிரந்தத்தின் பிரதி ஒன்று கையெழுத்து புத்தகசாலையில் இருக்கின்றன. பத்மநாப, ராமன்ன என்றவர்களுக்கு நாயுடம்ம என்ற குமாரனும். இவருக்கு 2-வது பத்மநாப ராமன்ன, சந்திரமௌளி என்ற குமாரர்கள் தோன்றினர். இவர்களுக்கு கவர்ன்மெண்டார் அலவன்ஸாக மாதம் 1-க்கு ரூ. 385 கொடுத்து வந்தனர். இதை பங்கிட்டுக் கொண்டு இவர் தாய் தந்தையருக்கு ரூ. 75-ம் பாக்கி ரூ. 130-ஐ இவர்கள் உபயோகித்து வந்தனர். தாய் தந்தையார் போஷணார்த்தமாகக் கொடுத்து வந்த ரூ. 75 அவர்களுக்குப் பின்னர் இவர்களே அனுபவித்து வந்தனர். சந்திரமௌளிக்கு சந்தானமில்லாததால் பெருமாமை என்ற பட்டணத்திலுள்ள தமது வம்சத்தினராகிய வாசிரெட்டி வெங்கய்யா மூன்றாவது குமாரனை தத்தாகப்பெற்று 1917-ல் இறந்து போயினார். பின்னர் இந்த தத்து குமாரனாகிய ஸ்ரீ ராஜா வாசுதேவ ஜடாபாணிக்ய பிரசாத் பகதூர் காருமே இப்பொழுது அலவன்ஸ் பெற்று வருகின்றனர். இவர் செருகூர் சமஸ்தானாதிபதியாகிய திரிபுரசுந்தரம்ம ஜமீன்தாரிணியை விவாகம் செய்து கொண்டார்.

இரண்டாவது பத்மநாப நாயுடுவுக்கு நாயுடம்ம என்ற குமாரன் பிறந்து காலாகாலத்திலவர் தேவரகோட்டை சமஸ்தான வம்சத்தில் ஸ்ரீ மோக்கட்ட வெங்கடராய லிங்கா நாயுடுவுக்கு ராஜயாம்ப என்ற பெண்மணி வயிற்றில்

ஜெனித்தராஜ்யலக்ஷ்மீ என்ற நாரீமணியை விவாகம் செய்து கொண்டு வெங்கடாத்திரி, ராமநாதபாபுலு என்ற குமாரர்களைப் பெற்றனர்.

இந்த வம்சா வழியினர் கூட முன் கூறப்பட்ட அலவன்சு தொகையைப் பெற்று வருகின்றனர்.

3-ம் பாகம்

5-வது பிரகரணம்.

90) வாசிரெட்டி சினவெங்கடாத்ரிப்ரபுவு, (முக்தயால சமஸ்தான முதல் தலைவர்)

முன் கூறப்பட்ட முதல் சந்திரமௌளி நரபாலனுக்கு இவர் கிறிஸ்து சகம் 1787-ம் வருஷம் ஜனித்தார் இவருடைய தந்தை பெற்ற அதிகாரங்களை சிந்தலபாடிவண்ட ஜமீன்தார் பட்டம் இந்த வம்சத்தினருக்கு ஸ்திரப்பட்டமையால் இவர் மிகவும் வைபவத்துடன் முக்த்யால நகரத்தில் கிறிஸ்து சகம் 1816-ம் வருஷம் பட்டாபிஷேகம் செய்து கொண்டு 12 வருஷ காலம் அதாவது கிறிஸ்து சகம் 1828-ம் வருஷம் வரை சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்தார், கிறிஸ்து சகம் 1824-ம் வருஷம் இவர் குமாரராகிய பவானீ முக்த்தீஸ்வர பிரசாதப்ரபு பாலனத்தில் இருந்ததாக காணப்படுகின்றன. இவர் பாலனத்திலிருந்து சமஸ்தானத்தில் சைன்யங்கள் இல்லாமலே இருந்து வந்தன.

இந்த சினவெங்கடாத்ரிப்பிரபு பட்டத்திற்கு வந்தது முதல் மிக்க தர்மார்த்தன் என்று பெயர் பெற்று வித்வான்களை நன்ருக ஆதரித்தும் பிரஜைகளுக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்து கொடுத்தும் வந்தனர். இவர் சைவ மதத்தில் மிக்க பற்றுள்ளவராகவும், கிருஷ்ணமஹாத்மியம் என்ற கிரந்தத்தை, தாதம்பட்டு குருமூர்த்தி சாஸ்திரி என்ற பண்டிதரால் எழுதப்பட்டு அதற்கு கர்த்தாவாயினர். இந்த பண்டிதருக்கு இவர் சிந்தலபாடு கிராமத்தில் அநேக தோட்டங்கள் நஞ்சை பூமிகளைக் கொடுத்து சாசனம் எழுதி

வைத்துள்ளார். இவருடைய ஆக்ஷிக்கு உட்பட்ட பிரதேசங்களில் அநேக தேவாலயங்கள் விருத்தி அடைவதற்கு வேண்டிய மான்யாதிகள் கொடுத்தும் அதிகாரிகளை நியமித்தும் யுக்தப்படி தேவாலய காரியங்களையும் நடத்தி வந்தனர். முக்த்யால நகரத்தில் ஸ்ரீ பவானீ முக்த்தீஸ்வர ஸ்வாமி என்றவருக்கும் வேதாத்திரியில் ஸ்ரீ யோகநந்த ஸ்வாமிகளுக்கும் இவர் அநேக உதவிகள் செய்து பிரசித்தி பெற்றனர். இவர் சிறுமாமிள்ள ராமநரபாலனுடைய குமார்த்தி ஆகிய பாவமாம்ப என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டுள்ளனர். இவர் வேதாத்ரியிலும் முக்த்யால நகரத்திலும் கிருஷ்ண நதிக்குப் பாலங்களைக் கட்டியும் வைத்துள்ளார். இவருக்கு பவானீ முக்தீஸ்வர பிரசாத், சுந்தரமௌளி பிரசாத் என்ற 2 குமாரர்கள் தோன்றினர். 3-வது சதாசிவப் பிரசாத் என்ற 3-வது குமாரன் பிறந்த பின்னர், தேவ பக்தியிலும், பிராமணை பக்தியிலும் மிக்க ஈடுபட்டு வந்தனர். இவருக்குப் பின்னர் ஜேஷ்ட குமாரனாகிய பவானீ முக்தீஸ்வர பிரசாத் சமஸ்தானாதிபதியாக நியமனம் பெற்று பரிபாலித்து வருகையில் இவருடைய 3-வது குமாரனாகிய சதாசிவ பிரசாத் ஒரு தேவாலயத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்து யுக்தப்படி நடந்து வருவதற்கு வேண்டிய சாசனங்களையும் செய்து வைத்தனர் என்று 'ஸ்ரீ காஞ்சிமகாத்மிய' கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளன.

91) வாசிரெட்டி பவானீ முக்தீஸ்வர ப்ரசாத நாயடு, இவர் தந்தையாகிய சினவெங்கடாத்ரி பிரபு காலமான பின்னர் பட்டத்திற்கு வந்து, கிறிஸ்து சகம் 1828-வருஷம் சிந்த்தலபாடிவண்டு சமஸ்தான பாலகனுகி, கொஞ்ச காலம் சிந்த்தலபல்லி சமஸ்தான பாலகனுகிய ராமநாதபாபு தாலூகாவிற்கு பேஷ்கஸ் பாக்கியாகி இருந்ததைக் குறித்து மதராஸ் கவர்ன்மெண்டார் இவருடைய சமஸ்தானத்துடன் சேர்த்து ஜப்தி செய்து சுவாதீனம் செய்து கொண்டனர். இதற்கு காரணம் 1802-வருஷம் நந்திகாம பிரதேச சிந்த்தலபல்லி கிராமங்கள் சேர்ந்து 30 ஆயிரம் வராஹன் பேஸ்கஸ் துகையை நிர்ணயம் செய்து ஒரு ரிப்போர்ட்டைக் கொடுத்து இருந்தனர். இதில் லார்டு கிளைவ் முதலான அதிகாரிகள் பிரத்யேகமாக சிந்த்தலபாடிவண்டு ஜமீனுக்குத் தனியாக

அனுப்பவில்லை. அதனால் இவர் காஞ்சீ முதல் புண்யக்ஷேத்ர தேவாலயங்களைச் சேவித்து, பின்னர் மதராஸ் கவர்னரிடமிருந்த வில்லியம் தாமஸ் துரை முதலானவரிடம் விஷயத்தைத் தெரிவிக்க, அவர்கள் இவருடைய சமஸ்தானத்தை இவரிடம் ஒப்படைத்தனர். பின்னர் சிந்த்தலபாடிவண்டுக்கு முதலில் நந்திகாம பிரதேசங்களை மொத்தமாக்கிய காலத்தில் வசூலித்த துகை ரூபாய் 19868—0—0-க்குப் பதிலாக சர்க்கார் ரூபாய் 17500—0—0 G. O. நெ. 2152-ல் நிர்ணயம் செய்துள்ளனர். இது கிறிஸ்து சகம் 1862-வருஷத்தில் நடந்தது. இந்த சமஸ்தானம் 1860-ல் சர்க்காரால் சர்வே செய்யப்பட்டன.

இந்த பவானீ முக்தீஸ்வரப்ரசாத நாயுடு மிக்க தர்மிஷ்டராக இருந்து வந்தார், கவிநாதர்களுக்கு வேண்டிய சௌகர்யாதிகள் செய்து வந்தார், ஸ்ரீ காஞ்சீபுர மகா காவியத்தை சுப்பராயகவி நாயகரால் ஆந்தர பாஷையில் எழுதி வைக்கச் செய்தனர். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதருக்கும், திருமலையில் ஸ்ரீ வெங்கடாசலபதிக்கும், கஞ்சி காமாக்ஷி அம்மையாருக்கும் இவர் உத்சவாதிகளை நடத்தி வத்தனர், இவர் தாரண வருஷம் கிறிஸ்து சகம் 1824-ம் வருஷம் வேதாத்ரியில் ஸ்ரீ நரஸிம்ஹ ஸ்வாமி தேவாலயத்தில் ஒரு துவஜ ஸ்தம்பம் நாட்டினார். முனியேறு நதியிலிருந்து கால்வாய்களை வெட்டி பாசன வசதிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இவர் காசி, ராமேஸ்வரம், கயா, மதுரா, அயோத்யா, சிதம்பராதி புண்ணிய க்ஷேத்திரங்களைச் சேவித்து, முக்த்யால வேதாத்ரி முதலான கிராமங்களில் தேவாலயங்களுக்கு அநேக பூமிகளை மான்யமாகக் கொடுத்து சாசனம் எழுதி வைத்துள்ளார்.

இவர் சிறுமாமிள்ள வெங்கடராம நாயுடு புத்திரியாகிய சௌபாக்கியவதியை விவாகம் செய்து கொண்டு, உமா மகேஸ்வர பிரசாத், வெங்கடாத்ரி நாயுடு என்ற இரண்டு தனயர்களைப் பெற்றனர், விசால அம்மை என்ற ஒரு பெண் புத்திரியும் பிறந்துள்ளனர். இவ்வம்மையாரை தேவரகோட்டை சமஸ்த்தானபதியாகிய ஸ்ரீ ராஜா யோர்லகட்ட

மல்லிகார்ஜுன பிரசாத் பூபதி விவாகம் செய்து கொண்டனர்.

இந்த முக்தீஸ்வர நாயுடு ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் மடத்திற்கு சில பூமிகளை தானம் செய்து சாசனம் செய்து வைத்துள்ளார். இவர், தந்தை, பாட்டன் முதலானவர்களைப் போல வாழ்ந்து, சிவாச்சாரியரிடம் உபதேசம் பெற்று வந்தனர். இவர் பரமவாதி என்ற கவீஸ்வர ராம அய்யரால் எட்டு அடி கொண்ட த்ரௌபதி பரிணயம் என்ற காவியத்தை இயற்றச் செய்துள்ளார். இவர் காலத்தில் மதராஸ் கவர்ன்மெண்டார் மன்றோல் ரைதுக்களின் பத்ததியை அமலுக்கு கொண்டு வந்தனர்.

92) வாசிரெட்டி உமாமயேஸ்வரப்ரசாத் நாயுடு பக்தர் இந்த பவானீ முக்தீஸ்வரப்ரசாதப்ரபு பின்னர் முக்த்யால சமஸ்தானாதிபதியானார். தந்தை இருக்கும் போதே அவருடன் காசி ராமேஸ்வர யாத்திரைகளைக் கூடவே நடத்தி வந்தனர். சிந்த்தலபாடியில் இவர் ஒரு கோவில் கோபுரங்கட்டி வைத்து சில பூமிகளை பரிசாக வழங்கிமானியம் எழுதி வைத்துள்ளார் முக்த்யால நகரத்தில், ஹரி ஹராலயங்களுக்கு த்வஜஸ்த்தம்பங்களை நட்டு வைத்தார், தவிர தேவாலயத்தில் ஒரு சாஸ்வதமான சிகரத்தை கட்டி வைத்தனர், இவர் சாகமூரில் வெங்கடாத்ரி என்று பிரசித்து பெற்ற கம்மவார் வம்சத்திய வெர்ரிமாம்ப என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டும், சந்ததி இல்லாத காரணத்தால் அவர் தம்பியாகிய வெங்கடாத்ரி நாயுடுவுக்குப் பிறந்த குமாரனை தத்துஸ்வீகாரம் செய்து கொண்டு வாழ்ந்தார். தத்து குமாரன் பெயர் சந்திரமௌளி பிரசாத் என்பர்.

93) ஸ்ரீ வெங்கடாத்ரி நரபதி, இவர் போலூர் கிராமத்தில் ஒரு சிவாலயத்தைக் கட்டி அதற்கு வேண்டிய மானியங்கள் எழுதி வைத்துப் பிரசித்தி பெற்றார். இவர் சிறுமாமிள்ள வம்சத்தில் தோன்றிய பார்வதி அம்மை என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டு நான்கு குமாரர்களைப் பெற்று வளர்த்து வந்தனர். இவர் ஐயந்திபுர சமஸ்தானாதிபதியாகப் பட்டம் பெற்றனர். இவர் குமாரனாகிய

துர்க்கா சதாசிவேஸ்பர பிரசாத் முதலானோர்கள் இப்பொழுது ஜயந்திபுர சமஸ்த்தானாதிபதிகள் என்று பட்டப் பெயர் பெற்றுள்ளனர். துர்க்கா சதாசிவ பிரசாத் 1937-ம் வருஷத்தில் எம்.எல்.ஏ. பட்டம் பிரஜைகளால் பெற்று காங்கிரஸ் பார்ட்டியில் இருந்து கொண்டு மற்ற ஜமீன்தாரர்களுக்கு மார்க்கதரிசியாக நடந்து கொண்டு வருகிறார்.

94) வாசிரெட்டி சந்த்ரமௌளீஸ்வர பிரசாத பூபதி, சிந்த்தலபாடிவெண்ட ஜமீன் என்ற முக்த்யால சமஸ்தானபதி ஆகியவர் இவரே ஆவார். இவர் தந்தை, பாட்டனார்களைப் போலவே தேவ காரியங்களை நடத்தி வந்தார். வேதாத்ரியில் நரஸிம்ஹர் தேவாலயத்தில் ஒரு கோபுரத்தைக் கட்டியும், நவரத்தின கவசம் செய்து சமர்ப்பித்தும், ஒரு சிவாலயத்தில் கோபுரம், துவஜஸ்தம்பங்களை நிறுவியும் மண்டபம் கட்டியும் பிரசித்தி பெற்றனர். இவர் தேவரகோட்டை சமஸ்தான பதியாகிய ஸ்ரீ ஏர்லகட்ட மல்லிகார்ஜுன பிரபுவின் புத்திரியாகிய வெங்கட துர்காம்ப என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டு, இவர் பண்டித சிரோமணிகளுக்கு வேண்டிய உதவியும் புரிந்து வந்தனர். அதனால் கவிராஜஸ்ரீ ஸ்ரீபாத கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியைச் சில காலம் போஷித்து வந்து அவரால் ஸ்ரீ மஹாபாரதத்தை சமஸ்கிருதத்திற்கு ஒப்பாக தெலுங்கு பாஷையில் எழுதி வைக்கச் செய்துள்ளார். இந்த கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி பாண்டியத்திற்கு அவரை மெச்சி, தக்க சன்மானங்களைக் கொடுத்து கவுரவித்தார். தவிர கவீஸ்வரபௌமா என்று பட்டமும் சூட்டினார். இந்த சமஸ்தானத்தில் 5 கிராமங்களில் 7 குளங்கள் வெட்டி கரைகள் கட்டியும் அநேக நிலங்களுக்கு மடைகள் கால்வாய்கள் மூலமாக விவசாயிகளுக்கு தக்க வசதிகள் செய்தும் கொடுத்துள்ளார். 1927-ம் வருஷத்தில் ஜெயந்திக்குளம் என்ற பெரிய ஏரியை ஏற்படுத்தியும் இரகபாடுவில் ஒரு கால்வாயை வெட்டியும் 1924-ம் வருஷத்திலிருந்து 1937-ம் வருஷம் வரை இந்தக் கால்வாய் மராமத்துக்காகச் செலவான துகை ரூ. 50,000 ஐம்பதாயிரம். இதில் பாதித் துகையைக் குடிமக்களாலும் மற்ற பாதி சமஸ்தானத்திலிருந்தும் செலவு செய்யப்பட்டன. 1931-ம்

வருஷத்தில் இந்த சமஸ்தானத்திலிருந்து அடவிகண்டம் என்ற பூமியை வாசிரெட்டி கனகவல்லி சாம்பகதர் அவர்களுக்கு மானியமாகக் கொடுத்ததினால் சமஸ்தானத்திற்கு ரூ. 78,882—00 வருமானம் கிடைத்ததென்றும், இந்த சமஸ்தான பூமிக்கு கந்தாயம் அதிகப்படியாயிற்றென்றும் கூறப்படுகின்றன.

இந்த நரபாலன் தன்னுடைய ப்ரபிதா மகனாகிய சின வெங்கடாத்ரிப்ரபுவின் பிதா மகனாகிய பவானி முக்தீஸ்வர பிரபுவானவர் எழுதி வைத்த கிரந்தங்கள் (1) கிருஷ்ண மஹாத்மியம் 2. காஞ்சி மஹாத்மியம் 3, திரௌபதி பரிணயம் முதலான கிரந்தங்களில் உலக உபகாரத்துமாகப் பிரசுரிக்கப்பட்டன. இவர் முக்த்யால நகரத்தில் ஒரு சித்திர சாலையும், ஒரு அர்க சாலையும் கட்டி வைத்துள்ளார்.

(1) Report of the Committee on Estate land act bill by Mr. Prakasam Pantulu.

95) சிந்தபல்லி நந்திகாம சமஸ்தானங்கள். ஸ்ரீ ராஜா வாசிரெட்டி வெங்கடாத்ரி நாயுடு பகதர் மன்னெ கல்தான். இவர் கிறிஸ்து சகம் 1765-வருஷம் வாசிரெட்டி ஜக்கநரபாலனுடைய குமாரனைத் தோன்றினர். (1) ஜக்கநரபாலனுக்குப் பின்னர் இவருடைய பெரிய தந்தையாகிய வீரநரபாலனால் வளர்க்கப்பட்டு வயது வந்த பின்னர் கிறிஸ்து சகம் 1780-வருஷத்தில் பட்டத்திற்கு வந்து மகா தீராக்ரேசர் ஆகி, தனக்கு அடங்காதவர்களை திரஸ்கரித்து சிந்தபல்லி கோட்டையை ராஜதானியாக வைத்துக் கொண்டனர். ஆயினும் தன்னுடைய பெரிய தந்தையின் குமாரனாகிய 'நாகய்ய வரபு, பாபய்ய என்றவரும், சிறிய தந்தையின் குமாரனாகிய சந்தரமௌளி என்றவரை நிர்ப்பந்தம் செய்து கோட்டையில் அடைத்து பின்னர் விட்டு விட்டதாகவும் சரித்திரத்தில் தெரிவித்துள்ளோம். இது கிறிஸ்து சகம் 1794-வருஷம் நடந்தனவென்றும் காணப்படுகின்றன.

இவர் பாலனத்திற்கு வருங்காலத்தில் குண்டூர் சர்க்கார் மூர்த்தி ஜான்நகர் கோல்கொண்ட நவாப் நைஜாம் அலீகான் தம்பியின் ஜீவதசை வரை கப்பம் பெற்றுக் கொண்டு கடைசியில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கு ஒப்பித்துவிடுமாறு ரிகார்டு செய்து கொடுத்ததாகவும் உத்திரவு செய்தனர். வெங்கடாத்ரி பிரபு சிந்த்தபல்லி-வண்டு சமஸ்தான வகையருக்கள், இந்த சர்க்காரின் கீழ் பட்டதே ஆனதால் வெங்கடாத்ரி பிரபுவுக்கும், பலசத்ஜங்கு நவாபுக்கும், பின்னர் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கும் பிரதான அதிகாரியாக ராஜ்ய பரிபாலனம் நடத்தவேண்டி ஏற்பட்டது. வாசிரெட்டி பிரபுக்களின் பரிபாலனத்தில் இருந்த ஜமீன்கள் எல்லாம் சிந்த்தலபாடிவண்டு என்ற முக்த்யால நகரம் பாதியை இவர் ஆக்ரமித்துக்கொண்டு உள்ளதாக கிறிஸ்து சகம் 1801-வருஷத்தில் சந்திரமௌளி நரபாலனுக்கு ஒப்படைத்து விட்டதாக முன்னர் கூறி உள்ளன.

இந்த குண்டூர் சர்க்கார் ஜீவதசைக்குப் பின்னர், பிரிட்டீஸாரிடம் ஒப்படைக்கவேண்டுமென்ற ரிகார்டு அமுலின்படி, இந்த வெங்கடாத்ரி நாயுடுவே அதை ஏற்றுக் கொண்டு ராஜ்ய காரியங்களை நடத்தி வந்தார்.

கிறிஸ்து சகம் 1788-வருஷம் பலசத்ஜங்கு நவாபு இறந்துவிட்டபடியால் பிரிட்டீஸ் சர்க்காருக்குச் சேர்ந்தன. ஆயினும் கம்பெனியாரை அணுகாமல் வெங்கடாத்ரி ப்ரபு நாயுடு தானே பரிபாலித்து வந்தார். இதை அறிந்த கம்பெனியார் வினுகொண்ட, பெலம்கொண்ட ஜமீன்களின் பொறுப்பையும் இவரிடமே ஒப்படைத்தனர். ஆயினும் சமயத்திற்குத் தகுந்தபடி கிறிஸ்து சகம் 1794-வருஷம் கம்பெனியார் ஆட்சி பலமடைந்த பின்னர், வெங்கடாத்ரி ப்ரபுவின் பெரிய தந்தையின் குமாரர்களேயும், சிறிய தந்தையின் குமாரர்களேயும் ஒதுக்கிவிட்டாரே ஆயினும் சிந்த்தலபாடி கோட்டையில் கம்பெனியார் சைனியங்களை ஒரு பக்கம் நிறுத்திவைத்தனர். இதுவரை வெங்கடாத்ரி பிரபுவிடம் (3000) மூவாயிரம் சைனியங்கள் இருந்தன,

இதை ஆபத்துக் காலத்தில் நைஜாமுக்குச் சகாயமாக அனுப்பப்பட்டு வந்தன. கிறிஸ்து சகம் 1802-வருஷம் பிரிட்டீஷார் சமஸ்தானத்தில் சைனியங்களை எல்லாம் ரத்து செய்து ஆயுதங்களை எல்லாம் பெற்றுக்கொண்டனர். அது முதல் ஆயுதங்களை பெறுவோர் கம்பெனியாரிடம் லைசென்சு வாங்கி ஆயுதங்களை வைத்துக்கொள்ள வசதி ஏற்பட்டன. வெங்கடாத்ரி பிரபுவிடம் பிரிட்டீஷார் C. I. D.-யை நிறுவி வந்தனர். வெங்கடாத்ரி பிரபுவும் இதைக் கருத்தில் கொண்டு, சமஸ்தானத்தில் சைனியங்களைக் குறைத்துக் கொண்டு, தர்ம காரியங்களில் ஈடுபட்டு தன்னுடைய சமஸ்தான பிரைஜைகளுக்கு வேண்டிய சகாயங்கள் செய்து வந்தார். இதனால் கம்மவாரில் இவருக்கு ஒப்பானவர் இல்லை என்ற பட்டப் பெயரும் பெற்றனர்.

சிந்த்தபல்லி கோட்டையில் கம்பெனியார் சைனியங்கள் காவலாக இருந்துவந்தன. இதனால் இவர் அமராவதியில் கோட்டையை நிர்மாணித்து அங்கேயே வாசம் செய்து வந்தனர். அங்கு 108 லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து வந்து, அங்கு ஒரு தபோவனத்தை உண்டாக்கினர். ஆயினும், அங்கு தாம்பர ரேக்குகள் காணப்பட்ட ஒரு பவனத்தைக் கட்டி, அதில் தான் வாசம் செய்துவர ஏற்பாடு செய்து வந்தார். இவர் அமராவதி பட்டணத்திற்குச் சமீபமாக புத்த ஸ்தூபியைக் கட்டி இருந்ததைத் தோண்டி எடுத்து அந்தக் கற்களைக் கொண்டு வேறு கட்டடங்களைக் கட்டினர். இவர் காலத்தில் சமஸ்தானம் பலவித செளகர்யங்களுடன் பிரகாசித்து வந்தன.

ராசூர் ஜமீன்தாராகிய மாணிக்காராவ் வம்சத்தினர் வங்கிபுரம் தாலூகாவை சர்க்கார் கிஸ்திக்காக வேண்டி விற்கையில் கொல்லூறு, நிஜாம் பட்டண கிராமங்கள் ஏலத்திற்கு வரவும், அவைகளையும் பெற்றுக்கொண்டு, கொண்டவண்டு பிரதேசத்தில் சில பாகங்களைப் பிரஜை களுக்குக் கொடுத்தும், இனுகுதுறு, ஆகுலமன்னாடு, ஆகுலங்கல், கல்திண்டி, மேடூரில் சில பாகங்களையும்,

ஜருல்வாய் என்ற ராஜமண்ட்ரி பிரதேசங்களில் சில பாகங்களையும் இவர் கிரையத்திற்குப் பெற்றுக்கொண்டு தன்னுடைய சமஸ்தானத்தைப் பிரபலமாக விஸ்தரித்துக் கொண்டும் வந்தனர்.

இவர் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்து துகையைக் காலா காலத்தில் செலுத்தி வந்தார். இவர் காசி யாத்திரை செய்த காலம். பாங்குகளில் ரூ. 2,00,000 (இரண்டு லக்ஷம்) டிபாசிட் செய்து விட்டுப் பிரயாணமானார். அக்காலத்தில் அநேகமாக தானதர்மங்கள் செய்தார்.

இவர் அநேக க்ஷேத்திரங்களில் 30 அடி நீளமுள்ள தாம்பரத்தினால் செய்யப்பட்ட 108 த்வஜஸ்தம்பங்களை நட்டுப் பிரதிஷ்டை செய்தனர். இவர் ஒரு சமயம் தங்கத்தினாலும், வெள்ளியினாலும் தன் எடையுள்ளதை பிராம்மணர்களுக்கு தானமாகக் கொடுத்தார் என்று கிருஷ்ணா ஜில்லா மான்யுவலில் காணப்படுகின்றன. இவர் காசி யாத்திரை செய்த காலம், பீஷ்வாபாஜீராவைத் தரிசித்து அவருக்குப் பாதகாணிக்கை செலுத்தி அவரிடம் ஆசி பெற்றும், நைஜாம் நவாபு இவருக்கு மாகூர் சுல்தான் என்ற பிருதையும் கொடுத்தனர். இவர் சேப்ரோலு பிரதேசத்தில் உள்ள பட்டண முகப்பில் சதுர்முக நகரம் என்ற பெயருடைய கோபுர வாசலைக் கட்டினார். மங்களகிரியில் உள்ள ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமி தேவாலய கோபுரத்தைக் கட்டிப் பிரதிஷ்டை செய்து வைத்தார். இவர் கிறிஸ்து சகம் 1802-வருஷம் நடந்த செட்டில்மெண்டு பரிபாலன காலத்தில் தன்னுடைய கிராமம் ஒன்றில் வசித்து வந்த கர்ணம் வசூல் கணக்குகளை எல்லாம் மாற்றி எழுதி வைத்து தான் கட்ட வேண்டிய கிஸ்து துகையைக் குறைத்துக்கொண்டு ரிகார்டுகளில் பதிவு செய்து வைத்தனர் என்று கிருஷ்ணா ஜில்லா மான்யுவலில் காணப்படுகின்றன.

இந்த மகாராஜா தேவேந்தரனைப் போல சகல போக பாக்கியங்களையும் அனுபவித்து, மயில்வாகனத்தையும் செய்துவைத்துக்கொண்டுள்ளார். இவர் ஆட்சி காலத்தில்

மேதரசாலையில் சில சென்க குண்டர்கள் பிரவேசித்து அங்கு உள்ள சாதுக்களுக்கும், ஸ்திரீகளுக்கும் அநேக இடைஞ்சல்கள் செய்து வந்ததைக் கண்டு அவர்களையெல்லாம் சமஸ்தானத்திற்குக் கொண்டு வந்து தக்க தண்டனைகளை ஏற்படுத்தி யாதொருவிதமான துன்பமும் நேரிடாமல் காத்துவந்தார்.

இவர் முதலில் சந்தர்லபாடி அஸ்தவ்யன் என்ற சான வெங்கய்ய யாக்யர் என்றவருடைய புத்திரியாகிய வெர்ரோமாம்ப என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டனர். இவ்வம்மையார் ஆண் சந்ததி இல்லாத காரணத்தால், இவ்வம்மையார் பிரயத்தனத்தால் ராஜ்யலக்ஷ்மீ என்ற பெண்மணியைப் பெற்று இவரை சாகுர் வெங்கய்ய என்றவருக்கு பாணிக்கிரஹணம் செய்து வைத்துப் பின்னர். ஆண் சந்ததிக்காக வேண்டி கொத்செர்லவாரியாகிய நீர்கொண்டார் வம்சத்தில் பார்வதி அம்மை என்ற பெண்மணியை 2-வது விவாகம் செய்தும் கூட, புத்திர பாக்யம் கிடைக்கவில்லை. இவர் தந்தையின் பெயரால் ஐக்கய்ய பேட்டையைக் கட்டியும், தன் தாயார் பெயரால் அச்சம்ம பேட்டையைக் கட்டியும், தன் பெயரால் மன்னெ சுல்தான் பேட்டையைக் கட்டியும், (இது இன்றைக்கு குண்டூரில் உள்ள புதுப்பேட்டை ஆகும்) ராஜாபேட்டை, நாயடுபேட்டை என்ற பேட்டைகளையும் கட்டியுள்ளார்.

இவருக்கு ராஜாதி ராஜ, ராஜா, அஷ்டதுர்காநட கம்வீர, ஜம்ஏகட்டாடி குக்குஜட்டி மல்லன், மன்னெஹம்வீர, பஹதர், மன்னெசுல்தான், சர்ருசமுகி, ரெட்டிகார்ஜூடன்ருபரமாசமஹுண்டு, கடிதுர்க்க கண்டாரகண்ட, கதனவிஜய, வீரசங்கர, பனவஹம்வீர, பசவசங்கர, மன்னெராய, பரராஜபீகர என்ற பிருதுகள் பெற்றுள்ளார் என்று சில பத்யங்களில் வித்வான்களால் எழுதப்பட்டு உள்ளன.

கிறிஸ்துசகம் 1803-ஹு ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் சில கிராமங்களில் குடிமக்களுடைய சொத்துக்களை ஏலத்திற்கு விட்ட சமயத்தில் இவர் அந்த சொத்துக்களை ஏலத்திலெடுத்து பாவநாராயணஸ்வாமிக்குக் கொடுத்து அதைப் பரம்பரையாக அனுபவித்து வருவதற்கு வேண்டிய சாசனங்களைச் செய்து வைத்ததாக பாபட்லபுரி கையெழுத்துப் பிரதியில் எழுதப்பட்டுள்ளன. தவிர மெகஞ்சீதுரை எழுதி வைத்த லோகல் ரிகார்டுகளில் இவர் ஆட்சி காலத்திலேயே நடந்ததாக எழுதப்பட்டுள்ளன. 1214-ம் பசலி பொன்னூர் வகையரா 22 கிராமங்களை வாசிரெட்டிவார் பெற்றுக்கொண்டதாக லோகல் ரிகார்டு 3-ல் காணப்படுகின்றன.

இந்த மகாராஜனுக்கு செஞ்சுகுண்டர்களை தண்டித்துக் கொன்ற மனோவேதனையால் தேகசௌக்யம் கெட்டுவர அதன் நிமித்தமாக இவர் நூதனமாக அமராவதி பட்டணம் என்ற பெயருடன் ஒரு கிராமத்தை நிர்மாணித்து அங்கு சதலிங்கப் பிரதிஷ்டை செய்யின் தன்னைச் சார்ந்த பாபங்கள் விமோசனமாகுமென்று கருதி அதை நிறைவேற்றி மனச் சந்துஷ்டி அடைந்தார். தவிர 66 கிராமங்களை அக்ரஹாரமாக்கி பிராம்மணர்களுக்கும், கவிஸ்வரர்களுக்கும் தானம் கொடுத்து மன நிம்மதி அடைந்தார்.

இந்த மகாராஜா மங்களகிரி, வைகுண்டபுரம், அமராவதி, பொன்னூறு கிராமங்களில் உள்ள தேவாலயங்களுக்கு கோபுர மண்டபாதிகள் நிர்மாணித்துப் பிரசித்தி பெற்றனர். இவர் பசலி 1193-ம் வருஷம் குண்டூரில் ராமசந்திரபுர அக்ரஹாரத்தில் உள்ள மல்லேஸ்வர தேவாலயத்திற்கு சில பூதானங்கள் செய்தனர். இவர் பிரதி வருஷமும் தேவீ பூஜையைத் தவறாது நடத்தி வந்தார். அது சமயம் பிராம்மண தம்பதிகளுக்குப் பூஜை சமாராதனைகள் யுக்தப்படி நடத்தி வந்தனர். தவிர மாதம் ஒன்றுக்கு ரூ. 3000 வருமானம் உள்ள மிராசுதாரர்களை சேனைத் தலைவர்களாக நியமித்தும் வைத்திருந்தனர். நைஜாமுக்கு சேனைகளை அனுப்பும் பொழுது அத்தலைவர்களை ஆனைகளின் அம்பாரியில் அமரச்செய்து சகல பாதுகாப்புடனும் பவனிவர

ஏற்பாடு செய்து அனுப்புவது வழக்கமாகக் கொண்டாடி வந்தனர் என்று வம்ச சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளன. இவரிடத்தில் சேனாதிபதிகளாக இருந்தவர்கள், சாகஜீரிவாரும், வீரசிங்கு, ராமலிங்கு, புஜங்கராவு, கோடோஜி, சர்வோஜி முதலானோர் இவருடைய சேனையில் இருந்தனர். புஜங்கராவ் அன்னிய குலத்தவராவர்.

இவரிடத்தில் சப்னிவீஸு, அந்தன பந்துலு, பொத்தூர் காளிதாஸ் என்றவர்கள் பிரதான மந்திரிகளாக இருந்தனர். ஐப்பால அய்யன்னகாரு என்ற கம்ம வம்சத்தினரும் மந்திரியாக இருந்தார். இவர் துர்க்காலவாசியாவார். இவர் சதாகாலம் வெங்கடாத்ரி பிரபுவினிடமிருந்து எந்தக் காரியங்களையும் சிரமமின்றி நடத்தி வந்தனராம். மற்ற மந்திரிகளைப்போல அல்லாமல் கிருஷ்ணமராயரிடமிருந்த அப்பாஜியைப்போலவே சமான கௌரவம் பெற்று வந்தனர் என்றும், இவர்களிருவரும் கூடி ஒரு பல்லக்கில் ஏறிக் கொண்டு, எங்கு வெளியிலானாலும் போய்வருவது வழக்கம் என்று துர்க்கால பிராந்தியங்களில் உள்ளவர்கள் கூறுவர். இந்த அய்யன்னகார் (30) வயது பிராயத்திலேயே சுவர்க்கம் அடைந்துவிட்டதாகத் தெரியவருகின்றன.

இவருடைய பரிபாலன காலத்தில் ரைதுக்களுக்கு இந்த பக்தி அமலில் இருந்ததாகவும் அதனுல் கிராமாந்தரங்களில் உள்ள ரைதுக்களுக்கு, ஜமீன்களைப்போல அதிகாரங்களும் பல்லக்குகளில் பிரயாணம் செய்துவருவதும், பூமிகாணிகளை குத்தகைக்குக் கொடுத்து குடிமக்களிடம் மிக்க அன்புடன் வசூல் பெற்றும் வந்தனர்.

கிறிஸ்து சகம் 1816-ம் வருஷம் ஆந்திர பிரதேசத்திற்கு ஒரு ஆபத்து மாராட்டியர்களால் ஏற்பட்டன அது சமயம், மகமதியரும், பிரிட்டீசாரும் அவர்களை அடக்காமல் விட்டதினுல் சுமார் பத்தாயிரம் (10,000)-ம் குண்டர்கள் கூடி ஆயுதங்களைக்கொண்டு கிராமாந்தரங்களில் பலாத்காரமாக பணவசூல் செய்தும் பெண்களைச் சிறையில் அடைத்தும் பிரஜைகளை இம்சித்து வந்தனர். ஆயினும் இவர்

ஆட்சியிலுள்ள பிரதேசங்களில் பிரவேசிக்கவிடாமல் தடுத்துப் பிரஜைகளுக்குச் சகலவிதமான ஆதரவும் தந்து வந்ததாக சீசமாலிகை என்ற கிரந்தங்களில் கவிவாணர் பாடியுள்ளனர். இந்த கலவரங்கள் ஏற்பட்ட சமயம் ஜமீன்கள், ரயித்துககள், பிரஜைகள் எல்லோரும் கூடி மிக்க தைரியத்துடன் குண்டர்களை விரட்டித்துரத்தி தேசத்தைப் பாதுகாத்தனர். வெங்கடாத்ரி பிரபுக்கு ஆண் சந்ததி இல்லாததால் சந்திரமௌளி நரபாலன் குமாரனாகிய ஜகன்னாதபாபு என்றவரை தத்தஸ்வீகாரம் செய்துகொண்டு கிறிஸ்து சகம் 1806-ம் வருஷம் மறுபடியும் பாபய்யவரபு நாகநரபாலன் குமாரனாகிய ராமநாத பாபு என்றவரை 2-வது குமாரனைப் பெற்றுக்கொண்டனர். இவர் தன்னுடைய பட்ட மஹிஷிகளாகிய இருவருக்கும் ஒவ்வொருவராக நியமித்து கிறிஸ்து சகம் 1816-ம் வருஷம் தன் சமஸ்தானத்தைச்சேர்ந்த 551 கிராமங்களில் உமாமகேஸ்வர பாகமென்று பெயர் சூட்டி 314 கிராமங்களை ஜகன்னாத பாபுவுக்கும், சேப்ரோலு என்ற பெயர் இட்ட 237 கிராமங்களை ராமநாத பாபுவுக்கும் பிரித்துக்கொடுத்து ரிகார்டு செய்து கிறிஸ்து சகம் 1816-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 17-ந் தேதியில் சுவர்க்கம் எய்தினர். இவர் இம்மாதிரி பாகப்பிரிவினை செய்ததை எண்ணி இவர் தந்தையின் பெரிய தந்தை மக்களும், சிறிய தந்தை மக்களும் சந்தோஷமடைந்தனர்.

இவருடைய பரிபாலன ஆரம்பத்தில் கிறிஸ்து சகம் 1790—91-வருஷத்தில் தேசத்தில் கடினமான ரோகபீடிதம் ஏற்பட்டதில் ¾ பாகம் பிரஜைகள் மடிந்து மிக்க கஷ்டங்களை அடைந்தனர். அப்பொழுது இவருடைய பிரயத்தனத்தால் பிரிட்டிஷார் பிரஜைகளுக்கு வேண்டிய உதவி செய்து காப்பாற்றினர் என்று பெத்தாபுறம் சமஸ்தான சரித்திரம் 75—76-ம் பக்கங்களில் குறித்துள்ளன.

1211 பசலி முதல் 1216 வரை நிஜாம் பட்டண சர்க்காரும், இவரும் ஏலத்தில் எடுத்த பிரதேசங்களையும் பரிபாலித்து வந்தனர் என்று லோகல் ரிகார்டு வால்யம் 7-ல்

காணப்படுகின்றன. இதல்லாமல் 6 கிராமங்கள் 6 ஊர்களை மேஸ்தர்யிஸ் கட்துரை பிரைவெட்டாக ஏலத்திற்கு விட அதையும் வெங்கடாத்திரி நாயுடு 1802-ம் வருஷம் கிரயத்திற்கு பெற்றுக்கொண்டதாகவும் லோகல் ரிகார்டு தெரிவிக்கின்றன. இந்த வெங்கடாத்ரிநாயுடு செய்த தானதர்ம விஷயங்கள், அவுரங்கஜீபு இந்த பிரதேசங்களை அபகரித்த காலம், சிலவற்றை மாற்றி மேற்கு பிரதேசம் தன் வசமாகவும் உத்தர ஆற்காடு பிரதேசத்தை பிரென்சு காரர்களுக்குக் கொடுத்தனர். ஆயினும் அங்குள்ள இந்து தேவாலயங்களைப் பாழ்படுத்தி அவர்களுக்கு வேண்டியதை நிர்மாணித்துக் கொண்டனர்.

•

ஸ்ரீ வெங்கடாத்ரி பிரபு ராஜ்ய பரிபாலனத்திற்கு வருகின்ற வரையில் அநேக கிராமங்கள் கோவில்கள் எல்லாம் பாழடைந்து இருந்தமையால் 1757-ல் அவுரங்கஜீப் ஆட்சியில் பாழ்படுத்தியதும், பிரென்சுக்காரர்களால் இடித்து நாசம் செய்யப்பட்டவைகளையும் ஜீரண உத்தாரணம் செய்து மான்யாதிகள் ஏற்படுத்தியும் பூஜை உத்ஸவாதிகள் யுக்தப்படி நடந்து வர ஏற்பாடு செய்தும், சாசனங்களில் வரைந்துள்ள பட்டியல்களின் விபரங்கள்.

நெ.	கிராமங்கள்	தேவாலயங்கள்	அர்ச்சகர்	மான்யங்கள்	லோகல் ரிகார்டு
1	அன்னவரம்	கோபாலஸ்வாமி	ரத்ஞகரம் பாபாச்சாரியர்	குயு இஞும்	வால்யம் 3
2	தாள்லூறு	மல்லேஸ்வர ஸ்வாமி	ரெம்பிசர்	கு 4 ,,	3—57
3	ஷை	ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி	லசீதாராமுகு	கு 4 ,,	,,
4	தக்கெள்ளபாடு	விஸ்வேஸ்பர ஆலயம்	மோடுபல்லி அம்மய்ய	கு 4 ,,	,,
5	குடிபூடி	சோமேஸ்வராலயம்	,,	கு 2 ,,	7 × 5
6	ஷை	சென்னகேசவாலயம்	,,	கு 2 ,,	,,
7	வேலூறு	கேசவஸ்வாமி	,,	கு 2 ,,	,,
8	ஷை	வீரபத்ராலயம்	,,	கு 2 ,,	,,
9	வொணுகுபாடு	ஆஞ்சநேயராலயம்	பெரம்பூர் கேசவாச்சாரி	கு 4 ,,	
10	முனுகோடிபுரம்	பிராம்ஹண அக்ரஹாரம் பசலி 1212	விருபாக்ஷ சாஸ்திரி	கு 3 ,,	12
11	பேதவோலு	ஸ்ரீ ரங்க நாயகர்	பசலி 1209	கு 1 ,,	,,
12	,,	சந்தரமௌளி	,,	,,	,,
13	,,	நாகேஸ்வரர்	பஜீந்தரலகு	,,	,,
14	,,	ரங்கநாத ஸ்வாமி	—	—	1207—12
15	ஜக்கன்னபேட்ட	ரங்கநாயக ஸ்வாமி	ஸ்வாமிகி	கு 4 ,,	,,
16	,,	,,	வைஷ்ணவர்	கு 4 ,,	1208—12

நெ.	கிராமங்கள்	தேவாலயங்கள்	அர்ச்சகர்	மான்யங்கள்	லோகல் ரிகார்டு
17	,,	ரங்கநாயக ஸ்வாமி	பனிசாரகர்	கு 1 இனும்	1208—12
18	,,	பிராம்ஹண இனும்	மிசுபாடிராவ்	கு 4 ,,	,,
19	,,	,,	,,	கு 4 ,,	,,
20	சந்தாமௌளிஸ்	சந்தரமௌளிஸ்வாமி	சங்கீதவவையரா	கு 1—4 ,,	1213—12
21	,,	பிராம்ஹண இனும்	சிந்தபல்லி உத்தரேசர்	கு 4 ,,	,,
22	பேதவோலு	ரங்கநாயகர்	வண்ணுருக்கு	கு 1 ,,	,,
23	சேர்மகமது பேட்டை	சென்னகேசவஸ்வாமி	தேவுனி	—	1220—12
24	,,	மல்லேஸ்வரர்	,,	—	1221—12
25	தாவுலூர்	அக்ரஹாரம்	தாடேபல்லி லிங்கன்ன சாஸ்திரி	கு 1 ,,	1784—12
26	சேப்ரோலு	கேசவஸ்வாமி	சுக்ல & பிரதிஷ்டை	கு 1 ,,	1784—14
27	,,	சஹஸ்ரலங்கேஸ்வரர்	,,	,,	,,
28	,,	சந்தரமௌளி	,,	,,	,,
29	,,	ஸ்ரீ ரங்கநாதர்	,,	,,	,,
30	,,	வேணுகோபாலர்	,,	கு 1 ,,	,,
31	,,	திரிபுரசுந்தரி	,,	கு 1 ,,	,,
32	,,	பீமேஸ்வரர்	,,	கு 1 ,,	,,

நெ.	கிராமங்கள்	தேவாலயங்கள்	அர்ச்சகர்	மான்யங்கள்	லோகல் ரிகார்டு
33	சேப்ரோலு	வீரபத்திரர்	,,	கு 4 ,,	1784—14
34	,,	நகேஸ்வரர்	ஸ்தானீகர் தாசிகள்	வகையராவுக்கு கு 5 1	,,
35	,,	ஸ்ரீ ரங்கநாதர்	—	,,	,,
36	பேரூர்	கேசவஸ்வாமி	ஆனந்த வருஷம்	கு 1	,,
37	,,	வீரபத்ரஸ்வாமி	—	—	— 468
38	லக்கராஜ பட்டணம்	பட்டாபிராமர்	—	—	— 504
39	முத்திரேலபுரம்	ராஜமௌளீஸ்வர ஸ்வாமி	—	—	— ,,
40	,,	திவிரத்தினமாரி	—	—	— ,,
41	,,	ராஜகோபலஸ்வாமி	—	—	— ,,
42	,,	ஸ்ரீ ரங்கநாதர்	—	—	— 56
43	மல்லாதி அக்ரஹாரம்	கண்டி சுப்ரமணிய ஸ்வாமி	சுப்பராயர்	—	— ,,
44	தாள்லூறு	ஆஞ்சநேயர்	ரங்காராவ்	கு 1	— ,,
45	அத்தலூறு	சோமேஸ்வரர்	—	,,	— ,,
46	துர்லபாடு	பாண்டுலிங்கர்	—	,,	— ,,
47	,,	சென்னகேசவஸ்வாமி	—	,,	— ,,
48	அன்னவரம்	வேணுகோபால ஸ்வாமி	ராஜகோபால ஆச்சாரியர்	,,	— ,,
49	தாள்லூறு	வீரபத்தரர்	—	கு 4	— ,,

நெ.	கிராமங்கள்	தேவாலயங்கள்	அர்ச்சகர்	மான்யங்கள்	லோகல் ரிகார்டு
50	கூசிபூடி	ராமலிங்கஸ்வாமி	ராஜகோபால ஆச்சாரியர்	கு 2	— 56
51	,,	வேணுகோபால ஸ்வாமி	—	கு 2	— ,,
52	நாராகோடூர்	ராமநாதர் ஸ்வாமி	—	கு 1	— ,,
53	வேமூறு	அக்ரஹாரம்	—	கு 1	— ,,
54	,,	ரங்கநாதர்	—	கு 1	— ,,
55	அம்படிபூடி	அக்ரஹாரம்	—	—	— 57
56	மாதிபாடி	,,	—	—	— ,,
57	பொம்மராஜு பல்லெ	,,	—	—	— ,,
58	வைகுண்டபுரம்	பிராம்றைநக்த	சேசபட்டர் ரங்காச்சாரி	—	— ,,
59	,,	ஸ்ரீ வெங்கடேசர்	துபாடி வெங்கடாச்சாரி	—	— ,,
60	,,	கோவிந்தராஜர்	—	—	— ,,

திருவ திருப்பதி என்று நாமம் இட்டுள்ளார்.

96) ஸ்ரீ ராஜாவாசிரெட்டி ஜகந்நாதபாபு, ராமநாத பாபுலு, சிந்தபல்லி சமஸ்தானத்தின் கடைசி விஷயங்கள் கிறிஸ்து சகம் 1816-வருஷம் வெங்கடாத்ரி பிரபு மரணமடைந்த பின்னர் இவர்களிருவரும் சிந்தபல்லிசமஸ்தானாதிபதிகளாயினர். ஆயினும் பாகப்பிரிவின்படி நடந்து கொள்ளாமல் தகாதா ஏற்பட்டு வியாஜ்ஜியம் நடந்து வருகையில், ஜகந்நாத பாபுவுக்கு சந்தானமில்லாத காரணத்தால் இவருடைய பட்ட மஹிஷிகள் ரங்கம்ம, அச்சம்ம என்றவர்களில், ரங்கம்மாள் சானலக்ஷ்மீபதி என்றவரை தத்தாக எடுத்துக்கொண்டனள். ராமநாதபாபுவுக்கு தாசரதீ நாயுடு, சிவப்ரசாத நாயுடு, என்ற (2) குமாரர்கள் தோன்றினர். சகோதரர்களாகிய ஜகந்நாத பாபுவுக்கும், ராமநாத பாபுவுக்கும் தகராறு ஏற்பட்டதால் அது வரை வெங்கடாத்ரி பிரபுவுனிடத்தில் மந்திரியாக இருந்த சப்னிவீசு அந்தனபந்துலு ஜகந்நாதபாபு பக்ஷத்திலும், பொத்தூர் காளிதாஸ் என்றவர் ராமநாதபாபு பக்ஷத்திலும் சேர்ந்து கொண்டு காரியங்களை நடத்தி வந்தனர்.

வெங்கடாத்ரி பிரபு இறந்துபோன காலமுதல் கஜானாவிலுள்ள 50 லக்ஷ திரவியங்கள் எல்லாவற்றையும் ஜகந்நாத பாபு பெற்றுக்கொண்டனரே ஒழிய அது என்னவாயிற்று என்று தெரியவில்லை.

இந்த விவகார மத்தியில் சமஸ்தான பாலனத்தைக் குறித்து எந்தவிதமான கணக்கு வழக்குகளையும் கவனிக்கவில்லை. வியாஜ்யத்திற்கு கோர்ட்டில் உள்ள அதிகார சிப்பந்திகளுக்கும் லஞ்சலாவணம் கொடுத்தும், மந்திர தந்திர பூஜைகளின் சிலவுகளுக்கும், சரித்திரங்களில் பிரசுரிக்க வேண்டிய சிலவுகளுக்கும் ரூ. 1,50,000 ($1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்) சிலவாயினதென்றும் கிறிஸ்து சகம் 1818 வருஷம் இந்த வியாஜ்ய விவகாரங்கள் நடந்து வருகையில் அமராவதி பட்டினத்தில் வெங்கடாத்ரி பிரபு கட்டிவைத்த பவனத்தின் மீது சித்தரிக்கப்பட்ட தாம்பர ரேகுகளை விற்க ஏற்பாடாயின கிறிஸ்து சகம் 1821-ம் வருஷம் ஜகந்நாதபாபு திவிசீமையில் பொப்பர்லங்க, மோபிதேவிலங்க, சிறுவோலுலங்க, மெரகம் பல்லிலங்க, மேடமர்திலங்க, பிட்டல்லங்க, முதலானவைகள்

கொத்தபல்லி அப்பய்ய என்றவருக்கு தானகவே கொடுத்துள்ளதாக ஆதாரங்கள் கிடைத்துள்ளன. (1) 1825-ல் ஜகந்நாத பாபு இறந்து போனர்.

கிறிஸ்து சகம் 1827-ம் வருஷம் ப்ரோவின்சியல் கோர்ட்டார் ஜகந்நாத பாபுவின் மரணத்தமாக இவர் பார்யையாகிய ரங்கம்மாள் பெற்ற லக்ஷ்மீபதியாகிய வளர்ப்பு புத்திரனை ரத்து செய்து தீர்ப்பு கூறினர். பின்னர் கிறிஸ்து சகம் 1832-ம் வருஷம் சாதர்கோர்ட்டார் பைசல் தீர்ப்பு செய்து சானலக்ஷ்மீபதி, ஜெகந்நாத பாபு தத்துப் புத்திரர் அல்லவென்று. ராமநாத பாபு வெங்கடாத்ரி நாயுடுவுக்கு 2-வது தத்து புத்திரனே என்றும். இவர்கள் இருவரும் அவிபக்த சகோதரர் என்றும், அச்சம்ம, ரங்கம்ம இவர்களிருவரும் மனோவிர்த்திதாரர் என்று நிர்ணயம் செய்தும். இந்த வருஷத்தில் ஏற்பட்ட துர்பிக்ஷத்தினலும், இந்த வியாஜ்யம் மத்தியில் இருப்பதாலும் மேலதிகாரிகள் யாவராயினும் சர்க்காருக்கு செலுத்த வேண்டிய பேஷ்கஸ் தொகையைச் செலுத்தாமல் இருந்தபடியால், இந்த சமஸ்தானம் எல்லாம் சர்க்கார் ஏலத்தில் விட்டு நிலுவை பாக்கிக்கு விக்கிரயம் செய்து விட்டனர்.

இதற்குள் சாதர்கோர்ட்டு தீர்ப்பின் மேல், பிரிவீ கௌன்சில் கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டன. இதில் கோர்ட்டார் வெங்கடாத்ரி பிரபுவு இரண்டாவதாக எடுத்த தத்து புத்திரனுக்கு சட்டப்படி சுதந்திரம் இல்லை என்று அப்பீலைத் தள்ளுபடி செய்து, ஜகந்நாத பாபுவின் பார்யையாகிய ரங்கமாம்ப செய்துகொண்ட சானலக்ஷ்மீபதியை தத்து புத்திரனக எடுத்தது சட்டரீதிக்கு தகுந்தது என்று தீர்ப்பு செய்தனர். ஆயினும் அப்போதைக்கு சமஸ்தானத்தைச் சேர்ந்தவை எல்லாம் சர்க்கார் வசம் சேர்ந்து போயின. தத்வம்சத்தினருக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் (1000--00) அலவன்சு கொடுத்து வந்தனர். பிரிவீ கௌன்சில் உத்திரவுப்படி மதராஸ் கவர்ன்மெண்டார் நடந்து கொண்டனர்.

கிறிஸ்து சகம் 1844-ம் வருஷம் ஜெகந்நாதபாபு பார்யை ஆகிய அச்சம்மாள் சிந்த்தபல்லியில் தேவாலயத்திற்கு கல்யாண பண்டபம் கட்டி வைத்து சாசனம் எழுதி வைத்துள்ளார். சாலிவாகன நெ. (185—17) சக வருஷம் 1765-ல் ஸ்ரீ வெங்கடேஸ்வர, ராமலிங்க விஸ்வேஸ்வர தேவாலயங்களுக்கு கோபுராதிகளைச் செப்பனிட்டு பிரதிஷ்டை செய்துள்ளனர். சாசன நெ. (186—17). 1859-ம் வருஷம் ராமநாதபாபு இறந்து போயினர். இவர் குமாரர்கள் தாசரதி நாயுடு, சிவப்ரசாத நாயுடுவுக்கும் தன் மனைவிக்கும் மாதம் ரூ. 300—00 அலவன்சு சர்க்கார் கொடுத்துவந்தனர். சானலக்ஷிமீபதி நாயுடு, வாசிரெட்டி லக்ஷிமீபதி நாயுடு என்று பிரசித்தியாகி, சிறுமாமிள்ள சூரநரபாலனுடைய புத்திரி வெங்கடலக்ஷுமாம்பையை விவாகம் செய்து கொண்டு கொஞ்ச காலத்தில் இறந்துவிடவே இவருக்கு சந்ததியில்லாததால், இவர் மரண காலத்திலிவர் அனுமதியின் பேரில் இவர் பார்யையாகிய லக்ஷுமாம்ப வெங்கடாத்ரி என்ற ஆண் புத்திரனை தத்தாக எடுத்துக்கொண்டனள்.

இவர் கொஞ்ச காலத்தில் மரணமடைந்துவிட்டதினால், இவருடைய வம்சத்தினர் இன்றைக்கும் ஜமீன்தார் அலவன்சு பெற்று வருகின்றனர். இப்பொழுது இவர் வம்சத்திற்கு தத்துபுத்திரனாக வந்த ஹரிஹர பிரசாத் நாயுடு பக்தர் அவர்களே ஜமீன்தார் அலவன்சு ரூ. 1000-த்தை சர்க்காரிடம் பெற்றுக்கொண்டு புராதன சிந்த்தபல்லி சமஸ்தான வம்ச புருஷராகப் பெயர் பெற்றனர்.

இனி ராமநாதபாபுவின் புத்திரனாகிய தாசரதீ நாயுடுவுக்கு 2-வது ராமநாத பாபு என்ற குமாரன் பிறந்து தேவரகோட்டை சமஸ்தானபதியாகிய ஸ்ரீயேர்லகட்ட மல்லிகார்ஜுன பிரபுவின் புத்திரியாகிய ராஜ்யலக்ஷிமியை விவாகம் செய்துகொண்டு வெங்கடாத்ரி நாயுடு என்ற குமாரனைப் பெற்றும், இந்த வம்சத்தினர் கூட சர்க்காரிடம் அலவன்சு பெற்று வருகின்றனர்.

ராமநாத பாபு 2-வது புத்திரனாகிய சிவப்ரசாத் நாயுடு தேவரகோட்டை சமஸ்தான பிரபுவாகிய அங்க்கிநீடுகாரின்

புத்திரியாகிய க்ஞானபிரசூநாம்ப என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டனர். இவர் குமாரராகிய ஸ்ரீ நாதபிரசாதுக்குங்கூட இப்பொழுது இராஜலாம்பனம் என்ற அலவன்சு சர்க்காரால் வழங்கப்பட்டு வருகின்றன. ராமநாத பாபுவின் மற்றொரு குமாரனாகிய பாலசந்திரசேகர பிரசாது கார் இப்பொழுது அமராவதி பிரபுவு என்ற பட்டப் பெயருடன் சர்க்காரிடமிருந்து அலவன்சு பெற்று வருகின்றனர்.

கொண்டவீடு சீமையில் இந்த சிந்தபல்லி கோட்டை சமஸ்தானம் (2) சகாப்தத்திற்கு மேலவாசிரெட்டி பிரபுக்களின் பரிபாலனத்திலிருந்து கடைசியில் ஏற்பட்ட கலகங்களின் காரணமாக சிதைந்துபோய் விட்டனவாயினும் இந்த வம்சத்தினர் அநேக கிராமங்களில் பிரபலமாகச் செந்தாமரைப் புஷ்பம் போல பிரகாசித்து வருவதாக வம்ச சரித்திரம் கூறுகின்றன.

97) வாசிரெட்டி நாயடம்ம, இவர் 18-வது சகாப்த காலத்தில் வாசிரெட்டி வம்ச வீரர்களில் ஒருவராவார். கிறிஸ்து சகம் 1640-ம் வருஷம் தாடிகொண்ட பிரதேசத்தில் சௌதரி பட்டம் பெற்று வந்த வாசிரெட்டி லிங்கநீடுவைக் குறித்து 2-வது பாகத்தில் தெரிவித்துள்ளோம். அவருக்கு வீரராகவ, சதாசிவ, அக்கய்ய என்ற குமாரர்களிருந்தனர். அதில் சதாசிவருக்கு வெங்கன்ன, நாராயணப்ப, லிங்கன்ன, என்ற 3 பேர் புத்திரர் பிறந்தனர், இதில் நாராயணப்ப என்றவருக்கு, லிங்கிநீடு, நாரசிம்ஹம், வெங்கன்ன, பாபன்ன என்ற 4 பேர் புத்திரர் பிறந்து வளர்ந்தனர். இதில் வெங்கன்னவுக்கு திருபதி அய்யன் முதல் 4 புத்திரர் தோன்றினர். இந்த திருபதி அய்யனுக்கு நாகைய்யன் முதல் 6 புத்திரர் தோன்றினர். இவர்களில் லிங்கநீடுவுக்கு மாதய்ய, நாயடம்ம என்றவர் பிறந்து பெயர் பெற்றனர். இதில் நாயடம்ம மிக்க வீர புருஷராகப் பிரசித்தி பெற்றவராவார். இவரைக் குறித்து வம்ச சரித்திரம் பிரபலமாக வர்ணித்திருக்கின்றன.

இவரும் பல சத்ஜங்கு நவாபும் சம காலத்தவரென்று காணப்படுகின்றன. இந்த பலசத்ஜங்குவின் சேனைகள் சிந்த்தபல்லி சமஸ்தானத்தை ஜக்கபூபாலனுடைய மரண காலத்திற்குப் பின்னர் சுவாதீனம் செய்துகொண்ட காலத்தில் இவர் தன்னுடைய காரியமே கண்ணுக பாவித்துக் கொண்டு வந்தார் என்று இவரைப் புகழ்ந்து சிந்த்தபல்லியில் ஒரு சரித்திரம் ஸ்தாபனம் செய்துள்ளதாக லோகல் ரிகார்டு வால்யம் (279) 34—35-ல் காணப்படுகின்றன.

98) செருகூர் சமஸ்தானம், ஸ்ரீ ராஜாவாசிரெட்டி சூடாமாணிக்க பிரசாதராவு நாயடு பஹதர், வாசிரெட்டி திரிபுரசுந்தரம்ம பஹதர் ஜமீன்தாரிணி, செருகூர் கிராமம் ஆதியிலிருந்து சுண்டி சமஸ்தானத்தில் சேர்ந்திருந்தன். 1903-ஷ இதை தேவரகோட்டை சமஸ்தானதிபதியாகிய ஸ்ரீ ராஜா யேர்லகட்ட மல்லிகார்ஜுன நாயுடு பஹதர் தன் வசம் சேர்த்து தன் புத்திரியாகிய திரிபுரசுந்தரம்ம பஹதருக்குக் கொடுத்துள்ளனர். இவர் ஸ்ரீ ராஜா வாசிரெட்டி சூடாமாணிக்க பிரசாதரா்வ் பஹதரின் மனைவி ஆவார். இந்தத் தம்பதிகள் பந்தரில் உள்ள சூரேபல்லியில் வாசம் செய்து வந்தனர். இந்தக் கிராமம் ஆதியில் கிறிஸ்து சகம் 1830-ஸு பசலி 1340-ல் சர்வே செய்யப்பட்டது. இதில் மைனர் இனம்கள் ஏ. 2152 வரையுண்டு. பண்டங்கள் மேய்வதற்காக விட்ட குரைபூமிகள் ஏ. 2140, நஞ்சைபூமி ஏ. 200, பசலி 1344-ல் கணக்குப்படி வருவாய் தொகை ரூ. 9328—00, கிஸ்து வசூல் தொகை ரூ. 8741—00 ஆகிறதென்று சர்க்கார் கணக்கு தெரிவிக்கின்றன.

வாசிரெட்டி சூடாமாணிக்ய பிரசாத்ராவ் வெங்கடாத்ரிப்ரபுவின் ஜேஷ்ட குமாரனுடைய புத்திரனாகிய ஜகந்நாத பாபுவுக்கு உடன் பிறந்த பத்மநாப ராமன்னனுக்கு பிரபௌத்ரர் ஆவார். இவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 130—00 அலவன்சு பூர்வ ஜமீன்களின் கீழாக சர்க்கார் கொடுத்து வருகின்றனர். இவர் குமாரத்தி ஆகிய கனகராஜேஸ்வரியைக் கபிலேஸ்வர சமஸ்தான குமார ராஜவாகிய ஸ்ரீபலுசுப்ரபாகர பட்டாபிராமராவு B.A., B.L. அவர்கள் பாணிக்ரஹணம் செய்துகொண்டனர்.

மாணிக்ய பிரசாதராவ் இப்பொழுது ஊந்தரில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரஸ்வாமி தேவாலயத்திற்கு மானேஜராக கவர்ன்மெண்ட்டார் நியமித்துள்ளனர். இவர் காலத்தில் ஒரு கோபுர நிர்மாணத்தை நிறைவேற்றி வைத்துள்ளார். இதன் மீது சதசிற்பி தூதலபாடி நரசிம்ஹ சௌதரிகாரால் சிற்பங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவர் ஜனக தந்தை ஆகிய வாசிரெட்டி வெங்கைய என்பவர் மங்களகிரியில் ஒரு பெரிய குளத்தை வெட்டி கரை கட்ட அநேகப் பொருள் கொடுத்தும் நூதக்கியில் உள்ள சக்தீஸ்வர தேவாலயத்திற்குச் சில வாகனங்களைச் செய்வித்தும் சப்த ஆஹம் என்ற பிரமாணப்படி 7 தினங்கள் வரிசையாக பிராமணர் மூலியமாக நடத்திவைத்துப் பிரசித்தி பெற்றனர்.

(3-ம் பாகம்)

6-வது பிரகறனம்.

99) ஏர்லகட்ட தேவரகோட்டை சமஸ்தானம், கிருஷ்ணபுரம் பெதவேகி சமஸ்தானம், தேவரகோட்டை சமஸ்தானம் என்ற சல்லபல்லி சமஸ்தானம் நம்மவாரில் ஏர்லகட்ட வம்சத்தினராகியவருக்குச் சேர்ந்துள்ளன. இதில் இப்பொழுது 66 கஸ்பா கிராமங்கள், 20 அக்ரஹாரங்கள், பாளையபட்டு கிராமங்கள் 30 ஆக மொத்தம் கலந்து 116 கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஜமீன் கிராமங்கள் சுமார் 190 சதுர மைல் விஸ்தீரணமும், 17000 ஜனசங்கியை உள்ளதும் 300000 ரூபாய் மூன்று லக்ஷம் வருமானம் உள்ளதுமாகிய பிரதேசம். இந்த சமஸ்தானத்தில் புராதன ஆந்தர காருளேஸ்வரஸ்வாமி கோவில் இருக்கின்றன. இதனால் ஆந்தரதேச மத்தியில் இந்த சமஸ்தானம் உண்டானதாக காணப்படுகின்றன. இந்த ஸ்வாமியை கிருஷ்ண தேவராயர் தரிசித்து சில பூமிகளை மானியமாகக் கொடுத்துள்ளனர் என்பது கல்வெட்டுகளில் காணப்படுகின்றன: இந்த சமஸ்தானத்துடன் கிருஷ்ணபுறம், சினவேகி, பெதவேகி சமஸ்தானங்கள் கலந்து சேர்ந்துவிட்டதாக காணப்படுகின்றன.

100) ஏர்லகட்ட கங்கிநீடு, கஞ்ச்சிநீடுகள், இந்த தேவரகோட்டை சமஸ்தானத்தை ஏர்லகட்ட திருமலநீடு கிறிஸ்து சகம் 1665-ம் வருஷம் வரைப் பரிபாலித்து வந்த கோல்கொண்ட நவாபு அப்துல்லா குதுஷ்பாவுக்குப் பிரதிநிதியாகயிருந்ததாக 2-வது பாகத்தில் கூறப்பட்டுள்ளன. அவருக்கு சந்தானம் இல்லாததால் இவர் சகோதரனுகிய கங்கிநீடு கிறிஸ்து சகம் 1666-ம் வருஷம் பரிபாலனத்திற்கு வந்தனர். இந்த கங்கிநீடு கிறிஸ்து சகம் 1682-ம் வருஷம் வரை சமஸ்தானபதியாக இருந்து பரிபாலித்து வந்தார். இவர் ஆபூஹுஸு என்ற கோல்கொண்ட நவாப் தானீஷாவிடமிருந்து மற்றும் சில ஜமீன்களைப் பெற்றனர்.

கங்கிநீடு பின்னர், ஜமீன்கள் பரிபாலித்து வந்தவைகளை இவர் தம்பியாகிய கஞ்சிநீடு மிக்க தர்ம சிந்தையுள்ளவர் ஆவார் என்றும் இவர் பரிபாலனத்திலிருந்த பிரஜைகளுக்கு வேண்டிய செளகரியங்கள் செய்தும் வந்தனர். இவருடைய சரித்திரத்தை கம்மவீரர்களின் நட்சத்திர மாலிகாசாடு பத்தியங்களில் பாடியுள்ளனர். இவர் கிறிஸ்து சகம் 1695-ம் வருஷம் வரை சமஸ்தான பரிபாலகராக இருந்து சுவர்க்கம் அடைந்துவிட்டனர். இவருடைய காலத்தில் அவுரங்கஜீபு கோல்கொண்ட நவாபு தானீஷாவை ஜயித்து கோல்கொண்ட பிரதேசத்தைக் கவர்ந்து சுவாதீனம் செய்து கொண்டனர். அதனுலிந்த ஜமீன்கள் சிலரும் அவுரங்கஜீபுக்கு உள்ளாகச் சேர்ந்து போயினர். கஞ்சிநீடுவுக்கு 5 பேர் புத்திரர்கள் இருந்தனர். பாபிநீடு, நாகிநீடு, ராமநீடு, கங்கிநீடு, வீரபநீடு என்றவர்கள், இதில் முதல்வர் மூவரும் இவருக்குப்பின் சில மாதங்கள் வரை வரிசையாக கிறிஸ்து சகம் (1696—1697)-ம் வருஷம் ராஜ்ய பாலனம் நடத்தி வந்தனர். இதில் சாகிநீடு டோக்லகு கானுவிடம் வருஷா வருஷம் ரூபாய் ஒரு லட்சம் கப்பம் செலுத்தி வந்தனர்.

101) ஏர்லகட்ட கங்கிநீடு 2, இவர் ஏர்லகட்ட, கஞ்சிநீடு, 4-வது புத்திரனுவார். இவர் தேவரகோட்டை சமஸ்தான பாலகனுக கிறிஸ்து சகம் 1699-ம் வருஷம் வந்தார். இவர் இந்த வருஷத்தில் டில்லி சக்கரவர்த்தியாகிய அவுரங்கஜீபிடம் பெற்ருர். இவருக்கு நாகபூபதி, அங்கபூபதி

என்ற 2 குமாரர்கள் இருந்தனர், இந்த சுங்கிநீடு கிறிஸ்து சகம் 1708-ம் வருஷம் சுவர்க்கம் அடைந்து விட்டனர். பின்னர் இவர் ஜேஷ்ட குமாரனாகிய நாகன்ன நாயுடு சமஸ்தானபதியாக வந்தும் துரதிர்ஷ்ட வசமாக சித்த சுவாதீனமாறுதலால் இவர் தம்பியாகிய அங்கிநீடு ராஜ்யாதிபதி ஆயினன். இவர் கிறிஸ்து சகம் 1710-ம் வருஷம் சமஸ்தான பாலகனாக வந்து 1723-ம் வருஷம் வரை பரிபாலித்து வந்தார். இவர் காலத்தில் கோல்கொண்டா அவுரங்கஜீபு சக்கரவர்த்தியிடம் குமர்தீன் பாதுஷா என்றவர் சுபேதாராக இருந்தார். இந்த அங்கிநீடு அவருக்கு கப்பம் செலுத்தி வந்தார். இவருக்கு வெங்கடராமன்ன, ஹனுமன்ன, நாகன்ன, கோதண்டராமன் என்ற 4 நாபாலர்கள் தோன்றினர். இவர்களும் வரிசையாக ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தனர். கிறிஸ்து சகம் 1760-ஸ் மகமதியர் சில பிரதேசங்களைப் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்தும், மற்ற பகுதியை ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கு கிறிஸ்து சகம் 1779-ஸ் கொடுத்துவிட்டனர். வல்லூரு, சீருரு முதலான லங்கப் பிரதேசங்களையும் இவர் கம்பெனியாரிடம் பெற்று கிறிஸ்து சகம் 1787-ஸ் சில பிரதேசங்களில் வசதியாக குளங்கள், கால்வாய்களை வெட்டி விவசாயத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து, பிரஜைகளுக்குள் ஒற்றுமை சீர்குலையாமல் பாதுகாத்து வந்தனர். கனேபல்லி, ஸ்ரீகாகுளம் முதலான கிராமங்களில் தேவாலயங்களைக் கட்டியும், ஸ்ரீகாகுளேஸ்வர தேவாலயங்கள் பிரதிஷ்டை செய்வித்தும், மான்யாதிகள் வழங்கியும் வந்தனர். அதுசமயம் மகமதியர் பொறுமை கொண்டு அநேக இடைஞ்சல்கள் செய்துவர, இந்த கம்பெனியாரின் சகாயத்தால் ஜெயம் பெற்று சல்லபல்லி கோட்டையை சுவாதீனம் செய்துகொண்டும் ராஜகாரியங்களை நடத்தி வந்தனர். ஆயினும் மகமதியர்களால் இந்த சமஸ்தானத்திற்கு அடிக்கடி அபாயம் ஏற்பட்டு வந்தன. கள்ளேபல்லி கிராமத்தில் நாகேஸ்வராலயத்தை பாழ்படுத்தியும், ஸ்ரீகாகுளபட்டணத்தில் சிகாகோல் ரோட்டிற்கு 9 மைலுக்குக் கிழக்கில் ராஜாக்களுடைய ராஜதானி இருந்தது அங்கே மகமதியர்களில் ஒரு நவாபு அநேக ஜனங்களுடைய

தலைகளை வெட்டி, அம்மண்டை ஓடுகளால் கட்டப்பட்ட மதிலுடைய கோட்டை ஒன்றும், சேர்மகமதுகான் கட்டிய மஸ்ஜீதும் இருக்கின்றன. இந்தக்கோட்டைக்கு 2 மைல் தூரத்தில் சூரியநாராயணமூர்த்தி கோயிலும், 10-வது மைலில் கூர்ம க்ஷேத்திரமும் இருக்கின்றன.

102) ஏர்லகட்ட 2-வது வெங்கடராம நரபாலன், இவர் கோதண்டராம பூபாலனுடைய மூத்தகுமாரனுகியவர் கிறிஸ்து சகம் 1791-வருஷம் சமஸ்தான பாலகனுக வந்தும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் அதை மாற்றி அவர்கள் வசம் செய்துகொண்டு, இவருக்கு மாதம் ஒன்றுக்கு 100-வராஹன் கொடுத்து வந்தனர். சமஸ்தானத்தை வெங்கடராமநரபாலனுக்கு வசப்படுத்திவிட்டனர். இவருக்கு ஆண் சந்ததி இல்லாததால் கிறிஸ்து சகம் 1792-வருஷத்தில் நாகேஸ்வர ராவின் குமாரனுகிய அங்கிநீடுவை தத்தாகப் பெற்று அந்த வருஷமே இறந்து போயினர். பின்னர் தத்துப் புத்திரனுகிய அங்கிநீடு ராஜாதிகாரராக வரவேண்டியிருக்க, இவருடைய தந்தையே குலாசாரப்படி ராஜாவாகி பரிபாலனம் நடத்தி வந்தனர். ஆயினும் கம்பெனியார் இதை அங்கீகரிக்காமல், இவரை நீக்கிவிட்டு தத்தனுக்கே ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்துவைத்தனர்.

103) ஸ்ரீமந்துராஜா ஏர்லகட்ட அங்கிநீடுபஹதூர், இவர் தேவரகோட்டை சமஸ்தான பாலனத்தை கிறிஸ்து சகம் 1798-ஞ ஏற்றுக்கொண்டு சல்லபல்லி கோட்டையில் ஒரு சௌதரி ராஜ்யத்தை ஏற்படுத்தி அதற்கு 1,32,000 ரூ. செலவு செய்து, சிவகங்கையில் இவர் ஒரு தேவாலயத்தைக் கட்டி மஹிஷாசுரவர்தினி என்ற தேவதையைப் பிரதிஷ்டை செய்துவைத்தும், அர்ச்சக பரிசாரர்களுக்கு அக்ரஹாரத்தை நிர்மாணித்துக்கொடுத்து பேர் பெற்றனர். காசி முதலான புண்ணியக்ஷேத்திர யாத்திரை செய்து சாதுக்களிடம் நல்லாசி பெற்று வந்தனர். இவருடைய காலத்தில் பிரஜைகளுக்கு சகலவிதமான உதவியும் செய்து வந்தும், அநேக தென்னந்தோப்புகளை உண்டாக்கியும், விவசாயிகளுக்குப் புகையிலை சாகுபடிக்கு வேண்டியவற்றை உதவியும் செய்து வந்தனர். தவிர பசு மந்தைகள் மேய்வதற்கு வேண்டிய

பூமிகளை விட்டும், கரும்பு, நெல் முதலான சாகுபடியில் ஈடுபட்டும், கோவில், குளங்கள், கால்வாய்கள், மொறுகள், சத்திரங்கள், பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், சிற்பசாலைகள் முதலானவற்றையும் நிர்மாணித்து வந்தனர். பின்னும் இவர் சல்லபல்லியில் கள்ளேபல்லி முதலான பிரதேசங்களில் நூதனமாக வீடுகள் கட்டிக்கொடுத்தும், சல்லபல்லிக்கோட்டைக்கு நான்கு புறத்திலும் கருங்கல் மதில் கட்டி, கோபுர வாயில்கள் விட்டு மிக்க பாதுகாப்பாகவும் வைத்துவந்தார். தவிர அங்கு சமஸ்கிருத பாடசாலையை நிர்மாணித்து, அங்கு படிப்பவர் களுக்கு இலவசமாகிய சௌகரியங்களுக்கு வேண்டிய திரவியத்தை மானியமாக வழங்கியுள்ளார்.

இவர் பண்டிதர்களுக்கு வேண்டிய உபகாராதிகள் செய்துவந்தனர். தவிர சிவகங்கை, கள்ளேபல்லி, ஸ்ரீகாகுளம் முதலான கிராமங்களிலுள்ள தேவாலய உத்சவாதிகளையும் நடத்திவந்தார். இக்காரியங்களில் பிரவேசித்து சமஸ்தான வரும்படியும் கட்டுபடியாகாமல் 2 இலக்ஷம் ரூபாய்கடனும் ஆயினதால் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகையைச் செலுத்த முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த விஷயத்தை இவருடைய நண்பர்கள் சிலர் உதவி செய்து சமஸ்தானத்தை பாதுகாத்து வந்தனர். இவருக்கு மல்லிகார்ஜுன பிரசாத் நாயடு, துர்க்கா பிரசாத் நாயடு, வெங்கடராமலிங்க பிரசாத் நாயடு என்ற குமாரர் 3 பேர் இருந்தனர். இவர் கிறிஸ்து சகம் 1875-ஹு காலமாகி விட்டனர். கிறிஸ்து சகம் 1850-வருஷம் சர்க்காரால் இந்த சமஸ்தானத்தை நிர்ணயம் செய்தனர். அதன்படி அமலில் இருந்து வந்தன. இவருக்குப் பின்னர் இவர் குமாரர்கள் இராஜ காரியங்களை நடத்தி வந்தனர்.

104) ராஜா யேர்லகட்ட மல்லிகார்ஜுன பிரசாத நாயடு பஹதர், 7-வது அங்கிநீடுவின் மூத்த குமாரராகிய இந்த நரபாலன் கிறிஸ்து சகம் 1876-ஹு தேவரகோட்டை சமஸ்தான பாலகராகினர். இவர் சகோதரர்கள் துர்க்கா பிரசாத் நாயடு, வெங்கடராமலிங்க நாயடு சேர்ந்து

கொண்டு சமஸ்தானத்தைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்று தகாதா செய்து கோர்ட்டில் வியாஜ்யம் நடத்தினர். கோர்ட்டார் விசாரித்து நீதிமுறைப்படி அவிபக்த குடும்பம் ஆதலால் மாதம் ஒன்றுக்கு ரூ. 750—00 பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, ராஜ்ய பாகம் கிடையாதென்று தீர்மானம் செய்து இவர்களுடைய வியாஜ்யத்தை தள்ளுபடி செய்தனர். இந்தச் சமஸ்தானம் 1890-வருஷத்தில் சர்க்காரால் சர்வே செய்யப்பட்டு. இவர் ஆட்சியிலிருந்த ரைதுகளுக்கு கந்தாயம் வரிவட்டங்களை உயர்த்திவிட்டனர். இந்த மஹாராஜா ஆந்தர, கிர்வாண பாஷைகளில் மிக்க ஆவல் கொண்டு பண்டிதர்கள் மூலமாக விருத்தி செய்து வந்தனர். தவிர சல்லபல்லியில் ஒரு தர்மசத்திரம் கட்டி வைத்தார். லோகல்பண்டு ஸ்கூலுக்கு ஒரு பவனத்தைக் கட்டியும், மதராஸில் உள்ள கோஷா ஆஸபத்திரியில் ஒரு படுக்கைக் கட்டிடம் ஒன்று விசாலமாகக் கட்டிவைத்தார். தவிர, பந்தரில் ஒரு மந்திரிசபைக்கு வேண்டி பிரமாதமான கட்டிடம் ஒன்று கட்டுவித்தார். இவர் 7-வது எட்வர்டு சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தமாக ரூ. 2,000—00 செலவில் ஒரு சிலா ஸ்தாபனம் செய்துவைத்தார். சல்லபல்லியில் தேவாலயங்களுக்கு வேண்டிய மான்யாதிகள் ஏற்படுத்தினர். சிவகங்கையிலுள்ள தேவாலயத்திற்கு அநேக தனம் செலவு செய்து சீர்படுத்தி வைத்தார். தவிர தானசாசனங்களும் செய்து வைத்துள்ளார். நாட்டு மூலிகைகளின் மூலமாக சித்தர்களை வைத்துக்கொண்டு மருந்துகளைச் செய்து சகல வியாதிகளுக்கும் நிவாரணமாக்கும் வல்லுநர்களைக்கொண்டு வைத்தியசாலையையும் நடத்திவந்தார்.

இவருக்கு சங்கீத வித்தையில் மிக்க ஆர்வம் உண்டு. போட்டோ எடுப்பதில் மிக்க திறமையும் பெற்றனர். நீதி-முறைப்பாடசாலை ஒன்று நிர்மாணித்து நடத்தி வந்தனர். விவசாயிகளுக்கு வேண்டிய ஜலாதாரங்கள் உண்டாவதற்கு வேண்டி அநேக குளங்கள் கால்வாய்கள் வெட்டியும் வைத்தனர். இதனால் நஞ்சை, புஞ்சை பூமிகள் நன்றாக விளைந்து பிரஜைகள் க்ஷேமமாக வாழ்ந்து வந்தனர். இவருடைய பரிபாலன ஆரம்ப காலத்தில் சமஸ்தான

ஆதாயம் ரூ. 275 ஆயிரம். இப்பொழுது ஆதாயம் ரூ. (4) நான்கு இலட்சம். இவரிடத்தில் கோபல்லி கிருஷ்ணராவ் என்றவர் திவானக இருந்தார். கிறிஸ்து சகம் 1906-ம் வருஷம் பிரென்ஸ் ஆப்வேல்ஸ் என்றவருடைய பார்யை சென்னபுரிக்கு வந்தபொழுது மதராஸ் துரைதனத்தார் குதூகலமாக வரவேற்றனர். அப்பொழுது இவரும் சென்று கவர்னருடைய பந்தோபஸ்தில் துறைமுகத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துவந்து தக்க மரியாதைகள் செய்தனர் இவர் முக்த்யால சமஸ்தானதிபதி ஆகியவருடைய புத்திரி விசாலாக்ஷி என்ற பெண்மணியை விவாகம் செய்து கொண்டனர். அவருடைய கற்பத்தில் அங்கிநீடு என்ற குமாரனும் (4) பெண் புத்திரிகளும் பிறந்தனர். ஜேஷ்ட புத்திரியாகிய ராஜ்யலக்ஷ்மியை வாசிரெட்டி வெங்கடாத்ரி பிரபுவின் பேரனாகிய ராமநாதனுக்கு விவாகம் செய்து கொடுத்தும் (2)-வது புத்திரியை முக்த்யால சமஸ்தானபதியாகிய வாசிரெட்டி சந்திரமௌளிஸ்பர பிரசாதுக்கும் 3-வது புத்திரியை சிந்த்தபல்லி சமஸ்தான வாசுதேவ சூடாமணி பிரசாதுக்கும் 4-வது புத்திரியை கொம்மாரெட்டி பட்டாபிராமய்ய சௌதரி என்ற பூபாலனுக்கு கொடுத்துப் பிரபலமாக விவாகம் செய்து வைத்தனர். இவர் செருகூர் கிராமத்தை 2-வது புத்திரிக்குக் கொடுத்தனர். இவர் குமாரனாகிய அங்கிநீடு பஹதூர்க்கும் இவருக்கும் கிறிஸ்து சகம் 1006-ம் வருஷம் மனவிரோதம் ஏற்பட்டு, அங்கிநீடு B. A., பரிக்ஷையில் தேர்ந்து ஜெயம் பெற்றதினல் இவர்களுடைய விரோதிகளின் தூண்டுதலினல் குடும்பத்தில் விரோதம் பலமாகியதனல் சமஸ்தான காரியங்கள் சீர்குலைந்துவரவே ரைதுக்கள் சிலர்கூடி அவர்கள் செலுத்த வேண்டியவற்றைச் செலுத்தாமல் இடைஞ்சல்கள் செய்து வந்தனர். இவ் விஷயத்தை அங்கினீடுவே சர்க்காரிடம், கிறிஸ்து சகம் 1921-ம் வருஷம் இந்த சமஸ்தான பாலன விஷயத்தை தெரிவிக்க அவர்கள் விசாரித்து சர்க்கார் வசம் செய்து விட்டனர். அதனல் தந்தையும் மகனும் சமஸ்தானத்தில் பிரவேசிக்க முடியாமல் போயிற்று, இதே வருஷத்தில் தந்தையும் காலமாகிவிட்டார்.

105) ஸ்ரீமந்த்துராஜா எர்லகட்ட 4-வது அங்கிநீடு பஹாதர் B. A., அவர்கள் மல்லிகார்ஜுன நரபாலனுக்கு கிறிஸ்து சகம் 1877-ம் வருஷத்தில் பிறந்தனர். இவர் சமஸ்கிருதம், ஆந்தரம், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் பிரபலமாக விளங்கினர். கிறிஸ்து சகம் 1903-ம் வருஷம் B. A., பரீட்சையில் பட்டம் பெற்று 1904-ம் வருஷத்தில் முக்த்யால சமஸ்தான அதிபதியாகிய ஸ்ரீ வாசிரெட்டி சந்திர மௌளீஸ்வர பிரபுவின் சகோதரியாகிய பவானி தேவியை விவாகம் செய்து கொண்டனர்.

இவர் கிறிஸ்து சகம் 1921-ம் வருஷம் சமஸ்தான பாலனத்தை பட்டாபிஷேகம் செய்துகொண்டு, அக்காலத்தில் ஏழைகளுக்கு ஐம்பதாயிரம் ரூ. 50,000 கொடுக்கும்படி நிர்ணயம் செய்யப்பட்டன. சமஸ்தான உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 7,000/- சன்மானமாகக் கொடுத்தனர்; கிறிஸ்து சகம் 1924-ம் வருஷம் மதராஸ் சாசனசபை அதிகார பட்டமும் கிடைத்தன. அக்காலத்தில் இவர் ஒரு பாடசாலைக்கு ரூ. 15,000 சன்மானம் கொடுத்தனர்.

இவருடைய தர்மபத்தினியாகிய பவானீ தேவியார் ஒரு குமாரனைப்பெற்று இறந்துவிடவே, இவர் மறுபடியும் மதராஸில் பிரமுகராகிய சுட்டிபாடி வீரய்ய நாயுடு குமார்த்தியாகிய வெங்கடரத்னமாம்பையை 2-ம் தாரமாக விவாகம் செய்து கொண்டனர்.

இவர் வித்யாபோஷகராக விளங்கி சுசீல நாடகக்கிற்குத் தலைமை வகித்துள்ளார். வித்யாசங்கங்களைக் குறித்து ஒரு சரித்திரத்தை இயற்றி எல்லோருக்கும் சன்மானமாகக் கொடுத்தனர்.

மதராஸ் கவர்ன்மெண்டார் இவருக்கு நல்ல கௌரவம் வழங்கியுள்ளார். கவர்னர் லார்டு பெட்லண்டு பிரபுவும் வந்து கலந்து கொண்டுள்ள சமயம் இவர் ஏழைகளுக்கு அன்னதானம் பிரபலமாகச் செய்தார்.

இவர் 3-வது பார்யையை விவாகம் செய்துகொண்டு, கிருஷ்ண பிரசாத் என்ற குமாரனும், சில பெண் மக்களையும் பெற்றனர்.

இவர் கம்ப மனோரஞ்ஜனி சங்கத்திற்கு அநேக திரவியத்தைக் கொடுத்து விருத்தி செய்தனர். ஒரு சமயம் கிருஷ்ணா நதி பிரவாகத்தில் நஷ்டமடைந்த ரைதுக்களுக்கு வேண்டிய திரவிய சகாயமும் செய்தனர். இவர் சமஸ்தான பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் ரைதுக்களுக்கு வேண்டிய வரி வட்டங்களை கூடுமான வரையில் குறைத்து அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைத்தனர். தவிர ஜேஷ்ட குமாரனுக்கு ராஜ்யம் உரிமையானதால், இவர் சில ஜமீன்களைப்பெற்று 3-வது மனைவியின் குமாரனாகிய ராமகிருஷ்ண பிரசாதுக்கு வழங்கினார், தவிர தக்ஷிண வல்லூரு, போர்டு 2-ல் 6 கிராமங்களை கோட்டூர் சீமைக்கு மாற்றி அதை முஞ்சுலூரு என்று வழங்குவர்.

106) மஞ்ஜுலூருபெனமலூரு சமஸ்தானங்கள், கூறு சமஸ்தானத்தை புதிதாக நியமித்து சோழவரம் கம்படம், பர்ரெபாடு, குருவிந்தகுண்ட, மஞ்ஜுலூரு, பென, நூரு என்ற 6 கிராமங்களிருக்கின்றன, இதில் பெனமலூர் 1897-ம் வருஷத்திலும், மறுபடி 1921-ம் வருஷத்தில் சர்வே செய்யப்பட்டன.

இவர் அநேக சமஸ்தான சபைகளில் கூடி விஷயங்களை விளக்கி கீர்த்தி பெற்றனர். பிரஜைகளுடைய க்ஷேம நலங்களை கருதி சர்க்காரிடம் உத்தியோகத்திலிருக்கின்றவர்களுக்கும், தன்னையொத்த ஜமீன்களுக்கும் நன்மை செய்யக்கருதி 1905-ம் வருஷம் லக்ஷ்மீபுரம் அடவியில் சர்வேசெய்து கொண்டிருக்கையில் ஒரு பாறை மீதிருந்து கீழே விழுந்து இடது கை முறிந்து போயிற்று. இவர் 1927-ம் வருஷம் ஜூன் மாதம் 28-ந் தேதியில் சென்னையில் இறந்துபோயினர் பின்னர், இந்த சமஸ்தானம் சிவராம பிரசாத் பஹதூர் பரிபாலனத்திற்கு வந்தன.

107) ஸ்ரீமந்துராஜா யேர்லகட்ட சிவராம பிரசாத் பஹதூர் அங்கிநீடு ராஜாவுக்கு இவர் கிறிஸ்து சகம் 1906-ம் வருஷம் ஜெனனமாயினர். இவர் B. A., வரையில் படித்துள்ளனர் ஆயினும் 1929-ம் வருஷம் சமஸ்தான அதிபதி பட்டம் பெற்றதினால் அதைப் பூர்த்தி செய்யவேண்டி காரியங்களில் ஈடுபட்டு பட்டாபிஷேகத்தை யுக்தப்படி செய்து கொண்டனர். பட்டாபிஷேக காலத்தில் பண்டிதர்கள், வித்வான்கள், கவிவாணர் முதலானவர்களுக்கு தக்க சன்மானங்கள் வழங்கி கௌரவப்படுத்தி வைத்தனர். அவர்களில் ஏலூரில் அன்னபூர்ணமா தேவி வித்யாலயத்தையும், அங்கலூரில் கிர அச்சு எந்திரசாலையும், குண்டூரில் சாரதா நிகேதனம் பந்தரில் கோரக்ஷண சாலையும், பெஜவாடாவில் ஆயுர்வேத வைத்திய சாலையையும், நிர்மாணித்து வைத்தும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,116 மானியமாகக் கொடுத்துள்ளார். தவிர, கவிநாதர்களுக்கு ரூ. 116 சன்மானமாகக் கொடுத்தும், ஆந்தர வித்யாலயத்திற்கு ரூ. 8,000 மானியமாகக் கொடுத்தும், பிரஜைகளுக்கு முக்கியமான சேவை தந்து ரக்ஷித்து வந்தார். தவிர பந்தரில் ஜில்லா போர்டு அதிகாரியாகவும் சேவை செய்து வந்தனர். மதராஸ் சட்டசபை மெம்பராகவும் பணி செய்து வந்தார். சல்லபல்லியில் ஒரு ஹைஸ்கூல் ஒன்றையும் நடத்திவந்தார்.

இவர் செறுகூறு பத்மநாப பிரசாதுவின் புத்திரி துர்க்காம்மயை விவாகம் செய்து கொண்டனர். இவ்வம்மையாருடைய திருவயிற்றில், மல்லிகார்ஜுன பிரசாத், அங்கிநீடு பிரசாத், பத்பநாப பிரசாத் என்ற குமாரர்கள் பிறந்தனர். இவர் ஏலூரில் உள்ள நாகேஸ்வர வித்யாலயத்திற்கு மஹாராஜ போஷகராயினர். மதராஸ் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட டிப்டி கலெக்ட்டராகிய ஸ்ரீ ராவ் சாஹேப் ஜம்பால வெங்கடேசம் சௌதரி B. A., அவர்களை இவர் மூலியமாக ஷெ ஸ்தானத்தில் சில காலம் இருந்து வரும்படி நியமனம் செய்து வைத்தனர். இவர் சில கிரந்தங்களுக்குப் பிரசுரகர்த்தாவாகி நடத்தி வந்தார், அபிநவதிக்கன பிருதாங்குத ஸ்ரீ தும்மல சீதாராமமூர்த்தியாகிய கவீஸ்வரரால் ராஷ்டகானம் என்ற கிரந்தத்தை கற்பித்து,

அதற்கு பிரசுரகர்த்தாவாக இவர் ஏற்றுக்கொண்டு நடத்தி வந்தனர். இவ்வித விஷயங்கள் அநேகம் இவரால் நடந்து வந்தன. இந்த ஜமீன் கிராமங்கள் 1924-ம் வருஷம் சர்வே செய்யப்பட்டு அதன்படி சமஸ்தான ஆதாயம் ரூ. 2,90,954 சர்க்கார் பேஷ்கஸ் ரெவ ரூ. 78,782/- நிர்ணயம் செய்து வைத்தனர்.

108) யேர்லகட்ட திருபதி ராயடு காடுறு சமஸ்தானம்

இந்த சமஸ்தானம் [illegible] 1922-ம் வருஷம் ஏற்பட்டது வெலம ஜமீன்தார்களாகிய கொல்லபல்லி சமஸ்தானத்தாரிடமிருந்து ஏர்லகட்ட ரங்கநாயகுலு சௌதரி ஜமீன்தார், காட்டூர், குப்பமூர், ராயபுறம் என்ற 3 கிராமங்களைப் பெற்றுக்கொண்டு காட்டூர் ஜமீன்தார் மூலமாக ஏற்பட்ட இந்த ரங்கநாயகுலுக்குப் பிதாமகனாகிய யேர்லகட்ட திருபதி ராயடுகாரு ஷை தேவரகோட்டை பாலனாகிய ஏர்லகட்ட சுந்தரீடு, கங்கிநீடு பிரபுக்களில் ஒருவருடைய வம்சத்தினர் என்று கூறப்படுகின்றன. திருபதிகளுடைய காலத்தில் இந்த வம்சத்தில் ஆசாரியனை இவர் காரம்சேடுவில் நிவாசம் செய்துவைத்து வந்தனர். இந்த வம்சத்தினர் காரம்சேடு கிராமத்தில் ஸ்திரப்பட்டு, சுற்றுப்புறங்களில் உள்ள கிராமத்து பூமிகளை ஆர்ஜிதம் செய்து பிரபலமாயினர். திருபதி ராயடுகாரு கிறிஸ்து சகம் 1813-ம் வருஷம் பிறந்தவர். இவர் ஓங்கோலு பக்கங்கள் வியாபாரம் செய்து பெரிய பணக்காரராகியும் கடையில் நெல்லூரிலுள்ள துருஷ்கர் சிலர் கூட இவரிடமிருந்த திரவியத்தை எல்லாம் பெற்றுக்கொண்டு ஏமாற்றியதால் இவர் விரக்தியுடன் பசு வியாபாரத்தை நிறுத்திவிட்டு. தானிய வியாபாரத்தைச் செய்து வந்தார். மதராஸில் ஒரு கிடங்கை ஏற்படுத்தி அங்கு வியாபாரத்தை நடத்தியதால் அதனால் தக்க லாபம் கிடைத்து வர நாளுக்கு நாள் விருத்தியாகி ஒரு ஓடத்தை வாங்கி வியாபாரம் நடத்திவந்தமையால் பெரிய தனவந்தராயினர். இவர் தென்னாட்டிலுள்ள திவ்ய தேசங்களை எல்லாம் சேவித்து வந்தார். இவருக்கு பாபய்ய, ராமய்ய என்ற 2 குமாரர்கள் பிறந்தனர். மூத்த குமாரன் தக்க வயதில் இறந்துபோனதால், அதில் மிக்கச் சோர்வடைந்தும், இரண்டாவது குமாரன் பக்குவத்திற்கு

வந்தவுடனே அவனுக்கு விவாகம் செய்து வைத்து இல்வாழ்க்கையை யுக்தப்படி நடத்தி வந்தார். இவர் தர்ம காரியங்களை நடத்தி வந்தார். காரஞ்சேடு கிராமத்தில் ரூ. 10,000/- பத்தாயிரம் சிலவில் ஒரு சத்திரம் கட்டி வைத்தார். கிறிஸ்து சகம் 1878-ம் வருஷம் க்ஷாமம் ஏற்பட்டுங்கூட இவர் தர்மசத்திரத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வர அவர்களுக்கு அன்னதானம் செய்து வந்தார். இவர் சென்னை நகரில் அநேக பவனங்களைச் சம்பாதித்து வைத்துள்ளார். இவருக்கு பூத தயாபரன், சத்யகீர்த்தி என்ற பட்டம் பெற்று கிறிஸ்து சகம் 1885-ம் வருஷம் சுவர்க்க பதவி அடைந்து விட்டனர்.

109) ஏர்லகட்ட ராமய்ய, இவர் திருபதி ராயருடைய 2-வது குமாரராவார். இவர் தன் தந்தை சம்பாதித்த ஓடத் தொழிலை விருத்தி செய்து அநேக தனம் சம்பாதித்து புகழ் பெற்று ஸ்ரீ ஜெயலக்ஷ்மி ஸ்ரீமஹாலக்ஷ்மி என்ற பெயருடன் 2 ஓடங்களைக் கட்டுவித்து சத்யவாதியென்று பெயர் பெற்று, அக்காலத்திய வியாபாரிகளில் ஒருவராகிய ஜேம்ஸ் கர்னலிடமும் கூட இவர் கீர்த்தி பெற்றனர். இவருக்கு 2 புத்திரிகளும், ரங்கநாயகுலு என்ற ஜமீன் குமாரனும் பிறந்தனர். இவர் சாதுக்களிடமும் எளியவர்களிடமும் மிக்க பரிவுடன் நடந்து கொண்டு வந்தனர். இவருக்குப் பின்னர் இவர் குமாரராகிய ரங்கநாயகுலு ஜமீன் பிரபலமான தனவந்தராகியும் ஜமீன் பட்டம் பெற்றும் பிரஜைகளிடம் மிக்க அன்புடனும் நடந்து வந்தனர். இவர் மதராஸில் ஹைஸ்கூலில் வித்தை கற்றும் வந்தனர். கிறிஸ்து சகம் 1891-ம் வருஷம் பிரக்யாதிபெற்ற ஜாகர்லமூடி சௌதரி புத்திரியாகிய சீதம்மா தேவியை விவாகம் செய்து கொண்டு 2 புத்திரிகளைப்பெற்று 1916-ம் வருஷத்திலும் காலமாகி விட்டபடியால் 1919-ம் வருஷம் தும்மலபாடி ராமகிருஷ்ணய்யர் குமார்த்தியை 2-வது தாரமாக மணந்து கொண்டனர். இவர் திருவயிற்றில் திருபதி ராயடு, ராமநாத பாபு என்ற 2 குமாரர்கள் பிறந்தனர். இவர்கள் வயது வந்த பின்னர் வியாபாரத்தை முக்கியமாக நடத்தி வந்தனர்.

இவர் மற்ற ஜமீன்களைப்போல அல்லாமல் தன்னாளுகையில் உள்ள பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தும் வந்தனர். வியாபாரத்தில் வெகுக்கணக்கான தனம் சம்பாதித்து மறுபடி 4 ஓடங்களைக் கட்டுவித்துப் பிரபலமாக நடத்தி வந்தார். ஆக 6 ஓடங்களின் பெயர்கள் ஸ்ரீ விஜய லக்ஷ்மி (1) ஸ்ரீ மஹாலக்ஷ்மி (2) ஸ்ரீ தனலக்ஷ்மி (3) ஸ்ரீ ராஜ்யலக்ஷ்மி (4) ஸ்ரீ பாக்யலக்ஷ்மி (5) ஸ்ரீ சீதாலக்ஷ்மி (6) இவர் கிறிஸ்து சகம் 1920-ம் வருஷம் கவர்ன்மெண்டாருக்கு ரூபாய் 87,500/- வரி கொடுத்தனர்.

இவர் முதலில் பெற்ற ஓடம் கிறிஸ்து சகம் 1861-ம் வருஷம் முதல் கிறிஸ்து சகம் 1921-ம் வருஷங்கள் 60 ஆகின்றமையால் அதன் சஷ்டி அப்தியைப் பிரபலமாக நடத்தினர். இவர் பாட்டன், தந்தையர் முதலாயினோரால் சம்பாதிக்கப்பட்ட தோட்டங்கள், வயல்கள், தோப்புகள், கட்டடங்கள், முதலியன பல கிராமங்களில் உள்ளன. இவர் டில்லி சட்டசபையில் ஒரு பிரபல மெம்பராகவும் விளங்கினர். இவர் மேலே சொல்லப்பட்ட பூமி காணிகளின் மதிப்பால் இவருக்கு ஜமீன் பட்டம் கிடைத்ததென்று கூறப்படுகின்றன. 1922-ம் வருஷம் ஜமீன் பட்டம் பெற்றது.

இவர் சம்பாதித்த காட்டூர் சமஸ்தானத்தில் வருஷம் ஒன்றுக்கு ரூ. 11,949/- வரும்படி வந்து கொண்டிருந்தன. இதில் சர்க்காருக்கு செலுத்த வேண்டிய பேஷ்கஷ் ரூ. 2,000/-த்தை செலுத்தி வந்தனர். இவருக்கு தமிழ், ஆந்திர பாஷைகளில் மிக்க அபிமானம் உண்டு. இவர் தன் சொந்த கிராமமாகிய காரம்பேடில் ஒரு மிடில் ஸ்கூல் கட்டினர். அதற்கு ரூ. 40,000 நாற்பதாயிரம் மதிப்புள்ள ஓடத்தை மானியமாகக் கொடுத்து அதனுல் வரும் தனத்தால் அந்த பாடசாலை நடந்து வருகின்றன. இவர்களுடைய ஓடங்கள் ஜப்பான், சிலோன், ரங்கூன், கல்கத்தா முதலான பிராந்தியங்களுக்கு சரக்குகளை ஏற்றிச் சென்றும் வருகின்றன. இந்த மோர்லகட்ட வம்சத்தினர் மரகனபல்லி முதலான கிராமங்களில் பிரபலமாக வாழ்ந்து வருகின்றனர். சங்கம் ஜாகர்லமூடி கிராமங்களிலும் இந்த வம்சத்தினரில்

சங்கைய சௌதரி என்றவர் ஜாகர்லமூடி ரயில்வே ஸ்டேசன் பக்கம் ஒரு சத்திரத்தைக் கட்டி வைத்துள்ளார்.

(3-ம் பாகம்)

7-வது பிரகறனம், (பெம்மசாணிவார்)

---

110) குருவிகுள சமஸ்தானீஸ்வரர்கள், இவர்கள் திருநெல்வேலி ஜில்லா குருவிகுளம் பெம்மசானி பெதவீரப்ப நாயுடு, விஸ்வநாத நாயகுண்டும் மதுரை, திருச்சிறுப்பள்ளி ராஜாவினிடமிருந்து ஜாகீராகப்பெற்று அந்தப் பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்ததாக இரண்டாவது பாகத்தில் கூறியுள்ளனம். இந்த வம்சத்தினர் கிருஷ்ணதேவராயரிடம் மிக்க விஸ்வாசமுள்ளவர்களாக இருந்து வந்த 9 சேனைத் தலைவர்களில் ஒருவருடைய வம்சத்தினர் என்றும் அக்காலத்தில் ஜெமோ கண்டிகோட்டை, உதயகிரி, கொண்டவிடு, பெனுகொண்ட, கடப்பை, சித்தவட்டம், நெல்லூர், சங்ககிரி முதலா பிராந்தியங்களைப் பரிபாலித்து வந்தனர் என்று முன்னரே கூறப்பட்டுள்ளன.

111) பெம்மசாணி நந்தஸ்வாமி தொர, பெதவீரப்ப நாயுடுவுக்குப் பின்னர் அந்த வம்சத்தில் கிறிஸ்து சகம் 1370-ம் வருஷம் 22 பெயர்கள் கடந்த பின்னர் 23-வதாக இவர் பரிபாலனத்திற்கு வந்தனர் என்று வடிவேல் முதலியார் எழுதிவைத்த சாசன ரிகார்டு, இந்த நந்தஸ்வாமி தொரவை சேர்ந்தவர்கள் அவர்களின் பூர்வீகர்களுடைய விருந்தாந்தங்கள் சரியாக கிடைக்க வில்லையாயினும் லோகல் ரிகார்டுகளில் இந்த குருவிகுளம் பெம்மசானி வம்சக்குழையொன்று காணப்படுகின்றன. லோகல் ரிகார்டு வால்யம் (47) பக்கம் (155–156) குறிப்பிட்டுள்ளன. இதன் விபரங்கள்.

பெம்மசானி அங்கப்ப நாயுடு — சின்ன திம்மா நாயடு — பெத வீரப்பநாயடு, அக்கப்ப நாயடு, ராமலிங்க நாயடு, நரஸிம்ஹ நாயடு, பெததிம்ம நாயடு, சினதிம்மநாயடு, விஸ்வநாத நாயடுகாரு, நாஸிம்ஹ நாயடு, ராமஸ்வாமி நாயடு, வெங்கடாத்ரி நாயடு, வீரப்ப நாயடு, வெங்கடபதி நாயடு, ருத்ரப்ப நாயடு, அளகாத்ரி நாயடு, ராமலிங்க நாயடு, ராமலிங்க நாயடுகாரு, அளகிரி நாயடு, ருத்ரப்ப நாயடு (மறைப் பூசப்காரன்) காலம் இவர்கள் இருந்ததாக காணப்படுகின்றன.

இந்த வம்சத்தினை சரியென்று சொல்வதற்கு சாத்திய மில்லாமலிருந்த போதிலும் இந்த பெத வீரப்பநாயடு, விஸ்வநாத நாயடு மதுரையிலிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருக்க குருவிளம் பிரதேசத்திற்குச் சென்றதாக இரண்டாவது பாகத்தில் குறிப்பிட்டுள்ளன. இந்த வம்சத்தினரில் 3-வது ஆக வந்தவர் இவரோ, வெங்கடாத்ரி நாயடு குமாரராகிய வீரப்ப நாயடுவா என்று நிர்ணயிக்க இயலவில்லை. சிலதிம்ம நாயருடு, விஸ்வநாத நாயடு காலத்தில் தோன்றியவரென்றும் ருத்ரப்ப நாயடு மறைபக் பூசப்காரன் காலத்தவரென்றும் ஒரு ரிமார்க்கு இங்குள்ளது.

கிறிஸ்து சகம் 1564-ம் வருஷம் 1572-ம் வருஷ மத்தியில் பெம்மசானி ருத்ரப்ப நாயடு விஜ்வாளத் தீபத்தில் நடந்த யுத்தத்தில் கலந்து கொண்டனர் என்று முன்னர் கூறியுள்ளோம். இங்குள்ள இருவரில் ஒருவர் என்று நாம் நிர்ணயம் செய்யின், குருவிகுளம் பிராந்தியத்திற்குச் சென்ற வீரப்ப நாயடு வெங்கடாத்ரி நாயடு குமாரன் என்று தெரிய வருகின்றன.

கிறிஸ்து சகம் 1673-ம் வருஷ காலத்தில் மதுரை ராஜாவினுடைய ராஜப்பிரதிநிதி தஞ்சாவூர் ராஜாவாகிய அளகிரி நாயடுகாரர் இருந்ததாகவும், பின்னர் கிறிஸ்து சகம் 1564 & 1572-ம் வருஷ மத்தியில் அளகிரி நாயடு இவர் குமாரனாகிய 3-வது ருத்ரப்ப நாயடு கிறிஸ்து சகம் 1760-ம் வருஷத்தில் தோன்றியவராவார். முத்து அளகாத்ரி நாயடு

என்றவர் மதுரை ராஜா ஆவார். கிறிஸ்து சகம் (1660—1662) வருஷம் கிறிஸ்து சகம் 1700-ம் வருஷத்திற்கு பின்னர் இந்த வம்சத்திய விபரங்கள் தெரியப்படவில்லை, கிறிஸ்து சகம் 1870-ம் வருஷம் இதன் பின்னர் நந்தஸ்வாமி துரை குருவிகுளப் பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தனர். இவருக்குப் பின்னர் இவர் குமாரராகிய கொண்டலராய ஸ்வாமி நாயடு பரிபாலனத்திற்கு வந்தனர் என்று காணப் படுகின்றன.

112) பெம்மசானி கொண்டலராயஸ்வாமி நாயடு. இவர் மலயாளத்திலிருந்த காலம் சுயபாஷையை விருத்தி செய்தும் (3) லக்ஷம் ரூபாய் சிலவு செய்து ஒரு தேவாலயம் கட்டியும் மடங்கள் ரோடுகள் சத்திரங்கள் முதலானவைகளை கட்டியும் வைத்தனர் இவர் ராஜபக்தி, பரோபகார சிந்தனை முதலிய குணங்கள் நிறைந்தவர். இவரை டில்லியில் கூடிய ராஜ சபையில் கிறிஸ்து சகம் 1877-ம் வருஷம் கவர்ன்மெண்டார் கொண்டாடி யோக்யதா பத்திரம் ஒன்று வழங்கினர். இவருக்கு சகோதரர் ஒருவரிருந்தார். அவர் குடும்பத்தில் ஒற்றுமையிழந்து பாகவியாஜ்யம் திருநெல்வேலியில் உள்ள சப்கோர்ட்டில் தாக்கல் செய்தார். கோர்ட்டார் ஜீவன உபாயத்திற்கே ஊதியம் கிடைக்கும் பாகம் கிடையாது என்று தீர்மானம் செய்தனர். அதை மதராஸ் ஐகோர்ட்டில் அப்பீல் செய்தும் கீழ்கோர்ட்டு தீர்ப்பையே ஊர்ச்சிதம் செய்தனர். அது முதல் குருவிகுள சமஸ்தான அவிபக்த குடும்பத்தினராகவே இருந்தன.

113) திம்மநந்தஸ்வாமி, இந்த கொண்டலராயஸ்வாமி நாயடுவுக்கு குமாரராவார். இவர் ராஜ்யத்தில் மிக்க பற்றுள்ளவராகப் பரிபாலனம் செய்து வந்தார். இவர் குமாரராகிய கொண்டலராயஸ்வாமி நாயடுவுக்கு ராஜ்யாபிஷேகம் நடத்திவிட்டு கிறிஸ்து சகம் 1892-ம் வருஷம் இறந்து போயினர். பின்னர் இவர் ராஜ்யத்தை யுக்தப்படி ஏற்றுக்கொண்டு பரிபாலித்து வந்தார். தவிற சமஸ்தான விவகாரங்களையும் கவனித்து வந்தார். அதிலிருந்து இவர் தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு முதலியவற்றிலும் தலைவராக இருந்து வந்தார். குருவிகுளம் யூனியன் சேர்மேன் காரியத்தையும் பார்த்து வந்தார். பிரஜைகளுக்கு வேண்டிய

சவுகரியங்களையும் செய்து பிரசித்தி பெற்றார். கிறிஸ்து சகம் 1911-ம் வருஷம் டில்லி தர்பாரில் இவருக்கு சர்டிபிகேட் கவர்ன்மெண்டார் யோக்யதா பத்திரம் வழங்கினர். இவர் 1928–1929-ல் கோவில்பட்டி தாலூக்கா போர்டு வைஸ் பிரசிடெண்டாக இருந்து காரியங்களை நிர்வகித்து வந்தார். இவர் மிக்க பிரபல விஷயவாதி என்று பட்டமும் பெற்றுள்ளார். இவருக்கு தமிழ் பாஷையிலும், சங்கீத வித்தைகளிலும் மிக்க ஆர்வம் உண்டு. சர்க்கார் உத்யோகஸ்தர்களிடமும் தன்னையொத்த ஜமீன்தாரர்களிடமும் மிக்க மதிப்பு பெற்று வந்தனர். இவர் 1914-ம் வருஷம் சபிலேஸ்வரபுரத்தில் நடந்த 4-வது கம்ப மஹாசபையில் தலைமை வகித்து சங்கத்திற்கு வேண்டிய பொருளுதவி செய்துள்ளார். இவருக்கு ஒரு குமாரத்தி உண்டு. அவ்வம்மையாருக்கு விவாகம் நடப்பதற்கு முன்பே இவர் பரமபதம் அடைந்து விட்டார். அதாவது 1929-ம் வருஷம் இவர் புத்திரியை ரங்காபுரம் ரெட்டிகூடம் ஜமீன்தார் ஸ்ரீ அடுகமல்லி கோபாலகிருஷ்ணய்ய சௌதரியின் குமாரராகிய சுப்ரமண்யம் சௌதரிகார் விவாகம் செய்து கொண்டனர். இந்த சமஸ்தானத்திற்கு சேர்ந்த கிராமங்களில் 5 குளங்களிருந்தனவென்றும் அது மராமத்து செய்யாமல் கிரஸதாக இருந்ததாகவும் சர்க்காரின் கணக்குகளால் தெரிய வருகின்றன.

114) இலயரசநேந்தல் சமஸ்தானப் பார்ட்டி (1) ராவெள்ளவார் பூர்வ விருத்தாந்தம். இந்த சமஸ்தானபதிகளில் பூர்வீகராகிய ராவெள்ளவாரின் விருத்தாந்தங்களை இரண்டாவது பாகத்தில் கூறியுள்ளோம். இந்த சமஸ்தானத்தாருக்கும் கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்த விரமல்ல பூபதி என்றவரே மூல புருஷராவார் என்று சொல்லப்படுகின்றன.

இவர் திருவாங்கூர், கொச்சி, கள்ளிக்கோட்டை முதலான பிரதேசங்களை பரிபாலித்து வந்தார். இவரிடத்தில் 6000 காலாட்படையினரும் 400 குதிரைப்படையும், எப்பொழுதும் ஸ்திரமாக இருந்து வந்தன. இவருடைய ராஜதானி ராயவேலூர். யாவராலும் ஜெயிக்க முடியாத

படி சென்னதுர்க்கம் இவராக்ஷியிலிருந்தன. விஜயநகர சாம்ராஜ்யத்தை விட்டு இந்த வம்சத்தினர் மதுரை சமஸ்தானத்திற்கு வந்து இவருடைய அனுமதியின் பேரில் இங்கு சமஸ்தானத்தை ஏற்று நடத்தி வந்தனர்.

இந்த வம்சத்தினர் மதுரை ராஜாங்கத்திற்கு வந்த பின்னர் ராவெள்ள ரமணப்ப நாயடுகாரு கிறிஸ்து சகம் (1564 to 1572)-ம் வருஷ மத்தியில் சிம்ஹளத்வீப பிரபுவாகிய கம்பிச்சி நாயடுவுக்கும், மதுரை ராஜாவாகிய பெத்த கிருஷ்ணப்ப நாயடுவுக்கும் நடந்த யுத்தத்தில் ஜெயம் பெற்றதாக முன்னர் கூறியுள்ளோம்.

தஞ்சை மன்னருக்கும், மதுரை மன்னருக்கும் தகராறு ஏற்பட்ட காலத்தில் இருவருக்கும் சமாதான முறையில் ஒற்றுமைப் படுத்தியும். இந்த வம்சத்தினருக்கு திருக்கோட்டுபல்லி, கோவிலாடி துர்க்கம், மற்றும் தஞ்சைமா நகரைச் சேர்ந்த சில கிராமங்களையும் மாற்றி அமைத்து கொடுத்தும் திருநெல்வேலி ஜில்லாவில் 18 கிராமங்களையும் இலயரசனேந்தல் கிராமங்களேயும் ஜாகீர் செய்து கொடுக்கப்பட்டன.

தஞ்சாவூரில் விஜயராகவ நாயடுகாரும், மதுரையில் சொக்கநாத நாயடுகாரும், பரிபாலனம் செய்த காலத்தில் கிறிஸ்து சகம் 1659—1682-வருஷ மத்தியில் பல மாறுதல்கள் ஏற்பட்ட காரணத்தால் ராஜாங்கம் மாறி இந்த வம்சத்தினர் முன் கூறியபடி ஜாகீர் செய்து கொடுக்கப்பட்ட பிராந்தியங்களை அனுபவித்து வந்தனர். கிறிஸ்து சகம் 1748-ம் வருஷம் அந்த ராஜ்யத்தில் சந்தா சாயபு என்றவர் (ஆர்காடு நவாப்) ராஜாவாக வந்ததாகவும், இவரால் அந்தப் பிராந்தியங்களில் ஜமீன்தாரர்களை ஏற்படுத்தியதாகவும், பின்னர் ஈஷ்டிண்டியா கம்பெனியார் ஆக்ஷியில் சேர்ந்து விட்டதாகவும் கிறிஸ்து சகம் 1810-ம் வருஷ காலத்தில் இங்கு சமஸ்தானங்கள் இரண்டாக்கப்பட்டனவென்றும் காணப்படுகின்றன.

115) ராவெள்ள பெத்த கஸ்தூரிரங்க அப்பாசாமிகாரு சமஸ்தானபதியாக இருந்து பின்னர் சமஸ்தானத்தில்

அநேக தகாதாக்கள் ஏற்பட்டதின் காரணமாக ஜமீன்தாரர்களை ஏற்படுத்தியும் சமஸ்தானதாருக்கும் சர்க்காரால் மானியம் வழங்கப்பட்டு வந்தன. கிறிஸ்து சகம் 1851–1869 வருஷ மத்தியில் இந்த சமஸ்தானபதியாக ராவெள்ள வெங்கடரங்க அப்பாஸ்வாமி நாயுடு பரிபாலனம் நடத்தி வந்தார். இவர் சைவ நகரம் என்ற பேட்டைப் பிரதேசத்தை சீர்படுத்தி வருஷம் பத்தாயிரம் வரும்படி வரக் கூடியதாக ஏற்பாடு செய்தனர். இவருக்குப் பின்னர் கஸ்தூரி ரங்கப்பஸ்வாமி நாயடு கிறிஸ்து 1869 வருஷம் சமஸ்தானபதியாக வந்து 1900-ம் வருஷம் வரை பரிபாலனம் மிக்க சிரேஷ்டமாக நடத்தி வந்தனர். இவர் ஆந்திரம், இந்தி, தமிழ் பாஷைகளில் மிக்க திறமையுடன் விருத்தி செய்து வந்தார். கிறிஸ்து சகம் 1877-வருஷம் டில்லி ராஜசபையில் இவருக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இவர் மீது மிக்க அன்புடன் ஒரு யோக்கியதா பத்திரம் வழங்கி கௌரவித்தனர். இவருக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் வெங்கடரங்க அப்பாநாயடு என்ற குமாரன் தோன்றினன். பின்னர் கிறிஸ்து சகம் 1879-வருஷம் மற்றொரு மகனும் பிறந்தான். இவர் கிறிஸ்து சகம் 1910-வருஷத்தில் கைலாசத்திற்குச் சென்றனர். இவர் ஜேஷ்ட குமாரன் வயது வந்த அளவில் பல பாஷைகளில் தேர்ச்சி பெற்று நல்ல கீர்த்தி பெற்றும், திருநெல்வேலியில் இந்து கலாசாலையில் படித்தும், சங்கீத வித்தையிலும் தேர்ச்சி பெற்று வந்தனர். இதனால் நல்ல வித்வான் என்று ஜனங்கள் கொண்டாடினர். இவர் ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டுகளில் மெம்பராக இருந்து பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வந்தார். இவருடைய தம்பியாகிய அப்பாசாமி நாயடுகாரும் சகல வித்தைகளைக் கற்று, பிரஜைகளிடம் மிக்க மதிப்பும் பெற்று வந்தார். இவர் மதராஸ் பச்சையப்பன் காலேஜில் B. A. வரையில் படித்து வந்தார். வெங்கடரங்கஸ்வாமி நாயடுகாரு கிறிஸ்து சகம் 1921-ல் இறந்து போய்விட்டனர். இவருக்கு 2 குமாரர்கள் இருந்தனர். இதில் மூத்த குமாரன் 1912-ல் ஜனனமாயினர்.

1921-௵ வெங்கடரங்கஸ்வாமி நாயடு சகோதரராகிய அப்பாசாமி நாயடு சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்தார். இதை கவர்ன்மெண்டார் ஆட்சேபித்து தங்கள் வசம் சேர்த்துக்கொண்டு 11 வருஷத்திற்குப் பின் சட்டப்படி வெங்கடரங்கசாமி நாயடு ஜேஷ்டகுமாரன் வசம் ஒப்படைத்தனர். அக்காலத்தில் செவ்வெல்பட்டி ஜமீன்தார், இலயரசனேந்தல் ஜமீன்தார் முதலானோர் உதவியுடன் பரிபாலனம் நடத்திவந்தார். ஜீரணமாயிருந்த குளங்கள், கால்வாய்கள், தேவாலயங்கள் முதலானவற்றை ஜீரண உத்தாரணம் செய்து பிரஜைகளுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து வந்தனர். இந்த பெம்மசானி வம்சத்தினர் ராஜாக்களாகவும், ஜமீன்களாகவும் இருந்து வந்தனர் என்று சரித்திரங்களில், புராணங்களில் விளக்கப்பட்டுள்ளன. கம்மவார் சந்தர வம்சத்திய திலீப மகாராஜனுடைய சந்ததியென்று பிரம்மாண்ட புராணம் சுவிதர்ம பிரகரணத்தில் கூறப்பட்டு உள்ளன. இவ்விஷயத்தை முதல் பாகத்திலும் விளக்கி உள்ளோம். கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்து இந்த ராவெள்ள வம்சத்தினர் நல்ல கியாதி பெற்று வந்தனர் என்றும் இப்பொழுது இந்த வம்சத்தவர் வரிசையாக சமஸ்தானதிபதிகளாகவே இருந்து வருகின்றனர்.

இந்த சமஸ்தானத்திற்கு மொத்தம் 10 ஏரி, குளங்கள் இருந்தனவென்றும் அதில் 3 குளங்கள் மட்டும் ஜீரணமாக இருந்தனவென்று கவர்ன்மெண்டார் கணக்கில் குறித்து உள்ளனர்.

116) சூர்யதேவரவார் (ராசூர் and பேடேரு சமஸ்தானம்) சூரியதேவர பெதநரசிம்ஹா, சினநரசிம்ஹ நரபாலர். 2-வது பாகத்தில் சோழ, சாளுக்ய வம்சங்களில் இருந்து ஏற்பட்ட கம்மவாருக்கும், வெலமவாருக்கும் தீவிரமான விரோதம் இருந்ததென்றும், மர்சாவாரும், சம்மெடவாரும் என்றவர்களின் வம்ச பரம்பரையை சரித்திர மூலமாகத் தெரிவித்துள்ளன. சோடசாகியர்களில் ஒருவராகிய சூரியதேவரவாரின் விஷயங்களும் அப்படியே. இவர்கள் முதலில் தஞ்சாவூர் பிராந்தியங்களில் இருந்தனர்

என்றும், அப்பொழுது வெள்ளைவாருக்கும், இவர்களுக்கும் தகாரா ஏற்பட்டிருந்த சமயம் வெள்ளைவாரின் மூக்குகளைக் கொய்து அவமானப்படுத்தினரென்று சொல்லப்படுகின்றன. இந்த சூரியதேவரவார் வம்சக்கிளை பிரபலமானது. அவர்களுடைய ஆச்சாரியர்களால் பிரபலமானதாகவும் கூறப்படுகின்றன. அதனுள் சூரியதேவரவாருக்கு மூலபுருஷர் இராமா நாயடுகாரர் ஆவார். இவர் ஜாலு என்ற பிரதேசத்தைப் பரிபாலித்து வந்ததாகவும் கூறப்படுகின்றன. இந்தப்பிரதேசம் தஞ்சாவூரைச் சேர்ந்தது.

இராமா நாயடுவுக்கு நாரஸிம்ஹ நாயடு, நாகைய்ய, ராமய்ய என்ற குமாரர்களிருந்தனர். அதில் நாகைய்ய னுக்கு ரகுபதி, ரகுபதிக்கு எர்ரமநீடு, இவருக்கு நாலிநீடு, பாபய்ய, வெங்கடபதி, சின்னாலிநீடு என்றவர் தோன்றினர். வெங்கடபதிக்கு திம்மநீடு, இவர் குமாரன் முசலிநீடு, இவர்கள் இருவரும் வரிசையாக கிறிஸ்து சகம் 1490-1520-வருஷ காலத்தவரென்று 2-வது பாகத்தில் நிரூபித்து உள்ளோம். இவர்கள் புலிவர்ரு சீமை சௌதரியினிடம் பூபாலகராக இருந்தனர் என்று கூறியுள்ளோம். அதனுள் இந்த வம்சத்திய மூல புருஷராகிய இராமா நாயடு காரர் கிறிஸ்து சகம் 1390-வருஷ காலத்தவரென்று தெரிய வருகின்றன.

முசலிநீடு கிறிஸ்து சகம் 1540-வருஷ காலத்தில் அவருடைய குமாரனாகிய திம்மநீடு ராஜ்ய பரிபாலனத்திற்கு வந்ததாகவும் காணப்படுகின்றன. இந்த 2-வது திம்மநீடு பாலன விஷயங்கள் தெரியப்படவில்லை. ஆயினும் இவருக்கு கொண்டபநீடு, பெதநாரஸிம்ஹன், சினநாரஸிம்ஹன் என்ற 3 குமாரர்கள் கிறிஸ்து சகம் 1560-வருஷ காலாத்தி லிருந்து புலிவர்ரு சீமையும், ராஜூலு பேறு கோட்டைகள் தங்களுக்கு ராஜ்ய ஸ்தானங்களாக வைத்துக் கொண்டு ராஜ்ய பரிபாலனம் நடத்திவந்தனர். இவர்களுடைய ஆட்சிகாலம் சுமார் கிறிஸ்து சகம் 1640-வருஷம் என்று 2-வது பாகத்தில் கூறியுள்ளோம். அது புரப்பாடாகக் காணப்படுகின்றன.

விஜயநகர சாம்ராஜ்யம் பரிபாலன காலத்திலிருந்து கொண்டவீடு சீமை மகமதியர்கள் அதோகதி அடைந்த பின்னர் கிறிஸ்து சகம் 1579-வருஷம் கோல் கொண்ட நவாபு இப்ராஹிம் குதுப்ஷா இங்கு ராமராவென்ற மகா ராஷ்டிர சேனாதிபதியாக நியமித்தனர் என்றும் ராஜாவாக நியமித்தாரென்றும் கூறப்படுகின்றன.

இவர் பாராமுஸ்த்தீபு பரிபாலனபத்ததியை அமலுக்குக் கொண்டுவந்து அதுவரை கொண்டவீடு அமல்தாராயிருந்த மாணிக்யராவுக்கு மேல் அதிகாரத்தைக் கொடுத்து அதுவரை ராஜபாலகராகயிருந்த சூரிய தேவரவாருக்கு புலிவர்தி சீமையில் சௌத்ரி உத்யோகத்தை மட்டும் கொடுத்து மறுபடியும் தேசபரிபாலனர்களாக நியமித்தனர் என்று கூறப்படுகின்றன.

சூரிய தேவரவார் அதுவரை ராயர் சமஸ்தானத்தில் பூர்ண மகிமை பெற்றவராகையால் சுயேச்சையாக மாணிக்யராவுக்கு கோட்டை தன் சுவாதீனம் ஆகவில்லை அதனால் அவர் யுத்தம் ஆரம்பித்து ராஜ்யத்தைக் கைப்பற்ற முடியாதென நினைத்துக் கபடமாக ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டதாக காணப்படுகின்றன லோகல் ரிகார்டு வால்யம் (41-பக்கம் 471)-லும் போலேறு கிராம கையெழுத்துப் பிரதியிலும் காணப்படுகின்றன.

சம்மவார் சௌத்ரி யென்ற பட்டம் பெற்று ராஜ்யத்தை ஆண்டகாலத்தில் கிருஷ்ணா நதியின் பக்கமிருந்த ஸ்ரீ கோபிநாதஸ்வாமி தேவாலயத்தை ஸ்ரீ கோபிநாத ஸ்வாமிகளிடமிருந்து அதைப் பெற்று பொது மக்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து பூஜை புநஸ்காரங்களை விதி முறைப்படி நடந்து வருவதற்கு வேண்டிய மான்யாதிகளை ஏற்படுத்தி நடத்திவந்தனர். இதற்கு சூரிய தேவரவாரே முக்யஸ்தராவார் என்று கூறப்படுகின்றன. பெதநரஸிம்ஹனுக்கு பாபண்ணா முதல் நால்வர் புத்திரர்களும் சினநரஸிம்ஹனுக்கு வெங்கன்னா முதல் ஐந்து பேர் குமாரர்கள் இவர்களுடைய வம்சக்கிளையினால் தெரிய வருகின்றன.

இந்த வம்சாவழியினர் வெலிவோலு, சேப்ரோலு, இனைராவூர், ஸேகூர் தும்மபூடி முதலான பிராந்தியங்களில் இருந்து வருகின்றனர். இப்போது இந்த வம்சத்தினர் வாசிரெட்டி பிரபுக்களாகியவர் முக்கியமான பந்துக்களாக இருந்து வருகின்றனர். இந்த சூரியதேவரவார் புலிவர்ரு நுசர்தார்களென்று குட்பரிவரச கையெழுத்துப் பிரதியில் குறித்துள்ளவர் வால்யம் (66 பக்கம் 312) காலர்ல் என்பது பதாதி சைனியங்கள் என்று பொருள் ஆகின்றமையால் இவர்கள் அந்தப் பிரதேசங்களில் சதுரங்க சைனியங்களை வைத்துப் பரிபாலனம் செய்தனர் என்று கூறப்படுகின்றன.

117) சூர்யதேவர சஞ்சீவ ராயனிங்கார். இவர் கிறிஸ்து சகம் 1902-வருஷம் ஜெனித்தவர். இவர் பல பாஷைகளைக் கற்று பிரசித்தி பெற்றனர். நாட்டு வைத்திய முறையில் தேர்ச்சி பெற்றும், இங்கிலீஷ் வைத்திய டாக்டர் ஆகியும், பக்த சமாஜத்தில் மிக்க பற்றும், கிரந்தாலயங்களில் ஈடுபாடும் நூதனமாக சுக்ஜ்ஞான பத்திரிகையாளராகவும் பணியாற்றி வந்தனர். இவருடைய தந்தையின் பெயர் திருபலராயனு. மிக்க பிரபலஸ்தர் என்று கூறுகின்றனர்.

118) சூரியதேவர நரசய்யகாரு, இவர் சேப்ரோலு கிராமத்தில் இருபதாயிரம் (20,000) ரூபாய் செலவு செய்து ஒரு பாடசாலையை நிர்மாணித்துப் பிரபலமாக நடத்தி வருகின்றனர்.

119) தூளிபாள்ள கோபன்ன, இவர் தடுமர்தி கோத்ரவாசி, தர்சி தாலூக்கா ராஜபல்லியிலிருக்கின்றனர். கிறிஸ்து சகம் 1651-முதல் 1729-வருஷ மத்தியில் இருந்தவர். இவர் ராஜபல்லியில் கோபாலஸ்வாமி தேவாலயத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்து வேண்டிய மானியாதிகள் வழங்கிப் பிரபலமாக நடத்தி வந்தனர். இவர் தந்தையின் பெயர் குறவன்ன. பாட்டனார் திருநாமம் அக்கன்னகாரு என்று பிரசித்தி பெற்றவர்கள் ஆவார்.

8 - அஷ்டமப்ரகரணம்.

120) செவ்வல்பட்டு சமஸ்தானம் பெல்லமுவார், பெல்லம்சாமி நாயடு, பால் அல்லது பாலடுகு கோத்ர வாசிகள். கம்மவாரில் மிக்க மேன்மை பெற்ற குடும்பத்தினர் ஆவார்கள். இவர்கள் இப்பொழுது ராமநாதபுரம் ஜில்லாவிலிருக்கின்றனர். இந்த வம்சத்தில் சாமி நாயடு என்றவர் கிறிஸ்து சகம் 1800-வருஷ காலத்தில் மிக்க பிரசித்தி பெற்றவராக விளங்கினர். இவர் 1803 வருஷத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிடமிருந்து செவ்வல்பட்டு சமஸ்தானத்தை கிரையத்திற்குப் பெற்றுள்ளனர். இதற்கு சேர்ந்த கிராமங்கள் 26. அதில் 21 கிராமங்கள் ராமநாதபுரம் ஜில்லாவிலும், 5 கிராமங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் இருக்கின்றன. இந்த சமஸ்தான வைசால்யம் 36 மைல் விஸ்தீரணம். இதில் இப்பொழுது 18 ஆயிரம் ஜனங்கள் வாசம் செய்துகொண்டிருக்கின்றனர். இது சாமி நாயடுவின் கீழ் வந்த பின்னர் விருத்தியானது. முன்னர் இருந்த ஜனசங்கியை 2290. சாமி நாயடுவின் பூர்விகர் முதலில் பெல்லம்பட்டணம் என்ற பிரதேசத்தில் விஜயநகர ராஜ்யத்தில் இருந்தனரென்றும், அப்பட்டணம் மகமதியர்களால் பாழடைந்து விட்ட பின்னர் கசிபாடு அல்லது கஞ்சிவரம் என்ற பிராந்தியத்திற்கு வந்து தங்களுடைய பூர்விக ஸ்தானத்தை அங்கு பெல்லம்புதூர் என்ற பெயரால் ஒரு கிராமத்தை ஏற்படுத்தி, அங்கு வசித்து வருகையில் அங்கே ஜீவனோபாயத்திற்கு வேண்டிய வசதிகள் இல்லாததால், அதை விட்டு தென்னாட்டில் உள்ள அவர் பந்துக்களிடம் சேர்ந்துவிட்டனரென்றும் கூறுவர். இந்த சமஸ்தானத்தில் இப்பொழுது ஆதீஸ்வரராகிய சுப்பா நாயடு காருக்கு 9-வது பதியாக பெல்லம், அநந்தப்ப நாயடு என்றவர் இருந்தார். அவருக்கு குமாரர்கள் 5 பேர்கள் என்றும், அதில் ஜங்கம நாயடு, சங்கரப்ப நாயடு. இந்த சங்கரப்ப நாயடுவே இந்த வம்சத்திற்கு மூல புருஷனென்றும் காணப்படுகின்றன.

அநந்தப்ப நாயடு சகோதரராகிய அக்கப்ப நாயடு மதுரை சமஸ்தான பரிபாலகராயிருந்த காலத்தில் மிக்க பிரசித்தி பெற்றுள்ளனர். இவர் கிறிஸ்து சகம் 1623-1659 வருஷ மத்தியில் மதுரை ராஜ்ஜியத்தைப் பரிபாலித்து வந்த திருமல நாயக்கரிடமிருந்து இவர் கௌரவ மரியாதைகள் பெற்று வந்தனரென்றும், திருமல நாயடுவிடம் அவர் மற்றவர்களைப்போல அல்லாமல் திருமல நாயடுவைப் போலவே கௌரவம் பெற்று வந்தனர் என்றும், சாத்தூரில் ஒரு விஷ்ணு ஆலயத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்து அதற்கு வேண்டிய மான்யாதிகள் வழங்கி சாசனம் செய்து வைத்தனர். தவிர வருஷ உற்சவத்தைச் சிறப்பாக வருஷா வருஷம் நடத்தி வந்தனர்.

ஜங்கம நாயடு செவ்வல்பட்டியில் வாசம் செய்து வந்தனர். அக்காலத்திய பாளையக்காரர்களுக்கு மிக்க அனுகூலராக இருந்து வந்தார். இவருக்கு வெங்கடராம நாயடு என்ற குமாரன் பட்டத்திற்கு வந்து பிரஜைகளிடம் மிக்க பரிவுடனும் பாளையக்கரர்களுக்கும் வேண்டிய திரவிய உதவியும் செய்து வந்தனர். இவருக்கு குமார நாயடு என்ற புதல்வன் தோன்றினர். இவருடைய விஷயங்கள் புலப்படவில்லை. இந்த குமார நாயடுவின் புதல்வராகிய சாமி நாயடுகாரு செவ்வல்பட்டி சமஸ்தானத்தை ஏற்றுக் கொண்டும், எல்லாப் பிரஜைகளிடத்திலும் மிக்க பரிவு கொண்டு யுக்தப்படி ராஜ்ய காரியங்களை நடத்திவந்தார். பாளையக்காரர்களுக்கும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கும் போராட்டம் நடந்த காலம். இவர் அதை சமாளித்து சமாதானம் செய்து வைத்தனர். 1803-வருஷம் இவர் அவர்களிடமிருந்து சமஸ்தானத்தையும் பெற்று பரம்பரை பாத்தியதைக்கொண்டு பரிபாலித்து வந்தனர்.

இந்த செவ்வல்பட்டி பிராந்திய ஜமீன்தாரர்களாகிய சாமி நாயடு 1805-வருஷம் மரணம் அடைந்து போயினர். இவர் கொத்தபல்லிவாரின் பெண்மணியாகியவரைத் திருமணம் செய்து பெற்ற குமாரன் 1, குமாரத்திகள் 2. ஜேஷ்டகுமாரனாகிய பெல்லம்சாமி நாயகர் என்ற திருநாமம்

குமாரத்திகளை கொத்தபல்லிவாரில் தகுந்த மணமக்களுக்கு விவாகம் செய்து வைத்துள்ளனர்.

121) வெல்லம்சாமி நாயகர் 2, இவர் 1805-வருஷம் தந்தையின் மரணத்திற்குப் பின்னர் சமஸ்தானபதியாக வந்தார். அப்பொழுது இவருக்கு வயது 21. இவர் ஆட்சி காலத்தில் அநேக கிராமங்களுக்கு பாளையக்காரர்களை நியமித்து வைத்தார். இது வரையிலிருந்த கிராமங்களில் புது வீடுகள் கட்டி அநேக விவசாயிகளுக்கு வேண்டிய பூமிகளை வழங்கி, அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்தும், வியாபாரிகளுக்கு வேண்டிய ஸ்தலங்களை ஏற்படுத்தியும், ஏத்ரவாசிகளுக்கு வேண்டிய ஸ்தலங்களை ஏற்படுத்தியும் எல்லோராலும் புகழ்பெற்று வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் இந்த சமஸ்தானம் ஈஸ்ட் இந்தியா சம்பெனியாரின் கீழாக இருந்த போதிலும், கள்ளர்களில் களவாட்டம் குறைந்தபாடில்லை. அப்போது 2-வது இந்த சாமி நாயடு ஜமீன்களிடம் கட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி, அந்த துஷ்ட வம்சத்தினரை அடக்கி பிரஜைகளுக்கு தக்க பாதுகாப்புகளையும் ஏற்படுத்தி பிரம்ஹ குலத்தினருக்கு வேண்டிய சௌகர்யாதிகளையும் செய்து கொடுத்தும் வந்தார். இவர் கொத்தபல்லி வம்ச சமஸ்தானத்தில் ஒரு பெண்மணியை விவாகம் செய்து கொண்டு 25-வருஷம் ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்து, கிறிஸ்து சகம் 1831-வருஷம் சுவர்க்கம் அடைந்து விட்டார். இவருக்கு 6 பேர் குமார்த்திகளிருந்தனர். அவர்களில் 3 பேரைக் கொத்தபல்லி சமஸ்தான வர்க்கத்தாருக்கு விவாகம் செய்து கொடுத்தும், மற்றவர்களைக் கொண்ட-பல்லி சமஸ்தான வர்க்கத்தினருக்கும் பாணிக்ரஹணம் செய்து கொடுத்துள்ளனர்.

இவருக்கு சுப்பா நாயகர் என்ற குமாரனும் இருந்தார். அப்பொழுது இவருக்கு தக்க வயது ஏற்படவில்லையாதலால் இந்த சமஸ்தானம் கவர்ன்மெண்டார் வசம் ஆயிற்று.

122) பெல்லம் சுப்பா நாயகர் ஜமீன்தார், இவர் கிறிஸ்து சகம் 1832-வருஷம் தக்க வயது நிர்ணயிக்கப்பட்டு கவர்ன்மெண்டாரிடமிருந்து சமஸ்தானத்தைப்பெற்று தமது பூர்வீகர் போலவே சமஸ்தானத்தை நடத்தி வந்தார். குதிரைச் சவாரியில் மிக்க தீரராகப் புகழ் பெற்றார். சமஸ்கிருதம் தெலுங்கு பாஷைகளில் விசேஷ பாண்டித்யம் பெற்றுவந்தார். இவர் சகோதரன் தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் பத்யங்களை எழுதி வந்தார். இவர் தமிழ்நாட்டிலிருந்தும் சகல பாஷைகளையும் கற்று பிரசித்தி பெற்று வந்தார். சுப்பா நாயடுகாரு விவசாயத்தில் மிக்க ஆர்வங்கொண்டு விவசாயத்தைப் பிரபலமாகப் பிரஜைகளுக்குச் செய்து காட்டிவந்தார். சேவல்பட்டி கிராமத்தில் அநேக தென்னந்தோப்புகள், மாந்தோப்புகளை உண்டாக்கி வந்தார். இவர் காலத்தில் ஏரி, குளங்கள் முதலானவற்றை மிக்க பிரபலமாக்கி வந்தார். அக்காலத்தில் சர்வேயும் நடத்தப்பட்டன.

இவர் செவ்வல்பட்டி கிராமத்தில் வீதிகளையெல்லாம் விஸ்தாரப்படுத்தியும், எந்தெந்த வகுப்பினர் எங்கெங்கு குடியிருக்கலாமோ அந்தந்த இடங்களில் அவர்களைக் குடி அமைத்து சாஸ்தர யுக்தப்படி ஏற்பாடு செய்து பட்டணத்தை நிர்மாணம் செய்துவைத்தனர். இவர் 'சண்முக விலாசம்' என்ற பவனத்தை ஸ்தாபித்துள்ளார். அதில் வெளிச்சம், காற்றோட்டம் முதலானவற்றை நூதனமாக ஏற்படுத்தி உள்ளார். அது சுமார் 100-வருஷமாகியும் இன்னும் புதிய மாளிகையாகக் காணப்படுகின்றன.

இவர் வித்யாதரரென்றும், பெரிய மேதாவியென்றும், நியாயமூர்த்தி என்றும் தெரிந்து அந்த ஜில்லா கலெக்டர் இவரைக் கூட வைத்துக்கொண்டு 'நீதி விசாரணை' நடத்தி வந்தார். இவரை ஆழ்வார்திருநகரியில் உள்ள தேவாலயத்திற்குத் தர்மகர்த்தவாக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் அந்த தேவாலயத்தில் சாஸ்தர யுக்தப்படி பூஜை உத்சவாதிகள் நடத்தப்பட்டு வந்தன. இவர் 90 வயதிற்கு கீழ்பட்ட வயதுடைய சமஸ்தான அதிபதியாகியும், அங்குள்ள

முதியோர்கள் எல்லோரும் இவரைக் கொண்டாடி வாழ்த்தி வந்தனர். இவருடைய சமஸ்தானம் எல்லா வகையிலும் பிரபலமாக விருத்தியடைந்து வந்தன. இவர் சப்படியார் வம்சத்திய பெண்மணியை விவாகம் செய்து 3 குமாரர்களை யும், 3 குமார்த்திகளையும் பெற்றனர். இந்தப் பெண்மணி களை கொத்தபல்லி, கொண்டபல்லி வம்சத்தினருக்கு விவாகம் செய்து கொடுத்தனர். இவர் 1853-ம் வருஷ காலத்தில் காலகதி அடைந்துவிட்டார். பின்னர் இவருடைய ஜேஷ்ட குமாரனாகிய 3-வது சாமி நாயகர் பரிபாலனத்திற்கு வந்தார். ஆயினும் இவர் நடத்தையில் பிரஜைகள் அசமாதானங்கொண்டு சர்க்காரிடம் தெரிவிக்க, கவர்ன்மெண்டார் சமஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டனர். இவர் 6-வது குமாரன் 15-வது பிராயத்தில் துரதிர்ஷ்டவசத்தால் இறந்து போகவே, அதனால் அவர் சகோதரனாகிய 2-வது சுப்பா நாயடுவை சமஸ்தானபதியாக நியமித்தனர். ஆயினும் இவருங்கூட மைனர் என்று கோர்ட்டார், சமஸ்தானத்தை கவர்ன்மெண்டாரிடம் ஒப்படைத்தனர். கவர்ன்மெண்டார் பரிபாலித்து வந்தனர்.

123) பெல்லம் சுப்பா நாயடு ஜமீன்தார் 2, இவர் கிறிஸ்து சகம் 1867-வருஷ காலத்தில் தக்க வயதடைந்து சமஸ்தான பாலனத்திற்கு வந்தார். பூர்வீகர்களைப் போலவே சமஸ்தானத்தை நடத்தி வந்தார். இவருக்கு தோட்ட பூமிகளின் மீது மிக்க ஆவல் கொண்டு அநேக பூமிகளுக்கு கிணறுகள் வெட்டியும், ஓடை, கால்வாய்களால் அநேக பூமிகளை நஞ்சையாக்கி, விவசாயத்தை விருத்தியாக்கி பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து வந்தார். இவர் பால்ய வயதில் குதிரைச்சவாரி செய்து வேட்டையாடி யும் வந்தார். திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் இருந்து பணியாற்றி வந்தார். கிறிஸ்து சகம் 1897-வருஷத்தில் காலகதி அடைந்து விட்டனர்.

கிறிஸ்து சகம் 1877-வருஷத்தில் இவருக்கு விக்டோரியா மகாராணியார் இந்தியா சக்கரவர்த்தி பட்டம் பெற்றதன் காரணமாக டில்லியில் நடத்திய தர்பாரில்

இந்தியாவிலுள்ள அரசினர்களுக்கு கௌரவ பட்டங்கள் வழங்கியபோது இவருக்கும் யோக்யதா பத்திரம் வழங்கப் பட்டன. இவர் ஸ்ரீவில்லிப்புத்தூரில் 'இந்து ஹைஸ்கூல்' கட்ட ஏற்பாடு செய்து, தனவான்களிடம் சகாயம் பெற்று ஒரு பவனத்தை நிர்மாணித்து, அதற்கு வேண்டியவற்றை எல்லாம் தயார் செய்து நடத்தி வந்தார். இவர் ஜில்லா போர்டு ஸ்தானத்திலும், டிவிஷன்களிலும் அநேக பவனங் களையும் நிர்மாணித்து வைத்துள்ளார். இவர் கொத்தபல்லி வார் வம்சத்திய பெண்மணியை பரிணயம் செய்து கொண்டனர். இவருக்கு சுப்பா நாயடு என்ற திருக்குமாரன் தோன்றினார். இவரும் தம் தந்தையைப்போலவே பொதுக் காரியங்களில் மிக்க ஆர்வங்கொண்டு நடந்து வந்தார். ஆதாயத்திற்கு மேலாகச் செலவுகள் ஏற்பட்டதால் ருணபாதை உண்டாகிய சமயத்தில் குடும்பத்தில் தகாதா ஏற்பட்டு இவருடைய சகோதரர்கள் O. S. No. 11 of 1896-ல் வியாஜ்யம் தாக்கல் செய்து வந்தனர். அக்காலத்தில் 1897-வருஷ மத்தியில் இவர் காலமாகிவிட்டனர்.

124) பெல்லம் சுப்பா நாயகர் (3) ஜமீன்தார். இவர் தந்தையாகிய 2-வது சுப்பா நாயடு ஜமீன்தார் காலமான தால் சமஸ்தான பாலனம் மிக்க கிலேச நிலையில் இருந்தன. இவர் சிறு வயதாயிருந்த காலம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் தமிழ், தெலுங்கு கிரந்தங்களைக்கற்று பின்னர் திருநெல்வேலி இந்து காலேஜில் ஆங்கிலத்தையுங் கற்றுவந்தார். இவர் பரிபாலனத்திற்கு வந்த பின்னர், இவருடைய சிறிய தந்தையர்கள் நடத்திய வியாஜ்ஜியம் ராஜாங்கத்தாரால் சமாதானம் செய்யப்பட்டு, அவர்களுக்குச் சில பூமி, காடு களைக்கொடுக்கும்படி தீர்மானம் செய்துள்ளபடி அவர்களுக்குச் சில பூமிகளையும், அலவன்சும் கொடுத்து வந்தார். குடும்பத்தில் ஒற்றுமையும் விருத்தி அடைந்து வந்தன. அவர்களிடம் ராஜீநாமா பத்திரத்தையும் இவர் பெற்றுக்கொண்டனர்.

இவர் தந்தையின் காலத்தில் செய்யப்பட்ட கடன் பாக்கிகளை சில வருஷங்களில் கட்டித் தீர்த்துவிட்டனர்.

இவருக்கு குதிரைச் சவாரியில் மிக்கப் பிரியம் உண்டு. இதே போல விவசாயத்திலும், சரித்திரங்களிலும், நீதி முறைகளிலும், வேதாந்தங்களிலும் மிக்க பற்று கொண்டு நடத்தி வந்தார். இந்து மத அபிமானத்திலும் மிக்க பற்றுண்டு.

இந்த சமஸ்தானம் வப்ச பரம்பரையாக ஏற்பட்டதாயினும், மதராஸ் அவிபாஜ்ய சமஸ்தானங்களின் ஆக்டுகளில் சேராத காரணத்தால், மதராஸ் ஆக்டு 9, 1930-வருஷத்தில் லெஜிஸ்லேடிவ் கவுன்சில்கள் இந்த சமஸ்தானத்தை அவிபாஜ்யம் சமஸ்தானத்துடன் சேர்த்துக் கொண்டனர். சுப்பா நாயடுகார் ஜமீன்தாராயினும், ப்ரஜா சேவாதத்பரராகி தாலூகா, ஜில்லா போர்டு மெம்பராகப் பணியாற்றி வந்து, திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்கள் இரண்டையும் 3 ஜில்லாக்களாக்கி, ராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பராக இவர் 1936-ம் வருஷம் டிசம்பர் வரை 4-வருஷ காலம் உப-அத்யக்ஷகராகப் பணியாற்றி வந்தார். இவர் 1920-வருஷம் நடந்த தக்ஷிண தேசப் பிரதம கம்ம மஹாஜன சபை அத்யக்ஷகராக இருந்து சங்கத்திற்கு அநேக ஹித உபகாரியங்களைச் செய்து வந்தனர். இவர் கொண்டபல்லி வம்சத்தில் ஒரு கன்யாரத்தினத்தைப் பரிணயம் செய்துகொண்டனர். இவருக்கு 1902-ம் வருஷம் அரிச்சந்தர நாயடு என்ற குமாரன் தோன்றினர். இவர் வயதடைந்து கொத்தபல்லிவாரின் வம்சத்திய கண்மணியை விவாகம் செய்து கொண்டனர். இந்த சமஸ்தானத்தின் ஏரி, குளங்களின் பக்கம் நெல் கொடிக்கால் மாகாணியும், இதர இடங்களில் மேட்டுப்பாங்கான பூமிகளில் பருத்தி, புகையிலை, மிளகு, வேர்க்கடலை முதலிய பண்டங்கள் விளையக்கூடியதாகச் செய்து வைத்து ஷை பூமிகளுக்கு 4 புறங்களில் வேலிகளை உண்டாக்கி, பக்கத்திலுள்ள சர்க்கார் கிராமங்களுக்கு ஏற்படுத்தியுள்ள கிஸ்து துகையை விட இந்த கிராமங்களுக்கு குறைத்து வசூலித்து வந்தனர். இவர் எல்லோரிடத்திலும் விஸ்வாசமாக நடந்துவந்தனர். இந்த சமஸ்தானத்திற்கு வருகின்ற ஆதாயம் ரூ. 15,767-0-0

சமஸ்தான செலவுகள், சகோதராதியர் செலவுகள் மொத்தம் ரூ. 23,183-0-0 ஆகின்றதாக கணக்குகளில் காணப்படுகின்றன. இந்த சமஸ்தானத்தில் மாகாணி பூமியைச் சாகுபடி செய்வதற்கு 15 ஏரிகள் இருந்தன. இவைகளை ஜமீன்தாரே மராமத்து செய்துவருகின்றனர்.

125) கபிலேஸ்வரபுரம் பேசனகர் சமஸ்தானங்கள், பலுசுவார், பலுசுபெதசர்வாராயடுகாரு, இந்தவம்சத்தின ருடைய கோத்தரம் எருவாகல கோத்தரம். இவர்கள் கோதாவரி ஜில்லாவில் பிரசித்தி பெற்றவர்களாக விளங்கு கின்றனர். இந்த வம்சத்தினரில் பெதசர்வாராயடுகாரு மிக்க கியாதி பெற்று கபிலேஸ்வரபுரம் சமஸ்தானத்தை கிறிஸ்து சகம் 1818-ல் சம்பாதித்தனர். இதற்கு இவர் உப்பலபாடி ராயராஜுவாரிடமிருந்து கிரையத்திற்குப் பெற்றுக்கொண்டனர். அக்காலத்திலிருந்த சமஸ்தானங்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஸ் தொகையைச் செலுத்த முடியாத நிலையிலிருந்தன. அதனால் அவர் ஊர்து வர்க்கத்திலிருந்து மிக்க சாகசமாக விக்கிரயத்தைச் செய்து முடித்தனர். இந்த வம்சத்தினருக்கு கோட்டபாடுவாரும், கொரபாட்டிவார், கம்மவார் என்ற பல வீட்டுப் பெயர்கள் உண்டு. இவர்கள் பந்துக்களாக இருக்கின்றனர். இந்த பெதசர்வாராயடுகாரின் தந்தையின் பெயர் புச்சய்யகார் என்றும், இவர் தந்தை நாகிநீடு என்றும், இவர் தந்தை பிக்கநீடு என்றும், இவர் தந்தை நாகநீடு என்றும் கூறுவர். ஆதலால் இவரே இந்த வருஷத்திற்கு மூல புருஷன் ஆவார். 2-வது நாகிநீடுகாருக்கு புச்சய்ய முதல் ஸர்வப்ப, அச்சய்ய என்ற குமாரர்கள் இருந்தனர்.

இந்த கபிலேஸ்வரபுர சமஸ்தானத்திற்கு ரூபாய் 8525—0—0 பேஷ்கஸ் செல்லுபடியாகி வருகின்றன. இதில் கேதாரிலங்கை, ஜோள்லங்க, நாராயணலங்க, வீதிவாரி லங்க, வாவாடபாலமென்ற 5 சிறு கிராமங்கள் இருந்தன. இது கௌதமீ நதியின் தீரத்திலிருக்கின்றன. இது தக்ஷிண பாகீரதி நதியென்று கூறுவர். இந்த கபிலேஸ்வரம், கோடி பல்லி புண்யக்ஷேத்ரத்திற்கும், த்ராக்ஷாராமத்திற்கும் 10

மைல் தூரத்திலிருக்கின்றன. இதற்குச் சரி அத்தாகத் தாதபூடி (தாதபுரி) மந்தபல்லெ, வானபல்லெ, கோருமில்லி அக்ரஹாரங்கள் உண்டு. இவைகளெல்லாம் சரித்திரப் பிரசித்திபெற்ற கிராமங்களாகும். இந்த கிராமங்கள் பூர்வீகமாக பெத்தாபுர சமஸ்தானத்தில் டேகிமுகா கிராமங்களுடன் சேர்ந்திருந்தன. சமஸ்தானத்திற்கு பேஷ்கஸ் செலுத்தாத காரணத்தால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் ஏலத்திற்கு விட்ட சமயம் அவைகள் மாறிப் போயின. அவைகள் சுமார் இரண்டு மூன்று தடவைகளில் மாறி மாறி கடைசியில் உப்பலபாடியர்களால் நம்மபெத சர்வாராயடுகாருக்குக் கிடைத்தன. இவர் கிராமங்களுக்கு தலைவராக இருந்து எந்த விவகாரங்களையும் தானே விசாரித்து பைசல் செய்து வந்தார். தங்கள் பூர்வீக பூமி களில் விவசாயம் செய்து கொண்டு பொதுமக்களிடம் விஸ்வாசமாக வாழ்ந்து வந்தார். நாளாவட்டத்தில் பெரிய தனவந்தராகி கடைசியில் ஜமீன்தாராயினர். இவர் ஜமீன்தார் ஆவதற்கு முன்னரே தன்னுடைய சுதந்திர பூமி களில் 2 புட்ல பூமி அதாவது 640 வள்ளம் பூமியைக் கபிலேஸ்வர அக்ரஹாரத்தில் மிக்க ஏழைகளாயிருந்த பிராம்ஹணர்களுக்கு சர்வசுதந்தரமாக அனுபவித்து வருவதற்கு வேண்டிய சாசனங்கள் மூலமாகக் கொடுத்து உள்ளனர். கிறிஸ்து சகம் 1800-ஆம் காலத்தில் அந்த பிரரந்தியங்களைப் பரிபாலித்து வந்த பெத்தாபுர சமஸ்தானதிபதியாகிய ராமகஜபதிராஜு இவரைத் தன் சமஸ்தானத்திற்கு வரவழைக்க இவர் அங்கு புறப்படும் பொழுது வேதபாராயண கோஷ்டி பிராம்மணர்களையுங் கூட அழைத்துக்கொண்டு, ஆயிரம் அரசாணிக்காய்களைக் கொண்டு சமஸ்தான காணிக்கை செலுத்த ஆவல் கொண்டு செல்ல, இந்த வைபவத்தைக் கண்டு சமஸ்தான ராமகஜபதி ராஜு, இவரைக் கேட்ட கேள்வி நீர் எதற்காக இந்த பிராம்மணருக்கு அவ்வளவு விஸ்தீரணமுள்ள பூமியை அக்ரஹாரமாகக் கொடுத்து கிஸ்தியையும் நீக்கினீர். பதில் இவர் சொல்வது, பூர்வீகமாக இருந்த அக்ரஹாரம் குடியிருக்க முடியாதபடி நீர் ஊற்றுகள் ஏற்பட்டு வந்ததனால், மேட்டுப்பாங்கான பூமியை அக்ரஹாரமாக்கிக்

கொடுத்தனம் என்று சொல்லினர். இதற்கு ஏற்பட்ட கிஸ்தி தொகையை வேறு பூமிகளுக்கு ஏற்றி வசூல் செய்து கொள்ள பிரியம் இருக்கின் அப்படியே செய்யலாம் என்றனர். இதற்கு அவர் சொன்னது: நீர் அக்ரஹாரத்தைக் கட்டிக் கொடுப்பது, நாங்கள் அழித்து விடுவது முறையல்ல. நீர் செய்ததையே அங்கீகாரம் செய்து கொள்ளுகிறோம் என்று முடிவு கூறினர்.

வருஷா வருஷம் தவறாது ஆயிரம் பிராம்மணர்களுக்கு ஒரு ரூபாய் தக்ஷிணையுடன், ஒரு பூசணிப்பழமும் கொடுத்து வந்தார். இதைப்பெற்றுக்கொண்டு ஆனந்தமாக ஆசி கூறி வாழ்த்தி வந்தனர். தவிர வருஷா வருஷம் அங்கு வெங்காயம் பயிர் செய்து ஏராளமாகப் பெருகி வந்தமையால் அந்தப் பிரதேசத்திற்கு (மெந்த்தி பெருதுவாதசி கபிலேஸ்வரம்) என்று பெயர் ஏற்பட்டதென்று கூறுகின்றனர். தவிர பனை ஓலைகளைக்கொண்டு பாய்களைப் பின்னி வந்த பாதாரிகளுக்கு இனாமாக 6 ஏக்கர் பனங்காட்டு பூமியைக்கொடுத்துள்ளனர்.

கிரஹண புண்ணிய காலங்களில் வைதிக பிராம்மணர்களுக்கு பூதானம், கோதானங்களையும் வழங்கி வந்தனர். தானம் கொடுக்கப்பட்ட கோவானது சாஸ்த்ர யுக்தப்படி எல்லா அங்கங்களுடன், வர்ணங்களும் பொருந்தியதாக இருப்பதையே கொடுக்கவேண்டுமெனக் கருதி ரூ. 150-0-0 விலையில் சிந்து தேசத்திய பசுக்களையே வாங்கிக் கொடுத்து வந்தனர். அத்துடன் நான்கு ஏக்கர் பூமியையும் தக்ஷிணை தாம்பூலத்துடன் வழங்கி கீர்த்தி பெற்றுள்ளனர்.

இவர் கிராமம் நதியின் பக்கமாக இருந்தமையால் அடிக்கடி ஊற்றம் பெருகி. கிராமவாசிகளுக்குத் தொல்லைகள் ஏற்பட்டு வந்தபடியால் அதை மாற்றி சௌகரியமாகக் கிராமத்தை நிர்மாணித்து அங்கு குடியேற்றி வேண்டிய வசதிகளையும் செய்து வந்தனர். அங்கே நல்ல தண்ணீர் தடாகம் என்ற பெயருடன் ஒரு தடாகத்தை உண்டுபண்ணி உள்ளார். இப்பொழுது அதற்கு 'கொத்தசெருவு' எனப் பெயர் வைத்துள்ளார். இவர் கொலுபாடி பாபன்ன என்றவருடைய சகோதரியாகிய பாபநம்ம ராமலக்ஷ்மம்மாளை

விவாஹம் செய்துகொண்டனர். ராபலக்ஷ்மம்மாளுக்கு சந்தானம் இல்லை. பாபநம்மாளுக்கு புச்சி கிருஷ்ணய்ய, பட்டாபிராமய்ய, ஆதிநாராயணன் என்ற 3 புத்திரர்களும் 3 புத்திரிகளும் தோன்றினர். இந்தப் பெண்மணிகளில் ஒருவரை தனது மூத்த மனைவியின் சகோதரன் புத்திரனாகிய கோலுகோபாடி அநர்தராயடு என்றவருக்கும், 2-வது புத்திரியைக் கொரபாடி காதெய்ய என்றவருக்கும் விவாகம் செய்து கொடுத்து வைத்தனர்.

இவருடைய மூத்த குமாரனாகிய புச்சி கிருஷ்ணய்ய காருமகி கிராமயீதாவார் வம்சத்திய பாபநம்ம என்ற பெண்ணையும், 2-வது பட்டாபிராமய்யகாரு பாணங்கி பல்லெகம்ம வம்ச வெங்கடரமணம்ம என்ற பெண்ணையும், 3-வது குமாரன் கொலுபாடி தொரய்யகார் குமார்த்தி ஆகிய ராமலக்ஷ்மம என்ற பெண்ணையும் விவாகம் செய்து கொண்டனர். இவர் கிறிஸ்து சகம் 1847-ம் வருஷம் காலமாகி விட்டார்.

126) பலுசுபுச்சி கிருஷ்ணய்ய ஜமீன்கார்கார், பெத சர்வராயர் மரணமடைந்த காலம் இவருக்கு 28-வயது. உடனே சமஸ்தான பதவியை ஏற்றுக்கொண்டு தமது தந்தையைப்போலவே சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்தார். இவர் கிறிஸ்து சகம் 1852-வருஷம் கேசனகுர்ரு சமஸ்தானத்தையும் கூட சம்பாதித்துக் கொண்டுள்ளனர். இந்த சமஸ்தானம் அப்போதைக்கு ஸ்ரீராஜா தந்துலூர் விஜயகோபால ராஜுவின் 2-வது குமாரனாகிய புச்சி கிருஷ்ணய்ய ராஜுவுக்குச் சேர்ந்ததாகும்.

இந்த கேசவகுர்ரு சமஸ்தானமும் ஆதியில் பெட்டாபுர சமஸ்தானத்தில் ராணி லங்கமாக 18 கிராமங் களுடன் சேர்ந்திருந்தன. இந்த சமஸ்தானத்தில் (1) கேசவ குர்ரு, (2) தில்ளகுப்ப, (3) முறுமாள்ள முதலாக 6 கிராமங் கள் கொண்டுகுர்ரு என்றவர்களுடையது. இதில் முதல் 3 கிராமங்கள் கௌதமீ நதியின் தென் பாகத்திலும், வட பாகத்தில் மற்ற கிராமங்களும், மற்றவை தென்பாகத்திலும்

இருக்கின்றன. இந்த சமஸ்தானம் செலுத்தவேண்டிய பேஷ்கஸ் தொகை ரூ. 11,110-0-0. இந்த சமஸ்தானத்தில் விசேஷமாக ராஜாக்கள் எல்லோரும் ரைதுக்களாகவே இருந்து வந்தனர். இவர் நூதனமாக கம்ம ஜமீன்தார் மகாராஜராஜஸ்ரீ என்று மனுக்களை எழுதவேண்டுமென்றும் (மகா-ரா-ரா-ஸ்ரீ என்பது பட்டம்) ஏற்பாடு செய்துவந்தனர்.

புச்சி கிருஷ்ணய்யகார் தன் தந்தையைப் போலவே பிராம்மண குலத்தவரிடம் பக்தி மரியாதையுடன் நடந்து கொண்டு வந்தனர். த்வாதசி, வருஷ உத்சவங்கள் முதலான காரியங்கள், ஏழை எளியவர்களுக்கு வேண்டிய உதவிகள் முதலான காரியங்கள், தன்னையொத்த ஜமீன்களிடம் மிக்க விஸ்வாசம், பிரஜைகளுக்கு வேண்டிய உபகாரங்கள், பிராம்ஹணரிடம் மிக்கபக்தி விஸ்வாசங்களையும் நடத்தி வந்தனர். தன்னை அடுத்த பந்து வர்க்கத்தினருக்கும் வேண்டிய உதவிகளும் செய்துவந்தனர். இவருக்கு புச்சிசர்வாராயடு என்ற குமாரனும், ராமலக்ஷம்ம, பாபநம்ம என்ற 2 குமாரத்திகளும் பிறந்தனர். இதில் ராமலக்ஷம்மாளைக் கொலுபாடி அநந்தராயருக்கு விவாகம் செய்து கொடுத்தார். பாபநம்மாளைக் கம்மபுச்சய்யகாருக்கு விவாகம் செய்து கொடுத்தார். இவர் கிறிஸ்து சகம் 1853-வருஷம் காலமாகிவிட்டார்.

127) பலுசுபட்டாபி ராமய்ய ஜமீன்தார். இவர் புச்சிகிருஷ்ணய்ய ஜமீன்தாருக்குப்பின்னர், இவர் சகோதரர் ஷை பட்டாபிராமய்ய சமஸ்தான அதிபதியாக வந்தார். இவர் மிக்க சாத்வீக குண சம்பன்னராகியவர். இவர் எப்பொழுதும் பண்டித கோஷ்டிகளுடன் சதா காலக்ஷேபங்களைக்கேட்டு தெய்வபக்தியில் ஈடுபட்டு வந்தார். இவருக்கு சந்தானம் இல்லாததால், இவர் சகோதரராகிய ஆதிநாராயணனுக்கும் சந்தானம் ஏற்படவில்லை. இவரும் காலமாகி விட்டதனால், இவர் கிறிஸ்து சகம் 1866-வருஷம் வரை சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்தார். ஷை வருஷமே இவரும் காலமாகிவிட்டதால் புச்சிகிருஷ்ணய்யகார் குமாரன் சமஸ்தான அதிபதியாக வந்தார்.

128) பலுசு புச்சி சர்வராயடுகாரு ஜமீன்தார், இவர் கிறிஸ்து சகம் 1866-ஞ பதவி ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர் பாணங்கிபுற கம்ம பாபிநீடுகார் குமாரத்தியாகிய ராமலக்ஷ்மாளை விவாகம் செய்துகொண்டனர். 1869-ஞ மரணமடைந்துபோயினர். இவர் சிறிய தாயாராகியவரால் பால்ய விவாகம் செய்து கொண்டனர். இவர் பார்யை ஆகிய ரமாரமிக்கு வயது 8. அதனால் இவர் தந்தையே சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்தனர். ஆயினும் கொஞ்ச நாளில் இவரும் காலமாகிவிட்டபடியால் சமஸ்தானத்தை கோர்ட்டார் வசம் சேர்ந்துவிட்டன. 1, 2 வருஷங்கள் தாசில்தார் பார்வையில் நடந்துவந்தன. பின்னர் அந்த சமஸ்தானத்திற்கு ஒரு மானேஜரை நியமித்து நடத்திவந்தனர்.

இதற்குள்ளாக புச்சி சர்வாராயடுகார் இறப்பதற்கு முன்னரே தன்னைத் தத்து எடுத்துக்கொண்டதாக, தாயாதிகளில் இவர்கள் இருவரும் தகாதா செய்தனர். அதைக் கலெக்டர் விசாரித்து விவகாரத்தைத் தள்ளுபடி செய்துவிட்டனர்.

கேசவகுர்ரு சமஸ்தானத்தில் தங்களுக்கும் பாகம் உண்டென்று மற்றும் சிலர் தாவா செய்தும் கூட ராமலக்ஷ்மாளுக்கே சுதந்திரம் கிடைத்தது. கோர்ட்டார் 1866-வருஷம் வரைப் பரிபாலித்துப் பின்னர் ராமலக்ஷ்மகாருக்கு சமஸ்தானத்தை ஒப்படைத்தனர்.

129) பலுசுராமலக்ஷ்மஜமீன்தார், இவர் காலத்தில் சமஸ்தானத்தில் அநேக தொல்லைகள் ஏற்பட்டும், வர்க்கப் போராட்டங்களும் நடந்து வந்தன. ஆயினும் அவற்றை எல்லாம் சமாளித்துக்கொண்டு சமஸ்தானத்தை ஒழுங்கு முறையில் நடத்தி வந்து பெதசர்வாராயடு என்றவர் வம்சத்தியர் சம்மந்தமில்லாத காரணத்தால் சமஸ்தானத்திற்கு வேறு யாரையாவது நிறுவ வேண்டுமென்று கருதி தம் தாயாரையும் மற்றவர்களையும் கொண்டு, கபிலேஸ்வரபுர சமஸ்தானப் பிரபுவாகிய பெதசர்வாராயடுகாரின் சிறிய தந்தையாகிய புச்சன்னகாரின் 4-வது குமாரனாகிய சின்ன

திம்மய்யகாருக்குப் பேரனுமான சர்வாராயர் குமாரன் பட்டாபிராமனைத் தத்தாகப் பெற்று கிறிஸ்து சகம் 1888-வது தத்தாகிய பட்டாபிராமன் தன் வம்சத்திய வார்சுதாரனே ஆவார். கிறிஸ்து சகம் 1870-வருஷம் ஜனனம் ஆனவர். இதனால் 18-வயது உடையவராதலால் ராம-லக்ஷ்மகாரும், கேசவகுர்ரு சமஸ்தானத்தையும் இவரிடம் ஒப்படைத்தனர் கபிலேஸ்வர சமஸ்தானத்தை மட்டும் தன் ஜீவதசை வரை தானே பரிபாலித்துவந்தனர். இவர் குமார ஜமீன்தாராகிய பட்டாபிராமய்யகாருக்குத் தன் தாய்மாமன் குமார்த்தி ஆகிய ஜானகியம்மாளை விவாகம் செய்துகொண்டார். 1889-வருஷத்தில் நடந்தன. இதற்குள் தத்துப் புத்திரனுக்கு ஜனக பிதாமகனாகியவருக்கு சகோதரனாகிய வெங்கட கிருஷ்ணய்யகார் தாம் கொடுத்த, தத்து ராமன்னனுக்கு புத்தி ஸ்வாதீனமில்லாது போக, இதனால் தத்து செல்லாதென்று கோதாவரி ஜில்லா போர்டு கோர்ட்டில் தாவா செய்து 9/1889-ம் விசாரணை இல்லாமலே கேன்சலாயின. பின்னர் 1892- வருஷத்தில் தத்தனுக்கே பாத்தியம் உண்டென்றுஜில்லா போர்டார் தீர்மானம்செய்துவிட்டனர்.

இந்த சுபவார்த்தை கேட்பதற்கு முன்னமே தத்தனாகிய பட்டாபிராமய்ய ஜமீன்தார் 1896-வருஷம் மரணமடைந்து விட்டனர். அப்போது இவருக்கு 2 பேர் குமாரர்களும், 3 பேர் பெண் புத்திரிகளும் இருந்தனர். இதில் முதல் குமாரன் புச்சி சர்வராயடுகாரு, 2-வது குமாரன் தந்தை இறக்கும் சமயத்தில் கர்ப்பவாசமாக இருந்தார்.

இதனால் ராமலக்ஷ்ம ஜமீன்தார் ஆக கேசவகுர்ரு சமஸ்தானத்தையும் புத்திர சோகத்துடன் பரிபாலிக்க நேர்ந்தன.

பட்டாபிராமய்ய சுமார் 26-வயது வரையில் தான் ஜீவித்திருந்தார். அதில் சங்கீதத்திலும், வீணை வாத்யங்களிலும், சாயாக்ரஹணவிப்ர வினோதாதி வித்தைகளிலும் பிரவேசித்துக் கற்று வந்தார். இவர் ஆந்தர பாஷையில் நக்ஷத்திர பத்திரிகையைப் பிரசுரித்து வந்தார். இவர்

2-வது குமாரனாகிய சூரியநாராயணமூர்த்தி 1898-வருஷத்தில் தந்தையைப்போலவே காலமாகிவிட்டபடியால் இந்த சமஸ்தான உத்தர அதிகாரியாகிய புச்சி சர்வா ராயடு காலே பரிபாலித்து வந்தார். இவர் 1892-வருஷத்தில் ஜனித்தவர். ராமலக்ஷ்மம்மகாரு தன் பேரனிடம் மிக்க அன்புகொண்டு வளர்த்து வந்தார். இவர் 1901-ம் வருஷம் கேவக்ராமவாசியாகிய மன்னே வெங்கடாசலனத்தின் புத்திரியாகிய ஸ்ரீலக்ஷ்மிதேவியை விவாகம் செய்து கொண்டார். பின்னர் சமஸ்தானத்தை நல்ல முறையில் பரிபாலித்து வந்து கிறிஸ்து சகம் 1906-ம் வருஷத்தில் காலமாகிவிட்டார்.

இந்த அம்மையார் தன் பந்து வர்க்கத்தினர், ஏழைகள் முதலானவர்களுக்கு வேண்டிய தனதான்யாதி களைக்கொடுத்து அவர்களிடம் ஆசி பெற்று வந்தார்.

தேவாலயங்களுக்கு ரதங்கள், மடங்கள், சத்திரங்கள் வெங்கலத்தினால் செய்யப்பட்ட பெரிய கண்டாமணிகள் முதலியவற்றை நிர்மாணித்து வந்தார். தவிர திவ்யதேச யாத்திரை செய்து அநேக க்ஷேத்திரங்களை தரிசித்துவந்தார்.

இவர் சபிலேஸ்வரத்தில் ஒரு சத்திரத்தைக் கட்டி எல்லா மதத்தினரும் தங்குவதற்கும், போஜனத்திற்கும் ரூ. 40,000/- மானியம் செய்து வைத்துள்ளார். இதைப் போலவே ஒரு தர்மசத்திரத்தை பெத்தாபுரத்தில புச்சி சீதம்மகாரு கட்டி வைத்துள்ளார். இதனால் அந்த வம்சத்தினருக்கு நல்ல கீர்த்தி விளங்கி வருகின்றன.

129) ஸ்ரீ புச்சி சர்வா ராயடு பகதூர் ஜமீன்தார் 2. இந்த ராமலக்ஷ்மம்ம ஜமீன்தாரிணி கிறிஸ்து சகம் 1906-வருஷத்தில் இறந்து போனார். அப்பொழுது இவருக்கு வயது 14. அதனால் இந்த சமஸ்தானம் இவர் தாயாராகிய ஜானகியம்மாள் பரிபாலனத்திற்கு வந்து மூன்று வருஷத் திற்குப் பின்னர், 1909-வருஷம் தன் குமாரன் வசம்

ஒப்படைத்தனர். ஆயினும் அப்பொழுது இவருக்கு வயது 17. இது மைனாரிடியாக நடந்தன. இந்த அம்மையாருடைய காலத்தில் சமஸ்தானத்தில் நடந்த முக்கியமான விஷயங்கள் காணப்படவில்லையாயினும் இவர் 1917-வருஷம் வரையில் ஜீவித்திருந்து கடைசியில் காலமாயினர்.

புச்சி சர்வராயடு காரு மிக்க திறமையுடையவர். இவர் சமஸ்தானத்திற்கு வந்ததும் ரைதுக்களிடம் பாக்கியாய் இருந்த கிஸ்து தொகை ரூ. ஒரு லட்சம். அதை உடனே வசூல் செய்து கொண்டு ரைதுகளுக்கு எஸ்டேட் ஆக்டை ஏற்படுத்தியதனால் ரைதுக்களிடம் கலகம் ஏற்பட்டு 10-வருஷ காலத்தில் அதை ரத்து செய்து நிவாரணமளித்தமையால் இவருக்கே வெற்றி கிட்டியது. இவர் 1913-வருஷம் கபிலேஸ்வரத்தில் ஒரு செகண்டரி பாடசாலையை ஏற்படுத்தி அதற்கு ரூ. 40,000 மூலதனம் கொடுத்தும் மற்றொரு கிரந்தாலயத்திற்கு ரூ. 10,000 கொடுத்து ஜில்லா போர்டு வசம் ஒப்படைத்தனர். இவைகள் இன்றைக்கும் ஏதொரு விக்கினமுமில்லாமல் நடந்து வருகின்றன. இது தவிர ரூ. 2,000 செலவு செய்து ஒரு எரியை நிர்மாணித்துள்ளார். பிரஜைகளுக்காக ஆயிரக்கணக்கில் சகலவிதமான சௌகரியங்களையும் செய்து வந்தனர்.

கபிலேஸ்வரத்தில் பஞ்சாயத்து போர்டு, ஜில்லா போர்டுகளைத் தானே நிர்வகித்து வந்தார். பின்னர் பிரஜைகளிடம் ஒப்படைத்துவிட்டு, கோதாவரி ஜில்லா போர்டுக்கு மெம்பராக சர்க்காராலும், பிரஜைகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதை நிர்வகித்து வந்தார். டில்லியில் இம்பீரியல் அக்ரிகல்சர் ரிசர்ச் சொஸைடியில், மதராஸ் கரும்பு விவசாயப் பிரதிநிதியாக நாமினேஷன்படி அதை நடத்தி வருகின்றார். இவர் பிதா மகரால் ஸ்தாபிக்கப்பட்ட நித்யான்ன தர்மசத்திரத்தை ஒழுங்காக நடத்தி வருகின்றார். அதற்கு இப்பொழுது 10,000 ரூபாய் மூலதனமும் 30 ஆயிரம் மதிப்புள்ள பூமிகளும் 10 ஆயிரம் மதிப்புள்ள கட்டடங்களும் நன்றாகயிருக்கின்றன.

இவர் ஜமீன்தார் என்ற கௌரவத்தைத் துளிகூட காட்டாமல் சர்வ ஜனங்களிடத்திலும் மிக்க அன்பு கொண்டு நடந்து வருகின்றனர். இவர் சுயகாரியத்தைப் போலவே பிறர் காரியங்களையும் கவனித்து வருகின்றனர். இவர் சமஸ்தானத்தில் திவான்களோ மேலதிகாரிகளோ இல்லாமல் தானே அதையும் நடத்தி விருத்தியடையச் செய்து வருகின்றனர். இவருடைய சமஸ்தானத்தில் புகையிலை கெட்டுப்போனதால் பிரஜைகளிடம் வருஷா வருஷம் பெற்று வரும் துகை ரூ. 80 ஆயிரத்தில் 50 ஆயிரம் ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டார். இவர் கிராமத்திலுள்ள தேவாலயங்களில் நித்தியமும் இவர் குலகோத்ர நாம நக்ஷத்திரப்படி நைவேத்யம் நடைபெற்று வருகின்றன.

இவர் ராதா மாதவமு, சுக்ரீவ விஜயம் என்ற கிரந்தங்களைப் பிரசுரித்தும், இவருடைய கிரந்தாலயத்தில் அநேக புராதன கிரந்தங்களும் நிறைய இருக்கின்றன. இவருக்குப் புராதன கிரந்தங்களின் மீது மிக்க பரிவும் அன்பும், பண்டிதர்களிடத்தில் மிக்க விசுவாசமும் கொண்டு காரியாதிகளைப் பிரஜா நன்மைக்காக நன்கு கவனித்து வருகின்றனர்.

இவர் 1916-வருஷம் பந்தர் நவாபு நியாஜ மத்தௌலாருஸ்த்தும் ஜாதாகான் பகதர் இந்தி ஜாருஜங் குமாரர்களிடமிருந்து அசன்பாவா கிராமத்தை 2 லட்சம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கி சமஸ்தான அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்தார். தவிர இன்னும் இந்த மாதிரி காரியங்களுக்குச் சிலவு செய்ய வேண்டிய தனமும் இவரிடத்தில் உண்டு. இவருக்கு லக்ஷிமீவெங்கட சுப்பம்மாராவு என்ற சதீமணிக்குப் பிரபாகரபட்டாபி ராமாராவு, பிரபாகர வெங்கடாசலபதி ராவு, பிரபாகர வெங்கடராம மோஹன ராவு, பிரபாகர புச்சி கிருஷ்ண சத்ய நாராயண ராவு என்ற 4 குமாரர்கள் தசரத சக்கரவர்த்திக்குத் தோன்றிய மாதிரி (1911—1913—1914—1921)-ல் ஜனித்தனர்கள். இதில் ஒரு குமாரன் இன்டர்மீடியேட் படித்துக் கொண்டிருக்கையில் 1931-ம் வருஷம் இறந்து போயினன். ஜேஷ்ட புத்திரன் B. A., B. L. பரீக்ஷைகளில் தேர்ந்து வெற்றி பெற்றனர். இவர் செருகூறு சமஸ்தான ஸ்ரீ வாசிரெட்டி வாசுதேவ சூடாமாணிக்ய

பிரசாத் பகதர் குமார்த்தியாகிய கனகராஜேஸ்வரி அம்மாளை விவாகம் செய்து கொண்டு, பிரபாகர வெங்கட ராமமோஹன் ராவு என்ற குமாரன் 1934-ம் வருஷம் ஸ்ரீ லலித குமாரி என்ற பெண் புத்திரி கிறிஸ்து சகம் 1939-ம் வருஷம் பிறந்தனர். இவர் மதராஸில் யூனிவர் சிட்டியில் மெம்பராகபட்ட பரீக்ஷை பெற்றவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டார். அதில் 3 வருஷ காலம் வேலை செய்து வந்தார். 2-வது குமாரனாகிய பிரபாகர வெங்கடாசலபதி ராவும் B. A., பரீக்ஷையில் வெற்றிபெற்று சல்லபல்லி சமஸ்தான தெளத்ரிய கொம்மா ரெட்டி பட்டாபிராம அய்யருடைய குமாரி விசாலாக்ஷி என்ற பெண்மணியை 1937-ம் வருஷம் விவாகம் செய்து கொண்டார். கடைசி குமாரனாகிய புச்சி கிருஷ்ண சத்ய நாராயண ராவு இப்பொழுது B. A. படித்துப் பரிசு பெற்று கிறிஸ்து சகம் 1941-ம் வருஷம் ஷை விசாலாக்ஷி அம்மாளின் தங்கையாகிய ராஜ ராஜேஸ்வரி என்ற கன்னிகையை விவாகம் செய்து கொண்டனர்.

இந்த சமஸ்தானத்தில் இப்பொழுது எக்காராவுக்கு ரூபாய் 14/- நஞ்சை பூமிக்கு சந்தாயம் ஏற்படுத்தியுள்ளனர். இங்கு தண்ணீருக்கு தீர்வை சேர்க்கப்படவில்லை. ரமாரமி 50-வருஷத்திற்கு கீழ் இங்கு ரூபாய் 5/- மாத்திரமே சாந்தாயம் இருந்ததென்று சர்க்கார் கணக்குகளில் காணப்படுகின்றன. இந்த கிஸ்திக்கு காலமாறுதல் என்றே சொல்லப்படுகின்றன.

இந்த சமஸ்தானத்தில் முறுகுமள்ள கிராமத்திலுள்ள ஸ்ரீ வீரேஸ்வராலயத்தில் நித்யமும் கல்யாண உத்ஸவம் நடத்தி வருகின்றனர். இதற்காக நடன நாட்டியம் வேத பாராயணம், வாத்தியம், பச்ச தோரணங்கள் கட்டு பவருக்கும் பூமிகளை மானியமாக விடப்பட்டிருக்கின்றன. புச்சி சர்வாராயடுகாரு இந்த வருஷத்தில் கிழக்கு கோதாவரி ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீசராக, மதராஸ் கவர்ன் மெண்டார் நியமித்துள்ளார். அதில் வரும் சம்பளத் தொகையை யுத்த நிதிக்காகக் கொடுத்து வருகின்றார்.

8-வது பிரகரணம் சமாப்தம்

கம்மவார் சரித்திரம் 3-வது பாகம்

9-வது பிரகரணம்

130) வெலிசெடிவார், பூசபாடி கஜபதி ராஜாக்களுடைய சேனாதிபதிகள் வெலிசேடி சினகூர்ம ராயடு விஜயநகர சமஸ்தானாதிபதியாகிய பூசபாடி கிருஷ்ண கஜபதி காலத்திலிருந்து. வெலிசேடி மல்லிகார்ஜுன துரையைக் குறித்து 2-வது பாகத்தில் கூறப்பட்டுள்ளன. இவருக்கு அச்சம்மதேவி என்ற பார்யையினிடம் கூர்மராய. நாரப்ப, திருபதி தொர என்ற 3 குமாரர் தோன்றினர். இவர்கள் வீரபராக்ரமசாலிகளாக இருந்து, கஜபதி ராஜாவாகிய நன்னமராஜு காலத்தில் அவர் சேனைகளில் சேர்ந்தனர். இந்த 2-வது திருபதி துரைக்கு சீதம்ம, அச்சம்ம என்ற 2 பத்தினிகளிருந்தனர். இந்த அச்சம்மாளுக்கு, சர்வாராயடு கோபன்ன, ஜக்கன்ன. அநந்தராயடு என்ற குமாரர்கள் பிறந்தனர். சீதம்மாளுக்கு நாரப்ப. சினகூர்மராயடு என்ற குமாரர்களும் தோன்றினர். இவர்களெல்லோரும் மிக்க வீர பராக்ரமசாலிகளென்று தர்ம நந்தன விலாசத்தில் சொல்லப்படுகின்றன. இதில் சினகூர்மராயடுவைக் குறித்து பத்தியங்கள் பாடியுள்ளனர்.

இவர் காலத்தில் மகமதியர்களுக்கும் கோல்கொண்ட அல்லது டில்லி நவாபு பாதுஷா. பூசபாடி ராஜாக்களுக்கும் கோரயுத்தம் நடந்த சமயம் இவர் அதில் பிரவேசித்து 18-வது சகாப்த காலம் கஜபதி பூசபாடி வெங்கடராஜு ஆனந்த பூபாலனிடம், சேனாதிபதியாக இருந்தார். இவர் தம்பியாகிய சர்வாராயடு தடாகங்களை நிர்மாணித்து பிரசித்தி பெற்றார். இந்த சர்வா ராயடுவுக்கு கச்சமாம்ப, ஜக்கமாமப என்ற 2 மனைவிகளிருந்தனர். அதில் அச்சமாம்பாளுக்கு, கிருஷ்ண ராயுடுவும். ஜக்கமாம்பாளுக்கு காமசராயடுவும் பிறந்தனர். பின்னர் சமஸ்தானத்தில் சைனியங்களைக்

குறைத்துவிட்ட காரணத்தால் சைன்ய அதிகாரங்கள் மாறி விட்டன. இவர்கள் மற்ற கம்மவாரைப்போலவே விவசாயம் செய்து வந்தனர்.

131) சிறு மாமிள்ளவார், சிறு மாமிள்ள பாபைய்ய சௌரி 16-வது சகாப்த காலத்தில் இந்த வம்சத்தாரின் விருத்தாந்தங்களை 2-வது பாகத்தில் தெரிவித்திருக்கின்றன. அதில் சிறுமாமிள்ள வெங்கடாத்ரி என்றவர் வாசிரெட்டி பத்பநாபப் பிரபுவின் குமார்த்தியாகிய மாதம்மாளை விவாகம் செய்து கொண்டு வெங்கடபதி என்ற குமாரனைப் பெற்றனர், இவருக்கு ஐக்கய்ய, ராமய்ய, பெதசிவராமய்ய, வெங்கடபதி என்ற 4 பேர் குமாரர்கள். இவர்களில் ராமய்ய கிறிஸ்து சகம் 1680-வருஷம் ராகவபுரி சமஸ்தான பாலகராகிய வாசிரெட்டி பெதபத்மநாபருடைய புத்திரி ஆகிய ரமணம்பாளை விவாகம் செய்து கொண்டு ராஜ-பந்துக்களின் சம்மந்தம் பெற்று பிரசித்தி அடைந்தார். இவருக்கு கோதண்டராமய்ய, வெங்கடராமய்ய, நாயுடம்ம என்ற புத்திரர்கள் பிறந்து பிரசித்தி பெற்றனர். இதில் கோதண்டராம நரபாலன் கிறிஸ்து சகம் 1750-வருஷம் சிந்தலபாடி சமஸ்தான வாசிரெட்டி ஸ்ரீ லக்ஷ்மீபதியின் குமாரத்தி ஆகிய நாகமாம்பாளை விவாகம் செய்து கொண்டு உள்ளனர். இவர் தம்பியாகிய நாயுடம்ம என்றவர் கிறிஸ்து சகம் 1761-வருஷம் சிந்தபல்லி, சிந்தலபாடி பாலகருகிய வாசிரெட்டி நாகன்ன நரபாலன் புத்திரி வெங்காம்பாளைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டதனுல் இந்த வம்சத்தினர் பிரபலமாக விளங்கி வந்தனர். அக்காலத்தில் வாசிரெட்டி சமஸ்தானத்திற்கு ஏற்பட்ட யுத்தங்களில் இவர்கள் கலந்து கொண்டு சமஸ்தானத்தைக் காத்து வந்தனரென்று 'சகுந்தலா பரிணயத்தில்' கூறப்பட்டுள்ளன. சீசபத்திய மூலமாக கவி நாயகர் வர்ணித்துள்ளார்.

இந்த வம்சத்தில் நாயுடம்ம என்றவர் மிக்க வீர-பராக்ரமசாலி என்று 'சீசபத்தியத்தில்' விளக்கப்பட்டுள்ளன. இவர் தன் மாமனுராகிய வாசிரெட்டி நாகன்ன நரபாலன் பக்ஷமாக நின்று தன்னுடைய பல பராக்ரமங்களைக்காட்டி

எதிரிகளை ஜெயித்து வெற்றி பெற்றனர். ஷை கோதண்டராமய்யாவின் தம்பியாகிய வெங்கடராமய்ய, கிறிஸ்து சகம் 1706-வருஷம் சிந்தலபாடி சமஸ்தான பாலகரில் ஒருவராகிய வாசிரெட்டி ராஜமௌளிக்கு பாபம்மாள் என்ற மனைவியிடம் பிறந்த வெங்கமாம்பாளை விவாஹம் செய்து கொண்டு, ராமய்ய, பாபய்ய என்ற குமாரர்களைப் பெற்று வளர்த்து வந்தனர்.

இதில் பாபய்ய சௌரியே கவிநாதராகி தன் சமஸ்தான பண்டிதராகிய கிருஷ்ணய்ய கவீஸ்வரரால் 'சகுந்தலா பரிணயம்' என்ற பிரபந்த காவியத்தை இயற்றி பிரசித்தி பெற்றனர். இந்த பாபய்ய சௌரி வாசி ரெட்டி ராமநரபாலன் புத்திரியாகிய மீனமாம்பாளை விவாஹம் செய்துகொண்டனர். இவருக்கு ஆண், பெண் சந்ததிகள் தோன்றி பிரபலஸ்தராயினரென்று 'சகுந்தலாபரிணயத்தில்' விளக்கப்பட்டுள்ளன. அதை விஸ்தர பயத்தால் இங்கு எழுதப்படவில்லை.

132) சிறுமாமிள்ள வெங்கடபதி, இவர் கிறிஸ்து சகம் 1748-வருஷ காலத்திய கம்மவார் பிரபுக்களில் ஒருவராவார். இவர் சாத்தூர் பட்டண அதிபதி வெலம வீர மல்ராஜு சூரபாபாலனுக்கும் சிந்தபல்லி பாலகராகிய வாசிரெட்டி சிவராமலிங்கன்ன நரபாலனுக்கும் நடந்த கோர யுத்தத்தில் மேதரசாலையின் பக்கம் கிறிஸ்து சகம் 1748-வருஷம் தன்னுடைய வீரத்தினால் குண்டுராயடு என்ற வெலம வீரனை எதிர்த்து அவனை ஓடச்செய்தனர் என்று வாசிரெட்டி வம்ச சரித்திரம் கூறுகின்றன.

133) சிறுமாமிள்ள லக்ஷ்ம்மதேவர. இவ்வம்மையார் பல்நாடு தாலூகா துர்க்கி கிராமவாசியாகிய திகமர்த்தி முசலப்ப நாயடு புத்திரியும், லிங்காலபுர சிறுமாமிள்ள வெங்கய்யாவின் மனைவியுமாவார். இவர் 18, 19 சகாப்த காலத்திய பதிவ்ரதைகளில் ஒருவராவார். இவர் நாதராகிய சிறுமாமிள்ள வெங்கய்யருக்குப் பிறந்த சுப்பா நாயடு, கோடய்ய என்ற குமாரர்கள் மிக்க பிரதாபசாலிகளாக இருந்தனர். தவிர பிச்சம்ம என்ற சகோதரியும்

இருந்தனள். இந்தப் பெண்மணியை விவாகம் செய்து கொடுக்க ஏற்பாடு நடந்து வருகையில் இந்த லக்ஷ்மம தேவரவாரின் மாமியாராகிய பேரம்மாள் தன் பேரனுக்குக் கொடுக்கவேண்டுமென்று எண்ணி அதற்கு ஏற்பாடு செய்து தம்பதிகளுக்கு விரோதம் ஏற்படுவதற்கு வேண்டிய காரியங்களைச்செய்தும், அது நடைபெறாததால், பேரம்மாள் தன் மக்களுடன் கூடி மிக்க வைராக்கியத்துடன் மருமகள் மீது ஒரு தாசியின் மூலமாகப் பழி சுமத்தினள். அதை மகன் ஏற்றுக்கொண்டு லக்ஷ்மாளைக் கொலை செய்து விடவே, தாய்க்கும், மகனுக்கும், தங்கைகளுக்கும் கண்கள் போயின. அதனல் இவர்கள் கஷ்டப்பட்டிருந்தனர். ஒரு சமயம் இந்த லக்ஷ்மமதேவர அந்த குடும்பத்தாரின் சொப்பனத்தில் தோன்றி நடந்த விஷயங்களைத் தெரிவிக்க, அவர்கள் மகான்களிடம் தெரிவித்து அத்தோஷ நிவாரணத்திற்காக லிங்காலபுரத்தில் லக்ஷ்மமதேவரவாருக்கு பெரியோர்களின் சொற்படி கோவில் கட்டி பிரதிஷ்டை செய்து, குலதேவதையாகக் கொண்டாடிவர, கண் இழந்தவர்களுக்கு பழையபடி கண்கள் தோன்றியதனல் அவ்வம்மையாருக்குப் பதிவிரதை என்ற பட்டம் சூட்டி அந்தக் கிராமவாசிகளும், மற்றவரும் கொண்டாடி வருகின்றனர். அது முதல் அந்த அம்மையாருக்கு லக்ஷ்மமதேவர என்ற பட்டப்பெயர் நாடெங்கும் பரவி வந்தன. இவ்வம்மையார் பிறந்தகமாகிய திருமர்த்தி வாருக்கும், புகுந்தகமாகிய சிறுமாமிள்ள வம்சத்திற்கும் நல்ல கியாதியும், புகழும் கிடைத்தன.

134) சிறுமாமிள்ள அநுமந்து, இவர் நெல்லூர் ஜில்லா ராவூர் தாலூகாவில் இருக்கின்ற கோபன்னகாரின் குமாரன் ஆவார். இவர் அந்த கிராமத்தில் விவசாயம் செய்து வந்தனர். இவர் அந்த கிராமத்தில் அஞ்ஜனேயஸ்வாமி தேவாலய பிரதிஷ்டை செய்து பூஜை காரியங்களுக்கு மான்யாதிகள் வழங்கிப் பிரசித்தி பெற்றதாகவும் அந்த ஆலயத்தில் 5 கருட கம்பங்கள் நிறுவியதாகவும் சாசன நெம்பர் 1 ரிகார்டு 9-ல் குறிப்பிட்டுள்ளன.

135) தேசபாண்டிய கோநேரு ராமச்சந்திரன், இந்தக் கோநேரிவார் சாளுக்ய வம்சத்தினராக இருக்கலாமென்று

2-வது பாகத்தில் கூறியுள்ளோம். கிறிஸ்து சகம் 1700-ம் வருஷம் இந்த வம்சத்தில் கோநேரிவார் ராமச்சந்திரன் என்றவர் மிக்கப் பிரபலமாக வாழ்ந்து வந்தார். இவர் அவுரங்கஜீபு டில்லி சாம்ராஜ்யத்தை ஆண்ட காலத்தில் இருந்தவர். கிறிஸ்து சகம் 1698-ம் வருஷம் இவரும் வெலம ஜமீன்தாரராகிய வெல்லங்கி கோபால ராவும், வரிகொண்ட நிச்சலராஜு என்றவருங் கலந்து அவுரங்கஜீபிடம், காட்பர சணுலும் என்ற பிரதேசங்களைப் பெற்று, அதைப் பரிபாலித்து வந்தனர் ஆயினும் பின்னர் வம்சத்தினரின் விஷயங்கள் காணப்படவில்லை. கிறிஸ்து சகம் 1810-ம் வருஷம் ஸ்ரீ ராஜா வாசிரெட்டி வெங்கடாத்ரிப் பிரபுவின் கீழ் வந்ததாகப் படித்துள்ளோம். கோநேரிவார் மேடூர் பிரதேசத்தில் இன்றைக்கும் வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பிரதேசம் குண்டூர் ஜில்லாவிலுள்ளன.

136) கொத்தவார், கொத்த அப்பன்னகாரு, இவர்களுடைய சரித்திரம் 18-வது சகாப்த மத்தியில் தோன்றியது. இவர்கள் பசுகுநூரள்ள, பைடிபாலகோத்ர வாசிகளாக இருந்து வருகின்றனர். இவர் தேவரகோட்டை சமஸ்தானத்தில் கொடாலி, கண்டசால முதலான கிராமங்களில் வசித்து வந்தனர். அந்த சமஸ்தானத்தில் கிறிஸ்து சகம் 1762 வருஷ காலத்தில் வெள்ளாமையெல்லாம் கெட்டு நாசமடைந்தும். அநேக கொடிய வியாதிசள் படர்ந்தும், பிரஜைகள் மிக்க துன்பமடைந்து வந்தனர். அந்த சமயத்தில் ஏர்லகட்ட கோதண்டராம நரபாலனுக்கும் அமல்தாரராகிய உசேன் ஆலிக்கும் தகராறு ஏற்பட்டு உசேன் ஆலி கிராமங்கள் எல்லாம் தள்ளுபடியானதால் அந்த கிராம வாசிகள் ஆகிய இந்த வம்சத்தினர் தெனலி கிராமங்களுக்குச் சென்று குடித்தனங்களை நடத்தி வந்தனர். அதில் கொத்த வெங்கடாத்ரி என்றவர் முதல்வர். இவருக்கு சூரன்ன என்ற குமாரன் இருந்தான். இவர் குமாரர்கள் 7 பேர்களில் மூத்தவன் அப்பருனகாரு, இவர் சாகர்லமூடி அல்லது (சங்கம் ஜாகர்மூடி) கிராமத்திற்கு தன்னுடைய 5 குமாரர்களுடன் அங்கு குடியேறினர்.

அந்த கிராமம் அப்போதைக்கு ராசூர் ஜமீன்தாரராகிய மாணிக்காராவு ஜங்கன்ன இவர்களுக்கு உட்பட்டிருந்த தினால் இவர் அவர்களுடைய அனுமதிபேரில் திருசாலைப் பிரதேசத்தில் ஒரு தர்ம வனத்தை உண்டுபண்ணி பிரசித்தி பெற்றனர். இவர் காலத்தில் எர்ராவார், பச்சாவார், மன்னபவாரும் ஆகிய கம்மவார் பந்துக்களாக இருந்தனர் என்று தெரிகின்றன. இந்த கொத்தவாரில் சிலர் செங்கல்பட்டு ஜில்லாவிற்கு இவர் காலத்தில் குடியேறியதாக காணப்படுகின்றன.

137) கொத்த சங்கன்ன சௌதரி. இவர் அப்பன்ன குமாரர்களில் 1-வது சங்கன்ன சௌதரி மிக்கப் பிரபலராகி அக்காலத்திய ஜமீன்களிடத்தில் கிரமமாக நிஜார் பதவி பெற்று (சௌதரி) உள்ளோர். கிறிஸ்து சகம் 1790—1820 வருஷ மத்தியில் உத்யோகத்தை நடத்தி வந்தார். ராசூர் ஜமீன்தாரராகிய மாணிக்கா ராவு, ஜங்கன்ன ராவு, பாவ நாராயண ராவினிடமும், இந்த பல்லி சமஸ்தான காலைகராகிய ஸ்ரீ ராஜாவாசி ரெட்டி வெங்கடாத்ரி பிரபுவினிடத்திலும் இவர் விசேஷமாக கிராமங்களை குத்தகைக்கு எடுத்து அவைகளை ரைதுக்களுக்குப் பிரித்துக் கொடுத்தும் அவர்களுக்கு அனுகூலமான ரேட்டுகளை நிர்ணயித்தும், சௌதரியாக தான் காரியங்களை கவனித்து வந்தார். கிறிஸ்து சகம் 1816-ம் வருஷம் பிண்டாரிதண்டு சௌதரியின் ஏவலால் மராட்டியர் கிராமங்களில் பிரவேசித்துப் பெண்கள் விருத்தர் முதலானவர்களை இம்சித்து வந்தனர். இதையறிந்து இவர் கிராமத்திலிருந்த வர்களை வேறிடத்திற்கு பத்திரமாக அனுப்பி மராட்டியர் களைத் தந்திரமாக உள்ளே பிரவேசிக்கவிடாமல் யுத்த பேரிகையை முழக்கி அவர்களை ஓடச்செய்து அந்த விபத்தி னின்று பிரஜைகளைக் காப்பாற்றிக் கீர்த்தி பெற்றனர்.

அங்குள்ள சங்கமேஸ்வர தேவாலயத்திற்கு தர்ம கர்த்தாவாகி அவ்வப்போது ராசூர் சமஸ்தானத்திலிருந்து மானியங்களை ஏற்படுத்தி விருத்தி செய்துவந்தார். அந்த சங்கமேஸ்வர ஆலயத்தில் சிதிலமாகியிருக்கின்ற கல்வெட்டு சாசனங்களால் தெரிய வருகின்றன. கிறிஸ்து சகம் 1598

வருஷ காலத்தில் கொள்ளைகொண்ட கோபுர மூலைத்தூள்ளிலா சாஸனமென்று காணப்படுகின்றன. சாஸன நெம்பர் (649-650-21)-ல் விஷயங்கள் காணப்படுகின்றன. அக் காலத்தில் அந்நிசி முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவாலயங்களில் இதுவும் ஒன்று. இந்த தேவாலயத்திற்கு 100 ஏக்கர் பூமியும் லட்சம் ரூபாய் பொருமான கட்டடங் களும், ஸ்திரவாஸ்திகளும் இருக்கின்றன. இவருடைய நடத்தைதலயக் குறித்த பெச்சி ஜமீன்தார் மாணிக்காராவு, பாலநாராயணராவு. இவருக்கு சில பூமிகளை ஜாகீர் செய்து கொடுத்துள்ளனர். கிறிஸ்து சகம் 1797-ம் வருஷத்தில் ஏற்பட்டது. இவர் காளிபுரத்தில் பிரசித்தி பெற்ற கம்மவார் வம்சத்திய குர்ரம் சீதாராம சாஸ்திரி குமார்த்தி யாகிய அச்சமாம்பாளை விவாஹம் செய்துகொண்டு, நாசய்ய, பாவய்ய, சீதய்ய, வீரய்ய என்ற 4 குமாரர்களைப் பெற்றுள்ளனர். வெங்கடாத்ரிப் பிரபுவினிடத்தில் பெற்ற இனாம் பூமிகள் கிராமங்களுக்காக அவரிடமிருந்து சாஸனங்கள் மூலமாக நிர்ணயிக்கப்பட்டன. இந்த சங்கன்ன சௌதரி போரால் அநேக சீசபத்யங்கள் பாடியுள்ளனர். அதை வில்தாபீதியால் குறிக்கப்படவில்லை.

138) கொத்த நாசய்ய, பாவய்ய சௌதரிகள்.
சங்கன்ன சௌதரிக்கு பின்னர் கிறிஸ்து சகம் 1820-ம் வருஷ முதல் 1828-ம் வருஷம் வரை அவருடைய ஜேஷ்ட குமா ராகிய நாசய்யாகாரு கிராமங்களில் ஜமீன்தாராகவும் சௌதரியாகவுமிருந்து காரியாதிகளை நடத்தி வந்தார். இவர் மிக்க வீரபராக்ரமசாலியாகப் பெயர் பெற்றனர். இவர் சகல கலைகளிலும் வல்லவராகி, கிராமங்களிலுள்ள கவிகளுடன் கூடி நீதி நாடகங்களைத் தொகுத்து பொது மக்களுக்கு கற்பித்து வந்தார். தவிர வருஷா வருஷம் பித்ருதேவதார்த்தங்களை குலாசாரியார் மூலமாக நடத்தி அன்னதானங்களும் செய்து பிரசித்தி பெற்று வந்தனர்.

நாசய்ய சௌதரிக்குப் பின்னர் இவர் சகோதரர் ஆகிய பாவய்ய சௌதரி கிராமங்களுக்கு இனாம்தார் ஆயினர். கிறிஸ்து சகம் 1829-வருஷம் ராகூர் ஜமீன்

பேஷ்கஷ் செலுத்த முடியாமல் ஈஸ்ட் இந்தியா கம்பெனி யாரால் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டன. இத்துடன் கிறிஸ்து சகம் 1832-33-வருஷம் தேசங்களில் தாங்க முடியாத வறுமை ஏற்பட்டன. ஜில்லா கலெக்டர் ஜான் கிலிட்டர் என்பவர் ஜாகர்லமுடி முதலான கிராமங்களின் நடவடிக்கை எடுத்து 5-வருஷங்களுக்கு இஜாராவை ஏலம் போட்டனர். அப்பொழுது இவர் அந்தக் கிராமத்திற்கு வருஷம் ரூ. 1234—0—0 செலுத்துவதாக 1239-பசலியிலிருந்து 1244-பசலி வரை ஜில்லா கலெக்டரிடம் உத்திரவு பெற்று சர்க்காரிடம் இஜார்தாரராயினர்.

அக்காலத்திலிருந்து இஜார்தாரர்களே எஜமானர் ஆயினர் என்று 1816-வது ரெகுலேஷன் செய்யப்பட்டதனால் இவர் அந்தக் கிராமத்திற்கு எஜமானராகப் பட்டம் பெற்றனர். அந்த ரெகுலேஷன்படி கிராம எஜமானர்கள் ஜில்லா ஜட்ஜுகளுக்கு கீழ்ப்பட்டவராகையால் வெளியூர்களுக்குச்சென்று விசாரணை முதலிய காரியங்களில் ஈடுபடலாகாதென்று சர்க்கார் உத்தரவு செய்தனர். ஆயினும் சர்க்கார் நியமனத்தின் பேரில் அக்காரியங்களைச் செய்யலாம் என்று மறு உத்தரவு செய்தனர். இஜாராதாரர்கள் அந்தந்த கிராமவாசிகளாக இராதபக்ஷம், இவர் கீழாக கிராமத்திய மிராசுதார், கிராம அதிகாரி பட்டம் பெற்று கிஸ்து வசூல் செய்ய சர்க்காரால் நியமிக்கப்பட்டனர். கிறிஸ்து சகம் 1848-வருஷம் ராசூர், சிந்தபல்லி முதலான ஜமீன்தார்கள் சர்க்காரின் கீழ் சேர்ந்து போயின. அதனால் ராசூரு, சிந்தபல்லி வாசிகளாகிய இந்தக் குடும்பத்தினர் சாதாரண குடிகளாகி விட்டனர். ராசூர் ஜமீன்களால் கொடுக்கப்பட்ட சங்கமேஸ்வர தேவாலய அதிகாரிகளாக இவரும், இவர் தம்பியும் நடத்தி வந்தனர். பாபய்ய சௌதரிக்கு, சீதய்ய, புச்சய்ய, ஜக்கய்ய, சங்கய்ய, பட்டய்ய என்றவர்கள் இருந்தனர். இவருக்குப் பின்னர் அவர்களே சங்கமேஸ்வர தேவாலய பரிபாலனம் நடத்திவந்து பிரசித்திபெற்றனர்.

139) கொத்தஜக்கய்ய, சங்கய்ய சௌதரிகள், கிராம அதிகாரம், சங்கமேஸ்வர தேவாலய அதிகாரங்களை நடத்தி வந்த ஜக்கய்ய சௌதரிகார் தன் தந்தைக்குப் பின்னர்

பிரசித்தி பெற்று வந்தனர். ஒரு சமயம் சந்திரகிரஹணம் பிடித்திருக்கையில் கன்று போட்ட பசுமாட்டை ஒரு பிராம்ஹணருக்கு கோதானமாகக் கொடுத்துள்ளார். இவர் சகோதரராகிய சங்கய்ய சௌதரிகார் வாரணாசி பட்டாபிராம சர்மா என்ற பண்டிதரால் ஆந்தர பாஷையில் ஸ்ரீ சங்கமேஸ்வர ஸ்தல புராணத்தை இயற்றிப் பிரசித்தி பெற்றனர். இந்த சங்கய்ய சௌதரி குமாரர்களில் ஒருவர் ஆகிய சிவலிங்கய்ய என்றவர் என் தந்தை. இவர் காலத்திலேயே அந்தப் புராணத்தைப் பிராம்ஹணர்கள் சிலர் கூடி பிரிண்ட் செய்து, கிராமவாசிகளுக்கெல்லாம் தெரியப்படுத்தி பண்டிதர்களுக்கு விநியோகம் செய்து நல்ல பெயர் பெற்றனர். இவர் காலத்தில் சதாவதானராகிய ஸ்ரீ கொப்பரபு சுப்பராய சோதர கவிகள் இந்த கிராமத்திற்கு வர, அவரை கிராமவாசிகளாகிய பெரியவர்கள் எல்லோரும் அவருக்கு யுக்தப்படி வரவேற்பு நடத்தி வைத்தனர். இவரும் அப்பண்டிதரிடம் மரியாதை பெற்று சத்கரிக்கப் பட்டார். தௌர்வாசதேவி புராணத்தைச் சம்பாதித்து வெளிப்படுத்திய ஸ்ரீ பருசூர் சினகோடய்யகாருக்கு இவர் கிராமத்தில் கிராமவாசிகளுடன் தனம் கொடுத்து சன்மானித்தனர். கம்மவாரின் உபநயனச் சடங்கை நடத்திவருவதற்கு வேண்டிய ஆதார சாஸ்தரங்களைக் காட்டி பிரசங்கம் செய்வதற்காக ஸ்ரீ ஜி. என். பி. (G. N. P.) சரஸ்வதி ஸ்வாமிகளை அணுகி அவர்களுடைய அனுமதியின் பேரில் ஒருசபையை ஏற்படுத்திக் கம்மவார் எல்லோரும் கூடி அதை நடத்தினார்கள். தாண்ட்ற நரசிம்மஸ்வாமி சாஸ்திரி என்ற பண்டிதர் இவர் வீட்டில் வெகு காலம் புராண காவியங்களைப் பிரசங்கம் பிரபலமாகப் பிரஜைகளுக்கு உபதேசம் செய்து வந்தனர்.

140) கொத்தநரசய்யா, சுப்பாராயடுகாரு, இவர்கள் இருவரும் கஜபதி ராஜாக்களுடைய பரிபாலன காலத்தில் இருந்தும் பின்னர் சிதிலமடைந்திருந்த ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி தேவாலயத்தை கிறிஸ்து சகம் 1898-வருஷம்

புனருத்தாரணம் செய்து பூஜாதி காரியங்களுக்காக வேண்டி அநேக பூமிகளை மானியம் செய்து கொடுத்தும், நரசய்யகார் கிராமத்தில் ஸ்ரீ சங்கமேஸ்வர தேவாலய பரிபாலனத்தையும் ஏற்று நடத்தி வந்தனர். இவர் காலத்தில் தேவாலயத்திற்கு ஒரு பெரிய த்வஜஸ்தம்பம் தங்க ரேகுளால் செய்து வைத்தனர். பக்தர்கள் சிலர் கூடி அங்கு பாலாத்ரி புர சுந்தரி ஆலயத்தை நிர்மாணித்து நடத்தி வந்தனர்.

நரசய்யர் காலத்தில் ராஜூர் பழைய ஜமீன்தாராகியவர் வம்சத்திய மாணிக்கா ராவு வம்சத்தினருக்கும், இந்த வம்சத்தினருக்கும் சங்கமேஸ்வர தேவாலய தர்மகர்த்தா பதவியின் விஷயமாக தகராறு ஏற்பட்டு கிறிஸ்து சகம் 1899-வருஷம் பந்தர் ஜில்லா கோர்ட்டில் ராஜியாகி அதில் ஸ்ரீ திருமலம்ம ஜமீன்தாரிணி வம்ச பாரம்பரிய தர்மகர்த்தாக்களாகவும் நரசய்ய சௌதரி வம்ச பாரம்பரிய பரிபாலன கர்த்தாக்களாகவும் நிர்ணயிக்கப்பட்டனர். இந்த நரசய்ய சௌதரி குமாரர்கள் சங்கய்ய, கோபால கிருஷ்ணய்ய இவர்களே இப்பொழுது தர்மகர்த்தாக்களாக இருக்கின்றனர். இவர் பரிபாலன காலத்தில் ஸ்ரீ சங்கமேஸ்வர தேவாலயத்தில் அநேக கட்டடங்களும் வஸ்து வாகனாதிகளும் உண்டாக்கினர். சயன மண்டபம், இரும்பு கதவுகள், காலிகோபுரங்களுடன் சுற்றுப்ரகாரமும் மடப்பள்ளி, சமாராதன சாலை, பவனங்கள், பாபவிமோசன பார்வதி தேவியார் தேவாலயம் கோபுர நிர்மாணம் ரதசாலை முதலாகிய வற்றை நிர்மாணித்துள்ளனர். இந்த ஆலயத்தில் சிவராத்ரி, நவராத்ரி உற்சவாதிகள் முக்கியமாக நடத்தப்பட்டு வருகின்றன. நவராத்ரியில் ஹரிகதை காலக்ஷேபங்களும் பக்தப்படி நடத்தி வருகின்றனர்.

141) கஞ்சபாலம், லால்புறம் ப்ரோப்ரைட்டர். கொத்த வெங்கய்ய சௌதரிகார் B N C முன் சொல்லப்பட்ட நரசய்ய சௌதரிக்கு ஜகந்நாதன் என்ற மற்றொரு குமாரனிருந்தான். இவர் கொத்த வெங்கடகிருஷ்ணய்ய சௌதரிக்கு தத்து புத்திரனாக வழங்கப்பட்டனர். இவர் காலத்தில் ஏழைகளுக்கு வேண்டியதான தர்மங்களை கொடுத்துப் பிரசித்தி பெற்றுவந்தனர். இவர் கொஞ்ச

காலம் தாலூகா போர்டு மெம்பராகப் பணியாற்றி வந்தார்
இவருக்கு வெங்கய்ய சௌதரி, ரகுராம சௌதரி, வெங்கட
கிருஷ்ணய்ய சௌதரி, என்ற மூவர் குமாரர்கள், 5 பேர்
குமாரத்திகளும் இருந்தனர். இதில் வெங்கய்ய சௌதரி
இவர் சிறிய பாட்டனார் ரகுராமய்ய சௌதரிக்கு தத்து
புத்திரனாக வழங்கப்பட்டனர். இவர் நல்ல வித்தைகளைக்
கற்றுப் பெரிய பண்டிதராகி எடின்பரோ வித்யாலயத்தில்
B. S. E. இஞ்ஜினீரிங் பட்டம் பெற்று வந்தனர். இவர்
பிரஜைகளுக்கு அனுகூலமாக அநேக காரியங்களைச் செய்து
வந்தார். இப்போது சித்தூர் ஜில்லாவில் ஜில்லா போர்டு
இஞ்ஜினீயர் பதவியை பெற்றுக் கொண்டும் கங்கபாலம்,
லால்புறம் கிராமங்களை ஆதியில் சாயபநேனி வம்சத்தினர்
பிராம்ஹணர்களுக்கு அக்ரஹாரமாகக் கொடுக்கப்பட்டவை
அதைச் சிலர் விக்கிரயம் செய்து விட்டமையால் அவர்களிட
மிருந்து புருப்ரைட்டர் பெயர் பெற்றனர். பழய கொல்
லெட்டி கோட்டையில் சுமார் 600 எக்கர் பூமிகளை இவர்
80 ஆயிரம் ரூபாயிக்குக் கிரையம் பெற்று தன்பந்து வர்க்கத்
தினருக்கு பாகம் செய்து கொடுத்துள்ளனர்.

இவர் மூத்த தமையனாகிய ரகுராமய்ய சௌதரி,
M. A., L. L. B. பரீக்ஷையில் பிரபலனாகி ஆங்கில நாட்டிற்கு
சென்று பாரிஸ்டர் பரீக்ஷையில் ஜெயம் பெற்று வந்து,
இப்பொழுது ஜில்லா முனிசிபால் உத்யோகத்திலிருக்
கின்றனர். 2-வது தம்பியாகிய வெங்கட கிருஷ்ணய்ய சௌதரி
இப்பொழுது M. B. B. S. பரீக்ஷையில் தேர்ந்துள்ளார்.
வெங்கய்ய சௌதரிகார் கொல்லெட்டி கோட்டை பூமிகளை
விவசாயத்திற்காக மராமத்து செய்து பெரிய இஞ்ஜினை
வைத்து விவசாயம் செய்து வருகின்றார்.

இந்த 3 பேர் சகோதரர்கள் தங்கள் சொத்துக்கள்
எல்லாவற்றையும் அந்த அக்ரஹாரத்திலுள்ளவர்களுக்கு
கொடுத்து ஏக குடும்பஸ்தராக வாழ்ந்து வருகின்றார்கள்.
வெங்கய்ய சௌதரிகார் ஏழைக்குடும்பகளுக்கு கல்பவிருக்ஷம்
போல உதவி வருகின்றார். தான் குண்டூரிலிருந்த காலம்
சில குடும்பங்களுக்கு வார போஜனங்கள், ஜீதங்கள்

கொடுத்தும் சிலருக்கு உன்னதமாக வித்தைகளைக் கற்பித்தும் வந்தார். இவருக்கு நூதனமாக கட்டடங்கள் கட்டுவதிலும் மிக்க ஆர்வங்கொண்டு பிளான்களைத் தயார் செய்து கொண்டு பிரபலமாக நிபுணத்வம் பெற்று வருகின்றனர்.

142) கொத்த குருசாமி நாயுடு ஸ்ரோத்ரியம்தாரு, 18-வது சகாப்த காலத்தில் இந்த வம்சத்தினர் ஒருவரைப் பற்றி முன்னமே கூறியுள்ளன. கிறிஸ்து சகம் 1787 வருஷம் கம்பளார்தேவர கோட்டை சமஸ்தான நரபாலராகியவர் ரேபல்லி தாலூகா பேபாலேரு கிராமத்திலிருந்து 50 குடும்பத்தினர் மாமென்டிபாதிரி துரையின் ஆதரவில் செங்கல்பட்டு ஜில்லா கிலசேரிக்கு சென்று வாழ்ந்ததாக முன்னம் தெரிவித்துள்ளன.

தாதாபி காலத்தில் கொத்த வம்சத்தினர் சிலர் செங்கல்பட்டு ஜில்லா பேரம்பாகம் கிராமத்திற்கு சென்றனர். அங்கு அவர்கள் அநேக பூமிகளை மராமத்து செய்து விவசாயத்தைப் பிரபலமாக நடத்தி வந்தனர், இவர்கள் வைபுபால கோத்ரஸ்தர். இவர்களில் கிறிஸ்து சகம் 1890-ல் இந்த குருசாமி நாயுடுகாரு, மிகப் பிரசித்தி பெற்று வந்தார். இவருக்கு சில கிராமங்கள் வசமாயிருந்தன. இவர் செங்கல் பட்டு ஜில்லா போர்டு மெம்பராக காரியங்களை நடத்திவந்தார், இவருடைய வம்சத்தினர் அங்கு இருந்து வருகின்றனர், இந்த கொத்த வம்சத்தினர் சோழிங்கபுற சமீபத்தில் குப்பு செட்டிதாங்கல் கிராமத்தில் வாலஜா தாலூகா ராந்தம் கிராமத்தில் ஸ்ரீ பெரும்பூதூர் திருநீர்மலை, மரஹாபலிபுரம், ராம்நாடு ஜில்லா புலிகோட்டம் முதலான கிராமங்களில் இருப்பதாக தெரிகின்றன.

143) சாவவார், சாவசந்தரய்யகார், வாசிரெட்டிப் பிரபுக்கள் 18-வது சகாப்த முதல் சாவவார் பந்துக்களாக இருந்து வந்தனர், இவர்கள் சந்தர்லபாடியில் வாசம் செய்து வந்தனர். அந்த கிராமங்களுக்கு அதிகாரிகளாகவும்

தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் சந்தரய்யவர்கள் என்றவர் 15-வது சகாப்தத்தில் மிக்க பிரபலமாக விளங்கி வந்தார். இவர் மகளாகிய அச்சமாம்பாளை ஸ்ரீ ராஜாவாதி ரெட்டி ருக்கபூபாலனுக்கு விவாகம் செய்து கொடுத்தனர். இந்த தம்பதிகளுக்கு [illegible] வெங்கடாத்ரி பிரபு பிறந்தார்.

144) சால வெங்கய்யகாரு. இவரும் சந்த்ரவம்ச [illegible] ஆவார். கி.பி. சகம் 1600-வருஷம் இவர் குமார்த்தியாகிய வெட்டுமாம்பா என்ற பெண்மணியை ஸ்ரீ ராஜா [illegible] வெங்கடாத்ரி பிரபு [illegible] ஆக விவாகம் செய்துகொண்டார். சாலவார் இப்பொழுதே வாசிரெட்டி பிரபுக்களுக்கு உற்ற பந்துக்கள் ஆயினர். ராஜாங்கத்தில் இவர்களும் காரியஸ்தர்களாக விளங்கி வந்தனர்.

145) சாலலக்ஷ்மீபதி. இவர் ஸ்ரீ வெங்கடாத்ரிப் பிரபுவின் ஜேஷ்ட குமாரராவார். இவர் திருநாமம் [illegible] பிரபுவுங்கூட சாலவார் குமார்த்தியாகிய ரங்கமாம்பாளை விவாகம் செய்து கொண்டனர். இவருக்கு பின்னர் இவர் [illegible] மங்கமாம்பா, லக்ஷ்மீபதி என்றவரைத் தத்துஸ்வீகாரம் செய்து கொண்ட விஷயத்தை முன்னமே குறிப்பிட்டுள்ளனர். இந்த லக்ஷ்மீபதி வாசிரெட்டி வம்சத்தாருடன் கலந்து போயினர். இவர்களுடைய சந்ததியர்கள் காணப்படவில்லையாயினும் குண்டூர் ஜில்லாவில் பிரபலமாக வாழ்ந்து வருகின்றனர்.

146) சரித்திரங்களில் தெரியாத சில கம்மவாரி பிரபுக்கள், 15–16-வது சகாப்தகாலம். கம்மவாரி நக்ஷத்திரமாலிக, 32 புத்ர மந்திரி [illegible] சீசமாலிகையைப் போலவே கம்மவாரின் 27 பேரைக் குறித்துத் தெரிவிக்கும் சீசமாலிகை ஒன்று, சொத்துக்களிலிருந்து விளங்குகின்றன. இந்த நக்ஷத்திர மாலிகையில் பிரபுக்கள் 15-வது சகாப்த காலத்திலிருந்து 16 சகாப்தம் வரை பெயர் பெற்றவர்களாக காணப்படுகின்றன. அந்த சீசமாலிகையை இங்கு உதாகரித்துப் பெயர் பெற்றவர்களின் விபரங்களைத்

தெரிவோம். ஸீசபத்யம். ஸ்ரீ கடக்கர் நாட்ட-
ஸிம்ஹாசனம்புன, செல்லங்காரா வெள்ள மல்லெகளொடு,
த்யாகத்வயம் பொம்ப, தகநர்த்துயகு நிச்செ - நெலமி
ராசபநேனி வெங்கடாத்ரி, ஆதிகந்பேஸ்வருண்ட, டதிக்ருபா
பரிதுண்டு, பொம்மசானி குஹாண்டுதிம்மசஹொண்டு கொண்ட-
பல்லி நுர்க்க ஆவைய தேசாஹி, விஜயுண்டுயட்லூரி
வேங்களன்ன, அபிநார்ஸிநாவளி. கமரபுரபுரும்புமிஞ்சு
பெருலகட கஞ்சயிநீடு, திரிகொண்டவிட்புமி நக்ஷுசனடை-
விலிஸிஹ்லு கலவாஜி ரெட்டி, மல்லப்பிரபுண்டு. ராஜிகபல்லகி,
ரமணதோடுக நம்ப்பெ. ஸ்திரமொப்பா ராஜதிம்மநீண்டு,
ராமசந்த்ருனி ரீதி, ரஹிநாஸ்ரி துலம்ப்ரோக நெலமந்த
பர்வதராஜு, திக்கஜ மூலயந்து, ஸ்த்திரநிஜகீர்த்திநிசே,
விலிஸிஹ்லு கோனேரு, வெங்கடாத்ரி. சத்துருலை நஹுவச்சி
சரஹூ வெடுலகாஹு, நதிகுண்டு ரேகுல. யங்கிநீண்டு,
கோடான கோட்லுவோ மாட்ட நிங்கடங்கல்கெ, நௌர
பின்னபநேன, நந்த்தலி புண்டு, சரசவை பலபோக சாமக்ரி
வோட்லதோ, சாட்டி செயங்க ஜாஷ்ட்டி, ஜக்கஹுண்டு
வர்க்கதர் மாத்யுண்டு படுசௌர்ய ஸிம்ஹமு. ஜகதிபர்
வெதநேனி ஜக்காநீண்டு, நநதான்ய வஸ்த்து சந்ததுலவார்
தில்லெ, பொங்கான கொம்மிநேனி வெங்கடாத்ரி, ராஜாதி
ராஜாலு, ரம்மனி மன்னிம்ப்ப பெம்பொந்தெனு கொடாரி
பேரிநீண்டி, பூரிப்ரதாபனில் பூர்த்திசெ நெஜ்ஜெநத்தெ
கனுதிப்பநுண்டன கங்கிநீண்டு, தானதர்ம விவேக
தாரதம்ய மனெஞ்ச, நாசர வெங்கன்ன தர்மசாலி,
பாந்தவபோஷண பாக்யரேகாஜுடி பாஷிம்ப்ப வெல்லங்கி
பதிவிநீண்டி, பௌரஷ வந்துடை ப்ராபவோன்னத
காஞ்செ, நெலமிநோகர்லபூடெர்ரவி புண்டு, சர்ஜனுல்
நுதிசேயவாரு கீர்த்தி கடிஞ்செமுநமுதோ மூல்லங்கி மூர்த்தி
நீண்டு, பெதசாதல நெல்லஹுதரம் புனப்ரோக நரய நர்மா
ரெட்டி யங்கிநீண்டு, காருணசஸ்வாமி கன்னம்பு
பெட்டிஞ்ச்செ சுருஹுண்டு சவசானி சோமநீண்டு,
தப்பநாடண்டு மாட்ட தகுலக்ஷல குளநன பொப்பன
ஹரிநீண்டு, புதுலு நொகட பங்சாள நேபாள பாண்டியபூ
மூலயந்து பொடெந்தலி சனு பலகனுண்டு, கவிபுங்கவுல
சேத கணிதம்பு க்ருதிங்காஞ்செ வெட்கவீரபநேனி

வெங்கடாத்ரி, காமிநேனி குலாக்ரகண்யுண்டை விலசில்லெ ஜினபோகி நீண்டகிதானபருண்டு. சத்ய தர்மம்புன, அத்யந்த குணதாத நயசாலி யாகல்டி நாயடம்ம வர்ணிம்பங்க காகார்ய வந்த்துண்டை விலசில்லி கலகரி நாசல்ன சனயகுண்டு, நாபகி. சுறுபதி நாகபதுலு மூண்டு சிம்ஹாசனம் புலுசெலுவு மீறபால கிலல்வமுல் பரகதந்திய புலிபாலிஞ்ச்சி தர்மமுல்லிலநில்பி, கீதுபக்யம்) நெராயங்கா ராஜ்ய பாரம்பு நிர்வஹிம்சி சத்ருலஞ் ஜெயிஞ்ச்சி பண்யம்பு புலந்தரிஞ்ச்சி ஹிதுலம் போஷிஞ்ச்சி வையபவொன்னதனு காஞ்ச்சி யந்கலம்புல பாகில லந்திவாரு சம்ம சௌதரு லத்யாந்த்த சனுலுமீறு. இதில் முதல் மூவருடைய சரித்திரங்களை 2-வது பாகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

147) அட்லூரி வெங்கிளன்ன, இனி நான்காவது அட்லூரி வெங்கிளன்ன கொண்டபல்லி தர்க்கபாலகராகப் பிரசித்தி பெற்றுள்ளதாக இந்த பத்யத்தில் தெரிய வருகின்றன. இவர் அங்கு பரிபாலனம் நடத்திவர துருஷ்க பிரபுக்களால் கொலை செய்யப்பட்டதாக தெரியவருகின்றன, இவரைக் குறித்து மற்றொரு சாட்டு பத்தியத்தில் கூறப்படும் விஷயம் "கம்மலந் கருகம்மலா? கம்மலாய கம்மலகு கீர்த்தி தெச்சின சம்ம நீவே? ப்ரதிகதுலஹர! வாரமாம்பா குமார விக்ரமோமஹேந்த்ரா" என்று எழுதப்பட்டிருப்பதால் இவர் கொண்டபல்லியில் தன்னுடைய பராக்ரமத்தை காட்டியுள்ளனர் என்று கூறலாம். இவர் கஜபதி ராஜாக் களுக்கு பிரதிநிதியாக இருக்கலாம். பின்னர் யேர்லகட்ட கஞ்ச்சிநீண்டு வாசிரெட்டி மல்ல பிரபுக்களைக்குறித்து 2-வது 3-வது பாகங்களில் விளக்கப்பட்டுள்ளன. இதில் தாசரி வெங்கன்ன வம்சத்தியராகவும் காணப்படுகின்றனர் இவர்கள் எல்லோரும் கிருஷ்ணாஜில்லா வாசஸ்தர்களாக இருக்கின்றனர், இதில் ராஜாவார், பர்வதநேனிவார் பொப்பனவார் லிங்கம்வார், முதலானவர்கள் இன்றைக்கும் கிருஷ்ணா ஜில்லாவில் சொப்பதுஸ்வாமிகளாக விளங்கு கின்றனர். திக்கன தடும்பத்தினரும் ரைது வர்க்கத்தில் பிரபலராக இருக்கின்றனர்.

இவர்கள் எல்லோரும் விஜயநகர சாம்ராஜ்ஜியத்தையும் கஜபதிகளுடைய சாம்ராஜ்ஜியத்தையும் நாயக்கர் பாலனத்தையும் சர்தார்களாகயிருந்து பரிபாலனம் நடத்தி வந்தனர். பின்னர் செளதரிகளாகவும், கிராமாதிகாரிகளாகவும் கிராம சேவை செய்து வந்தனர். இவர் ஆட்சியில் பல்லக்குகளில் பவனி வருவதும், பிரயாணம் செய்வதும் பாரம்பரையாக வழக்கத்தில் இருந்து வந்துள்ளன வென்று மேல்கூறப்பட்டுள்ள பத்தியம் கூறுகின்றன. வீரபநேனி வெங்கடாத்திரி ஒரு கவிநாதரால் சரித்திரம் உண்டாக்கியதாகவும் மே. பத்தியம் கூறுகின்றன. இந்த வீரபநேனிவாரி பூர்வம் மர்ரிவாட மொகாசாதாரிகளாகப் பிரசித்தி பெற்று வந்ததாக எல்லா ராஜ்ஜிய சரித்திரங்களிலும் இருப்பதாக 'விக்யாத ஜனசரித்திர' கிரந்தகர்த்தா கூறுகிறார்.

கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களில் உள்ள கிராமங்களில் சர்வே இன்னும் பூர்த்தி ஆகாத காரணத்தால் இவர்களுடைய சரித்திரங்கள் முழுவதும் கிடைக்கவில்லை.

148) ராவுலநாயுடு சென்னாரி ஸீமைப்பாலகர். இவர் சகம் 1464-வருஷ காலம் விஜயநகர சாம்ராஜ்ஜியம் அச்சுத தேவராயர் பரிபாலிக்கையில் அவரிடம் ராஜப்பிரதிநிதியாக இருந்து வந்த திருமலராஜகுமாரராகிய வெங்களராஜரிடம் ஒரு உத்தியோகஸ்தராக இருந்து சென்னாரி சீமையில் ராஜாவாக இருந்து பரிபாலித்து வந்ததாக சாசன நெ. 303 35-36 பக்கங்களில் கூறப்படுகின்றன. இந்த ராவுலவார் 16-வது சகாப்த காலத்திலிருந்து பிரசித்தியாக வாழ்ந்து வந்ததாத எழுதப்பட்டுள்ளன.

149) தோட்டகூற பெத்தநேநு. இவர் வினுகொண்ட தாலூக்காவில் பொட்லூர் வாசியாவார். இவர் கொத்தனூர் கிராமத்தில் சில ஸ்தம்பங்களை நிறுவி சாசனங்களை எழுதிப் பிரசித்தி பெற்றனர். இவர் தந்தையின் பெயர் மல்லிநேண்டு சாசன நெ. 222 of 35-36-ல் காணப்படுகின்றன.

150) சேகரி அப்பிரெட்டி, இவர் சகம் 1383-வருஷம் கொண்டூர் தாலூகாவில் அநந்தபல்லி கிராமத்திய கேசவ ஸ்வாமி தேவாலயத்திற்கு இவர் சில பூமிகளைக் கொடுத்து தாம்ரசாஸனம் எழுதி வைத்துள்ளார். அந்த சாஸனத்தில் அந்த கிராமப்பெயர் அநந்தபல்லி என்று குறிப்பிட்டுள்ளன இவர் தந்தையின் பெயர் சாமிரெட்டி. நெ. 285 of 35-36.

151) ரசமிரேவி பெதகோமடிரெட்டி, கல்நிண்டி சீமை பாலகன். இவர் 18-வது சகாப்த காலம் ராஜ்யபரிபாலனம் செய்து வந்ததாக பத்திரங்களில் காணப்படுகின்றன. 'கண்டபெருண்டி' என்ற பட்டமும் பெற்றுள்ளார். இவர் பெரிய வீட்டு அப்பலாச்சாரியிடம் சிஷ்யராக இருந்தும், சகல கலைகளையும் கற்று வந்தார். இவர் வல்லுட்ல கோத்ர ஜாதி. இவர் தந்தையின் பெயர் குருவய்ய. இவர் மிக்க பராக்ரமசாலியாக வர்ணிக்கப்பட்டுள்ளார். காலவசமாகி விட்டபடியால் சரித்திரத்தில் காட்டப்படவில்லை. ராமிரெட்டி வெனிபோலி நீதில் இவர் காலத்திலிருந்து நல்ல புகழ் பெற்றதாக பத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. அவை விஸ்தார பயத்தால் இங்கு குறிக்கவில்லை.

152) விப்பர்லபெதராமன்ன. இவருடைய விஷயத்தை 2-வது பாகத்தில் கூறியுள்ளோம். 12-வது சகாப்த காலத்தவரென்றும் மிக்க பிரசித்திபெற்றவரென்றும் இவர் செவடம்பல்லெ கிராமத்தை நிர்மாணித்து, போலராஜுலே யுத்தத்தில் சம்ஹரித்துக் கீர்த்தி பெற்றும், ஒரு சமயம் 300 பேர் திருடர்கள் தன் கிராமத்திற்கு வர அவர்களை அடக்கி ஓடச்செய்து, ஏழை எளியவர்களுக்கு வேண்டிய உபகாரங்கள் செய்து ரக்ஷித்து வந்ததாகவும் கவி நாயகர் வர்ணித்துள்ளார். விஜயநகர ராஜ்ய அந்திய காலத்தில் போயர்கள் சுவர் சுதந்தரமாக இருந்து அட்டூழியங்கள் செய்து வந்தனர். அந்தக்காலத்தில் இவர் அவர்களில் ஒருவனுடைய தலையை வெட்டி மற்றவர்களை அடக்கி கீர்த்தி பெற்று வந்தனர்.

153) மல்லம்பாடி நாரப்ப, இவர் 18-வது சதாப்த காலத்தவராவார். இவ்வூரை நெல்லூர் ஜாகீர்தாரின் வலைவாரு கிராமயஜமானராக இருந்து பிரபலஸ்தராயினர். இவர் அந்தக்கிராமத்தில் அநுவரை சிதிலமாகி இருந்த ஸ்ரீ வேணு கோபாலஸ்வாமி தேவாலயத்திற்கு அநேக தனம் செலவு செய்து ஜீரண உத்தாரணம் செய்து மகலி 1122-வருஷம் சகம் 1215-வருஷம் மன்மத வருஷம், மாக, சு, 10-ம் நாளில் பிரதிஷ்டை செய்து வைத்தார். அப்பொழுது இந்த கிராமம் மாதூரு வெங்கடகிருஷ்ணய்யங்கார் என்ற ஜமீன்தாரின் பரிபாலனத்தின் கீழ் இருந்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 5, பக்கம் 366, இதை அநுசரித்து எழுதப்பட்ட நெல்லூர் ஜில்லா தேவாலய சரித்திரம் காட்டுகின்றன. இதில் மன்மத-வருஷம் கிறிஸ்து சகம் 1715-வருஷத்திற்குச் சமமாக இருக்கின்றன.

154) மைநேனிவார், கொமரவோலு, கிராம நிர்மாண வரலாறு: இவர்கள் சார்லகட்ட பிரதேச சௌதரிகளாக இருந்து வந்தனர். இந்த வம்சத்தினர் பரம்பரையாக வாழ்ந்து வந்தவராவார். அனவேமா ரெட்டிப்பிரபுவு கொண்டவிடு சீமையின் பாலகராக இருந்த காலம். ஊறுதோட்ட காமராஜு கட்டத்தில் ராகண்டிவார் என்ற அக்ரஹாரவாசிகளாயிருந்தனர். இவர் அதற்காக சில பூமிகளைக்கொடுக்க அவர்கள் மைநேனிடிவாரின் உதவியால் சில பூமிகளில் விவசாயம் செய்து ஜீவித்து வந்தனர். மைனேடிவார் அங்கே கொமரவோலு என்ற கிராமத்தை நிர்மாணித்துள்ளனர் என்று லோகல்ரிகார்டு வால்யம் 50, பக்கம் 411-ல் காணப்படுகின்றன.

155) பாடபூடி குருவிந்தே: இவர் அப்பூரு கிராமத்தில் வீரபத்திர ஆலயத்தைக் கட்டி, பிரதிஷ்டை செய்து மானியம் வழங்கி நடத்தி வந்தார். அதை துருஷ்கர் காலத்தில் நாசமாகி விட்டனர். மறுபடியும் அனத வாசி ரெட்டி வெங்கடாத்திரி பிரபு காலத்தில் ஜீரணஉத்தாரணம்

செய்து நடத்தி வந்தார் என்று லோகல் ரிக்கார்டு வால்யம் 50-ல் குறிக்கப்பட்டுள்ளன. இந்த பாடேபூடிவார், போடேபூடிவாராக இருக்கலாமென்று தெரியவருகின்றன.

156) தாவுலூறிபாபிநீடு, இவர் தெனலி தாலூக்கா குண்டூரில் காட்ரகட்டவாருடன் பிரசித்தியாக வாழ்ந்து வந்தனர், இவர் 18-வது சகாப்தம் கிறிஸ்து சகம் 1750-வருஷ மத்தியில் சித்ரபானு-வருஷம் ஷை கிராமத்தில் ஒரு சிவாலயத்தை நிர்மாணித்து மூலவரைப் பிரதிஷ்டை செய்து அதற்கு நடிம்பள்ளி பத்ரப்பா என்ற ஆதிசைவனை அர்ச்சகராக நியமித்து சில பூமிகளை மானியமாக நடத்தி வந்ததாக லோகல் ரிகார்டு வால்யம் 57, பக்கம் 91-ல் குறிப்பிட்டுள்ளன. குண்டூர் ஜில்லா தேவாலய சாசனத்திலும் காணப்படுகின்றன. இந்த தாவுலூறிவார் இன்றைக்கும் மிக்க பிரபலஸ்தர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

157) கோடே வெங்கடாத்ரி, இவர் 18-வது சகாப்த காலம் கிறிஸ்து சகம் 1750-வருஷம் தெனலி தாலூக்கா பெதகாதெலபர்ரு கிராமவாசி. அந்தக்கிராமத்தில் ஒரு தேவாலயத்தை நிர்மாணித்து ராமலிங்க ஈஸ்வரஸ்வாமியை பிரதிஷ்டை செய்துள்ளார். இந்தக்கிராமத்தில் கோட்டைவார் என்ற கம்மவார் ஆதியில் குடியிருந்து அங்கு ஸ்ரீ கோபாலஸ்வாமி தேவாலயத்தை நிர்மாணித்து கிறிஸ்து சகம் 1686-வருஷம் அந்த தேவாலயத்தில் பூஜாதி காரியங்கள் யுக்தப்படி நடந்துவந்தன. பின்னர் அந்தப் பிராந்தியத்தில் க்ஷயம் ஏற்பட்டு ஜனங்கள் வேறிடத்திற்கு குடியேறிய காலம். அந்த ஆலயம் சிதிலமடைந்து விட்டதனால் ஸ்ரீ வெங்கடாத்ரி மறுபடியும் அதை புதுப்பித்து ராமலிங்கேஸ்வரஸ்வாமி என்று நாமமிட்டுள்ளதாக குண்டூர் ஜில்லா தேவாலய சரித்திரம் கூறுகின்றன. இந்த வம்சத்தினரின் வர்த்தமானங்களை ஸ்ரீ கோடே அப்பய்ய காரின் குமாரராகிய வெங்கடாத்ரி சௌதரி, B. A.

அவர்கள் காகினடா முதலான பல இடங்களில் முனிசிபல் கமிஷனராக இருந்து பிரசித்தி பெற்றனர். இந்தக் கிராமத்தில் யட்லபாடிவார் என்ற கம்மவார் அமரலிங்கேஸ்வரஸ்வாமி தேவாலயத்தை நிர்மாணித்து நடத்தி வந்தனர்.

158) கொத்தபல்லி அப்பய்ய சௌதரி இஜாரதார். இவர் சிந்தபல்லியில் ஜமீன்தாராகிய ஸ்ரீ ராஜா வாசிரெட்டி வெங்கடாத்ரியின் குமாரராகிய ஜகந்நாதபாபுவுக்கு சமகாலத்தவராக இருந்து இவர் கிராமத்தில் (நிஜாரா) அதிகாரம் பெற்று ஜகந்நாதபாபவினிடம் இவர் கிறிஸ்து சகம் 1821-வருஷத்தில் பொப்பர்லங்க, மோபிதேவிலங்க, சிறுவோலுலங்க, மெரகனபல்லிலங்க, மேடமர்த்திலங்க, பிட்டலங்ககையில் உள்ள பூமிகளைத் தர்காஸ்து எடுத்து அந்தப் பிரதேசங்களுக்கு அதிகாரியாகியும், காண்ட்ரேகுலவாரி சமஸ்தான பூமிகளையும் இஜாரா பெற்று அங்குரை நுக்களைக் குடியேற்றி, அவர்களுக்கெல்லாம் தலைவராக இருந்து பணியாற்றி வந்தார். அக்காலத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பனியார் பந்தர் கோட்டையை புனருத்தாரணம் செய்து வைத்தனர். இவர் அதற்கு வேண்டிய செங்கற்களை ஒரு கோடியும் மற்ற சாமான்களையும் கொடுத்து வந்தனர். இவர் நாபாயதிப்ப என்ற இடத்தில் வாசம் செய்துவந்தார். இவர் காலத்தில் ரெவின்யூ அதிகாரிகளாக இருந்த தாரனஹில், C. B. L., கூமிங்கு, G. W. டூனர் என்றவர் இவருக்கு ஒரு யோக்யதா பத்திரம் வழங்கியுள்ளார். இவர் இஜாரா செய்த கிராமங்களில் வாசிரெட்டி ஜகந்நாதபாபு ஜமீன்தாருக்குச் செலுத்தி வந்த தானியக்கணக்கு 320 வள்ளத்திற்கு 160 வள்ளம் தானியத்தை வாரகமாகக் கொடுத்துவந்தார். இவர் சுமார் கிறிஸ்து சகம் 1840-ஹு காலகதி அடைந்து போயினர்.

கம்மவார் சரித்திரம்

3-ம் பாகம் தசமப்பிரகரணம்

10-வது பிரகரணம்.

---

159) உண்ட்ராஜபுரம் வகையரா சமஸ்தானம். முள்ளபூடிவார், முள்ளபூடி திம்மன்னகாரு. வெங்கடராயடு காரு, இவர்கள் மேற்கு கோதாவரி ஜில்லாவில் தணுகு தாலூகாவில் உள்ள தணுகு கிராமத்தில் இந்த வம்சத்தினர் பிரபலமாக வாழ்ந்துவருகின்றனர். 19-வது சதாப்தகாலம் இந்த வம்சத்திய திம்மன்னகாரர் பிரபலமாக அநேக பூமிகளை ஆர்ஜிதம் செய்துகொண்டு தனவந்தராகி, எலூர் தாலூகாவில் திம்மாபுரம், தாடேபல்லிகூடம் தாலூகாவில் மற்றும் சில கிராமங்களைச் சம்பாதித்து ஜமீன்தார் ஆயினர். இவருக்கு ஏகபுத்திரி அச்சயம்மா என்றபெண்மணி தோன்றினள் அவளைத் தொம்மேறு வாசியாகிய கொண்டகூடம் எஸ்டேட்டு ஜமீன்தாரர் ஆகிய ஸ்ரீ பெண்ட்யால அச்சுதராமய்யகாருக்கு விவாகம் செய்து கொடுத்து வைத்தனர். இவர் ராஜாங்கத்திற்கு வருஷா வருஷம் ரூ. இருபதாயிரம் கிஸ்து செலுத்தி வந்தார். இவருக்கு ஆண் சந்ததி இல்லாத காரணத்தால், கால்தாடி கிராம முள்ளபூடி திருப்பதி நாயடு குமாரன் வெங்கடராயனைத் தத்து ஸ்வீகாரம் செய்துகொண்டனர்.

160) முள்ளபூடி வெங்கடராயடு ஜமீன்தார், இவர் காலத்தில் இந்த ஜமீன்தாரி விருத்தி அடைந்து குடிவாட தாலூகாவில் பெதலிங்கால என்ற ஜமீன் கிராமத்தை எர்ரகூடம் தாலூகாவைச் சேர்ந்த த்யாஜம்பூடி எஸ்டேட்டைப்பெற்று, இவர் பெண்ட்லாட் என்ற பிரதேச அச்சுதராமய்யகார் புத்திரி அக்காயம்மாளை மணம் செய்துகொண்டு தன் ஜமீனில் அநேக தோட்டங்களை நிர்மாணித்து விருத்தி செய்து வந்துள்ளார். இவருக்குத்

திம்மராஜன் என்ற குமாரன் தோன்றி விருத்தி அடைந்து வந்தார், கிறிஸ்து சகம் 1901-வருஷத்தில் ஜனனம்.

இவருக்கு அநந்தலக்ஷிமி தேவம்மா, சத்யநாராயணம்மா, அச்சாயம்மா, சினலக்ஷிமி தேவம்மா என்ற 4 குமாரத்திகளும் உண்டு. இதில் அநந்தலக்ஷிமி தேவம்மாளை வெண்டியால அச்சுதராமய்ய ஜமீன்தார் குமாரன் ஆகிய வெங்கடகிருஷ்ணய்யகாருக்கும், சத்யநாராயணம்மாளை நிடதபோலு வெங்கடராமய்யனுக்கும், அச்சாயம்மாளை சிட்லூர் வெங்கடலக்ஷிமீ சரஸ்வதீ பிரசன்னராவுகாருக்கும், சினலக்ஷிமி தேவம்மாளைச் சிட்லூர் கனகராவுக்கும் கொடுத்து விவாஹம் செய்து வைத்தனர்.

161) முள்ளபூடி திம்மராஜு ஜமீன்தார், வெங்கடராயர் குமாரராகிய இவர் ஜமீன்தாராகிப் பிரஜைகளுக்கு வேண்டிய சௌகர்யாதிகளைச் செய்து பிரசித்தி பெற்றவர். கிறிஸ்து சகம் 1923-ம் வருஷத்திலிருந்து தாலூகா போர்டு மெம்பராகவும், ரக்ஷகர்த்தாவாகவும் கொண்டாடப்பட்டு 1928-வருஷம் ஜில்லா போர்டு தலைவராகவும் இருந்து காரியாதிகளை மிக்க சிரத்தையுடன் கவனித்து வந்தார்.

இவர் ராஜவோலு தாலூகா பெதபட்டண வாசியாக இருந்து அப்பட்டண வாசிகளுக்கும், விவசாயிகளுக்கும் வேண்டிய உதவி செய்து வந்தார். போள்ளபூடி சுப்பாராயடு குமாரத்தி வெங்கடரமணம்மையை விவாகம் செய்து கொண்டு அவ்வம்மையாரால் அரிச்சந்த்ர ராவு என்ற குமாரனைப் பெற்று, 2-வது அச்சாயம்ம என்ற பெண் புத்திரியையும் பெற்று வளர்த்து வந்தனர். பின்னர் இந்த பார்யை காலமாகி விட்டபடியால். மறுபடி 1924-வருஷம் இன்டூர் வாசிகளாகிய கம்மவாரின் வம்சத்திய காட்ரகட்ட ஸ்ரீராமுலுகாரின் குமாரத்தியாகிய கமலா தேவியை விவாகம் செய்து அவள் திருவயிற்றில் வெங்கடரமணம்பாள் என்ற பெண்ணும், நரேந்த்ரநாதென்ற ஆண் புத்திரனும் பிறந்தனர். இவர்கள் நாளொரு மேனியாக வளர்ந்து வந்தனர். இவர் தாலூகா போர்டு பரிபாலன காலத்தில் இந்தி பாஷையில் மிக்கப் பற்று கொண்டு, உபாத்தியாயர்

களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து அந்த பாளையத்தை அபிவிருத்தி செய்தும், நூதனமாகச் சில ரோடு களை நிர்மாணித்தும், எர்ணகூடம் தாலூகாவில் சில ஏற்றுக்கிணறுகளை உண்டாக்கி வைத்தனர். இதனால் ஜனங்களுக்கு அநேக வசதிகள் உண்டாயினவென்று கூறப்படுகின்றன. இந்த சமஸ்தானத்தில் குறுநில வாசஸ்தர்களாக இருந்து மகோ விருத்தியடைந்து வந்தனர்.

162) கொண்டகூடம் சமஸ்தானம் வெண்டிபால அச்சுதராமய்யகாரு. இந்த கொண்டகூடம் மேற்கு கோதாவரி ஜில்லா கொவ்வூரி தாலூகாவில் இருக்கின்றன. இந்த சமஸ்தானத்தைக் க்ஷத்திரியரில் தோன்றிய வெண்டிபாலவார் ஏற்படுத்தினர். இவர்களுடைய கோத்திரம் வசூரி கோத்திரம். இப்பொழுது அச்சுதராமய்யகாரு கொண்டகூடம் சமஸ்தானாதிபதியாக இருந்து பின்னர் தொம்மேரு கிராமவாசிகளாக இருக்கின்றனர். இவர் உண்ட்ராஜவரம் சமஸ்தானாதிபதியாகிய ஸ்ரீ முள்ளபூடி திம்மன்னகாரின் பெண்ணை விவாகம் செய்துகொண்டு, அக்காயம்ம என்ற பெண் புத்திரியைப் பெற்றனர். இந்தப் பெண்மணியை உண்ட்ராஜவரம் சமஸ்தானாதிகாரியாகிய முள்ளபூடி வெங்கடராயலுக்கு விவாகம் செய்துகொடுத்து வைத்தனர். இந்த வெங்கடராயுடுகாரு ஸ்ரீ திம்மன்னகாரின் தத்துப்புத்திரராவார்.

அச்சுதராமய்யகாருக்கு வெங்கட கிருஷ்ணய்ய என்ற குமாரன் உண்டு. இவர் வெங்கடாபாலெ ஜமீன்தார் புத்திரி ஆகிய அனந்தலக்ஷ்மி தேவம்மனைத் திருமணம் செய்து கொண்டனர்.

163) செட்டிகூடம் ரங்காபுரம் ஜமீன்தார், ஸ்ரீ அடுசுமல்லி கோபாலகிருஷ்ணய்ய சௌதரிகாரு, அடுசுமல்லிவார் ஆறுநூள்ள. சோழ கோத்ரவாசிகளாவார். இவர்களிற் சிலர் குடிவாட தாலூக்காவில் வாசம் செய்து வருகின்றனர். இவர்களில் ஸ்ரீ அடுசுமல்லி ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்ய சௌதரிகாரு மிக்க பிரபலஸ்தராவார். இவர் நூதனமாக ரங்காபுரம், செட்டிகூடம் இராமலிங்கர் மடபாடு

வெங்கடேஸ்வர ராவுகாரின் வாரிசுகளிடமிருந்து பெற்று ஜமீன்தாரராயினர். இவர் தந்தையாகிய சுப்பராமணியம் அவர்கள் காலத்தில் பெஜவாடா, பந்தர் லேன் போடுவதற்கு முந்தி சில பூமிகளைச் சொற்ப விலையில் வாங்கிப் பின்னர் அதிக விலைக்கு விற்றனர். இதிலிருந்து இவர்களுக்கு ஏராளமாகத்திரவியம் திரண்டதென்று சொல்லுகின்றனர். இவர் தம் கிராமத்தில் சில, கேசவ தேவாலயங்களை நிர்மாணித்து, அதற்கு வேண்டிய பூமிகளை மானியமாகக் கொடுத்து அர்ச்சக பரிவாராதிகளுக்கு வேண்டியவற்றையும் ஏற்படுத்தி வைத்தனர். இவர் புத்திரியாகிய பாபம்மாளை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ வெலகபூடி ராமகிருஷ்ணய்ய, I. C. S. அவர்களுக்கு விவாஹம் செய்து கொடுத்தனர். இவர் தர்ம மஹாஜன காரியங்களையும், ஜில்லாக்களில் தாலூக்கா ஸ்தல காரிய நிர்வாகங்களையும் கவனித்து வந்தார். தவிர மற்ற உத்தியோகஸ்தர்களிடத்திலும் மகத்துவம் பெற்று உள்ளனர். இவருக்கு சுப்ரமண்யம், விஸ்வேஸ்வர ராவு என்ற 2 குமாரர்கள் இருக்கின்றனர். இவர் மூத்த குமாரர் சுப்ரமணியம்காரர். குருவிகுளம் சமஸ்தானபதியாகிய பெம்மசானி கொண்டலராயஸ்வாமி நாயுடு குமாரத்தியை மணம் புரிந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றன.

164) கி. சே. அஞ்சூரி சுப்பா நாயடுகார் பண்டேபல்லி ஜமீன்தார். இவர் நெல்லூர் ஜில்லா பிந்துகூரிபேட்டை வாசி. இவர் மைகா வியாபாரிகளுடன் வியாபாரம் செய்து லக்ஷக்கணக்கில் தனம் சம்பாதித்து, அநேக தானதர்மங்களைச் செய்தும், பிரக்யாதி பெற்ற கம்மகுல திலகராவார். இவர் ஷெடி பேட்டையில் ஒரு பவனத்தை நிர்மாணித்தும், அன்னவரம் கிராமத்தை ஒரு சமயம் அக்கினி தேவரால் பஸ்பம் செய்யப்பட்டன. அதுசமயம் இவர் அந்த கிராமவாசிகளுக்கு வேண்டிய மரம், மட்டைகள், கற்கள் முதலானவற்றைக் கொடுத்து வீடுகளை நிர்மாணிக்க வேண்டிய தனமும் கொடுத்து ரக்ஷித்தார். தன்னை அண்டிய ஏழை எளியவர்களையும் ஆதரித்து வந்தார். அவர் 'தக்ஷயக்ஞம்' என்ற கிரந்தத்தை எழுதிவைத்து அதற்கு கர்த்தாவாக இருந்து விநியோகம் செய்துள்ளனர். தவிர இவர்

பண்டேபல்லி ஜமீன்தாராகிப் பிரசித்தி பெற்றனர். இவர் கூடப்பிறந்தவர்கள் 5 பேர். அதில் இவர் 4-வது. மறுபடி யும் இவர் வியாபாரத்தை நடத்தி வருகையில் அநேக நஷ்டங்கள் ஏற்பட்டதனுல், தான் சம்பாதித்த தனம் விரயமாயின என்று கூறுகின்றனர்.

165) வேலுபுசெர்ல மொகாசா, மொகாசாதார் மான்யம், வெங்கடராமய்ய செளதரி, B. Sc., B. L. இந்த கிராமம் வேலூர் தாலூக்காவில் உள்ளன. மேற்கு கோதாவரி ஜில்லாவைச் சேர்ந்தது. இந்த கிராமத்திற்கு இப்பொழுது மானம் வெங்கடராமய்ய செளதரி, B. A., B. L. அதிகாரிகளில் ஒருவர். இவருடைய பூர்வீகர்கள் அநேக தனம் சம்பாதித்தனர். அதில் இவர் பாகத்தை விரயம் செய்து விட்டனர். இவர் பட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றும், சர்க்கார் பதவியில் சேராமலேயே வேலுபுசர்ல கிராமத்தில் வாசம் செய்துகொண்டு சுயமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த வெங்கடராமய்யகார் ஜனக வம்சம். இவர் தம்பி ஆகிய காகரால சத்யநாராயண, B. A., B. L., இப்பொழுது ஏலூரில் ஒரு வக்கீலாக இருக்கிறார். வெங்கடராமய்யகார், பூர்வமொகாசாவாருக்குத் தத்துப் புத்திரனுக ஸ்வீகாரம் பெற்றுள்ளார்.

166) சூரேபல்லி மொகர்சாதார், மாதல வெங்கய்ய செளதரி, குஜநீடு தாலூக்காவைச் சேர்ந்த சூரேபல்லி கிராமம் ஆதியில் கேசானபல்லிவாருக்குச் சேர்ந்திருந்தன. அந்த வம்சத்தில் ஸ்ரீ லக்ஷ்மிகாந்தம்மாள் தோன்றி 1924-வருஷம் மாதல வெங்கய்ய செளதரிக்கு விக்கிரயம் செய்துள்ளார். இந்த மொகாசாவில் லேண்டு ரெவின்யூவில் சில்லரை ரெவின்யூக்கள் கலந்து ரூ. 350—0—0 பீட்டும் ரூ. 650—0—0 ஆக மொத்தம் ரூபாய் ஆயிரம் ஆதாயம் கிடைத்தன. இந்த மொகாசாவுக்கும் ஜமீன்தாரி கட்டுப் பட்டு ரூ. 12—0—0-ம் ரோடு செஸ் ரூ. 10—0—0-ம் செலுத்தப்படுகின்றன.

இந்த மாதவ வெங்கய்ய சோமய்ய சொதரர்களுக்கு இந்த மொகாசா கிராமம், சொக்கம்பட்டி பாகத்தில் அக்கி-ரெட்டிகோட்டம் கிராமத்தில் புஞ்செய் பூமிகள் ஆக 3 கிராமங்களிலும் சேர்ந்து 1500 ஏகர் பூமிகள் இருக்கின்றன. இதனால் இவருக்கு வருஷம் ரூ. 10 ஆயிரம் ஆதாயம் வருகின்றன. இவர் களிருவரும் சக்கம்பட்டி கிராமத்தில் வாசஞ் செய்து வருகின்றனர். இவருடைய தந்தை சகோதரர்களின் காலத்தில் சில தேவாலயங்களைக்கட்டி பிரதிஷ்டை செய்து பூஜாதி காரியங்களை நடத்திப் பிரசித்தி பெற்றனர். வெங்கய்யகாரும் தம்சகோதரருடன் சேர்ந்து கொண்டு இவர் கிராமத்தில் ஒரு தர்மசத்திரம், ஒரு கிணறு, ஒரு தடாகம் முதலானவைகளை நிர்மாணித்து, ஒரு தேவாலயத்தையும் நிர்மாணித்து அதில் ஸ்ரீ ராதாருக்மணி ஸ்ரீ வேணுகோபாலனைப் பிரதிஷ்டை செய்து வைத்து மானியங்களும் செய்து வைத்துள்ளதாகவும், அக்கரெட்டிகோட்டம் கோகல்பண்டு கிணற்றில் பொரிங்கு போட்டு ஜல வசதியையும் செய்துவைத்தனர்.

3-வது பாகம் ஏகாதசப்ரகரணம் 11-வது.

167) ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிடத்தில் கம்பவார் பிரபுக்கள், கிறிஸ்து சகம் 1780-வருஷம் முதல் குன்றீஸ் சர்க்காரின் கீழாகவும், இதர தேசங்களில் தத்பூர்வமாக கொஞ்ச காலத்திலிருந்து கம்பெனியாரின் ஆட்சி ஏற்பட்டதாக முன்னர் கூறியபடி இவர்களின் பரிபாலன காலத்தில் கம்பவார் ஜமீன்கள் சிலர் நடத்தி வந்தனர். சித்தலபாடு பிரதேசத்தில் சித்தயம்பி சமஸ்தானத்தை கம்பவாரில் வாசிரெட்டிவாரும், தேவரகோட்டை சமஸ்தானத்தை ஏர்லகட்டவாரும், கபிலேஸ்வரபுரம் கேசவதுர்கு சமஸ்தானத்தை மதுசவாரும், ஆந்திதுளசி சமஸ்தானத்தை பெம்மசானிவாரும், இலாரசவேந்திரம் சமஸ்தானத்தை ராவெள்ளவாரும், செல்லம்பட்டு சமஸ்தானத்தை பெல்லம்வாரும் பரிபாலித்து வந்து, கம்பெனியார் ஏற்படுத்திய பேஷ்கஷ் தொகையைச் செலுத்துவதற்கும் அவர்கள் ஏற்படுத்திய நிபந்தனைகளையும்

அனுசரித்து நடத்திவந்தனர். இந்த ஜமீன்களைக் குறித்து 1802-வருஷம் 26 ரெகுலேஷன்களை ஏற்படுத்தினர். அதன்படி ரைதுக்களின் பட்டங்களின்படி ஜமீன் கிராமங்களில் ஏற்பாடு செய்தனரே ஆயினும் அவர்களின் கிஸ்து வசூல் செய்து கொள்ள கிராம மொத்தம் ஏலம் விடுவதற்கு மாத்திரம் ஏற்பாடாயினும், பின்னர் அவர்களின் ஆதரவில் இருந்தன. 1857-வருஷம் இந்தக்கம்பெனியாரே மதராஸில் கவர்னரை ஏற்படுத்தி, இந்த ஜமீன்களின் மீது சர்வாதிகாரங்களைச் செலுத்திவந்தனர். கவர்னர்கள் 5-வருஷத்திற்கு ஒருவரை மாற்றி வந்தனர். இங்கிலாந்தில் இருந்து அநேகர் வந்து கொண்டிருந்தனர். அக்காலத்தில் இருந்து சமஸ்தானங்கள் எல்லாம் அவர்களின் கீழ் கிராமங்களைப் பரிபாலித்து வந்தனர். மற்றைய கம்மவார் விவசாயம் முதலான தொழில்களை நடத்திவந்தனர். இந்த கம்பெனியார் காலத்தில் நூபாடி சமஸ்தானத்தை சாயபநேனிவாரிலிருந்து சர்க்காருடன் சேர்ந்து விட்டதென்று முன்னமே கூறியுள்ளோம். இதைப்போலவே சிந்தபல்லி சமஸ்தானமும் சேர்ந்துபோயின.

168) பிரிட்டீசார் ஆட்சியும், கம்மவாரின் ஜனநாயகமும் கிறிஸ்து சகம் 1858-வருஷத்திலிருந்து ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் ஆட்சி ஆரம்பமாகியதிலிருந்து இந்த ராஜ்யம் விக்டோரியா மஹாராணியின் பரிபாலனத்தின் கீழ் ஆகிவிட்டன. கம்மநாடு சென்னை ராஜதானியில் எல்லா ஜில்லாக்களிலும் கம்மவார் இருந்துவந்தனர். கிறிஸ்து சகம் 1871-வருஷம் டில்லியில் விக்டோரியா மஹாராணியார் பட்டாபிஷேக தர்பார் நடத்தப்பட்டன. அந்த காலம் கம்மஜமீன்தார்களில் குருவிகுளம், செவ்வல்பட்டி, இலையசநேந்தல் முதலான சமஸ்தானபதிகளாகிய ஸ்ரீ பொம்மசானி கொண்டலராய ஸ்வாமி நாயடுகாரும் பெல்லம் சுப்பா நாயடு ராவெள்ள கஸ்தூரிரங்க அப்பாஸ்வாமி நாயடு இவர்களுக்கு யோக்யதா பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. விக்டோரியா மஹாராணி காலத்தில் அநேக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன 1891-வருஷம் முதல் ஜனன மரண கணக்குகளை எடுப்பதற்கு பிரத்யேகமாக அதிகாரிகளை ஏற்படுத்தினர். அதன்படி கம்மவாரில்

231 குலங்களிருந்தன வென்றும் முக்கியமாக இதில் குறிக்கப்பட்டன ஜில்லாக்களில் கம்பளரின் ஜனசங்கியை

1) பங்காரு கம்மவார் 12617 பேர் வடாற்காடு ஜில்லாவிலும்.

2) வடுக கம்மவார் 28518 கோயம்புத்தூர் ஜில்லாவிலும்.

3) காவலி கம்பளவார் 42888 கோதாவரி ஜில்லாவிலும்.

4) கோட சாடு கம்மவார்
5) இல்லுவெள்ளணி கம்பவார்
6) பெத்த கம்பளவார்
} 382895 கிருஷ்ணா, குண்டூர், அநந்தப்பூர், வடாற்காடு ஜில்லாக்களிலிருந்தனர்.

(தக்கவிபரங்கள் காணப்படாதவை)

1921-வருஷம் கம்மவாரின் ஜனசங்கியை மதராஸ் ராஜ்டத்தில் 1149000 பதினொருலக்ஷத்து நாற்பத்தொன்பதாயிரம் என்று முதல் பாகத்தில் கூறப்பட்டுள்ளன. கம்மவார் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடையும் முதல் கூறப்பட்டகளைக்கு ராஜாதிகாரிகள் மற்றவர்கள் சாமான்ய விவசாயிகளாகவும் பிரிட்டிஷ் பிறப்புக்களின் சைன்ய விந்தைகளே மாத்திரம் சம்பூரணமாக மறந்துவிட்டதாகத் தெரிய வருகின்றன. கம்மவாரில் சைனியங்களிலும், உத்யோகம், வியாபாரம் முதலிய தொழில்களில் இருந்தவரின் விபரங்கள் காணப்படவில்லை. தவிர கிராமங்களிலும் உள்ளவரைக் குறிப்பிடவில்லை. கம்மவாரை மொத்தமாகக் குடியானவரென்றே ஜனகணிதமான்யுவலில் எழுதிவைத்துள்ளனர்.

169) கம்மவார், பிரிட்டன் ஆட்சியின் கீழிருந்த சமஸ்தானங்கள், விக்டோரியா மஹாராணி காலமடைந்த பின்னர் 1901-வருஷம் 7-வது எட்வர்டு பட்டத்திற்கு வந்து 10-வருஷ காலம் ஆட்சியை நடத்தி 1911-வருஷம் காலமாகிவிட்டனர். பின்னர் அவர் குமாரன் 5-வது ஜார்ஜும் 6-வது ஜார்ஜும் பட்டத்திற்கு வந்து இந்து

தேச சக்கரவர்த்திகளாகயிருந்து பிரதிநிதிகளை ஏற்படுத்தி நம்நாட்டை ஆண்டுவந்தனர் இவராட்சியில் நூதனமாகக் கம்மவாரின் கீழாகச் சிறு சமஸ்தானங்களைச் சம்பாதித்துக் கொண்டதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. இந்த கம்பெனியாரின் கீழிருந்த சமஸ்தானங்களின் விவரங்கள்.

1) செறுகூர் சமஸ்தானம் வாசிரெட்டிவார்.
2) காட்டூறு சமஸ்தானம் யேர்லகட்டவார்.
3) கிருஷ்ணாபுறம் பெதவேகி சமஸ்தானம் ,,
4) முஞ்சலூர், பெநமநூர் சமஸ்தானம் ,,
5) தியாஜம்பூடி சமஸ்தானம் முள்ளபூடிவார்
6) கொண்டகூடம் சமஸ்தானம் பெண்ட்யாலவார்
7) இந்த சமஸ்தானத்தின் பெயர் காணப்படவில்லை அல்லூறுசூரன்னவார.
8) பண்டேபல்லி சமஸ்தானம் அம்சூரிவார், இதுமறுபடி அந்நியருக்கு வசமாயின.
9) கங்கபாலம், லால்புறம், அக்ஹாரங்கள் கொத்தவார்
10) சோத்ரிய கிராமங்கள் பெயர் காணப்படவில்லை ஷெ செங்கல்பட்டு ஜில்லா
11) ரங்காபுறம், ரெட்டிகூடம் சமஸ்தானம் அடுசுமல்லிவார்
12) வேலுபுசெர்லமொகாசா மானமவார்
13) சூரேபல்லிமொகாசா மாதலவார்

தவிர கவனிக்கப்படாத சமஸ்தானபதிகள் எத்தனையோ பேர்களிருக்கின்றனர் அதை இங்கு தெரிவிக்க முடியவில்லை பூபதிகளுடைய பாலனங்களை கிரமப்படுத்துவதற்கு வேண்டிய சர்க்கார் 1908-வருஷம் ஒரு எக்ஷிகூடிவ் அல்லது எஸ்டேட் லாண்டு ஏற்ப்படுத்தி அதில் ரைதுக்களுக்கும் பூபாலருக்கும் சர்க்கார் மத்தியிலிருந்த அநேக விஷயங்களை பரிஷ்காரம் செய்யப்பட்டன.

1914-வருஷம் ஜர்மன் யுத்தகாலத்தில் கம்மவார் பட்டாளத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தவர்களின் விஷயங்கள் டாக்டர்கள் ஸ்ரீ கொல்லூறி வெங்கடநாயுடு சௌதரி

M. B. B. S. டாக்டர் கேப்டன் கங்கபல்லி சத்தியநாராயண சௌதரிகார் S. M. S.

சிட்டூர் ஸ்ரீ சத்திய ராஜு சௌதரிகார் S. M. S. M. R. C. S. பரீக்ஷயில் தேர்ந்து பூனாவில் சைனிய தளத்திற்கும் டைரெக்டர் களுக்கும் மேலதிகாரியாகயிருந்தனர். பாமுலபாடி லக்ஷிமி நரசய்யகார் டேராடூன் கிங்ஸ் கமிட்டியில் லெப்டினென்ட் கர்னல் உத்யோகஸ்தர் வெலகபூடி ராமகிருஷ்ணய்ய சௌதரிகார் எடின்பரோவில் 1922-வருஷம் M. A. B. S. C. I. C. S, பரீக்ஷகளில் தேர்ந்து செங்கல்பட்டு ஜில்லாவில் அஸிஸ்டன்ட் கலெக்டராக இருந்து 1924-வருஷம் ரெவின்யூ அன்டர் செகரெட்டரியாக இருந்து 1925-வருஷம் ஜயப்பூர் சமஸ்தானத்தில் திவானகப் பணியாற்றிவந்தனர்.

உப்பலபாடி ஸ்ரீ சௌதரி ராஜுலு நாயுடு B. A. B. L. சப்ஜட்ஜ். இவர் பந்தர், மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர், கும்பகோணம், திண்டுக்கல் முதலான இடங்களில் உத்யோகம் செய்துவந்து ரிடையர்டுபெற்றனர் 1904-வருஷம் முதல் தேவாலய காரியதரிசியாகவும் பணியாற்றிவந்தனர்.

170) கம்மவார் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த விவரங்கள்:- இதுவரையிலும் இந்து மதத்திலிருந்து, அன்னிய மதத்திற்குச் சேராத கம்மவார், பிரெஞ்சு, பிரிட்டன் ஆட்சி காலத்தில் சிலர் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்ததாகத் தெரியவருகின்றன. ஆயினும் இவர்கள் தங்கள் மதங்களையும், குலங்களையும், கம்மவார் என்ற பட்டப்பெயரையும் மாற்றிக்கொள்ளாமல், மத விஷயமாக கிறிஸ்தவர் என்று பெயர் வைத்துக்கொண்டு இதர கிறிஸ்தவர்களிற் சேர்ந்து கொள்வினை, கொடுப்பினைகள் ஏற்றுக்கொள்ளாமலேயே இருந்து வருகின்றனர். இந்த கிறிஸ்தவர் மதமானது நம் இந்து தேசத்தில் பிரவேசித்தது. 18-வது சகாப்த காலத்தில் வடஆர்க்காடு ஜில்லா, பல்லாரி அநந்தப்பூர் ஜில்லாவில் ஜேஸ்ட்டுல்ஸ் என்ற கிறிஸ்தவர்கள் கிறிஸ்து சகம் 1733-ஞ அதாவது 16-வது சகாப்த

காலத்தில் இருந்தனர். அதில் நெல்லூர் ஜில்லாவில் பலர் மதமாற்றம் செய்யப்பட்டனர் என்று ஒரு மூலக்கிரந்தம் சொல்லு. 1752-ல் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் ராஜ்யாதிக்கம் செய்து கொண்ட சமயம் நெல்லூரு, பல்லாரி, கர்நூல் பிராந்தியங்களில் வாழ்ந்து வந்தவர்களுக்கு கிறிஸ்தவர்கள் அவருடைய ஆளுகையில் பிரவேசித்தனர். இந்த ஜில்லாக்களில் கிறிஸ்தவர்கள், தென் ஜில்லாக்களிலிருந்த கிறிஸ்தவர்களை விட அதிகமான கஷ்டங்கள் அடைந்தனராயினும் 1897-ல் வடஆற்காடு, (கிருஷ்ணா, குண்டூரு) கலந்த பிரதேசம், ஜில்லாவில் எல்லாவித ஜனசமூகங்களால் விருத்தி அடைந்து வருகின்றனர் என்று 1891-ல் ஜனசங்கிய ரிப்போர்ட்டுகளில் தெரியவருகின்றன. அப்போதைக்கு குண்டூரு ஜில்லாவில் 10 ஆயிரம் ஜனங்களிருந்தனர். கிறிஸ்தவ மதம் இப்படி தேசத்தில் பிரபலமாகி வரவே, அம்மத குருக்கள் கம்மவாருக்கு போதனை செய்து வசப்படுத்திக்கொண்டனர். சுமார் கிறிஸ்து சகம் 1800-வருஷ காலம் நரசராவுபேட்டை தாலுக்காவில் உள்ள ராவிபாடு கிராமத்துப்பாளையர் போலவரப்ப செட்டியை என்ற கம்மவார் முதலில் பிரோடெஸ்டென்ட் மதத்தை [illegible] பிரவேசித்து அதை அங்கீகரிக்க, உடனே அவருக்கு நரசராவுபேட்டையில் ரெவின்யூ ஆபீஸர் வேலை கொடுத்து [illegible] நிலைபெறுவதற்கு ஆதாரம் கிடைத்ததென்று கூறப்படுகின்றன.

குண்டூர் ஜில்லாவில் இந்த சமயவாரில் வியாபித்தது. இவ்விஷயம் கிருஷ்ணா ஜில்லா மான்யுவல் 278-ம் பக்கம் எழுதப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி பிரெஞ்சுக்காரர்கள் முதலில் தங்கள் மதத்தில் கலந்துகொண்ட கம்மவாருக்கு ரெவின்யூ ஆபீஸர் உத்தியோகம் வழங்கி வசப்படுத்திக்கொண்டதாகக் காணப்படுகின்றன. முட்லூரில் கிறிஸ்துசகம் 1770-வருஷம் டவசத்துக்கு என்றவர் தஞ்சையில் 7½ எக்கர் பூமியைக் கிறிஸ்தவ மிஷன்களுக்குக் கொடுத்ததாம். இப்படியே கிறிஸ்தவ மதம் நம்நாட்டில் விருத்தி அடைந்து வருகையில், கம்மவாரிற் சிலர் மத தர்மத்தை விடாமல் அனுஷ்டித்து வந்தனர். பிரகாசபுரம், பெதகூறபாடு, முட்லூரு, செண்ட்டகிரித்தல முதலாகிய பிராந்தியங்களில்

கிறிஸ்துவ சர்ச்சுகள் ஏற்படுத்தி வந்தனர்கள். இது நிற்க ஆந்திர தேசத்தில் அமெரிக்கன் பாப்டிஸ்ட்டு சங்கத்தினர் வந்து கலந்துகொண்டு தங்கள் மதபோதனைகளைப் போதிக்க ஆரம்பித்தனர். நெல்லூர் ஜில்லாவில் 1840-ல் இந்த சங்கத்தினர் தங்கள் காரியங்களைத் துவக்கியதாக ஜனகணித ரிபோர்ட்டு 1891-ல் தெரிவிக்கின்றன. (P. 76) 1842-ல் 'யுனைட்டட் லூதரன் சங்கம்' ஆந்திர தேசத்தில் குண்டூர் ஜில்லாவிற்கும் பிரவேசித்தன. இதில் கம்மவார் எத்தனை பேர் பிரவேசித்தனர் என்ற கணக்கின்படி மொத்தம் 1911-வருஷத்தில் குண்டூர் ஜில்லாவில் மட்டும் 1,23,707 ஜனகணிதக்கணக்கில் தெரியவருகின்றன. ராவிபாடு கிராமத்திய கம்மவார் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

171) ரெவரெண்ட்டு H. H. பிஷப் பொதகமூர் தாமஸ் கார், இவர்களில் நல்ல பெயர் பெற்றவர்கள் இந்த சகாப்தத்தில் ரெவரெண்ட்டு பிஷப் பொதகமூர் தாமஸ்கார் ஆவார். 1940-வருஷம் குண்டூரில் கம்மவாரில் ஒருவருக்குப் 'பிஷப்' பட்டம் சூட்டினர். இதனால் கம்மவாரில் பலர் கிறிஸ்தவ மதத்தில் ஆவேசம் கொண்டனர் என்று தெரியவருகின்றன. இவர் நரஸராவுபேட்டை வாசி ஆவார்.

சாசன சபைகளில் கம்மவார் ஸ்தானங்கள் பெற்ற விஷயங்கள்: இந்திய ராஜ்யபாலிகளாகிய ஆங்கிலேயர்கள் பிரஜைகளுக்கு மனச்சாந்தி ஏற்படுத்த வேண்டி, சாசன சபைகள், ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிடி முதலியவற்றை ஸ்தாபனம் செய்தனர். இதில் 'தேர்தல்' முறையாகப் பதவிகளை ஏற்றுக்கொண்டு உத்யோகங்களை நடத்த 1882-ல் ஆக்டுப்படி லார்டு ரிப்பன் பிரபு ஏற்பாடு செய்தனர்.

172) பிரிட்டன் ஆட்சியில் கம்மவார் பட்டங்கள், உத்தியோகங்கள் முதலியன. 1882-வருஷ ஆக்டுப்படி தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி (லார்டு ரிப்பன் பிரபு முதலில் இதை ஸ்தாபித்தவர்

1909-ல் சேர்ந்தும், 1919-ல், 1921-ல் சாசன சபையில் கம்மவார் பிரக்யாதி பெற்றவர்களின் குறிப்பு. பெயர்கள் பின்வருமாறு.

ராவ்பகதூர் ஸ்ரீ பொக்கிலி முனுசாமி நாயுடுகாரும்,

சல்லபல்லி ராஜா ஸ்ரீ யெர்லகட்ட அங்கினீடு
பகதூர்காரும்.

ஜாகர்லமூடி ஸ்ரீ குப்புசாமி சௌதரிகாரும்,

பாமுலபாடி ஸ்ரீ வெங்கட்டகிருஷ்ணய்ய சௌதரிகாரும்,

சலசானி ஸ்ரீ சத்தியநாராயண சௌதரிகாரும்,

கொம்மாரெட்டி ஸ்ரீ பட்டாபிராமய்ய சௌதரிகாரும்,

மாகண்ட்டி ஸ்ரீ சிதய்ய பாபினீடுகாரும்,

காமமல்லி ஸ்ரீ சர்வாராயுடுகாரும்,

சல்லூரி ஸ்ரீ சந்த்ரமௌளிகாரும்.

இன்னும் அநேகர் ஜில்லாவுக்கு ஒருவராக 1911 to 1940-வரை சட்டசபைகளில் தலைமை வகித்து வந்தனர்.

173) இவர்களில் மதராஸுக்கு முதல் மந்திரியாக இருந்தவர் ஸ்ரீ பொக்கிலி முனுசாமி நாயுடுகாரு 1920 சட்டசபையில் முதல்வராகி தன்னுடைய சக்திவல்லமையினால் மதராஸ் ராஷ்ட்ர முதல்வரானார். இவர் காலத்தில் குடியானவர்களுக்கு கிஸ்த்தியில் குறைவும், கப்பங்களை (போக்கேட்டுகள்) ரத்து செய்தார். சட்டத்தையும் மாற்றி அமைத்தார். தவிர பஞ்சாயத்துச்சட்டம், பஞ்சாயத்து போர்டு, லோகல் போர்டு முதலான சட்டங்களை அமலுக்கு கொண்டு வந்தார். ஸ்ரீ வெங்கட்டகிருஷ்ணய்யகாரு ஜஸ்டிஸ் பார்ட்டி சபையில் முதல்வராகப் பணியாற்றினார், 1930-ல் டில்லி சட்டசபையில் ஒரு மெம்பராக்கப்பட்டார்.

1937-ல் காங்கிரஸ் பார்ட்டியில் ஸ்ரீ பாபிநீடுகாரு பார்லிமெண்டு காரியதரிசியாகப் பணி புரிந்தார். காங்கிரஸ் மிக்க அநுகூலராகப் பணி புரிந்து வந்தார். கடன் மசோதா சட்டம் அமலுக்குக் கொண்டுவந்தார்கள். தவிர மதராஸ் முதல் டில்லி பார்லிமெண்ட் வரையிலும் கம்மவார் முதல்வராகப் பணியாற்றியுள்ளார், அவர்கள் ஸ்ரீபாமுலபாடி வெங்கடகிருஷ்ணய்ய செளதரிகாரும், யேர்லகட்ட ஸ்ரீ ரங்கநாயகுலு நாயுடுகாரும்.

174) நாகப்பூர் சட்டசபையில் மத்ய மாகாண கவர்னர் ஆளுரபில் ஈடுபுகண்டி ஸ்ரீ ராகவேந்தர ராவ் பகதூர் பாரிஸ்டர்காரு 1930 to 1937 வரையில் 3 வருஷம் (சட்ட சபை) பார்லிமெண்டில் பிரதான முதல் மந்திரி பதவியில் இருந்தார். இவருடைய நன்னடத்தையின் காரணமாக பிரிட்டிஷார் ‘ஆக்டிங் கவர்னர்’ பதவியும் கொடுத்து கெளரவித்தனர்.

தவிர கம்மவார் தாலூகா, ஜில்லா போர்டு மெம்பர்களாக அநேகர் பணி செய்து வந்துள்ளனர். இந்த கெளரவ உத்யோகங்களில் கம்மவார் கிருஷ்ணா, கோதாவரி, சித்தூர், பல்லாரி, அநந்தபுரம், தஞ்சாவூர், மதுரை, ராம்நாடு, திருநெல்வேலி முதலான ஜில்லாக்களில் முக்கியம்.

1931 to 1932-ல் நூதன பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டதில் சர்க்காரால் நாமிநேஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆர்கனைசர் ஸ்ரீ பங்குலூரர் நரஸிம்மாராவ் செளதரிகார் பிரசித்தி பெற்றவர். குண்டூர் ஜில்லாவில் 500 பஞ்சாயத்துகளையும் நிலைநாட்டினர். இவர் கொஞ்ச காலம் பாபட்ள தாலூக்கா போர்டு மெம்பராகப் பணியாற்றியுள்ளார்.

175) பிரிட்டன் ஆட்சியில் பட்டம் பெற்றவர்கள்:

1. ராவ்பகதூர் கி. சே. பொல்லினி முனுசாமி நாயுடுகார், B. A,, B. L., ராஷ்டர பிரதான மந்திரி.

2. ராவ்பகதூர், திவான்பகதூர் காகர்லவார் P. S. G. ரங்கசாமி நாயுடுகார், பூளைமேடு, கோயமுத்தூர் ஜில்லா.

3. ராவ்சாஹேப் கீ. சே. ஐம்பால வெங்கடேசம் சௌதரிகார், B. A., டெபுடி கலெக்டர்.

4. ராவ்பகதூர் சலசானி சத்யநாராயண சௌதரிகார் B. A., B. L. ஜில்லா ஜட்ஜ்.

5. ராவ்பகதூர் கீ. சே. கோவெலமூடி கோபால கிருஷ்ணய்ய சௌதரிகார், B. A., B. L., வக்கீல், பெஜவாடா.

6. ராவ்பகதூர் கொசராஜு ராமைய்ய சௌதரிகார், தெனுலி தாலூக்கா போர்டு தலைவர்.

7. ராவ்சாஹேப் கன்டம்நேனி வெங்கட்டரங்கைய்ய காரு, அவனிகட்ட பஞ்சாயத்துத் தலைவர்.

8. வல்லபநேனி பாலைய்ய சௌதரிகார், கார் கோல வென்னு பெஜவாடா தாலூக்கா.

9. ராவ்சாஹேப் காரபாட்டி ஆஞ்சநேய சௌதரிகார், சாட்டபர்ரு, ஏலூரு தாலூக்கா.

10. ராவ்சாஹேப் எண்டபில்லார் ராஜலக்ஷ்மைய நாயுடுகார், B. A., டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர், கோயமுத்தூர் ஜில்லா.

176) ஆனரபிள் டா 11 ஈடுபுகண்டி ராகவேந்தர ராவுகாரு, பாரிஸ்டர், 19-வது சகாப்தத்தில் நம்நாட்டில் ரயில் போக்கு வரத்து இல்லாத காலம். சைனிகசிபிலிருந்து சாமான்களை ஏற்றுமதி செய்வதற்கு அநேக தெலுங்குகுடும்பங் களிலிருந்து ஜனங்களை மத்திய பிரதேசத்திற்கு வண்டிகளில் ஏற்றுமதி செய்துவந்தனர்கள். அதில் காண்ட்ராக்டராக ஸ்ரீ ராகவேந்தரராவ்காரின் பூர்வீகர்கள் நடத்தி வந்தனர்.

கிருஷ்ணு ஜில்லா பெதமச்சாலி கிராமத்திலிருந்து சென்று நாகப்பூரில் முதலில் குடியேறினர்கள். இவர் தந்தையாகிய நாகன்ன நாயுடும் அந்த காண்ட்ராக்ட் வேலை செய்து கொண்டுவந்தார்.

இவர்களுக்கு 1890-லு ராகவேந்தர ராவு ஜனனம். ஷ நாகன்ன நாயுடு ரயில்கள் ஏற்பட்டதிலிருந்து காண்ட்-ராக்ட் வேலையை நீக்கிவிட்டு விலாஸ்பூருக்கு வந்து அங்கு ஸ்திரமாகி இதர வியாபாரங்கள் நடத்தி பெரிய தனவந்தராகி தன் குமாரனுக்கு ஆங்கில வித்தையைக் கற்பித்து பாரிஸ்டர் பதவிக்கு வேண்டி இங்கிலாந்திற்கு அனுப்பினர். அவர் அங்கு பரீக்ஷையில் தேர்ச்சி பெற்று வருவதற்குள் நாகன்ன நாயுடு பரமபதம் அடைந்துவிட்டார். பின்னர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றும், பாரிஸ்டராகப் பதவி பெற்று பிரஜா சேவையில் ஈடுபட்டு வந்தார். பின்னர் விலாசபூரில் முனிசிபல் சேர்மன் பதவியை ஏற்றுக்கொண்டு பிரஜைகளின் நன்மைக்கு வேண்டிய காரியங்களை நடத்திவந்தனர். அப்பொழுது ராஷ்டரீய காங்கிரஸ் கட்சியை ஏற்படுத்திப் பிரஜைகளால் கீர்த்தி பெற்று வந்தனர். அந்தப் பிரதேசங்களில் இந்தி, மஹாராஷ்டரம் பாஷைகள் பிரபலமாக இருக்கினும் இவர் தெலுங்கு குடும்பத்தினராயினும் இவரை அவர்கள் தலைவராக ஏற்றுக்கொண்டு நடத்திவந்தனர்.

1926-வருஷத்திலிருந்து இவர் காங்கிரஸ் பார்ட்டியை பெருக்கி, தன் ராஷ்டரத்தில் இவர் ஜெயம் பெற்று கட்சியின் காரியங்களை நிறைவேற்றினர். பஞ்சாப் கலவரத்தில் இவர் 12 ஆயிரம் ரூபாய் கொடுத்து பாதையில் அகப்பட்டவர்களைக் காப்பாற்றி வந்தார்.

1927-வருஷம் இவர் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டு வெளியிலிருந்து காரியாதிகளை நடத்த சர்க்காரிடம் அனுமதி பெற்று நாகப்பூர் சாசன சபைக்கு பிரதான மந்திரி பதவியைப் பெற்றுக்கொண்டு பிரஜா சேவை புரிந்துவந்தார். அதிலிருந்து 1937-வருஷம் வரை அப்பதவியில் மேன்மை பெற்று வந்தார். 1932-வருஷம் கடன் மசோதா சட்டம் ஏற்படுத்தியதிலிருந்து, ரைதுக்களுக்கு அநேக சவுகரியங்கள்

ஏற்பட்டன. இவர் கவர்னரிடம் 'லா' மெம்பராகப் பணி புரிந்து வந்தார். இவருடைய சமதர்மத்தைப் பாராட்டி பிரிட்டிஷார் இவருக்கு ஆக்டிங் கவர்னர் பதவியைக் கொடுத்தனர். அப்பதவியில் இருந்துகொண்டு **ஸ்வய**-தேசாபிமானத்தைக் காக்க வேண்டி கதர் வேஷ்டி, குல்லாய் முதலியவற்றை அணிந்துகொண்டு நான்கு மாத காலம் தம் ராஷ்டரத்தைச் சுற்றிப் பரிபாலித்து வந்தார். ஆயினும் பிரிட்டிசாரின் ஆடம்பரத்தை இவர் ஏற்கவில்லை.

1938-வருஷம் இவரை இந்தூர் சமஸ்தான திவானுக வும், பினனர் ஜெய்ப்பூர் சமஸ்தான திவான் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அந்த சமஸ்தானபதிகள் கோரினர். ஆயினும் இவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஒரு சமஸ்தானத்தில் திவான் பதவியை ஏற்பதை விட பிரஜைகளுக்கு சகாயமாக இருக்கின், தேசத்தில் விவசாயம் விருத்தியடைந்து எல்லோரும் சுகமடைவரென்று சொல்லி, திவான் பதவியில் வரும் ஆதாயத்தையும் மதியாமல், உலக நன்மைக்கே ஒத்துழைப்பது என்று எண்ணினர்.

1939-வருஷம் இவருக்கு லண்டனிலிருந்து இண்டியா-செக்ரெட்டரி-காரியதரிசியாகப் பணி ஏற்க வேண்டுமென்று கோர அப்பதவியை ஏற்றுக்கொண்டனர். அங்கு இவர் 1941-வருஷம் வரை தேசத்திற்கு வேண்டிய காரியங்களை நிறைவேற்றி வந்தார். ஜெர்மானியர் விமானங்களில் வெடிகுண்டுகளை விட்டெறிந்து கோரமான யுத்தங்களை ஏற்படுத்தி வந்தனர். அப்பொழுது இவர் லண்டனிலேயே இருந்தார். மறுபடி இவர் அங்கிருந்து அந்த வருஷக்கடைசியில் இங்கு வந்து விட்டனர். தன்னுடைய பதவியையும் ராஜினமா செய்துவிட்டு, கவர்னர் 'ஜெனரலிடம் பிரஜா சங்கத்தில் தானும் ஒரு மெம்பராகப் பணி புரிந்து வந்தார். யூனிவர்ஸிடி கிரந்தாலயத்தில் இவர் அநேக கிரந்தங்களை எழுதிவைத்தனர். இவர் ஆந்தர ராஷ்டர நிர்மானத்திற்காக அநேகமாகப் பிரயத்தனப்பட்டு வந்தார். இவர் லண்டனிலிருக்கும்போது ஏற்பட்ட விபத்துகளுக்கு உட்பட்டு 1942-வருஷம் ஜூன் மாதம் 15-ந் தேதியில் காலகதி

அடைந்துவிட்டனர். அப்பொழுது கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தை கெஜட்டின் மூலமாகத் தெரிவித்தனர். அதில் இவரின் சேவையைப்பற்றியும், பிரிவைப்பற்றியும் வர்ணித்தும், பரிதாபத்தையும் தெரிவித்துள்ளனர். தெனாலியிலுள்ள பொப்பன சோமயாஜி நாயடு இவருடைய சகோதரியின் பர்த்தா. இந்த ராகவேந்தர ராவுகாரின் ஞாபகார்த்த சிலையை நிர்மாணிக்கப் பிரஜைகள் முயற்சி செய்து வருகின்றனர்.

177) பொல்லின்னிவர். பொல்லின்னி பெதமுனிசாமி நாயுடுகார், மதராஸ் ராஷ்டரத்திற்குப் பிரதான மந்திரியாக இருந்த ஸ்ரீ முனுசாமி நாயுடுகாரின் வம்சத்திய பொல்லின்னர் சித்தூர் ஜில்லாவில் மிக்க பிரசித்தி பெற்றவர்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய கோத்திரம் தாள்ளூறு கோத்திரம். இந்த வம்சத்தில் பொல்லின்னி பெதமுனிசாமி நாயுடுகாரு கிறிஸ்து சகம் 1870-வருஷம் மிக்க பிரசித்தி பெற்று வந்தனர் இவர் தந்தை அப்பாசாமி நாயுடுகாரு, கார்வேடி நகர சமஸ்தானத்தில் நாசில்தாராக இருந்தார். இவர் குமாரர்களில் பெதமுனுசாமி நாயுடு 1905-ஹு கார்வேடி நகர சமஸ்தானத்தில் ரைதுக்களின் வசூல் காரியங்களை நடத்தி வந்தார். அதில் 5 வருஷ காலம் பதவியை யுக்தப்படி நடத்தி வந்ததனால், பிரஜைகள் இவருக்கு நல்ல மதிப்பு கொடுத்தனர். இவர் சகோதரர்கள் சினமுனுசாமி நாயுடு, பொஜ்ஜு நாயுடு என்றவர்கள்.

பொல்லின்னி பொஜ்ஜு நாயுடு, இவர் ஜேஷ்டியார் குமாரராவார். இவர் அக்கமாம்பாளை விவாஹம் செய்து கொண்டு, பஞ்சபாண்டவர்களைப்போல 5 குமாரர்களைப் பெற்றனர். இதில் முதல்வராகிய அப்பாசாமி நாயுடுகாரு, கிருஷ்ணா ஜில்லாவில் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்து கிறிஸ்து சகம் 1916-வருஷம் கீர்த்திவந்தனாகப் பெயர் பெற்றுள்ளார். இந்தப் பொஜ்ஜா நாயுடுகாருக்கு கிறிஸ்து சகம் 1885-வருஷம் ஏப்ரல் மாதம் மகாபிரதாபசாலியாகிய ராவ்பகதூர் முனுசாமி நாயுடு ஜனனமாயினர். இவர் தவிர நாராயணசாமி நாயுடுவும் ஜனித்து பந்தரில் பெரிய நியாயவாதி ஆயினர்.

178) ராவ்பகதூர் பொல்லின்னி முனுசாமி நாயுடுகார் B. A., B. L, இவர் 1905-1907-ஐடு பாலாகி சித்தூரில் வக்கீலாக இருந்து, 1917-வருஷம் சித்தூரில் ஒரு மெம்பராக இருந்து. 1921-லிருந்து 1929-வரை ஜில்லா போர்டு அதிகாரியாகப் பணியாற்றி வந்தும், வித்யா சங்கத்தில் காரியதரிசியாகவும் இருந்தார். தவிர மதராஸ் சாசன நிர்மாண சபையில் 1920-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் பணி புரிந்தும், அநேக காரியங்களை நிறைவேற்றினர். இவருடைய சாஹஸ சக்தியினல் சர்க்கார் கமிட்டிகளில் கலந்துகொண்டு காரியாதிகளை நிறைவேற்றி வந்தார். இவர் ஜில்லா போர்டு தலைவராகப் பணியாற்றியதைக் குறித்து சர்க்கார் 1926-வருஷம் 'ராவ்பகதூர்' பட்டம் வழங்கினர். இவருடைய சாதுர்யத்தையும், நடவடிக்கையையும் கொண்டாடி, மதராஸ் கவர்ன்மெண்டார் மந்திரி சபைக்குப் பிரதமராகவும் ஏற்றுக்கொண்டனர். இவர் மந்திரி பதவியிலிருந்து கொண்டுள்ள காலத்தில் ரைதுக்களுக்கு (குடியானவர்) வேண்டி, டோல் கேட்டுகள் முதலானவற்றை நீக்கி, மோட்டார்களுக்கு அதிகப்படி வரி விதித்து ரோடுகளை விஸ்தாரப்படுத்த ஏற்பாடு செய்தும், இவர் ஜமீன் குடிகளுக்கு லாபகரமாக இருந்து பில்லை இவர் சட்ட சபைக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்ய, அதற்குப் போட்டியாக இவரிருந்த சங்கத்தில் ஜஸ்டிஸ் பார்ட்டியார் சிலர் ஜமீன் குடிகள் இவருக்குப் பிரதிகூலமாக வேலை செய்கின்றனரென்று அவர் மீது இவர் நடவடிக்கை எடுத்துக் கொண்டனர் என்று புகார் கூறி வாதாடவே, இவர் அந்த சங்க மரியாதையை அவலம்பிகாமல் உடனே தன் பிரதான மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டனர். மதராஸ் கவர்ன்மெண்டார் அப்பதவியை ஏற்றுக்கொள்ளும்படி பிரயத்தனப்பட்டும் இவர் மறுத்து விட்டார். இவர் பின்னர் தன்னுடைய குடும்பத்தினரையும், பந்து வர்க்காதிகளையும், ஆப்த நண்பர்களையும் விட்டு தானக சுவர்க்கம் போய்விட்டார். அதனல் குடும்பத்தார் கடன் பாதையில் கஷ்டப்படுவதைக்கண்ட ஜமீன்கள், பிரபுக்கள் எல்லோரும் வேண்டிய உதவி செய்து வந்தனர். இவருடைய மருமான் கன்னய்யகார் இப்பொழுது பிரபலமாக வாழ்ந்து வருகின்றனர்.

179) குண்டூரிவார், மூன்றூர் பொன்ன குருசாமி நாயுடு பூபாலகர், பெதபாள்ள, மேடிபாள்ள, வேனூர்ள்ள கோத்திர வாசிகளாகக் காப்பவாரில் சிலர் குண்டூரிவார் என்ற பெயருடன் மதுரை ஜில்லாவில் பிரசித்தியாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் இந்த குருசாமி நாயுடுகாரு மிக்கப் பிரபலமாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவருக்கு ஓரிரண்டு ஜில்லாக்களில் அநேக தோட்டங்கள், காடுகள், வயல்கள், தோப்புகள் இருக்கின்றன. அதனுல் இவரைப் பிரஜைகள் பூஸ்வாமியென்று கொண்டாடி வருகின்றனர். இவர் சில ஜமீன் பூமிகளைக் கிரையத்திற்குப் பெற்றனர். இவர் குமாரன் காட்டாகட்ட சேஷாசலம் என்றவர் M. A., B. L. அவர்களின் குமார்த்தியை விவாகம் செய்துகொண்டு, இப்பொழுது கவர்ன்மெண்டார் லேகர் கம்பெனியில் பார்வையாளராகப் பணியாற்றி வருகின்றனர்.

180) மாகண்ட்டிவார், மாகண்ட்டி சீதய்ய, லக்ஷ்மணதாஸ்காருலு, இவர்கள் தாடிபாள்ள, தங்கேள்ள, பாலடுகு கோத்திரவாசிகள் வேலூரில் மிகப்பிரபலஸ்தர்களாக வாழ்ந்து வருகின்றனர். மாகண்ட்டி ராமதாஸுகாரின் குமாரர் ஆவார் இந்த சீதய்ய. 1892-வருஷத்திலிருந்து 1904-வருஷம் வரை ஏலூரில் தானிய வியாபாரம் செய்து 2 லக்ஷம் ரூபாய் சம்பாதித்து, 1921-வருஷத்திலிருந்து தாலூக்கா போர்டு மெம்பராகவும், தலைவராகவும், வித்யா சங்க மெம்பராகவும், காரியாதிகளை யுக்தமாக நடத்தி வந்தனர். 1923-வருஷம் மதராஸில் சட்டசபை மெம்பராக பணியாற்றி வந்து. இவர் பேரால் கடுபுகண்ட்டி வெங்கடப்பய்யகார் கண்டிகோட்டையில் உள்ள கம்ம வித்யார்த்தி பவனத்தில் சரித்திரம் எழுதிவைத்துள்ளார். அதாவது இவருடைய வம்ச பரம்பரை வாழ்க்கை வரலாறு. ராமதாசு காரின் 2-வது குமாரர் லக்ஷ்மணதாசுகார். மிக்க பிரசித்தியாகத் தியாகங்கள் செய்துவந்தார். இவர் பந்தர் ஜாதீய கலாசாலைக்கு 2 ஏக்கர் பூமியைக்கொடுத்து கலகர ராமன்ன காரை உற்சாகப்படுத்தி அவருடன் கூடி ஷெசாலைக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி பெயர் பெற்றனர். ஏலூரில் அன்னபானதிகளுக்கும் வசதியாக ஏற்படுத்தி நடத்தி வந்தனர்கள்.

181) மாகண்டி பாபிநீடுகார், M. Sc. இவர்களில் பாபிநீடுகார் 1895-வருஷம் ஜனனம். இவர் அமெரிக்காவுக்குச் சென்று M. Sc. அக்ரிகல்சர் பட்டமும் பெற்று. ஜப்பான், ஹனலூத்தீவு, சைனா முதலான தேசங்களில் முக்கியமான பட்டணங்கள், சிங்கப்பூர், கொழும்பு முதலான பிரதேசங்களைக் கண்டு, அதன் வைபவங்களைத் தெரிந்து கொண்டு வந்தும், ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டுகளில் தலைவராகப் பணியாற்றி வந்த பின்னர் 1937-வருஷத்தில் இருந்து மதராஸ் சட்டசபை பார்லிமெண்டு காரியதரிசியாக இருந்தார். இவருடைய சதிமணி அன்னபூர்ணம்மா தேவி தன் சாகசத்தால் காங்கிரஸில் சேர்ந்து மகாத்மா காந்தியினிடம் மிக்க பற்றுடன் காரியங்களை நடத்தி வந்து 1927-ல் காலகதி அடைந்துவிட்டனள். இவர் பெயரால் ஒரு வித்யாலயம் ஏற்படுத்தி நடத்தப்படுகின்றன. இவர் தாய் தந்தையர்களுக்கு (சலகா ராமஸ்வாமி, பிச்சம்ம) அன்னவரம் கிராமத்தில் 6 எக்கர் பூமியைக் கொடுத்தனள். தவிர திரவியமும் கொடுத்து உதவி செய்துள்ளனள். அத்தாய், தந்தையர் மகளாகிய அன்னபூர்ணம்மா தேவியினிடம் மிக்கப் பற்றுடன் நடந்து வந்தனர்.

சாகர்லமூடி குப்புசாமி சௌதரிகாரு பூபாலகா M.L.C. இவர் வம்சத்தினர் செருகுநூள்ள, சவுடுள்ள, போலா கோத்திரவாசிகள் ஆவார்கள். 19-வது சதாப்த காலம் இந்த வம்சத்தில் காரம்செடு கிராமத்தில் வெங்கய்ய என்றவர் நல்ல கீர்த்திப்பிரதாபர். இவருக்குச் சௌடி நாயுடு என்ற குமாரர்களிருந்தனர். இவர்கள் காலத்தில் இந்த வம்சத்திலிருந்து குண்டூர் ஜில்லாவில் நல்ல மதிப்பு உண்டு. இந்த சௌதரி நாயுடுகாருக்கு ஜில்லா கலெக்டர், தாசில்தார் முதலானவர்களிடத்தில் நல்ல கௌரவம் பெற்றுப் பிரஜைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வந்தனர். இந்த சௌதரிநாயுடுவுக்கு லக்ஷ்மய்ய நாயுடு என்ற குமாரன் தோன்றினர். இவருக்கு ரங்கமாம்பா என்ற சதிமணியின் திருவயிற்றில் குப்புசாமி சௌதரி நாயுடு என்ற புத்திரன் ஜெனித்தனன்.

இவர் குண்டூர் ஜில்லா போர்டு தலைவராக 7-வருஷ காலம் பணியாற்றிவந்தார். தவிர மதராஸ் சட்டசபையில் ஒரு மெம்பராக 16-வருஷம் பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் பணியாற்றி வந்தார். இவர் சபாநாயகராகி இருந்த காலம், குண்டூர் ஜில்லாவில் இரண்டு பாலங்கள் கட்டப்பட்டன. இதற்கு 2 லக்ஷம் ரூபாய் செலவாயிற்று, பிரஜைகளுக்கு நல்ல சௌகரியம். இவருக்கு எல்லா ஜில்லாக்களிலும் நல்ல மதிப்பு உண்டு. இவர் வீட்டில் நித்யம் அன்னதானம் நடைபெற்று வந்தன. இவர் சகோதரராகிய சௌதரி நாயுடு பிரஜைகளுக்கு வேண்டிய உதவி புரிந்துவந்தார். ருப்புசாமி சௌதரி நாயுடு அநேக கிரந்தகர்த்தாக்களுக்கு சகாயம் செய்து, அவர் எழுதி வைத்த கிரந்தங்களைப் பிரசுரித்துக் கீர்த்தி பெற்றனர். இவர் பேரால் கவிராஜ திரிபுரநேனி ராமஸ்வாமி சௌதரிகார் ஒரு சதகத்தைப் பிரசுரணம் செய்துள்ளார். 'ப்ரேமாலோகம்' என்ற காவியத்தை வித்வான் வேட்டூரி வெங்கடநாராயணர் பிரகடனம் செய்துள்ளார். இவர் செய்துள்ள பிரஜா சேவை போற்றத்தக்க சேவையே. கவர்ன்மெண்டார் இவருடைய சேவையைப் பாராட்டி திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியில் ஒரு மெம்பராக நியமித்து வைத்தனர். முதலில் இவர் கம்மவார் சரித்திர விஷயமாக அநேக பிரயத்தனங்கள் செய்தும், ரூபாய் இரண்டாயிரம் கொடுத்து உதவினார். துரிமெள்ள ஜைரல்கல கமிட்டியில் இருந்த காலம், அதற்கு ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தனர். இந்த சரித்திரத்திற்கும் அநேக மஹான்களுடன் இவர் கூடி ஒத்துழைத்து வந்துள்ளார். இவர் மதராஸில் பிரசித்தி பெற்ற கட்டுபாடி வீரய்ய நாயுடுகாரின் குமார்த்தியைப் பாணிக்கிரஹணம் செய்துகொண்டு வாழ்ந்த காலம், இவர் பாரி திருநாட்டுக்கு எழுந்தருளினார். பின்னர் இவர் காட்டூர் ஜமீன்தார் குமாரியை இரண்டாம் தாரமாக மணந்தார். இவ்விருவருக்கும் ஆண், பெண் புத்திரர் தோன்றி சுகமாக வாழ்ந்து வருகின்றனர். இவருடைய மூத்த குமாரன் சந்திரமௌளிகார் இப்பொழுது குண்டூரில் வக்கீலாகப் பணியாற்றி வருகின்றார்.

182) ராவ்பகதூர் சத்யநாராயண செளதரிகார், B. A., B. L., ஜில்லா ஜட்ஜ், இவர் கிருஷ்ணு ஜில்லா பெதமத்தாலி வாசியாவார். சாதாரண கம்ம குடும்பத்திலிருந்து தன்னுடைய பிரயத்தன சாகஸத்தால் மதராஸில் B. L. பரீக்ஷையில் தேர்ச்சி பெற்று, பின்னர் குண்டூரில் வக்கீலாக இருந்த காலம். மேதாவிகளாலும், பிரிட்டன் ஆட்சியாளராலும் மதிக்கப்பட்டு, ஜட்ஜுகளின் அபிமானத்தின் பேரில் உத்தியோகத்தில் நியமித்து மாதம் ஒன்றுக்கு ரூ. 500/- கொடுக்கப்பெற்று வந்தனர். இவர் வாத விவாதங்களில் மிக்கத் திறமை பெற்று வந்தமையால் கவர்ன்மெண்டார் இவரை Public Procecutor ஆக ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர் கொஞ்சகாலம் குண்டூர் தாலூகா போர்டு மெம்பராகவும், ஜில்லா போர்டு மெம்பராகவும் பணி புரிந்து வந்தார். பின்னர் கம்மவித்யார்த்தி சகாய சங்கத்திற்குத் தலைவராகவும் இருந்தார். பின்னர் கவர்ன்மெண்டார் ஜில்லா ஜட்ஜாக நியமித்தனர். அநந்தப்பூர், விசாகப்பட்டணம் முதலான ஜில்லாக்களில் வேலை பார்த்து கியாதி பெற்றுவந்தனர். இவருக்கு கவர்ன்மெண்டார் ராவ்பகதூர் பட்டம் வழங்கினர்.

183) ராவ்பகதூர் கோவலமூடி கோபாலகிருஷ்ணய்ய செளதரிகார், B. A., B. L. கோவலமூடி கோலவென்னு கிராமத்தில் பிரபலமாக வாழ்ந்து வந்தனர். இவர்களில் கோவலமூடி நாகபூஷணங்கார் தானிய வியாபாரம் செய்து தனவந்தராகி, 300 ஏக்ரா விஸ்தீரணமான பிரதேசத்தில் வயல்களாக நிர்மாணித்து, அங்கொரு அரிசி மண்டியை ஏற்படுத்தி வைத்தனர். இவருக்கு கோபாலகிருஷ்ணய்ய, சீதாராமய்ய என்ற குமாரர்கள் பிறந்து வளர்ந்து வருகையில் இந்த நாகபூஷணங்கார் கொஞ்சகாலத்திற்குப்பின்னர் தனது குடித்தனத்தை பெஜவாடாவுக்கு மாற்றிக்கொண்டு சில காலம் வரை அங்கு வாசம் செய்து வந்தனர். அதாவது 19-வது சகம். இவருடைய மூத்த குமாரன் கோபால கிருஷ்ணய்ய செளதரிகார் B. A., B. L. பரீக்ஷையில் தேர்ந்து பெஜவாடாவில் நியாயவாதியாகப் பணி புரிந்து வந்து பிரசித்தி பெற்றனர். இவர் கிருஷ்ணு ஜில்லா போர்டு,

பெஜவாடா தாலூக்கா போர்டுகளிலும் 15-வருஷம் பணியாற்றி வந்தார். இதில் தாலூக்கா போர்டு தலைவராக 12 வருஷம், ஜில்லா போர்டு தலைவராக 4 வருஷங்களில் பிரஜைகளுக்கு வேண்டிய சாதன சௌகரியங்களைச் செய்து வந்தார். இவருடைய பிரயத்தனத்தால் பெஜவாடாவில் கம்ம வித்தியார்த்திக்கு ஒரு பவனத்தை நிர்மாணித்தார். (அதற்கு 'கண்டிகோட்ட பவனம்' எனப்பெயர் சூட்டப் பட்டன)

இவர் அநேக சபைகளில் தன்னுடைய வாக்கு சாதுர்யத்தால் மெம்பர்களை மகிழச்செய்து காரியங்களை நிறைவேற்றிவந்தார். இதனால் அநேக சபைகளுக்குத் தலைவராகப் பிரசித்தி பெற்றுவந்தனர். இவருடைய பிரஜா சேவையைப் பாராட்டி கவர்ன்மெண்டார் 'ராவ்பகதூர்' பட்டம் வழங்கி வாழ்த்தினர். இவருடைய சகோதரராகிய ஸீதாராமய்ய சௌதரி கோலவென்னுவில் கிராமாதிகாரியாக பணியாற்றி வருகின்றார். இவருக்கு பாஸ்கர ராவு என்ற குமாரன் உண்டு. கோபாலகிருஷ்ணய்யகாரு சௌதரி கடைசியில் காலமானார்.

184) ராவ்பகதூர் கொசராஜு ராமய்ய சௌதரிகாரு: இவர் தெனாலி தாலூக்கா நூதிமெள்ளவாலியாவார். இவர் கொசராஜு பிச்சய்ய சௌதரியாருடைய புத்திரராவார். இவர் தெனாலி தாலூக்கா போர்டு மெம்பராகவும், வைஸ்-பிரசிடெண்டாகவும், பிரசிடெண்டாகவும் பணியாற்றி வந்தார். இந்த ஸ்தானங்களில் சுமார் 7 வருஷ காலமும், தாலூக்காக்களில் எல்லா கிராமங்களையும் சுற்றிப் பார்வையிட்டுப் பிரஜைகளுக்கு வேண்டுவன செய்தும், அங்கங்கு பிரதான பாடசாலைகளை ஏற்படுத்தியும், தவிர ஜில்லா போர்டு, ஜில்லா வித்யா சங்கங்களிலும் மெம்பராக இருந்து வந்தார். கவர்ன்மெண்டார் இவருடைய திறமையைப் பாராட்டி ராவ்பகதூர் பட்டம் வழங்கினர். கவர்ன்மெண்ட் ஆபீஸ-ராக இருந்த காலம் கதர் சூட்டுகளையே அணிந்து வந்தார், ஜாதி அபிமானத்தைப் பிரபலமாகக் காத்துவந்தார்.

இவர் சர்க்கார் அதிகாரிகளிடம் மிக்கப் பற்றுள்ளவராக நடந்து அவர்களை எல்லோரையும் குழியில் ஈடுபடுத்திக் காரியங்களை நடத்திவந்தார். இவர் துரிமெள்ள கிராமத்தில் ஜார்ஜ் காரனேஷன் பாடசாலையை ஹைஸ்கூலாகச் செய்து சில காலம் அதற்கு வேண்டியவற்றை ஏற்படுத்தினார். கடைசியில் அதை ஜில்லா போர்டார் வசம் செய்துவைத்தார். இவருடைய உழைப்பினால் துரிமெள்ள கிராமத்தின் பக்கமுள்ள D. P. W. கால்வாய் பாலத்திற்குப் பாலங்கட்ட ஏற்பாடு செய்து ரூ. 14 ஆயிரம் செலவில் கட்டி முடித்தனர். இதற்கு கவர்மெண்டார், ஜில்லா போர்டார் கலந்துகொண்டு இக்காரியத்தை நிறைவேற்றினர்.

185) ராவ்சாஹிப் கண்ட்டமநேனி வெங்கரங்கையகார் இவர்களுடைய கோத்திரம் ஆவல கோத்திரம். திவி தாலூக்காவில் பிரசித்தி பெற்றவராவார். இந்த வம்சத்தில் அப்பன்னகார் என்ற இவர் வாசிரெட்டி ஜமீன்தாரிடத்தில் ஒரு அதிகாரியாக இருந்து நல்ல கீர்த்தி பெற்று வந்த கொத்தபல்லி அப்பய்யகாருக்கு மருமகன் ஆவார்.

இந்த கண்ட்டமநேனி அச்சன்னாவுக்குச் சுப்பன்னகார் முதல் 7 பேர் குமாரர்கள் இருந்தனர். இதில் சுப்பன்னகாருக்கு கண்ட்டமநேனி வெங்கடரங்கய்ய, பாபய்யகார் இருவர்களும் 1872, 1878-வருஷம் வரிசையாகப்பிறந்தனர். இதில் வெங்கடரங்கய்யகாரு அவனிகட்ட யூனியன் பிரசிடெண்டு சேர்மனாக 11 வருஷமும், பந்தர் ஜில்லா போர்டு, தாலூகா போர்டுகளிலும் 15 வருஷ காலம் மெம்பராக இருந்தும், தலைவராக இருந்தும் பணி புரிந்து வந்தார். பின்னர் கிருஷ்ணா நதியின் பக்கமுள்ள லங்கைப்பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் வறுமை காரணமாகப் பிரஜைகள் கஷ்டப்பட்டிருந்த காலத்தில் இவர் ரூ. 4 ஆயிரம் செலவு செய்து அவர்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்தார். இந்த விஷயத்தை ஜில்லா கலெக்டர் அறிந்து கவர்ன்மெண்டாரிடம் தெரிவித்தனர், G. O. 1793. 1908-ம் வருஷம் ஒரு தங்கப்பதக்கம் கொடுத்து கௌரவித்தனர். 1911-வருஷம் நடந்த டில்லி தர்பாரில் ஒரு யோக்கியதா பத்திரம்

வழங்கினர். இவர் தேசபக்தியுடன் பிரஜா காரியங்களை நடத்தி வந்ததை முன்னிட்டு கவர்ன்மெண்டார் மறுபடியும் 1926-வருஷம் ராவ்சாஹிப் பட்டமும் வழங்கியும் தங்கப் பூண்கள் அமைந்த கைத்தண்டத்தையும் கொடுத்து வாழ்த்தினர். பாபய்யகாருங் கூட சோதரருடைய காரியங்களுக்கு ஒத்துழைத்து வந்தனர். பந்தர் தாலூக்கா போர்டு மெம்பராக கொஞ்ச காலம் பிரஜா சேவை புரிந்து வந்தார்.

186) ராவ்சாஹிபு காரபாடி ஆஞ்சநேய சௌதரிகாரு. இவர் யேலூர் தாலூக்காவில் சாடேபல்லி கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். கிறிஸ்து சகம் 1890-வருஷம் காரபாடி வெங்கய்யகாரின் புதல்வராக ஜெனித்தார். இவர் சிறு வயதில் நல்ல வித்தைகள் பயிலாமல் இருந்து பின்னர் பல பாஷைகளைக் கற்றுப்பிரபலமானார். அதில் இந்தி, பெங்காலி, ஆங்கிலத்தில் பிரபலமாக விளங்கினார். 1915-வருஷம் 'சௌதரி' என்ற மாதாந்திரப் பத்திரிகையை பிரகரித்து வந்தார். வங்காள பாஷையில் 'பிஷையபதிசோத' என்ற நாவலை 'சடரு சக்கரம்' என்ற பெயரில் பிரகரித்துப் பெயர் பெற்றனர். 1926-ம் வருஷம் யேலூரில் கௌரவ-தண்ட அதிகாரியாகப் பணி புரிந்து வந்து (அதாவது பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்) சர்க்காரால் ராவ்சாஹிப் பட்டம் பெற்று விளங்கினார்.

187) பாமுலபாடு வெங்கடகிருஷ்ணய்ய சௌதரிகார், M. L. A. இவர் 1900-வருஷம் நிடுப்ரோலு கிராமாதிகாரி ஆகிய கோட்டய்யகார் குமாரராவார். 1919-வருஷத்தில் இருந்து பிரபலமாகி பொன்னூர் யூனிவர்சிட்டியில் யூனியன் சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டு 1921-ம் வருஷத்திலிருந்து ஜில்லா வித்யாலய சங்கத்தில் தலைவராக 9-வருஷ காலம் பணி புரிந்து வந்தார். ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு களிலும் மெம்பராக இருந்தார். எல்லா அதிகாரிகளிடத்திலும் மிக்க அன்பு கொண்டு காரியங்களை நடத்தி வந்தார். 1930-ம் வருஷம் டில்லி சட்ட சபையிலும், மதராஸ் சட்ட சபையிலும் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தப் பதவியில் இருந்துகொண்டு ரைதுக்களுக்கு வேண்டிய

சௌகரிய சாதனங்களை நிறைவேற்றி அமலுக்குக் கொண்டு வந்தார். இவருடைய சாமர்த்திய சேவையைக் குறித்துச் சர்க்கார் இவருக்கு பார்லிமெண்ட் காரியதரிசி பதவியைக் கொடுத்து வைத்தனர். இவர் தன்னுடைய பிதுரார்ஜித சொத்துக்கள், பூமி காணி ரூபாய் 35 ஆயிரம் லேவாதேவி உண்டு. இந்த பூமிகாணிகள் பொன்னூரில் இருக்கின்றன. தவிர இந்த ஊரில் தங்களால் ஏற்படுத்திய பாடசாலைக்கு மானியமும் வழங்கியுள்ளார். இவர் குமாரராகிய சத்திய நாராயண சௌதரிகார் டேராடூன் கலாசாலையில் படித்து மிலிடரி ஆபீஸர்களில் ஒருவராக காரியங்களை நடத்தி வருகின்றனர்,

188) கோயமுத்தூர் ஜில்லாவில் கம்மவார், பஞ்சாலைகள், இண்டஸ்ட்ரீஸ், கல்வி ஸ்தாபனம், ஆஸ்பத்திரி, குளங்கள், கோவில்கள், மடங்கள், தர்ம ஸ்தாபனங்கள், விவசாயங்கள், சர்க்கார் உத்தியோகங்கள் இன்னும் அநேக தொழிலதிபர்கள் மிக்கப் பிரசித்தி பெற்று செழித்து வருகின்றனர்.

11-வது பிரகரணம் சமாப்தம்.

கம்மவார் சரித்திரம் 3-ம் பாகம்
த்வாதசப்ரகரணம் 12-வது பிரகரணம்

---

189) ஆங்கில வித்தையில் தேர்ந்த உத்தியோகஸ்தர்கள், விக்டோரியா மகாராணியார் காலத்திலிருந்து, 6-வது ஜார்ஜ் பரிபாலனத்திலிருந்து நாளது வரை 84 வருஷங்கள் கடந்தன. அக்காலத்தில் மதராஸ் ராஜதானிக்கு அநேக கவர்னர்கள் ஆட்சி நடந்தன. 1839-ல் எல்பின்ஸ்டன் கவர்னரின் ஆட்சியில் ஒரு ஆங்கில வித்யாலயம் போர்டு ஏற்படுத்தினர். இதைச்சேர்ந்த காலேஜில் 1857-ம் வருஷம் 'மதராஸ் யூனிவர்சிடி' ஏற்படுத்தப்பட்டது. இந்தக்

[illegible] 20 [illegible] 20-வது [illegible] 19-வது [illegible] 20-வது [illegible] ஸ்ரீ [illegible] M. A., B. L. [illegible] ஸ்ரீ [illegible], B. A., [illegible] ஸ்ரீ [illegible], B. A., ஸ்ரீ [illegible], B. A., ஸ்ரீ [illegible], B. A., [illegible] ஸ்ரீ [illegible], B. A., [illegible] ஸ்ரீ [illegible] B. A., B. L., [illegible] ஸ்ரீ [illegible], B. Sc., [illegible], B. Sc., [illegible], B. Sc., [illegible], B. Sc. [illegible] B.S.G.C., [illegible] பட்டதாரிகளும், டாக்டர் [illegible] ‘இண்டியன் [illegible] காங்கிரஸ்’ என்ற பாரத தேசப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டனர். இவருடைய புதல்வர் செகந்தராபாத் [illegible].

பிரிட்டிஷ் கவர்மெண்டார் [illegible] [illegible] ‘ஷீட்டு’ மூலமாக தேர்ந்தெடுத்துப் பதவிகளில் நியமித்தனர். இன்னும் பட்டதாரிகளாகிய

அநேகர் நியாயவாதிகளாகவும், டாக்டர்களாகவும் இருக்கின்றனர். அவர்களை இங்கு குறிக்கப்படவில்லை.

190) வெங்கபூடிவார், வெங்கபூடி ராமகிருஷ்ணய்ய சௌதரிகாரு, I. C. S. ஜில்லா கலெக்டர். இவர் சென்னமல்லு கோத்திரவாசியாவார். இந்த வம்சத்தினர் ரேபல்லி தாலூக்காவில் பிரசித்தி பெற்றவர்களாக உள்ளனர். அதில் வெலகபூடி சுப்பைய சௌதரிகார் குமாரரும், லக்ஷ்மய்ய சௌதரிக்குத் தத்துப்புத்திரருமாகிய நம்ம ராமகிருஷ்ணய்ய காரு 1896-ம் வருஷத்தில் ஜனனம். இவர் 1916-ம் வருஷம் எடின்பரோவுக்குச் சென்று M. P. B Sc. பரீக்ஷைகளில் ஜெயம் பெற்று 1922-ம் வருஷத்தில் I. C. S. பட்டம் பெற்று செங்கல்பட்டு ஜில்லாவில் 1923-ம் வருஷம் அஸிஸ்டெண்டு கலெக்டராகவும், பின்னர் 1924-ம் வருஷத்தில் ரெவின்யூ அண்டர் செக்ரெடரியாகவும், 1925-ம் வருஷத்தில் ஜெய்ப்பூர் சமஸ்தான திவானுகவும் பணி புரிந்து வந்தார். இவர் உத்தியோக காலத்தில் ஜெய்ப்பூர் சமஸ்தான ஆதாயம் 14 லக்ஷத்திலிருந்து 18 லக்ஷம் ரூபாய் வரை விருத்தி அடைந்து வந்தன. ஜெய்ப்பூர் சமஸ்தானத்திற்கும் சிஸங்கடகு, இதில் சேர்ந்த ஜமீன்களுக்கும், மற்ற ரைதுக்களுக்கும் இருந்து வந்த நெடுநாளைய விவகாரங்கள் எல்லாவற்றையும் சமாதானத்தின் பேரில் தீர்த்து ஒற்றுமை உண்டாக்கி வைத்துள்ளார். இவர் முதலில் மைநேனி ராமகிருஷ்ணய்ய என்ற ரத்தனய்யாவின் குமாரத்தி சௌபாக்கியவதியை விவாகம் செய்து கொண்டார். 1922-ம் வருஷத்தில் அவ்வம்மையார் காலமாகிவிட்டதால், ஸ்ரீரங்காபுரம் ஜமீன் ஸ்ரீ அடுசுமல்லி கோபாலகிருஷ்ணய்ய கார் குமாரத்தி துர்க்காபாய் அம்மாளை இரண்டாவது மணம் புரிந்து கொண்டு இல்வாழ்க்கையை நடத்தி வந்து கம்ம மஹாஜன சங்கத்திற்கு ரூ. 1116—0—0 கொடுத்து உதவி செய்தனர். இவர் விவசாய அபிவிருத்தி சங்கத்திற்கு டைரெக்டராகவும் பணியாற்றி வந்தார்.

ஒரு சமயத்தில் இவர் குடும்பத்தினர் கடன்பாதையில் அகப்பட்டு வாடியதை எண்ணி, அவர்களுடைய கடன்களை

எல்லாம் தீர்த்து கஷ்ட நிவாரணம் செய்தார். இவர் ஜில்லா கலெடக்டராக இருந்த ஹோதாவில் அங்கங்கே மதராஸ் ராஜதானியில் பணியாற்றி வந்து மிக்கப் பிரசித்தி பெற்றனர். கம்மவாரில் ஜில்லா கலெக்டர் ஹோதாவில் இவரே முதல்வரென்று சொல்லலாம். இவருடைய தந்தை முதலில் தொட்டவரம் கிராமவாசியாக இருந்து வந்த காட்ரகட்டவார் வம்சத்தில் ஜெனித்து வெலகபூடி ராமய்ய காருக்குத் தத்தாக ஏற்கப்பட்டனர்.

191) உப்பலபாடிவாரு, உப்பலபாடி கோதண்ட ராமஸ்வாமி நாயுடு பூபாலகர்கள், இவர் கொண்டுள்ள, உப்புநூறு கோத்திரவாசிகள். இவர்களில் சிலர் தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் பிராந்தியங்களில் வாசஸ்தலராக இருக்கின்றனர். நாகப்பட்டணத்தின் பக்கமுள்ள அலங்குடிச்சேரி கிராமத்திலிருந்தவர்களில் 19-வது சகாப்த காலம் இந்த கோதண்டராமஸ்வாமிகாரு மிக்கப் பிரசித்தி பெற்றுள்ளனர். இவர் பூர்வீகர்கள் நெல்லூர் ஜில்லா உப்பலபாடு கிராமத்தில் இவர் பெரிய மிராசுதாரர். இவருடைய பிதுரார்ஜித தனத்தை எல்லாம் தர்ம காரியங்களுக்கு உதவி கீர்த்தி பெற்றனர். இவர் 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 4 பவனங்களை நிர்மாணித்து பிராம்ஹணர்களுக்குத் தானமாகக் கொடுத்தனர். 20 ஆயிரம் ரூபாய் மூலதனத்துடன் ஒரு தர்மசத்திரத்தைக் கட்டி அதில் நித்தியம் அன்னதானம் நடத்தி வந்தார். இதற்கு 60 ஏக்கர் நீர்பாசன பூமியும், 20 ஏக்கர் மேட்டுப்பாங்கான பூமியும் மானியமாகக் கொடுத்துள்ளார். அந்தக்கிராமத்தில் சௌரிராஜஸ்வாமி தேவாலய தர்மகர்த்தாவாக இருந்து தேவாலய காரியங்கள் யுக்தப்படி நடத்தி வந்தார். தன் குமாரனாகியவருக்கு சௌரிராஜுலு என்ற திருநாமம் சூட்டினார். இவர் ஒரு பாடசாலையை ஏற்படுத்திப் பிரபலமாக நடந்து வர ஏற்பாடு செய்துள்ளார். இந்த மஹாத்மா கிறிஸ்து சகம் 1881-ம் வருஷத்தில் பரமபதப்பிராப்தி அடைந்தனர். இவருக்கு 500 ஏக்கர் பூஸ்திதியும் உண்டு. தவிர அநேக பவனங்களும் உண்டு.

இவருடைய குமாரன் சௌரிராஜுலு நாயுடுகார், B. A., B. L. பரீக்ஷையில் தேர்ந்து நாகப்பட்டணத்தில் வக்கீலாக இருந்தும் பின்னர் B. L. பாஸ் செய்து, முனிசிபல் கவுன்சிலர் பதவியிலும், தாலூகா போர்டு, ஜில்லா போர்டு களில் மெம்பராக இருந்து வந்ததில் இவருடைய சமர்த்தை யினால் கவர்ன்மெண்டார் இவரை ஜில்லா முனிசீப்பாக ஏற்றுக்கொண்டு பின்னர் சப்-ஜட்ஜ் பதவி பெற்று, பந்தர், மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர், கும்பகோணம், திண்டுக்கல் முதலான கோர்ட்டுகளில் பணியாற்றி வந்தார். 1904-ம் வருஷம் தேவாலய விசாரணை சங்க அதிகாரியாகப் பணி புரிந்து வந்தார். இவரும் 19 ஆயிரம் ரூபாம் செலவில் ஒரு தாமசத்திரம் கட்டி வைத்தார். வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 10 ஆயிரம் கிஸ்து செலுத்தி வந்தார். தவிர முனிசிபாலிடிக்கு ரூபாய் 500—0—0 செலுத்தியும் வந்தார். இவர் வடகச்சேரி பாலகிருஷ்ண நாயுடு புத்திரியை விவாகம் செய்துகொண்டார். இவர்களுக்கு ராஜகோபால நாயுடு, ரங்கராமானுஜம் நாயுடு, பார்த்தசாரதி நாயுடு என்ற மூவர் தோன்றினர். ராஜகோபால நாயுடு நாகப்பட்டணம் தாலூக்கா போர்டு தலைவராகவும், கௌரவ, பெஞ்சு மாஜிஸ்திரேட்டாகவும் பணியாற்றி பிரசித்தி பெற்றுள்ளார். சௌரிராஜுலு நாயுடுகாரு இதன் மத்தியில் பரமபதப் பிராப்தி அடைந்துவிட்டனர்.

192) வடகச்சேரி பாலகிருஷ்ண நாயுடுகாரு பூபாலர், இவருக்கு லக்ஷக்கணக்கில் தனமும், 700 ஏக்கர் பூஸ்திதியும் உண்டு. அநேக தர்மகாரியங்களை நடத்தி வந்தனர். 7-வது எட்வர்டு பட்டாபிஷேக உற்சவம் டில்லியில் நடந்த காலம். அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு வைத்தியசாலையைக் (ஆஸ்பத்திரி) கட்டிவைத்தார். இந்தக் கட்டிடத்திற்கு ரூ. 50 ஆயிரத்திற்கு மேல் செலவாகியுள்ளன. இவர் சில காலம் தாலூக்கா போர்டுகளிலும், தேவாலய விசாரணைக் கமிட்டியிலும் இருந்து பணியாற்றி வந்தனர். இவர் வஜ்ர வியாபாரத்திலும் ஒரு மெம்பராக இருந்து வைர வியாபாரம் நடத்தி வந்தனர். இவர் பிரஜைகளிடம் நல்ல கீர்த்தி பெற்றவராவார்.

193) ஜெம்பாலவாறு, ஜெம்பால அய்யவ்வணகார், இவர்களுடைய கோத்திரம் நீறுகொண்ட கோத்திரம். இவர்களில் ஜம்பால அய்யவ்வணகாரு கிறிஸ்து சகம் 1785-வருஷ காலம் துக்கிரால கிராமத்தில் வாசம் செய்துவந்தார். ஸ்ரீ ராஜாவாசிரெட்டி வெங்கடாதிரி நாயுடு ஜமீன்தாரிடம் மந்திரியாக இருந்து நல்ல மதிப்பு பெற்றனர். வெங்கடாத்ரி நாயுடு சமஸ்தான கிஸ்து வசூலை இவர் முன்னின்று நடத்தியும் பிரஜைகளுக்கு நல்ல உதவியும் செய்து அவர்களை வசப்படுத்தி ஒழுங்கு முறையில் நடத்தி வந்தார். சில சமயங்களில் இவர் வெங்கடாத்ரி பிரபுவுடன் பல்லக்குகளிலும், ரதங்களிலும் கூடவே சென்று வருவார். சேப்ரோலு, கொல்லூர் முதலிய பிரதேசங்களிலும் இது நடந்து வந்ததாகச் சொல்லப்படுகின்றன. இவர் கொஞ்சகாலம் நரஸராவுபேட்டை ஜமீன் மட்ராஜு குண்டா நாயுடுவிடத்தில் மிக்கப் பிரசித்தியுடன் பணிபுரிந்து வந்தனராம். இவர் அங்கு மந்திரி பதவியில் இருக்கின்ற சமயம் ராஜூரு ஜமீன் நூதனமாக ஏற்படுத்திய கிராமங்களில் தன் அதிகாரத்தை நடத்தி வந்தார். இவர் சுமார் 31-வது வயதில் காலகதி அடைந்துவிட்டார். துக்கிராலப்பிரதேசத்தில் ஜம்பாலவார் வாழ்ந்து வந்தனர். இவருக்கு ஸூரம்புருஷன வெங்கடாத்ரி என்றவர். இவருக்கு நாராயண, சூரவய்ய, புச்சன்ன, பேர்நீடு, வெங்கன்ன என்ற குமாரர்கள் இருந்தனர். இதில் பேர்நீடு நல்ல பிரசித்தி பெற்றவராவார்.

பசலி 1164-வருஷம், கிறிஸ்து சகம் 1754-வரை காலம் துக்கிரால கிராமம் ராஜூர் ஜமீன் மாணிக்யாராவிடமிருந்து இந்த ஜம்பால பேர்நீடு பெற்றுக்கொண்டதாக லோகல் ரிக்கார்டு வால்யூம் 7-ல் காணப்படுகின்றன. இவர் குமாரராகிய வெங்கடேசம் சௌதரி மேலே கூறப்பட்ட ஜய்யன்னகாரென்று இவர் வம்ச பரம்பரையில் கூறப்படுகின்றன.

194) ஜம்பால சுப்பைய்ய நாயுடு சௌதரிகார், இவர் ஷெ புச்சன்னகார் வம்சவாசி. இவர் தந்தை ராமஸ்வாமிகாரு. இவர் துக்கிலராால கிராமாதிகாரியாக இருந்து தாலூக்கா போர்டு மெம்பராக இருந்தும், ஜில்லா போர்டு

பிரசிடெண்டாக வந்த P. C. N. எதிராஜுலு நாயுடுகாருக்கு வலதுபுஜமாக இருந்து அநேக காரியங்களை நிறைவேற்றி வந்தனர். இவருடைய பிரயத்தனத்தால் அங்கே ஒரு போர்டு ஹைஸ்கூலும், கொம்மூரில் உள்ள கெனல் நதிக்குப் பாலமும் கட்டப்பட்டன. இவர் வம்சத்தினர்களும், இவர்களின் பந்துக்களும் சேர்ந்து, ஜம்பாலவார் தர்ம சத்திரம் என்ற பெயரில் ஒரு சத்திரத்தை இவர் நிர்மாணித்து வைத்தார். சந்தமாகுலூறு ரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் கிராமம் இல்லாததால் அங்கு பிரஜைகளுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அதன் நிவர்த்திக்காக ஒரு சத்திரத்தையாவது நிர்மாணிக்க வேண்டுமென்று இவர் தமையன் குமாரர் ஜம்பால கோடீஸ்வர ராவு என்ற போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கூறியதன் பேரில், இவர் தன் முயற்சியினால் ரூபாய் 5 ஆயிரம் செலவில் அங்கொரு சத்தரத்தைக் கட்டி முடித்தார். இவருடைய குமாரன் ராமஸ்வாமி நாயுடு அந்தக் கிராமாதிகாரியாக இருந்துகொண்டு பிரஜைகளுக்கு தக்க உதவியுடன் காரியங்களை நடத்தி வருகின்றனர். இந்த சுப்பா நாயுடுவின் பிரயத்தனத்தால், புணுதிபாடு கிராம வாசிகள் ஆகிய ஏர்லகட்ட பேர்நீடுகார் ஒரு பவனத்தைத் துக்கிரால கிராமத்தில் பாஷாபிலாஹிணீ கிரந்த ஆலயத்திற்குக் கட்டிக்கொடுத்துள்ளார்.

195) ராவ்சாஹிப் ஜம்ப்பால வெங்கடேசம் சௌதரிகார், B. A., டெபுடி கலெக்டர், இவரும் ஜம்பால வம்சத்தைச் சேர்ந்தவராவார். லக்ஷிமிநீடு குமாரனாகிய பேர்நீடுவுக்கு வெங்கடேசம், பாபய்ய என்ற குமாரர்களில் இந்த பாபய்யகாருக்கு 2-வது பேர்நீடு என்றவர் இவருடைய பேரன்மார்களில் பாபய்ய என்றவர், இவருக்கு வெங்கடேசம் சௌதரி பிறந்து வளர்ந்து வருகையில் இவர் தந்தை காலமாகிவிட்டபடியால். இவர் தாய்மாமனிடம் சேர்ந்து அவருடைய ஆதரவில் B. A. வரையில் படித்துப் பட்டம் பெற்று முதலில் குண்டூர் ஜில்லாக் கலெக்டராகச் சேர்ந்து சிறு குமாஸ்தாவாக வேலை செய்து வந்தார். உடனே

டெபுடி கலெக்டராக மாறி, 1921-ம் வருஷம் சஹாய நிர்மாண சபையில் ஸ்பெஷல் ஆபீஸராக பெதநந்திபாடு பிர்க்காவிற்கு அனுப்பினர். அங்கு இவர் காரியாதிகளை மிக்கத்திறமையுடன் நிறைவேற்றி வைத்தமையால் சர்க்கார் இவருக்கு 'ராவ்சாஹிப்' என்ற பிருதைக் கொடுத்தனர். இவர் 4 வருஷ காலம் தேவரகோட்டை (தேவகோட்டை) சமஸ்தானத்தில் திவானாகச் சர்க்கார் நியமித்தனர். அதில் இவர் மிக்கத்திறமையுடன் பணியாற்றி வந்தனர். இவர் தாய்மாமனார் பெயர் கொத்தராமஸ்வாமி.

இவர் குண்டூரில் இருந்த காலம். கம்ம வித்தியார்த்திகளுக்கு ஒரு பவனத்தைச் சம்பாதித்துக் கொடுத்தனர். அந்த பவனத்தை ராவூர் லக்ஷ்மீதேவம்மாளால் கட்டப் பட்டது. (அதாவது கம்மவார் பள்ளிக்கூடம்) அதற்கு இவர் காரியதர்சியாக இருந்து நடத்தி வந்தார். அதற்கு கம்ம வித்தியார்த்தி சகாய சங்கத்தையும் ஏற்படுத்தி அதற்கு வேண்டிய மூலதனத்தையும் சேர்த்து நிலை நிறுத்தினார். இவருடைய சிநேகிதர்களுக்கு வேண்டிய சகாயமும் செய்து வந்தார். அக்காலத்தில் இவர் 1941-[illegible] காலமாகி விட்டார். இவருக்கு 2 பேர் புத்திரிகள். லக்ஷ்மீ நாராயணம்ம, ராதாகிருஷ்ணமாம்பா என்றவர்கள். இவர்கள் B. A. பட்டம் பெற்றுள்ளனர். இவர்களை பாரிஸ்டர் கொத்த ரகுராமய்யா சௌதரிகாரும், இவர் தம்பியாகிய வெங்கடசுப்பையா என்றவரும் முறைப்படி விவாகம் செய்துகொண்டனர். இந்த விவாஹ உற்சவத்தில் பண்டிதர்களுக்கு மிக்க சன்மானங்கள் வழங்கப்பட்டன. தவிர பிரபலமாக அன்னதானமும் நடத்தப்பட்டன. பெரியவர்களின் ஆசி பெற்று வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

இவர்களுடைய கோத்திரம் [illegible] கோத்திரம். கர்நூல் ஜில்லாவில் இருந்த [illegible] கோத்திரம். துக்கிராலவார் இப்போது தங்கள் மூலபுருஷராகிய லச்சிரெட்டிவாள் கோத்திரத்தை மாற்றிக்கொண்டதா

செய்யப்படுகின்றன. இந்த நூல்நிலையத்தில் இன்னும் அநேக வித்வான்கள் இருக்கின்றனர். அதில் ஸ்ரீ ஆர். வி. கோபால ராவ் செட்டியார், M. A (Hons.) தமிழ்ச் சூப்பரின்டெண்டெண்ட் ஆக இருக்கின்றார். இவர் சகோதரராகிய ஸ்ரீ சுப்பைய பிள்ளை அவர்கள் சங்க அபிமானியாக இருக்கின்றார். இவர் B. A. பட்டம் பெற்றவர். இந்நூலகம் பெருக்கத்துக்கும் முக்கியமான புஸ்தகங்களில் முன்னின்று உழைப்பவராகப் பணியாற்றி வருகின்றார்.

1961 தேவாரப் பிரசுரங்களைப் பொறுப்பேற்றுக்கொண்டு போற்றி, அப்பரவர் அவர்கள் தேவாரங்களை வெளியிட்டும், பாராயணம் செய்தும் வந்தனர். மகாராஜா ஆட்சியில் தர்ம ஆதாய பாடசாலை, தேவார பாடசாலை 1817-ம் வருஷம் 7-வது சேதுபதிகளுடைய கட்டளைப்படி இராஜ வேத பாடசாலை இருந்தது. அக்காலத்தில் தேவாரங்களைப் பிரசுரிக்கும் செலவுகளை முதலில் அவர் சிக்கனத்தோடு வசூலிக்க நியமித்தனர். அதை பார்த்து கவனித்துக்கொண்டே அதைப் பெற்று வந்தனர் 1883-ம் வருஷம் வரை. அதன் மேல் 1848-ம் வருஷம் தேவார சங்க பேரிட்டுச் சேர்ந்த ஒப்படைத்தனர். 1863-ம் வருஷம் ஒரு கட்டடம் ஏற்படுத்தி பரீக்ஷை மாத்திரம் செய்து வந்தனர். அதுவும் சில காலம் நடந்து வந்தது.

தமிழ்ப் பரீக்ஷை வகைகளில் அதிகாரத்தை நடத்தி வர, சம்பிரதாய நியமனம் ஆகும் அதற்கேற்பவும் வருஷாந்தர வகை அனுசரித்து சிறப்பு பரீக்ஷையில் தேர்ச்சி பெறுவோர் அனைவருக்கும் பரிசளிக்கப்பட்ட காலம் ஒரு சட்டம் அனுசரித்து வர, அதன் பிரகாரம் சங்கம் கொண்டு போற்றி ஏற்பட்டு தேவாரப் பரீக்ஷை நடத்த ஏற்பாடாயின.

இந்த பேரவைத் தலைவராகக் கடமையாற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய தொண்டைமான் நாயுடு அவர்கள், B. A., B. L. 5-வருஷத்தில் ஆடலில் இருக்கும்படி ஒரு ஹாலை நிறுவேற்றி 1935-

முதல் 1940-று வரை சர்க்கார் தன் அதிகாரத்தை நிலை நாட்டினர். இவர் அநந்தப்பூரில் உள்ள லக்கீல் கமிட்டிகளில் சேர்ந்தவராவார்.

197) வித்யாலயங்கள், ஹைஸ்கூல்கள், காலேஜுகள், இதற்குத் தகுந்த கட்டிடங்கள், பிரிட்டன் ஆட்சியில் பிரஜைகள் ஆங்கிலத்தில் மிக்க உற்சாகங்கொண்டுள்ளதை எண்ணி கவர்ன்மெண்டார், சிலவற்றையும் கிறிஸ்தவர்கள், மற்றும் சில சங்கத்தினர் கூடி இவைகளை ஏற்படுத்திப் பிரபலமாக நடத்தி வந்தனர். குண்டூரில், கம்மா வித்யா சங்கத்தாரால், பெஜவாடா, பந்தர் முதலான இடங்களில் ஏற்படுத்தி அதில் கம்மவார் விசேஷமாக ஆங்கில பாஷையைக் கற்று வந்தனர். இதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்த வேண்டி பிரஜைகள், மஹான்கள், ராஜாக்கள், எல்லோரும் மிக்கப் பிரயத்தனப்பட்டு அதற்கு வேண்டிய தனத்தையும் சேகரித்து வந்தனர். இதில் முக்கியமானவர் கம்மவாரே. தேவாகோட்டையின் சமஸ்தானபதியாகிய ஸ்ரீ யார்லகட்ட சிவராமபிரசாத் பகதூர் ராஜாவின் அனுமதியால் ஹைஸ்கூல் சல்லபல்லியில் கட்டியுள்ளார். அதற்கு கவர்ன்மெண்டார் கிராண்ட் கொடுத்து வருகின்றனர்.

கோயமுத்தூர் ஜில்லாவில் கம்மவாரில் ஏற்படுத்திய "சர்வஜன ஹைஸ்கூல்" ஒன்றும், இண்டஸ்ட்ரியல்ஸ் இன்ஸ்டிட்யூட் என்ற தொழிற்சாலையும் ஏற்படுத்தியவர் P. S. G. அரங்கசாமி நாயுடுகார் நடத்தி வருகின்றார். அதற்குத் தலைவராக P. S. G. அரங்கசாமி நாயுடுகாரை கவர்ன்மெண்டார் நியமித்துள்ளனர்.

கம்மவாரில் இந்த உன்னத பாடசாலையை ஏற்படுத்தியவர் இவரே ஆயினும் இன்னும் பல இடங்களில் கம்மவாரால் ஏற்படுத்திய பாடசாலைகள் அநேகம் இருக்கின்றன. பொன்னூரில் பாமுலபாடி வெங்கடகிருஷ்ணய்யகார் சுயமாக 30 ஆயிரம் ரூபாயில் ஒரு ஹைஸ்கூலை ஏற்படுத்தி பெயர் பெற்றுள்ளார்.

இந்த பாடசாலைகளில் முதல் பெயர் பெற்றது தஞ்சையில் நம்ம வித்யார்த்தி வசதி கிருஹம். சாகமூர் வெங்கடப் பட்டணத்தில் [illegible] ஸ்ரீ லக்ஷ்மிதேவம்மா [illegible] சத்தி [illegible] 1916-ம் வருஷத்தில் ஒரு பவனத்தைக் கட்டி னார். அதை [illegible] லக்ஷ்மிநாராயண சௌதரி [illegible], [illegible] வெங்கடேசம் சௌதரி [illegible] நம்ம வித்யார்த்தி (பாடசாலைக்கு [illegible]) [illegible] இப்பவனத்தில் [illegible] ஸ்ரீ [illegible] சௌதரி [illegible] கட்டப்பட்டது. [illegible] தாதாக்கள் அநேகர் இந்த காரியத்துக்கு வேண்டிய [illegible] கொடுத்துப் பிரபல மாக நடத்தி வருகின்றனர். இதைப்போலவே பெருவாடா வில் வக்கீல்களாக இருந்த ஸ்ரீ T. T. II கோவலஜுபு கோபால கிருஷ்ணய்ய சௌதரிகாரின் பிரயத்தனத்தால் [illegible] பேட்டையில், (கன்டுக்கோட்டை பவனம் என்று பெயரால்) நம்மவர் ஹைஸ்கூல் ஒன்றைத் தக்க வசதிகளுடன் [illegible]. [illegible] தோன்றிய தாதாக்கள் வேண்டிய சலத்தையும் வழங்கி னர், [illegible] 1928-ம் வருஷம் [illegible] அது சகல வசதிகளுடன் விளங்கி வருகின்றது.

பந்தரிலும், ராஜமண்டிரியிலும், ராஜூரலில் ஆதரவால் [illegible]. அது [illegible] 1942-ம் வருஷத்தில் [illegible] ஒரு பவனத்தைக் கட்டி நம்மவார் வித்யாலயம் என்ற பிரபலமான பள்ளிக்கூடம் நடந்து வருகின்றது. [illegible] நடந்து வருகின்றன. இதில் கவர்ன்மெண்டாரும், நம்ம பிரபுக் களும் கூட [illegible] இவை [illegible] செய்துள்ளனர். [illegible] இக்காரியத்தில் ஈடுபடாமலிருப்பது வியக்கத்தக்கதாக இருக்கின்றன.

198) சரித்திர விஷயங்கள் 20-வது சதாப்த காலம் [illegible] சரித்திர [illegible] பிரபலமாக இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இதில் [illegible], வித்வான்கள்,

கவீஸ்வரர்கள், நாவலர்கள் அநேகர் இருந்தனர். அவர்கள் எல்லோரையும் இங்கு குறிப்பிடவில்லை. சில முக்கியமானவர்களை மட்டும் குறிப்பிடுகிறோம்.

கிரந்தங்கள்:	கிரந்தகர்த்தாக்கள்:
1) சூதபுராணம், கூனி கதை, குருக்ஷேத்ர சங்க்ரஹம், பகவத் கீதை முதலியன.	— கவிராஜ பிருதாங்கிதஶ்ரீ திருபுரநேனி ராமஸ்வாமி சௌதரிகாரு, பார்-அட்-லா, இவருக்கு ஆந்தர மஹாசபையில் கௌரவ பட்டம் வழங்கியுள்ளனர். கவிராஜு என்ற பட்டம் பெற்று குடிவாடாவில் கஜாரோஹணந்தி சன்மானங்களைப் பெற்றும் வந்தனர். இதே பட்டம் பெற்றவர் பர்வதநேனி பூஷய்ய சௌதரிகார் என்றவருமாவார்.
2) புத்தபுராணம், மானவஜீ விதம் முதலிய கிரந்தங்கள்.	— "பௌத்தவாங்க்மய பிரம்ஹ" துர்க்கிரால பலராமகிருஷ்ணய்யகாருங்கூட ஆந்திர சபையில் பெற்றனர்.
3) விஜயநகர சாம்ராஜ்யம் என்ற நாவல், அஷ்டாதச மகாபாபி ஆகிய பிராம்ஹணனுடன் சகாய நிராகரணம் முதலியன.	— பச்சாஸ் ஶ்ரீ துர்க்கிரால ராகவசந்தரய்யகாரு, இவர் எழுதிய முதல் கிரந்தத்திற்கு மதராஸ் விஞ்ஞான சந்திரிகா மண்டலத்தினர் ரூ. 500—0—0 சன்மானம் கொடுத்து கௌரவித்தனர்.

	கிரந்தங்கள்:	கிரந்தகர்த்தாக்கள்:
4)	சம்யுக்த பிரபாகர— நாடகம் என்ற கிரந்தம்.	திரிபுவநேனி கோபால கிருஷ்ணய்யகார், அங்கனூர்.
5)	பிராம்ஹணோத்தர— விஜயம், விப்ர சரித்திரம், பஞ்ச முல சரித்திரம், பிராம்ஹணோ த்தர கோத்யம தத்துவம் முதலிய கிரந்தங்கள்.	சூர்யதேவர ராகவய்ய சௌதரி, ஸ்வசங்க சேவைக்காக வேண்டி அநேக பிரயத்தனம் செய்து அதைப் பிரபலப்படுத்தினர். இவர் சேவாதரன் என்ற பட்டப் பெற்றார்.
6)	சத்யா விவாஹம்— (அச்சதெலுகு)	ஜங்கா அனுமய்ய சௌதரிகார்
7)	வைதிக விவாஹ— தத்துவப்ரகாசிகை.	பாலடுகு சேஷாச்சாரியார் அவர்கள்.
8)	பசு வைத்திய — கிரந்தங்கள்	அபிநவ சகாதேவ யேஜெள்ள ஸ்ரீ ராமுல சௌதரிகார்.
9)	ஆத்மகத, — ஆத்மார்பணமு, தர்மஜ்யோதி, ரஷ்டரகானம்	அபிநவதிக்கன வித்வான் தும்மல சீதாராமமூர்த்தி கவிகாரு, நெல்லூர்புர வாசிகளால் பிருது பெற்றவர்.
10)	க்ஷேத்ரலக்ஷ்மீ — மருவமாம்பால ரைது கதைகள் முதலியன.	உபய பாஷாப்ரவீண யேடுகூரி வெங்கடநரசய்யகாரு.
11)	சமஸ்கிருத — வாங்மய சரித்திரம் காம சாஸ்திரம் முதலியன	உபய பாஷாப்ரவீண கொத்த சத்தியநாராயண சௌதரிகார்.

கிரந்தங்கள்:		கிரந்தகர்த்தாக்கள்:
12) சஹஸ்ரபட்டாபி-ஷேகமு, வ்யாமோஹமு, சங்கபூபாலியமு கம்மவார் சரித்திரம் முதலியன.	—	கொத்தபாவய்ய சௌதரிகாரு.
13) விபீஷணுண்டு.	—	உபய பாஷாப்ரவீண ஜம்பால வெங்கடநரசிம்ஹமு சௌதரிகாரு.
14) பகவத்கீதா பாஷ்யம் முதலியன.	—	பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய ஸ்ரீ பிரமானந்தஸ்வாமுலவாரு.
15) வாசிரெட்டி வம்ச சரித்திரம்	—	வாசிரெட்டி சுப்பாராவுகாரு.
16) பகவத்கீதா வியாக்யானம் முதலியன.		கீத நிதி, கீதா சாஸ்தர கேசரி, இந்தி பாஷா விசாரத் ஸ்ரீ கொத்த சச்சிதானந்த மூர்த்தி, இந்தூர் சமஸ்தானத்தில் இவருக்கு பிருதும், குண்டூர் பிரமுகாகளால் ஒரு பிருதும் பெற்றார்.

199) சமஸ்தானங்களின் திவான்கள். ஸ்வதேச சமஸ்தானங்களில் முக்கியமானது ஜெய்ப்பூர் சமஸ்தானம், விசாகப்பட்டணம் ஜில்லாவில் சேர்ந்துள்ளது. மதராஸ் கவர்ன்மெண்டாரின் சிவில் சர்விஸ் உத்தியோகத்திலிருந்து கியாதி பெற்றவருமான வெலகபூடி ராமகிருஷ்ணய்யகார், I. C. S. இந்த சமஸ்தானத்திற்கு திவானாக 1925-ம் வருஷம் சர்க்காரால் நியமிக்கப்பட்டு அந்த காரியங்களை நடத்தி வந்தார். மறுபடியும் சர்க்காருக்கு உட்பட்டதால் இவரிடமிருந்து ஷை உத்தியோகத்தைப் பெற்று அஸிஸ்டெண்ட்

திவானுக நூதக் கிராம சேஷய்ய சௌதரிகார், B. A., B. L. இப்பொழுது அங்கு நடத்தி வருகின்றூர். இவர் பெஜவாடா வில் தற்காலம் தாலூக்கா போர்டு தலைவராக இருந்து பெயர் பெற்றனர். தேவரகோட்டை சமஸ்தானத்திற்கு கம்மவாரில் ராவ்சாஹிப் ஸ்ரீ ஜெய்பால வெங்கடேசம் சௌதரிகாரை சர்க்காரால் நியமிக்கப்பட்டு அங்கு 4 வருஷம் உத்தியோகத்தை நடத்தி வந்தார். பின்னர் வாசி ரெட்டி லக்ஷ்மீபதிகார் ஒரு வருஷம், அப்புறம் கோகிநேனி லக்ஷ்மீநரசய்ய சௌதரிகார், M. A.-யும் பணி புரிந்து வந்தனர்.

200) மஹாஜன சங்கம், பிரஜைகள் சுதந்திரம்பெற்று வாழலாமென்ற அபிலாஷையுடன் ஒருசங்கத்தை ஏற்படுத்தி சர்க்காரால் ஏற்படுத்திய சட்டசபைகள், ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டுகளில் மெம்பர்களை நியமிக்க வேண்டி ஓட்டர்களை ஏற்படுத்தி அதன் மூலமாகத்தேர்தலில் ஜெயம் பெற்றவர்களையே மெம்பர்களாக நியமனம் செய்தனர். இதில் கம்மவாரில் அநேகர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் முக்கியமானவர்கள் கிருஷ்ணு, கோதாவரி, குண்டூர், முதலிய பிரதேசங்களில் இருக்கின்றனர். இவர்களில் காங்கிரஸ் பார்ட்டியில், சுதந்திரா, ஜஸ்டிஸ் பார்ட்டியிலும் இருக்கின்றனர். 1921-ம் வருஷத்திற்கு முன் ஜஸ்டிஸ் பார்ட்டி மிக்க சிரேஷ்டமாக இருந்தது. ஸ்ரீ பொல்லினி முனிசாமி நாயுடுகாரு, ஜாகர்லமூடி குப்புசாமி சௌதரி, பாமுலபாடி வெங்கடகிருஷ்ணய்ய சௌதரி, சல்லபல்லி ராஜாகாரும் முக்கிய மெம்பர்கள். சட்டசபையில் காரியங் களை ஒழுங்கு முறையில் நடத்திவந்தனர். 1921-ம் வருஷத்திலிருந்து காங்கிரஸ் பார்ட்டியினர் அதிகமாகி 1937-ம் வருஷத்திலிருந்து சட்டசபையில், மார்கண்டி பாபிநீடு, கத்தெ ரங்கைய்ய நாயுடு, ஜயந்தபுரம் ராஜா கல்லூரி சந்தர மௌளி, ப்ரொபசர் கோகிநேனி ரங்க நாயகுலு முதலானவர்கள் இருந்தனர். ராஷ்டர காங்கிரஸ் சங்கத்திலும், ஜில்லா, தாலூக்கா, கிராம காங்கிரஸ் சங்கத்தில் கம்மவார் அநேகர் இருந்தனர். இதில் சரணு ராமஸ்வாமி சௌதரி, கொட்டிபாடி பிரம்மய்ய சௌதரி,

சிந்தமநேனி பாவய்ய சௌதிரி, துக்கிரால பல்லெராம கிருஷ்ணய்ய முதலானோர் பிரபலஸ்தராவார்கள். இவர்களில் முதல் மூவர் கொஞ்ச காலம் ஆந்தர ராஷ்டிர காங்கிரஸ் சங்க காரியதரிசிகளாக இருந்தனர்.

மதராஸில் ஆந்தர காங்கிரஸ் சங்கத்திற்கு 1922-ம் வருஷத்திலிருந்து கத்தெ ரங்கையய்ய நாயுடுகாரு காரியதரிசியாக இருந்து பணியாற்றி வந்தார். இக்காரியத்திலீடுபட்டு ஜெயிலில் அநேகர் அடைபட்டனர். கம்ம மஹாஜன சங்கம் பெஜவாடாவில் பிரபலமாக இருந்தது. எளிய கம்மரின் அபிவிருத்திக்காக வேண்டி பாடசாலைகளில் படித்து வந்தவர்களுக்கு அநேக உதவி செய்து வந்தன. 1910-ல் காஞூரி வெங்கடாசலபதி அய்யகார் முதலானவரின் பிரயாசையால் சவுதாமு கிராமத்தில் ஸ்ரீ கவ்வடமநேனி ரங்கய்ய சௌதரி காரு தலைமையில் நடந்த கம்ம மஹாசபை ஒன்றிலும், ஸ்ரீ கோவெலமூடி ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்ய சௌதரியார் மூலமாக நடந்ததிலும், 1911-ம் வருஷம் சல்லபல்லி ராஜா ஸ்ரீ யேர்லகட்ட அங்கிநீடு பிரசாத் பகதூர், B. A. இவர் மூலமாகக் கேசபல்லி கிராமத்தில் நடந்த சபையினாலும் கம்ம மகாஜனங்களுக்குத் தக்க பலம் பெற்று வளர்ந்து வந்தன. தவிர 1911-ம் வருஷம் கம்ம மகாஜன சங்கத்தை ஏற்படுத்தி அதில் 30 மெம்பர்களை சேர்த்து 1914-ம் வருஷத்தில், 1860-ம் வருஷத்திய 21-வது ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டன.

இந்த சங்கமானது ஜனங்களின் அபிமானத்தினால் பிரபலமடைந்து ரூபாய் 40-ஆயிரம் மூலதனம் சேர்ந்தன. இதற்கு வரும் வட்டித் தொகையிலிருந்து எளிய மாணவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் செலவு செய்து வருகின்றனர். இந்த சங்கத்திற்கு 1911-ம் வருஷத்திலிருந்து 1923-ம் வருஷம் வரை யேர்லகட்ட அங்கிநீடு பிரசாத் பகதூர்காரும், சல்லபல்லி குமார ராஜா அவர்களும், 1923-ம் வருஷத்திலிருந்து 1926-ம் வருஷம் வரை பர்வதநேனி மல்லிகார்ஜுனண்டுகாரும், 1926-ம் வருஷத்திலிருந்து 1938-ம் வருஷம் வரை ஸ்ரீ கொம்மாரெட்டி பட்டாபிராமய்யகாரும் தலைவர்

களாக இருந்தனர். இந்த சங்கத்திய தலைவர்கள் எல்லோரும் கூடி 1914-ம் வருஷத்திலிருந்து நடத்திவந்த கம்ம மகாஜன சங்கங்களையும் இணைத்து 12-வருஷ காலமாக ஒழுங்கு முறையில் நடைபெற்று வருகின்றன.

இதற்கு முதலில் பொப்பா பத்மநாபய்யகாரு காரியதரிசியாக இருந்து 1920-ம் வருஷம் வரை பணி புரிந்து வந்தார். இவர் காலத்தில் இந்த சங்கத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் மூலதனமாகச் சேர்ந்தன. 1926-ம் வருஷம் சூரபநேனி வெங்கய்ய செளதரிகாரும், 1928-ம் வருஷத்தில் சலமஞ்சிலி சூரியநாராயணமூர்த்திகாரும், பின்னர் பர்வதநேனி சினராமய்யகாரும், காரியதரிசிகளாக இருந்து சங்க நிதியை விருத்தி செய்து வந்து சங்க வருமானத்திலிருந்து வருஷா வருஷம் பள்ளிப்பிள்ளைகளுக்கு சகாயம் செய்து வந்தனர்.

இதற்கு ஸ்ரீ கொம்மாரெட்டி பட்டாபிராமய்ய செளதரிகார் தலைவராக இப்பொழுது நியமிக்கப்பட்டும், ஸ்ரீ கொட்டிபாடு வெங்கடேஸ்வர ராவு செளதரிகார், B. A., B. L., காரியதரிசியாகவும் மிக்க சிரத்தையுடன காரியங்களை நடத்தி வருகின்றனர்.

1923-24-ஆ 102 கம்ம மாணவர்களுக்கு ரூ. 3000/-
1928-29-ஆ 103 கம்ம மாணவர்களுக்கு ரூ. 2000/-
1933-34-ஆ 140 கம்ம மாணவர்களுக்கு ரூ. 17907-
பெஜவாடா சங்கத்தார் நடத்தியது.

இந்த சங்கத்திற்கும், இதன் காரியங்களுக்கும் கண்டிகோட்டையில் கட்டிய பவனத்திற்கும் ஆயிரக் கணக்கில் சகாயம் செய்த மஹான்கள் அநேகர் உண்டு. அவர்களுடைய பெயர்களை இங்கு குறிப்பிடவில்லை. அவற்றை சங்க நிர்வாகிகளே பிரசுரித்து வருகின்றனர்.

இந்த சங்க அபிவிருத்திக்கு வேண்டி 20-வது சகாப்த காலம் செளதரி, கம்மகுல பிரதீபிகை, கம்ரமஹாராஜ் என்ற பத்திரிகைகள் பலருடைய அபிமானத்தால் நடத்தப்

பட்டு வருகின்றன. ஆயினும் நாளாவட்டத்தில் இது நடைபெறவில்லை.

201) குத்தி, கர்நூல் சங்கங்கள், 1926-ம் வருஷம் குத்தி தாலூக்காவில் ஒரு கம்மமஹாசங்கம் ஏற்பட்டு அதற்கு கந்திபேட்டை ராமப்பா என்றவருடைய முயற்சியால் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கு அவரே தலைவராகவும். முன்னூர் திம்மப்பகார் உபதலைவராகவும் நியமிக்கப்பட்டு உள்ளனர். கர்நூல் ஜில்லாவிலும் கூட 1936-ம் வருஷம் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதற்கு மஜ்ஜிபால அநுமய்யா தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

202) மைசூர் பிரதேசத்தில் கம்மவார் 1 ஷிமொக்க ஜில்லாவிலும், சிக்கமகளூரு, சித்ரதுர்க்கம் ஜில்லாவிலும், சிக்கபல்லாபூர், மைசூர், பெங்களூர் பிராந்தியங்களிலும் இல்லுவெள்ளணி கம்மவாரில் இருக்கின்றனர். இவர்களில் சிலர் 5, 6 வருஷங்களுக்குப் பின்னர் கர்மவரம் தாலூக்காக்களில் குடியேறியவர் என்று சொல்லுகின்றனர். இவர்கள் எத்தனை குடும்பத்தினர் என்று தெரியவில்லை. ஷிமொக்கா ஜில்லா ஷிகார்பூர் தாலூக்கா கம்பனஹள்ளி கிராமத்தில் கம்மவார் இருக்கின்றனர். 1936-ம் வருஷம் இவர்களில் K. அநுமந்தப்ப என்றவர் அந்த கிராமப் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருக்கின்றார்.

203) கம்மவார் குடும்பங்களிலிருந்து ஏற்பட்ட தேவர்கள் குலதேவதைகள், சஹகமன ஆசாரம் நம் நாட்டில் ஆதியிலிருந்து அநுஷ்டானத்திலிருந்து வருகின்றன. அநேக பெண்மணிகள் தங்கள் பர்த்தாக்கள் மரணமடைந்த காலம். இவர்கள் சககமனம் செய்துகொண்டனர். அவர்களுக்கு கோவில்கள் கட்டி வைத்துள்ளனர். இதில் பல்நாடு தாலூக்கா லிங்காபுரத்தில் சிறுமாமிள்ள இலக்ஷ்மி அம்மாள் கோவில் இருக்கின்றது. இவருடைய சரித்திரமும் இருக்கின்றது.

கொல்லா கோபய்யாவின் பார்யை திருபதம்மா, பெனுகஞ்சிப்ரோலு கிராமத்தில் இவருக்கு கோவில் கட்டி-

பூஜை. உற்சவாதிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வம்மையாரின் வீட்டுப்பெயர் காவாலூரிவார் என்று சிலர் கூறுகின்றனர். பொனுகஞ்சிப்ரோலு நந்திகாம சீமையில் முனியோரு கட்டத்தில் இருக்கின்றன. இவ்வம்மையாரின் தாயாரின் பெயர் ரங்கமாம்ப, தந்தையின் பெயர் சிவசோமய்ய என்பர்.

அமர்தலூரர் கிராமத்தில் அலவர்த்தி வெங்கையாவின் பார்யை கொண்டம்ம. இவரும் சககமனம் செய்து கொண்டனர். இவர் கோவில் மேடி கிராமத்திலிருக்கின்றன. இவர் கட்டிபாடிவார் குடும்பத்தில் பிறந்தவராவார். இதே போல கம்மவாரில் அநேகர் குலதேவதைகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. ஆயினும் இது எந்தக்காலத்திய விஷயங்கள் என்று ஆதாரங்கள் கிடைக்கவில்லை. சுமார் 18-வது சகாப்தமென்று கூறப்படுகின்றன.

204) கம்மவாரில் சிற்பவேலையில் நிபுணத்வம் பெற்றவர்கள், இதில் கீ. சே. சூதுலபாடி நரசிம்ஹம் சௌதரிகார், குண்டூர். இவர் தாயார் சாயம்ம, தந்தை வெங்கய்ய. கஸ்தல கிராமம். இந்த நரசிம்ஹம் சௌதரிகார் நெல்லூரில் சில காலம் இருந்து சிற்பக்கலைகளைக் கற்றுக்கொண்டு குண்டூருக்குச் சென்று அங்கு சிமிண்டு, லோகங்கள், காகிதங்கள் முதலானவற்றில் அநேகவிதமான உருவங்களைச் செய்து வந்தார். இவர் சிமிண்டினால் செய்த சிம்ஹச்சிலைகள் ஏராளமாக மேடைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. வேதாத்ரியில் ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமிக்கு முக்த்யால ராஜா அவர்கள், இவர் மூலமாகச் செய்த ரத்ன அங்கி கவசம் மேடி தேவாலயத்தில் இருக்கின்றன. 1916-ஆல் பெஜவாடாவில் நடந்த கம்மவார் மகாசபையினர் இவருக்குத் தங்கத்தினால் செய்யப்பட்ட கண்டாமணியை பரிசாக வழங்கினர்.

பெஜவாடாவில் இவர் ஒரு சிற்பசாலையை ஏற்படுத்தி அதில் அநேகர் சிற்பத்தொழில் செய்து நிபுணர்களாயினர். இதற்கு ரூபாய் 10 ஆயிரம் செலவு செய்து அதை விருத்தி செய்தனர். பெங்கால் கவர்னருடைய குமாரனும்,

சிம்ஹளத்தில் ரெவரெண்ட் காலேஜ் பிரின்சிபல் ப்ரைஜர் பிரபுவும், கல்கத்தா ஸ்ரீ அவநீந்தரநாத டாகூரும் முதலான சாஸ்திர நிபுணர்கள் இவருக்கு மெடல் கொடுத்துள்ளனர். இவரிடத்தில் சிற்ப சாஸ்திரங்கள் அநேகமிருக்கின்றன.

இவர் ரேபால சுந்தரராமரெட்டி ஜமீன்தாரின் விவாக காலத்தில் 3 ஆயிரம் ரூபாய் செலவில் மணவறையை நிர்மாணித்துப் பிரசித்தி பெற்றனர். இவர் சரித்திரம் கொத்தசூரியநாராயண காரால் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர் கடைசியில் சுவர்க்கம் அடைந்தார்.

205) கொடாலி உமாமகேஸ்வர ராவுகார், ஜவர்லபூடி இவர் 1900-வருஷம் கொடாலி அச்சய்யகாருக்குப் புத்திரனாக ஜனித்தார். ஜவர்லபூடி கிராமாதிகாரியாக இருந்து அநேக தானதர்மங்களைச் செய்து பிரசித்தி பெற்று வந்தார். பௌத்தவாங்மய பிரம்ஹர் துர்க்கிரால பலராமகிருஷ்ணய்ய அவர்களால் எழுதப்பட்ட புத்தபுராணத்திற்கு இவர் காரியகர்த்தாவாக இருந்து அச்சுப் பண்ணுதலுக்கு ரூபாய் 2000—0—0ம் கொடுத்து பிரிண்ட் செய்தும், பந்தர் ஜில்லாவில் ஒளஷதசாலைக்கு சுமார் ரூபாய் 15 ஆயிரம் மதிப்புள்ள பூமியும், கம்ம வித்தியாலயத்திற்கு ரூ. 500/-ம், குண்டூர் சாரதா நிகேதனத்திற்கும், சதிபல்லி சமஸ்கிருத பாடசாலைக்கும் சூஜநீடு ராம மந்திரத்திற்கும், ஒவ்வொன்றுக்கும் 108 ரூபாய் கொடுத்தும், மண்டபாட் பாடசாலைக்கு ரூ. 200-ம், கம்ம வித்தியாலய சங்க நிதிக்கு ரூ. 300-ம் கொடுத்து கௌரவம் பெற்றுள்ளார். 1926-ம் வருஷத்தில் இவர் தாலூக்கா போர்டு மெம்பராக இருந்து வந்தார். இவருக்கு 200 ஏக்கர் பூ வசதியும் இருந்தன. ரூபாய் 1500 கிஸ்தும் செலுத்திவந்தனர். இவர் கோநேட்டி சுப்ரமணியம் காரின் புத்திரி ஸ்ரீ லக்ஷிமி அம்மாளை விவாகம் செய்து கொண்டு கோபாலகிருஷ்ணராவு என்ற குமாரனைப் பெற்றும் சமக்ர சரித்திரம், நாஞராஜன்யவிக்யாத ஜன சரித்திரத்திலும் இவர் விஷயம் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

206) வீரபநேனி பசவய்யகார் அட்டாட, கிருஷ்ணு ஜில்லா அட்டாட கிராமாதிகாரியாக வீரபநேனி வெங்கடாத்ரிக்கு பசவய்ய என்றவர் குமாரர் ஆவார். தந்தையின் காலத்திற்குப் பின்னர் ஷை உத்தியோகத்தை நடத்தி வந்து குடிமக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துவந்தனர். 1909-ம் வருஷத்திலிருந்து குடிவாடா தாலூக்கா போர்டு மெம்பராக 18-வருஷம் பணி புரிந்து வந்தார். பரபதி சங்கத்திற்குத் தலைவராகவும் இருந்து யசோவந்தராஞர். அட்டாட கிராமத்தில் சிவ, கேசவ தேவாலயங்களுக்கு மானியமாக ரூ. 5000 வழங்கியுள்ளார். தவிர 4 ஏக்கர் நஞ்சை பூமியும் கொடுத்துள்ளார். பந்தர் ஜாதீய கலாசாலைக்கு கொஞ்சம் தனம் வழங்கியும், தம்முடைய கிராமத்தில் சமஸ்கிருத பாடசாலைக்குச் சன்மானம் ரூபாய் 250/-ம், தாடங்கி பாடசாலைக்கு ரூபாய் 250/-ம் திலகர் நிதி, கதர் நிதி, கைகலூர் தாலூக்கா ஆறுதெகலவாடு கிராம சத்திரத்திற்கும், கொமரவோலு சத்திர நிர்மாணத்திற்கும் ரூ. 100 ஒவ்வொன்றுக்கும் கொடுத்து வந்துள்ளார்.

1922-ம் வருஷம் சகாய நிர்மாண சபையில் கவர்னர் லார்டு வெல்லிங்டன் பிரபு, இவருக்கு சுவர்ண பதக்கம் வழங்கினர் (மெடல்). இவர் கவி போஷகராகி புராணப் ராமச்சந்திர சாஸ்திரியாரால் எழுதப்பட்ட வனிதா விலாச கிரந்தத்திற்குப் பிரசுரகர்த்தாவாயினர். துர்க்காஷ்டகம், கோபால நக்ஷத்திரமாலை, இவைகளைப் பிரசுரித்து இவருடைய சொந்த கிரந்தாலயத்தில் 3 ஆயிரம் கிரந்தங்கள் இருக்கின்றன. இவர் சரித்திரம் உலக சரித்திரங்களில் இருக்கின்றன. இந்த வீரபநேனிவார் ஆதியில் மட்டிவாடா வாசிகளென்று சொல்லுகின்றனர். ஆயினும் இதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

207) வாசிரெட்டி சுப்பாதாசுகார், தும்மபூடி. வாசிரெட்டி சூரய்யகாரின் 3-வது குமாரன் ஆவார். இவர் இந்த கிராமத்தில் ஸ்ரீராமர் சந்நிதியை நிர்மாணித்து வேண்டிய உபகரணாதிகளை ஏற்படுத்தி பிரதிஷ்டை செய்து பூஜாதி காரியங்களை நடந்து வர ஏற்பாடு செய்துள்ளார். இவர்

'கவிநாதன்' என்ற பெயர் பெற்று வாசிரெட்டி வம்ச சரித்திரத்தை எழுதியுள்ளார். இவருக்குச் சதாசிவய்ய முதல் 4 பேர் புதல்வர்கள் இருக்கின்றனர் என்று சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளன.

208) மைநேனி தாதய்யகாரு கொம்மமூர், கன்னவரம் தாலூக்காவில் இந்த கிராமம் இருக்கின்றது. இதில் வாசம் செய்து வந்த மைநேனி வெங்கடாத்னங்காருக்கு இவர் 1861-ம் வருஷம் ஜனனமானார். இதிலிருந்து 1928-ம் வருஷம் வரை நல்ல பிராயத்திற்கு வந்து பிச்சுருன்பு வாருக்கு வைத்திய முறைகளைக் கற்பித்தும் வேண்டிய ஔஷதங்களைத் தயார் செய்து கொடுத்தும். அவர்களை ஆதரித்து வந்தார். அஸ்வ பரீக்ஷை, பசு வைத்தியம் முதலியவற்றை இவர் செய்துவந்தார். இவர் தந்தை பேரில் தோசாலம்மசெருவு என்ற பெரிய குளத்தை நிர்மாணித்து கிராமவாசிகளுக்குச் சௌகரியம் செய்துவந்தார். தவிர இவர் பாட்டனாரின் தூண்டுதலால் பந்தரில் ஜாதீய கலாசாலைக்கு ½ எக்கர் பூமியை கிரவுண்டுக்காகக் கொடுத்து உதவி செய்துள்ளார். இந்த பூமியின் மதிப்பு ரூபாய் 1000—0—0.

209) கோள்ளமூடி சந்தரய்யகார், வட்லமூடி, இந்த கிராமத்தில் இவர் சந்திரமௌளி ஸ்வாமாலயத்தைக் கட்டி சுமார் 20 ஆயிரம் மதிப்புள்ள பூமியைக் கொடுத்து நித்ய பூஜை உற்சவாதிகளை நடத்திவந்தார். இந்த தேவாலயத்திற்குப் பக்கமாக காலி கோபுரத்தை நிர்மாணித்தும் ப்ராகாரம், சத்திரம், மதசாலை, ரதம் முதலியவற்றை தன் சொந்த தனத்தைக்கொண்டே பூர்த்தி செய்து 1943-ம் வருஷம் சுவர்க்க நாட்டிற்குச் சென்றனர் என்று சரித்திரம் கூறுகின்றது.

210) கீ. சே. சுங்கபல்லி பாஸ்கர ராவ் சௌதரிகார், இவர் தாடேபல்லிகூடம் தாலூக்கா நாசகுண்ட கிராமவாசியாகியவர். இவர் மேற்கு கோதாவரி ஜில்லாவில் 30-வருஷ காலம் ஷை தாலூக்கா, ஜில்லா போர்டு மெம்பராகப் பணியாற்றி வந்து பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச்

செய்து வந்தார். பிரஜைகளால் பிதாமாக பட்டம் பெற்று 1938-ம் வருஷம் கீர்த்தி சேஷுஞயினுர்.

211) சலசுர ராமஸ்வாமி, பிச்சம்மகார்லு, இவர் குமார்த்தி ஆகிய அன்னபூர்ணமாதேவியை ஸ்ரீமாகண்டி பாபிநீடு சௌதரிகாருக்குக் கொடுத்து விவாஹம் செய்த கொஞ்ச காலத்தில் 1927-வருஷம் காலமாகிவிட்டபடியால் அவர் ஞாபகார்த்தமாகவும், அவர் பெயரால் அன்னபூர்ணமாதேவிஸ்மாரகசதனம் என்று அன்னவரம் கிராமத்தில் 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 6½ ஏக்கர் பூமியைக்கொடுத்து கீர்த்தி பெற்றனர். இந்த அன்னபூரணமா தேவி மகாத்மா காந்தியிடம் மிக்க விஸ்வாசத்துடன் அவர் சங்கத்திற்குத் தன் சொத்துக்களை எல்லாம் தாரை வார்த்துக் கொடுத்து விட்டவள். வேலூரில் உள்ள ஜாதீய வித்யாசாலைக்குச் சில பூமிகளைக் கொடுத்துள்ளார். இன்னும் அநேக தர்மகாரியங்களை நடத்தி வந்தார். இவரால் அநேக புஸ்தகங்களும் பிரசுரிக்கப்பட்டன.

இவருடைய போட்டோக்களை ஆந்த்ர விஸ்வ வித்யாலயத்தார். குண்டூரில் சாரதா நிகேதன பவனத்திற்கும், அதில் உள்ள வாத்தியார் பெண்மணிகளுக்கும் கொடுத்தும் தங்கத்தினுல் செய்யப்பட்ட அந்த அம்மையார் உருவப் பதக்கம் ஒன்று தலைமை உபாத்தியாயருக்குக் கொடுக்கப்பட்டன. தவிர வேலூரில் இவர் பேரால் எலிமெண்டரி பாடசாலை ஒன்றும் ஏற்படுத்தியுள்ளார். இக்காரியங்களை இவர் பர்த்தா பாபிநீடுகாரு நடத்தி வந்தார்.

212) வென்னம் ராமய்ய சௌதரிகார், ராவி அநந்தவரம், இவர் ரேபல்லி தாலூக்கா ராவி அநந்தவரம் கிராம பூபாலகராவார். வென்னம் வீரய்யகார் இவர் தந்தை. ஷை ராமய்ய சௌதரிகார் 15-வருஷம் தாலூக்கா போர்டு உபதலைவராகவும், 3 வருஷம் தலைவராகவும் பிரஜா சேவை புரிந்து வந்தார். ரேபல்லியில் உள்ள மிடில் ஸ்கூலுக்கு இவர் 800 வராகன் கொடுத்துப் பெயர் பெற்றனர்.

தன்னுடைய கிராமத்தில் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி தேவாலயத்தை நிர்மாணித்துப் பிரதிஷ்டாதி காரியங்களை நிறைவேற்றி அதன் பூஜாதி காரியங்களுக்காக வேண்டி 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 16 ஏக்கர் விஸ்தீரண பூமியை மானியமாகக் கொடுத்து சோவந்தராயினர்.

213) வாசிரெட்டி கோட்டய்யகார் பெதபாலம், இவர் தன்னுடைய ஆஸ்திகளை தேவாலய காரியங்களுக்கே செலவு செய்து கீர்த்தி பெற்றார். மங்களகிரி தேவஸ்தானத்திற்கு அநேக பூமிகளை மானியம் செய்துள்ளார். நலிரமலை ஏறுவதற்குச் சவுகரியமாகப் படிக்கட்டுகள் கட்டி வைத்துள்ளார். அநேக தேவாலயங்களில் ஜீரண உத்தாரணங்கள் செய்துவந்தனர். இவருக்கு நாசய்ய, சீதாராமய்ய, வெங்கடய்ய என்ற மூவர் குமாரர்கள் இருந்தனர்.

214) தஞ்சைமாநகர் சமஸ்தான கம்மவார் வம்சத்திய விளக்கமும், அவர்களால் நடத்தப்பட்ட ராஜ்ய பரிபாலனம் தேவாலய நிர்மாணங்களின் விளக்கமும்: ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் கடக முதல் கன்யாகுமரி வரையில் இருந்துவந்தன. இவருக்குப் பின்னர், இவருடைய மைத்துனர் அச்சுயுத தேவராயர் பட்டத்திற்கு வந்து சோழ நாட்டிற்கு செவ்வப்ப நாயுடுவை ராஜாவாக நியமித்தார். இந்த அச்சுயுத தேவராயருடைய பார்யை திருமலாம்பா. இவ்வம்மையாரின் சகோதரி மூர்த்திமாம்பாளை ஸ்ரீ செவ்வப்ப நாயுடுகாருக்கு விவாஹம் செய்து கொடுத்து, அச்சுயுததேவராயர் சோழநாட்டை சீதனமாகக் கொடுத்தார். பாண்டிய நாட்டிற்கு விஸ்வநாத நாயுடுவார் சந்ததியினரும், சோழ நாட்டிற்கு செவ்வப்ப நாயுடுவார் சந்ததியினரே ஆண்டுவந்தனர். சோழநாட்டில் இவருடைய ராஜதானியும், தலைநகரமும் தஞ்சாவூர். இவர்கள் தெலுங்கு பாஷையினர் ஆகையால், அங்குள்ள தமிழருடன் காரியாதிகளை நடத்தச் சிரமமாய் இருந்தன. அதனால் பின்னர் இவர்களுடைய சௌகரியத்திற்கு வேண்டி, தோட்டி முதல் தொண்டமான் வரை எல்லா வர்ணத்தினரையும் வரவழைத்துக் குடியேற்றி அவர்களின் ஒத்துழைப்பால் சகல காரியங்களையும் நடத்தி வநதனர்.

நாளாவட்டத்தில் எல்லோரும் தமிழ், தெலுங்கு கற்றுக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஆசார்ய பரம்பரை, புரோஹிதர், பண்டிதர், வைத்தியர், ஜோதிடர், ரசாயனர், அஸ்வ-சாஸ்திரிகள். சோ வைத்தியர் முதலானோர் முக்கியஸ்தர் ஆவார்கள். அக்காலத்தவருடைய சந்ததியார் இன்றைக்கும் ஏராளமாக இருக்கின்றனர். திருவையாறு முதல் சில பிரதேசங்களில் பிரபலமாக விளங்கி வருகின்றனர்.

கம்மவார் ஏற்படுத்திய அக்ரஹாரங்களில் இன்றைக்கும் தெலுங்கு பிராம்ஹணர்கள் இருக்கின்றனர். செவ்வப்ப நாயுடுவால் நிர்மாணிக்கப்பட்ட கோட்டை, கொத்தளங்கள், தஞ்சைமாநகரில் பிரபலமாக இருக்கின்றன சிவகங்கையிலிருந்து கால்வாய் மூலமாக குடிநீர் முதலான சவுகரியங்கள் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. செவ்வப்ப நாயுடு ஜனனம் 1580-வருஷம். இவருடைய குமாரர் அச்யுதப்ப நாயுடுகாரர், இவருடைய வைபவத்தை 'ருக்மணீ பரிணயத்தில்' பிரபலமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

215) ஸ்ரீ இராஜமன்னார் கோவிலில் கோபுரங்கள், மண்டபங்கள் பிரபலமாக நிர்மாணித்துள்ளார். ஷை கோவிலில் எழுந்தருளியுள்ள ராஜகோபாலருக்கு முத்தங்கி, ரத்னங்கி, வைரக்கிரீடம் முதலான ஆபரணங்கள், ரத-வாகனாதிகள் முதலானவற்றையும் சமர்ப்பித்துள்ளார். இவருடைய மந்திரி மகாகவி கோவிந்த தீக்ஷிதராவார். குல குரு தாதாச்சாரியார் ஸ்வாமிகளாவார். இந்த செவ்வப்ப நாயுடு குமாரராகிய அச்யுதப்ப நாயுடுவுக்கு ரகுநாத நாயுடு என்றவர் குமாரர்.

216) கோவிந்த தீக்ஷிதருடைய குமாரர்கள், யக்ஞ நாராயண தீக்ஷிதர், வெங்கடேஸ்வர தீக்ஷிதர் என்ற இருவர். இவர்கள் அநேக கிரந்தங்களை இயற்றியுள்ளனர். அவை களில் 'ரகுநாத கத்யம்', 'ரகுநாத பூபவிஜயம்', 'ரகுநாத விலாச நாடகம்', 'சாஹித்ய ரத்னாகரம்'. 'அநந்தராகவம்', 'ருக்மணீ பரிணயம்' முதலியன பிரபலமான கிரந்தங்கள் ஆகும்.

இந்த ரகுநாத நாயுடுவால் எழுதப்பட்ட கிரந்தங்கள் 'பாரிஜாத அபஹரணம்', 'வால்மீகி சரித்திரம்', 'அச்யுதேந்ராப்யுதம்', 'ராமாயணம்', 'கஜேந்திர மோக்ஷம்', 'நள சரித்திரம்'. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டவைகள். 'ராமாயண சாரசங்க்ரஹம்', 'பாரத சாரசங்க்ரஹம்', 'சங்கீத சுதா', 'சாஹித்ய சுதா' முதலியன. ஆந்திர பாஷையில் எழுதிய ராமாயணத்தைச் சமஸ்தான கவியாகிய மதுரவாணியிடம் கொடுத்து அதை சமஸ்கிருத பாஷையில் பாடச் செய்து பிரசுரித்துள்ளார். மஹா பாண்டித்யம் பெற்றுள்ள அத்தாசிக்கு ஸ்ரீ ரகுநாதநாயுடுகார் மதுரவாணி என்ற நாமம் சூட்டி கௌரவித்துள்ளார். மஹாசபைகளில் நடனநாட்டியங்களில் இம்மாதிரி நிபுணத்வமுள்ள நாரிமணிகள் சமஸ்தானத்தில் நடன நாட்டியங்களில் வெற்றி பெற்றவர்கள் அநேகர் இருந்தனர்.

217) இந்த மஹாராஜா சிறுவயதிலிருந்து தேவதா பக்தி ஆசாரவனுஷ்டானங்களில் மிக்க சிரத்தையுடன் ஈடுபட்டு வந்தனர். இவர் நித்தியம் 12 ஆயிரம் பிராம்மணர்களுக்கு சமாராதனை நடத்திவந்தார். ஒருசமயம் விடாது மழை பெய்து எரி கரும்புகளுக்குப் பஞ்சம் ஏற்பட்ட சமயம் போஜனாதிகள் செய்யச் சாத்தியமில்லாது, சமஸ்தானத்தில் தெரிவித்து மழை நிற்கும் வரையில் சமாராதனை காரியத்தை நிறுத்திவிடுமாறு பணியாளர் கோர, மஹாராஜா அதற்குச் சொல்லிய பதில். நீங்கள் கோரியபடி நாங்களும் பட்டினியாகவே இருந்து வருகின்றோம் என்று கூறக்கேட்ட பணியாளர் மிக்க திடுக்கிட்டு பதில் இல்லாமல் நின்றனர். கண்டு மஹாராஜா சொல்லிய விஷயம், நம் சமஸ்தானத்தில் அநேகமான பழைய துணிகள், எண்ணை, நெய் குடங்கள், ஏராளமாக இருக்கின்றன. தவிர அநேகமான பழைய மாடிகளில் உள்ள கட்டவிட்டங்களைக் கொண்டு சமாராதனை நடத்திவரவேண்டுமென்று கட்டளையிட்டனர். உத்திரவின் படியே காரியம் நடந்து வருகையில், ஸ்ரீரங்கநாயகியார் ஸ்ரீரங்கத்திலிருந்து வந்து மடப்பள்ளியில் பிரவேசித்து வரும்பொழுது, பணியாளர்கள் எண்ணைச்சீலைகளைப் போட்டு அக்கினியை கண் மூடிக்கொண்டு ஊதியதால் புகை, மண்ட-

பத்தையே மறைத்துக்கொண்டது. அப்பொழுது தாயா-ருக்கும் அந்தப்புகையினால் தும்மல் வரவே மூக்கைச்சிந்தி வீசியபோது தான் அணிந்திருந்த மூக்குத்தி கழுநீர் தொட்டியில் விழுந்துவிட்டது. தாயாரும் அங்கு நடக்கும் காட்சியை கண்டுகளித்து ஸ்ரீரங்கத்திற்குப் போய்விட்டார். மறு நாள் காலையில் அர்ச்சகர்கள் ஆராதனை காரியங்களைச்செய்கையில் தாயாரின் மூக்குத்தி காணாமையால் அவர்கள் திகிலடைந்து திருச்சி சமஸ்தானத்தில் விஷயம் அறிவிக்க, மஹாராஜா அந்த ஆபரணத்தை நீங்கள் சமர்ப்பிக்காவிடில் உங்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்க, அர்ச்சகர்கள் மிக்கப்பயம் கொண்டு தத்தளிக்கையில், அக்கூட்டத்தில் இருந்த ஒரு பிராம்ஹணப் பெண்ணுக்கு ஆவேசம் தோன்றி, மஹாராஜா, இந்த அர்ச்சகன் எந்தப் பாபதோஷமும் செய்யவில்லையென்று நடந்த விஷயத்தைச்சொல்ல, உடனே ராஜா அர்ச்சகர்களையும், சமஸ்தான காவலர்களையும் தஞ்சாவூருக்கு அனுப்பி சமஸ்தானத்தில் விஷயம் அறிவிக்க உடனே ஆச்சரியப்பட்டுத் தானும் அவர்களுடன் மடைப்பள்ளி மண்டபத்திற்குச் சென்று பணியாளரிடம் கழுநீர்த் தொட்டிகளைச் சுத்தப்படுத்துமாறு கட்டளை இட, உடனே அவர்கள் சுத்தி செய்து வருகையில், கழுநீர்தொட்டியில் மூக்குத்தி இருந்ததை எடுத்து ராஜாவிடம் கொடுக்க, அதைப் பெற்றுக் கண்களில் ஒற்றிக்கொண்டு ஆநந்தபரவச-ராகி, சிற்பியை வரவழைத்து வைரத்தினால் ஒரு மூக்குத்தியைச்செய்து, தங்கத்தட்டில் பட்டுப்பீதாம்பரங்கள் வைத்து மூக்குத்திகளை அதன்மீது வைத்துப் பல்லக்கில் ஏற்றி சகல வாத்தியங்களுடன், நடன-நாட்டிய கோஷ்டியுடன், படை காவல்களை ஏற்படுத்தி அர்ச்சகர்களை அனுப்பினார். அவர் ஸ்ரீரங்கம் சென்று மன்னருடன் தாயாருக்கு யுக்தப்படி மூக்குத்திகளைச் சமர்ப்பித்தனர்.

218) வடநாட்டில் காஷ்மீரம் எப்படி சிரேஷ்டமோ அதேபோல தென்னாட்டில் சோழநாடு தஞ்சைமா நகரம் தலைநகரம். இதை ஆண்ட மன்னர்கள் கம்மவார். இந்த ஜில்லாவில் 2000 தேவாலயங்கள் கட்டியுள்ளனர். அதில் பிரஹதீஸ்வரர் ஆலயம் பிரமாதமானது. இந்த ஆலய

மூலஸ்தானத்தில் உள்ள பளிங்குக் கல்லின் விஸ்தீரணம் 16 அடி நீளம், 13 அடி அகலம், 1½ அடி கனம் உள்ளது. இதே அளவுள்ள பளிங்குக் கருங்கல் சிவங்கிக்கோட்டை என்ற அரண்மனையில். 'ஸ்ரீராமமந்திரம்' என்ற பூஜை அறையில் வைத்து அதன் மீது ஸ்ரீராம பட்டாபிஷேக சுதை பிம்பத்தை நவரத்தினங்களால் பதித்து செய்யப்பட்டது. அதன் முன்னிருந்து சரஸ்வதி மஹாலுக்குச் செல்வதை, சித்திரசாலையில் அநேக தெய்வச்சிலைகள் வைக்கப்பட்டு உள்ளன.

அங்கே ஒரு கோபுரம் 200 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளன. விஜயராகவ நாயுடு நித்தியம் உதயாதி 4 மணிக்கு எழுந்து அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்குப் பல்லக்கில் சென்று ஸ்ரீரங்கநாதரைச் சேவித்து தீர்த்தப்ரசாதம் பெற்றுக்கொண்டு மத்தியானம் 12½-மணிக்குத் திரும்பி வந்து போஜனம் செய்வது வழக்கம். திருச்சி ராஜா சொக்கநாத நாயுடுவுக்கும் தனக்கும் விவாஹ விஷயத்தில் விரோதம் ஏற்பட்டு, இவர் ஸ்ரீரங்கம் வரும்பொழுது கொலை செய்துவிடுவதாக அறிவித்திருந்தனர் அதனால் அவர் அரண்மனையில் சித்திரசாலையில் கட்டப் பட்டுள்ள கோபுரத்தின் மேலிருந்து ஸ்ரீரங்கவிமானம் பரவாசு தேவர்களைத் தரிசனம் செய்துவிட்டுப் பின்னர், ஸ்ரீராமசந்திரத்தில் பிரதிஷ்டை செய்து வைத்துள்ள ஸ்ரீபட்டாபி ராமருக்குப் பூஜை நடத்தித் தீர்த்தப்பிரசாதம் பெற்று சாப்பிட்டு வந்தார். தஞ்சாவூருக்கும். ஸ்ரீரங்கத்திற்கும் சுமார் 45 மைல் தூரம் இருக்கும். பல்லக்குத் தூக்கிகள் 50 பேர். 10 மைலுக்கு ஒரு பிரிவு மாற்றிக்கொள்வது. இவர்கள் போயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

219) ஸ்ரீரங்கநாதரைச் சேவிப்பதற்காகவே அந்தக் கோபுரத்தைச் சிற்பசாலையில் கட்டப்பட்டது. அது இன்றைக்கும் பிரமாதமாக இருக்கின்றன. சொக்கநாத நாயுடுவின் எச்சரிக்கை காரணமாக ஏற்பட்ட விமானம் சொக்கநாத நாயுடு தன் குமாரனுக்கு விஜயராகவ நாயுடு புத்திரியை விவாஹம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து தன்

சமஸ்தானத்திலிருந்து தமது பந்துக்கள், ஜோதிடர், புரோகிதர்களுடன் ராஜமரியாதைக்கு தகுந்த உபகரணங்களையும் கொடுத்தனுப்பினர், அவர் தஞ்சை சென்று ராஜா பேட்டி செய்து தாங்கள் கொண்டு வந்த வஸ்திராபரணாதிகள் சமர்ப்பித்து விஷயத்தைத் தெரிவிக்க, விஜயராகவ நாயுடு சொல்வது: உங்களுக்கும் எங்களுக்கும் கொடுக்கல் வாங்கல்கள் நெடுநாளாக நின்று போயின. திருமலை நாயுடு காரால் ஏற்பட்ட விரோதம் காரணமாக நாங்கள் உயிர் போனாலும் இவர்களுடன் சம்மந்தம் செய்து கொள்வதில்லை என்று பிரதிக்ஞை செய்துள்ளோம். ஆகையால் இது முடியாத காரியம். இதைத்தவிர வேறு ஏதாவது வேண்டுமெனில் எங்களால் ஆகவேண்டிய காரியங்களைச் செய்யத் தயார் என்று சொல்லக்கேட்டவர்கள், என்ன சமாதானம் சொல்லியும் செவி சாய்க்காமல், நீங்கள் கொண்டு வந்த வற்றையும் எல்லாம் எடுத்துக்கொண்டு உடனே புறப்படுங்களென்று மகாகோபத்துடன் அவர்களை வெளியேற்றினர். அவர்கள் சென்று சமஸ்தானத்தில் விஷயத்தை அறிவிக்க அவருக்கு நேர்ந்த அவமானத்தால், பழி தீர்க்க வேண்டும் என்று யோசனை செய்து, தனக்கு வேண்டிய படைகளை எல்லாம் தயார் செய்துகொண்டு, தமது வம்ச பரம்பரையினராகிய ஆச்சாரியரிடம் விஷயத்தைச்சொல்லி எப்படியாவது அவரைக் கட்டுப்படுத்தி விவாஹ காரியத்தை முடிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்தனர். இதைக் கேட்ட ஆச்சாரியார் சொல்லுகின்றார்: விஜயராகவ நாயுடு சாமானியமானவரல்ல. அவர் மகாத்தியாகி, பரமபாகவதர் அவரை வெல்லுவது சாமான்யம் அல்ல. தந்திர உபாயத்தால் காரியம் நிறைவேற்றுவதுதான் தகுதி என்று சொல்லி, அவரை வசப்படுத்த வேண்டுமானால் நித்தியம பூசணிக்காய் 1000 வேண்டும். இவைகளைப் பூஜை செய்து காவேரியில் எறிந்துவிடின், அந்த நீரைப் பருகுவோருக்குப் சித்தஸ்வாதீனம் மாறி பயமடைந்து யுத்தம் செய்யச் சக்தி இழந்து ஓடி விடுவர். ஆதலால் தஞ்சைக்கு முக்கியமாக உள்ள பிரதேச வாசிகள் காவிரி நீரையே உபயோகித்து வருவதால், அந்தச்சமஸ்தானத்தைச் சேர்ந்த, தண்டு-தளங்கள் நிலை மாறிவிடும் என்று சொல்லவே, அப்படி

நடத்த ஏற்பாடு செய்து, காவேரிக்குள் ஓர் யாக மண்டபம் ஏற்படுத்தி நாளொன்றுக்கு ஆயிரம் பூசணிக்காய்கள் வீதம் 8 நாளைக்கு 8000 பூசணிக்காய்களை தயார் செய்து, ஆயிரம் மந்திரவாதிகள் கூடி பூஜையை நடத்தி, அந்தக்காய்களை வெட்டிக் காவிரியில் கலக்கி விட்டனர். அந்த நீரைக் குடித்தவர்கள் எல்லோரும் தங்கள் தைரியங்களை இழந்து விட்டனர். அதே சமயத்தில் சொக்கநாத நாயுடு தனது படைகளைத் திரட்டி, தளவாய் வெங்கடகிருஷ்ணப்ப நாயுடு, பேஷ்கர் சின்னத்தம்பி முதலியாரின் மூலமாக சகல தளத்துடன் சென்று வல்லம்கோட்டையில் பிரவேசித்து யுத்தம் ஆரம்பிக்கவே, அங்குள்ள பிரஜைகள், கோட்டைக்காவலர்கள் எல்லோரும் அந்த நீரைக்குடித்து வந்ததாலும், தங்கள் சமஸ்தானத்திற்கு அபஜெயம் ஏற்படக்கூடிய காலம் சம்பவித்தமையால் கொஞ்ச நேரத்தில் படைகள் எல்லாம் சிதறி ஓடவே, அந்தக்கோட்டையை வசப்படுத்திக்கொண்டு தஞ்சைக்குச் சென்று கோட்டையின் நான்கு புறங்களிலும் படை வீரர்களை நிறுத்தினர்.

220) ஒரு பக்கம் பீரங்கிப்படை, மற்றொரு பக்கம் துப்பாக்கிப்படையும், கத்தி, ஈட்டி, குத்துப்படையும், மற்ற பக்கம் தண்டாயுதப்படையும் நிறுத்தி யுத்த சன்னத்தராகி பீரங்கிகளைப் பிரயோகம் செய்து, கோட்டை, மதில் கதவுகள் முதலானவற்றை நாசம் செய்தனர். அப்பொழுது சமஸ்தானப்படையினர் எதிர்த்துப்போராடி உள்ளே புகாமல் காத்துவைத்தனர். ஆயினும் கொஞ்ச நேரத்தில் படையினர் சிதறி ஓடினர். தளவாய் மாத்திரம் அங்கே காத்திருந்தான். திருச்சியினரில் 700 பேரும், தஞ்சைப் படையினர் 1000 பேரும் மடிந்தனர். அநேகருக்குக் காயங்கள் ஏற்பட்டன. இது இப்படியிருக்க மஹாராஜா பூஜையிலேயே இருந்தனர். அப்பொழுது பிரதானி மஹாராஜாவிடம் தெரிவிக்க, சரி பார்க்கலாம். நீங்கள் நம் படையினருக்கு தைரியம் சொல்லி எதிர்த்துப்போராடுங்கள். நான் பூஜையை முடித்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டு ஜெபத்திலிருந்தார் அதற்குள் எதிரிப்படையினர் இடிந்த மதிலின் மார்க்கமாக உள்ளே

புகுந்தனர். எதிர்ப்படை தளவாய் வெங்கடகிருஷ்ணப்ப நாயுடு மஹாராஜாவிடம் முறையிட்ட விஷயம்: மஹாப் பிரபோ, இனியாகிலும் சமாதானம் செய்துகொண்டு யுத்தத்தை நிறுத்திவிடலாம். தாங்கள் கருணைகூர்ந்து தயவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், மஹாராஜா ஒத்துக்கொள்ளவில்லை. பூஜை காரியங்களை முடித்துக்கொண்டு தீர்த்தப்பிரசாதம் பெற்று வெளியே வந்து மந்திரி பிரதானிகளுடன் யுத்த சன்னத்தராகி 80-வயதுள்ள மகான் இரண்டு வாள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு புறப்படுகையில் அந்தப்புர ராணிகளுக்கு தங்கள் மானத்தைக் காத்துக்கொள்ளுவதற்கு வேண்டிய காரியங்களை நடத்தும்படி உத்திரவிட்டுத் தன் மூத்தகுமாரனை விடுவித்துகொண்டு யுத்த களம் சேர்ந்து தன்னுடன் போராட வாளாட்படையினரை அனுப்புமாறு தளவாயிலிடம் சொல்லி இரண்டு கைகளினால் வாளாயுதங்களைக்கொண்டு எதிரிகளை வெட்டித்தள்ளினர். இதற்குள் ராணிவாசஸ்திரீகள் யுத்த சன்னத்தராகி கத்தி, ஈட்டி, துப்பாக்கிகளால் போராடிக்கொண்டிருக்கையில் பட்டமஹிஷியார் தனது 4 வயது ஆண் குழந்தையாகிய செங்கமலதாஸைத் தன் தாதியினிடம் ஒப்படைத்து அவனுக்கு வேண்டிய தனம் ஆபரணங்களைக் கொடுத்து அனுப்ப அந்தத் தாதி அக்குழந்தையை அந்தரங்கமாகக் கொண்டு சென்று நாகப்பட்டணத்தில் ஒரு தனவந்தரிடம் போய்ச் சேர்ந்தனள்.

ராணிவாசஸ்திரீகள் அனைவரும் ஈட்டி, கத்திகளால் குத்திக்கொண்டு, நெய், எண்ணைகளை விட்டு அக்கினிப் பிரவேசமாயினர். அவர்கள் தகனம் ஆன கரிக்கட்டைகளை இன்றைக்கும் காணலாம். யுத்த களத்தில் மஹாராஜாவும் அவருடைய மூத்த குமாரனும் வெட்டுண்டு கீழே விழுந்தனர்கள். கீழே விழுகின்ற சமயம் மகாராஜா, அரே ராமா, ராஜகோபாலா, ஸ்ரீரங்கநாதா என்று சொல்லிக்கொண்டு உயிர் நீத்தனர். ஸ்ரீரங்கநாதருடைய அநுக்கிரகத்தால்.

221) ஸ்ரீரங்கம் சென்று சன்னதியில் நிற்கக்கண்ட அர்ச்சகர்கள் மகாசந்தோஷத்துடன் ராஜமரியாதைப்படி வரவேற்று சன்னதியில் பிரதக்ஷணம் செய்து ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ நம்பெருமாள் ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாதரையும் சேவித்துத் தீர்த்தப்பிரசாதம் சடாரிப்பிரசாதம் பெற்றுக் கொண்டு வெளியே வந்த மகாராஜா தம்பதிகள் கூட வந்தவர்கள் எல்லோரும் மறைந்து விட்டனர். இதைக் கண்ட அர்ச்சகர்கள் திருச்சி மகாராஜாவுக்கும் இவருக்கும் சமாதானம் ஏற்பட்டதால் மகாராஜா விஜயராகவ நாயுடு கார் இன்று சன்னதிக்கு வந்தனர் என்று நினைத்தவர்களுக்கு ஆச்சர்யம் தோன்றி உடனே திருச்சி சென்று மகாராஜா சொக்கநாத நாயுடுவிடம் விஷயத்தைச் சொல்லிக்கொண்டு இருக்கையில், தஞ்சாவூரிலிருந்து சேவகன் அங்கு நடந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க அதைப்பார்த்துப் பரிதாபம் கொண்டு, என்னை விளாக விஷயமாக இந்தக்காரியம் நடந்துவிட்டதென்று சொல்லி, மனவருத்தம் கொண்டு கடிதம் எழுதிச் சேவகனிடம் கொடுத்தனுப்பிய விஷயம்: யுத்த களத்தில் இறந்தவர்களுக்குத் தாரதன்மியத்துடன் முறைப்படி தகனசமஸ்காரங்களை நடத்தி, கோட்டைக்குப் பந்தோபஸ்து செய்துவிட்டு வரவும் என்று எழுதி அனுப்பினார் சேவகன், தளவாய் வெங்கடகிருஷ்ண நாயுடுவிடம் விஷயம் தெரிவித்துக் கடிதத்தையும் கொடுத்தனன்.

222) உடனே தளவாய் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து மஹாராஜா உத்திரவுப்படி தகனகாரியங்கள் செய்து முடித்துத் தானதர்மங்களை எல்லாம் யுக்தப்படி நடத்தி, கோட்டைக்குப் பந்தோபஸ்து செய்துவிட்டு சமஸ்தானத்திற்கு வந்து, ராஜாவுடன் கலந்து. மந்திரி பிரதானிகளைக் கூட்டி ஆச்சாரிய புரோஹிதர்களை வரவழைத்து விஷயம் அறிவித்து, நத்தோஷ பரிகார்த்தமாக அநேக தானதர்மங்கள் செய்து, ஆச்சாரியார் நியமனப்படி சர்வபிராயச்சித்த ஹோமத்தைக் காவேரியில் மண்டபம் நிர்மாணித்து ஒரு மண்டல காலம் (48 நாள்) நடத்திப் பூரண ஆகுதியுடன் 1000 பிராம்ஹணர்களுக்கு அன்னதானம் செய்து தன் விரதத்தைப் பூர்த்தி செய்து,

அரண்மனை சேர்ந்து தன் வம்சத்திய அளகேத்ரி நாயுடுவை சகல பரிவாரங்களுடன் தஞ்சைமாநகருக்கு அனுப்பி ராஜ்ய பரிபாலனம் நடத்த ஏற்பாடு செய்தார்.

223) இந்த அளகோத்ரி நாயுடு சிறுவயதில் தந்தை இறந்துபோகவே, அவரை இங்கு கொண்டு வந்து வளர்த்து வந்தார், சொக்கநாத நாயுடுகாரின் தாய் தஞ்சைமாநகரை ஆண்டுவந்து வருஷா வருஷம் செலவு போக மீதியுள்ள பணத்தை மட்டும் திருச்சி சமஸ்தானத்திற்கு அனுப்பி வந்தார். கொஞ்ச காலத்திற்குப் பின்னர் (தின்னின்ட்டி வாசாலு லெக்கபெட்டேதி என்ற சொற்படி) எதிரியாகி விட்டனர் அளகோத்ரி நாயுடுகார்.

224) நாகப்பட்டணத்தில் தாசியின் வசமாக ஒப்படைக்கப்பட்ட செங்கமலதாசுக்கு வயது வந்த சமயம், இவர் தந்தையிடம் பிரதான மந்திரியாக இருந்த ராயசம் நியோகி வெங்கன்ன என்ற பிராம்ஹணர் செங்கமலதாஸ் வளர்ந்து வந்ததை அறிந்து அங்கு சென்று தாசியைக் கண்டு குசலம் விசாரித்து, எப்படியாவது செங்கமலதாசுக்குத் தஞ்சைமா நகரில் பட்டாபிஷேகம் நடத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்து, முன்னர் தஞ்சை சமஸ்தானத்தில் பிரதான உத்தியோகஸ்தர்களாக இருந்தவர்களைச் சந்தித்து விஷயங்களைச்சொல்லி அவர்களையும் வசப்படுத்திக்கொண்டு அளகிரி நாயுடுவை பேட்டி கண்டு, அவரிடம் மிக்க விசுவாசத்துடன் புழங்கிக்கொண்டும், நாகப்பட்டனத்தின் பக்கம் சில பிரதேசங்களை வசப்படுத்தி ஆண்டுவந்த மராட்டியர் சிவாஜி மகாராஜாவின் சிறிய தந்தையாகிய ஏகோஜிராவின் பந்துக்களுடன் நட்புகொண்டு ராஜாங்க உத்தியோகஸ்தரையும் வசப்படுத்திக்கொண்டு, தன்னுடைய எண்ணத்தை அவர்களிடம் கூறியும் அவர்களின் மூலமாக ராஜா பேட்டி செய்து செங்கமலதாசுவையும் அவரிடம் அழைத்துச் சென்று விஷயங்களைக் கூறி தஞ்சாவூர் ராஜாங்கத்தை செங்கமல தாசுக்கு வசப்படுத்தி பட்டாபிஷேகம் செய்துவைக்க வேண்டுமென்று கோரி ஒரு வருஷ காலம் அதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்துவந்தார்.

225) இப்படி அடிக்கடி மந்திரிபிரதானிகளைச் சந்தித்து தூண்டுதல் செய்துவர, ஏகோஜிராவும் அதற்கு ஒப்புக்கொண்டு தனது 12 ஆயிரம் சேனைகளை ஒப்படைத்து அதற்கு வேண்டிய சௌகரியங்களையும் கொடுத்தனுப்பினார். செங்கமலதாஸ் ஒரு பல்லக்கிலும், நியோகி வெங்கன்ன ஒரு பல்லக்கிலும், ஆனைப்படை, குதிரைப்படை, காலாட்படையுடன் தஞ்சையை நோக்கி வந்தனர். இந்த விஷயத்தை ஒற்றர் மூலமாக அளகிரி நாயுடு தெரிந்துகொண்டு தானும் தன் படைகளைத் தயார்செய்து உஷாராக இருந்தனர்.

அந்தப்படையினர் பக்கத்திற்கு நெருங்கி வருகையில் அளகிரி நாயுடு தன் பத்தாயிரம் படை வீரர்களுடன் பத்து பீரங்கிகளுடன் எதிர் சென்று அய்யம்பேட்டையின் பக்கம் எதிரிகளின் மீது பீரங்கிகளைப் பிரயோகித்து எதிர்க்கவே, அளகிரி நாயுடு சேனையின் மீது மராட்டியரும் பீரங்கிகளை பிரயோகித்துத் தாக்க, இவர்கள் தாங்கமுடியாமல் பின் வாங்கினர். அப்படையினர் முன்னேறி வர, குதிரைப் படையினர், பீரங்கிப்படையினர், துப்பாக்கிப்படையினர், காலாட்படையினர் மும்முரமாகப் போர்செய்ய ஜனச்சேதம் இரு தரப்பிலும் ஏற்பட்டன. அதை லக்ஷியம் செய்யாமல் கோரமாக மராட்டியர் முன்னேறி வர, அளகிரி நாயுடு தனக்குப் பாதுகாப்பாக 2000 குதிரைப் படைகளுடன் தஞ்சைக்குப்பின் வாங்கினார். கோட்டைக்குச் சென்று அளகிரி நாயுடு, சொக்கநாத நாயுடுகாருக்கு கடிதம் எழுதினார். திருச்சிமாநகர எஜமானராகிய சொக்கநாதப் பிரபு ராஜாதிராஜா அவர்களுக்கு, அநேகம் கோடி தண்டம் சமர்ப்பித்து எழுதிய நிருபம். அடியேன் துன்மார்க்கருடைய துர்ப்போதனையால் மதியிழந்து எஜமானருக்கு எதிரியாக நடந்துகொண்டதை மன்னித்து, இப்பொழுது தேவரால் கொடுக்கப்பட்ட ராஜாங்கத்திற்கு ஆபத்து தலைக்குமேல் நிற்கின்றது. ஆதலால் அடியேனை மன்னித்துத் தங்கள் ஆதீனமாகிய தஞ்சைமாநகர் சமஸ்தானத்தைக் காத்தருள வேண்டுமென்று மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகின்றேன் என்று

எழுதி அனுப்பிய கடிதத்தைப்பார்த்துச் சமஸ்தானாதிபதிகளுடன் யோசனை செய்து, எப்படியாவது இதைச்சமாளிக்க வேண்டியது நம் கடமை. அவர் துர்போதனையால் நம்மை மதியாமல் நடந்துகொண்டார். அதை எண்ணாது இதற்கு ஆயத்தம் செய்யவேண்டுமென்று சபையினர் சமாதானம் சொல்லியும் அவர் ஏற்றுக்கொள்ளாமல், தஞ்சைமாநகரை அளகிரி ஆண்டாலென்ன, மராட்டியர் ஆண்டாலென்ன. நாம் அதில் பிரவேசித்து ஜனங்களைப் பலி கொடுப்பதில் யாதொரு பிரயோஜனமும் காணப்படாதென எண்ணுகிறேன்.

ஆதலால் நாம் அதில் பிரவேசிக்காதிருப்பதே நலம் என்று கூறிவிட்டனர். சபையினர் இதற்கு மறுத்துக்கூற முடியாமல் பேசாது இருந்துவிட்டனர். வந்த சேவகனிடம் சொல்லுகின்றனர்: உங்களுடைய எஜமானருடைய யுக்திப்படி சமாளிக்கவேண்டியதே முக்கியம். எங்களால் உதவி செய்யச்சாத்தியமில்லையென்று வாயளவில் சொல்லியனுப்பிவிட்டனர். சேவகன் சென்று விஷயத்தை அறிவிக்க அளகிரி நாயுடு யோசனை செய்து எப்படியாவது நாம் இதை விட்டு வேறிடம் போவது தான் மேல் என்று முடிவு செய்து கொண்டிருந்தார்.

226) ராயசம் நியோசி வெங்கன்ன ஒரு தூதுவனைக் கோட்டைக்கு அனுப்பி முன்னர் விஜயராகவ நாயுடுவிடம் பிரதானிகளாயிருந்தவர்களிடம், தஞ்சாவூருக்கு எஜமானராகிய விஜயராகவ நாயுடுகார் குமாரர் செங்கமலதாசுக்காக வேண்டியே மராட்டியர் ஒத்துழைத்து வருகையில் நம் எஜமானருக்குப் பரம்பரை விரோதிகளாகிய வம்சத்தைச் சேர்ந்த அளகிரி நாயுடுவுக்கு நீங்கள் உதவி செய்வது நீதி முறையும் அல்ல. தர்மமும் அல்ல என்று தூது வந்தவர் உபதேசம் செய்யக்கேட்ட அவர்களுக்கு உடனே செங்கமலதாசுவின்மீது கருணை தோன்றி, இந்த அளகிரி நாயுடுவை அவர்களிடம் ஒப்படைத்து விடுவதே நலம் என்று யோசனை செய்து கொண்டிருந்தனர். இந்த விஷயம் அழகிரி நாயுடுவுக்குத் தெரிந்து உடனே அதற்கு ஏற்பாடு செய்து தன்

சொந்த பந்துக்கள், தமது நண்பர்களுடன் அவர்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு அர்த்தராத்திரியில் 10 சிறுத்தைகள், 400 ஜனங்களுடன் புறப்பட்டு அரியலூர் மார்க்கமாக மைசூருக்குப் போய்விட்டார்.

காலையில் பிரதானிகள் சென்று சமஸ்தானத்தில் விசாரித்துத் தெரிந்துகொண்டு வெங்கன்னரிடம் சொல்லி, அன்றே கோட்டைப் பிரவேசம் செய்து அரண்மனையில் செங்கமலதாஸைச் சேர்த்துவிட்டு, 3000 படைகளை மட்டும் கோட்டைக்குக் காவலாக வைத்துக்கொண்டு, தாசியின் உதவியால் கஜானாவிலுள்ளதைக்கண்டு, அதில் கொஞ்சம் தனத்தை எடுத்து சேனை வீரர்களுக்குப் பரிசாக வழங்கி அவர்களை அனுப்பி விட்டு, பட்டண அலங்காரம் செய்து, சகல பரிவாரங்களுடன் ஆனை மீது அம்பாரியில் சகல-வாத்தியம், நடன-நாட்டியங்களுடன் நகர்வலம் வந்து சுப-முகூர்த்தத்தில் மந்திரி பிரதானிகள் சூழ, ஆச்சாரியர் புரோஹிதர் வைதிகர்கள் ஹோமாதிகள் செய்து செங்கமலதாஸனைச் சிம்ஹாசனத்தில் ஏற்றி, நவரத்தின ஆபரணங்கள், கவச குண்டலங்கள், பட்டு பீதாம்பரங்கள் அணிந்து கொண்டு, சகல வாத்தியம் முழங்க, நடன-நாட்டியங்கள் நடைபெற பரம்பரை குலகுருவாகிய கோட்டிகந்நிகாதான திருமல-தாதாச்சாரியார் ஸ்வாமிகளின் பரம்பரையினராகிய ஸ்ரீவேதாந்த மஹாதேசிகர் ஸ்வாமிகளால் வேதபாராயணையத்துடன் திருமுடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டன.

மங்கள ஆரத்தியுடன் நான்கு திக்கிலும் புண்ணிய தீர்த்தங்கள், திவ்யதேசப் பெருமாள் சந்நிதி தீர்த்தப் பிரசாதங்கள் வழங்கி ஆசீர்வதிக்கப்பட்டன. அப்பொழுது சகலவிதமான தானதருமங்கள் செய்து, உத்தம பிராம்மண-ணர்களின் ஆசிகள் பெற்று, பல்லாயிரக்கணக்கான அன்னதானங்கள் நடைபெற்றன. அதுசமயம் நியோகி வெங்கன்ன ஸ்வாமிகளுக்கு முத்தாரம், ஜோடி சால்வைகள், பட்டு பீதாம்பரங்கள் சன்மானமாகக் கொடுக்கப்பட்டன.

227) ஏகோஜிராவுக்கும் அநேகபட்டு பீதாம்பரங்கள், நவரத்தின ஆரம், புஷ்பமாலைகள் சூட்டி, குதிரைப்படையுடன் சகல வாத்தியம் முழங்க, நடன-நாட்டிய வைபவங்களுடன் 10000 ஆயிரம் ரூபாய் காணிக்கையும் சமர்ப்பித்து நகர்வலம் செய்வித்து, இதே போலப் படை வீரர்களுக்கும் யுக்தப்படி சகல சன்மானங்கள், முக்கியப் பிரதானிகளுக்கு 3000 ரூபாய் சன்மானங்கள் சமர்ப்பித்தும், மற்றைய வீரர்களுக்கு ரூ. 250/- முதல் ரூ. 50/- வரை தக்ஷிணையாக வழங்கி அவர்களுக்கும் நல்ல முறையில் வழங்கப்பட்டன.

இந்த சன்மானங்களைப் பெற்றுக்கொண்டு தன் படைகளுடன் விடை பெற்றுக்கொண்டு தன்னுடைய சமஸ்தானம் போய்ச்சேர்ந்தார்கள் ஏகோஜிராவின் படையினர்கள்.

பின்னர் சமஸ்தானத்திற்குச் சேர்ந்த பிரதேசங்களுக்கெல்லாம் எச்சரிக்கை செய்து வரி வசூல் தொகைகள் கிரமப்படி செலுத்தி வரும்படி அங்கங்குள்ள அதிகாரிகளுக்கு உத்திரவிட்டு சமஸ்தானத்தில் விஜயராகவ நாயுடு காலத்தில் மந்திரிபிரதானிகளாக இருந்தவரையே அந்தந்த ஸ்தானங்களுக்கு நியமனம் செய்தபடியே செய்து ராஜாங்கத்தை நீதி முறைப்படி நடத்தி வந்தனர். செங்கமலதாசுக்கு அப்பொழுது 12 வயது.

228) சமஸ்தானத்திற்கு ஆதியிலிருந்து நியோகி வெங்கன்ன பிரதான மந்திரியாக விஜயராகவ நாயுடு காலம் வரை இருந்து வந்தவர் ஆகையால் அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுத்து கௌரவப்படுத்த வேண்டியதே முறை. முன்னுள் மந்திரி பிரதானிகள் சொல்லிவந்தனர். அக்காரியத்தை நடத்துவதற்காகச் சபை கூட்டி விஷயத்தைச் சபையில் தெரிவிக்க, எல்லோரும் நியோகி வெங்கன்னவுக்கே அப்பதவியைக் கொடுக்கச் சம்மதித்தனர். அதற்கு முடிவு கூற செங்கமலதாஸ், தன்னை சிறுவயதிலிருந்து வளர்த்து வந்த தாதியினிடம் சென்று விஷயத்தைச் சொல்ல, அவள் நம்மை இதுவரையிலும் தன் சொந்தப் புத்திரனைப்போல பாதுகாத்து வந்த செட்டியாருக்கு இந்தப் பதவியைக் கொடுப்பதாக முன்னமே நான் வாக்களித்துள்ளேன்.

ஆதலால் அப்பட்டத்தை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி காரியத்தை நடத்தலாம் என்று அவள் கண்டிப்பாகக்கூறி, நியோகிக்கு வேண்டுமென்றல் அவர் கீழ் உத்தியோகத்தைக் கொடுத்துவிடுவது நலம் என்று கூறினள். இதற்கு மறுத்துக்கூற இளங்குமாராகிய செங்கமலதாசுக்குத் துணிவு தோன்றவில்லை.

உடனே சபாமண்டபத்திற்குச்சென்று செட்டியாருக்கு முதல் பட்டமும், நியோகிக்கு இரண்டாவது பட்டமும் வழங்கலாமென்று கூறினர். சபையினர் அதை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ மனம் துணியவில்லை. ஒன்றும் பதில் கூறாமல் மௌனமாக இருந்தனர். இதை அவர் எண்ணுது தாதி சொல்லியபடி அதற்கு நாள் நிர்ணயம் செய்யச்சொல்லி ஏற்பாடு செய்தனர்.

பின்னர் புரோகிதர்கள் நாள் குறித்து சமஸ்தானத்தில் தெரிவிக்க அதற்கு ஏற்பாடு செய்து முறைப்படி செட்டியாருக்கு முதல் மந்திரி பட்டம் சூட்டி முறைப்படி நகர்வலம் செய்து வருகையில் நியோகி வெங்கன்ன மட்டிலும் அதில் கலந்துகொள்ளாமல் மனக்கவலையுடன் ஒதுங்கிக்கொண்டு, இராஜாங்கத்தைக் கவிழ்க்க ஏற்பாடு செய்துகொண்டு வெளியூர் போய்விட்டார். சமஸ்தானத்தில் அக்காரியத்தை முடித்துக்கொண்டு சுகத்திலிருந்தனர்.

229) நியோகி வெங்கன்ன மராட்டியரிடம் சென்று தஞ்சையைக் கைப்பற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகையில் மராட்டிய மன்னர் காலமாகிவிட்டதால் அவர் குமாரர் பட்டத்தை ஏற்றுக்கொண்டார். இந்த வெங்கன்ன பழைய நண்பர்களால் ராஜாவைச் சந்தித்து இந்த விஷயத்தை அங்கு போதனை செய்துவர, வர அவர் களுக்கு பேராசை தோன்றி அதற்குச் சம்மதம் தெரிவித்தனர் உடனே 2 குதிரைப்படையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, செலவுகளுக்கு வேண்டிய தனம் பெற்றுக் கொண்டு, தஞ்சை நகருக்குச்சென்று பக்கமுள்ள பாளையங் கோட்டையில் தங்கி, அந்த இரவு ஒரு கடிதம் எழுதிச் சேவகனிடம் கொடுத்தனுப்பினர். அதில் குறித்துள்ள

விஷயம்: மஹாராஜா ஸ்ரீ செங்கமலதாஸ்காருக்கு அநேக ஆசீர்வாதம் செய்து எழுதிய நிருபம், க்ஷேமம், க்ஷேமம். நீர் சந்தோஷமாக ராஜ்யபரிபாலனம் நடத்தி வருவதைக் கண்டு சந்தோஷப்படுகின்றேன்.

தற்சமயம் மராட்டியரால் நம் சமஸ்தானத்திற்கு ஆபத்து நேரும்போல் காணப்படுகின்றது. ஆதலால் நீர் கொஞ்ச நாளைக்குக் கண்மறைவாய் இருந்து வருவதே நன்று உடனே நீர் இதை கவனித்து நடந்து கொள்ளவேண்டியது அவசியம். இப்படிக்கு, ஆஸ்தான நியோகி வெங்கன்ன.

எப்படியோ நான் இதில் பிரவேசித்துக் காரியத்தைச் சரிப்படுத்தும் வரையில் நீர் பத்திரமாக காலங்கடத்தி வர வேண்டியது முக்கியமான கடமையாகும். ஸ்ரீரஸ்து. என்று எழுதிய நிருபத்தை அப்பொழுதே சேவகன் பெற்றுக் கொண்டு சமஸ்தான காவலரின் அனுமதி பெற்று உள் சென்று சமஸ்தானத்தில் தண்டம் சமர்ப்பித்துக் கடிதத்தை வைக்க அதைப்பெற்றுக்கொண்டு சேவகனுக்கு அனுமதி கொடுத்து அனுப்பிவிட்டுச் சபையில் உள்ளவர்களிடம் விஷயத்தை அறிவிக்க, விஷயத்தைக் கேட்டவர்கள் ஆச்சரியமும், பயமும்கொண்டு, மராட்டியரை நம்பலாகாது. முதலில் அவர் உதவியால் ராஜாங்கம் பெற்றனம். இப்பொழுது அவர்கள் மாறி, இதன் மீது ஆசைப்படுவதற்கு காரணம் தெரியவில்லை.

ஆயினும் அவர்களுடைய படை பலம் பெருகி வருவதால் நாட்டை விஸ்தரிக்க ஆசை ஏற்படுவது சகஜம். தவிர சோழநாட்டிற்குத் தலைநகர் தஞ்சைமாநகரம ஆதலால் அவர்கள் படையெடுத்துவரின் அவர்களை ஜெயிக்க நம்மிடம் போதிய படை பலம் போதாது. ஆகையால் வெங்கன்ன சொல்லியபடி நாம் விட்டுக்கொடுப்பதே நலம். எப்படியும் அவர்கள் நம்மை விடமாட்டார்கள். ஆகையால் அதற்கு ஏற்பாடு செய்து மறைந்துவிடுவதுதான் யுக்தம் என்று பிரதான மந்திரி நாகப்பட்டணம் கோமுட்டி செட்டி

யார் முடிவு செய்தார். செங்கமலதாசுக்கு வயது போதாது ஆகையால் அதை மறுக்க அனுபவமும் தைரியமும் இல்லை.

உடனே அன்று இரவில் வேண்டிய தனம், தானியம், வஸ்திராபரணங்கள் முதலானவற்றை எடுத்து மூட்டை-கட்டிக்கொண்டு 5, 6 குதிரைகளின் மீது ஏற்றிக்கொண்டு, தனக்கு வேண்டியவர்களையும் கூட்டிக்கொண்டு செட்டியார், ராணி இவர்களுடன் இரண்டு மூன்று பல்லக்குகளில் ஏறிக்கொண்டு, திருச்சியைச் சேர்ந்த அரியலூர் நகருக்குச் சென்று அங்கு தங்கினர்.

அங்குள்ள பாளையப்பட்டு ரங்கப்ப மளவராயடு தெரிந்து, அங்கு வந்து க்ஷேமம் விசாரித்து, தன்னுடைய ஆதரவில் யாதொரு பயமும் இல்லாமல் சுகமாக நீங்கள் வாசம் செய்யலாம் என்று தைரியம் சொல்லி அழைத்துச் சென்று இவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதியுள்ள மாளிகையைக் கொடுத்து உதவி செய்தனர். இது இப்படி இருக்க, தஞ்சை சமஸ்தானத்தில் தன-தான்யங்கள், ரொக்கரோஜனங்கள் எல்லாம் பாதாள அறையில் அப்படியே இருக்கின்றன. ஆனைப்படை, குதிரைப்படை, களப்படை, பீரங்கிப்படை துப்பாக்கிப்படை எல்லாம் அப்படியே இருந்தன.

230) மறுநாள் காலையில் நியோகி வெங்கன்னா தூது அனுப்பி விஜயத்தைத் தெரிந்துகொண்டு, மராட்டிய சமஸ்தானத்திற்கும் தெரியப்படுத்த, அவர்கள் மிக்க குதூகலத்துடன் வெங்கன்னாவின் சாதுர்யத்தை மெச்சி, அவருக்கு வேண்டிய சன்மானஞ் செய்து வரவேற்று சகல பரிவாரத்துடன் நகர் பிரவேசம் செய்து அரண்மனையில் உள்ளவற்றையெல்லாம் வெங்கன்னா காட்ட வர அவைகளை எல்லாம் கண்டுகளித்து, ராஜாங்கத்திற்கு விளம்பரம்செய்து சகல வைபவத்துடன் தஞ்சைமாநகரை ஆண்டனர்.

ஆயினும் இந்த நியோகி வெங்கன்னாவின் மீது சந்தேகம் ஏற்பட்டு பரம்பரையாக ராஜபோகத்தைக் கொடுத்துக் காப்பாற்றி வந்த குடும்பத்திற்கே இவ்வாறு செய்தவன் ஒரு சமயம் நமக்கும் இவ்வாறு துரோகம்

செய்யின் நாமும் கஷ்டப்படவேண்டிவரும். இந்நாட்டின நுடைய பழக்க வழக்கங்களில் நமக்கு அனுபவம் போதாது. ஆகையால் வெங்கன்னவை சுயேச்சையாக விடக்கூடாது. அவரை பந்தோபஸ்தில் வைப்பதுதான் முறை. இல்லையேல் நமக்கும் இதே கதிதான் ஏற்படுமென்று சபையில் ஒரு நிருபர் எடுத்துக்கூற, ராஜாவும் இதை ஆமோதித்து அதற்கு ஏற்பாடு செய்து வந்ததை வெங்கன்ன தெரிந்து கொண்டு ஒருவருக்கும் தெரியாமல், 'தன்வினை தன்னைச்சுடும், ஒட்டையப்பம் வீட்டைச்சுடும்' என்ற பழமொழியை மனதில் நினைத்துக்கொண்டு தன்னந்தனியனாக யாருக்கும்தெரியாமல் ஓடி மறைந்து போனார்.

231) செங்கமலதாஸ் அங்கிருந்துகொண்டு தன்பந்துக்களில் ஒரு பெண்ணை விவாஹம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தி வருகையில், இவருக்கு விஜயராகவ நாயுடு என்ற குமாரனும், விஜயமன்னரைப்ப நாயுடுஎன்ற குமாரனும் ஆக 2 பேர்தோன்றினர். அதில் விஜயமன்னரைப்ப நாயுடுக்கு திருச்சி மஹாராஜா சொக்கநாத நாயுடுவின் பேத்தியைக்கொடுத்து பாணிக்கிரஹணம் செய்து சீதனமாகக் கொடுத்து ஜாகீரை அனுபவித்து வருகின்றனர்.

232) தஞ்சாவூர் மஹாராஜா விஜயராகவ நாயுடுகார் ஸ்ரீரங்கத்தில், ஸ்ரீரங்கவிமானத்திற்கு தங்கக்கவசம் செய்து வைத்து, வருஷம் 10000 ரூபாய் வருமானம் வரக்கூடிய பூமியைக்கொடுத்து சாசனம் செய்துவைத்துள்ளார்.

இவருடைய ஞாபகார்த்தமாக சுக்ரவார அறையில் வடபுறமாக விமான தரிசனம் செய்தபடி அவர்களின் சிலை, ராணியார், மூத்த குமாரன் சிலை ஆகிய 3 சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இன்றைக்கும் அது பிரபலமாக இருக்கின்றது.

233) இவர் கும்பகோணத்தில் கோதண்டராமர் சன்னதியை நிர்மாணித்து அதற்கு வேண்டிய மான்யாதிகள் வழங்கியுள்ளார். அந்தக்கோவிலின் 2-வது பிரகாரத்தில் சித்திர ராமாயண கதை பிம்பங்களை அமைத்துள்ளார்.

அதில் புத்ரகாமேஷ்டி யாகம், ஸ்ரீராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்கன் ஜனனம் முதல் குருகுல வாசம் வரையில் பிம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது முதல் வரிசையில். 2-வது வரிசையில் விஸ்வாமித்திரர் யாகரக்ஷணார்த்தமாக ராம, லக்ஷ்மணர்களை சக்கரவர்த்தியின் அனுமதியின் பேரில் அழைத்துச்செல்லுதல்.

1. தாடகை வதம். 2. பலை அபலை மந்திரம் பெறல். 3. விஸ்வாமித்திரர் யாகம் பூர்த்தி. 4. அங்கு வந்த முனிவர்கள் அஸ்தரசஸ்தரங்களைக் கொடுத்தல், 5. அகலிகை சாப விமோசனம், 5. வில்லை வளைத்து சீதா விவாஹம் முதல் மற்றவர்கள் விவாஹங்கள். 7. அங்கிருந்து அயோத்திக்கு வரும்பொழுது பரசுராமரை ஜெயித்து அவர் கொடுத்த வில்லை வருண பகவானிடம் கொடுத்துவிட்டு அயோத்தியில் பிரவேசம். 8. பரத சத்துருக்கனர் கேகய நாட்டிற்குச் செல்லுதல். 9. ஸ்ரீராம பட்டாபிஷேகம் ஆரம்பம். 10. கைகேயியைக் கூனி கலைத்தல்.

11. கைகேயி தசரதரிடம் வரம் பெறல். 12. 14-௵ பரதன் நாடாளவும், ஸ்ரீராமபிரான் காடாளவும் வரம் பெற்று மரவுரி கொடுத்தல். 13. ஸ்ரீராம லக்ஷ்மணர் சீதா தேவியுடன் மரவுரி பெற்றுக்கொண்டு காட்டிற்குச்செல்லுதல் 14. குகனைச் சந்தித்து விஷயம் அறிவித்தல். 15. குகன் உதவியால் கங்கையைக் கடந்து பரத்வாசர் ஆஸ்ரமம் சேருதல். 16. அவரிடம் விடை பெற்றுக்கொண்டு சித்திரகூடம் சேருதல். 17. அங்கு பர்ணசாலையை நிர்மாணித்து அதில் வாசம். 18. ஸ்ரீராமலக்ஷ்மணர் சீதாதேவியுடன் வனப்பிரவேசமானதைக் கேள்வியுற்று தசரத மஹாராஜா சுவர்க்கம் சேரல். 19. விஷயத்தை பரத சத்ருக்கருக்குத் தெரிவித்தல்.

20. கேகய நாட்டிலிருந்து அவர்கள் அயோத்திக்கு வந்து விஷயங்களை அறிந்துகொண்டு சக்கரவர்த்தியின் தகன காரியங்களை சத்ருக்கனுல் செய்து முடித்தல். 21. தானும் தவ வேடத்துடன் சத்ருக்கன் முதல் பட்டணவாசிகள் புடை சூழ வனம் சென்று கங்கைக்கரையில் குகப்பெருமானைத்

தரிசித்து விஷயங்களைக் கூறுதல். 22. அவர் மூலமாகக் கங்கையைக் கடந்து சித்திரக்கூடம் சேர்ந்து ஸ்ரீராமபிரானிடம் நடந்த விஷயங்களை அறிவித்து அயோத்திக்கு வருமாறு பிரார்த்தித்தல். 23. ஸ்ரீராமபிரான் சக்ரவர்த்தியின் கட்டளைப்படி 14 வருஷங்கள் முடிவதற்குள் வருவதாக வாக்களித்தல். 24. பரதாழ்வான் பாதுகைகளைக் கொடுக்குமாறு பிரார்த்தித்து பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு நந்திகிராமம் சேரல்.

25. அங்கு பாதுகா பட்டாபிஷேகம். 26. செய்து தவ நிலையில் இருந்து காலங்கடத்தல், சத்ருக்கன் ராஜாங்க காரியங்களைக் கவனித்துக்கொண்டும், பரதாழ்வானுக்கு உபசாரம் செய்து கொண்டிருத்தல். 27. ஸ்ரீராமலக்ஷ்மணர் சீதா தேவியுடன் தண்டகவனப்பிரவேசம் செய்து அத்திரி முனிவரைத் தரிசித்து அவரிடம் ஆசி பெறல். 28. சீதா தேவியை அவர் பார்யை ஆகிய அனுசூயா தேவியார் பட்டாடையும், சூடாமணியும் கொடுத்தல். 29. அவரிடம் விடை பெற்று ஆரணியம் செல்லும் பொழுது விராதன் வதம் 30. சரபங்கர் மோக்ஷம். 31. சுதீக்ஷ்ண முனிவரிடம் சேர்ந்து முனிவர்களுக்கு அபயங் கொடுத்து அவர்களிடம் ஆசி விடை பெற்றுக்கொண்டு அகஸ்திய ஆஸ்ரமம் சேரல்.

32. அங்கிருந்து அவர் நியமனப்படி பஞ்சவடிக்குச் சென்று பர்ணசாலை கட்டி வாசமாயிருத்தல். 33. ஜடாயு சந்திப்பு கொண்டு விஷயம் அறிவித்தல். 34. சூர்ப்பணகை வருதல், சூர்ப்பணகை நாசிகா சேதனம். 35. கரதூஷணாதியர் வதம், 36. மாயமான் மாரீசன் வதம். 37. ராவணனால் சீதா அபகரணம். 38. ஜடாயு ராவண யுத்தம். 39. இராவணன் ஜடாயுவின் இறக்கைகளை வெட்டித்தள்ளிவிட்டு சீதா தேவியை எடுத்துச்சென்று அசோக வனத்தில் சிறை வைத்தல். 40. ராமலக்ஷ்மணர் ஜடாயுவினால் சீதையின் விஷயம் தெரிந்துகொண்டு ஜடாயுவுக்குத் தகனக்கிரியை நடத்தல். 41. கபந்தன்வதம். 42. சவரி அம்மையாருக்கு மோக்ஷம் கொடுத்தல். 43. பம்பைப்புஷ்கரணியின் பக்கம் ஆஞ்சநேயரைக்கண்டு அவர் விஸ்வரூப தரிசனம்.

45. ரிஷ்யமூகபர்வதத்தில் சுக்ரீவரைக்கண்டு அவர் கோரிக்கையை நிறைவேற்றுவதாக உடன்பாடு கொள்ளல், 46. துந்துபியை இலக்ஷ்மணர் கால் விரலினுல் எடுத்து எறிதல். 47. வாலியின் பராக்ரமத்தை அடக்கி (கொன்று) கிஷ்கிந்தை ராஜ்ஜியத்தைத் தருவதாக வாக்களித்தும், சுக்ரீவனுக்கு வாலியை ஜயிக்கும் சக்தியைக் காட்டுவதற்காகவும் அவர் சந்தேகபயம் தீருவதற்காகவும் வேண்டி மராமரம் 7-யும் ஒரே பாணத்தால் துளைத்தல் 48. வாலி சுக்ரீவர் யுத்தம். 49. வாலிவதம். 50. வாலி சுக்ரீவனையும், அங்கதன் கையில் வாளாயுதம் கொடுத்து இருவரையும் ராமபிரானிடம் ஒப்படைத்து விட்டு சுவர்க்கம் சேருதல். 51. சுக்ரீவ பட்டாபிஷேகம். 52. ஸ்ரீராம லக்ஷ்மணர் மதங் ஆஸ்ரமவாசம். 53. சுக்ரீவன் சொல்லிய படி வரானையால் இளையபெருமாள் கிஷ்கிந்தை சென்று சுக்ரீவனுடன் வானரப்படை சூழ ராமபிரானிடம் சேரல். 54. சீதாதேவியைத் தேடும்பொருட்டு நான்கு திக்குகளுக்கும் வானரர்களை அனுப்புதல். 55. தென் திசைக்கு ஆஞ்சநேயரிடம் கணையாழி கொடுத்து அங்கதன், குமுதன், நீலன், ஜாம்புவந்தர்களையும் துணையாக அனுப்புதல்.

56. அவர்கள் விடைபெற்றுக்கொண்டு பல இடங்களில் தேடிக்கொண்டு சுயம்பிரபையைக்கண்டு அவரிடம் ஆசி பெற்று சம்பாதியைக் காணல். 57. சம்பாதியின் வேண்டு-கோளால் ராமபஜனை செய்து சம்பாதிக்கு இறக்கைகள் வளரச்செய்தல். 58. சம்பாதி ஆகாய மார்க்கமாகப்பறந்து சென்று அசோக வனத்தில் சீதாதேவி இருப்பதைத் தெரிவித்தல். 59. ஆஞ்சநேயாதிகள் மயேந்தர பருவதம் சென்று ஆஞ்சநேயரைப் புகழ, அவருக்கு விசுவரூபம் வளர, மயேந்தர பருவத்தின் மீதிருந்து தென் சமுத்திரத்தின் மேல் பாய்தல். 60. அயோமுகி பங்கம். 61. கடல் தாண்டி சுவேல பருவதத்தின் மீது இறங்கி இலங்கைப் பிரவேசம் லங்கினிவதம். 62. இலங்கையில் பல இடங்களில் சீதையை தேடல்.

63. கும்பகர்ணனைக்கண்டு சென்று விபீஷணரைத் தரிசித்தல். 64. அசோக வனத்தில் சீதாதேவியைக் கண்டு விஷயம் அறிவித்துக் கணையாழி கொடுத்துச் சூடாமணி பெறல். 65. தேவியினிடம் விடை பெற்றுக்கொண்டு அசோகவனத்தை அழித்தல். 66. அதிகாயன் முதலானோர் வதம். 67. இந்திரஜித்துவின் பிரம்மாஸ்திரத்தால் கட்டுப் பட்டு ராவண சம்பாஷணை. 68. ஆஞ்சநேயர் வாலுக்கு நெய் துணிகள் சுற்றி அக்கினியை மூட்டி அனுப்புதல். 69. லங்காதகனம். 70. சீதாதேவியினிடம் சிரஞ்சீவிப் பட்டம் பெற்று சுவேல பர்வதத்திலிருந்தும் மயேந்தரம் சேர்ந்து ஜாம்பவான் முதலானவர்களிடம் வாழ்த்துப்பெறல்.

71. மதுவனத்தை அளித்தல். 72. ஸ்ரீராமபிரானிடம் சூடாமணி கொடுத்து தேவியின் விஷயத்தை அறிவித்தல். 73. எழுபதுவெள்ளம்சேனையுடன் புறப்பட்டு தென்சமுத்திர வடகரை சேரல். 65. விபீஷணர் சரணாகதி. 66. தர்ப்ப சயனம். 74. சமுத்திர ராஜன் தன் முதுகின் மீது அணை கட்ட ஒத்துக்கொண்டு வானராதியரால் சேது பந்தனம். 78. இலங்கைக்குச் சென்று சுவேலபர்வதத்தின் மீது தங்கி இலங்கையின் வரலாற்றை, இராவண, கும்ப-கர்ணாதிகளுடைய வரலாற்றை விபீஷணர் கூறக் கேட்டு அங்கதனைத் தூது அனுப்புதல். 79. சுக்ரீவனால் ராவண கிரீடபங்கம. 80. சேனை அணிவகுப்பு.

81. இராம-ராவண யுத்தம், ராவணன் நிராயுதபாணி யாய் அரண்மனை சேர்ந்து மந்திராலோசனை. 82. இந்திர ஜித்து யுத்தம் நாகாஸ்திரப்பிரயோகம். 83. கருடாழ்வா ரால் நாகாஸ்திரம் அழிவு. இந்திரஜித்துவின் 2 நாள் யுத்தம் பிரம்ஹ அஸ்திரப்பிரயோகம். 84. ஆஞ்சநேயர் சஞ்சீவி கொண்டுவரல். 85. வானரப்படையினர் உயிர்பெற்று எழுதல். 86. இந்திரஜித்து நிகும்பலை யாகம். 87. விபீஷ ணரால் தெரிந்து இளையபெருமாள் இந்திரஜித்து யுத்தம், இந்திரஜித்து மரணம். 88. மண்டோதரி புலம்பல், இராவண பரிதாபம். 89. கும்பகர்ண யுத்தம், மரணம். 90. மூலபல யுத்தம், வதம்.

91. இராம ராவண யுத்தம், இராவண வதம். 92. மண்டோதரி புலம்பல். விபீஷண பரிதாபம். 93. ராவண தகனசம்ஸ்காரம். 94. மண்டோதரி சககமனம். 95. விபீஷண பட்டாபிஷேகம். 96. ஸீதாதேவி அக்னிப் பிரவேசம். 97. பித்ரு தரிசனம் பரதாழ்வான் பேரிலிருந்து வேஷ விமோசனம் பெறல். 98. தேவாதியரால் உடலிழந்த வானராதியர் உடல் உயிர் பெற்றெழுதல். 99. புஷ்பக விமானத்தில் எல்லோரும் புறப்பட்டு வருதல். 100. கிஷ்-கிந்தையிலுள்ள பெண் வானரங்களையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு பரத்வாஜ ஆஸ்ரமம் சேருதல். 101. அக்கினியிலிறங்கும் பரதாழ்வானை ஆஞ்சநேயர் தடையாகித் தடுத்து மீட்டு வருதல். 102. நந்திக்ராம பிரவேசம்.

103. ஜடாசோதனம். 104. அங்கிருந்து அயோத்திக்குச் செல்லுதல். 105. நகர்வலமாக அரண்மனை சேரல். 106. பட்டாபிஷேகம் ஆரம் செய்து நாலுதிசை தீர்த்தம் முதல் சகலத்தையும் நிர்மாணித்தல். வசிஷ்டர் முதல் சப்தரிஷி கணங்கள் ஆசார்ய புரோகிதர்கள் வேதமந்த்ரங்களால் ஜபாதிகள் செய்து புரோக்ஷணம் செய்து வேத-பாராயணம் செய்தல். 107. ஸ்ரீ ஸீதா ஸமேதராக ஸிம்ஹாசனம் ஏற்றருளித்தல். 108. ஸ்ரீராமபட்டாபிஷேகம் வசிஷ்ட முனிவரால் வேதபாராயணத்துடன் சகல வாத்தியம் முழங்க நவரத்தின கிரீடம் சூட்டப்பட்டன,

ஸ்ரீ ஸீதாதேவியார், ஸ்ரீ ராமச்சந்திரர், ஸ்ரீ பரதாழ்வார் குடை. ஸ்ரீ ஆஞ்சநேயர் (சடாரி) ஸ்ரீ சுக்ரீவ மஹாராஜா, விபீஷண ஆழ்வார்; த்வாரபாலகர், சேனைநாதன்.

ஸ்ரீ இளையாழ்வார், சத்ருக்நாழ்வார்கள், (சாமரை) ஸ்ரீ ஜாம்பவான், குமுதன், நீலன், அங்கதர் உடைவாளுடன் நிற்றல். த்வாரபாலகர்.

சேனைநாதன்

கும்பகோணத்தில் ஸ்ரீ விஜயராகவ நாயுடிகாரு தஞ்சாவூர் மஹாராஜா அவர்களால் ஸ்ரீ கோதண்டராமர்

கல்லினால் கதை பிம்பங்களால் அமைக்கப்பட்ட சித்திர ராமாயணம் பூர்த்தி செய்யப்பட்டு ஸ்ரீ ராமபட்டாபிஷேகம் வரையில் பிம்பங்கள் அமைத்துள்ளன.

மூலஸ்தானத்தில் சுவர்ணமயமாக ஸ்ரீராமபிரான், ஸ்ரீ சீதா சமேதராக சேவை சாதிக்கிறார். ரத்ன கிரீடாதிகள், கவசங்கள், பட்டு பீதாம்பரங்கள், ஆபரணாதிகள், சடாரி தீர்த்த பாத்திரங்கள், திருமணி, தீப, தூப, நிவேதனாதிகள் சமர்ப்பித்து பிரதிஷ்டை செய்துள்ளார். துவஜஸ்தம்பம், கோபுர மண்டபாதிகள், தீர்த்தவாவி, திருமதில் முதலான வைபவங்களைக் கண்டு சேவித்தல் அவசியம்.

இக்ஷ்வாகு, யயாதி வம்ச பரம்பரையினராகிய கம்மவார் அனைவரும் அங்கு சென்று தரிசனம் செய்ய வேண்டியது முக்கியமான கடமை ஆகுமென்று விளக்குகின்றன. ஸ்ரீ ராமபிரான் சந்நிதி வைபவம் சமாப்தம்,

ஸ்ரீராமஜெயம்.

234) விஜயநகரம், தஞ்சாவூர், திருச்சிறாப்பள்ளி மதுரை முதலான இராஜ்யங்களை ஆண்டு வந்த நாயக மன்னர்கள் எல்லோரும் ஆந்த்ர க்ஷத்திரியர் என்று கம்மவாரே அன்றி வேறு ஜாதியார் அல்லவென்று கம்மவார் சரித்திரம் கூறுகின்றனர்.

235) குடாரபார், வைஷ்ணர் கூறுவது போல, மகம்மதியர்களுக்கு பெண் கொடுக்கத்தயங்கி மனைவறையில் ஒரு நாயைக்கட்டி வைத்துவிட்டு யாருக்கும் தெரியாமல் சென்றுவிட்டதற்கு வரும்போது பெண்ணை நதி குறுக்கிட்டதால் அதைக் கடக்க முடியாது, கம்ம மஹரிஷியிடம் முறையிட்ட அவரால் அநேகம் பேர் தோன்றியதால் கம்மவார் எனப் பெயர்பெற்றனர் என்பதற்கு யாதொருவிதமான ஆதாரமும் கிடையாது.

தவிர ரேணுகாதேவி பிரத்யக்ஷமாகி ஆற்றைக் கடக்க தன் செவிக்கம்பலைக் கொடுக்க, அதைப்பெற்றுக்கொண்டு நதியைத்தாண்டி வந்ததால் கம்மவார் என்பதும் கட்டுக்கவி. பலபத்ரர் விவாஹ கலியாணம் இவர்களுக்கு ஒரே முகூர்த்தத்தில் தன்னுடைய செலவில் நடத்திக்கொடுத்ததாகவும், அது சமயம் வாத்தியக்காரர் கிடையாததால் ஒரு மரத்தின் மீது ஏறிக்கொண்டு வீரணம் வாசித்தவர் கொம்மகோல காண்டு வென்றும். பம்பைக்காரர்களாம் அவர்களை (பம்பிவண்ளு என்று சொல்லுவது) தெலுங்கு பாஷை.

236) இந்துதேச சரித்திரம் (விஜயநகர சாம்ராஜ்யம்) கி. பி. 1323-ல் விஜயநகரம் ஏற்பட்டது. துங்கபத்திரா நதிக்கரையில் கிஷ்கிந்தா அடவியிலுள்ள பம்பாபுஷ்கரணியின் பக்கத்தில் உள்ளது. முதலில் ஹரிஹரருடைய சந்ததியார் காலத்தில் தென்னிந்தியா முழுவதற்கும் தலைநகரமாக இருந்தது. மிகவும் பலம் பொருந்திய அரணுடைய கோட்டை, பாமினி சுல்தான்களுடன் பல முறை சண்டை செய்து அவர்களைத் தெற்கில் வரவொட்டாமல் தடுத்து வந்தது.

237) விஜயநகரத்து அரசர்களில் மிகுந்த புகழ் பெற்றவர் ஸ்ரீ கிருஷ்ணதேவராயர். கி. பி. 1509-1530-வரை வடக்கில் ஒரிஸ்ஸா வரையில் படையெடுத்துச் சென்று அந்த அரசனை வென்று, அவனுடைய மகளைக் கலியாணம் செய்துகொண்டு வந்தார். பாமினி சுல்தானை வென்று கொஞ்சகாலம் அந்த ராஜ்ஜியத்தையும் ஆண்டு வந்தார். தென்னிந்தியாவில் பல கோவில், கோபுரங்களையும் கட்டுவித்தார். அது இன்றைக்கும் அழியாது ராயகோபுரங்கள் எனப்படுகின்றன.

238) சாளுவ திம்ம அப்பாஜி என்பவர் மந்திரியாக இருந்தார். இவர் போர்த்துக்கீசியரோடு உடன்படிக்கை செய்துகொண்டு, இந்த நாட்டில் அவர்கள் வியாபாரம் செய்து வந்தனர். அவர்கள் தங்கள் நாட்டுக் குதிரைகளை வாங்கிக்கொடுத்து வந்தார்கள். கி. பி. 1565-வருஷத்தில் விஜயநகரத்து சேனைகள் தலைக்கோட்டை என்னுமிடத்தில்

பாமினி சுல்தான்களுடைய சேனைகளால் முறியடிக்கப் பட்டன. அப்பொழுது சக்கரவர்த்தியாக இருந்த சதாசிவ ராயர் (1542-70ல்) பெனுகொண்டாவுக்குப்போய்விட்டார். அப்பால் முகம்மதியர்கள் விஜயநகரத்தை இடித்துப் பாழாக்கினர். அன்றி ராஜ்யத்தின் வடபகுதியை மறுபடி கவர்ந்து கொண்டனர்.

239) சதாசிவராயரிடம் மந்திரியாக இருந்த திருமலை ராயர் ஒரு புதிய வம்சத்தை ஸ்தாபித்தார். இந்த வம்சத்தவர் திருப்பதிக்குப் பக்கத்திலுள்ள சந்திரகிரியைத் தலைநகராகக்கொண்டு கி. பி. 1650 வரை ஆண்டு வந்தனர். இவ்வம்சத்துக் கடைசி அரசரான ஸ்ரீரங்கராயர், சிற்றரசர் களாலும், மகம்மதியர்களாலும் துரத்தப்பட்டு வேறு நாட்டில் உயிரிழந்தார். சென்னை நகரம் கட்டப்பட்டிருக்கு மிடத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்தவர் இந்த ஸ்ரீரங்க ராயரே. (விஜயநகர முடிவு)

240) கி. பி. 1674-வரை நான்கு நாயக்க மன்னர்கள் தஞ்சைமா நகரை ஆண்டனர். பின்னர் மராட்டியர் வசம் ஆயிற்று. கன்னியாகுமரி வரையிலுள்ள தேசத்தை ஆண்ட மதுரை நாயக்க மன்னர்கள் மிகவும் மேம்பாட்டுடனிருந்து கி. பி. 1737-ல் கர்நாடக நவாப்புகளால் தனது சிறப்பை இழந்து விட்டது. இந்த வம்சத்து அரசரில் மிகக்கீர்த்தி பெற்றவர் இந்தத் திருமலை நாயக்கர். இவர் கி. பி. 1659-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்குச் சரியான தமிழ் விளம்பி-ஹு மாசி-மீ 4-ம் தேதியில் காலகதி அடைந்தார். இவருக்கு 200 பேர் பாரிகள் சககமனமடைந்தனர். இவர்களில் சிறந்த பட்டமஹிஷிகள் இரண்டு பேர் கல் வெட்டுகளில் காண்கிறது. இவர் 75-வது வயதில் பரமபதப்ராப்தி அடைந்தது. இவருடைய ஆட்சியில் தென்னிந்தியாவில் ஸ்தாபித்த விஷயங்களின் வரலாறு.

இவருடைய ஆட்சிக்கு உட்பட்ட நாடுகள்:-

1. திருநெல்வேலி. 2. திருவனந்தபுரத்தில் ஓர்பாகம். 3. மதுரை. 4. திண்டுக்கல். 5. இராமநாதபுரம்.

6. சிவகங்கை. 7. புதுக்கோட்டை. 8. மணப்பாறை. 9. கோயம்புத்தூர். 10. சேலம். 11. திரிசிரபுரம் முதலியன.

241) இவருடைய ஆட்சிக்கு அடங்கிய பாளையக்காரர்களின் விபரமும், இராஜாக்களின் விபரமும்:-

1. இராமநாதபுரம் சேதுபதி. 2. சிவகங்கை உடையாத்தேவர். 3. புதுக்கோட்டை தொண்டமானர் மற்றய பாளையக்காரர்கள்.

1. மணப்பாறை தாலூக்கா :- மருங்காப்புரி பூச்சி நாயக்கர் 1; நத்தம் லிங்கம நாயக்கர் 2; குமாரவாடி லக்க நாயக்கர் 3; மடுவூர் நாயக்கர் 4; தோகைமலை நாயக்கர் 5; பிள்ளைவிழுங்கி மூர்த்தி நாயக்கர் 6; ராமகிரி சாமி நாயக்கர் 7.

2. திண்டுக்கல் தாலூக்கா: பழனி 1; விருப்பாச்சி 2; ஆயக்குடி 3; மாம்பாறை 4; இடையகோட்டை 5; ஆயிலூர் 6. வல்லகொண்டம நாயக்கர் 1; மடுவூர் நாயக்கர் 2; பாலமுத்து நாயக்கர் 3. மருமுத்து 1; எமுக்காபுரம் 2; தவசிப்படை 3; அமட்டாறு 4. அம்மைய நாயக்கர் 1; கூளப்ப நாயக்கர் 2; கொப்பி நாயக்கர் 3; தொட்டயன்கோட்டை திருமலை கண்டம நாயக்கர் 4; திருமலை போடி நாயக்கன் 5; பூசாரி நாயக்கர் 6; பெரியகுளம் இராமச்சந்திர நாயக்கர் 7; அப்பாச்சிக் கவுண்டர் 8; தேவரத்தான் 9; கம்பம் கூடலூர்.

3. மதுரைச்சீமை: வாகாமி நாயக்கர், ஊற்றப்ப நாயக்கர், தொட்டப்ப நாயக்கர், கவண்டன்கோட்டை, வெள்ளியகுண்டம், சிறுபாலை, பச்சைக்கட்டி.

4. திருநெல்வேலிச்சீமை: ஏழாயிரம் பண்ணை, எட்டயாபுரம், பாஞ்சாலங்குறிச்சி, சிவகிரி, சேற்றூர், கோலாறுபட்டி, நாகலாபுரம், ஊற்றுமாலை, குருக்கவெட்டி, அழகத்தேவன், மணியாச்சி, சொக்கன்பட்டி, சுரண்டை,

நடுவுபட்டி, நெய்க்கொட்டான், சேவல், உளர்நாடு, கடம்பூர், காடல்குடி, குளத்தூர், மெமந்தை, மாவிலோடை அருங்குளம், செந்நெல்குடி, பாவாலி, தும்பிச்சி நாயக்கர், காமி நாயக்கர், எட்டுமா நாயக்கர்.

5. மணக்கோட்டை, ஆற்றங்கரை பெத்தள நாயக்கர், அழகாபுரி இரட்டைக்குடை வன்னியன்.

6. கோயம்புத்தூர்: தளியேற்றுறழ் நாயக்கர்.

7. சேலம்: தலைமலை ராமச்சந்திர நாயக்கர், தாரா மங்கலம், கெட்டிமுதலியார் மன்னிமை பாளையப்பட்டு, குருவிகுளம், பெம்மசானி பெரியவீரப்பநாயக்கர், இளம்புரம் ராவல ரவணப்ப நாயக்கர், ராஜபாளையம் ராஜாக்கள், இவர்கள் பாளையக்காரர்களாக இருந்துகொண்டு மதுரை, திரிசிரபுரத்திலிருந்து அரசாண்டு வந்த நாயக்க மன்னர்களுக்கு வேண்டுங்காலத்தில் போருதவிக் கப்பமும் செலுத்தி வந்தார்கள்.

242) தவிர திருமலை நாயக்கர் காலத்தில் இவருக்கு உட்பட்ட இராஜ்யங்களிலிருந்த கோட்டைகளின் விபரம்:

திண்டுக்கல் கோட்டை 1; தாராபுரம் கோட்டை 2; தணையநாயக்கன்கோட்டை 3; கோயமுத்தூர் கோட்டை 4, அக்ரஹாரக்கோட்டை 5; சத்தியமங்கலக்கோட்டை 6; அந்தியூர்கோட்டை 7; ஈரோடுகோட்டை 8; காங்கயங் கோட்டை 9; விஜயமங்கலக்கோட்டை 10; கருவூர் கோட்டை 11; நாமக்கல்கோட்டை 12, செதையமங்கலக் கோட்டை 13; பெரியசேலங்கோட்டை 14; சேமலூர் கோட்டை 15; சங்கைகிரிக்கோட்டை 16; சாமப்பள்ளி கோட்டை 17; ஆற்றூர்கோட்டை 18; அனந்தகிரிக் கோட்டை 19; பரமத்திக்கோட்டை 20; அரவக்குறிச்சிக் கோட்டை 21; மோகனூர்கோட்டை 22. இவைகள் மதுரை டெயிலர் பாதிரியார் எழுத்துப்பிரதியின்படி கணக்கு

243) இந்திய மன்னர் அரசாட்சி முறைப்படி 6 மந்திரி முதல் அதிகார வர்க்கத்தினர்கள் இவர்களுடைய கடமை:

1. முதல்வன் மந்திரி: ஒரு காரியம் செய்வதற்குத் தகுந்த உபாயம், சூழ்ச்சிகளை யூகித்துச் சொல்லும் வல்லமை உடையவர்.

2. தளகர்த்தன்: (சேனாதிபதி) தலைநகரிலுள்ள படைகளை மேற்பார்த்துக்கொண்டும், எதிரிகளை அடக்குவதும் இவன் கடமை.

3. இராஜாங்க வரவு செலவுகளை விசாரித்து நடத்துபவன் பிரதானி.

4. இராயசக்காரன், அரசனுடைய அந்தரங்கக் காரியதரிசி. இவனது காரியங்கள்: தாக்கீது எழுதுவதும், நடந்த விஷயங்களைக் குறித்து ஞாபகக்குறிப்புகள் வைத்திருப்பதும், உத்திரவுகளை அளிப்பதும், முக்கியமான காரியங்களுக்கு விபரங்கள் வைத்திருப்பது முதலியன.

5. கணக்கன்: தேச வருவாயின் வரவு-செலவு கணக்குகள் எழுதி வைக்கும் பொருப்புடைய அதிகாரி.

6. ஸ்தானாதிபதி அல்லது ஒற்றன்: இவர் வேற்றரசர் சபையில் தன் அரசருக்குப் பிரதிநிதியாக இருப்பது. இவர் தலைநகர வாசம். அவசியமுள்ள சந்தர்ப்பங்களில் பிற நாடுகளுக்கு போக்குவரத்துள்ளவராகவும் இருப்பார். வாக்கு சாதுர்யம், சொல் திறன், வன்மை முதலானவற்றை அறிந்தவராயும் இருப்பார்.

திருமலை நாயக்கர் காலத்தில் இவ்வுத்தியோக முறை மிகவும் விரிந்த நிலையிலிருந்தது. விசுவநாத நாயக்கர் காலத்தில் தளவாயும், மந்திரியாயிருந்த அரியநாயக முதலியார் காலம் சிலவற்றை மாற்றி, மந்திரி, தளகர்த்தன் என்ற உத்தியோகஸ்தர்களை எடுத்துவிட்டு அவ்விரண்டு உத்தியோகத்திற்கும் (தளவாய்) ஒருவனே பார்த்து வரும்படிசெய்தார்

ஆயினும் அவன் ஊரில் இல்லாத சமயம் தலைநகரைக் காப்பதற்கு கோட்டைத் தளகர்த்தன் என்று ஒருவரை நியமித்தார். அவன் மதுரைப் படைக்கு அதிபனுயிருந்து மதுரையைக் காத்துவந்தான்.

244) திருமலை நாயக்கருக்குப் பின் மூன்ருவது தலைமுறையாக பட்டத்திற்கு வந்தவர் அரங்ககிருஷ்ண நாயக்கர் இவர் திருசிரபுறத்திலிருந்துகொண்டு அரசாண்டுவந்தார்.

திருமலை நாயக்கர் காலத்தில் 72 கொத்தளங்கள் இருந்தன. அவசியம் இருந்தபொழுது 72 பாளையக்காரர்களும் வந்து காத்துவருவார்கள். நன்ருகப் பழக்கப்பட்ட யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், படைவீரர்கள், ஆயுதங்கள் வைத்திருந்தார்கள்.

திருமலை நாயக்கர் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த நாயக்க மன்னர்களில் ஆருமவராகிய முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருடைய இரண்டாவது குமாரர் கி. பி. 1584-ல் சாலிவாகன சகம் 1505-க்கு மேல் செல்லா நின்ற பார்த்திப வருஷம் தை மாதம் பிறந்தவர். இவருக்கு திருமலை சௌரி நாயக்கர் என்று பெற்ருேரா லிட்ட பெயர். இவர் தமையனுர் முத்துவீரப்ப நாயக்கர். இவர் கி. பி. 1622-ல் டிசம்பர் மாதம் காலமான பின்னர், கி. பி. 1623-ல் பட்டத்திற்கு வந்தது. சாலிவாகன சகம் 1544-க்கு மேல் செல்லா நின்ற துந்துபி வருஷம் மாசி மாதம் 17-ம்தேதியில் மகாகீர்த்தியுடைய மகாராஜாமான்யராஜஸ்ரீ திருமலை சௌரி (நாயனி அய்யலுகாரு) திருமலை நாயனி அய்யவாடு என்று இவர் கையெழுத்திடுவது வழக்கம்,

இந்தச் சந்தர்ப்பத்தில் பாண்டியநாட்டு ராஜாக்கள் பட்டம் பெற்ற முறைப்படி ஸ்ரீ மீனுட்சி அம்மையார் திருக்கரத்திலிருந்து விக்ரம பாண்டிய சதாசிவ பட்டர் வாங்கிக் கொடுக்கச் செங்கோல் பெற்றனர். அப்பொழுது இவருக்கு வயது 39 என்பது குறிப்பு.

245) மைசூர் தளங்கள் மதுரை மீது படையெடுத்து வந்து அங்குள்ள பிரஜைகளைச் சிறைப்படுத்தியும், நாசிகளை அறுத்தும், ஈவிறக்கமில்லாது சிரங்கப்பட்டணத்திற்கு அனுப்பினார்கள். கிழவர்கள், ஆடவர்கள், மாதர்கள், மக்கள் எல்லோரும் அக்கொடியவரிடத்தில் சிக்கிப்படாத பாடு பட்டார்கள்.

அதுசமயம் திருமலை நாயக்கருக்கு இவ்விஷயம் தெரிந்து, பழிக்குப்பழி வாங்கி, மைசூர் மன்னரின் கொட்டத்தை அடக்கவேண்டுமென்று எண்ணித் தனது சகோதரராகிய குமார முத்து நாயக்கரை, திரண்ட தளத்துடன் அனுப்பிப் பழி வாங்கி வருமாறு அனுப்பினார்.

திண்டுக்கல் இரங்கண்ண நாயக்கரும், தம் 18 பாளையக்காரர்களுடன் வந்துசேர்ந்து சென்று மைசூருக்குச்சேர்ந்த சில கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டு தலைநகரை முற்றுகையிட்டு, எதிரிகளை வென்று, மைசூர் மன்னரைச் சிறைப்படுத்தி, அவரது நாசியை அறுத்து மதுரைக்கு அனுப்பினார். (மூக்கரிந்த யுத்தம்) என்று பெயர் படைத்த இந்தக்கொடிய யுத்தம் கி. பி. 1659-ம் வருஷம் நடந்தது. ஜயபேரிகையுடன் குமார முத்து நாயக்கர் மதுரைக்குத் திரும்பி வரும் சமயத்தில் திருமலை நாயக்கர் பரமபதம் அடைந்த செய்தி எதிர் வந்தது. அழியாப்புகழ் பெற்ற மகான் 75-வது வயதில் திருநாட்டுக்கு எழுந்தருளினார், 1659-க்குச் சரியான விளம்பி வருஷம் மாசி மாதம் 4-ம் தேதியில் நடந்தது.

246) ஆந்தரர்களுக்கு முதலில் ஸ்ரீகாகுளம் 1, தான்ய கடகம் 2, வாரங்கல் 3, விஜயநகரம் 4, சந்திரகிரி 5, இந்த இடங்களில் கோட்டை கொத்தளங்கள் இருந்தன. இங்கிருந்துகொண்டு ராஜ்ய பரிபாலனம் நடத்தி வந்ததாக சரித்திரம் கூறுகின்றது.

கம்மவார் சரித்திரம் 3-வது பாகம் த்வாதசப்ரகரணம் (12-வது பிரகரணம்) 3-வது பாகம் சமாப்த்தி.

சம்பூரணம்!

ஜெமினி ஆர்ட் பிரிண்டர்ஸ், கோவை-12. போன்: 24315



ஜெமினி ஆர்ட் பிரிண்டர்ஸ், கோவை-12. போன்: 24315